சமூக அரசியல்
ஆரம்ப நூல் வரிசை

அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?

எஸ். இல்யின்,
அ. மொத்திலேவ்

402
005
3402

பதிப்பகம்

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

எஸ். இல்யீன்,
அ. மொத்திலோவ்

அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?

முன்னேற்றப் பதிப்பகம்
மாஸ்கோ

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்
சென்னை

மொழிபெயர்ப்பாளர்: டாக்டர் இரா. பாஸ்கரன்

நூல் வரிசையின் பதிப்பாசிரியர் குழு:

எஃப். எம். வோல்கவ் (தலைமைப் பதிப்பாசிரியர்),
ஈ. எஃப். குப்ஸ்கி (துணைப் பதிப்பாசிரியர்),
எஃப். எம். புர்லாட்ஸ்கி, வி. டி. ஸோதவ், வி. வி. கிரபிவின்,
யூ. என். பொபோவ், வி. வி. ஸோபலெவ்,
எஃப். என். யூர்லொவ்

Ильин С., Мотылев А.

ЧТО ТАКОЕ ПОЛИТИЧЕСКАЯ ЭКОНОМИЯ?

на тамильском языке

Ilyin S., Motylov A.

WHAT IS POLITICAL ECONOMY?

in Tamil

© Progress Publishers, 1986
© தமிழ் மொழிபெயர்ப்பு,
முன்னேற்றப் பதிப்பகம், 1987

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$$\text{И}\ \frac{060300000-484}{014(01)-87}\ 327-87$$

பொருளடக்கம்

முன்னுரை 9

அத்தியாயம் ஒன்று

சமுதாய வாழ்க்கையின் அடிப்படை 11

வரலாற்றுப் பாதையில் 11
மாபெரும் கண்டுபிடிப்பு 15
பொருளாயத உற்பத்தி 17
மனித உழைப்பு 19
உழைப்புச் சாதனங்களும் உழைப்புப் பொருட்களும் 21
உற்பத்திச் சாதனங்கள் 25

அத்தியாயம் இரண்டு

சமூக உற்பத்தியின் இரண்டு பக்கங்கள் . . 27

உற்பத்திச் சக்திகள் 28
உற்பத்தி உறவுகள் 29
உழைப்புப் பிரிவினை 34
சமூகப் புரட்சிகளின் மூலக் காரணம் 36

பொருளாதார அடித்தளமும் மேற்கட்டு மானமும் 42
உற்பத்தி முறையும் வர்க்கங்களும் . . . 44

அத்தியாயம் மூன்று

சமூக புனருற்பத்தியின் கட்டங்கள் 48

உற்பத்தியும் நுகர்வும் 49
பொருட்களின் வினியோகம் 53
பொருட்களின் பரிவர்த்தனை 55
புனருற்பத்திக் கட்டங்களின் ஒற்றுமை 58

அத்தியாயம் நான்கு

பொருளாதார விதிகளும் கருத்தினங்களும் 60

இயற்கை விதிகளும் சமுதாய விதிகளும் 60
பொதுவானதும் சிறப்பானதும் . . . 68
பொருளாதாரக் கருத்தினங்கள் . . . 71
பொருளாதார விதிகளை அறிவதும் பயன்படுத்துவதும் 72

அத்தியாயம் ஐந்து

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சி முறை 76

சர்வபொது அறிதல் முறை 77
சூக்குமமானதும் ஸ்தூலமானதும் 79
பகுப்பாய்வும் தொகுப்பும் 86
தர்க்க ரீதியானதும் வரலாற்று ரீதி யானதும் 89

அளவும் பண்பும் 91
சமுதாய நடைமுறை 95

அத்தியாயம் ஆறு

மார்க்சிய-லெனினிய கருத்துக்களின் மாபெரும் சக்தி 99

அரசியல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றம் 101
தத்துவஞான அடிப்படை 102
சோஷலிசம் பற்றிய கருத்துக்கள் . . . 106
சமுதாயத்தைப் பற்றிய கண்ணோட்டங்களில் வரலாற்றுவாதம் 107
பொருளாதார ஆராய்ச்சிகளின் வரலாறு 109
மார்க்சின் மாபெரும் நூல் 121
மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள் . . . 124
அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளைப் பற்றி பூர்ஷ்வா விஞ்ஞானிகள் என்ன நினைக்கின்றனர்? . . . 132
முதலாளி வர்க்கத்தின் கண்ணோட்டத்திலிருந்து 141
தொழிலாளி வர்க்கத்தின் நோக்குநிலையிலிருந்து 149

அத்தியாயம் ஏழு

முதலாளித்துவத்திற்கு முன் 157

முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக

அமைப்புகளின் மிச்ச சொச்சங்கள் 157
மனிதகுலத்தின் குழந்தைப் பருவம் . . 161
அடிமையுடைமை சுமையின் கீழ் . . . 171
நிலப்பிரபுவும் பண்ணையடிமையும் . . . 187

அத்தியாயம் எட்டு

மூலதனத்தின் ஆதிக்கம் 200
பண்ட உற்பத்தி என்றால் என்ன? . . 202
பண்டத்தின் பண்புகள் 204
பண்டத்தின் மதிப்பு 208
உழைப்பின் இரட்டைத் தன்மை . . . 209
தனிப்பட்ட உழைப்பிற்கும் சமூக உழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு 211
மதிப்பு விதி எப்படிச் செயல்படுகிறது? 213
பணம் என்றால் என்ன? 216
முதலாளித்துவ சுரண்டலின் சாரம் . . 222
உபரி மதிப்பைத் தோற்றுவிக்கும் வழிகள் 231
முதலாளித்துவ சமுதாயத்தின் இரண்டு துருவங்கள் 239
சுரண்டலாளர்களின் வருமானங்கள் . . 251
நெருக்கடிப் பொருளாதாரம் 262
ஏகபோகங்களின் ஆதிக்கம் 269
ஏகபோகங்களின் வலுக்கட்டாய அன்னிய விஸ்தரிப்பு 278
காலனியாதிக்க முறையின் வீழ்ச்சி . . 284
சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது 289

அத்தியாயம் ஒன்பது

எல்லாம் மனித நலன்களுக்காக 297

யதார்த்த சோஷலிசம் 298

புதிய சமுதாயத்தை நோக்கிய பாதையில் மாறுநிலைக் கட்டம் 302

சோஷலிச பொருளாதாரத்தைத் தோற்றுவிப்பதற்கான திறவுகோல் 307

மக்களினங்களுக்கு இடையிலான சமத்துவத்தின் பொருளாதார அடிப்படை 311

தன்னலமற்ற உதவி 314

விவசாயத் துறையைக் கூட்டுறவுமயமாக்கல் 319

கலாசாரப் புரட்சி 325

சோஷலிசத்தின் முக்கிய அடிப்படை 328

மக்களின் நலன்களுக்காக 329

ஒரே திட்டத்தின்படி 332

நியாயமான வினியோகக் கோட்பாடு 335

பொருளாதார உந்துகோல்கள் 339

உயர் உற்பத்தித் திறனை நோக்கி . . 345

சமூக உற்பத்திப் பொருள் 347

புதிய வகையான உலகப் பொருளாதாரம் 351

சோஷலிசத்தை மேம்படுத்துதலும் கம்யூனிசத்தை நோக்கிய படிப்படியான மாற்றமும் 356

கம்யூனிச சமூக அமைப்பின் உச்சக் கட்டம் 361

சொற்றொடர் விளக்கம் 364

முன்னுரை

ஒவ்வொரு விஞ்ஞானத்திற்கும் அதனதன் ஆராய்ச்சிப் பொருள் உண்டு. பள்ளியில் எளிய சிறு கணக்குகளைப் போடக் கற்றுக் கொள்ளும் போது நாம் கணிதப் பாடத்தைக் கற்கத் துவங்குகிறோம். மின்னும் இரண்டு உருண்டைகளுக்கு இடையில் ஒரு மின்சார மின்னல் பளிச்சிடுகிறது, பௌதீகம் எனும் சுவாரசியமான உலகிற்குள் நாம் புகுகின்றோம். பொருட்களின் மாறும் தன்மை பற்றிய விதிகள் வேதியியலின் ஆராய்ச்சிப் பொருளாயும் வான்கோளங்களின் இயக்கத்தை நிர்ணயிக்கும் விதிகள் வானசாஸ்திரத்தின் ஆராய்ச்சிப் பொருளாயும் திகழுகின்றன. இயற்கை விஞ்ஞானங்கள் வளர்ந்து ஒரே பெருக்காக இணைந்து நம்மைச் சுற்றியுள்ள அனைத்தையும் பிரதிபலிக்கும் பொதுவான சித்திரத்தைத் தருகின்றன. தொழில்நுட்ப விஞ்ஞானங்கள் இவற்றுடன் வந்து சேர்ந்து கொள்கின்றன. இவற்றைப் பயிலுவதன் பயனாய் "இரண்டாவது இயற்கை" என்றழைக்கப்படுவதன், அதாவது பொறுமையான மனித சிந்தனையாலும் திறமை மிகு மனிதக் கரங்களாலும் தோற்றுவிக்கப்பட்ட அனைத்தின் கட்டமைப்பு கோட்பாடுகளை அறிய முடியும்.

ஆனால் சற்றும் குறையா முக்கியத்துவம் வாய்ந்த இன்னுமொரு விஞ்ஞானப் பிரிவும் உண்டு. இது மனித சமுதாய வாழ்வின் பல்வேறு அம்சங்களை ஆராய் கிறது. வரலாறும் தத்துவஞானமும், சட்ட விஞ்ஞானமும் மொழியியலும் மற்ற பல சமூக விஞ்ஞானங்களைப் போன்றே எந்த சமூக சூழ்நிலைகளின் சிக்கலான கலப்பில் மனிதகுலம் வாழ்ந்து, வளர்ந்து வருகிறதோ அவற்றினுள் புக உதவுகின்றன. அப்போதுதான் சமுதாய முன்னேற்றத்தை அடையும் நோக்கத்துடன் யதார்த்தத்தை மாற்றும் பணியில் அறிவுபூர்வமாக இறங்க முடியும். இந்த விஞ்ஞானங்களின் மத்தியில் அரசியல் பொருளாதாரத்திற்கு விசேஷ இடமுண்டு. இது உற்பத்தியின் சமூக அமைப்பு, உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களுக்கிடையிலான பொருளாதார உறவுகள், மனித சமுதாய வளர்ச்சியின் எல்லா கட்டங்களிலும் பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம் மற்றும் பரிவர்த்தனையை நிர்வகிக்கும் விதிகள் ஆகியவற்றை ஆராய்கிறது.

சமுதாய வாழ்க்கையைச் சிறப்புற அமைப்பதற்காக மக்கள் நடத்தும் போராட்டத்தில் இவர்களுக்கு உதவும் சாதனமாகத் திகழும் அரசியல் பொருளாதாரத்தைப் பற்றி ஒரு முழுமையான கருத்தை வாசகர்களுக்குத் தர இந்நூலில் முயலுவோம்.

அத்தியாயம் ஒன்று

சமுதாய வாழ்க்கையின் அடிப்படை

வரலாற்றுப் பாதையில்

மனித வாழ்க்கை என்றுமே இலகுவானதாய், எளிமை யானதாய் இருந்ததில்லை. வரலாற்றுப் பாதையில் மனிதகுலம் போடும் நடை மலர்கள் தூவப்பட்ட மென்மையான பாதையில் உலாவுவதைப் போன்றதல்ல. புரட்சிகளும் அரசு அமைப்புகளின் மாற்றங்களும், சமாதானமான நல்லண்டை உறவுகளும் இரத்தக் களறியான யுத்தங்களும், சுரண்டப்படும் தொழிலாளர் கள், விவசாயிகளின் கடுமையான உழைப்பும் சுரண்டும் முதலாளிகள், நிலப்பிரபுக்களின் செயலற்ற சோம் பேறித்தனமான வாழ்க்கையும், வண்ண விளக்குகள் பளிச்சிடும் பிரம்மாண்டமான நகரங்களும் அடர்ந்த காடுகளின் உள்ளே எங்கோ ஒரு மூலையில் இருக்கும் சாதாரண குக்கிராமங்களும் — இவையெல்லாம் நிறைந் ததுதான் மனிதகுல வரலாறு. பல்வேறு சம்பவங் களுக்கிடையே ஏதாவது தொடர்பு உள்ளதா, இவற்றின் சிக்கலான பிணைப்பில் ஏதாவது ஒரு வழியைக் கண்டுபிடிக்க இயலுமா? இல்லாவிடில், மகிழ்ச்சி மற்றும் சமூக நீதிக்கு இட்டுச் செல்லும் நேர்வழியைத் தேடி அலையும் மக்கள் இந்த வளைபாதைகளில் மாட்டிக் கொண்டு குழம்பிப் போவார்களே! பல்லாயிரமாண்டு

மனித வரலாறு இதற்கான பல வழிகளை அறியும். ஒடுக்கப்பட்டவர்கள் தம்மை அடக்கி ஒடுக்கியவர்களுக்கு எதிராக கிளர்ந்து எழுந்தனர்; அறிவாளிகள் புதிய சமுதாய ஒழுங்குமுறையை நிலைநாட்டும் திட்டங்களை தீட்டினார்கள்; தனி மனிதன் மலர வேண்டும், மனிதர்கள் சமமாக, சகோதரத்துவ உணர்வுடன் வாழ்ந்து இயற்கையுடன் சீரிசைவாக இரண்டறக் கலக்க வேண்டும் என்று இவர்கள் கனவு கண்டனர். இவையெல்லாம், சமுதாயம் சலுகையுள்ள சுரண்டலாளர்களாயும் (இவர்கள் எண்ணிக்கையில் மிகவும் சொற்பமானவர்களே) சுரண்டப்படுபவர்களாயும் (இவர்கள் எண்ணிக்கையில் ஏராளமானவர்கள்) பிரிக்கப் பட்டதற்கு எதிர்ப்பு தெரிவித்தன. சுரண்டப்படு பவர்களுக்கு மகிழ்ச்சிக்கான உரிமையே இருக்கவில்லை, ஆடம்பரத்திலும் சோம்பேறித்தனத்திலும் மூழ்கித் திளைத்தவர்களுக்காகச் செல்வத்தை தம் உழைப்பின் மூலம் தோற்றுவிக்கும் கடமை மட்டுமே இவர்களுக்கு இருந்தது.

இது அப்பட்டமான அநீதியாகும், உலகிலுள்ள எல்லா பொருளாயத, ஆன்மீக செல்வங்களையும் படைக்கும் மனிதனின் சாராம்சத்திற்கே முரண்பாடான தாகும். ஏனெனில் இப்பூமியில் பிறந்த ஒவ்வொரு மனிதனுக்கும் உண்மையான மானுட வாழ்க்கை வாழும் உரிமை உண்டு.

மனிதர்களின் மாபெரும் உழைப்பு அற்புதங்களைச் சாதிக்க வல்லது. மனித உழைப்பால் பூமியின் அடியிலுள்ள இயற்கைச் செல்வங்கள் வெளியே கொண்டு வரப் படுகின்றன, தொலைதூர கிரகங்களுக்கான பாதைகள் அமைக்கப்படுகின்றன, பாலை நிலங்கள் சோலைகளாகிப் பூத்துக் குலுங்குகின்றன. மனிதர்கள் விஞ்ஞான,

தொழில்நுட்ப சாதனைகளைப் பயன்படுத்தி வியத்தகு முறையில் சிக்கலான தானியங்கி இயந்திரங்களை உருவாக்கியுள்ளனர், தம் தன்மையில் இயற்கைப் பொருட்களை விஞ்சி நிற்கும் பொருட்களைத் தோற்று விக்கக் கற்றுக் கொண்டுள்ளனர், நீர் சக்தி, காற்று, சூரியச் சக்தி, அணுக்கருச் சக்தி ஆகியவற்றைப் பயன் படுத்தி மின்சாரத்தை உற்பத்தி செய்கின்றனர். மனிதக் கரங்கள், மனித மூளை, மனவுறுதி ஆகியவற்றின் படைப்பாற்றலுக்கு எல்லைகளே கிடையாது.

ஆனால் இயற்கையைத் தமக்குக் கீழ்ப்படுத்தி, அதன் விதிகளை அறியக் கற்றுக் கொண்ட மனிதர்கள் தம் வரலாற்றை உணர்வு பூர்வமாக ஒழுங்கமைக்க உடனடியாகக் கற்றுக் கொள்ளவில்லை. இயற்கையில் எல்லாமே நியதியாகத் திரும்பத் திரும்ப நடைபெறு கின்றன: பருவக்காலங்கள் மாறி மாறி வருகின்றன, காலையில் உதித்தெழும் சூரியன் மாலையானதும் மறைகிறது. சமுதாய வாழ்க்கையில் இப்படிக் கறாராக சம்பவங்கள் திரும்பத் திரும்ப நடைபெறுவதில்லை, வரலாற்று சகாப்தங்களின் மாற்றத்தை நிர்ணயிப்பது அவ்வளவு எளிதல்ல, ஒவ்வொரு தலைமுறையும் தனக்கு முன் உருவான சமுதாய அமைப்பைத்தான் சந்திக்கிறது. சுய உணர்வும் சித்தமும் உள்ள மனிதர் கள்தான் சமுதாயத்தில் செயல்படுகின்றனர், அந்தந்த நடவடிக்கைகளில், செயல்களில் ஈடுபடும் போது இவர்கள் எதைப் பின்பற்றி நடக்கின்றனர் என்று நிர்ணயிப்பது எப்போதும் இலகுவானதல்ல.

தனிப்பட்ட மனிதர்களின் (இவர்கள் அறிவாளிகளா கவோ அல்லது முட்டாள்களாகவோ, அன்பானவர் களாகவோ அல்லது கொடியவர்களாகவோ, ஆளுபவர் களாகவோ அல்லது அவர்களின் ஆலோசகர்களாகவோ

இருக்கலாம்) நடவடிக்கைகளின் தன்மையைப் பொறுத்து தான் வரலாற்று நிகழ்ச்சிப் போக்குகள் நிர்ணயிக்கப் படுவதாக ஒரு கருத்து உள்ளது. கருத்துக்கள்தான் உலகை ஆளுகின்றன என்ற முடிவிற்குத்தான் இப்படிப் பட்ட விளக்கம் இட்டுச் செல்கிறது. ஆனால் இது இங்கே தவிர்க்க இயலாதவாறு தோன்றும் கேள்வி களுக்கு, அதாவது இக்கருத்துக்கள் எப்படித் தோன்று கின்றன, இவை எவ்வளவு தூரம் பயனுள்ளவை, வரலாற்றுப் போக்கிற்கு உண்மையாக ஏற்றவையா இல்லையா என்பதை நிர்ணயிப்பதற்கு ஏதாவது அளவைகள் உள்ளனவா என்ற கேள்விகளுக்குப் பதில் தருவதில்லை.

இரத்த வெறி பிடித்த படைத்தளபதிகள் தலைமை தாங்கியதால் மட்டும் காலனியாட்சியாளர்கள் முழு நாடுகளைக் கைப்பற்றி, அவற்றின் மக்களை அடிமைப் படுத்தவில்லை. தமது செல்வத்தை இன்னமும் பெருக்க வேண்டுமென்று பேராசை பிடித்து அலைந்தவர்களின் குறிப்பிட்ட லட்சியங்களைப் பின்பற்றியதால்தான் இவர் கள் கொள்ளையடிப்பதில் இறங்கினர். எனவே இந்தக் கொள்ளைக்காரர்கள் தாம் ஏதோ நாகரிகக் கடமையை நிறைவேற்றுவதாயும், மக்களினங்களை நவீன கலாசாரத் தின் மேல் மட்டத்திற்கு உயர்த்த உதவ விரும்புவதாக வும் கூறினாலும், இதனால் காலனியாதிக்க கொள்ளை யின் சாரம் மாறி விடாது. இந்த வார்த்தைகளின் போர்வைக்குள் மறைந்து கொண்ட காலனியாட்சியாளர் கள் அன்னிய நாடுகளின் இயற்கைச் செல்வங்களை சுரண்டுகின்றனர், ஒவ்வொரு நாட்டு மக்களும் பல நூற்றாண்டுகளாக வளர்த்த உண்மையான கலாசாரத்தை தம் காலடியில் போட்டு மிதிக்கின்றனர்.

‘‘கருத்துக்கள்தான் உலகை ஆளுகின்றன’’ என்று

கூறுவதானது, மனிதனுக்கு மேலுள்ள இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளின் முன் மனிதனால் ஒன்றும் செய்ய முடியாது என்று ஒப்புக் கொள்வதற்குச் சமமாகும்.

மாபெரும் கண்டுபிடிப்பு

மனிதர்களுடைய நடவடிக்கைகள், கண்ணோட்டங்கள், செயல்களின் உண்மையான நோக்கங்களை விளக்க சமுதாய வாழ்க்கைப் போக்கு முழுவதையும் நிர்ணயிக்கும் அடிப்படைகளைக் கண்டுபிடிக்க வேண்டும்.

தொழிலாளி வர்க்கத்தின், எல்லா உழைப்பாளிகளின் மாபெரும் ஆசான்களாகிய கார்ல் மார்க்சும் பிரெடெரிக் எங்கெல்சும்தான் இதை முதன்முதலாகச் செய்தார்கள். சமுதாயம் மற்றும் இதன் வரலாறு பற்றிய கண்ணோட் டங்களில் ஒரு மாபெரும் புரட்சியை நிறைவேற்றிய கடமை இவர்களைத்தான் சாரும். வரலாற்றுப் பொருள்முதல்வாதம் எனும் போதனையை, அதாவது **வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தை** மார்க்சும் எங்கெல்சும் தோற்றுவித்தனர். இந்த மாபெரும் விஞ்ஞானக் கண்டுபிடிப்பு நிகழ்த்தப்பட்டு கிட்டத்தட்ட ஒன்றரை நூற்றாண்டு உருண்டோடி விட்டது. இக்காலகட்டத்தில் எல்லா மக்களின், மனித குலம் முழுவதன் விதியையும் பாதித்த மகத்தான சம்பவங்கள் பல நடந்தன. வரலாற்று வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டமும் மார்க்சிய போதனை உண்மை யானது என்பதற்கான புதிய நிரூபணமாக இருந்தது. இது பழையதாக ஆகாதது மட்டுமல்ல (இதன் எதிரிகள் சித்தரிக்க முற்படுவது போல்), மாறாக மேன்மேலும் இது உயிர்த்துடிப்புள்ளதாகி, முன்னேற்றம், சமாதானம்,

மகிழ்ச்சிக்கான பாதையை மக்களுக்குச் சுட்டிக் காட்டியும் வருகிறது.

வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தின் சாரத்தைச் சுருக்கமாகப் பின்வரும் கருத்துநிலைகள் மூலம் விளக்கலாம்:

— வரலாற்றுப் போக்கு என்பது இயற்கையான, புறவய ரீதியான நிகழ்ச்சிப் போக்கு; இது இயற்கைக்கு அப்பாற்பட்ட மேலுலக சக்திகள் எவற்றின் தலையீடு மின்றி மனிதர்களாலேயே நிறைவேற்றப்படுகிறது;

— மனிதர்கள் தமது விருப்பு வெறுப்புகளின் அடிப் படையில், தன்னிச்சையாக வரலாற்றைப் படைப் பதில்லை, மாறாக, சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் உருவாகும் பொருளாயதச் சூழ்நிலை களின் அடிப்படையில்தான் வரலாறு படைக்கப்படுகிறது;

— இந்தப் பொருளாயதச் சூழ்நிலைகள்தான் — பொரு ளாயத உற்பத்திதான் — சமுதாயக் கட்டமைப்பு முழுவதன் அடிப்படையாகும், இதுதான் ஆன்மீக வாழ்வு, அரசியல் போன்றவற்றையெல்லாம் நிர்ணயிக்கிறது. ''மனிதர்களின் உணர்வு அவர்களுடைய வாழ்க்கை நிலையை நிர்ணயிப் பதில்லை; அவர்களுடைய சமூக வாழ்க்கை நிலையே அவர் களுடைய உணர்வை நிர்ணயிக்கிறது''* என்று கார்ல் மார்க்ஸ் இக்கருத்தை அற்புதமாகக் குறிப்பிட்டார். இங்கே சமூக வாழ்க்கை நிலை மற்றும் உணர்வு என்று கூறும் போது தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கைச் சூழ்நிலைகள், தனிப்பட்ட சுய உணர்வை நாம் குறிப் பிடவில்லை; சமுதாயம் முழுவதைப் பற்றி, வர்க்கங்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 4, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 207.

களை, பல்வேறு சமூகப் பிரிவுகளை உண்டாக்கும் பெரும் மனிதக் குழுக்களைப் பற்றி இங்கே பேசப் படுகிறது.

வரலாற்றின் பாலான இப்படிப்பட்ட அணுகுமுறை, பொருளாதாரம் மற்றும் எந்த நிகழ்ச்சிப் போக்குகள், புலப்பாடுகளுடன் பொருளாதார வாழ்க்கை தொடர்பு கொண்டுள்ளதோ அவற்றைப் பற்றிய கண்ணோட்டங் களில் அடிப்படை மாற்றத்தை ஏற்படுத்தியது. மனித சமுதாயத்தின் வளர்ச்சியில் தீர்மானகரமான பங்காற்றும் பொருளாயத உற்பத்தி எப்படிப்பட்டது?

பொருளாயத உற்பத்தி

மனிதர்கள் வாழுவதற்கு உணவு, உடை, இருப்பிடம், மற்ற பொருளாயத நலன்கள் தேவை. ஆனால் தம் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்கள் தயாரான வடிவத்தில் மனிதர்களுக்குக் கிட்டுவதில்லை. இவற்றைப் பெற மனிதர்கள் இவற்றை உற்பத்தி செய்ய வேண்டும், உழைக்க வேண்டும்.

சமுதாய வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களிலேயே மனிதன் பொருட்களை உற்பத்தி செய்தான்: காட்டு விலங்குகளை வேட்டையாடினான், இவற்றின் இறைச்சி யை நெருப்பில் சுட்டுச் சாப்பிட்டான், மீன் பிடித்தான், எளிய உழைப்புக் கருவிகளைத் தயாரித்தான், இருப்பிடங் களைக் கட்டினான். ஆனால் தேவைகளால் உந்தித் தள்ளப்பட்ட மனிதர்கள் தம் உழைப்பு நடவடிக்கையை விரிவுபடுத்தினார்கள், உழைப்புக் கருவிகளையும் உற் பத்தி முறையையும் மேம்படுத்தினார்கள். வேட்டையாடு தலிலிருந்து கால்நடை வளர்ப்பிற்கும் பின் பயிர்த் தொழிலுக்கும் மாறினார்கள். பின்னால் மனிதர்கள்

கைத்தொழிலில், உதாரணமாக ஆடை நெய்வதிலும், மண்பாண்டம் செய்வதிலும் உலோகத் தயாரிப்பிலும் ஈடுபடலாயினர். ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் கைத் தொழில் முறை மற்றும் கை உழைப்பின் அடிப்படை யிலான பட்டறை உற்பத்தி தோன்றியது; இது பின் னால் நவீன, பெரும் இயந்திர உற்பத்தியாக மாறியது.

இன்றும் மனிதர்கள் பயன்படுத்தும் பொருட்கள் பெரும்பாலும் **பொருளாயத உற்பத்தியினால்தான்** கிடைக் கின்றன. மனிதர்களின் உணவு, உடை, இருப்பிடத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நுகர்வுப் பொருட்களும் இந்த பொருளாயத நலன்களை உற்பத்தி செய்ய அவசியமான கருவிகளும் இந்தப் பொருளாயத உற்பத்திப் போக்கில்தான் தயாரிக்கப்படுகின்றன. உற்பத்தி என்பதை மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான ஒரு நிகழ்ச்சிப் போக்காக வரையறுக்கலாம்; இந்நிகழ்ச்சிப் போக்கின் போது மனிதன் இயற்கைப் பொருளை வாழ்க்கைக்குத் தேவையான பொருளாக மாற்றியமைக் கிறான். உற்பத்தி இல்லாமல் மனித வாழ்க்கையோ, மனித சமுதாய வளர்ச்சியோ சாத்தியமில்லை. வரலாற்றுப் போக்கில் பொருளாதார, அரசியல் சூழ்நிலைகள் மாறுகின்றன, ஒரு சமூக அமைப்பிற்குப் பதில் இன்னொன்று வருகிறது, ஆனால் சமுதாய வாழ்க்கையின் அடிப்படையாக உற்பத்தி தொடர்ந்து இருக்கிறது.

மனிதர்கள் தனியாக அல்ல, கூட்டாக, ஒன்று சேர்ந்து, சமுதாயம் முழுவதுமாகத்தான் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்கின்றனர். எப்போதும், எல்லா சூழ்நிலைகளிலும் உற்பத்தி என்பது சமூக உற்பத்தியாகும், உழைப்போ சமுதாய மனிதனின் நடவடிக்கையாகும். வாழ்க்கைச் சாதனங்களின் உற்பத்தி

யில் மனித உழைப்பு, உழைப்புப் பொருட்கள் மற்றும் உழைப்புச் சாதனங்கள் எனும் மூன்று அம்சங்கள் அடங்கியுள்ளன.

மனித உழைப்பு

சுரண்டல் மற்றும் ஒடுக்குமுறை சகாப்தங்கள் உழைப்பு என்றாலே ஒரு கடும் சுமை எனும் கருத்தை ஏற்படுத்தி யுள்ளன. உண்மையில் உழைப்பு என்பது மனித வாழ்க்கைக்கான மிக முக்கிய நிபந்தனையாகும். உழைப்பு என்பது மனிதர்களுடைய உணர்வு பூர்வமான, செயல்நோக்கமுள்ள நடவடிக்கை. இந்நடவடிக்கையின் உதவியால் இயற்கைப் பொருட்கள் மாற்றப்படுகின்றன. நீர் நாய்கள், தேனீக்கள், எறும்புகள், சிலந்திகள் ஆகியவற்றின் ''உழைப்பை'' சித்தரிக்கவும் இவற்றிடம் ''உழைப்புப் பிரிவினை'', ''உழைப்பு நடத்தை'', சமூக உற்பத்திக்கு உரித்தான மற்ற புலப்பாடுகளைக் கண்டுபிடிக்கவும் பூர்ஷ்வா விஞ்ஞானிகள் செய்யும் முயற்சிகள் ஆதாரமற்றவை. மிருகங்கள் மிகச் சிக்கலான செயல்களைச் செய்த போதிலும் இவற்றை உள்ளுணர்வு பூர்வமாகவே செய்கின்றன. மனிதனோ உழைப்பில் நேரடியாக இறங்கும் முன் தெட்டத் தெளிவான லட்சியத்தை தன் முன் வைக்கிறான், உழைப்பின் குறிப்பிட்ட விளைவுகளை மனக் கண்ணில் பார்க் கிறான். மிக மோசமான கட்டிடக் கலைஞனுக்கும் மிகச் சிறந்த தேனீக்கும் உள்ள வித்தியாசம் என்ன வெனில், முன்னவன் எதையும் கட்டும் முன் முதலில் தன் மூளையில் அதை உருவாக்குகிறான் என்பதேயாகும் என்றார் கா. மார்க்ஸ்.

மனிதர்கள் இயற்கைச் சக்திகளை அடக்கி அதன்

செல்வங்களைத் தம் நலன்களுக்காகப் பயன்படுத்துகின்றனர். இவர்கள் இயந்திரங்களைத் தயாரிக்கின்றனர், தானியம் விளைவிக்கின்றனர், காய்கறிச் செடிகளைப் பயிரிடுகின்றனர், இயற்கைத் தாதுப் பொருட்களை, நிலக்கரி, எண்ணெய் போன்றவற்றை தோண்டியெடுத்துப் பதப்படுத்துகின்றனர். தம் உடைத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மனிதர்கள் பருத்தி விளைவிக்கின்றனர், நூல் நூற்கின்றனர், ஆடை நெய்கின்றனர், துணி தைக்கின்றனர்; தம் இருப்பிடத் தேவைகளைப் பூர்த்தி செய்ய மரங்களை வெட்டுகின்றனர், செங்கற்களைத் தயாரிக்கின்றனர், இவற்றைக் கொண்டு வீடுகளைக் கட்டுகின்றனர். உழைப்பு என்பது மனித வாழ்க்கையின் அடிப்படை, நிரந்தரமான, இயற்கையான நிபந்தனை.

எல்லா விதமான உழைப்பும் நேரடியாக பொருளாயத உற்பத்தியில் அடங்கியிருக்கவில்லை என்பதைக் கூற வேண்டும். மருத்துவர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் போன்றவர்களின் உழைப்பில் (இவர்கள் சமுதாயத்திற்கு அவசியமானவர்கள்) நேரடியாக பொருளாயத நலன்கள் தோற்றுவிக்கப்படுவதில்லை.

உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்கள் மூளைச் சக்தி, நரம்புச் சக்தி மற்றும் தசைச் சக்தியைச் செலவழிக்கின்றனர். அதாவது மனிதர்கள் தம் **உழைப்புச் சக்தியைச்** செலவிடுகின்றனர். இந்த உழைப்புச் சக்தி என்பது உழைப்பதற்காக மனிதர்களுக்கு உள்ள உடற்கூறு ரீதியான, மனநிலை ரீதியான, இன்ன பிற திறமைகளின் ஒட்டுமொத்தமாகும். இவ்வாறாக, உழைப்பு என்பது உழைப்புச் சக்தியைச் செலவிடும் ஒரு நிகழ்ச்சிப் போக்காகும்.

உழைப்பு எனும் நிகழ்ச்சிப் போக்கை நிறைவேற்ற மனிதர்களுடைய உழைப்புச் சக்தி உரிய வளர்ச்சியைப்

பெற்றிருக்க வேண்டும். இது எந்த அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது என்பதை வைத்துதான் பொருளாயத உற்பத்தியின் வளர்ச்சி மட்டத்தை நிர்ணயிக்கின்றனர். தன் பங்கிற்கு உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டம் உழைப்பாளிகள், இவர்களுடைய உழைப்புச் சக்தி மீது தாக்கம் செலுத்துகிறது. பொருளாயத நலன்களை உற்பத்தி செய்யும் மனிதர்கள் அதே சமயம் தம் உழைப்பையும் ஞானத்தையும் மேம்படுத்திக் கொள்கின்றனர், தாமே வளருகின்றனர். மனித வாழ்க்கை முழுவதன் முதல், முக்கிய நிபந்தனையாகத் திகழும் உழைப்பு, குறிப்பிட்ட பொருளில், மனிதனையே தோற்றுவித்தது எனலாம்.

உழைப்புச் சாதனங்களும் உழைப்புப் பொருட்களும்

உழைப்பில் ஈடுபடும் போது மனிதர்கள் இயற்கையின் மீது செயலாக்கம் புரிகின்றனர், உழைப்புச் சாதனங்களைத் தோற்றுவித்து இவற்றைப் பயன்படுத்துகின்றனர். **உழைப்புச் சாதனங்கள்** — எந்தப் பொருளாயதச் சாதனங்களின் உதவியால் மனிதன் இயற்கைப் பொருட்களை மாற்றுகிறானோ அந்தச் சாதனங்களாகும். இயற்கையின் மீது செயலாக்கம் புரிவதற்காகத் தனக்கும் இயற்கைக்கும் இடையில் மனிதன் வைக்கும் பொருட்கள்தான் இவை.

உழைப்புக் கருவிகள் (இயந்திரங்கள், உபகரணங்கள், செயற்கருவிகள், என்ஜின்கள், இத்தியாதி), உற்பத்திக் கட்டிடங்கள் மற்றும் அமைப்புகள், போக்குவரத்து, தகவல் தொடர்புச் சாதனங்கள், உழைப்புப் பொருட்களைப் பாதுகாக்கும் பொருட்கள் (காப்பிடங்கள்,

சிலிண்டர்கள் போன்றவை) ஆகியவை எல்லாம், அதாவது உற்பத்திப் பொறியமைவு முழுவதும் உற்பத்திச் சாதனங்களில் அடங்கும். உழைப்புச் சாதனங்களில் உழைப்புக் கருவிகளுக்குத்தான் முக்கியப் பங்குண்டு. இவற்றின் இயந்திரவியல், பௌதீக, வேதியியல், உயிரியல், மற்ற தன்மைகளைத்தான் மனிதர்கள் குறிப்பிட்ட பொருளாயத நலன்களை உற்பத்தி செய்யும் போது பயன்படுத்துகின்றனர்.

இயற்கைக் கனிவளங்கள், நீர், காடுகள் ஆகிய வற்றைக் கொண்ட நிலம்தான் பொதுவில் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு நடைபெற அவசியமான சர்வபொது உழைப்புச் சாதனமாகும். 17ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த ஆங்கிலேய பொருளாதார நிபுணர் வில்லியம் பேட்டி அடையாளச் சிறப்போடு கூறியபடி ‘‘உழைப்பு தான் செல்வம் முழுவதன் தந்தை, நிலம்தான் இதன் தாய்’’. சர்வபொது உழைப்புச் சாதனமாகத் திகழும் நிலம், மற்ற உழைப்புச் சாதனங்கள் இருந்தால், மனிதர்களின் உழைப்புச் சக்தி ஒப்பீட்டளவில் உயர்வாக வளர்ச்சி அடைந்திருந்தால் விவசாயத் துறையிலும் மற்ற துறைகளிலும் தன் பங்கை வெற்றிகரமாக நிறைவேற்றும்.

உழைப்புச் சாதனங்களின் மூலம் இயற்கையின் மீது செயலாக்கம் புரியும் மனிதர்கள் அதே சமயம் தாமே மாற்றமடைகின்றனர், அனுபவத்தை, ஞானத் தைப் பெறுகின்றனர். இது தன் பங்கிற்கு உழைப்புக் கருவிகள், சாதனங்கள், தொழில்நுணுக்க முறையை வளர்த்து மேம்படுத்தவும் உழைப்பின் உற்பத்தித் திறனைப் பெருக்கவும் புதிய வாய்ப்புகளைத் தோற்று விக்கின்றது. உழைப்புக் கருவிகள், சாதனங்களைப் பயன்படுத்துவதில் மனிதகுலம் மிகப் பெரும் பாதையை

(எளிய கழி, கற்கோடாரியைப் பயன்படுத்தியது முதல் நவீன தானியங்கி இயந்திரங்களை உருவாக்கியது வரை) கடந்து வந்துள்ளது.

உழைப்புக் கருவிகளைத் தயாரிப்பதுதான் மனித உழைப்பின் குறிப்பிடத் தக்க அம்சமாகும். இயற்கையில் தயாரான வடிவத்தில் கிடைக்கும் கருவிகளை (கழி, கல் போன்றவை) ஒரு சில மிருகங்கள் பயன்படுத்துவது தெரிந்ததே. உதாரணமாக, ஒரு மரத்திலிருந்து பழத்தைப் பறிக்க குரங்கால் கழியையோ, கல்லையோ பயன்படுத்த முடியும். ஆனால் குரங்கால் மிக எளிய கத்தியையோ, கோடாரியையோ தயாரிக்க இயலாது. மிக எளிய உழைப்புக் கருவிகளைச் செய்வதிலிருந்துதான் மனித உழைப்பு துவங்கியது. இதில் மனித உடல் உறுப்புகள், எல்லாவற்றிற்கும் மேலாக கரங்கள் மேம்பாடு அடையத் துவங்கின. இக்கரங்கள் உழைப்பு உறுப்பாக மட்டுமின்றி, உழைப்பின் விளை பொருளாகவும் விளங்கின.

மனிதர்கள் இயற்கையின் மீது செயலாக்கம் புரிந்து, இதைத் தம் நோக்கங்களுக்கேற்ப மாற்றும் போது உழைப்புக் கருவிகளை மேம்படுத்துகின்றனர், இயற்கை விதிகளை மேன்மேலும் ஆழமாக அறிகின்றனர், இயற்கையின் மீது மேன்மேலும் ஆளுகை செலுத்துகின்றனர். எந்த இயற்கைப் பொருளின் மீது மனிதர்கள் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் செயலாக்கம் புரிகின்றனரோ அது **உழைப்புப் பொருள்** எனப்படும். இயற்கையில் அப்படியே கிடைக்கும் பொருட்களும் (உதாரணமாக, பூமியடியிலிருந்து தோண்டியெடுக்கப்படும் தாது, காட்டில் வெட்டப்படும் மரம்), மனித உழைப்பின் செயலாக்கத்திற்கு ஏற்கெனவே உட்படுத்தப்பட்ட பொருட்களும் (உதாரணமாக, உலோகத் தொழிற்சாலைக்கு

அனுப்பப்படும் தாது, மேசை நாற்காலிகள் செய்வதற்காக அனுப்பப்படும் வெட்டப்பட்ட மரம்) உழைப்புப் பொருட்களாக இருக்க முடியும். பின்னால் சொல்லப்பட்டவை மூலப்பொருட்களாகின்றன. இவ்வாறாக, எல்லா மூலப்பொருட்களும் உழைப்புப் பொருட்களாகும், ஆனால் எல்லா உழைப்புப் பொருட்களும் மூலப்பொருட்கள் ஆகாது. ஒரே உழைப்புப் பொருள் பல்வேறு கட்டங்களில் பல்வேறு செயலாக்கத்திற்கு உட்படுத்தப்படலாம், அப்போது மனித உழைப்பு செலவிடப்படும். உதாரணமாக, தோண்டியெடுக்கப்பட்ட தாதுப்பொருள் சுரங்கத் தொழிலாளர்களின் உழைப்பின் விளைபொருளாகும். இதே தாதுப்பொருள் உலோகத் தொழிற்சாலையில் மூலப்பொருளாகிறது. இங்கே தயாரிக்கப்படும் எஃகு இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலையில் மூலப்பொருளாக விளங்கும். இவ்வாறாக, இயற்கைப் பொருளின் மீது எப்போது மனித உழைப்பு செயலாக்கம் புரிகிறதோ அப்போதுதான் அது உழைப்புப் பொருளாகும்.

இயற்கைக் கனிவளங்கள், தாதுப்பொருட்கள், தண்ணீர், காடுகளைக் கொண்ட நிலம் சர்வபொது உழைப்புப் பொருளாகும். பூமியின் அடியிலுள்ள கனிப்பொருட்கள், காடுகள், நீர் வளம் அந்தந்தச் சமுதாயத்தின் இயற்கைச் சூழ்நிலைகளின் ஒட்டுமொத்தத்தை உருவாக்குகின்றன.

இயற்கைச் செல்வங்களை மனிதன் எந்த அளவிற்கு, எப்படிப் பயன்படுத்துகிறான் என்பது விஞ்ஞான, தொழில்நுட்ப வளர்ச்சி மட்டம், இவை தொழில்நுட்ப ரீதியாக எப்படிப் பயன்படுத்தப்படுகின்றன மற்றும் சமூக அமைப்பு ஆகியவற்றைப் பொறுத்தது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம், குறிப்பாக இப்போது நடக்கும் விஞ்ஞான-தொழில்நுட்ப புரட்சி உழைப்புப்

பொருட்களாக உற்பத்தித் துறைக்குள் கொண்டு வரப்படும் இயற்கைப் பொருட்களின் எண்ணிக்கையை அதிகப்படுத்துகின்றன.

உற்பத்திச் சாதனங்கள்

உழைப்பின் விளைபயன் நோக்கிலிருந்து உழைப்பு எனும் நிகழ்ச்சிப் போக்கைப் பார்த்தால் உழைப்புச் சாதனங்களும் உழைப்புப் பொருட்களும் சேர்ந்து **உற்பத்திச் சாதனங்களை** உருவாக்குகின்றன. ஒரு பொருள் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் எந்த இடத்தை வகிக் கிறது, இதில் இப்பொருளின் பங்கு என்ன என்பதைப் பொறுத்து அப்பொருள் உழைப்புப் பொருளாகவோ, மூலப்பொருளாகவோ, உழைப்புச் சாதனமாகவோ இருக்கலாம். இயந்திரக் கட்டுமானத் தொழிற்சாலையின் தொழிலாளர்களுக்கு தையல் இயந்திரம் உழைப்பின் விளைபொருள், தையல் ஆலைத் தொழிலாளர்களுக்கோ, இது உழைப்புச் சாதனம்.

உழைப்புச் சாதனங்களிலும் உழைப்பின் விளை பொருட்களிலும் ஏற்கெனவே உழைப்பு அடங்கியுள்ளது. இவை கடந்த (ஏற்கெனவே நிகழ்ந்துவிட்ட) உழைப்பின் விளைபொருட்களாகும். ஆனால் மனித ஜீவனுள்ள உழைப் பின் வட்டத்திற்குள் கொண்டு வரப்படும் வரை இவை உயிரற்ற பொருட்குவியலாக இருக்கின்றன. ஒரு இயந்திரம் உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் செயல்படா விடில் அதனால் பயன் இல்லை. இது பழையதாகிறது, துருப்பிடித்துப் போகிறது, பயனற்றதாகிறது. ஆடை நெய்ய நூலைப் பயன்படுத்தாவிடில் அது கெட்டுப் போகும். அதே சமயம் உற்பத்திச் சாதனங்களின்றி மனிதர்களின் உழைப்பு நடவடிக்கை நடைபெறாது.

ஆக, உழைப்புச் சாதனங்கள் மற்றும் உழைப்புப் பொருட்களில் அடங்கியுள்ள கடந்த கால உழைப்பையும் மனித ஜீவனுள்ள உழைப்பையும் அங்கக ரீதியாக இணைத்தால்தான் பொருளாயத உற்பத்தி நடைபெற முடியும்.

மனிதனின் உழைப்பு, இவனுடைய உற்பத்தி நடவடிக்கை, இவன் இயற்கையின் மீது புரியும் செய லாக்கம் ஆகியவை குறிப்பிட்ட சமூக உறவுகளின் வரம்புகளுக்குள் நடக்கின்றன. உழைப்பு நடவடிக்கை யின் போது மனிதர்கள் குறிப்பிட்ட சமூகப் பிரிவுகளாக ஒன்றிணைகின்றனர்.

அத்தியாயம் இரண்டு

சமூக உற்பத்தியின் இரண்டு பக்கங்கள்

பொருளாயத நலன்களின் உற்பத்தியில் ஈடுபடும் மனிதர்கள் இயற்கையின் மீது செயலாக்கம் புரிவதோடு கூட ஒருவருக்கொருவர் குறிப்பிட்ட உறவுகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர். எனவே சமூக உற்பத்திக்கு இரண்டு பக்கங்கள் உண்டு. இயற்கையின் பாலான மனிதர்களின் உறவை வெளிப்படுத்தும் முதல் பக்கம் சமுதாயத்தின் **உற்பத்திச் சக்திகளைக்** குறிக்கிறது. உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களிடையேயான உறவுகளைப் பிரதிபலிக்கும் இரண்டாவது பக்கம் **உற்பத்தி உறவுகளைக்** குறிக்கிறது. இவை புராதனக் கூட்டுச் சமூக உறுப்பினர்களிடையேயான உறவுகள், அடிமையுடைமையாளர்களுக்கும் அடிமைகளுக்கும் இடையேயான உறவுகள், நிலப்பிரபுக்களுக்கும் பண்ணையடிமை விவசாயிகளுக்கும் இடையேயான உறவுகள், முதலாளிகளுக்கும் கூலித் தொழிலாளர்களுக்கும் இடையிலான உறவுகள், சுரண்டலிலிருந்து விடுவிக்கப்பட்டு, கூட்டாக உற்பத்திச் சாதனங்களை வைத்திருக்கும் உழைப்பாளிகளுக்கிடையிலான உறவுகள் ஆகியவையாகும். உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் இயற்கையின் மீதான மனிதனின் செயலாக்கம் சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு வரலாற்றுக்

கட்டத்திலும் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் வரம்புகளுக்குள்தான் நிறைவேற்றப்படுகிறது.

உற்பத்திச் சக்திகள்

உற்பத்திச் சக்திகளினுள் உற்பத்திச் சாதனங்களும் (இவற்றின் உதவியால்தான் பொருளாயத நலன்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன) இச்சாதனங்களைப் பயன் படுத்தி, தம் அனுபவம், ஞானத்தைக் கொண்டு பொருளாயத நலன்களை உற்பத்தி செய்யும் மனிதர்களும் அடங்குவர். உற்பத்தி அனுபவம் உடைய மனிதர்கள்தான் இதில் தீர்மானகரமான பங்காற்றுகின்றனர், இவர்கள்தான் சமுதாயத்தின் பிரதான உற்பத்திச் சக்தி. மனிதர்கள் இல்லாவிடில் மிக நவீனமான இயந்திரத்தை வைத்து கூட ஒன்றும் செய்ய முடியாது. மனிதர்கள்தான் புதுப் புது இயந்திரங்களைக் கண்டு பிடித்து உருவாக்குகின்றனர், இவற்றைப் பின் உற்பத்தியில் பயன்படுத்துகின்றனர்.

உற்பத்திச் சாதனங்கள் **சமுதாயத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளத்தை** ஏற்படுத்துகின்றன. உழைப்புச் சாதனங்கள், எல்லாவற்றிற்கும் மேலாக உழைப்புக் கருவிகள்தான் சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளிடையே மிகவும் மாறுபடும் தன்மையுள்ள, நவீனப்படுத்தும் அம்சங்களாகும். இவற்றிலிருந்துதான் பொருளாயத உற்பத்தியில் முற்போக்கான மாற்றங்கள் ஆரம்பமாகின்றன; இவைதான் இறுதியில் மனித சமுதாயத்தின் வாழ்வில் எல்லா மாற்றங்களையும் நிர்ணயிக்கின்றன.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம், மனிதர்கள் எந்த அளவிற்கு இயற்கைச் சக்திகளின் எஜமானர்களாக இருக்கின்றனர் என்பதற்கான அறிகுறியாகும். பண்டையக்

காலத்தில் நெருப்பைக் கண்டுபிடித்து, பயன்படுத்த ஆரம் பித்ததானது இயற்கைச் சக்திகளை அடக்கியாளும் திசையில் மனிதனுடைய மிக முக்கியமான நடவடிக்கையாகத் திகழ்ந்தது. இன்று மனிதர்கள் பருப்பொருளின் ரகசியங் களினுள் மேன்மேலும் ஆழமாகப் புகுகின்றனர், அணு சக்தியைப் பயன்படுத்துகின்றனர், விண்வெளி ஆராய்ச்சி யில் புதுப் புது வெற்றிகளை அடைந்து வருகின்றனர்.

சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் இடையறாது வளர்ந்து, மேம்பாடடைந்து வருகின்றன. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயனாய் உழைப்பின் சாரம் மாறுகிறது, உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் இதற்கேற்றபடி மனிதர் களுடைய உடற்கூறு ரீதியான மற்றும் ஆன்மீகத் திறமைகளின் பங்கு மாறுகிறது. பொருளாயத நலன் களின் உற்பத்தியில் மனிதர்களுடைய ஆன்மீக, அறிவுச் சக்தியின் பங்கு அதிகரிக்கிறது, உடல் சக்தியின் பங்கு குறைகிறது. விஞ்ஞானம் நேரடியான உற்பத்திச் சக்தியாக மாறி வருகிறது.

உற்பத்தி உறவுகள்

ராபின்சன் குருசோ கதையில் வருவது போல் மனிதர்கள் தனித்தனியே வாழ்க்கைக்குத் தேவையான பொருட் களை உற்பத்தி செய்வதில்லை. மனிதர்கள் எப்போதுமே கூட்டங்கூட்டமாக, குழுக்களாகத்தான் வாழுகின்றனர். கூட்டாக வாழ்ந்து உரையாடும் மனிதர்கள் இல்லாவிடில் எப்படி மொழி நிலவி, வளர முடியாதோ அதே போல் ஒருவரிடமிருந்து ஒருவர் தனியாகப் பிரிந்து நிற்கும் தனிமனித உற்பத்தியும் பொருளற்றது. மாபெரும் பண்டைய கிரேக்க சிந்தனையாளர் அரிஸ்டாட்டிலே, மனிதன் என்பவன் சமூக விலங்கினம் என்றார்.

உற்பத்தி என்பது எப்போதும், எல்லா சூழ்நிலைகளிலும் சமூக உற்பத்தியாகும். பொருளாயத உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் போது புறவய ரீதியாக, சித்தத்தையும் சுய உணர்வையும் சாராமல் மனிதர்களிடையே ஏற்படும் குறிப்பிட்ட பொருளாதாரத் தொடர்புகளும் உறவு களும்தான் உற்பத்தி (அல்லது பொருளாதார) உறவுகள் எனப்படுகின்றன. இந்த உற்பத்தித் தொடர்புகள், உறவுகளின் வரம்புகளுக்குள்தான் (இவை எப்போதுமே உணரப்படுவதில்லை, கண்ணுக்குத் தெரிவதில்லை) இயற் கையின் பாலான மனித உறவு நிலவுகிறது, சமூக உற்பத்தி நடைபெறுகிறது. சமூக உறவுகளின் அமைப்பில் பொருளாதார உறவுகள் தீர்மானகரமான பங் காற்றுகின்றன, சமூக உறவுகளின் அடிப்படையாக, அடித்தளமாகத் திகழுகின்றன. பொருளாதார உறவுகள் எப்படிப்பட்டவையோ, இறுதியில் அரசியல், சட்ட, மற்ற சமூக உறவுகளும் அப்படிப்பட்டவையே.

உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கின் போது பொருளாதார உறவுகளைத் தவிர மனிதர்களிடையே, உற்பத்தியின் தொழில்நுட்பத்துடனும் உழைப்பை ஒழுங்கமைப்பதுடனும் நேரடியாகத் தொடர்புடைய உறவுகளும் உருவாகின்றன. தொழில்நுட்ப நிகழ்ச்சிப் போக்கின் கோரிக்கை களுக்கேற்ப பல்வேறு வேலைப் பிரிவுகளில் பணி புரியும் வேலையாட்களுக்கு இடையிலான உறவுகள், இவர்களின் நடவடிக்கைக்கான உரிய தலைமை போன்றவை மேற்கூறிய உறவுகளுக்கான உதாரணமாகும்.

உற்பத்தி உறவுகள் என்பது பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வின் போது மனிதர்களிடையே தோன்றும் பொருளாதார உறவுகளின் அமைப்பாகும். உற்பத்தி உறவுகள் சுரண் டலிலிருந்து விடுவிக்கப்பட்ட மனிதர்களின் ஒத்துழைப்பு,

பரஸ்பர உதவி உறவுகளாக இருக்கலாம். சோஷலிச சமுதாயத்தில் உற்பத்தி உறவுகள் இப்படிப்பட்டவைதான். அல்லது அடிமையுடைமை அமைப்பு, நிலப்பிரபுத்துவ அமைப்பு, முதலாளித்துவ அமைப்பில் இருப்பதைப் போல் ஆதிக்க உறவுகளாக, ஒரு சிலர் பெரும்பாலோ ரைக் கட்டுப்படுத்தி ஆளும் உறவுகளாக இருக்கலாம். அல்லது இவை உற்பத்தி உறவுகளின் ஒரு வடிவத்திலிருந்து இன்னொரு வடிவத்தை நோக்கிய மாற்ற உறவுகளாக இருக்கலாம். அந்தந்த உற்பத்தி உறவுகளின் தன்மை எதனால் நிர்ணயிக்கப்படுகிறது?

உற்பத்தி உறவுகளின் அமைப்பில் உற்பத்திச் சாதனங் களின் மீதான **உடைமை வடிவம்** தீர்மானகரமான பங்காற்றுகிறது. பூர்ஷ்வா விஞ்ஞானிகள் சாதாரண மாக உடைமை உறவுகளில் பொருட்களின் பாலான மனித உறவை மட்டுமே பார்க்கின்றனர். ஆனால் இது மிகவும் மேற்போக்கான கண்ணோட்டம். ஏனெனில் ஒரு குறிப்பிட்ட நபருக்கு ஏதோ ஒரு பொருள் அல்லது பல பொருட்கள் சொந்தமாக உள்ளன என்றால் (உதாரணமாக, தொழிற்சாலை சொந்தமாக உள்ள தெனில்) அவன் கண்டிப்பாக மற்ற மனிதர்களுடன் (உதாரணமாக, அத்தொழிற்சாலையின் தொழிலாளர் களுடன்) குறிப்பிட்ட உறவுகளைக் கொள்ள வேண்டும். பொருட்களின் பாலான உறவுகளின் பின், பொருட் களின் உறவுகளுக்குப் பின் மார்க்சிய அரசியல் பொருளா தாரம் பொருளாயத நலன்களின் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களிடையே ஏற்படும் உறவுகளைக் கண்டு அவற்றை வெளிப்படுத்துகிறது. இவற்றில் உற்பத்திச் சாதனங்களின் மீதான உடைமை உறவு களுக்குத்தான் தீர்மானகரமான பங்குண்டு. உற்பத்திச் சாதனங்கள் யாருடைய உடைமையாக இருக்கின்றன

என்பதையும் எனவே உழைப்பின் விளைபொருட்களை யார் (உற்பத்திச் சாதனங்களை வைத்திருக்கும் தனிப் பட்ட வர்க்கங்களா அல்லது மொத்தத்தில் சமுதாயம் முழுவதுமா) சுவீகரிக்கின்றனர் என்பதையும் உடைமை உறவுகள் காட்டுகின்றன.

உற்பத்திச் சாதனங்களின் மீதான சொத்துடைமை சமூக உற்பத்திப் பொருளின் வினியோக உறவுகளை மட்டுமின்றி சமுதாயத்தில் பல்வேறு வர்க்கங்கள், சமூக குழுக்களின் நிலையையும் நிர்ணயிக்கிறது. உற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் தனியுடைமையாக இருக்கும் முதலாளித்துவத்தில், தொழிலாளர்கள் உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்ட பாட்டாளிகளாக இருக் கின்றனர். இவர்கள் உற்பத்தி செய்யும் பொருட்கள் யாவும் முதலாளிகளுக்குச் சொந்தமானவை. முதலாளி வர்க்கத் தனிச் சொத்துடைமை மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலானது.

மார்க்சிய அரசியல் பொருளாதாரம் ஏதோ சொத் துடைமையையே மறுப்பதாகச் சித்தரிக்க இதன் எதிரிகள் முயன்றனர், முயன்று வருகின்றனர். உண்மை யில் பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போதனை என்ற வகையில் மார்க்சியமானது, பொதுவில் சொத் துடைமையை எதிர்க்கவில்லை, இதன் முதலாளித்துவ தனியுடைமை வடிவத்தைத்தான் எதிர்க்கிறது; வரலாற் றின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இது பழையதாகிப் போகும், எனவே பொதுச் சொத்துடைமையால் மாற்றப்படும் என்கிறது மார்க்சியம்.

பொதுச் சொத்துடைமையின் அடிப்படையிலான சோஷலிச சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் உழைப்பாளிகள் அனைவருக்கும் சொந்தமானவை, இவர்கள் கூட்டாக உற்பத்தியில் பங்கேற்கின்றனர்.

எனவே உழைப்பின் விளைபொருட்களும் இவர்களுக்கு மட்டுமே சொந்தமானவை. உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிச சொத்துடைமையானது, உழைப்பாளி களை ஒன்றிணைக்கிறது, சுரண்டலிலிருந்து விடு விக்கப்பட்ட மனிதர்களின் நலன்களின் பொதுமைக்கும், தோழமை ஒத்துழைப்பு, பரஸ்பர உதவிக்கும் வழி கோலுகிறது. இதுதான் சோஷலிச சமுதாயத்தின் பொருளாதார அமைப்பின் அடிப்படையாகும், இது சோஷலிசத்தின் கீழ் மக்களின் மற்ற எல்லா சமூக உறவுகளையும் நிர்ணயிக்கிறது.

ஆக, சொத்துடைமை என்பது மனிதர்கள், பொருளாயத நலன்களை, எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களை சுவீகரிப்பதன் குறிப்பிட்ட வரலாற்று சமூக வடிவமாகும். இதுதான் உற்பத்தியின் சமூக அமைப்பையும், இதன் சமூக-பொருளாதாரத் தன்மையை யும் நிர்ணயிக்கிறது.

ஏற்கெனவே குறிப்பிடப்பட்டபடி, சொத்துடைமை உறவுகள் எப்போதும் பொருட்களுடன், அதாவது உழைப்புச் சாதனங்கள், உழைப்புப் பொருட்களுடனும் உழைப்பின் விளைபயனாகிய உற்பத்திப் பொருட் களுடனும் தொடர்புடையவை. சொத்துடைமை உறவு கள் பொருட்களின் பாலான உறவுகள், இவை "சமுதாய ஒப்பந்தம்", "கடவுள் தந்த உரிமை" அல்லது "என் றென்றும் நிலையான இயற்கை விதிகள்" (அதாவது முதலாளித்துவ சமுதாய விதிகள்) ஆகியவற்றின் அடிப்படையிலானவை என்று பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் சமூகவியலாளர்களும் கூறுவது தவறானது. சொத்துடைமை என்பது வரலாற்றுக் கருத்துருவாகும், இது அந்தந்த வர்க்கத்தின் அடிப்படை ஜீவாதார நலன்களைப் பற்றியது.

உழைப்புப் பிரிவினை

உழைப்பு நடவடிக்கையின் போது மக்கள் தேசியப் பொருளாதாரத்தின் பல்வேறு ஆலைகள், துறைகளில் பிரிக்கப்படுகின்றனர். இரண்டு விதமான உழைப்புப் பிரிவினைகள் உள்ளன: முதலாவது, சமுதாயத்தின் உள்ளே நிலவுவது (சமூக உழைப்புப் பிரிவினை), இரண்டாவது, குறிப்பிட்ட தொழிற்சாலையினுள் நிலவுவது (தனி உழைப்புப் பிரிவினை). உற்பத்தித் துறைகள் (உதாரணமாக, தொழிற்துறை, விவசாயத்துறை), மற்றும் இதன் வகைகள், துணைப் பிரிவுகள் (உதாரணமாக, கால்நடை வளர்ப்பு மற்றும் பயிர்த்தொழில், தோண்டி யெடுக்கும் மற்றும் பதப்படுத்தும் தொழிற்துறை) ஆகியவற்றிலான உழைப்புப் பிரிவினைகள் சமுதாயத்தின் உள் உழைப்புப் பிரிவினைகளாகும். ஒரு தொழிற் சாலையின் உள் உழைப்புப் பிரிவினை பல்வேறு வேலைப் பிரிவுகள், வேலையிடங்களில் பணி புரிபவர் களுக்கிடையிலான உழைப்புப் பிரிவினையாகும்; இதில் தொழிலாளர்கள் மற்றும் பொறியியல், தொழில்நுட்ப பணியாளர்களுக்கு இடையிலான வேலைகளின் பிரிவினை அடங்கும்.

சமூக உழைப்புப் பிரிவினை மட்டம் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டத்தின் மிக முக்கியக் குறியீடு களில் ஒன்றாகும். மனிதகுலத்தின் ஆரம்பக் கட்டத்தில் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம் மிகவும் தாழ்வான நிலையில் இருந்த போது உழைப்புப் பிரிவினையின் மிக எளிய வடிவம் — பால் மற்றும் வயதின் அடிப்படையிலான இயற்கையான உழைப்புப் பிரிவினை — தோன்றியது. மூன்று பெரும் சமூக உழைப்புப் பிரிவினைகள் (கால்நடை வளர்ப்பு குலங்கள்

பிரிந்தது, பயிர்த்தொழிலிலிருந்து கைத்தொழில் பிரிந்தது, வர்த்தகம் தோன்றியது ஆகியவை) உற்பத்திச் சக்திகள் மற்றும் உழைப்பின் உற்பத்தித் திறனின் வளர்ச்சிக்கும், தனியுடைமை தோன்றவும், சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிக்கப்படவும் பெரிதும் உதவின.

நவீன பெரும் இயந்திர உற்பத்திச் சூழ்நிலைகளில் சமூக உழைப்புப் பிரிவினையானது நூற்றுக் கணக்கான துறைகள், பிரிவுகளை உள்ளடக்கி, சிக்கலாக கிளை பரப்பி நிற்கும் முறையாகத் திகழுகிறது. கடந்த பத்தாண்டுகளில் மட்டும் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்தியதன் விளைவாய் மின்னணு தொழில்நுட்பம், எரிவாயுத் தொழிற்துறை, உபகரண உற்பத்தி, அணுசக்தித் தொழிற்துறை, செயற்கை இரசாயனம், அரைக் கடத்திகளின் உற்பத்தி, தானியங்கி சாதனங்களின் உற்பத்தி போன்ற பல சுயமான துறைகள் தோன்றியுள்ளன.

சமூக உழைப்புப் பிரிவினை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கும் அதே சமயம் சமூக அமைப்பின் தன்மையுடன் நெருக்கமாகத் தொடர்புடையது, எந்த சமூக உறவுகளின் கீழ் உழைப்பு நடைபெறுகிறதோ அவற்றின் வெளிப்பாடுகளில் ஒன்றாகும். முதலாளித்துவத்தின் கீழ் சமூக உழைப்புப் பிரிவினை தன்னிச்சையாக வளருகிறது, பல்வேறு துறைகளும் உற்பத்திகளும் சமமின்றி வளருகின்றன, இவற்றின் இடையே தொடர்ந்து இசைவின்மைகள் தோன்றுகின்றன, இதனால் உழைப்பும் சாதனங்களும் பயனின்றி செலவழிகின்றன. உழைப்புப் பிரிவினை ஆழமடைவதானது உற்பத்திக்கு மேன்மேலும் சமூகத் தன்மையை அளிக்கிறது, உழைப்பின் விளைபயன்களை சுவீகரிப்பதோ முதலாளித்துவத் தனியுடைமை வடிவத்

திலேயே இருக்கின்றது. இதனால் முதலாளித்துவ அமைப்பின் எல்லா முரண்பாடுகளும், எல்லாவற்றிற்கும் மேலாக முதலாளித்துவத்தின் முக்கிய முரண்பாடு — உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் இதன் விளைபயன்கள் முதலாளித்துவத் தனியுடைமை வடிவில் சுவீகரிக்கப் படுவதற்கும் இடையிலான முரண்பாடு — கூர்மையடை கின்றன. சோஷலிசத்தின் கீழ் சமூக உழைப்புப் பிரிவினை திட்டமிட்ட வகையில், சமுதாயம் முழுவதன், இதன் எல்லா உறுப்பினர்களின் நலன்களுக்காக நிறைவேற்றப் படுகிறது. சோஷலிசம் உலகின் முதல் சோஷலிச நாடாகிய சோவியத் யூனியனின் வரம்புகளை விட்டு வெளியே வந்து உலக அமைப்பாக மாறியதானது, சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை தோன்ற வழிகோலியது. இது எல்லா தரப்புகளுக்கும் முழு சமத்துவம், தோழமை ரீதியான பரஸ்பர உதவி, பரஸ்பர அனுகூலம் ஆகியவற்றின் அடிப்படையில் அரசுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகள் விஷயத்தில் ஒரு புதிய கட்டத்தைக் குறித்தது.

சமூகப் புரட்சிகளின் மூலக் காரணம்

விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பத்திலும் நடைபெற்ற எவ்வளவோ மகத்தான புரட்சிகர மாற்றங்களை மனித வரலாறு அறியும். இவை உலகம் மற்றும் இதன் இடையறாத இயக்கத்தை நிர்வகித்த விதிகளைப் பற்றிய கருத்துக்களை அடிப்படையிலேயே மாற்றின. சக்கரம், நீராவி என்ஜீன், காற்று அரவை இயந்திரம் மற்றும் அணு உலை முதலியவற்றின் கண்டுபிடிப்புகள் மனித மேதமையின் மகத்தான கண்டுபிடிப்புகளில் ஒரே சங்கிலித் தொடர் போன்றவையாகும். இப்படிப்பட்ட

கண்டுபிடிப்புகளில் ஒவ்வொன்றும் (இவை ஒவ்வொன் றிற்கும் இடையே நூற்றாண்டுகள், ஏன் ஆயிரமாண்டுகள் கூட இருக்கலாம்) உற்பத்தியில் பயன்படுத்தப்பட்ட போது, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் புதிய பாய்ச்சலைக் குறித்தது.

வரலாற்றில் பல சமூக கொந்தளிப்புகள், சமூகப் புரட்சிகள் நடந்துள்ளன. பழைய உலகின் அடிப்படை களை அழித்த இவை சமுதாயத்தின் முன்னோக்கிய இயக்கத்திற்குப் பாதை சமைத்தன. கார்ல் மார்க்ஸ் புரட்சியை வரலாற்றின் என்ஜின் என்றார். பழையதாகி இற்றுப் போனவற்றைத் தூக்கியெறிந்த மனிதகுலம் புரட்சிகளின் பயனாய் புதிய எல்லைகளுக்கு வந்தது, தன் சமூக வளர்ச்சியைத் துரிதப்படுத்தியது.

கவனமாக உற்று ஆராய்ந்தால், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தில் ஏற்படும் மாற்றங்களுக்கும் (இவற்றால் சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய உழைப்பாளிகளிடம் மாற்றங்கள் ஏற்படுகின்றன) சமூகப் புரட்சிகளுக்கும் இடையே ஆழ்ந்த தொடர்பு உள்ளது தெரிய வரும். உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான நெருங்கிய பரஸ்பரச் செயலாக்கமும், இவற்றின் இடையே குறிப்பிட்ட பொருத்தத்தை ஏற்படுத்தும் அவசியமும் மேற்கூறிய தொடர்பிற்கான காரணங்களாக அமைகின்றன.

உற்பத்திச் சக்திகளுக்கு, தாம் எந்த சமூகச் சூழ் நிலைகளில் வளர்ந்தாலும் அக்கறையில்லை என்பது போல் மேற்போக்காகப் பார்க்கையில் தெரியும். அமெரிக்க ஐக்கிய நாட்டில் தயாரிக்கப்பட்ட உலோகத் தகடுகளை அறுக்கும் கடைசல் இயந்திரங்கள் சோவியத் தொழிற்சாலைகளில் இயங்குகின்றன, சோவியத் நாட்டில் தயாரிக்கப்பட்ட லாரிகள் பல முதலாளித்துவ நாடுகளில்

சரக்குகளை எடுத்துச் செல்கின்றன. ஆனாலும் வேறுபட்ட சமூக அமைப்புகளில் உற்பத்திச் சாதனங்கள் எப்படி, எந்த லட்சியங்களுக்காகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதில் கணிசமான வேறுபாடு உள்ளது. விண்வெளி ஆராய்ச்சிக்கான மகத்தான தொழில்நுட்பச் சாதனங்கள் சோஷலிச நாடுகளில் விஞ்ஞான, தேசியப் பொருளா தாரத் தேவைகளுக்காக, சமாதானமான வழிகளில் பயன்படுத்தப்படுகின்றன. ஆனால் விண் கப்பல்களை பயங்கரமான யுத்தக் கருவிகளாகவும் பயன்படுத்தலாம்; உலக ஆதிக்கத்தை வெல்லத் துடிக்கும் அமெரிக்க இராணுவத் தொழிற்துறை இணையங்கள் இதற்குத்தான் முயலுகின்றன.

உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு சமூக உற்பத்தியின் இயக்கத்தின் தன்மையால் நிர்ணயிக்கப்படுகிறது. இதன் இடையறாத மாற்றத்திற்கு, கீழ் நிலையிலுள்ள வடி வங்களிலிருந்து உயர் வடிவங்களை நோக்கிய வளர்ச்சிக்கு ஏதோ வெளிக் காரணங்கள் அல்ல, உள் காரணங்கள் தான் கட்டளையிடுகின்றன. உற்பத்திச் சக்திகள்தான், அதுவும் எல்லாவற்றிற்கும் மேலாக உழைப்புக் கருவிகளும் மனிதர்களின் உழைப்பு நடவடிக்கையும்தான் சமூக உற்பத்தியில் மிகவும் மாறுபடும் தன்மையுள்ள, நவீனப் படுத்தும் அம்சமாகும். இவற்றின் வளர்ச்சியைப் பொறுத்துதான் சமுதாயத்தின் உற்பத்தி உறவுகள் உள்ளன. புராதனக் கூட்டுச் சமூக சொத்துடைமையின் அடிப்படையில் உருவான உற்பத்தி உறவுகள் எளிய உழைப்புக் கருவிகளுக்கு (இவை வேட்டையாடுவதற்கும் மீன்பிடிப்பதற்கும்தான் தோற்றுவிக்கப்பட்டன) ஏற்றவை யாக இருந்தன. விவசாயிகள், கைத்தொழிலாளர் களிடமிருந்து உற்பத்திக் கருவிகளையும் சாதனங்

களையும் வலுக்கட்டாயமாகப் பிடுங்கிய முதலாளித்துவம் இவர்களை ஆலைகளுக்கும் தொழிற்சாலைகளுக்கும் விரட்டியடித்து, இயந்திர ஒலியாலும் நீராவி என்ஜின் களின் முழக்கத்தாலும் தன் தோற்றத்தைப் பற்றி அறிவித்தது. நம் காலத்திய விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி, உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாக இருக்கும் சூழ்நிலையில்தான், சோஷலிசத்திற்கே உரித் தான உற்பத்தி உறவுகளின் கீழ்தான் தன்னை முழுமையாக வெளிப்படுத்துவதற்கான வாய்ப்புகளைப் பெறுகிறது.

ஆனால் இதனால் உற்பத்தி உறவுகள் வெறுமனே உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைப் பிரதிபலிக்கின்றன என்று பொருளாகாது. மாறாக, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி, இவற்றின் தன்மை, திசையமைவு ஆகியவற்றின் மீது உற்பத்தி உறவுகள் மிகவும் நேரடியான தாக்கம் செலுத்துகின்றன. இத்தாக்கம் நல்ல ஆக்கபூர்வமான தாக்கமாகவோ, அழிவுகரமானதாகவோ இருக்கலாம்; உற்பத்தி உறவுகள் உற்பத்தியின் வளர்ச்சிக்கு உதவக் கூடும், அல்லது முன்னோக்கிப் பாயும் உற்பத்திச் சக்திகளின் பாதையில் தடையாக நின்று வளர்ச்சி வேகத்தைக் குறைக்கக் கூடும். அப்போது உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் முரண்பாடு தோன்றும். இதில், உற்பத்தி உறவுகளால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலிருந்து மிகவும் நீண்ட காலம் பின்தங்கி, இதனுடன் முரண்பட முடியாது, ஏனெனில் இப்படிப்பட்ட சூழ்நிலையில் சமூக முன்னேற்றம் சாத்தியமில்லை. உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலிருந்து எவ்வளவு பின்தங்கியிருந்தாலும் முன்னவை காலப் போக்கில் பின்னதுடன் பொருந்தி வர வேண்டும். உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளின் மட்டம் மற்றும்

தன்மைக்கும் இடையிலான பொருத்தம் பொது பொருளா தார விதியாகும். இவ்விதி மனித சமுதாய வளர்ச்சியின் எல்லா கட்டங்களிலும் நிலவும் விதியாகும்.

ஒரு விதமான உற்பத்தி உறவுகளுக்குப் பதில் வேறு விதமான உற்பத்தி உறவுகள் வர உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டும் போதாது. பழைய சமூக அமைப்பு, இதில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கங்கள் எப்போதுமே தாமாக தம்மிடத்தை விட்டுக் கொடுக்காது. எனவே பழையதாகிப் போன உற்பத்தி உறவுகளை மாற்ற, உற்பத்திச் சக்திகளின் முந்தைய வளர்ச்சிப் போக்கு முழுவதாலும் தோற்றுவிக்கப்பட்ட பொருளாயத முன் நிபந்தனைகளோடு கூட மேற்கூறிய எதிர்ப்பை முறியடிக்க வல்ல சமூகச் சக்தியும் தேவை. எதிரெதிரான வர்க்கங் களைக் கொண்ட, சுரண்டல் நிலவும் சமுதாயங்களில் உற்பத்தி உறவுகளின் மாற்றம் சமூகப் புரட்சிகளின் மூலம் நடைபெறுகிறது. அடிமையுடைமை, நிலப்பிரபுத் துவம் மற்றும் முதலாளித்துவத்தில் (இவற்றில் உற்பத்தி தன்னிச்சையான தன்மையை உடையது) உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியிலிருந்து பின்தங்கி நிற்கும் உற்பத்தி உறவுகள் கடுமையான, ஆழமான சமூக முரண்பாடுகளையும் சச்சரவுகளையும் ஏற்படுத்துகின்றன, உழைப்பாளிகளுக்கும் சுரண்டுபவர்களுக்கும் இடையில் கடும் வர்க்கப் போராட்டத்திற்கு வழிகோலுகின்றன.

மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான சமுதாயத்தின் வளர்ச்சியில் இரண்டு போக்குகள் — முன்னோக்கிய வளர்ச்சிப் போக்கும் பின்னோக்கிய வீழ்ச்சிப் போக்கும் — காணப்படுகின்றன. வளர்ச்சியின் ஆரம்பக் கட்டத்தில் உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் தன்மைக்கு ஏற்றதாக இருக்கும் போது சமுதாயம் முன்னோக்கி வளருகிறது. பின்னால் உற்பத்தி

உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் தடையாக, விலங்காக மாறும் போது, பின்னோக்கிய வீழ்ச்சிப் போக்கு ஆரம்பமாகிறது, இது இறுதியில் பழைய சமூக உறவுகள் உடைய வழிகோலுகிறது. சமூகப் புரட்சி நடைபெறுகிறது, இது பழையதாகிப் போன சமூக வாழ்க்கை வடிவங்களைத் தூக்கியெறிந்து உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது.

ஆனால் முந்தைய புரட்சிகள் எல்லாம் மனிதனை மனிதன் சுரண்டுவதற்கு முடிவு கட்டவில்லை, மாறாக, சுரண்டலின் ஒரு வடிவத்திற்குப் பதில் இன்னொரு வடிவத்தைக் கொண்டு வந்தன. அடிமைகளை மேற்பார்வையிட்டவனின் கசையடிக்குப் பதில் நிலப்பிரபுவின் சாட்டையடி வந்தது. இது நிலப்பிரபுவிற்கு சொந்தமாயிருந்த நிலத்தை உழும்படி பண்ணையடிமை விவசாயியைக் கட்டாயப்படுத்தியது. நிலப்பிரபுவிற்குப் பதில் ''அறிவொளியூட்டப்பட்ட'' முதலாளி வந்தான்; இவன் வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி, வறுமை ஆகியவற்றைக் காட்டி அச்சுறுத்தி கூலித் தொழிலாளர்களைச் சுரண்ட நவீனமான, தந்திரமான வழிகளைக் கண்டுபிடித்தான்.

சோஷலிசப் புரட்சிதான் உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமையை — இதுதான் மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையாகும் — ஒழித்துக் கட்டி உற்பத்திச் சாதனங்களைப் பொதுவுடைமையாக்குகிறது, இதன் மூலம் சமுதாயம் முழுவதன், இதன் ஒவ்வொரு உறுப்பினரின் நலன்களுக்கேற்ப உற்பத்திச் சக்திகளின் இடையறாத வளர்ச்சிக்கு எல்லையற்ற வாய்ப்புகளை உண்மையாக ஏற்படுத்துகிறது. சோஷலிச உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியோடு

சேர்ந்து தொடர்ந்து மேம்படுகின்றன, படிப்படியாக கம்யூனிச உற்பத்தி உறவுகளாக வளர்ச்சியடைகின்றன. ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப'' என்று தன் பதாகையில் எழுதப் போகும் வர்க்கங்களற்ற, சமூக ரீதியாக ஒரே மாதிரியான சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை இந்த கம்யூனிச உற்பத்தி உறவுகள் ஏற்படுத்தும்.

பொருளாதார அடித்தளமும் மேற்கட்டுமானமும்

சமுதாயத்தில் உற்பத்தி உறவுகள் குறிப்பிட்ட முறையின் வடிவத்தில் நிலவுகின்றன. இந்த முறைதான் சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்திலும் இதன் பொருளாதார அமைப்பு அல்லது **பொருளாதார அடித்தளமாகும்.** இந்தப் பொருளில்தான் அடிமையுடைமை சமுதாயம், நிலப்பிரபுத்துவம், முதலாளித் துவம், சோஷலிசத்தின் பொருளாதார அடித்தளங் களைப் பற்றிப் பேசப்படுகிறது.

ஒவ்வொரு சமூக அமைப்பிற்கும் அதனதன் பொரு ளாதார அடித்தளம் உண்டு. இது இல்லாமல் பொரு ளாயத நலன்களை உற்பத்தி செய்ய முடியாது, சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடையாது. எல்லா உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தமாகத் திகழும் பொருளாதார அடித்தளம் இறுதியில் மற்ற எல்லா சமூக உறவுகளையும் நிர்ணயிக்கிறது. இந்த சமூக உறவுகள்தான் பொருளாதார அடித்தளத்தின் மீது **மேற்கட்டுமானமாக** எழுகின்றன. ஒவ்வொரு பொருளாதார அடித்தளத்திற்கும் அதனதன் மேற்கட்டு

மானம் உண்டு. மேற்கட்டுமானம் என்பது அரசியல், சட்ட, தத்துவஞான, தார்மீக, மத, மற்ற கண்ணோட்டங்கள், கருத்துக்களும் இவற்றிற்கு ஏற்ற ஸ்தாபனங்களும் நிறுவனங்களும் (அரசு, அரசியல் கட்சிகள், சட்ட, கலாசார, நீதிபரிபாலன, மத, மற்ற நிறுவனங்கள்) ஆகும்.

அந்தந்த பொருளாதார அடித்தளத்தால் தோற்றுவிக்கப்பட்டு நிர்ணயிக்கப்பட்ட மேற்கட்டுமானம், தன் பங்கிற்கு தீவிர சக்தியாகி, அடித்தளம் உருவாகவும் வலுவடையவும் உதவுகிறது. நவீன சூழ்நிலைகளில் பொருளாதார அடித்தளத்தின் மீது மேற்கட்டுமானத்தின் தாக்கம் விசேஷமாக வெளிப்படுகிறது. முதலாளித்துவ நாடுகளில் அரசியல் மேற்கட்டுமானம் பிற்போக்கான பங்காற்றுகிறது, ஏனெனில் இது பழைய, காலங்கடந்த பூர்ஷ்வா பொருளாதர அடித்தளத்தையும், கண்டிப்பாக அழிந்து போக வேண்டிய சுரண்டல் வர்க்கங்களையும் பாதுகாக்கிறது. இங்கே மேற்கட்டுமானம் சமூக முன்னேற்றத்திற்குத் தடையாக உள்ளது, உலக ஆதிக்கத்திற்காகப் பாடுபடும் மிகப் பெரும் ஏகபோகங்களின் கருவியாகத் திகழுகிறது. சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் மேற்கட்டுமானம் முற்போக்கான பங்காற்றுகிறது, சோஷலிச உற்பத்தியின் துரிதமான வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் கலாசாரத்தை வளர்க்கவும் உதவுகிறது.

உற்பத்தியில் உற்பத்திச் சக்திகள்தான் பெரிதும் மாறும் தன்மையுள்ள, மிகவும் புரட்சிகரமான அங்கமாகும். உற்பத்திச் சக்திகளின் நிலையைப் பொருத்து, இவற்றிற்கு ஏற்றபடி மனிதர்களின் உற்பத்தி உறவுகள் மாறுகின்றன, சமுதாயத்தின் பொருளாதார அடித்தளம் மாறுகிறது. அடித்தளத்தில் ஏற்படும் மாற்றங்களோ

தம் பங்கிற்கு மேற்கட்டுமானத்தில் உரிய மாற்றங்களுக்கு வழிகோலுகின்றன. குறிப்பிட்ட பொருளாதார அடித் தளத்தின் மீது எழும் மேற்கட்டுமானம் தன் பங்கிற்கு இந்த அடித்தளத்தைப் பலப்படுத்த தீவிரமாக முயலு கிறது, இதனால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது அல்லது தடை செய்கிறது.

சமூக விஞ்ஞானம் என்ற முறையில் அரசியல் பொருளாதாரம் உற்பத்தி உறவுகளையும், இவற்றிற்கும் உற்பத்திச் சக்திகள், மேற்கட்டுமானத்திற்கும் இடையிலான சிக்கலான பரஸ்பர செயலாக்கத்தையும் ஆராய்கிறது. இந்த பரஸ்பர செயலாக்கத்தின் சாரத்தை வெளிப் படுத்தாமல் உற்பத்தி உறவுகளின், சமுதாயத்தினுடைய பொருளாதார அடித்தளத்தின் உண்மையான தன்மையைப் புரிந்து கொள்ள இயலாது. உதாரணமாக, முதலாளித்து வத்தின் கீழ் உற்பத்திச் சக்திகளுக்கும் உற்பத்தி உறவுகளுக்கும் இடையிலான ஆழ்ந்த முரண்பாடுகளை ஆராயாமல், பொருளாதார வளர்ச்சியின் மீது பூர்ஷ்வா அரசு தாக்கம் செலுத்தும் முறைகள், வடிவங்களை வெளிப் படுத்தாமல் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை ஆராய முடியாது.

உற்பத்தி முறையும்
வர்க்கங்களும்

மனித சமுதாய வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் குறிப்பிட்ட உற்பத்திச் சக்திகளும் இவற்றிற்கேற்ற உற்பத்தி உறவுகளும் உள்ளன. வரலாற்று வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் ஆராயப்படும் சமூக உற்பத்தி, குறிப்பிட்ட **உற்பத்தி முறையில்** நிலவு

கிறது. அந்தந்த உற்பத்தி முறையை நிர்ணயிக்கும் அம்சங்கள் யாவை?

உற்பத்திச் சாதனங்களின் மீதான சொத்துடைமைதான் ஒவ்வொரு உற்பத்தி முறையின் அடிப்படையிலும் உள்ளது. இதுதான் உற்பத்தி வளர்ச்சியின் எல்லா முக்கிய நியதிகளையும் நிர்ணயிக்கிறது. சொத்துடைமை வடிவம்தான் மனிதர்களின் உற்பத்தி உறவுகளை ஒரே முறையாக ஒன்றிணைக்கிறது, உழைப்பவர்கள் உற்பத்திச் சாதனங்களுடன் உரிய முறையில் இணைய வழிகோலு கிறது.

வரலாற்றிற்கு **ஐந்து முக்கிய உற்பத்தி முறைகள்** தெரியும். இவற்றைத்தான் அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது. **புராதன கூட்டுச் சமூக உற்பத்தி முறை, அடிமையுடைமை உற்பத்தி முறை, நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை, முதலாளித்துவ உற்பத்தி முறை மற்றும் கம்யூனிச உற்பத்தி முறை** என்பவைதான் அந்த ஐந்து உற்பத்தி முறைகளாகும். இவை சமூக முன்னேற்றப் போக்கில் படிப்படியாக ஒன்றையொன்று மாற்றின.

உற்பத்திச் சாதனங்களையும் நேரடியாக உழைப்ப வனையும் தொடர்புபடுத்துவது ஒவ்வொரு உற்பத்தி முறையிலும் ஒவ்வொரு விதத்தில் நடந்தது. முதலாளித் துவ சமுதாயத்தில், முதலாளித்துவத் தனியுடைமை ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலையில் உற்பத்திச் சாதனங் கள் அன்னியமான, ஒடுக்கும் சக்தியாக உழைப்பவனுடன் இணைக்கப்படுகின்றன. முதலாளித்துவ உற்பத்தி, கூலியுழைப்பைச் சுரண்டுவதன் அடிப்படையிலானது, லாபம் சம்பாதிப்பதுதான் இதன் நோக்கம். உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமை நிலவும் சமுதாயத்தில் உழைப்பவனையும் உற்பத்திச் சாதனங்களையும் இணைக்கும் முறை கோட்பாட்டு

ரீதியாக வேறு விதமானது. தனிச் சொத்துடைமையை ஒழித்துக் கட்டிய சோஷலிசம், உழைப்பவனையும் உற்பத்திச் சாதனங்களையும் புதிய, உயர்வான அடிப் படையில் — உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமையின் அடிப்படையில் — இணைத்தது; இது மனிதனை மனிதன் சுரண்டுவதை அகற்றியது.

உழைப்பவனையும் உற்பத்திச் சாதனங்களையும் இணைக்கும் முறைதான் சமுதாயத்தின் வர்க்க உள்ளடக் கத்தை நிர்ணயிக்கிறது. **வர்க்கங்கள்** என்பவை சமூக உற்பத்தியில் தாம் வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களின் பால் தமக்குள்ள உறவாலும், உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் தாம் வகிக்கும் பாத்திரத்தாலும், எனவே சமூக செல்வத்தில் தாம் பெறும் பங்கின் அளவுகளாலும், இதை சுவீகரித்துக் கொள்ளும் முறை யினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். பகை முரண்பாட்டு சமுதாயங்களில் சுரண்டல் வர்க்கங்கள் எனப்படுபவை, உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமை ஆதிக்கம் செலுத்துவதாலும் சமுதாயத்தின் பொருளாதாரத்தில் வர்க்கங்கள் வகிக்கும் இடங்களின் வேறுபாட்டாலும் பிற வர்க்கங்களின் உழைப்பை சுவீகரிக்கும் மக்கள் பகுதிகளாகும். உதாரணமாக, முதலாளித்துவ சமு தாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் கரங்களில் குவிந்துள்ளன. எனவே முதலாளி வர்க்கம் கூலித் தொழிலாளர்களின் உழைப்பின் விளைபயன்களை சுவீகரிக்கிறது. சோஷலிச சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்கள் உழைப்பாளிகள் அனைவருக்கும் சொந்த மானவை, இவர்கள் கூட்டாக உழைக்கின்றனர். எனவே இங்கு பிறர் உழைப்பை சுவீகரிக்க, மனிதனை மனிதன் சுரண்ட இடமேயில்லை.

எனவே குறிப்பிட்ட வர்க்கங்கள் இருப்பதானது சமூக உற்பத்தி வளர்ச்சியின் குறிப்பிட்ட வரலாற்று கட்டங்களுடன் தொடர்புடையது. அடிமையுடைமை சமுதாயத்தில் அடிமைகளும் அடிமைச் சொந்தக்காரர் களும், நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் பண்ணையடிமை விவசாயிகளும் நிலப்பிரபுக்களும் முக்கிய வர்க்கங்களாக இருந்தனர். முதலாளித்துவ சமுதாயத்தில் கூலித் தொழிலாளர்களும் முதலாளிகளும் முக்கிய வர்க்கங்கள், சோஷலிச சமுதாயத்திலோ தொழிலாளி வர்க்கமும் கூட்டுப் பண்ணை விவசாயிகளின் வர்க்கமும் உள்ளன.

வரலாற்று ரீதியாக குறிப்பிட்ட உற்பத்தி முறையும் அதற்குரிய மேற்கட்டுமானமும் சேர்ந்து சமூக-பொரு ளாதார அமைப்பை ஏற்படுத்துகின்றன. புராதன கூட்டுச் சமூக, அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ, முதலாளித்துவ, கம்யூனிச அமைப்புகளின் அடிப்படை யாக உள்ள பொருளாதார அமைப்பை ஆராயும் அரசியல் பொருளாதாரம் கீழ் மட்டங்களிலிருந்து உயர் மட்டங்களை நோக்கிய மனித சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சி எனும் நியதியான நிகழ்ச்சிப் போக்கைப் புரிந்து கொள்ளும் வாய்ப்பை ஏற்படுத்துகிறது.

அத்தியாயம் மூன்று

சமூக புனருற்பத்தியின் கட்டங்கள்

எந்த ஒரு பொருளுமே நுகர்வதற்காகத்தான் உற்பத்தி செய்யப்படுகிறது. இல்லாவிடில் இதை உற்பத்தி செய் வதற்காகச் செலவிடப்பட்ட உழைப்பு பயனற்றது, பொருளற்றது, சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகள் விரயமாக்கப்படும். மனிதகுலம் முழுவதன் வாழ்க்கையை யும் அச்சுறுத்தும் அழிவுகரமான ஆயுதங்களின் போட்டி யைக் கட்டவிழ்த்து விட்டுள்ள வெறிபிடித்த ஏகாதி பத்திய வட்டங்களின் நடவடிக்கைகள் இப்படிப்பட்டவை தான். இது முதலாளித்துவத்தால் விளைந்த விபரீதம், இது விவேக சிந்தனைக்கு முரண்பாடானது. உற்பத்தியின் இயற்கையான இறுதி லட்சியம் மனிதர்களின் தேவை களைப் பூர்த்தி செய்வதாகும். ஆனால் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இறுதியாக நுகர்பவர்களை அடையும் முன் இது வினியோகிக்கப்பட வேண்டும், பரிவர்த்தனை செய்யப்பட வேண்டும். மனித சமுதாய வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களிலேயே, உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்து, சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைந்த போது மனிதர்கள் தம் உழைப்பின் விளைபொருட்களைப் பரிவர்த்தனை செய்து கொள்ளத் துவங்கினார்கள். பின்னால் கூட்டு உழைப்பின் விளை

பொருட்களையும் வினியோகிக்கும் அவசியம் தோன்றியது. முதலில் இது புராதன கூட்டுச் சமூகத்தில் அல்லது இனக்குழுக்களில் நடந்ததைப் போல் சமமாகப் பகிர்ந் தளிக்கப்பட்டது. பின்னர் எந்த உற்பத்தி முறையின் வரம்புகளுக்குள் இந்த வினியோகம் நடந்ததோ அதன் விதிகளுக்கேற்ப (பெரிதும் சமமற்ற வகையில்) பகிர்ந்தளிக்கப்பட்டது. உற்பத்திச் சாதனங்களை தம் கரங்களில் வைத்திருந்தவர்களே, பிறர் உழைப்பை சுரண்டியவர்களே உற்பத்திப் பொருட்களை சுவீகரிக்கத் துவங்கினர். அடிமையுடைமை, நிலப்பிரபுத்துவ அமைப்பு களில் இப்படித்தான் இருந்தது, முதலாளித்துவ அமைப் பில் இப்படித்தான் உள்ளது. சோஷலிச அமைப்பில்தான் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் சமூக உற்பத்தியில் அவரவர் ஆற்றிய பங்கிற்கேற்ப வினியோகிக்கப்பட லாயிற்று; ''ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக் கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் உழைப்பிற்கேற்ப'' எனும் கோட்பாடு அமல்படுத்தப்படலாயிற்று.

உற்பத்தியும் நுகர்வும்

பொருளாயத நலன்களின் உற்பத்திதான் சமுதாய வாழ்க்கையின் மூல ஊற்றாகும். இது இடையறாது நடைபெற வேண்டும், அதாவது தொடர்ச்சியாகப் புதுப்பிக்கப்பட வேண்டும். ஒரு சில நாட்கள் கூட இது நிற்கக் கூடாது. உணவு, ஆடைகள், காலணி, அன்றாட வீட்டு வசதிப் பொருட்கள் போன்றவற்றை உற்பத்தி செய்வதையோ நுகர்வதையோ மனிதர்களால் நிறுத்த முடியாது.

தனிப்பட்ட செயலாக இன்றி, தொடர்ந்து மீண்டும் மீண்டும் நடைபெறும் செயலாக, இடையறாது புதுப்

பிக்கப்படும் செயலாக உள்ள பொருளாயத உற்பத்தி **புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்காக** நம் முன் நிற்கிறது. புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் நேரடியான உற்பத்தி மட்டுமின்றி, பொருளாயத நலன்களின் வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவையும் அடங்கும். பின்னால் கூறப்பட்டவை புனருற்பத்தியின் பல்வேறு வடிவங்களாகும், இவை அங்கக ரீதியாக முழு அமைப்பின் பகுதிகளாக இணைந்துள்ளன. சமூகப் புனருற்பத்தியின் இந்தக் கட்டங்களையும் இவற்றின் பரஸ்பரத் தொடர்பு கள், பரஸ்பர செயலாக்கத்தையும் சுருக்கமாகப் பார்ப்போம்.

உற்பத்தியும் நுகர்வும்தான் புனருற்பத்தியின் ஆரம்ப மற்றும் இறுதிக் கட்டங்களாகும். நுகர்விற்கான குறிப் பிட்ட செய்பொருள்தான் உற்பத்தியின் விளைவாகும் என்பது தெரிந்ததே. நுகர்வு என்பது உற்பத்தி நுகர் வாகவோ, தனிப்பட்ட முறையிலான நுகர்வாகவோ இருக்கலாம். உற்பத்தி நுகர்வு என்றால் தயாரான பொருள் மற்ற பொருட்களின் உற்பத்திக்காகப் பயன்படுத்தப்படுகிறது, அதாவது புதிய உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் பயன்படுத்தப்படுகிறது என்று அர்த்தம். எனவே உற்பத்தி நுகர்வு என்பதே ஒரு உற்பத்தி நிகழ்ச்சிப் போக்காகும். தனிப்பட்ட நுகர்வு என்றால் தயாரான பொருள் மனிதர்களின் தேவை களைப் பூர்த்தி செய்யச் செல்கிறது, மனிதர்களால் பயன்படுத்தப்படுகிறது, இதுதான் உண்மையான நுகர்வு என்று அர்த்தமாகும்.

உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையே நெருங்கிய பரஸ்பரத் தொடர்பு உள்ளது, ஆனால் இதில் உற்பத் திக்குத்தான் தீர்மானகரமான பங்குள்ளது. உற்பத்திதான் நுகர்வின் ஆரம்பக் கட்டம், இதற்கு அவசியமான

முன்நிபந்தனை. உற்பத்திதான் உற்பத்தி நுகர்விற்கும் தனிப்பட்ட நுகர்விற்கும் தேவையான பொருட்களைத் தோற்றுவிக்கிறது. இதுதான் நுகர்வின் அளவையும் கட்டமைப்பையும் நிர்ணயிக்கிறது, ஏனெனில் உற்பத்தி செய்யப்பட்டதைத்தான் நுகர முடியும். உற்பத்தியும் புதிய பொருட்களின் தேவையை ஏற்படுத்துகிறது, நுகர்விற்கு ஊக்கமளிக்கிறது, நுகர்வு முறையை நிர்ணயிக் கிறது. உதாரணமாக, நிலக்கரியும் எண்ணெயும் முதலில் எரிபொருளாகத்தான் எடுக்கப்பட்டன. விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சியடைந்ததும் இவை தொழிற் துறையிலும் வீட்டிலும் பயன்படுத்தப்படும் பல இரசாயனப் பொருட்களுக்கான மூலப்பொருட்களாக ஆகியுள்ளன. மோட்டார் வாகனங்கள் தோன்றி, இவற்றின் உற்பத்தி வளர்ச்சியடைந்ததையடுத்து பல்வேறு விதமான பொருட் கள், கான்கிரீட் போடப்பட்ட நெடுஞ்சாலைகள், மோட்டார் சர்வீஸ் வசதிகள் போன்றவற்றிற்கான தேவை ஏற்பட்டது. நுகர்வுதான் உற்பத்தியின் இயற்கை யான இறுதி லட்சியம், இதன் சிகரம் ஆகும். அந்தந்த பொருளின் நுகர்வு புதிய தேவையைத் தோற்றுவிக்கிறது, இதன் மூலம் உற்பத்தியின் வளர்ச்சிக் கும் மேம்பாட்டிற்கும் ஊக்கம் தருகிறது. புனருற்பத்தி யின் இரண்டு எதிரெதிர் கட்டங்களுக்கு இடையிலான நெருங்கிய தொடர்பைக் குறிப்பிட்ட கா. மார்க்ஸ் பின்வருமாறு எழுதினார்: ''உற்பத்தி இல்லாமல் நுகர்வு இல்லை, ஆனால் அதே சமயம் நுகர்வு இல் லாமலும் உற்பத்தி இல்லை, ஏனெனில் அப்படியிருந்தால் உற்பத்தி என்பது நோக்கமற்றதாய் இருந்திருக்கும்''. *

*** K. Marx, F. Engels, *Collected Works*, Vol. 28, Progress Publishers, Moscow, p. 29.**

உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையே அங்கக ரீதியான பரஸ்பரத் தொடர்பு நிலவுவதால் இவற்றிற் கிடையே எவ்வித முரண்பாடுகளும் இல்லை என்று ஆகாது. முதலாளித்துவ சமுதாயத்தில், ஏழ்மையும் உழைப்பாளி மக்கள் திரளினரின் மட்டான நுகர்வுச் சக்தியும் இருக்கும் சூழ்நிலைகளில், உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை விற்க இயலாமையின் காரணமாக புனருற்பத்திப் போக்கு அடிக்கடி குலைகிறது: சமுதாயம் மிகை உற்பத்தியின் பொருளாதார நெருக்கடி வலையில் விழுகிறது. உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பும் பரஸ்பரச் சார்பு நிலையும் தன்னிச்சையாக, குருட்டுத்தனமான, அழிவுகரமான சக்தியாக வெளிப்படுகிறது; இது உழைப்பாளிகளுக்குப் பெரும் சோதனைகளையும் வேதனைகளையும் கொண்டு வருகிறது.

சோஷலிசத்தில் உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பு வேறுவிதமாக வெளிப் படுகிறது. உழைப்பாளிகளின் பொருளாயத நிலை இடையறாது வளர்ந்து வருவதும், வாங்கும் சக்தி அதிகரித்து வருவதும் உற்பத்தியின் வளர்ச்சிக்கு ஊக்க மளிக்கின்றன, மிகை உற்பத்தியின் பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகியவற்றிலிருந்து சமுதாயத்தைக் காக்கும் உத்திரவாதத் தை அளிக்கின்றன. ஆனால் இதனால் சோஷலிசத்தில் உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையே எவ்வித பொருத்த மின்மையும் நிலவவில்லை என்று ஆகாது. இதைக் கண்டுபிடித்ததுமே சமுதாயம் திட்டமிட்ட வகையில், உரிய நேரத்தில் இந்தப் பொருத்தமின்மையை அகற்றி, உற்பத்திக்கும் நுகர்விற்கும் இடையில் அவசியமான விகிதத்தை நிலைநாட்டவும் தேவையான நடவடிக்கை

களை மேற்கொள்கிறது. சோஷலிச நாடுகளில் நுகர்வுப் பண்டங்களின் உற்பத்தி விரைவாக வளர்ந்து வருகிறது; மக்களின் அதிகரித்து வரும் தேவைகளை மேன்மேலும் முழுமையாகப் பூர்த்தி செய்வதுதான் இதன் நோக்கம்.

பொருட்களின் வினியோகம்

உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் நுகரப்பட முதலில் இவை வினியோகிக்கப்பட வேண்டும். **வினியோகம்** என்பது உற்பத்திக்கும் நுகர்விற்கும் நடுவில் இடைப்பட்ட அங்கமாகத் திகழுகிறது, இவற்றுடன் நெருக்கமாகத் தொடர்புடையது. உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் இடையிலான பரஸ்பரத் தொடர்பில் உற்பத்திக்குத்தான் முக்கியப் பங்குள்ளது. உற்பத்தி செய்யப்பட்ட பொருட் கள்தான் வினியோகிக்கப்பட முடியும் என்பது மட்டும் இதற்குக் காரணமல்ல. பல்வேறு வர்க்கங்கள், சமூகப் பிரிவுகளுக்கு இடையிலான வினியோகத்தின் வடிவங் களும் தன்மையும் உற்பத்தியில் மனிதர்களின் பொரு ளாதார உறவுகளை, எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களின் மீதான சொத்துடைமை வடிவத்தைப் பொறுத்தது என்பதும் மேற்கூறியதற்கான காரணமாகும்.

முதலாளித்துவத்தில் உற்பத்திச் சாதனங்கள் முதலாளி வர்க்கத்தின் கரங்களில் உள்ளன, உற்பத்தி செய்யப்பட்ட பொருள் அதற்குத்தான் சொந்தமானது. இப்பொருள், முதலாளித்துவ லாபம் பெருகவும் தொழிலாளர்களின் ஊதியங்களைக் குறைந்த பட்சமாக்கவும் வகை செய்யும் வகையில் வினியோகிக்கப்படுகிறது. முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலான சமரசப்படுத்த இயலா பகை முரண்பாடுகளும், செல்வத்திற்கும்

ஏழ்மைக்கும் இடையிலான கடும் வேறுபாடுகளும் முதலாளித்துவ சமுதாயத்திற்கு உரித்தானவை. இங்கு உழைப்பாளி தன் ஜீவாதார உரிமைகளுக்காக இடையறாது போராட வேண்டியுள்ளது. உழைப்பிற்கான ஊதியம் பெறும் போது பால், வயது, இனம் ஆகிய பாகுபாடுகளுக்கு உட்படுத்தப்படும் உழைப்பாளிகளின் நிலை குறிப்பாகக் கடினமானது.

உற்பத்திச் சாதனங்கள் பொதுவுடைமையாக உள்ள சோஷலிசத்தில் விஷயம் வேறுவிதமானது. இங்கு மக்கள் முதலாளிகளுக்காக அல்ல, தமக்காக, தம் சமுதாயத்திற்காக வேலை செய்கின்றனர். சமூக உற்பத்தியில் செலவழிக்கப்பட்ட உழைப்பின் அளவு, தரத்திற்கேற்ப நுகர்வுப் பொருட்கள் வினியோகிக்கப் படுகின்றன, உழைப்பாளிகளின் வாழ்க்கை மற்றும் கலாசாரத் தரம் இடையறாது உயருகிறது.

எனவே ஒரு சில பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் கூறும்படி வினியோகம் என்பது உற்பத்தியைச் சாராத ஏதோ ஒன்றல்ல. முதலாளித்துவத்தின் குறைபாடுகளை அகற்ற இந்த நிபுணர்கள் அதிக நீதியான வினியோகத்தை அமுலாக்குவதை சிபாரிசு செய்கின்றனர். ஆனால் இது முதலாளித்துவத்தில் சாத்தியமில்லை, ஏனெனில் உற்பத்தி முறையை மாற்றாமல் வினியோக முறையை மாற்ற இயலாது.

உற்பத்தியைச் சார்ந்திருக்கும் வினியோகம் உற்பத்தியின் மீது தன் தாக்கத்தையும் செலுத்துகிறது. உதாரணமாக, உற்பத்திச் சாதன்ங்களின் வினியோகமும் பல்வேறு துறைகள், பிரிவுகளில் உழைப்பவர்களைப் பகிர்ந்தளிப்பதும் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் நேரடியாக அடங்கும், இவை உற்பத்தியின் விகிதங்கள், துறை ரீதியான கட்டமைவு, சமூக உழைப்புப் பிரிவினை

ஆகியவற்றின் மீது தாக்கம் செலுத்துகின்றன. உழைப்பின் விளைபொருட்களை வர்க்கங்களிடையே, சமூகப் பிரிவு களிடையே, சமுதாய உறுப்பினர்களிடையே வினி யோகிப்பதானது, உழைப்பின் மீதான மனிதர்களின் அணுகுமுறை மீது, உழைப்பின் விளைபயன்கள் மீது இவர்களுக்குள்ள பொருளாயத நலன்கள் மீது தாக்கம் செலுத்தி, உற்பத்தி வளர்ச்சியைத் துரிதப்படுத்துகிறது அல்லது வளர்ச்சி வேகத்தைக் குறைக்கிறது. சோஷலிச உற்பத்தியின் வளர்ச்சியில் உழைப்பின் பொருளாயத ஊக்குவிப்புகளின் தீவிர பங்கும், உழைப்பிற்கேற்ற வினியோகம் என்ற சோஷலிச கோட்பாட்டின் தொடர்ச்சி கரமான நிறைவேற்றமும் இங்கு குறிப்பிடத் தக்கவை யாகும்.

பொருட்களின் பரிவர்த்தனை

ஒரு புறம் உற்பத்திக்கும் இதனால் நிர்ணயிக்கப்படும் வினியோகத்திற்கும், மறு புறம் நுகர்விற்கும் இடையிலுள்ள தொடர்பு அங்கம் **பரிவர்த்தனை** ஆகும். முதலில் பரிவர்த்தனை தொழிற்சாலையின் வரம்புகளுக்குள் வேலையாட்களுக்கு இடையில் நடவடிக்கைப் பரிவர்த் தனை வடிவத்தில் வெளிப்படுகிறது. ஒரு தொழில் நிறுவனத்திற்குள் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு இடையில் மற்றும் தொழிலாளர் கள், வேலைப் பிரிவுத் தலைவர்கள், பொறியியலாளர்கள், மற்ற வேலை செய்பவர்களுக்கு இடையே குறிப்பிட்ட உழைப்புப் பிரிவினை நிலவுகிறது. இவர்கள் அனைவரும் ஒன்றுசேர்ந்து உற்பத்தி எனும் ஒரே நிகழ்ச்சிப் போக்கில் பங்கேற்கின்றனர். இந்த உற்பத்திப் போக்கில்தான் இவர்களிடையே, நேரடியான பரஸ்பரத் தொடர்பின்

மூலம் திட்டவட்டமான நடவடிக்கைப் பரிவர்த்தனை நடைபெறுகிறது.

மற்ற பொருளாதார வடிவங்களில் தொழில் நிறுவனங்கள், தொழில் துறைகள், நாட்டின் பொருளா தாரப் பிரதேசங்களுக்கிடையில் பரிவர்த்தனை நடை பெறுகிறது. சமூக உழைப்புப் பிரிவினையில் பங்கேற்கும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த விசேஷ தொழில் நிறுவனங்கள் ஒன்றிற்கொன்று உழைப்புச் சாதனங்கள், மூலப்பொருட்கள், மற்றவற்றை அனுப்புகின்றன. ஏதாவது ஒரு தொழிற்சாலையில் ஆரம்பமான பொருள் தயாரிப்பு, வேறு தொழிற்சாலையில் தொடர்ந்து முடிவடையும்.

பரிவர்த்தனையின் பொருளாதார வடிவம் உற்பத்தி யின் சமூக அமைப்பால், குறிப்பாக உற்பத்திச் சாதனங் களின் மீதான சொத்துடைமையால் நிர்ணயிக்கப் படுகிறது. பரிவர்த்தனை திட்டமிட்டதாகவோ, தன்னிச் சையானதாகவோ இருக்கலாம். உதாரணமாக, இது பொருட்களின் நேரடியான பரிவர்த்தனையாக இருக்க லாம்; அதாவது புராதனக் கூட்டு சமூகத்தில் நடந்தபடி சமுதாயத்தின் ஒரு சில உறுப்பினர்கள் உற்பத்தி செய்த பொருட்கள் வேறு உறுப்பினர்களின் கரங்களுக்கு மாறும். இது பண்டப் பரிவர்த்தனை (இது பரிவர்த் தனையின் வரலாற்று வடிவங்களில் ஒன்று மட்டுமே) வடிவிலும் நடக்கலாம்.

பண்ட வடிவிலான பரிவர்த்தனை என்பது காலஞ் சார்ந்த வரலாற்றுப் புலப்பாடாகும். கி. மு. 5,000—7,000 ஆண்டுகளுக்கு முன்னரே பண்டங்களின் பரிவர்த் தனை தோன்றியது. பண்டப் பரிவர்த்தனை முதலாளித் துவத்தில்தான் தன் வளர்ச்சியின் சிகரத்தை எட்டியது. உற்பத்திச் சாதனங்களும், தனிப்பட்ட நுகர்வுப் பொருட்களும் மட்டுமின்றி மனிதனின் உழைப்புச்

சக்தியும் விற்கவும் வாங்கவும் கூடிய பண்டமாகியது. பரிவர்த்தனை, கொள்வினை-கொடுப்பினை, பண்டப் புழக்கம் ஆகியவை முதலாளித்துவ சமுதாய வாழ்க்கை யின் எல்லா அம்சங்களையும் ஆட்கொள்கின்றன. பண்ட உற்பத்தி சர்வாம்ச தன்மையைப் பெற்றது, பரிவர்த்தனையோ வர்த்தகர்கள், முதலாளிகள், கள்ள வியாபாரிகள் கொள்ளை லாபம் பெறும் வழியாயிற்று. சோஷலிசத்தில் உழைப்புச் சக்தி பண்டமாக இருக்க வில்லை. பண்ட உற்பத்தி வட்டம் இங்கு மட்டானது, வர்த்தகத் துறை மக்களுக்கு சேவை புரிவதற்காகவே உள்ளது, இது உழைப்பிற்கேற்ப நுகர்வுப் பண்டங்களை வினியோகிப்பது எனும் சோஷலிசக் கோட்பாட்டை நிறைவேற்றவும் மக்களின் அதிகரித்து வரும் பொருளாயத, கலாசாரத் தேவைகளைப் பூர்த்தி செய்யவும் உதவுகிறது.

சமுதாய வளர்ச்சியின் குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்து, இதன் அடிப் படையில் அமித பொருளாயத நலன்கள் உற்பத்தி செய்யப்பட்டு, உயர்வாக ஒழுங்கமைக்கப்பட்ட வினி யோகம் நிலைநாட்டப்பட்டு, புதிய மனிதன் வளர்க்கப் பட்டு, மற்ற முன்நிபந்தனைகளும் தோற்றுவிக்கப் பட்ட பின் பண்டப் பரிவர்த்தனையின் அவசியம் மறைந்து போகும்.

பொருட்களின் பரிவர்த்தனையோடு ஒப்பிடும் போது உற்பத்தி தீர்மானகரமான பங்காற்றினாலும் (ஏனெனில் உற்பத்திதான் பரிவர்த்தனைக்குத் தேவையான பொரு ளைத் தருகிறது) பரிவர்த்தனையும் தன் பங்கிற்கு உற்பத்தியின் மீது பெரும் தாக்கம் செலுத்துகிறது. சந்தையைச் சுருக்குவதோ, விரிவுபடுத்துவதோ உற்பத்தி வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஊக்குவிக்கிறது அல்லது மட்டுப்படுத்துகிறது. உற்பத்திக்கும் பரிவர்த்தனைக்கும்

இடையிலுள்ள நெருங்கிய தொடர்பை கோடிட்டுக் காட்டிய பி. எங்கெல்ஸ், இவை ஒவ்வொரு குறிப்பிட்ட கட்டத்திலும் ''ஒன்றுக்கொன்று நிர்ணயித்துக் கொண்டும் மற்றும் செல்வாக்குச் செலுத்தியும் வருவதால் அவற்றை பொருளியல் வளைகோட்டின் மட்டாயம் மற்றும் நாண்வரை என்று கூறலாம்''* என்றார்.

புனருற்பத்திக் கட்டங்களின் ஒற்றுமை

பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றை தனித்தனியான சுயமான கட்டங்களாகப் பார்க்கின்றனர், இவற்றின் இடையிலான தொடர்பு மேற்போக்கானது மட்டுமே என்கின்றனர், ஏனெனில் உற்பத்திப் பொருளானது உற்பத்தியிலிருந்து நுகர்வை நோக்கி புனருற்பத்திக் கட்டங்கள் வழியே தொடர்ச்சியாகச் செல்கிறது. இவர்கள் நுகர்வு என்பதை உற்பத்தித் துறையில் தோற்றுவிக்கப்பட்ட உற்பத்திப் பொருளை உட்கொள்வதாகப் பார்க்கின்றனர். இவர்களுடைய கருத்துப்படி உற்பத்தியின் வளர்ச்சி நிரந்தர இயற்கை விதிகளால் நிர்ணயிக்கப்படுகிறது. இதன் அடிப்படையில் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், உற்பத்தியும் நுகர்வும் அரசியல் பொருளாதாரத்தோடு சம்பந்தப்பட்டவையல்ல, அரசியல் பொருளாதாரம் என்பது உற்பத்திப் பொருட்களின் வினியோகத்தையும் நுகர்வையும் மட்டுமே ஆராய்கிறது என்ற முடிவிற்கு வருகின்றனர். பூர்ஷ்வா பொருளாதார

* பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, **1979**, பக்கம் **255**.

நிபுணர்களின் இப்படிப்பட்ட கூற்றுகளுக்கு வர்க்க உள்ளடக்கம் உண்டு. புனருற்பத்திக் கட்டங்களின் ஒற்றுமையைப் பிரிக்கும் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் சமரசப்படுத்த இயலா முரண்பாடுகளை மூடிமறைக்கவும், முதலாளித்துவ சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய தவறான சித்தரிப்பைத் தரவும் முயலுகின்றனர். ஆனால் நாம் ஏற்கெனவே பார்த்தபடி, உற்பத்தி முறைதான் எந்த ஒரு சமூக அமைப்பிற்கும் அடிப்படையாகும். பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வின் போது மனிதர் களிடையே உருவாகும் உறவுகள் ஒன்றிணைந்து உற்பத்தி உறவுகளின் அமைப்பைத் தோற்றுவிக்கின்றன. இவற்றைத் தான் அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது.

அத்தியாயம் நான்கு

பொருளாதார விதிகளும் கருத்தினங்களும்

இயற்கை அல்லது சமுதாயத்தின் அந்தந்தத் துறையை ஆராயும் விஞ்ஞானம் இவற்றின் விதிகளை அறிவதை தன் லட்சியமாக முன்வைக்கிறது. இயற்கையின் விதிகளைப் பற்றிய ஞானம் இயற்கைச் செல்வங்களை மனித நலன்களுக்காகப் பயன்படுத்தும் விஞ்ஞான அடிப்படையைத் தருகிறது. உயர்வான விளைச்சலைப் பெற விவசாய விஞ்ஞானத்தை அறிந்திருக்க வேண்டும், முற்போக்கான பயிர்சாகுபடி முறைகளைப் பின்பற்ற வேண்டும். அணுவினுள் நடைபெறும் நிகழ்ச்சிப் போக்குகளைப் பற்றிய ஞானமின்றி அணு மின் நிலையத்தைக் கட்ட முடியாது. பொருளாதார விதிகளை அறிவதானது உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சிக்கும் சமூக முன்னேற்றத்திற்கும் வகை செய்யும் நடைமுறை நடவடிக்கைக்கான அடிப்படைகளை மனிதர்களுக்கு அளிக்கிறது.

இயற்கை விதிகளும் சமுதாய விதிகளும்

மனிதனால் இயற்கை விதிகளை மட்டுமே அறிய முடியும் என்று மேற்போக்காகப் பார்க்கும் போது தெரியலாம்.

உண்மையில் இயற்கையில் கறாரான நியதி காணப் படுகிறது, குறிப்பிட்ட சூழ்நிலைகளில் எப்போதும் ஒரே மாதிரியான முடிவுகள் கிட்டுகின்றன. சமுதாய வளர்ச்சியிலோ மனிதர்களின் நடவடிக்கைகளும் செயற் பாடுகளும் அடங்கியுள்ளன; இவர்கள் ஒவ்வொருவரும் தத்தம் நலன்களை அடிப்படையாகக் கொண்டு செயல் படுவது போலத் தோன்றலாம். எனவே சமுதாய வளர்ச்சியில் எல்லாமே தன்னிச்சையாக, தற்செயலாக நடைபெறுகின்றன, எதையுமே முன்கூட்டியே கணித் துரைக்க முடியாது என்ற முடிவு பிறக்கிறது.

ஆனால் இக்கருத்து பெரிதும் தவறானது. உண்மை யில் மனிதர்கள்தான் வரலாற்றைப் படைக்கின்றனர். ஆனால் இதனால் இவர்களுடைய நடவடிக்கைகளின் உண்மையான லட்சியங்களையும் காரணங்களையும் கண்டுபிடித்துக் கூற முடியாது என்று அர்த்தமில்லை. தற்செயலான வரலாற்றுப் புலப்பாடுகளாகத் தோன்றும் நிகழ்வுகள், சம்பவங்களின் குவியலில் குறிப்பிட்ட நியதிகளைக் கண்டுபிடிக்கலாம்.

சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கையில் மனிதர் களுடைய நடவடிக்கையின் நோக்கங்களைப் புரிந்து கொள்ள பொருளாதாரப் புலப்பாடுகளின் சாராம்சத்தை ஆராய வேண்டும். பொருளாதார வாழ்க்கையின் புலப்பாடுகளின் மேல்மட்டத்தில் நேரடியாகத் தோன்று வதை அடிப்படையாக எடுத்துக் கொண்டால் இதைச் செய்ய முடியாது. ஏனெனில் ஏதாவதொரு விஷயத்தைப் பற்றி மேற்போக்காகச் சித்தரிப்பதும் இதன் உண்மை யான சாரத்தைப் புரிந்து கொள்வதும் வெவ் வேறானவை என்பது ஒவ்வொருவருக்கும் தெரியும். மேற்போக்கான சித்தரிப்பு உண்மையைப் போல் தோன்றக் கூடும், ஏனெனில் முதல் பார்வைக்குப் படுவது

பல சமயங்களில் பெரிதும் மாயையானதாக இருக்கலாம். அதுவும் கறாரான விஞ்ஞான பகுப்பாய்விற்கு உட்படுத்தப்பட வேண்டிய சிக்கலான பொருளாதாரப் புலப்பாடுகளுக்கு இது பெரிதும் பொருந்தி வரும். விஞ்ஞான ஆராய்ச்சிப் பாதை பெரிதும் சிக்கலானது, இதற்கு பெரும் உறுதியும் விடாமுயற்சியும் தேவை.

மார்க்சிய அரசியல் பொருளாதாரம், பொருளாதார சிந்தனையின் முந்தைய வளர்ச்சி முழுவதிலுமிருந்தும், நவீன பூர்ஷ்வா பொருளாதாரத் தத்துவங்களிலுமிருந்தும் வேறுபடுகிறது. இது பொருளாதார வாழ்வின் சாராம்சத்தினுள் விஞ்ஞான பூர்வமாகப் புக உதவுகிறது, இதனால் பொருளாதார வாழ்க்கையின் ஆழ் நியதிகளை வெளிப்படுத்த முடியும். மார்க்சிய அரசியல் பொருளாதாரம் சமுதாய வளர்ச்சியை புறவயப் பொருளாதார விதிகளால் நிர்வகிக்கப்படும் இயற்கையான வரலாற்று நிகழ்ச்சிப் போக்காகப் பார்க்கிறது. **பொருளாதார விதிகள்** என்பவை யாவை, இவை எப்படி செயல்படுகின்றன?

சமுதாய வாழ்வின் எல்லா புலப்பாடுகளும் தனித் தனியே தொடர்பற்று நிலவவில்லை, இவை ஒன்றுடன் ஒன்று தொடர்பு கொண்டுள்ளன, பரஸ்பரம் ஒன்றிற்கு ஒன்று வழிகோலுகின்றன. சமூகப் புனருற்பத்தியின் கட்டங்கள் என்ற முறையில் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றை ஆராய்ந்த போதே நாம் இதைப் பார்த்தோம். உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் இதன் எளிய அங்கங்களை (உழைப்புப் பொருள், உழைப்புக் கருவி, மனித உழைப்புச் சக்தியைச் செலவிடுதல்) ஒன்றிலிருந்து ஒன்றைப் பிரிக்கக் கூடாது.

ஆனால் மேற்கூறிய பரஸ்பரச் செயலாக்கம் எப்போதுமே தெட்டத் தெளிவாக, முதல் பார்வைக்குத்

தெரிகிறது என்று கூற முடியாது. அதுவும் குறிப்பாக மனிதர்களுக்கு இடையிலான உறவுகளை ஏதாவது ஒரு பொருளாயத உறை மூடியிருக்கும் போது இது தெரியாமல் இருக்கலாம். தென்னாப்பிரிக்காவில் தங்கம் எடுக்கப்படுவதற்கும் பிரிட்டிஷ் தொழிலாளியின் ஊதியத் திற்கும் இடையில் ஏதாவது தொடர்பு உள்ளதா? ஒரு குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் தொழில்நுட்ப புதினங்களைப் புகுத்துவதற்கும் வேறு துறைகளின் பொருட்களின் விலைகளுக்கும் ஏதாவது தொடர்பு உள்ளதா? இல்லையென்று தோன்றும். ஆனால் உண்மையில் இத்தகையத் தொடர்பு உள்ளது, பல நேரங்களில் இது கணிசமானது.

ஏராளமான பொருளாதாரப் புலப்பாடுகளின் முடிவற்ற சிக்கலில் கணிசமான தொடர்புகளைக் கண்டுப்பிடிப்பது என்றால் இவற்றின் சாரத்தினுள் புகுவது, எந்த ஆழ் சக்திகள் பொருளாதாரத்தை இயக்குகின்றன என்பதைக் கண்டுப்பிடிப்பது என்று பொருள்படும். பொருளாதார விதிகள் இதைத்தான் பிரதிபலிக்கின்றன. இவை உற்பத்தி உறவுகளின் முறையில் நிலையாக இருக்கும் உள் காரண புறவயத் தொடர்புகளையும் பரஸ்பரச் சார்பு நிலைகளையும் வெளிப்படுத்துகின்றன. பொரு ளாதார விதிகள் உற்பத்தி உறவுகளின் வளர்ச்சி விதிகளாகும், இவை பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை மற்றும் நுகர்வை நிர்ணயிக் கின்றன. உற்பத்தி உறவுகளின் சாரம் பொருளாதார விதிகளின் முறையால், இவற்றின் ஒட்டுமொத்தத்தால் வெளிப்படுத்தப்படுகிறது. பொருளாதார விதிகளைக் கண்டுபிடித்ததுதான் வரலாற்றைப் பற்றிய பொருள் முதல்வாதக் கருத்திற்கு உறுதியான விஞ்ஞான அடிப் படைகளை வழங்கியது.

பொருளாதார விதிகளை தெளிவுபடுத்தியதானது அந்தந்த சமூக-பொருளாதார அமைப்பை உற்பத்தி உறவுகளின் அமைப்பாகப் பார்க்க உதவுகிறது. பொருளா தாரப் புலப்பாடுகளின் சாரத்தை வெளிப்படுத்துவதன் மூலம் விதிகள் மிகவும் நிலையான, மீண்டும் மீண்டும் நடைபெறக் கூடிய, கணிசமான தொடர்புகளை வெளிப்படுத்துகின்றன.

பொருளாதார விதிகள் தம் சாராம்சத்தில் தனிப்பட்ட பொருளாதாரப் புலப்பாடுகளை விட ஆழமாக, துல் லியமாக யதார்த்தத்தைப் பிரதிபலிக்கின்றன. உதாரண மாக, ஏதாவது ஒரு பண்டத்தின் விலையானது விலை களின் பொது முறையைப் பற்றிய கருத்தை அளிப் பதில்லை. விலைகள் உருவாவது பற்றிய விதிகளை ஆராய்ந்தால் இது தெளிவாகும். இவ்விதிகள் பண்டங்கள் மற்றும் பண இயக்கத்தை நிர்வகிக்கும் விதிகளின் செயற்பாடு உட்பட பல சமூக-பொருளாதாரச் சூழ்நிலை களைப் பொறுத்துள்ளன.

இயற்கை விதிகளைப் போன்றே பொருளாதார விதிகளும் மனிதர்களின் சுய உணர்வையும் சித்தத்தையும் சாராமல் செயல்படுகின்றன, அதாவது இவற்றிற்கு புறவயத் தன்மை உண்டு. ஆனால் மனிதர்களால் இவற்றை அறிய முடியும், தம் நடவடிக்கையில் இவற்றைப் பயன்படுத்தி தம் லட்சியங்களை அடைய முடியும். நம்மைப் பொறுத்திராமலேயே இயங்கும் புறவய விதிகள் இருக்கின்றன என்றால், இவை வெளிப்படும் வரை அப்படியே வாழ வேண்டியதுதானே என்று மார்க்சிய விமரிசகர்கள் கூறுகின்றனர். ஆனால் இயற்கை விதிகள் வெளிப்படும் விதத்திற்கும் சமுதாய வளர்ச்சியின் விதிகள் வெளிப்படுவதற்கும் இடையில் வேறுபாடு உண்டு.

ஆம், ஒரு குறிப்பிட்ட நேரத்தில் சூரிய கிரகணம் நடைபெறும் என்று விஞ்ஞானம் கணித்துக் கூறிய பின், இதை உரிய வகையில் சிறப்பாகக் கவனிப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து காத்திருந்தால் போதும். சூரிய கிரகணத்தைத் தடுத்து நிறுத்தவோ, மாற்றவோ யாராலும் முடியாது. சமுதாய வளர்ச்சி விதிகள் முற்றிலும் வேறுவிதமாகச் செயல்படுகின்றன. முதலாளித்துவத்தைப் புரட்சிகரமான முறையில் அகற்றி விட்டு சோஷலிசம் வரும் என்பது வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாததுதான்; ஆனால் இதற்குக் குறிப்பிட்ட பொருளாயத முன்நிபந்தனைகள் மட்டும் இருந்தால் போதாது, இந்த மாபெரும் வரலாற்றுக் கடமையை நிறைவேற்ற வல்ல பலம் மிக்க சமூகச் சக்தியும் இதற்காக அணி திரட்டப்பட வேண்டும்.

அந்தந்தப் பொருளாதார அமைப்பில் நிலவும் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் அடிப்படையில்தான் பொருளாதார விதிகள் தோன்றுகின்றன, செயல்படுகின்றன. உதாரணமாக, முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திப் போட்டி மற்றும் அராஜக விதிகள், மூலதனத் திரட்சி விதிகள், உழைப்பாளிகளின் நிலை மோசமடையும் விதிகள் முதலியன புறவய ரீதியாக நிலவுகின்றன, இங்கு பொருளாதார நெருக்கடிகளும் வேலையில்லாத் திண்டாட்டமும் மக்கள் திரளினரின் ஏழ்மையும் தவிர்க்க இயலாதவை. பொருளாதார வாழ்வில் பூர்ஷ்வா அரசு தலையிடுவதன் மூலம் இந்த விதிகளின் செயற்பாட்டை மாற்றவோ, அகற்றவோ முடியாது.

மனிதர்களால் தம் விருப்பப்படி பொருளாதார விதிகளை ஆக்கவோ, அழிக்கவோ, மாற்றவோ முடியாது. ஆனால் இதனால், மனிதர்களால் பொருளாதார விதிகளை எதுவுமே செய்ய முடியாது என்று பொருளா

காது. குறிப்பிட்ட பொருளாதாரச் சூழ்நிலைகள் நிலவும் போது குறிப்பிட்ட பொருளாதார விதிகள் தோன்றும், இச்சூழ்நிலைகள் மறைந்ததும் இவ்விதிகளும் மறையும். பொருளாதார விதிகளை அறிவதன் மூலம் மனிதர்கள் இவற்றை உற்பத்தி உறவுகளை மாற்றுவதற் காகப் பயன்படுத்தலாம். மனிதர்களின் தீவிர உற்பத்தி மற்றும் சமூக-அரசியல் நடவடிக்கையின் பயனாய் புதிய உற்பத்தி உறவுகளும் இவற்றிற்கு உரித்தான பொருளாதார விதிகளும் தோன்றுகின்றன. ஆகவே பொருளாதார விதிகள் நிரந்தரமானவையோ, மாற்றப் பட முடியாதவையோ அல்ல. இயற்கை விதிகளுக்கு மாறாக இவை, எந்த உற்பத்தி உறவுகளின் அடிப் படையில் செயல்படுகின்றனவோ அவற்றைப் போன்றே வரலாற்று ரீதியாக மாறும் தன்மையுடையவை. உதா ரணமாக, புதிய, சோஷலிச உறவுகள் பழைய, முதலாளித் துவ உற்பத்தி உறவுகளைப் புரட்சிகரமாக மாற்றியதன் மூலம் சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் முதலாளித்துவ பொருளாதார விதிகள் செயல்படுவது நின்று, சோஷலிசப் பொருளாதார விதிகள் தோன்றின. எனவே பொருளாதார விதிகள் சமுதாயத்துடன் சேர்ந்தே தோன்றி, சேர்ந்தே வளரு கின்றன. இதுதான் இயற்கை விதிகளுக்கும் பொருளாதார விதிகளுக்கும் உள்ள வேறுபாடாகும். இயற்கை விதிகளின் செயற்பாடு சமுதாய வளர்ச்சியோடு தொடர்புடைய தல்ல.

புறவயத் தன்மையை உடைய பொருளாதார விதி களை அரசு ஏற்கும் சட்டங்களுடன் கலந்து குழப்பக் கூடாது. சட்டங்கள், ஒரு நாட்டின் குடிமகன் எப்படி நடந்து கொள்ள வேண்டும், எதைச் செய்யலாம், எதை செய்யக் கூடாது என்று திட்டவட்டமாக

வரையறுத்து கூறுகின்றன. அரசு இச்சட்டங்களை ரத்து செய்யலாம், மாற்றலாம். ஆனால் பொருளாதார விதிகளை நிலைநாட்டவோ, மாற்றவோ அரசால் முடியாது. உதாரணமாக, பண்டங்களின் மீதான விலைகளின் போக்கை அரசு ஒழுங்குபடுத்தலாம், ஆனால் இவற்றின் அடிப்படையை — பண்டங்கள், பணத்தின் புறவய ரீதியான ஒப்புமையை — ஒருவராலும் மாற்ற இயலாது. பணத்தின் பெயரளவு மதிப்பை மாற்றலாம், புதிய நாணயங்களை அல்லது வேறு மதிப்புள்ள பணத்தை வெளியிடலாம், ஆனால் பணத்தையே மாற்ற முடியாது.

இயற்கை விதிகளுக்கு மாறாக, பொருளாதார விதிகள் மனிதர்களின் குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளைப் பிரதிபலிக்கின்றன, இந்த உறவுகளுக்கு வெளியே இவற்றால் செயல்பட முடியாது. இவற்றைக் கண்டு பிடிப்பதும் பயன்படுத்துவதும் மனிதர்களின் ஜீவாதார நலன்களை, எல்லாவற்றிற்கும் மேலாக பொருளாதார வர்க்க நலன்களைத் தொடுகின்றன.

மார்க்சிய அரசியல் பொருளாதாரம் சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சியின் நியதிகளை விஞ்ஞான பூர்வமாக வெளிப்படுத்தியது, முதலாளித்துவம் அழிந்து, சோஷலிசம் வெற்றி பெறுவது தவிர்க்க இயலாதது என்பதை மெய்ப்பித்துக் காட்டியது. எனவேதான் முதலாளித்துவ நாடுகளின் ஆதிக்க வர்க்கங்களும் இவற்றின் நலன்களை வெளிப்படுத்துவோரும் தம் நலன்களைப் பாதுகாக்கும் ''விஞ்ஞானம்'' வேண்டுமென குரல் எழுப்புகின்றனர், புறவயப் பொருளாதார விதிகளை மறுக்கின்றனர், இவை சித்தம், பகுத்தறிவு, மனித மனநிலையின் விளைபொருட்கள் என்று கூறுகின்றனர். நவீன சமுதாயத்தின் முன்னணி வர்க்கமாகிய தொழி

லாளி வர்க்கம் பொருளாதார விதிகளை விஞ்ஞான பூர்வமாக அறிந்து, பயன்படுத்துவதில் அக்கறை கொண்டுள்ளது. இந்த வர்க்கத்தின் அரசியல், பொரு ளாதார நலன்கள் சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சியோடு ஒத்துப் போகின்றன.

பொதுவானதும் சிறப்பானதும்

ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்புக்கும் அதன் வரம்புகளில் மட்டுமே செயல்படும் **விசேஷப் பொரு ளாதார விதிகள்** உள்ளன. இவற்றில் முதலாவதாக **அடிப்படைப் பொருளாதார விதியைக்** குறிப்பிட வேண்டும். குறிப்பிட்ட ஒரு உற்பத்தி முறையின் மிக முக்கிய பண்பு அம்சங்களை வெளிப்படுத்தும் இது இந்த உற்பத்தி முறையை இயக்கும் விதியாகும். மற்ற விசேஷப் பொருளாதார விதிகள் உற்பத்தி உறவுகளின் அந்தந்தத் தனிப்பட்ட முக்கிய அம்சங்களை வெளிப் படுத்துகின்றன, குறிப்பிட்ட சமூக அமைப்பின் வளர்ச்சி யில் தனிப்பட்ட புலப்பாடுகளையும் நிகழ்ச்சிப் போக்கு களையும் நிர்ணயிக்கின்றன. அடிப்படைப் பொருளாதார விதி குறிப்பிட்ட உற்பத்தி முறையின் லட்சியத்தையும் இதை அடையும் வழிகளையும் வெளிப்படுத்துகிறது. இது மற்ற விசேஷப் பொருளாதார விதிகளுடன் தொடர்பு கொண்டுள்ளது, அவற்றுடன் பரஸ்பரச் செயலாக்கம் புரிகிறது, சமூக-பொருளாதார அமைப்பின் பொருளாதார விதிகளின் முறையில் முக்கியப் பங்காற்று கிறது. அடிப்படைப் பொருளாதார விதியோடு இணைத்துப் பார்க்காமல் எந்த ஒரு விசேஷப் பொருளாதார விதியையும் சரியாகப் புரிந்து கொள்ள முடியாது.

அதே போல் மற்ற விசேஷ விதிகளுடன் தொடர்பு படுத்தாமல் அடிப்படைப் பொருளாதார விதியின் செயற்பாட்டைக் கிரகிக்க முடியாது.

உதாரணமாக, முதலாளித்துவத்தில் முதலாளித்துவ சுரண்டல் உறவுகளைப் பிரதிபலிக்கும் பல விஷேப் பொருளாதார விதிகள் அடங்கிய முழு முறையே உள்ளது. இவற்றினிடையே முதலாவதாக முதலாளித் துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகிய உபரி மதிப்பு விதியைக் குறிப்பிட வேண்டும். இது மூலதனம் கூலியுழைப்பைச் சுரண்டுவதன் சாரத்தை வெளிப்படுத்து கிறது. அதே போல் போட்டி விதி, உற்பத்தி அராஜக விதி, மூலதனத் திரட்சி பற்றிய சர்வபொது விதி முதலியவையும் இவற்றிலடங்கும்.

சோஷலிச சமுதாயத்தில் சோஷலிச அடிப்படைப் பொருளாதார விதி செயல்படுகிறது. சோஷலிச உற்பத்தி முறையின் லட்சியமும் இதை அடையும் வழிகளும் இதில் பிரதிபலிக்கின்றன. அதாவது சமூக உற்பத்தியை இடையறாது வளர்த்து மேம்படுத்துவதன் மூலம் சமுதாய உறுப்பினர்கள் அனைவரின் நல்வாழ் விற்கும் சுதந்திரமான பன்முக வளர்ச்சிக்கும் வகை செய்ய வேண்டும். தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சி பற்றிய விதி, உழைப்பிற்கேற்ற வினியோகம் பற்றிய பொருளாதார விதி, சோஷலிசத் திரட்சி விதி, சோஷலிச உற்பத்தி உறவுகளை வெளிப் படுத்தும் மற்ற பொருளாதார விதிகள் முதலியவையும் சோஷலிசத்தில் செயல்படுகின்றன.

விசேஷப் பொருளாதார விதிகளோடு கூட, எல்லா சமூக-பொருளாதார அமைப்புகளிலும் செயல்படும் பொதுவான பொருளாதார விதிகளும் உள்ளன. உற்பத்தி உறவுகளுக்கும் உற்பத்திச் சக்திகளின் மட்டம்

மற்றும் தன்மைக்கும் உள்ள பொருத்தம் பற்றிய விதி (இது மனித சமுதாய முன்னேற்றத்தின் புறவய அடிப்படையை வெளிப்படுத்துகிறது), உழைப்புச் சிக்கன விதி, மனிதர்களின் தேவை அதிகரிப்பு விதி போன்றவை இவற்றிலடங்கும். பொதுவான பொருளாதார விதிகள் எல்லா உற்பத்தி முறைகளுக்கும் உரித்தான உறவு களையும் புலப்பாடுகளையும் வெளிப்படுத்துகின்றன, இவற்றின் வரலாற்று தொடர்பையும் தொடர்ச்சியையும் காட்டுகின்றன. ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப் பிலும் பொதுவான பொருளாதார விதிகள் செயல்படும் துறையும் வடிவமும், குறிப்பிட்ட அமைப்பிற்கு உரித் தான விசேஷ உற்பத்திச் சூழ்நிலைகளின் தாக்கத்தால் கணிசமாக மாற்றமடைகின்றன.

இறுதியாக, ஒரு சில சமூக அமைப்புகளில் செயல்படும் பொருளாதார விதிகளும் உள்ளன. உதாரணமாக, மதிப்பு விதி பண்ட-பண உறவுகள் நிலவும் சமூக-பொருளாதார அமைப்புகளில் செயல்படுகிறது.

அரசியல் பொருளாதாரம் விசேஷப் பொருளாதார விதிகளையும் பொதுவான பொருளாதார விதிகளையும் ஆராய்கிறது, இவற்றின் இடையே நிலவும் பரஸ்பரச் செயலாக்கத்தை வெளிப்படுத்துகிறது. இதில், பி. எங்கெல்ஸ் குறிப்பிட்டபடி, இது ''முதலில் உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் பரிணாமத்திலான ஒவ்வொரு தனிப் பட்ட கட்டத்தின் விசேஷ விதிகளையும் தேர்ந்தாராய வேண்டும்; இந்தத் தேர்வாராய்வை முழுமை செய்த பிறகு மட்டுமே அது பொதுவாக உற்பத்திக்கும் பரிவர்த்தனைக்கும் பொருத்தமான முற்றிலும் பொது வான ஒரு சில விதிகளை நிலைநாட்ட முடியும்''. *

---

* பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 256.

அரசியல் பொருளாதாரம் பொருளாதார விதிகளை மட்டுமின்றி பரந்த அளவு பொருளாதாரக் கருத்தினங் களையும் ஆராய்கிறது. இக்கருத்தினங்களில் ஒவ்வொன் றும் உற்பத்தி உறவுகளின் ஏதாவது ஒரு குறிப்பிட்ட அம்சத்தை வெளிப்படுத்துகிறது. இவையெல்லாம் ஒன்று சேர்ந்து உற்பத்தி உறவுகளின் முறை முழுவதையும் சித்தரிக்கின்றன.

குறிப்பிட்ட உற்பத்தி முறைகளுக்கு மட்டுமே உரித்தான பொருளாதாரக் கருத்தினங்கள் உள்ளன. உதாரணமாக, மூலதனம், உபரி மதிப்பு எனும் கருத் தினங்கள் முதலாளித்துவத்திற்கும் பொருளாதார சுய கணக்கீட்டு முறை, அடக்க விலை எனும் கருத்தினங்கள் சோஷலிசத்திற்கும் உரித்தானவை. பல்வேறு உற்பத்தி முறைகளில் உள்ள கருத்தினங்களும் இருக்கின்றன. உதாரணமாக, பண்டம், பணம், பரிவர்த்தனை, ஊதியம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவை ஒரே மாதிரியாக அழைக்கப்பட்டாலும் கோட்பாட்டு ரீதியாக வெவ்வேறான உற்பத்தி உறவுகளை வெளிப் படுத்துகின்றன. உதாரணமாக, முதலாளித்துவத்தில் ஊதியம் என்பது உழைப்புச் சக்தி எனும் பண்டத்திற் கான விலையாக உள்ளது. அது மொத்த உழைப்புக்கும் தரப்படுகின்ற கூலியாகத் தோன்றுகிறது. சோஷ லிசத்திலோ ஊதியம் என்பது உழைப்பிற்கேற்றபடியான வினியோக வடிவம், வேலையாட்களின் வேலை அளவு, தரத்திற்கேற்ப இவர்களிடையே பகிர்ந்தளிக்கப்படும் உற்பத்திப் பொருளின் பண வெளிப்பாடாகும். முதலாளித் துவ லாபம் என்பது மூலதனம் செலவழிந்தது போக எஞ்சியிருக்கும் பணமாகத் திகழும் உபரி மதிப்பின்

வடிவமாகும். இது முதலாளியால் நட்ட ஈடில்லாமல் இலவச மாக எடுத்துக் கொள்ளப்படுகிறது. சோஷலிசத் தொழில் நிறுவனங்களின் லாபமோ சோஷலிச சமுதாயத் தின் உபரி உற்பத்திப் பொருளின் வடிவங்களில் ஒன் றாகும். சோஷலிச சமுதாயத்தில் இந்த லாபம் சமு தாயம் முழுவதற்கும், எல்லா உழைப்பாளிகளுக்கும் சொந்தமானது, இது மனிதனை மனிதன் சுரண்டுவதை வெளிப்படுத்தவில்லை. இவ்வாறாக, பொருளாதாரக் கருத்தினங்களின் (இவை மிகப் பொதுவானவையாக, சூக்குமமானவையாக இருந்தாலும் கூட) சாரம் உற்பத்தி முறைகள் வளர்ந்து, மாறுவதோடு சேர்ந்து மாறுகிறது. பொருளாதார விதிகளைப் போன்றே பொருளாதாரக் கருத்தினங்களும் நிரந்தரமானவையோ, மாற்றமற்றவையோ அல்ல. இவை வரலாற்று ரீதியாக மாறும் தன்மையுடையவை, எந்த உற்பத்தி உறவுகளைப் பிரதிபலிக்கின்றனவோ அவற்றுடன் சேர்ந்து இவையும் மாறுகின்றன. ஒவ்வொரு உற்பத்தி முறைக்கும் அந்தந்தப் பொருளாதாரக் கருத்தினங்களின் முறை உள்ளது.

பொருளாதார விதிகளை அறிவதும் பயன்படுத்துவதும்

பொருளாதார விதிகள் மற்றும் கருத்தினங்களின் புறவயத் தன்மையைப் பற்றி அறிந்திருப்பதானது, ஏகாதிபத்தியத்திற்கு எதிரான போராட்டத்திற்குப் புரட்சிகரச் சக்திகளை அணி திரட்டுவதிலும் சோஷலிச சமுதாயத்தைக் கட்டுவதிலும் பெரும் பங்காற்றும்.

சோஷலிச சமுதாயத்தில் பொருளாதார விதிகளை அறிவதிலும் பயன்படுத்துவதிலும் குணாம்ச ரீதியாக புதிய கட்டம் துவங்குகிறது. முதலாளித்துவ அமைப்பு, இதையொத்த மற்ற சுரண்டல் அமைப்புகளுக்கு

முற்றிலும் வேறான ஒரு பொருளாதார அடிப்படையை சோஷலிசம் கொண்டிருப்பதுதான் இதற்கு முக்கியக் காரணமாகும். உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமைதான் இந்த அடிப்படையாகும். இதன் பயனாய் சமுதாயம் சோஷலிச அரசின் மூலம் பொருளாதார விதிகளைத் தன் நடவடிக்கையில் பயன்படுத்தும் வாய்ப்பையும் தேசியப் பொருளாதாரத் திற்குத் திட்டமிட்டுத் தலைமை தாங்கி நடத்தும் வாய்ப்பையும் பெறுகிறது.

முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங் களின் மீதான தனியுடைமையும் லாபத்தை நோக்கிய ஓட்டமும் மக்களின் ஒற்றுமையைக் குலைக்கின்றன, போட்டியையும் அராஜகத்தையும் தோற்றுவிக்கின்றன; இச்சூழ்நிலைகளில் பொருளாதார விதிகள் தன்னிச்சை யாக, அழிவுச் சக்தியாகச் செயல்படுகின்றன. இவை இடையறாத அத்துமீறல்கள், நிறைவேற்றமின்மை களின் ஊடாக பாதையமைத்து செயல்படுகின்றன, எண்ணற்ற ஊசலாட்டங்கள், விலகல்களின் நடுவில் சராசரி அம்சமாக, ஆதிக்கப் போக்காக இயங்கு கின்றன. உற்பத்திச் சாதனங்களின் மீது பொதுவுடைமை நிலைநாட்டப்பட்டதும் மக்கள் தம் லட்சியங்களை அடையும் பொருட்டு பொருளாதார விதிகளை அறிந்து, பயன்படுத்துகின்றனர்; பொருளாதார விதிகள் வெளிப் படும் தன்மையே கோட்பாட்டு ரீதியாக மாறுகிறது. மின்னலின் போது உருவாகும் மின்சக்தியின் அழிவுத் தன்மைக்கும் தந்திக் கருவியிலும் மின் விளக்கிலும் உள்ள சக்தி குறைந்த மின்சாரத்திற்கும் என்ன வேறுபாடு உள்ளதோ, காட்டுத் தீக்கும் உலோகத்தை உருக்கப் பயன்படுத்தப்படும் நெருப்பிற்கும் என்ன வேறுபாடு உள்ளதோ அதே வேறுபாடுதான் இங்கும் உள்ளது.

இரண்டாவதாக, சோஷலிச சமுதாயத்தில் புறவய ரீதியான பொருளாதார விதிகள் விஞ்ஞான பூர்வமாக அறியப்பட்டு, பயன்படுத்தப்படுகின்றன எனும் அம்சத் திற்கும் பெரும் முக்கியத்துவம் உண்டு. இது பொருளா தார வளர்ச்சியின் மீது அரசியல் மேல்கட்டுமானத்தின் தாக்கத்தை பன்மடங்கு பெருக்குகிறது. முதலாளித்துவத் திலும் பொருளாதார விதிகளை ஓரளவு பயன்படுத்த லாம். உதாரணமாக, தொழிலாளர்களின் சுரண்டலை அதிகப்படுத்தி தம் லாபத்தைப் பெருக்குவதற்காக முதலாளிகள் புதிய இயந்திரங்களைப் புகுத்தும் போது, உழைப்பை ஒழுங்கமைத்து உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கை மேம்படுத்தும் போது இவர்கள் உபரி மதிப்பு விதியையும் முதலாளித்துவத்தின் மற்ற பொருளாதார விதிகளையும் பயன்படுத்துகின்றனர். ஆனால் இதனால் போட்டியும் உற்பத்தி அராஜகமும் பொருளாதார நெருக்கடிகளும் ஒழிந்து விடுவதில்லை. முதலாளித்துவ பொருளாதாரம் முன்போன்றே தன்னிச்சையான பொருளாதார விதிகளின் ஆளுகைக்கு உட்பட்டுக் கிடக்கிறது, இதற்கே உரித்தான சமரசப்படுத்த இயலாத முரண்பாடுகளோ மேன்மேலும் ஆழமடைகின்றன, கூர்மையடைகின்றன.

ஏகபோகச் சக்திகளை பூர்ஷ்வா அரசின் சக்தியுடன் இணைக்கும் அரசு-ஏகபோக முதலாளித்துவச் சூழ்நிலை களில் பொருளாதாரத்தில் அரசின் தலையீடு அதிகரித் தது. பின்னால் இத்தலையீட்டின் தன்மையை, குறிப்பாக இதன் வரம்புகளை விரிவாகப் பார்ப்போம். உற்பத்திச் சாதனங்களின் மீது தனியுடைமை ஆதிக்கம் செலுத்து வதாலும், இதனால் தோன்றிய முதலாளித்துவ பொருளாதார விதிகளின் தன்மைகளின் காரணமாயும் இத்தலையீடு தீர்மானகரமான முக்கியத்துவத்தைப் பெறவில்லை, பெறவும் செய்யாது என்பதை மட்டும்

இப்போதைக்கு குறிப்பிடுவோம். இத்தலையீடு ஒரு சில பெரும் ஏகபோகவாதிகளின் நலன்களுக்காக மட்டுமே நடைபெறுகிறதே தவிர, திட்டமிட்டு நடை பெறவில்லை.

மூன்றாவதாக, முதலாளித்துவத்திற்கு மாறாக, சோஷலிசத்தில் சமரசப்படுத்த இயலாத பகை முரண் பாடுகளோ, பொருளாதார விதிகளை அறிந்து, உணர்வுபூர்வமாகப் பயன்படுத்துவதற்கு இடையூறு விளைவிக்கக் கூடிய வர்க்கங்களோ இல்லை. சோஷலிச சமுதாயத்திலும் இடர்ப்பாடுகளும் முரண்பாடுகளும் தோன்றத்தான் செய்கின்றன. இவற்றை சமுதாயம் உணர்வுபூர்வமாகக் கடந்து வெற்றி கொள்கிறது. உற்பத்தி உறவுகள், பொருளாதாரத்தை நிர்வகிக்கும் வடிவங்கள், முறைகள் ஆகியவற்றை மேம்படுத்தவும், உழைப்பாளிகளின் சுறுசுறுப்பை அதிகப்படுத்தவும், சமூக-பொருளாதார வளர்ச்சிக் கடமைகளைத் தீர்க்கவும் பொருளாதார விதிகளைத் திட்டமிட்டுப் பயன்படுத்து வது என்பது இதற்கான சரியான வழியாகும்.

எனவே, பொருளாதார விதிகளின் புறவயத் தன்மை என்பது இவை தானாகவே இயங்கும் என் பதைக் குறிக்கவில்லை. விதிகள் மனிதர்களின் நடைமுறை நடவடிக்கை நிகழ்ச்சிப் போக்கில் நிறைவேற்றப்படுகின்றன. தனியுடைமை மற்றும் மனிதனை மனிதன் சுரண்டு வது ஆகியவை ஆதிக்கம் செலுத்தும் சமுதாயங்களில் மனிதர்களுடைய சமூக நடவடிக்கையின் பொருளாதார விளைபயன்கள் தன்னிச்சையாக அடையப்படுகின்றன. சோஷலிசத்திலோ மனிதர்கள் முன்கூட்டியே வைக்கப் படும் லட்சியத்திற்கேற்ப திட்டமிட்டு செயல்படுகின்றனர். சோஷலிசத்தில்தான் சமுதாயம் முழுவதன் நலன்களுக் காக பொருளாதார விதிகள் முறைப்படி, உணர்வுபூர்வ மாகப் பயன்படுத்தப்படுகின்றன.

அத்தியாயம் ஐந்து

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சி முறை

எந்த ஒரு விஞ்ஞானத்தையும் போன்றே அரசியல் பொருளாதாரமும் ஏராளமான விவரங்கள், புலப்பாடு களை ஆராய்கிறது. ஒரு சிறு குடியிருப்பின் வரம்பு களுக்குள் கூட பொருளாதார வாழ்க்கை பன்முகத் தன்மையை உடையது, இதில் மனிதர்களின் நடவடிக்கை கள் சிக்கலாகப் பின்னிக் கிடக்கின்றன. பல நாடுகளின் தேசியப் பொருளாதாரத்தை, பின்னர் உலகப் பொரு ளாதாரத்தைப் பார்த்தால், இவையெல்லாவற்றையும் ஒரே பார்வையில் கிரகிப்பது இயலாதது என்பது தெளிவாகும். ஏராளமான விவரங்களின் பின் உள்ள முக்கியமான அம்சங்களை விஞ்ஞானம் வெளிப்படுத்து கிறது, எது பொருளாதார விதிகளை நிர்ணயிக் கிறதோ அதை சுட்டிக் காட்டுகிறது. இது சரியான தத்துவார்த்த மற்றும் நடைமுறை முடிவுகளுக்கு வர உதவுகிறது. அரசியல் பொருளாதாரம் எப்படிப்பட்ட ஆராய்ச்சி முறைகளைப் பயன்படுத்துகிறது? ஏனெனில் ஆராய்ச்சியின் அடிப்படை நிலைகள், கருவிகள், தேர்வு கோட்பாடுகள், விஷயங்களை வகைப்படுத்தி, பகுப்பாய்வு செய்யும் கோட்பாடுகள் ஆகியவை நாம் எப்படிப்பட்ட ஆராய்ச்சி முறையைத் தேர்ந்தெடுக்கின்றோம் என்பதைப்

பொறுத்தது. ஆராய்ச்சியாளன் எந்த முடிவுகளுக்கு வருகிறானோ அவையும் இதைப் பொறுத்தவை. சரியான முறையைப் பயன்படுத்தினால்தான் பொருளா தாரப் புலப்பாடுகளை ஒட்டுமொத்தமாக, ஒன்றுடன் ஒன்று தொடர்புபடுத்தி ஆராய முடியும், பொருளாதார வாழ்க்கையை விளக்க முடியும், சமூக முன்னேற்றத்தை நோக்கமாகக் கொண்டு இதை மாற்றியமைக்கும் வழிகளை நிர்ணயிக்க முடியும்.

சர்வபொது அறிதல் முறை

அரசியல் பொருளாதாரம் ஆராயும் ஒவ்வொரு சமூக-பொருளாதார அமைப்பும் மிகச் சிக்கலான, முரண் பாடான சித்திரத்தைத் தருகிறது. விஞ்ஞான முறையைப் பின்பற்றாமல் இதன் மேற்போக்கான வெளிப்பாடுகளை மட்டும் சித்தரித்தால், ஒரு குழப்பமான சித்திரம், ஒன் றுடன் ஒன்று தொடர்பற்ற வெவ்வேறு பொருளாதாரப் புலப்பாடுகளின் குவியல்தான் கிடைக்கும். உண்மையிலோ இந்தப் புலப்பாடுகளின் இடையில் நியதியான உள் தொடர்பு நிலவுகிறது.

இயற்கையைப் போன்றே சமுதாயத்திலும் புலப்பாடு களின் சாரமும் வெளித் தோற்றமும் பல நேரங்களில் ஒத்துப் போவதில்லை. உதாரணமாக, பூமி சூரியனை சுற்றி வரும் விஷயத்தை எடுத்துக் கொள்வோம். வெளித் தோற்றத்திற்கு ஏதோ சூரியன்தான் பூமியைச் சுற்றி வருவதைப் போலிருக்கும். பல ஆயிரம் ஆண்டு களாக மனிதர்கள் இவ்வாறுதான் தவறாகக் கருதி வந்தார்கள். விஞ்ஞானம் வளர்ச்சியடைந்த பின்தான் 16ஆம் நூற்றாண்டில் போலந்து நாட்டின் வானசாஸ்திர நிபுணர் நிக்கலாய் காப்பேர்னிக்கஸ் இப்புலப்பாட்டின்

உண்மையைக் கண்டுபிடித்து, பூமிதான் மையத்தில் உள்ளதாகக் கருதிய தவறான கருத்துநிலை பொய் யானது என்று மெய்ப்பித்தார், சூரியனை மையமாகக் கொண்ட முறை பற்றிய விஞ்ஞானபூர்வமான கருத்தைத் தோற்றுவித்தார்.

சாரமும் இது வெளிப்படும் வடிவங்களும் பொருந்தி வராததைப் பொருளாதார உறவுகளின் விஷயத்திலும் பார்க்கலாம். பன்முகத் தன்மை கொண்ட, முரண் பாடான பொருளாதாரப் புலப்பாடுகளின் வெளித் தோற்றத்தின் பின் உள்ள ஆழமான சாரத்தை, வளர்ச்சி விதிகளை கண்டுபிடிக்க விஞ்ஞான ஆராய்ச்சி முறை தேவை. ஆராய்ச்சி முறை என்றால் என்ன?

ஆராய்ச்சி முறை என்பது யதார்த்தத்தை ஆராய் வதற்கான அணுகுமுறை, இயற்கை மற்றும் சமுதாயப் புலப்பாடுகளை அறியும் முறை. இது விஞ்ஞான சிந்தனையின் விதிமுறைகள், புறவய உலகின் நியதிகளைப் பிரதிபலிக்கும் வழிகள், சாதனங்களின் ஒட்டுமொத்த மாகும்.

இயக்கவியல் பொருள்முதல்வாதம் உலகை அறியும் சர்வாம்ச விஞ்ஞான முறையாகும். இது பொருள்முதல் வாதமாக இருக்கக் காரணம், நம்மைச் சுற்றியுள்ள உலகில் பொருளாயத அம்சங்கள் முதன்மையானவை என்று இது அங்கீகரிப்பதாகும். இது இயக்கவியல் தன்மையைக் கொண்டிருக்கக் காரணம், உலகிலுள்ள பொருட்கள், புலப்பாடுகளின் சர்வபொது பரஸ்பரத் தொடர்பை அங்கீகரிப்பதும், உலகின் இயக்கத்தையும் வளர்ச்சியையும் எதிர்மறைகளின், அந்தந்தப் புலப்பாடு களிலுள்ள உள் முரண்பாடுகளின் ஒற்றுமை மற்றும் போராட்டத்தின் விளைவாகப் பார்ப்பதும் ஆகும்.

அரசியல் பொருளாதாரத்தில் இயக்கவியல் பொருள்

முதல்வாத முறையைப் பயன்படுத்துவது என்றால், இது வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தை அடிப்படையாகக் கொள்கிறது, பொருளாதார விதிகளை யும் கருத்தினங்களையும் இவற்றின் வளர்ச்சியில் பார்க்கிறது, உற்பத்திச் சக்திகள் மற்றும் உற்பத்தி உறவுகளின் பரஸ்பரச் செயலாக்கத்தில் உள் இயக்குச் சக்திகளைப் பார்க்கிறது என்று பொருள்படும்.

சூக்குமமானதும் ஸ்தூலமானதும்

பொருள்முதல்வாத இயக்கவியல் என்பது எல்லா விஞ்ஞானங்களின் பொது விஞ்ஞான முறையாகும். அரசியல் பொருளாதாரம் உட்பட ஒவ்வொரு விஞ்ஞானத் திலும் ஆராய்ச்சிப் பொருளின் விசேஷத் தன்மைக்கேற்ப விஞ்ஞான அறிதல் முறைக்கு அதன் சிறப்பியல்புகளும் உண்டு. உதாரணமாக, இயற்கை ஆராய்ச்சி வழி களையும் சாதனங்களையும் மனிதர்களின் நடவடிக்கை மூலம் நிறைவேற்றப்படும் பொருளாதாரப் புலப்பாடு களின் ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தக் கூடாது.

இயற்கை விஞ்ஞானங்கள், உதாரணமாக பௌதீகமும் இரசாயனமும் இயற்கைப் புலப்பாடுகளை அறிய பரிசோதனைக் கூடங்களில் செயற்கைச் சூழ்நிலைகளில் பரிசோதனைகளை நடத்துகின்றன. இங்கே தேவையான புலப்பாடுகள் மற்றவற்றிலிருந்து தனியே பிரிக்கப்பட்டு தூய வடிவில் தோற்றுவிக்கப்படுகின்றன. அரசியல் பொருளாதாரம் ஆராயும் உற்பத்தி உறவுகளும் பொரு ளாதார விதிகளும் கருத்தினங்களும் யதார்த்தத்தில் தூய வடிவில் கிடையா. இவை குறிப்பிட்ட உற்பத்தி முறையின் பொருளாதார உறவுகளின் அமைப்பில் நிலவுகின்றன, இந்த உற்பத்தி முறையின் குறிப்பிட்ட

தாக்கத்திற்கு உட்பட்டிருக்கின்றன, எனவே இவற்றைச் செயற்கையாகத் தோற்றுவிக்க முடியாது. ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறை ஆதிக்கம் செலுத்தும் போது அதனுள் மற்ற உற்பத்தி உறவுகளின் ''கூடுகளை'', ''பிரதேசங் களைச்'' செயற்கையாக உருவாக்குவதைக் கற்பனை செய்வதே கடினம். 19ஆம் நூற்றாண்டின் முதல் காற்பகுதியில் அமெரிக்காவில் ''புதிய சீரிசைவு'' எனும் ஒரு கூட்டுச் சமூகத்தைத் தோற்றுவிக்க (இது சோஷலிச அடிப்படையிலான ''பகுத்தறிவு'' சமுதாய மாதிரியாக விளங்கியிருக்க வேண்டும்) பிரிட்டிஷ் கற்பனாவாத சோஷலிஸ்டு ராபர்ட் ஓவன் செய்த முயற்சி பலிக் காமல் போனது தற்செயல் அல்ல.

என்றாலும் பழையதாகிப் போன, காலங்கடந்த சமுதாயத்திற்கு மாற்றாக வரப் போகும் ஒரு புதிய சமுதாயத்தின் முக்கிய அம்சங்களை மனக் கண்ணில் பார்க்க முடியும், இது அவசியமும் கூட. இந்த வரலாற்று மாற்றத்தை நிகழ்த்தப் போகும் மக்களின், சமூக வர்க்கங்களின் நடைமுறை நடவடிக்கைக்கு இது தேவைப்படுகிறது.

இங்கே அரசியல் பொருளாதாரத்திற்கு உரித்தான ஆராய்ச்சி முறைகள், எல்லாவற்றிற்கும் மேலாக **விஞ்ஞான சூக்கும முறை**, முன் வருகின்றன. ''பொருளா தார வடிவங்களின் பகுப்பாய்வில் நுண்பெருக்காடிகளோ இரசாயன ஆய்வுப் பொருட்களோ பயன்படுவதில்லை. சூக்குமமாகச் சிந்திக்கும் சக்தி இவ்விரண்டின் இடத்தை யுமே நிரப்ப வேண்டும்''* என்று கா. மார்க்ஸ் **மூலதனத்தில்** எழுதினார்.

மற்ற எல்லா விஞ்ஞானங்களையும் போன்றே

* K. Marx, *Capital*, Vol. 1, Progress Publishers, Moscow, 1975, p. 19.

அரசியல் பொருளாதாரத்திலும் ஆராய்ச்சிக்கு முன் யதார்த்த விவரங்களைத் திரட்ட வேண்டும். இந்த விவரங்களை சாதாரணமாக உற்று நோக்குவதே பொருளாதாரப் புலப்பாடுகளைப் பற்றிய மிக மேற் போக்கான கருத்தைத் தருகிறது. இது மனிதர்கள் பொருளாதாரப் புலப்பாடுகளை அறிவதில் முதல், அனுபவபூர்வமான கட்டமாகும். இதனால் மேற் போக்கான தகவல்கள் மட்டுமே கிடைக்கும். உதாரணமாக, பண்டங்கள் பணத்திற்காக விற்கப்படுகின்றன, வாங்கப் படுகின்றன, பண்டத்தின் விலை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு அதிகப் பணம் இதை வாங்க தேவை போன்ற விஷயங்கள் தெரிய வரும்.

பொருளாதாரப் புலப்பாடுகளை அறிவதில் இந்த அனுபவபூர்வமான முதல் கட்டத்திலிருந்து இன்னமும் முக்கியமான, சிக்கலான அடுத்த கட்டத்திற்கு மாறிச் செல்ல குறைந்த பட்சம் இரண்டு நிபந்தனைகள் அவசியம். முதலில், விஷயத்தைப் பற்றிய போதுமான உண்மை விவரங்களைத் திரட்ட வேண்டும், இரண்டாவ தாக, விஞ்ஞான ஆராய்ச்சி முறையை உருவாக்க வேண்டும். ஏற்கெனவே குறிப்பிடப்பட்டபடி அரசியல் பொருளாதாரத்தில் விஞ்ஞான சூக்கும முறை இப்படிப் பட்ட முறையாகும்.

''சூக்குமச் சிந்தனை'' என்றால் ஒன்றை தனியே பிரித்துப் பார்த்தல் என்று பொருள். அன்றாட வாழ்வில் இதை யதார்த்தத்திலிருந்து பிரித்து, நம் சிந்தனையில், கற்பனையில் மட்டும் உள்ள ஒன்றாகப் புரிந்து கொள்கின்றனர். ஸ்தூலமானது என்பதை வாழ்வில், யதார்த்தத்தில் நிலவுவது என்று புரிந்து கொள்கின்றனர். சூக்குமமானதையும் ஸ்தூலமானதையும் பற்றிய இப் படிப்பட்ட கருத்து விஞ்ஞான பூர்வமானதல்ல. விஞ்

ஞான சூக்கும முறை என்பது இரண்டாம் பட்சமானதி லிருந்து, முக்கியமற்றதிலிருந்து, ஆராயும் பொருளாதார உறவுகளைப் புரிந்து கொள்ள இடையூறாக இருக்கும் எல்லாவற்றிலுமிருந்து பிரிப்பதாகும் (சூக்குமப்படுத்து வதாகும்). இதில் முக்கியமான, குறிப்பிட்ட பொருளா தார உறவுகளுக்கு மிகவும் உரித்தான அம்சங்கள் தனியே சுட்டிக் காட்டப்படுகின்றன.

அந்தந்த சமூக-பொருளாதார அமைப்பின் எல்லா திட்டவட்டமான அம்சங்களையும் அகற்றி விட்டு, பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் சமூகவியலாளர் களும் செய்வதைப் போல் ''பொதுவில் சமுதாயத்தை'' ஆராய்வது விஞ்ஞான சூக்கும முறையின் கடமையல்ல. இப்படிப்பட்ட ''ஆராய்ச்சி முறை'', இறுதியில் மிகப் பொதுவான, சாரமற்ற வாதங்கள், சர்வ சாதாரணமான உண்மைகளைத் தவிர வேறொன்றையும் தராது, பொருளாதார உறவுகளை உண்மையாக அறிவதை விட்டு, வீண் ஏட்டறிவுக்கு இட்டுச் செல்லும்.

சூக்கும முறை விஞ்ஞான பூர்வமானதாக இருக்க, இதை யதார்த்தத்திலிருந்து, முக்கிய சாரத்திலிருந்து பிரிக்கக் கூடாது. எனவே பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் முதலாளித்துவத்தின் பகை முரண்பாட்டு சாரமுடைய உற்பத்தி உறவுகளிலிருந்து தம் கவனத்தைத் திருப்பி பொருளாதார உறவுகள், கூட்டமைப்புகள், துறைகள் போன்றவற்றின் பல்வேறு மாக்ரோ மற்றும் மைக்ரோ மாடல்களை உருவாக்குவதன் மீது கவனம் செலுத்தும் போது இத்தகைய சூக்குமங்கள் விஞ்ஞான பூர்வமானவையல்ல. உண்மையான விஞ்ஞான சூக்கும முறை பொருளாதாரப் புலப்பாடுகளின் மேற்போக்கான விஷயங்களிலிருந்து இவற்றின் சாரத்தை நோக்கி, நம் கண்களுக்குத் தெரியாத நிகழ்ச்சிப் போக்குகளை

நோக்கி செல்லும் போது, இது திட்டவட்டமான யதார்த்தத்திலிருந்து விலகிப் போகாதது மட்டுமல்ல, மாறாக இதை ஆழமாக, முழுமையாக, எனவே சரியாகப் புரிந்து கொள்ளவும் உதவுகிறது.

விஞ்ஞான சூக்குமங்கள் கற்பனை எனும் விளையாட்டின் முடிவுகள் அல்ல. மிக சூக்குமமான விஞ்ஞானத் தத்துவங்களுக்குக் கூட யதார்த்த உலகம், பொருளாதாரப் புலப்பாடுகள், உண்மை விவரங்கள் எனும் அடிப்படை உண்டு. விஞ்ஞானம் மரத்தைப் போன்றது. இதன் கிளைகள் எவ்வளவு உயரத்தில் இருந்தாலும் வேர்கள் பூமியில் உள்ளன. விஞ்ஞான சூக்குமங்கள் உண்மையாக நிலவும் பொருளாதார உறவுகள் நம் உணர்வில் பிரதிபலிப்பதைக் குறிக்கின்றன. விஞ்ஞான சூக்குமங்களின் பொருள்முதல்வாதத் தன்மை இதில் வெளிப்படுகிறது. இச்சூக்குமங்கள் புலப்பாடுகளை சாதாரணமாகக் கிரகிப்பதிலிருந்து விஞ்ஞான சிந்தனை எனும் கட்டத்திற்கு உயர, உற்பத்தி உறவுகளை ஆழமாகப் புரிந்து கொள்ள, பொருளாதாரக் கருத்தினங்களையும் விதிகளையும் தெளிவுபடுத்த உதவுகின்றன.

இவ்வாறாக, ஸ்தூலமானதிலிருந்து சூக்குமமானதை நோக்கி உயரே செல்லும் நிகழ்ச்சிப் போக்கில் சில தொடர்ச்சியான கட்டங்கள் உள்ளன: முதலில், ஏராளமான உண்மை விவரங்களிலிருந்து மிக முக்கியமான, பொருத்தமான விவரங்கள் தேர்ந்தெடுக்கப் படுகின்றன, ஆராய்ச்சிக்கு இடையூறு விளைவிக்கக் கூடிய எல்லா தற்செயலான அம்சங்களும் இரண்டாம் பட்சமானவையும் அகற்றப்படுகின்றன; இரண்டாவதாக, பல்வேறு விவரங்கள் அல்லது இவற்றின் ஒட்டுமொத்தங்களுக்கு இடையிலான பரஸ்பர காரண-காரியத் தொடர்புகள் சுட்டிக் காட்டப்படுகின்றன; மூன்றாவதாக, எல்லா

பரஸ்பரத் தொடர்புகளிலுமிருந்து மிக முக்கியமான, நிலையான, மீண்டும் மீண்டும் நடைபெறும் காரண-காரியத் தொடர்புகள் கண்டுபிடிக்கப்படுகின்றன. தத்துவார்த்த ஆராய்ச்சி எனும் நிகழ்ச்சிப் போக்கு இங்கே புலப்பாடுகளின் மேற்போக்கான அம்சங்களிலிருந்து இவற்றின் ஆழமான சாரத்திற்கு, ஸ்தூலமானதிலிருந்து சூக்குமமானதற்குச் செல்வது தெரிகிறது.

ஆனால் இது பொருளாதார உறவுகளின் ஆராய்ச்சியில் ஆரம்பக் கட்டம் மட்டுமே. சூக்குமப்படுத்தலின் பயனாய் உற்பத்தி உறவுகளின் முக்கிய அம்சங்களைத் தெளிவுபடுத்திய பிறகு சாரத்திலிருந்து புலப்பாட்டை நோக்கித் திரும்பி வரலாம். சமுதாயப் பொருளாதார வாழ்க்கையின் எந்தத் திட்டவட்டமான புலப்பாடுகள் சூக்குமப்படுத்தப்பட்டனவோ அவற்றிற்கே திரும்பி வரலாம், அதாவது சூக்குமமானதிலிருந்து ஸ்தூல மானதை நோக்கித் திரும்பி வரலாம். இது ஆராய்ச்சியின் ஆரம்பப் புள்ளிக்கு வெறுமனே திரும்பி வருவதாக அமையாது. பொருளாதார உறவுகளின் சாரம் கண்டுபிடிக் கப்பட்டு விட்டதால், சமுதாய வாழ்வில் இந்த உறவுகள் எந்த வெளி வடிவத்தில் (மேலுறையில்) காட்சியளிக் கின்றனவோ அந்த வெளி வடிவத்தையும் அறியலாம்.

இந்த இரட்டை நிகழ்ச்சிப் போக்கின் — ஸ்தூலமான திலிருந்து சூக்குமமானதை நோக்கி, சூக்குமமான திலிருந்து ஸ்தூலமானதை நோக்கி — பயனாய் பொருளா தார உறவுகள் தம் பன்முகத் தன்மையில், முழுமையாக, உள் சாரத்திற்கும் திட்டவட்டமான யதார்த்தத்தில் இவை வெளிப்படும் பன்முக வடிவங்களுக்கும் இடையிலான ஒற்றுமையில் நம் முன் நிற்கின்றன.

இயக்கவியல் பொருள்முதல்வாத முறைக்கு உரித்தான இந்த இரட்டை அணுகுமுறையை கா. மார்க்ஸ் தன்

இறவாப் புகழ் பெற்ற **மூலதனம்** நூலில் முதலாளித்துவ உற்பத்தியை ஆராயப் பயன்படுத்தினார். முதலாளித்துவ யதார்த்தத்தின் ஏராளமான திட்டவட்டமான விவரங்களை ஆராய்ந்த கா. மார்க்ஸ், ஸ்தூலமானதிலிருந்து சூக்குமமானதை நோக்கிச் சென்றார், முதலாளித்துவப் பொருளாதார உறவுகளின் அமைப்பு முழுவதிலுமிருந்து மிக எளிய, சாதாரண, வெகுஜன உறவைச் சுட்டிக் காட்டினார்; மற்ற எல்லாவற்றிற்கும் முன்னராகத் தோன்றிய இது அதிக சிக்கலான மற்ற எல்லா உறவுகளும் தோன்றுவதற்கு அடிப்படையாகத் திகழ்ந்தது. இதுதான் பண்டப் பரிவர்த்தனை ஆகும். கா. மார்க்ஸ் இதை முதலாளித்துவ சமுதாயத்தின் சாதாரண ''பொருளாதார உயிரணு'' என்றார்.

இந்த ''பொருளாதார உயிரணுவை'' ஆழமாக ஆராய்ச்சி செய்த கா. மார்க்ஸ், முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடுகளும் இதனுள் கரு வடிவில் உள்ளதைக் காட்டினார். முதல் பார்வைக்குப் பண்டம் என்பது மனித தேவை எதையாவது பூர்த்தி செய்யும் பொருளாகும்; பணத்திற்காகவோ, மற்ற பொருளுக்காகவோ பரிவர்த்தனை செய்து கொள்ளவும் தக்க ஒரு பொருளாகும். ஆனால் பண்டத்தைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில் மார்க்ஸ், பண்ட உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் வளர்ச்சி முழுவதையும் — பணம் தோன்றியது வரை — ஆராய்ந்தார். எளியதிலிருந்து சிக்கலானதை நோக்கிச் சென்ற அவர் எப்படிப்பட்ட வரலாற்றுச் சூழ்நிலைகளில் பணம் மூலதனமாகிறது என்று ஆராய்ந்தார், முதலாளித்துவ சுரண்டலின் சாரத்தைக் கண்டுபிடித்தார், முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகிய உபரி மதிப்பு விதியை ஆதாரப்படுத்தினார். இதன் மூலம் தொழிலாளி

வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான சமரசப்படுத்த இயலாத வர்க்க முரண்பாடுகளின் உண்மையான அடிப்படை கண்டுபிடிக்கப்பட்டது. முதலாளித்துவத்தின் வளர்ச்சி சோஷலிசப் புரட்சிக்கான பொருளாயத மற்றும் அகவய முன்நிபந்தனைகளைத் தோற்றுவிப்பதற்கும் முதலாளித்துவத்தின் அழிவிற்கும் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்கிறது என்று கா. மார்க்ஸ் விஞ்ஞானபூர்வமாக மெய்ப்பித்தார்.

மூலதனம் நூலின் மூன்று தொகுதிகளில் ஒவ்வொன்றும், ஒவ்வொரு பிரிவும், அத்தியாயமும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் சாரத்தையும் இவற்றின் வரலாற்று ரீதியான காலஞ்சார்ந்த தன்மையையும் அறிவதில் எளியதிலிருந்து சிக்கலானதை நோக்கி, கீழ் மட்டத்திலிருந்து உயர் மட்டத்தை நோக்கிச் செல்லும் இயக்கத்தின் கட்டங்களாகும். கா. மார்க்ஸ் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் அமைப்பு முழுவதையும் ஆழமாக சித்தரித்தார், முதலாளித்துவத்தை ஒரு உயிரோட்டமுள்ள சமூக-பொருளாதார அமைப்பாக பன்முக நோக்கில் ஆராய்ந்தார்.

பகுப்பாய்வும் தொகுப்பும்

பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களிடையே தோன்றும் பல்வேறு உறவுகள் உற்பத்தி உறவுகளில் அடங்கும். இந்த உறவுகளை ஆராய முதலில் இவற்றை எளிய சிறு அம்சங்களாகப் பிரிக்க வேண்டும், ஒவ்வொரு அம்சத்தையும் விவரமாக ஆராய வேண்டும், உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தத்தின் உள்ளே இதன் இடத்தையும் பங்கையும் வெளிப்படுத்த வேண்டும்.

முழுமையான ஒன்றைப் பகுதி பகுதியாகப் பிரித்து, இவை ஒவ்வொன்றையும் ஒரே முழுமையின் அம்சங்களாக ஆராய்வதுதான் **பகுப்பாய்வு** எனப்படும். ஏதாவது ஒரு பொருளின் கலவையை ஆராயும் போது வேதியியல் விஞ்ஞானிகளும் தாவர இலையின் கட்டமைப்பை ஆராய தாவரவியல் விஞ்ஞானிகளும் இம்முறையைப் பயன்படுத்துகின்றனர். பௌதீக விஞ்ஞானிகள் தம் பகுப்பாய்வில் அடிப்படைத் துகள்கள் வரை செல்கின்றனர், சிக்கலான உபகரணங்களில் இவற்றின் இயக்கச் சுவடுகளைப் பதிவு செய்கின்றனர். அரசியல் பொருளாதார விஞ்ஞானிகளும் பகுப்பாய்வைப் பயன்படுத்தி, பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளின் தனிப்பட்ட அம்சங்களை ஆராய்கின்றனர்.

பின்னர் புதிய கட்டம் ஆரம்பமாகிறது. குறிப்பிட்ட பொருளாதாரப் புலப்பாட்டைப் பகுதி பகுதிகளாகப் பிரித்து இவற்றின் சாரத்தை அறிந்த பின், அதாவது பகுப்பாய்விற்குப் பின், **தொகுப்பு** நடைபெறுகிறது. பிரிக்கப்பட்டு, பகுப்பாய்வு செய்யப்பட்ட அம்சங்கள், அங்கக ரீதியாக இணைந்த ஒரே முழுமையாக ஒன்று சேர்க்கப்படுகின்றன. இவ்வாறு சூக்குமமானதிலிருந்து ஸ்தூலமானதை நோக்கிச் செல்லும் போது, ஆராயப் படும் பொருளாதாரப் புலப்பாடு அதன் எல்லா அங்கங் களின் ஒற்றுமையிலும் பரஸ்பரத் தொடர்பிலுமாக தத்துவ ரீதியாக சித்தரிக்கப்படுகிறது.

இவ்வாறாக பகுப்பாய்வும் தொகுப்பும் இடையறாத ஒற்றுமையில் உள்ளன, மனிதர்களின் உற்பத்தி உறவு களை அறிவதன் இரண்டு பக்கங்களைப் போலத் திகழுகின்றன. பொருளாதார உறவுகளின் சாரத்தைப் பற்றிய ஆராய்ச்சி பகுப்பாய்விலிருந்து துவங்கி தொகுப் போடு முடிவடைகிறது. பகுப்பாய்வும் தொகுப்பும்

உற்பத்தி உறவுகளின் ஆராய்ச்சியில் பயன்மிகு சாதனங்களாகும். இவை பொருளாதாரப் புலப்பாடுகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து, இவற்றின் சாரத்தை ஆராய்ந்து கண்டுபிடிக்க உதவுவதோடு கூட உற்பத்தி உறவுகளின் எல்லா அம்சங்களுக்கும் இடையிலான உள் தொடர்பைக் கண்டுபிடிக்கவும், பொருளாதார கருத்தினங்கள், குறிப்பிட்ட உற்பத்தி முறையின் உற்பத்தி உறவுகளின் தனிப்பட்ட அம்சங்கள் மற்றும் மொத்த அமைப்பின் வளர்ச்சி விதிகள் ஆகியவற்றை அறியவும் உதவுகின்றன.

பொருளாதார வாழ்வில் எல்லாம் நெருக்கமான பரஸ்பரத் தொடர்பைக் கொண்டுள்ளன, இயக்கத்தில் இருக்கின்றன. எனவே எந்த ஒரு பொருளாதார விதி அல்லது கருத்தினத்தையும் விஞ்ஞான ரீதியாகப் பகுப்பாய்வு செய்யும் போது இவற்றை வளர்ச்சியில், மற்ற பொருளாதார விதிகள், கருத்தினங்களுடனான பரஸ்பரத் தொடர்பில் அணுக வேண்டும். பணம் பண்டங்களுக்கு மாற்றாக அளிக்கப்படுகிறது என்பதை மட்டும் அறிந்திருந்தால் நம்மால் ஒன்றையுமே புரிந்து கொள்ள இயலாது. பணம் எப்படி, எப்போது தோன்றியது, நவீன சமுதாயத்தில் இதன் பங்கு என்ன, மனிதகுலத்தின் எதிர்கால சமுதாயத்தில் இதன் விதி எப்படிப்பட்டதாயிருக்கும் என்பதையெல்லாம் அறிந்திருப்பது அவசியம்.

விஞ்ஞான சூக்கும முறை, பகுப்பாய்வு மற்றும் தொகுப்பு முறை, இவற்றுடன் நெருக்கமாக, அங்கக ரீதியாகப் பரஸ்பரத் தொடர்பு கொண்டுள்ள மற்ற தனிப்பட்ட முறைகள் ஆகியவற்றைப் பயன்படுத்த வேண்டுமென இயக்கவியல் பொருள்முதல்வாத முறை முன்னனுமானிக்கிறது.

தர்க்க ரீதியானதும் வரலாற்று ரீதியானதும்

அரசியல் பொருளாதாரம் உற்பத்தி உறவுகளை இவற்றின் வளர்ச்சியிலும் மாற்றத்திலும்தான் ஆராய் கிறது. இயற்கையைப் போன்றே சமுதாயத்திலும் வளர்ச்சியானது எளிமையானதிலிருந்து சிக்கலானதை நோக்கி, கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டத்தை நோக்கிச் செல்கிறது. எதிர்மறைகளின் ஒற்றுமையும் போராட்டமும், அந்தந்த உற்பத்தி முறையின் உள் முரண்பாடுகளும்தான் சமுதாயத்தின் கீழ் மட்டங் களிலிருந்து மேல் மட்டங்களை நோக்கிய மாற்றத்திற்கு வழிகோலும் வளர்ச்சியின் உந்து சக்திகளாகும்.

உற்பத்தி உறவுகளை ஆராயும் போது தர்க்க (தத்துவார்த்த) முறையைப் பயன்படுத்துவது முற்றிலும் சரியானதே, ஏனெனில் சூக்குமமானதிலிருந்து ஸ்தூல மானதை நோக்கிய போக்கு, கீழ் மட்டங்களிலிருந்து மேல் மட்டங்களை நோக்கிய மனித சமுதாய வரலாற்று வளர்ச்சி எனும் நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலிக்கிறது. இதில் வரலாற்று அம்சமும் தர்க்க அம்சமும் இணை கின்றன. இங்கே தத்துவார்த்த ஆராய்ச்சியானது, சமுதாய வளர்ச்சி எனும் உண்மையான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கைப் பிரதிபலிப்பது போல் விளங்கு கிறது.

ஆனால் இந்தத் தர்க்க ரீதியான பிரதிபலிப்பு வரலாற்று நிகழ்ச்சிப் போக்கின் துல்லியமான பிம்பம் அல்ல. வரலாற்று விஞ்ஞானங்களைப் போல் அரசியல் பொருளாதாரம் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கையும் பல்வேறு நாடுகளில் இதன் திட்டவட்டமான திருப்பு முனைகளையும் வளைவு நெளிவுகளையும் விரிவாக

ஆராய்வதில்லை. ஆராய்ச்சியில் தர்க்க முறையானது மொத்தத்திலும் பொதுவாகவும் வரலாற்று வளர்ச்சி எனும் உண்மையான நிகழ்ச்சிப் போக்கின் பின் வருகிறது. இதில், திட்டவட்டமான வடிவம் மற்றும் இடையூறு விளைவிக்கும் தற்செயல்களிலிருந்து விடுவிக்கப் பட்ட மிக முக்கியமானது தனியே சுட்டிக் காட்டப் படுகிறது. குறிப்பிட்ட உற்பத்தி உறவுகளின் அமைப்பின் உள்ளே இருக்கும் பொருளாதாரப் புலப்பாடுகளை மட்டுமே அரசியல் பொருளாதாரம் தேர்ந்தெடுக்கிறது. இது மனித சமுதாய வளர்ச்சியை சூக்குமமான, தத்துவார்த்த ரீதியாகத் தொடர்ச்சியான வடிவில் பார்க்கவும், பொருளாதார விதிகளையும் கருத்தினங் களையும் கண்டுபிடிக்கவும் உதவுகிறது.

ஆராய்ச்சி முறையை விளக்க முறையிலிருந்து வேறுபடுத்திப் பார்க்க வேண்டும். அரசியல் பொருளா தாரத்தில் இரண்டு விதமான விளக்க முறைகள் — பகுப்பாய்வு மற்றும் வரலாற்று முறைகள் — உள்ளன. ஒரு வளர்ச்சியடைந்த சமூக-பொருளாதார அமைப்பில் பொருளாதாரக் கருத்தினங்கள் (பண்டம், பணம், உபரி மதிப்பு, லாபம் போன்றவை) எந்த தர்க்க ரீதியான தொடர்ச்சியில் நிலவி, ஒன்றிலிருந்து ஒன்றாக வருகின்றனவோ அதே தொடர்ச்சியில் இக்கருத்தினங் களை ஆராய்வதுதான் பகுப்பாய்வு முறையின் அடிப் படையாகும்.

வரலாற்று முறை, சமுதாய வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் பொருளாதாரப் புலப்பாடுகளும் கருத்தினங் களும் எத்தகைய வரலாற்று தொடர்ச்சியில் தோன் றினவோ அதே வரிசையில் இவற்றை ஆராய்கிறது.

கா. மார்க்சின் **மூலதனம்** உட்பட பல அரசியல் பொருளாதாரப் படைப்புகளில் பகுப்பாய்வு விளக்க

முறை, வரலாற்று விளக்க முறை இரண்டுமே பயன் படுத்தப்படுகின்றன. **மூலதனத்தில்** பகுப்பாய்வு முறைக்கு தான் முக்கிய இடம் உள்ளது. அடிப்படையான தத்துவார்த்த ஆராய்ச்சியின் முடிவுகளை முதன்முதலாக வெளியிடும் ஒரு விஞ்ஞான படைப்பிற்கு இது முற்றிலும் நியாயமானதே. இங்கே வரலாற்று விவரங்களும் ஏராளமான வரலாற்று குறிப்புகளும் அந்தந்த தத்து வார்த்த பிரச்சினைகளை ஆதாரப்படுத்தவும் சிறப்புற எடுத்துரைக்கவும் மட்டுமே பயன்படுத்தப்படுகின்றன. மார்க்சின் **மூலதனத்தில்** முதலாளித்துவத்தின் வரலாறும் இதை சுருக்கமாக விளக்கும் கருத்துக்களின் பகுப்பாய் வும் தரப்பட்டுள்ளன என்று வி. இ. லெனின் கோடிட்டுக் காட்டினார்.

அளவும் பண்பும்

பொருளாதாரப் புலப்பாடுகளுக்கு **அளவுநிலை** அம்சங் களும் **பண்புநிலை** அம்சங்களும் உண்டு. இவை ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புடையவை, பரஸ்பரம் சார்ந் தவை, இயக்கவியல் ரீதியான ஒற்றுமையை உடையவை. பண்புநிலை அம்சம் முதன்மையானது, அது அளவுநிலை அம்சத்தை நிர்ணயிக்கிறது. தன் பங்கிற்கு அளவுநிலை மாற்றங்கள் பொருளாதார உறவுகளில் புதிய பண்புநிலைப் புலப்பாடுகள் தோன்ற இட்டுச் செல்லும்.

நிலப்பிரபுத்துவச் சொத்துடைமை மாறி முதலாளித் துவச் சொத்துடைமை வந்த போது இது புதிய பண்பு ரீதியான நிலைக்கு சமுதாயம் மாறியதைக் குறித்தது. இதனால் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு, நிலப்பிரபுத் துவத்துடன் ஒப்பிடுகையில் பெரும் வாய்ப்புகள் தோன்றின. முதலாளித்துவ உற்பத்திச் சக்திகள் வளர வளர,

உழைப்பின் விளைபயன்கள் முதலாளித்துவ வடிவில் சுவீகரிக்கப்படுவதுடன் உற்பத்திச் சக்திகள் பொருந்தாமல் போகுமளவிற்கு உற்பத்தி சமூகவுடைமையாக்கப்பட்டது; இதனால் உற்பத்திச் சக்திகளுக்கும் முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடையில் சமரசப்படுத்த இயலாத முரண்பாடுகள் தோன்றின. அதாவது முதலாளித்துவ சமுதாயம் ஒரு புதிய பண்பு ரீதியான நிலையை அடைந்துள்ளது, சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான சூழ்நிலைகள் உருவாகியுள்ளன என்று இதற்குப் பொருள்.

அரசியல் பொருளாதாரம் பண்புநிலை நோக்கிலிருந்து மட்டுமின்றி அளவுநிலை நோக்கிலிருந்தும் உற்பத்தி உறவுகளை ஆராய்கிறது. உதாரணமாக, முதலாளித் துவச் சுரண்டலின் சாரத்தை வெளிப்படுத்தும் போது உபரி மதிப்பு எப்படி தோற்றுவிக்கப்படுகிறது என்பதை மட்டும் காட்டினால் போதாது, உபரி மதிப்பின் விகிதத்தையும் மொத்தத்தையும் நிர்ணயிக்க வேண்டும் (இதைத்தான் முதலாளிகள் இலவசமாகப் பறிக்கின்றனர்), அதாவது மூலதனம் கூலியுழைப்பைச் சுரண்டும் அளவைக் காட்ட வேண்டும்.

பொருளாதாரப் புலப்பாடுகளின் அளவுநிலை அம்சத்தை அரசியல் பொருளாதாரம் **கணித** மற்றும் **புள்ளி விவர** முறைகள் மூலம் ஆராய்கிறது. வேதியியல், புவியியல், உயிரியல், மருத்துவம், மொழி விஞ்ஞானம் ஆகிய துறைகளைப் போன்றே பொருளாதார விஞ்ஞானத்திலும் கணிதம் விரைவாகப் புகுகிறது. கணித மற்றும் புள்ளிவிவர முறைகளைப் பயன் படுத்துவதானது பொருளாதாரப் புலப்பாடுகளின் அரசியல்-பொருளாதார சாரத்தை ஆழமாக வெளிப்படுத்தவும், இவற்றிற்கு இடையிலான காரண-காரியத் தொடர்பு

களின் தன்மையைப் பற்றி அதிக திட்டவட்டமான கருத்தைப் பெறவும், சரியான, துல்லியமான சொரிசு களை உருவாக்கவும் உதவுகிறது. இவையெல்லாம் தத்துவார்த்த முடிவுகளை நடைமுறையில் பயன் படுத்தும் வாய்ப்பைப் பெருக்குகின்றன.

உண்மையான பொருளாதார உறவுகளைப் பற்றிய விஞ்ஞானபூர்வமான பண்புநிலைப் பகுப்பாய்வு கணித, புள்ளிவிவரப் பகுப்பாய்வுகளின் அடிப்படையில் இருந் தால்தான் இவை மேற்கூறிய உறவுகளைச் சரியாகப் பிரதிபலிக்கின்றன. கா. மார்க்ஸ், வி. இ. லெனினின் படைப்புகள், உற்பத்தி உறவுகளைப் பற்றிய ஆழமான ஆராய்ச்சிக்குக் கணித மற்றும் புள்ளிவிவர முறைகளை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், பொருளாதாரப் புலப்பாடுகளின் பண்பு ரீதியான சாரத்திலிருந்து விலகி நின்று — ஏன் இதற்கு எதிராகக் கூட நின்று — பொருளா தாரப் பகுப்பாய்வில் ஈடுபடுகின்றனர். பொருளாதாரத் தத்துவத்தை இவர்கள் வெறும் கணக்குகள், சூத்திரங் களால் மாற்றுகின்றனர். பூர்ஷ்வா நாடுகளில் பரவியுள்ள பல விஞ்ஞான நூல்கள், பாட நூல்களில் பல்வேறு பொருளாதாரச் சூழ்நிலைகளில் மனிதன் எப்படி நடந்து கொள்கிறான் என்பதை ஏதோ காட்டுவதாகக் கூறும் வரைபடங்களும் அட்டவணைகளும் நிறைந்திருக் கின்றன. உதாரணமாக, ''முன்னுரிமை வளைகோடு கள்'' என்றழைக்கப்படுபவை பிரபலமானவை; தேவைக் கும் சப்ளைக்கும் உள்ள விகிதத்தைப் பிரதிபலிக்கும் இவை விலைகளை நிர்ணயிக்க உதவ வேண்டும். ஆனால் இங்கே பண்ட இயக்கத்தை நிர்ணயிக்கும் விதிகள், பூர்ஷ்வா பொருளாதாரத்தைப் பிரதிபலிக்கும் விதிகள்

கவனிக்கப்படுவதில்லை.

கணித மற்றும் புள்ளிவிவர முறைகள் எவ்வளவுதான் முக்கியமானவை என்ற போதிலும் இவற்றை மிகைப் படுத்தக் கூடாது. இவை நடைமுறையில் பெரிதும் பயன்படக் கூடியவை, பொருளாதாரத் தத்துவ முடிவுகளை நிறைவேற்றுவதில் துணை புரிகின்றன. உதாரணமாக, சோஷலிச நாடுகளில் தேசியப் பொருளா தார விகிதாச்சாரங்களை நிர்ணயிக்கும் போதும், உற்பத்தியில் ஏற்படக் கூடிய கட்டமைப்பு மாற்றங் களைக் கணிக்கும் போதும், மொத்த உற்பத்திப் பொருளையும் தேசிய வருமானத்தையும் வினியோகித்து, பயன்படுத்தும் போதும், பொருளாதார வளர்ச்சி வேகங்கள், தேசியப் பொருளாதாரத்தில் மற்ற பல அளவுநிலைத் தொடர்புகளை வரையறுக்கும் போதும் கணித, புள்ளிவிவர முறைகள் வெற்றிகரமாகப் பயன் படுத்தப்படுகின்றன.

ஆனால் உற்பத்திச் சாதனங்களின் மீதான சொத் துடைமையின் அடிப்படையில் மனிதர்களிடையே உரு வாகும் பொருளாதார உறவுகள் முழுவதையும் இவற்றின் பன்முகத் தன்மையையும் வெறும் அளவுநிலைக் குறியீடு களால் வெளிப்படுத்த முடியாது. பி. எங்கெல்ஸ் இதைப் பற்றிக் குறிப்பிடும் போது, பொருளாதார உறவுகளை பௌதீக அளவைகளில் வெளியிட முடியாது* என்றார். அளவுநிலை நியதிகளை ஆராயும் போது கணித, புள்ளிவிவர முறைகள் பெரும் பங்காற்றினாலும் அரசியல் பொருளாதாரத்தில் இவற்றால் முக்கிய இடத்தை வகிக்க முடியாது. பொருளாதார உறவுகளின் பண்பு ரீதியான சாரத்தை வெளிப்படுத்த உதவும்

---

* பார்க்க: **Marx/Engels, *Werke*, Bd. 35, S. 134.**

விஞ்ஞான சூக்கும முறைக்குத்தான் இங்கு பெரும் முக்கியத்துவம் உண்டு.

சமுதாய நடைமுறை

சமுதாயத்தின் பொருளாதார வாழ்க்கை உட்பட புறவய உலகை அறியும் நிகழ்ச்சிப் போக்கு, நேரடியான தியானத்திலிருந்து சூக்குமச் சிந்தனைக்கு, இதிலிருந்து நடைமுறையை நோக்கிச் செல்கிறது.

அன்றாட வாழ்வில் இப்படி நடக்கக் கூடும். ஒரு பொருளை, உதாரணமாக, ஆடையை வாங்கும் முன் நாம் அதை நன்கு பார்க்கிறோம், அளவு சரியாக உள்ளதா என்று சரிபார்க்கிறோம், பின் யோசித்து முடிவெடுக்கிறோம், இறுதியாகச் செயல்படுகிறோம் — ஒன்று வாங்குகிறோம் அல்லது வாங்காமல் போகிறோம். விஷயத்திற்கு வருவோம். விஞ்ஞான அறிதலில் இவையெல்லாம் ஒப்பிட முடியாதபடி சிக்கலானவை. அதுவும் அரசியல் பொருளாதாரத்திற்கு இது பெரிதும் பொருந்தி வரும்; ஏனெனில் நாம் ஏற்கெனவே கூறியபடி இது வெளியில் தெரியும் (சில நேரங்களில் ஏமாற்றக் கூடிய) மேலுறைக்குப் பின் புலப்பாடுகளின் உண்மையான சாரத்தைக் கண்டுபிடிக்க வேண்டும். இங்கே நேரடியான தியானம் மேலோட்டமான பொருளாதார வடிவங்களை மட்டுமே ஆட்கொள்ளும். விஞ்ஞான சிந்தனை மட்டுமே உரிய அறிதல் மட்டத்தை அடைந்து, பொருளாதார உறவுகளின் இருதயத்தினுள் புகவும், இவற்றின் வளர்ச்சி விதிகளையும் கருத்தினங்களையும் புரிந்து கொள்ளவும், நடைமுறை முடிவுகளுக்கு வரவும் உதவும். ஆனால் பொருளாதார உறவுகளை அறியும் நிகழ்ச்சிப் போக்கு இத்துடன் முடிந்து விடவில்லை.

அறிதலின் இறுதிக் கட்டம் சமுதாய நடைமுறை ஆகும். விஞ்ஞான சிந்தனையால் உருவாக்கப்பட்ட தத்துவார்த்த முடிவுகள், பொதுமைப்படுத்தல்கள் சரியான வையா தவறானவையா என்று இந்த நடைமுறைதான் முடிவு செய்கிறது. இதுதான் அரசியல் பொருளாதாரம் கண்டுபிடித்த பொருளாதார விதிகள், கருத்தினங் களைப் பற்றி ஞானமும் கருத்துக்களும் உண்மை யானவையா என்று சரிபார்க்க உதவுகிறது, உற்பத்தி உறவுகளின் சாரம் மற்றும் இவற்றின் வளர்ச்சி நியதி களைப் பற்றிய கருத்துக்கள் யதார்த்த பொருளாதார வாழ்க்கைக்கு எந்த அளவு பொருந்தி வருகின்றன என்று நிர்ணயிக்க உதவுகிறது. விஞ்ஞான சிந்தனை நடைமுறைக்கு மாறும் போது பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளை அறிவது உயர் மட்டத்தை அடைகிறது, புதிய அம்சங்களால் சரிபார்க்கப்படுகின்றது, செழுமைப் படுத்தப்படுகின்றது. பழைய சமுதாயத்தைப் புரட்சி கரமாக மாற்றியமைக்கவும், புதிய கம்யூனிச சமுதாயத் தைக் கட்டவும் கருவியாகத் திகழும் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தின் கருத்துக்கள் சரியானவை என்பதற்கு விஞ்ஞான தத்துவத்திற்கும் சமுதாய நடைமுறைக்கும் இடையிலான ஒற்றுமையும் நெருக்கமான பரஸ்பரத் தொடர்பும் வகை செய்கின்றன.

திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதாரச் சூழ்நிலை களில் அரசியல் பொருளாதாரத்தின் தத்துவார்த்த முடிவுகளைச் சரிபார்ப்பதில் பொருளாதாரப் பரிசோத னைக்கு முக்கியப் பங்குண்டு. சோஷலிச நாடுகளில் தேசியப் பொருளாதாரத்தைத் திட்டமிடுவதையும் நிர் வகிப்பதையும் மேம்படுத்தும் பாதைகளைத் தேடுவதற்கும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் பொருளா தார முறைகளையும் ஊக்குவிப்புகளையும் தேடும்

போதும் இது பயன்படுத்தப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட பொருளாதார நடவடிக்கையின் பயன்தன்மை முதலில் ஒரு தனி தொழில் நிறுவனத்திலோ, ஒரு சில தொழில் நிறுவனங்களிலோ சரிபார்க்கப் படுகிறது. இதற்குப் பின்தான் நாடு தழுவிய அளவில் இந்த அனுபவத்தைப் பயன்படுத்துவது சரியாகுமா என்பது பற்றிய முடிவு எடுக்கப்படுகிறது. சோவியத் தொழிற்துறையின் பல்வேறு பிரிவுகளைச் சேர்ந்த தொழில் நிறுவனங்களில் நிறைவேற்றப்படும் ஒரு பரந்த அளவு பரிசோதனையை இந்த இடத்தில் குறிப்பிடுவது தகும். நவீன சூழ்நிலைகளில் சோஷலிச நிர்வகிப்பு முறையின் முக்கிய அம்சங்களை நடை முறையில் சரிபார்ப்பதுதான் இப்பரிசோதனையின் நோக்கமாகும்.

பொருளாதாரப் பரிசோதனையை மேன்மேலும் பரவலாகப் பயன்படுத்துவது விஞ்ஞான சூக்கும முறையின் பங்கைக் குறைக்கவில்லை. ஏனெனில் சாதாரணமாக பொருளாதாரப் பரிசோதனைக்கு முன் தத்துவார்த்த ஆராய்ச்சி இருக்கும், இது பரிசோதனை நடத்தப்படும் போது கூடவே தன் பங்கை ஆற்றும், முடிவுகளைப் பகுப்பாய்வு செய்யவும் இது பயன்படுத்தப் படும். பொருளாதாரப் பரிசோதனையும் தன் பங்கிற்கு தத்துவார்த்த முடிவுகளை நடைமுறையில் சரிபார்க்கவும், திட்டமிடப்படும் நடவடிக்கைகளின் விவேகத்தைப் பற்றி ஒரு முடிவிற்கு வரவும் உதவுகிறது.

எந்த உற்பத்தி முறையை (முதலாளித்துவ அல்லது கம்யூனிச) ஆராய்கின்றோம் என்பதைப் பொறுத்து, உற்பத்தி உறவுகளை ஆராய்வதற்காகப் பொது இயக்கவியல் முறையைப் பயன்படுத்துவதற்குச் சிறப் பியல்புகள் உண்டு. தனியுடைமை மற்றும் கூலியுழைப்

யைச் சுரண்டுவதன் அடிப்படையிலான தன்னிச்சையான முதலாளித்துவ பண்ட உற்பத்தி முறையை ஆராய்வதற்குப் பயன்படுத்தும் அதே முறைகளை கூட்டு அடிப் படைகளில் அடைந்த சோஷலிச உற்பத்தியை (இதன் பொருளாதார விதிகள் திட்டமிட்ட வடிவத்தில் வெளிப்படுகின்றன) ஒரே முழுமையாக ஆராயும் போது பயன்படுத்த இயலாது. சோஷலிச அரசின் பொருளா தாரக் கொள்கையின் விஞ்ஞான அடிப்படைகளையும் சோஷலிச நிர்வாகத்தின் கோட்பாடுகளையும் உருவாக்க வேண்டிய சோஷலிச அரசியல் பொருளாதாரம், தத்துவார்த்தப் பிரச்சினைகளின் ஆராய்ச்சியைத் திட்ட வட்டமான முடிவுகள், நடைமுறை சிபாரிசுகள் (இவற்றிற்கு பண்புநிலை அம்சங்களும் அளவுநிலை அம்சங்களும் உண்டு) ஆகியவை வரை இட்டுச் செல்ல வேண்டும் என்பதை இந்த இடத்தில் குறிப்பிட வேண்டும். சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் வளர்ச்சி யடைவதும் ஆராய்ச்சி முறையியல் மேம்பாடு அடை வதும் ஒரே நேரத்தில் நடைபெறுகின்றன. இது, சோஷலிச அரசியல் பொருளாதார அடிப்படைகளுக்கு அடித்தளம் அமைத்து, இதன் ஆராய்ச்சி முறையின் சிறப்பியல்புகளை வெளிப்படுத்திய வி. இ. லெனினின் பாரம்பரியத்தை தொடரும் பரஸ்பரத் தொடர்புடைய ஒரே நிகழ்ச்சிப் போக்காகும்.

அத்தியாயம் ஆறு

மார்க்சிய-லெனினிய கருத்துக்களின் மாபெரும் சக்தி

பொருளாதார போதனைகளின் வரலாறு என்பது கருத்துக்களின் இடையறாத போராட்டமாகும். பகை முரண்பாட்டு வர்க்கங்களின் நாட்டங்களாலும் நலன் களாலும் உந்தித் தள்ளப்பட்ட எதிரெதிரான கண் ணோட்டங்கள் இதில் மோதின. பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள் மற்றும் புலப்பாடுகளின் ஆராய்ச்சிப் போக்கும் முடிவுகளும் கூட அடிப்படையில் வெவ் வேறானவையாக இருந்தன. ஆதிக்கம் செலுத்திய சுரண்டும் வர்க்கங்களின் சித்தாந்திகள், அந்தந்த சுரண்டல் வடிவத்தின் அடிப்படையில் இருந்த உறவுகள் நிரந்தரமானவை, மாற்றப்பட முடியாதவை என்பதை ஆதாரமாகக் கொண்டு தம் பொருளாதாரத் தத்துவங் களை உருவாக்கினார்கள். மனிதனின் ஒவ்வொரு நடவடிக்கையும் கடவுளின் சித்தத்தால் முன்நிர்ணயிக்கப் பட்டது எனும் மத வறட்டு தத்துவங்கள் மேற்கூறிய கண்ணோட்டங்களின் அடிப்படையாக அடிக்கடி பயன் படுத்தப்பட்டன. பொருளாதார நிகழ்ச்சிப் போக்கு களின் காரணங்களை மனித இயற்கையில், இவனோடு கூடப் பிறந்த உணர்ச்சிகள், மனநிலை சிறப்பியல்புகளில் பார்த்த தத்துவஞானிகளும் பொருளாதார நிபுணர்

களும் இதே கருத்துநிலைகளில்தான் நின்றார்கள்.

இப்படிப்பட்ட கண்ணோட்டங்களைப் பற்றி அறிய நூற்றாண்டுகளின் ஆழத்திற்கு கற்பனையில் செல்ல வேண்டிய அவசியமோ, காலத்தால் நைந்து போன நூல்களின் பக்கங்களைப் புரட்ட வேண்டிய அவசியமோ இல்லை. இன்று பொருளாதாரம் பற்றி மேலைய ஆசிரியர்கள் வெளியிட்டுள்ள பல பாட நூல்களை — இவை பல முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடுகளிலும் பெரிதும் பரப்பப்படுகின்றன — புரட்டினாலே போதும். இவற்றின் உள்ளடக்கத்தில் வேறுபாடுகள் இருந்த போதிலும், முதலாளித்துவத்தை, இதன் ஒழுங்குமுறைகளை, ஏதோ இதன் ''நிரந்தர உண்மை மற்றும் நீதி'' எனப்படுவதைப் பாதுகாக்கும் ஒரு பொதுக் கருத்தை இவை பிரச்சாரம் செய்வது கண்களில் படும்.

அரசியல் பொருளாதாரம் வர்க்க விஞ்ஞானமாக இருந்தது, இருக்கிறது, இருக்கும், இதில் வர்க்கங்களின் நலன்கள் பிரதிபலிக்கின்றன என்பதை இது இன்னுமொரு முறை மெய்ப்பிக்கிறது. இதைப் பற்றி பூர்ஷ்வா ஆசிரியர்கள் பெரும்பாலும் மௌனம் சாதிக்கின்றனர். மார்க்சியம் மட்டுமே தான் நவீன சமுதாயத்தின் மிக முற்போக்கான, புரட்சிகரமான வர்க்கமாகிய பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகர போதனை என்றும், மார்க்சிய அரசியல் பொருளாதாரம் என்பது ஒடுக்குபவர்களுக்கு எதிரான போராட்டத்தில் தொழிலாளி வர்க்கத்தின் சித்தாந்த ஆயுதம் என்றும் உறுதியாகவும் வெளிப்படையாகவும் அறிவித்தது.

மார்க்சியம் தோன்றியதையடுத்து அரசியல் பொருளாதாரத்தில் புரட்சிகர மாற்றம் நடைபெற்றது. இதற்கு உண்மையான விஞ்ஞான அடித்தளம் தோற்றுவிக்கப்

பட்டது. உற்பத்தி உறவுகள், பொருளாதார விதிகள், கருத்தினங்கள் ஆகியவற்றின் சாரத்தை விஞ்ஞானபூர்வமாகப் புரிந்து கொண்டதில் மட்டுமின்றி, ஆராய்ச்சி முறையிலும் இம்மாற்றம் வெளிப்பட்டது. சமுதாய நடைமுறை பற்றிய பிரச்சினை புது விதமாகத் தீர்க்கப்பட்டது, சமுதாயத்தின் முன்னேற்றத்தில் இதன் தீர்மானகரமான பங்கு அங்கீகரிக்கப்பட்டது. மக்கள் திரளினரை ஆட்கொண்ட மார்க்சிய விஞ்ஞான கருத்துக்கள் சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்றி யமைக்கும் மாபெரும் பொருளாயதச் சக்தியாக மாறின.

அரசியல் பொருளாதாரத்தில் ஏற்பட்ட புரட்சிகர மாற்றம்

கா. மார்க்ஸ் தன் படைப்புகளின் மூலம் பல்வேறு சமூக விஞ்ஞானங்களின் வளர்ச்சிக்குப் பெரும் பங்காற்றினார். மனிதகுலத்தின் முற்போக்கு சிந்தனை ஏற்கெனவே முன்வைத்த கேள்விகளுக்கு இவர் பதிலளித்தார். இந்த மாபெரும் சிந்தனையாளர் செய்த புரட்சிகர மாற்றத் தைப் பற்றி தத்துவஞானிகளும் அரசியல் பொருளாதார விஞ்ஞானிகளும் வரலாற்று அறிஞர்களும் சமூக வியலாளர்களும் முழு உரிமையோடு பேசுகின்றனர். எல்லா சமூக விஞ்ஞானங்களையும் வளர்ப்பதில் கா. மார்க்ஸ் ஆற்றிய பங்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் அரசியல் பொருளாதார ஆராய்ச்சிதான் இவருடைய முக்கிய நோக்கமாக இருந்தது என்பதைக் குறிப்பிட வேண்டும். இவருடைய சகதோழரும் உற்ற நண்பருமாகிய பி. எங்கெல்ஸ் எப்போதும் இவரருகில் இருந்தார். இங்கிலாந்தில் தொழி

லாளி வர்க்கத்தின் நிலைமை, குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம், டூரிங்குக்கு மறுப்பு போன்ற மாபெரும் நூல்களை இவர் எழுதினார். இவை மார்க்சிய அரசியல் பொருளாதாரம் தோன்ற உதவின. மூலதனம் நூலை எழுதவும், இதை வெளியிடத் தயார்படுத்தவும் கா. மார்க்சிற்கு பி. எங்கெல்ஸ் உண்மையிலேயே மதிப்பிடற்கரிய உதவி புரிந்தார்.

மார்க்சியத்தின் மற்ற உட்பிரிவுகளைப் போன்றே மார்க்சிய அரசியல் பொருளாதாரமும் மனித சமுதாய வரலாற்றிலிருந்து விலகி நின்று தோன்றவில்லை. அது 19ஆம் நூற்றாண்டில் ஜெர்மானிய தத்துவஞானம், ஆங்கிலேய அரசியல் பொருளாதாரம், பிரெஞ்சு சோஷலிசம் ஆகியவற்றின் வடிவில் மனிதகுலம் தோற்றுவித்திருந்த தலைசிறந்த அனைத்தின் நியதியான தொடர்ச்சியாகும் என்று வி. இ. லெனின் கோடிட்டுக் காட்டினார்.*

தத்துவஞான அடிப்படை

அரசியல் பொருளாதாரத்தைத் தோற்றுவிக்கும் போது கா. மார்க்சும் பி. எங்கெல்சும் **மூலச்சிறப்புள்ள ஜெர்மானிய பூர்ஷ்வா தத்துவஞானத்தின்** மகத்தான சாதனைகளை — ஹேகலின் இயக்கவியலையும் லுட்விக் ஃபாயர்பாஹின் பொருள்முதல்வாதத்தையும் — புரட்சிகரப் பாட்டாளி வர்க்கத்தின் நிலைகளில் நின்று விமரிசன ரீதியாகப் பகுப்பாய்வு செய்து, ஆக்கபூர்வமாகப் பயன்படுத்தினார்கள்.

---

* பார்க்க: வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 1, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1979, பக்கம் 102.

மனித சமுதாய வளர்ச்சி பற்றிய விஷயத்திலும் பொருள்முதல்வாத கருத்து பரவியதானது மார்க்சிய அரசியல் பொருளாதாரம் தோன்றுவதற்கு அடிப்படை முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. ஃபாயர்பாஹின் கருத்துமுதல்வாத மற்றும் மத கண்ணோட்டங்களை மார்க்சும் எங்கெல்சும் விமரிசனம் செய்தார்கள். இயற்கையைப் புரிந்து கொள்வதில் பொருள்முதல்வாதியாக விளங்கிய ஃபாயர்பாஹ் சமுதாய வளர்ச்சி பற்றிய விஷயத்தில் கருத்துமுதல்வாதக் கண்ணோட்டத்தைக் கொண்டிருந்தார். உதாரணமாக, இவர் மனித சமுதாய வரலாற்றில் பல்வேறு கட்டங்களுக்கு இடையிலிருந்த ஒரே வேறுபாடு ஒரு மதத்திற்குப் பதில் இன்னொரு மதம் வந்ததுதான் என்று ஆணித்தரமாகக் கூறினார். அதே நேரத்தில் விஞ்ஞான கம்யூனிச ஆசான்கள், ஃபாயர்பாஹின் உலகக் கண்ணோட்டத்தின் வெறும் தியானத் தன்மையிலிருந்து மீண்டு வந்தார்கள். உலகத்தைப் பொருள்முதல்வாத ரீதியில் வியாக்கியானப் படுத்தினால் மட்டும் போதாது, இதை மாற்றவும் வேண்டும் என்று காட்டுவது இவர்களுக்கு கோட்பாட்டு ரீதியாக முக்கியமானதாக இருந்தது. இக்கருத்துநிலையும் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தில் அற்புதமாக வெளிப்பட்டது; இதன் விஞ்ஞான முடிவுகள் உலகைப் புரட்சிகரமாக மாற்றியமைக்க ஒளி காட்டி வழியமைக்கின்றன.

கா. மார்க்சும் பி. எங்கெல்சும் விமரிசன ரீதியாக, பொருள்முதல்வாத நிலைகளிலிருந்து ஹேகலின் கருத்துமுதல்வாத இயக்கவியலை பகுப்பாய்வு செய்தார்கள், ''தலைகீழாக'' இருந்த இதை ''நேராக நிமிர்த்தி'' வைத்தார்கள். ஹேகலைப் போல் இவர்கள் ''முழுமுதல் ஆன்மா'', ''முழுமுதல் கருத்தின்'' வளர்ச்சிக்கு இயக்க

வியலைப் பயன்படுத்தாமல், புறவய உலகின் வளர்ச்சிக்குப் பயன்படுத்தினார்கள். தன் இயக்கவியல் முறை ஹேகலின் முறையிலிருந்து வேறுபட்டது என்பது மட்டுமல்ல, இது அதற்கு நேர் எதிரிடையானதும் கூட என்று கா. மார்க்ஸ் எழுதினார்.* கா. மார்க்சின் பொருள் முதல்வாத இயக்கவியல் இயற்கை மற்றும் சமுதாய வளர்ச்சியில் எவ்வித வரம்புகளையும் அங்கீகரிக்க வில்லை, நிரந்தரமானதும், மாற்றப்பட முடியாததும் எதுவும் இல்லை என்கிறது, பழையதை புதியதால், அதிக முற்போக்கானதால் மாற்ற வேண்டியது அவசியம் என்கிறது. அரசியல் பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில், எந்த ஒரு பொருளாதார விதியையும் கருத் தினத்தையும் மாற்றமற்றதாக பார்க்கக் கூடாது, யதார்த்த பொருளாதார வாழ்க்கையின் நிரந்தர வளர்ச்சிக்கேற்ப இடையறாத இயக்கத்தில் இவற்றை அணுக வேண்டுமென இதற்குப் பொருள். இந்த இயக்கத்தின் மூல ஊற்று ஏதோ வெளியில் உள்ள, இயற்கைக்கு அப்பாற்பட்ட சக்திகளில் இல்லை; மாறாக, ஒவ்வொரு பொருளாதாரப் புலப்பாட்டிலும், சமுதாயத்தின் பொருளாதார அமைப்பு முழுவதிலும் உள்ள எதிர்மறைகளின் ஒற்றுமையிலும் போராட்டத் திலும்தான் இந்த மூல ஊற்று அடங்கியுள்ளது.

உலகத்தைப் பற்றிய பொருள்முதல்வாத விளக்கத் தையும் சமூகப் புலப்பாடுகளைப் பற்றிய பகுப்பாய்வின் பாலான இயக்கவியல் அணுகுமுறையையும் ஆக்கபூர்வமாக இணைத்த மார்க்சும் எங்கெல்சும் சமுதாயத்தைப் பற்றி பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த கருத்து முதல்வாத கண்ணோட்டங்களை நிராகரித்தனர், மனித

* பார்க்க: K. Marx, *Capital*, Vol. 1, p. 29.

சமுதாய வளர்ச்சி பற்றிய உண்மையான வரலாற்றைத் தோற்றுவித்தனர், பொருளாயத நலன்களைப் படைக்கும் உழைப்பாளி மக்கள் திரளினருக்கு இதிலுள்ள தீர்மான கரமான பங்கை வெளிப்படுத்தினர்.

புரட்சிகரத் தன்மையும் விமரிசனப் போக்கும்தான் இயக்கவியல் பொருள்முதல்வாத முறையின் சிறப்பு அம்சமாகும். உதாரணமாக, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை ஆராயும் போது அரசியல் பொருளாதாரம், இந்த உறவுகளையும், இதற்கு உரிய பூர்ஷ்வா பொருளாதாரத் தத்துவங்களையும் விமரிசனபூர்வமாகப் பகுப்பாய்வு செய்கிறது, பின்னால் கூறப்பட்டவை முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் முறையில் எப்படி சேவை புரிகின்றன என்று காட்டுகிறது. **மூலதனம்** நூலிலும், மார்க்சிய ஆசான்களின் மற்ற படைப்புகளிலும் பொருள் முதல்வாத இயக்கவியல் முறையை ஆதாரப்படுத்தியதும் திறமையாகப் பயன்படுத்தியதும் அரசியல் பொருளாதாரத்தில் கா. மார்க்சும் பி. எங்கெல்சும் செய்த புரட்சிகர மாற்றத்தின் ஒரு பகுதியாகும்.

கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் லட்சியங்களையும் போதனையையும் மகத்தான வழியில் பின்பற்றிய வி. இ. லெனின் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தை வளர்த்தார், புதிய வரலாற்றுச் சூழ்நிலைகளில் இதைப் புதிய மட்டத்திற்கு உயர்த்தினார். மார்க்சியத் தத்துவ ஞான அடிப்படைகளை ஆதாரமாகக் கொண்ட வி. இ. லெனின் முதலாளித்துவத்தை அதன் கடைசி, உச்சக் கட்டமாகிய ஏகாதிபத்திய கட்டத்தில் ஆராயவும் சோஷலிச மற்றும் கம்யூனிசக் கட்டுமான நியதிகளை வெளிப்படுத்தவும் இயக்கவியல் பொருள்முதல்வாத முறையை அற்புதமாகப் பயன்படுத்தினார். மார்க்சிய அரசியல் பொருளாதாரத்தை வளர்ப்பதில் புதிய

கட்டமாகத் திகழ்ந்த வி. இ. லெனினின் படைப்புகள் கா. மார்க்சுடைய **மூலதனத்தின்** நேரடியான தொடர்ச்சியாகும்.

சோஷலிசம் பற்றிய கருத்துக்கள்

தொழிலாளி வர்க்கத்தின் — முதலாளித்துவத்தைப் புரட்சிகரமாகத் தூக்கியெறிந்து, சமுதாயத்தை சோஷலிச ரீதியில் மாற்றியமைப்பதுதான் இதன் இறுதி லட்சியமாகும் — அரசியல் பொருளாதாரத்தைத் தோற்றுவித்த கா. மார்க்சும் பி. எங்கெல்சும் முந்தைய சோஷலிசப் போதனைகளை விமரிசன ரீதியாக மறுபரிசீலனை செய்தார்கள்.

18ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியிலும் 19ஆம் நூற்றாண்டின் முதல் பாதியிலும் வாழ்ந்த **மாபெரும் கற்பனாவாத சோஷலிஸ்டுகளாகிய** அன்ரீ சான்-சிமோன், ஷார்ல் ஃபூரியே, ராபர்ட் ஓவன் ஆகியோர் தம் போதனைகளில், மனிதனை மனிதன் சுரண்டுவதும் மற்ற வகையான சமூக சமமின்மைகளும் இல்லாத புதிய வகையான சமுதாயத்தை நிலைநாட்டும் நாட்டத்தை வெளிப்படுத்தினார்கள். ஆனால் இவர்கள், முதலாளித்துவத்திற்குக் குழிதோண்டி புதைத்து, புதிய சமுதாயத்தைக் கட்டுவதில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைப் புரிந்து கொள்ளவில்லை, இவர்கள் பொதுவில் வர்க்கப் போராட்டத்தையும் குறிப்பாகப் புரட்சிகர நடவடிக்கையையும் மறுத்தார்கள். இதற்காக இவர்களை விமரிசித்த மார்க்சும் எங்கெல்சும் அதே நேரத்தில் இவர்கள் முதலாளித்துவத்தின் குறைகளைக் கடுமையாகச் சாடியதையும், ஏழை — பணக்காரன், சுரண்டுபவன் — சுரண்டப்படுபவன் என்ற பாகுபாடு

கள் இல்லாத புதிய, நீதியான சமுதாயம் என்ற வகையில் சோஷலிசத்தைப் பற்றிய பிரச்சினையை முதன்முதலாக முன்வைத்ததையும் உயர்வாக மதிப்பிட்டார்கள். சோஷலிசம், கம்யூனிசம், உழைப்பவர்களுக்கு இடையிலான போட்டி, நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாடுகளை ஒழிப்பது போன்றவற்றைப் பற்றிய மேதமை மிக்க ஊகங்கள் கற்பனாவாத சோஷலிஸ்டுகளுக்குத்தான் உரித்தானவையாகும்.

சமுதாயத்தைப் பற்றிய கண்ணோட்டங்களில் வரலாற்றுவாதம்

19ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த **பிரெஞ்சு வரலாற்றாசிரியர்கள்** ஒகுஸ்தேன் தியேரீ, ஒகுஸ்ட் மின்யே, பிரான்சுவா கிஸோ ஆகியோரின் சேவைகளை கா. மார்க்ஸ் உயர்வாக மதிப்பிட்டார். இவர்கள் குறுகிய வர்க்கப் பார்வையைக் கொண்டிருந்த போதிலும் சமுதாயத்தின் வரலாற்றை மக்களினங்களின் வரலாறாக சித்தரிக்க முற்பட்டனர். வர்க்கங்கள் மற்றும் சமூகப் பிரிவினரின் உண்மை நிலை, வர்க்கங்களுடைய பொருளாதார நலன்களின் பங்கு, சமுதாய வளர்ச்சியில் சொத்துறவுகளின் பங்கு ஆகியவற்றைத் தெளிவுபடுத்துவதன் மீது முக்கிய கவனம் செலுத்தினர். அதே நேரத்தில், பூர்ஷ்வா சித்தாந்தவாதிகளாக விளங்கிய பிரெஞ்சு வரலாற்றாசிரியர்களை மார்க்சிய ஆசான்கள் விமரிசனம் செய்தனர். இந்த பிரெஞ்சு வரலாற்றாசிரியர்களால் வர்க்கங்கள் தோன்றியது பற்றிய விஞ்ஞானபூர்வமான விளக்கத்தைத் தர இயலவில்லை, இவர்கள் முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்க பகை முரண்பாடுகளை

அடக்கி மறைத்தனர், இதை மனிதகுலத்தின் இயற்கையான, நிரந்தரமான நிலை என்று கருதினர்.

கா. மார்க்சின் **மூலதனம்** நூலில் எகிப்து, பாபிலோனியா, கிரீஸ், ரோம், இந்தியா, சீனா, ஜெர்மனி, பிரான்ஸ், இங்கிலாந்து, மற்ற ஐரோப்பிய அரசுகள் ஆகியவற்றின் வரலாற்றிலிருந்து எடுக்கப்பட்ட ஏராளமான உண்மை விவரங்கள் அடங்கியுள்ளன. வரலாற்று மற்றும் தர்க்க அம்சங்களின் ஒற்றுமை பற்றிய கோட்பாட்டை ஆதாரமாகக் கொண்ட கா. மார்க்ஸ், ஏராளமான உண்மை விவரங்களைப் பகுப்பாய்வு செய்வதன் அடிப்படையில், பரவலான வரலாற்றுப் பின்னணியில் முதலாளித்துவத்தின் பொருளாதார உறவுகளை ஆராய்ச்சி செய்தார். கா. மார்க்சின் புரட்சிகரத் தத்துவம் சரியானது, எனவே சர்வ வல்லமை படைத்தது, இதற்கான முக்கியக் காரணங்களில் ஒன்று இத்தத்துவம் வரலாற்று ரீதியாக மெய்ப்பிக்கப்பட்டதாகும்.

மாபெரும் கற்பனாவாத சோஷலிஸ்டுகள் மற்றும் பிரெஞ்சு வரலாற்றாசிரியர்களின் படைப்புகளை விமரிசன ரீதியாக ஆராய்ந்த கா. மார்க்ஸ் கோட்பாட்டு ரீதியாகப் புதிய மூன்று கருத்துநிலைகளை முன்வைத்தார்: *1)* வர்க்கங்கள் நிலவுவது என்பது சமூக உற்பத்தியின் குறிப்பிட்ட வரலாற்று வடிவங்களுடன் மட்டுமே தொடர்புடையது; *2)* வர்க்கப் போராட்டம் தவிர்க்க இயலாதவாறு பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கு இட்டுச் செல்லும்; *3)* இந்த சர்வாதிகாரம் என்பது வர்க்கங்களை ஒழித்துக் கட்டி, வர்க்கங்களற்ற சமுதாயத்திற்கு மாறிச் செல்வதற்கான பாதை மட்டுமே. சமுதாயத்தின் வரலாறு, வர்க்கப் போராட்டத்தின் வரலாறு கா. மார்க்சின் இந்தப் புரட்சிகர முடிவுகளை முழுமையாக மெய்ப்பித்துள்ளது.

பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரப் போராட்டத்தின் வடிவங்கள், முறைகள், சோஷலிசப் புரட்சி, முதலாளித் துவம் தகர்ந்து வீழ்வது, கம்யூனிசத்திற்கு மாறிச் செல்லும் நியதிகள் ஆகியவற்றைப் பற்றிய மார்க்சிய போதனையின் பல கருத்துநிலைகளை ஏகாதிபத்தியச் சூழ்நிலைகளுக்கேற்ப வி. இ. லெனின் வளர்த்துச் செழு மைப்படுத்தினார். வி. இ. லெனினின் நேரடித் தலைமை யின் கீழ் உலகிலேயே முதன்முதலாக இப்போதனை மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியிலும், சோவியத் நாட்டில் சோஷலிச கட்டுமானத்திலும் நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டது. கா. மார்க்சும் பி. எங்கெல்சும் சோஷலிசத்தைக் கற்பனையிலிருந்து விஞ்ஞானமாக மாற்றினார்கள் என்றால், வி. இ. லெனின் இதை மேற்கொண்டு வளர்த்தார், இதன் புரட்சிகர லட்சியங்களை சமுதாய நடைமுறைக்குக் கொண்டு வந்தார்.

பொருளாதார ஆராய்ச்சிகளின் வரலாறு

கா. மார்க்ஸ் தன் பொருளாதார தத்துவத்தை உருவாக் கும் போது **மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளா தார** வல்லுனர்களின் படைப்புகளைப் பயன்படுத்தினார். இந்த பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில், 19ஆம் நூற்றாண்டின் ஆரம் பத்தில் ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ ஆகியோரின் படைப்புகளில் உயர் வளர்ச்சியடைந்தது. வி. இ. லெனின் மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை மார்க்சியத்தின் மூல ஊற்றுகளில் ஒன்று எனக் குறிப்பிட் டார். மார்க்சியத்திற்கு முன் அரசியல் பொருளாதாரம்

தோன்றி, வளர்ந்ததில் முக்கிய கட்டங்களைப் பார்ப் போம்.

17ஆம் நூற்றாண்டில் அரசியல் பொருளாதாரம் தனியான விஞ்ஞானமாகப் பிரிவதற்கு நீண்ட காலம் முன்னராகவே பொருளாதார வாழ்க்கையின் விஷயங் களைப் பற்றி யோசிக்க முயற்சிகள் செய்யப்பட்டன. மனிதர்கள் விவசாயம் செய்தார்கள், ஆடு மாடுகளை வளர்த்தார்கள், கைத்தொழிலில் ஈடுபட்டார்கள், சந்தை யில் தம் பண்டங்களை விற்றார்கள், மற்ற பண்டங் களை வாங்கினார்கள். இதன் மூலம் மற்ற மனிதர் களிடையே குறிப்பிட்ட பொருளாதார உறவுகள் தோன்றின. ஒரு குறிப்பிட்ட துறையில் கூட இதை எப்படி லாபகரமாக நடத்துவது, எப்படி நன்கு வேலை செய்வது, உற்பத்தி செய்தவற்றை எப்படி லாபகரமாக விற்பது என்பதையெல்லாம் அறிந்திருக்க வேண்டும். சுருங்கக் கூறின் காரியத்தை எப்படி சிக்கனமாகச் செய்வதென தெரிந்திருக்க வேண்டும். பண்டைய எகிப்தியர்கள், கிரேக்கர்கள், இந்தியர்கள், மற்ற மக்களினங்கள் பண்டம், பரிவர்த்தனை, பணம், விலை, வட்டி, வர்த்தக லாபம் போன்ற பொருளாதாரக் கருத்தினங்களை அறிந்திருந்தார்கள்.

இவையெல்லாம் முதுமொழிகள், விதிகள், புத்திமதி கள், இலக்கிய, விஞ்ஞான படைப்புகள் ஆகியவற்றில் வெளிப்பட்டன. பண்டைய எகிப்திய ஓலைச் சுவடிகள், பாபிலோனிய பேரரசன் ஹமுராப்பியின் விதிகள், இந்திய வேதங்கள், பண்டைய கிரேக்க கவி ஹோமாரின் படைப்புகள், பண்டைய கிரேக்க தத்துவஞானிகளாகிய கிசினஃபான், பிளாட்டோ, அரிஸ்டாட்டில் போன் றோரின் நூல்கள் ஆகியவற்றில் பொருளாதாரத்தைப் பற்றிய சுவாரசியமான விஷயங்களையும் கருத்துக்களை

யும் காணலாம்.

முதலில் பொருளாதார சிந்தனை, சமுதாயத்தைப் பற்றிய போதனையின் மற்ற வடிவங்களிலிருந்து தனியாகப் பிரிந்திருக்கவில்லை. பண்டைய மக்களினங்களின் பொருளாதார வாழ்க்கையைப் பற்றிய விவரங்களே மிகுந்திருந்தன, பொருளாதாரப் புலப்பாடுகளை ஆராய்ந்து, தத்துவ ரீதியாகப் பொதுமைப்படுத்துவதை முன்னனுமானிக்கும் பொருளாதார சிந்தனை கரு வடிவிலேயே இருந்தது. பொருளாதார சிந்தனையின் வரலாறு பண்டைய கிரேக்க விஞ்ஞானிகளாகிய கிசினஃபான், பிளாட்டோ, குறிப்பாக அரிஸ்டாட்டிலின் நூல்களிலிருந்து ஆரம்பமாகிறது. இவற்றில் பண்டைய கிரேக்க சமுதாயத்தின் (இது புராதனக் கூட்டுச் சமூகம் சிதறுண்டு, அடிமையுடைமை சமூக அமைப்பு உருவாகும் நிலையிலிருந்தது) பொருளாதாரத்தைத் தத்துவ ரீதியாக யோசித்து பார்க்க முதல் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, பண்டங்களின் மதிப்பு மற்றும் பரிவர்த்தனை, மூலதனத்தின் ஆரம்ப வடிவங்களாகிய வர்த்தக மற்றும் வட்டி மூலதனம் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பிடத் தக்க கருத்துக்கள் அடங்கியுள்ளன. பொருளாதார சிந்தனையின் வரலாற்றில் பண்டைய கிரேக்க விஞ்ஞானிகளின் பங்கை பி. எங்கெல்ஸ் உயர்வாக மதிப்பிட்டார். மற்ற எல்லா துறைகளையும் போன்றே இங்கும் இவர்களின் மேதமையும் தனிச் சிறப்பும் வெளிப்படுகின்றன என்றார் பி. எங்கெல்ஸ். எனவே வரலாற்று ரீதியாக இவர்களின் கண்ணோட்டங்கள் நவீன விஞ்ஞானத்தின் தத்துவ அடிப்படை நிலைகளை உருவாக்குகின்றன என்று இவர் எழுதினார்.*

* பார்க்க: பி. எங்கெல்ஸ், டூரிங்குக்கு மறுப்பு, பக்கம் 394.

முதலாளித்துவம் தோன்றி, வளர்ந்ததும், சந்தை தோன்றியதும், நிலப்பிரபுத்துவப் பிளவு அகற்றப் பட்டதும், மையப்படுத்தப்பட்ட அரசுகள் தோன்றியதும் தனிப்பட்ட துறைகள் அல்ல, பொதுத் தேசியப் பொருளாதாரத்தை நடத்தும் விதிமுறைகளை நிர்ணயிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. உதித்தெழுந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கும் அரசியல் பொருளாதாரம் தோன்றியது.

ஆரம்பத்தில் முதலாளித்துவ அமைப்பு உற்பத்தியில் அல்ல, வர்த்தகத்திலும் பணப் புழக்க நடவடிக்கைகளிலும் தான் நிலை பெற்றது. எனவே வர்த்தக மூலதனத்தின் நலன்களைப் பிரதிபலித்த **மெர்க்கன்டிலிசம்** முதல் அரசியல் பொருளாதார போதனையாக இருந்தது தற்செயலானதல்ல. பொருளாதார சிந்தனையின் இத்திசையமைவு 17ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் தோன்றியது. இது முதலில் இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய நாடுகளிலும் பின்னர் ருஷ்யாவிலும் பரவியது. வி. ஸ்தாஃபர்ட், டி. மேன் (இங்கிலாந்து), அ. செர்ரா (இத்தாலி), அ. மோன்கிரெத்யேன் (பிரான்ஸ்), அ. எல். ஓர்தின்-நஷோக்கின், இ. டி. பசஷ்கோவ் (ருஷ்யா) ஆகியோர் மெர்க்கன்டிலிசத்தின் குறிப்பிடத் தக்க பிரதிநிதிகள்.

மெர்க்கன்டிலிஸ்டுகள் வர்த்தகத்திற்கு பெரும் முக்கியத்துவம் அளித்தனர்; இவர்களுடைய கருத்தின்படி பணம், தங்கம்தான் செல்வத்தின் முக்கிய வடிவங்களாகும். இதற்கேற்றபடி இவர்கள் பொருளாதாரக் கொள்கையில் அரசிற்கு தம் சிபாரிசுகளை அளித்தனர். வியாபாரிகளின் நலன்களுக்காக அரசு பொருளாதாரத்தில் தீவிரமாகத் தலையிட வேண்டும் என்று கோரிய இவர்கள், குறைவான விலைக்கு வாங்கி அதிக விலைக்கு விற்க வேண்

டும், தீவிர வர்த்தக சமன்நிலையை அடைய வேண்டும் என்ற கோட்பாட்டை முன்வைத்தனர். இந்நோக்கத் தோடு, தங்கத்தை நாட்டை விட்டு வெளியே எடுத்துச் செல்ல விடாது, பண்டங்களுக்காகத் தங்கத்தைப் பெறுவதற்காக வெளி வர்த்தகத்தை விரிவுபடுத்த வேண்டுமென மெர்க்கன்டிலிஸ்டுகள் முன்மொழிந்தார்கள். உள்நாட்டு தொழிலுற்பத்திக்கு சலுகை தரும் கொள்கை யை அரசு பின்பற்ற வேண்டும், அதாவது ஏற்று மதிக்குச் செல்லும் பொருட்களை உற்பத்தி செய்யும் சொந்தத் தொழிற்துறையின் வளர்ச்சிக்கு ஊக்கமளித்து, தங்கம் கொடுத்து வாங்க வேண்டிய பொருட்களைக் கட்டுப்படுத்த வேண்டுமென்று இவர்கள் கருதினார்கள். மெர்க்கன்டிலிஸ்டுகளின் தத்துவங்கள் புழக்கத்தின் மேற் போக்கான சித்தரிப்பை அடிப்படையாகக் கொண் டிருந்த போதிலும், இவை உதித்தெழுந்து கொண் டிருந்த முதலாளி வர்க்கத்தின் கருத்துக்களை முதன் முதலாக தத்துவ ரீதியில் பொதுமைப்படுத்தின.

பிரெஞ்சு மெர்க்கன்டிலிஸ்டு அன்துவான் டெ மோான் கிரெத்யேன் 1615இல் **அரசியல் பொருளாதார கட்டுரை** எனும் படைப்பில் முதன்முதலாக "அரசியல் பொருளா தாரம்" என்ற சொல்லைப் பயன்படுத்தினார். அரசுப் பொருளாதாரத்தை நிர்வகித்து, செல்வத்தைப் பெருக்கு வது சம்பந்தமான ஆலோசனைகளை இவர் தந்தார். "அரசியல் பொருளாதாரம்" எனும் பெயர் மூன்று கிரேக்க சொற்களிலிருந்து தோன்றியது: "politikos" — அரசு, சமூக; "oikos" — வீடு, வீட்டு நிர்வாகம்; "nomos" — விதி, சட்டம். இது மொத்தத்தில் "அரசுப் பொருளாதார நிர்வாகச் சட்டங்கள்" என் பதைக் குறித்தது.

தன் பெயரைப் பெற்ற உடனேயே அரசியல்

பொருளாதாரம் இன்றைய ஆராய்ச்சிப் பொருளைப் பெற்று விடவில்லை. முதலில் இது வெளி வர்த்தகம், பண வெளியீடு, வரி வசூலிப்பு போன்ற அரசின் பல உள்நாட்டு, வெளிநாட்டு கொள்கைப் பிரச்சினை களின் மீது கவனம் செலுத்தியது. பல நூற்றாண்டுகளாக நிலவி வந்த ''வீட்டு நிர்வாகத்திற்கு'' மாறாக, அரசியல் பொருளாதாரம் மெர்க்கன்டிலிச காலகட்டத்தில் சாராம் சத்தில் அரசுப் பொருளாதார நிர்வாகம் பற்றிய விதிமுறைகளின் தொகுப்பாக இருந்தது.

பிரான்சுவா கேனே, ஆன் ரோபேர் ஜாக் தியூர்கோ போன்ற **ஃபிஸியோக்ராட்டுகளின்** படைப்புகளில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் மேற்கொண்டு வளர்ச்சியடைந் தது. இவர்கள் மெர்க்கன்டிலிஸ்டுகளுக்கு மாறாக பொருளாதார ஆராய்ச்சியின் மையத்தை புழக்கத் துறையிலிருந்து உற்பத்தித் துறைக்குக் கொண்டு வந்தனர். ஃபிஸியோக்ராட்டுகள் உற்பத்தித் துறையை பயிர்த்தொழிலுடன் மட்டுப்படுத்திக் கொணடாலும் இவர்கள் முதலாளித்துவ உற்பத்தியின் பகுப்பாய்விற்கான அடிப்படையை ஏற்படுத்தினர். இவர்கள் தொழிற் துறையைத் தவறாக உற்பத்தியோடு சம்பந்தமற்ற பொருளாதாரத் துறையாகக் கருதினார்கள்.

17ஆம் நூற்றாண்டிலிருந்து 19ஆம் நூற்றாண்டின் 30ஆம் ஆண்டுகள் வரை பூர்ஷ்வா அரசியல் பொருளா தாரம் முன்னோக்கிய திசையில் வளர்ந்தது. வளர்ந்து வந்த முதலாளித்துவ உற்பத்தி, வர்த்தகம் மற்றும் வங்கிகளின் தேவைகள்தான் இதற்கு முக்கியக் காரண மாகும். இச்சூழ்நிலையில் தனிப்பட்ட துறைகளின் வளர்ச்சி அல்ல, மாறாக நாடுகளின் வளர்ச்சியில் பொருளாதாரப் புலப்பாடுகள், நியதிகளைப் பகுப்பாய்வு செய்ய வேண்டி யிருந்தது, மற்ற நாடுகளுடனான இவற்றின் பொருளா

தார உறவுகளின் கோட்பாடுகளை நிர்ணயிக்க வேண்டியிருந்தது, அரசின் புதிய பங்கை (இது இப்போது முதலாளி வர்க்கத்தின் செல்வத்தைப் பாதுகாத்ததோடு கூட இதைப் பெருக்கவும் உதவியது) தெளிவுபடுத்துவதும் அவசியமாகியது.

இக்கட்டத்தில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் ஆங்கிலேயர் வில்லியம் பேட்டியும், பிரெஞ்சு நாட்டைச் சேர்ந்த பியேர் புவாகில்பேரும் பெரும் பங்காற்றினர். இவர்கள் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தை முதன்முதலாக முன்வைத்தார்கள். இவர்கள் தான் **மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின்** ஆரம்பகர்த்தாக்கள். இது பின்னால் ஆங்கிலேய பொருளாதார நிபுணர்கள் ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோவின் படைப்புகளில் உயர் வளர்ச்சி பெற்றது.

முதலாளி வர்க்கம் முன்னோக்கி வளர்ந்து கொண்டிருந்த வர்க்கமாக இருந்த வரலாற்று கட்டத்தில், இது நிலப்பிரபுத்துவத்திற்கு எதிராகப் போராடிக் கொண்டிருந்த போது, கூலியுழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் இன்னமும் கூர்மையடையாத போது மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரப் போக்கின் பிரதிநிதிகள் முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலித்தனர். அக்கட்டத்தில் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள், நிலப்பிரபுத்துவத்திற்கு மாற்றாக வந்து கொண்டிருந்த முதலாளித்துவ சமுதாயத்தில் இயற்கைக்கும் மக்களின் நலன்களுக்கும் ஏற்ற முற்போக்கான, விவேகமான சமுதாய அமைப்பைக் கண்டார்கள். எனவே பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் முதலாளித்துவப் பொருளாதாரத்தை நேர்மையாகப் பகுப்பாய்வு செய்வதிலும், இதன் வளர்ச்சி நியதிகளைக் கண்டுபிடிப்பதிலும் இன்னமும்

அக்கறை கொண்டிருந்தார்கள், இதில் கணிசமான விஞ்ஞான முடிவுகளுக்கு வந்தார்கள்.

மெர்க்கன்டிலிஸ்டுகளுக்கு மாறாக மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் பிரதிநிதிகள், அரசின் வரிவசூலிப்பு மற்றும் வர்த்தகக் கொள்கையோடு தொடர்புடைய பொருளாதாரப் புலப்பாடுகளை மேற்போக்காகச் சித்தரிப்பதிலிருந்து உற்பத்தி மற்றும் இதன் வளர்ச்சியின் உள் நியதிகளை ஆராயத் துவங்கினர். ஃபிஸியோக்ராட்டுகளின் குறுகிய தன்மையைக் கடந்த இவர்கள் விவசாயத் துறையோடு கூட முக்கியமாகத் தொழிற்துறை உற்பத்தியையும் ஆராய்ந்தனர். பொருளாயத உற்பத்திதான், உழைப்புதான் ''மக்களின் செல்வத்திற்கான'' மூல ஊற்று என்று இவர்கள் நிலைநாட்டினர், இதன் மூலம் உழைப்பளவு மதிப்புத் தத்துவத்தின் அடிப்படைகளை ஏற்படுத்தினர். இவர்களுடைய தத்துவத்தின்படி குறிப்பிட்ட விகிதத்தில் ஒரு பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படும் இன்னொரு பண்டத்தின் மதிப்பு இதை உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்பட்ட உழைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.

மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரப் போக்கின் பிரதிநிதிகளால், குறிப்பாக ஆடம் ஸ்மித்தாலும் டேவிட் ரிக்கார்டோவாலும் முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சியின் உள், ''இயற்கை'' விதிகளைக் கண்டுபிடிக்க முடிந்தது, முதலாளிகள், வர்த்தகர்கள், வங்கியதிபர்கள், நிலவுடைமையாளர்களின் செல்வத்திற்கான உண்மையான மூல ஊற்றைக் கண்டுபிடிப்பதில் இறங்க முடிந்தது. முதலாளித்துவ பட்டறைகள், தொழிற்சாலைகள், ஆலைகள், வயல்கள், பண்ணைகளில் தொழிலாளர்களின் உழைப்புதான் இந்த மூல ஊற்றாகும் என்று இவர்

களுடைய தத்துவம் கூறியது. இந்த விஷயத்தில் டேவிட் ரிக்கார்டோ — இவருடைய தனிச் சிறப்புடைய படைப்புகளுடன் மூலச்சிறப்புள்ள போக்கு முடிவு பெறுகிறது — மற்றவர்களை விட வெகு தூரம் முன் சென்றார். இவர் முதலாளித்துவ சமுதாயத்தின் வர்க்கக் கட்டமைவைச் சுட்டிக் காட்டினார், பாட்டாளி வர்க்கம் மற்றும் முதலாளி வர்க்கத்தின் பொருளாதார நலன்கள் எதிரெதிரானவை — இவர் இவற்றை ''இயற்கை'' என்று கருதினார் — என்று காட்டினார்.

மூலச்சிறப்புள்ள அரசியல் பொருளாதாரப் போக்கின் கருத்துக்கள் (இவை வளர்ந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தின் பதாகையாகத் திகழ்ந்தன) இங்கிலாந்து, பிரான்ஸ், ஜெர்மனி, ருஷ்யா, இன்னும் பிற நாடுகளில் பரவின. அரசியல் பொருளாதாரத்தைப் பல்கலைக் கழகங்களில் போதிக்கத் துவங்கினர், இதை அறிந்திருப் பது பாடத்திட்டத்தின் அவசியமான அம்சமாகக் கருதப் படலாயிற்று.

ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோவின் படைப்பு களில் இவர்களுடைய சிந்தனைகளின் ஆழமும் புதுமை யும் மட்டுமின்றி, இவர்கள் முன்வைத்த சில சிபாரிசு களும் — இவை அக்காலத்திற்குத் துணிவானவையாக இருந்தன — கவனத்தைக் கவர்ந்தன. உதாரணமாக, தொழிற்துறை உற்பத்தியை ஒழுங்கமைத்து, நடத்து வதில் கில்டுக் காலவரையளவுகளை அகற்றுவது, உழைப்பவர்கள் இடம் விட்டு இடம் செல்லவும் இவர் களை வேலைக்கமர்த்தவும் சுதந்திரம், நிலத்தை வாங்கி விற்கும் சுதந்திரம், வெளி வர்த்தக சுதந்திரம், நாட்டின் உள்ளே பண்ட புழக்கத்தில் வரிகளை ரத்து செய்தல் போன்றவை இவர்கள் கூறிய சில சிபாரிசு களாகும். சாராம்சத்தில் நிலப்பிரபுத்துவ மற்றும்

கில்டு வரம்புகளை அகற்றுவது, முதலாளித்துவ உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் வளர்ச்சிக்கு முழு சுதந்திரம் அளிப்பதைப் பற்றிய கோரிக்கைகளின் தொகுப்பாகத் திகழ்ந்த இச்சிபாரிசுகளை, வளர்ந்து வந்த முதலாளி வர்க்கம் உற்சாகத்துடன் ஏற்றுக்கொண்டது.

ஆனால் தம் பூர்ஷ்வா மட்டுப்பாடுகளின் விளைவாய் ஆடம் ஸ்மித்தும் டேவிட் ரிக்கார்டோவும் முதலாளித் துவத்தை நிரந்தரமான, ஒரே விவேகமான, முழுமை பெற்ற சமூக அமைப்பாக, மனிதனின் இயற்கைக்கு முற்றிலும் ஏற்ற அமைப்பாகக் கருதினார்கள். இது வரலாற்று ரீதியாக தற்காலிகமானது என்பதையும் இதன் சமூக வேர்களையும் வர்க்கப் போராட்டத்தையும் இவர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை.

உண்மையான **விஞ்ஞானபூர்வமான பாட்டாளி வர்க்க அரசியல் பொருளாதாரம்** கா. மார்க்சாலும் பி. எங்கெல் சாலும் தோற்றுவிக்கப்பட்டது. இதன் தோற்றம் பொருளாதார விஞ்ஞானத்தில் ஒரு புரட்சியைக் குறித்தது. விஞ்ஞான கம்யூனிசத்தின் ஆசான்கள் முற்போக்கான, இறுதி வரை புரட்சிகரமான வர்க்க மாகிய பாட்டாளி வர்க்கத்தின் நோக்கு நிலையிலிருந்து பொருளாதாரத் தத்துவத்தின் முக்கியப் பிரச்சினை களைப் புதிய வகையில் தீர்த்தனர், அரசியல் பொருளா தாரத்தின் ஆராய்ச்சிப் பொருளை விஞ்ஞான ரீதியாக நிர்ணயித்தனர். எங்கெல்லாம் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் புலப்பாடுகளின் இடையே மேற்போக்காக பொருட்களின் இயக்கத்தை மட்டும் பார்த்தார்களோ அங்கெல்லாம் இவர்கள் இயக்கவியல் பொருள்முதல்வாத முறையை பயன்படுத்தி, மனிதர்களுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை — இவைதான் எல்லா சமூக உறவுகளின் அடிப்படையாகத் திகழுகின்றன — தனியே

பிரித்து ஆராய்ந்தனர்.

உண்மைக்குப் புறம்பாக பல பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் வரலாற்றியலாளர்களும் கா. மார்க்சை ரிக்கார்டோவின் சீடர் என்றும் ஃபாயர்பாஹ், ஹேகலின் வழிவந்தவர் என்றும் ஃபூரியே, ஓவன், சான்-சிமோனின் சீடர் என்றும் கூறுகின்றனர். ஆனால் இவர் தன் ஆசான்களை விடப் பன்மடங்கு உயர்ந்து நின்ற மேதமை மிக்க சீடராவார், இவர் புதிய வரலாற்று சகாப்தத்திற்கு, கம்யூனிசத்திற்குப் பாதையை சுட்டிக் காட்டினார். மூலச்சிறப்புள்ள போக்கின் பிரதிநிதி களுடன் ஒப்பிடுகையில் கா. மார்க்ஸ் அரசியல் பொருளா தாரத்தில் ஆற்றிய கோட்பாட்டு ரீதியான புதிய பங்கை சுருக்கமாகச் சொல்லக் கூட இந்நூலில் இடமில்லை. ஏனெனில் முதலாளித்துவ உற்பத்தியின் சாரத்தைப் பற்றிய ஒரு சில முக்கியத் தத்துவார்த்தக் கருத்துநிலை களை ஆ. ஸ்மித்தும் டே. ரிக்கார்டோவும் தொட மட்டுமே செய்தார்கள், இவர்களால் தமது பூர்ஷ்வா சிந்தனையிலிருந்து முழுமையாக விடுபட இயலவில்லை. இக்கருத்துநிலைகள் இவர்களைப் பொறுத்த மட்டில் ''மேதமை மிக்க ஊகங்களாக'' மட்டுமே இருந் தனவெனில் கா. மார்க்ஸ் இவற்றைப் பன்முக ரீதியாக ஆதாரப்படுத்தி, வெளிப்படுத்தினார்.

மார்க்சியத்தை தோற்றுவித்து, அரசியல் பொருளா தாரத்தை விஞ்ஞானமாக மாற்றி, இதன் மூலம் இதை சமுதாயத்தின் முன்னணி வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கத்திற்கு சேவை புரியும்படி செய்யும் வாய்ப்பை கா. மார்க்சிற்கு அளித்த இரண்டு மாபெரும் கண்டுபிடிப்பு களை பி. எங்கெல்ஸ் விசேஷமாகச் சுட்டிக் காட்டு கிறார். வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்தும் உபரி மதிப்புத் தத்துவமும்தான் இந்தக்

கண்டுபிடிப்புகளாகும்.

வி. இ. லெனின் உபரி மதிப்பு பற்றிய போதனையை மார்க்சியத்தின் கோடிக்கல் என்றார். இது தற்செயலானதல்ல. உபரி மதிப்பைக் கண்டுபிடித்ததும், இது எந்த வடிவத்தில் வெளிப்பட்டாலும் (இது லாபமாக, வட்டியாக, நில வாடகையாக வெளிப்படுகிறது) அதன் சாரத்தை ஆராய்ந்ததும்தான் இவ்வடிவங்களுக்குப் பின் மறைந்திருந்த முதலாளித்துவத்தின் அடிப்படை விதியை — உபரி மதிப்பு விதியை — கண்டுபிடிக்க மார்க்சிற்கு உதவின. முதலாளித்துவ உற்பத்தியின் லட்சியத்தையும் இதை அடையும் வழிகளையும் இது வெளிப்படுத்துகிறது. இதன் மூலம் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலிருந்த சமரசப்படுத்த இயலாத வர்க்க முரண்பாடுகளின் பொருளாதார அடிப்படை கண்டுபிடிக்கப்பட்டது. முதலாளித்துவ சுரண்டல் முறையை அம்பலப்படுத்திய உபரி மதிப்பு பற்றிய போதனை, மார்க்சிய பொருளாதார தத்துவத்திற்கும் (முதலாளித்துவத்தை புதிய சமுதாய அமைப்பாகிய சோஷலிசத்தால் மாற்றுவது தவிர்க்க இயலாதது என்பதற்கான விஞ்ஞான நிரூபணம் இதில் அடங்கியுள்ளது) பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்திற்கும் (முதலாளித்துவத்தை நியாயப் படுத்தி இதைப் பேணிக் காப்பதுதான் இதன் லட்சியம்) இடையில் ஒரு கோட்பாட்டு ரீதியான எல்லைக்கோட்டை போட்டது.

முதலாளித்துவம் பிறந்து, வளர்ந்து, அழிவது பற்றிய பொருளாதார விதிகளை கா. மார்க்ஸ் கண்டுபிடித்தார். முதலாளித்துவம் மற்றும் வர்க்கப் போராட்டத்தின் வளர்ச்சிப் போக்கு முழுவதும் சோஷலிசப் புரட்சிக்கான பொருளாயத மற்றும் அகநிலை முன்நிபந்தனைகளைத் தயார்படுத்துகின்றது என்று இவர்

காட்டினார். பெரும் இயந்திர உற்பத்தியின் வளர்ச்சியும் முதலாளி வர்க்கத்திற்குக் குழி தோண்டி புதைக்கப் போகும் தொழிலாளி வர்க்கத்தின் எண்ணிக்கை அதிகரிப்பும் ஸ்தாபன ஒற்றுமை வளர்ச்சியும் இப்புரட்சியைத் தவிர்க்க இயலாததாக ஆக்குகின்றன. இவ்வாறாக, முதலாளித்துவம் மடிந்து, சோஷலிசம் வெற்றி பெறுவது வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாதது என்பதற்கான பொருளாதார மற்றும் அரசியல் ஆதாரங்களை கா. மார்க்ஸ் அளித்தார். முதலாளித்துவத்திற்கு சவக்குழி தோண்டி, சோஷலிச சமுதாயத்தைப் படைக்கப் போகிறவன் என்ற வகையில் பாட்டாளி வர்க்கத்தின் வரலாற்றுப் பாத்திரத்தைத் தெளிவுபடுத்தியதுதான் கா. மார்க்சின் போதனையில் முக்கிய அம்சமாகும்.

மார்க்சின் மாபெரும் நூல்

மனித சமுதாயத்தின் வளர்ச்சி பற்றிய கண்ணோட்டங்களில் உண்மையான புரட்சியை ஏற்படுத்தி, அரசியல் பொருளாதாரத்திற்கு விஞ்ஞான அடிப்படையைத் தந்த கா. மார்க்சின் முக்கியப் படைப்பு **மூலதனம்** நூலாகும். தத்துவஞான மற்றும் வரலாற்று படைப்பாகத் திகழும் இந்நூல் முக்கியமாகப் பொருளாதாரப் போதனையை ஆதாரப்படுத்துவதற்கும் முதலாளித்துவ வளர்ச்சியின் பொருளாதார விதியை — உபரி மதிப்பு விதியை — கண்டுபிடிப்பதற்கும் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

உண்மையான கலைக்களஞ்சிய அளவுகளைக் கொண்டுள்ள இப்படைப்பில் கா. மார்க்ஸ் முதலாளித்துவத்தை ஒரு உயிரோட்டமுள்ள சமூக-பொருளாதார அமைப்பாக, அதன் பொருளாதார உறவுகள், எதிரெதிராக நின்ற முக்கிய வர்க்கங்களாகிய பாட்டாளி வர்க்கத்திற்

கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான பகை முரண்பாடு, முதலாளிகளின் நலன்களைப் பாதுகாக்கும் பூர்ஷ்வா அரசியல் மேல்கட்டுமானம், சுதந்திரம், சமத்துவம் பற்றிய பூர்ஷ்வா கருத்துக்கள், பூர்ஷ்வா குடும்ப, வீட்டு, மற்ற உறவுகள் ஆகியவற்றோடு சேர்த்து ஆராய்ந்தார்.

இந்நூலை தன் வாழ்க்கை லட்சியமாகக் கருதிய கா. மார்க்ஸ், 19ஆம் நூற்றாண்டின் 40ஆம் ஆண்டு களிலிருந்து தன் வாழ்நாள் இறுதி வரை (1883), அதாவது கிட்டத்தட்ட 40 வருடங்கள் இதை எழுதும் பணியில் ஈடுபட்டிருந்தார். மார்க்ஸ் உயிரோடிருந்த போது இந்நூலின் முதல் தொகுதி மட்டுமே (1867) வெளிவந்தது. **மூலதனம்** நூலின் மற்ற தொகுதிகள் முடிக்கப்படாமலேயே இருந்தன. இந்நூலை எழுதுவதிலும் வெளியிடுவதிலும் பி. எங்கெல்ஸ் பெரும் உதவி புரிந்தார். மார்க்ஸ் இறந்த பின், அடுத்த இரண்டு தொகுதிகளை முடித்து, அச்சிற்குத் தயார்படுத்த இவர் பதினோரு ஆண்டுகளைச் செலவிட்டார். **மூலதனம்** நூலின் இரண்டாவது தொகுதி 1885ஆம் ஆண்டும், மூன்றாவது தொகுதி 1894ஆம் ஆண்டும் வெளிவந்தன. இந்த மகத்தான படைப்பை உயர்வாக மதிப்பிட்ட வி. இ. லெனின், **மூலதனம்** நூலின் இரண்டாவது தொகுதியும் மூன்றாவது தொகுதியும் மார்க்ஸ், எங்கெல்ஸ் இருவரின் உழைப்பையும் உள்ளடக்கியுள்ளன என்று குறிப்பிட்டார். *

மூலதனம் நூலின் 4வது தொகுதியை அச்சிற்குத் தயார்படுத்த எங்கெல்சால் முடியவில்லை. இவர் 1895இல்

* பார்க்க: வி. இ. லெனின், **மார்க்சியத்தின் வரலாற்று வளர்ச்சியின் சில சிறப்பியல்புகள்**, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1985, பக்கம் 95.

இயற்கை எய்தினார். இது 1905—1910இல் கார்ல் கவுத்ஸ்கியால் முதன்முதலாக வெளியிடப்பட்டது. ஆனால் இவர் இதில் தன்னிச்சையாகத் திருத்தங்களைச் செய்திருந்தார், மார்க்சியத்தின் பல முக்கியக் கருத்து நிலைகள் இதனால் திரிக்கப்பட்டிருந்தன. எனவே சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சி மத்திய கமிட்டியின் கீழுள்ள மார்க்சிய-லெனினிய ஆராய்ச்சிக் கல்லூரி, கா. மார்க்சின் கையெழுத்துப் பிரதிகளில் அடங்கியிருந்த தத்துவார்த்த அம்சங்கள் அனைத்தையும் கவனமாகக் காத்து, 1954—1961ஆம் ஆண்டுகளில் 4வது தொகுதியை மூன்று பாகங்களாக வெளியிட்டது.

கா. மார்க்ஸ் எழுதிய **மூலதனம்** நூலின் முதல் தொகுதி மூலதன உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கைப் பகுப்பாய்வு செய்யவும், இரண்டாவது தொகுதி மூலதன சுற்றோட்ட நிகழ்ச்சிப் போக்கின் பகுப்பாய் விற்கும், மூன்றாவது தொகுதி மொத்தமாக முதலாளித்துவ உற்பத்தியைப் பகுப்பாய்வு செய்யவும் அர்ப் பணிக்கப்பட்டுள்ளன. நான்காவது தொகுதி — ''உபரி மதிப்பின் தத்துவம்'' —வரலாற்று, வரலாற்று-விமரிசன, வரலாற்று-இலக்கியப் பகுதியாகும். ''அரசியல் பொருளா தார விமரிசனம்'' எனும் **மூலதனம்** நூலின் துணை தலைப்பு இதன் உள்ளடக்கத்திற்கு முற்றிலும் பொருந்தி வருகிறது. இதில் முதலாளித்துவ இயக்க விதி வெளிப் படுத்தப்படும் அதே நேரத்தில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் விமரிசனமும் தரப்பட்டுள்ளது. இது, முதலாளி வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்தில் பாட்டாளி வர்க்கத்தை தத்துவ ரீதியாக ஆயுதந்தரிப்பது எனும் மார்க்சின் கடமைக்கு முற்றிலும் ஏற்றதாயிருந் தது. **மூலதனம்** நூல் முதலாளி வர்க்கத்தின் தலையில் விழுந்த மிகப் பயங்கரமான குண்டு ஆகும் என்று

பி. எங்கெல்ஸ் சரியாகக் குறிப்பிட்டார்.

இந்நூலின் முதல் அன்னிய மொழிபெயர்ப்பு (1872இல்) ருஷ்ய மொழியில் வெளிவந்தது. மார்க்சியத்தின் பொருளாதாரக் கொள்கை ருஷ்யாவில் நல்ல அடித்தளத்தைப் பெற்றது, விரைவிலேயே வேர் விட்டு விரிந்து பரந்தது.

மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள்

அரசியல் பொருளாதாரம் விஞ்ஞானமாக மாறியதானது இதன் ஆராய்ச்சிப் பொருள் பற்றிய துல்லியமான வரையறுப்புடன் பிரிக்க முடியாதபடி தொடர்புடையதாக இருந்தது. இதுவரை கூறியதிலிருந்து இந்த ஆராய்ச்சிப் பொருளைப் பற்றிய கருத்து ஓரளவு கிடைத்துள்ளது. இது இதன் சாரத்தை இன்னமும் ஆழமாகப் புரிந்து கொள்ள உதவும்.

மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளின் முக்கிய அம்சங்களைப் பின்வருமாறு சுருக்கமாக விளக்கலாம்.

முதலில், மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் உற்பத்தியின் தொழில்நுட்ப அம்சங்களை ஆராயவில்லை (இது இயற்கை மற்றும் தொழில்நுட்ப விஞ்ஞானங்களின் ஆராய்ச்சிப் பொருள்), மாறாக, உற்பத்தியின் சமூக அம்சத்தை ஆராய்கிறது. இது பொருளாயத உற்பத்தியை அப்படியே ஆராயவில்லை; இது உற்பத்தியின் போது மனிதர்களிடையே உருவாகும் சமூக உறவுகளை, உற்பத்தியின் சமூக அமைப்பை — வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு உறவுகளை,

அதாவது பொருளாயத நலன்களின் புனருற்பத்தியின் எல்லா கட்டங்களிலும் — ஆராய்கிறது.

இரண்டாவதாக, மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் உற்பத்தி உறவுகளை உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியுடன் நெருக்கமாகத் தொடர்பு படுத்தி, இவற்றுடனான பரஸ்பரச் செயலாக்கத்தில் ஆராய்கிறது. அரசியல் பொருளாதாரம் உற்பத்திச் சக்திகளை தொழில்நுட்ப நோக்கிலிருந்து அல்ல, உற்பத்தி உறவுகளுடனான ஒற்றுமையிலும் பரஸ்பரச் செயலாக்கத்திலும், அதாவது உற்பத்தி முறையில் இவை வகிக்கும் இடத்தின் நோக்கு நிலையிலிருந்து ஆராய்கிறது. உதாரணமாக, இயந்திரம் என்பதே ஒரு குறிப்பிட்ட உழைப்புக் கருவியாகும் என்றாலும் இது ஒரு பொருளாதார கருத்தினம் அல்ல. ஆனால் இதை ஒரு சொத்தாகப் பார்த்தால் உற்பத்தியில் இதைப் பயன்படுத்துவதானது, மனிதர்களிடையே நிலவும் குறிப்பிட்ட பொருளாதார உறவுகளுடன் தொடர் புடையது. இந்த உறவுகளைத்தான் அரசியல் பொரு ளாதாரம் ஆராய்கிறது. எனவே உற்பத்தி உறவு கள், உற்பத்திச் சக்திகளுடன் சேர்ந்து, இவற்றின் வளர்ச்சியின் பொருளாதார வடிவங்களாக ஆராயப் படுகின்றன.

மூன்றாவதாக, மார்க்சிய-லெனினிய அரசியல் பொரு ளாதாரம் உற்பத்தி உறவுகளையும் சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தையும் உற்பத்திச் சக்தி களுடனான பரஸ்பரச் செயலாக்கத்தின் பின்னணியில் மட்டுமின்றி இந்த அடித்தளத்தின் மீது எழும் மேல்கட்டு மானத்துடன் இணைத்தும் ஆராய்கிறது. பொருளா தார அடித்தளம்தான் மேல்கட்டுமானத்தை நிர்ணயிக் கிறது என்றாலும் நாம் ஏற்கெனவே கூறியபடி இந்த

மேல்கட்டுமானம் பொருளாதார அடித்தளத்தின் வளர்ச்சியை துரிதப்படுத்தியோ, மந்தப்படுத்தியோ அதன் மீது தன் தாக்கத்தையும் செலுத்துகிறது. உதாரணமாக, நவீன அரசு-ஏகபோக முதலாளித்துவம், உழைப்பாளிகளைச் சுரண்டுவதை அதிகப்படுத்தவும், உழைப்பிற்கும் மூலதனத்திற்கும் இடையிலான முரண்பாடு களைக் குறைக்கவும், முதலாளித்துவ அமைப்பை வலுப்படுத்தவும் உற்பத்தி உறவுகளில் தீவிரமாகத் தலையிடுகிறது. இத்தலையீட்டின் சாரத்தையும் வடிவங் களையும் ஆழமாகப் புரிந்து கொள்ளாமல் நவீன முதலாளித்துவ சமுதாயத்தின் பல ஆழமான பொரு ளாதார, அரசியல் புலப்பாடுகளை விளக்க முடியாது.

இறுதியாக, மார்க்சிய-லெனினிய அரசியல் பொரு ளாதாரம், இடையறாது வளர்ந்து வரும் சமுதாயத்தை ஆராயும் வரலாற்று விஞ்ஞானமாகும். இது மனித சமுதாயம் ஒரு உற்பத்தி முறையிலிருந்து இன்னொரு உற்பத்தி முறைக்கு மாறும் நியதிகளைப் பயிலுகிறது. இங்கே முதலாளித்துவம், மனிதனை மனிதன் சுரண்டு வதன் அடிப்படையிலான மற்ற பகை முரண்பாட்டு சமுதாயங்களின் உற்பத்தி உறவுகளின் தோற்றம், வளர்ச்சி, வீழ்ச்சி, மறைவு ஆகியவை ஆராயப்படு கின்றன.

அரசியல் பொருளாதாரம் ஐந்து உற்பத்தி முறை களின் வரலாற்றை ஆராய்கிறது, சமூக உற்பத்தி எப்படி கீழ் மட்டங்களிலிருந்து மேல் மட்டங்களை நோக்கி வளருகிறது என்று ஆராய்கிறது, சுரண்டலை அடிப்படையாகக் கொண்ட சமூக அமைப்புகள் எப்படி தோன்றி, வளர்ந்து பின் அழிகின்றன என்று ஆராய்கிறது. வரலாற்று வளர்ச்சியின் போக்கு முழுவதும் சோஷலிசம் மற்றும் கம்யூனிசத்தின் வெற்றியை எப்படித் தயார்

படுத்துகின்றது என்று இது காட்டுகிறது. மனித சமுதாயத்தின் முற்போக்கான வளர்ச்சியைத் தடுத்து நிறுத்தவோ, இதைப் பின்னோக்கித் திருப்பவோ செய்யப்படும் முயற்சிகள் தோல்வியடைவது திண்ணம்.

முதலில் அரசியல் பொருளாதாரம் முதலாளித் துவத்தின் அரசியல் பொருளாதாரமாக, அதாவது இதன் குறுகிய பொருளில் தோன்றியது. இது தற்செயலானதல்ல. ஏனெனில் ஐரோப்பாவில் முதலாளித்துவ உற்பத்தி உருவாகிய காலகட்டத்தில்தான் அரசியல் பொருளா தாரம் பொருளாதார விஞ்ஞானத்தின் தனிப் பகுதியாக நிலைபெற்றது. எனவே இதன் வரலாற்று எல்லைகள் முதலாளித்துவத்துடன், குறிப்பாகப் பண்ட-முதலாளித்துவ உறவுகளுடன் நின்று விடுகின்றன எனும் ஒரு தவறான கருத்து தோன்றியது. இதன் தொடர்பாக சோஷலிசத் தில் அரசியல் பொருளாதாரத்தின் எதிர்காலத்தைப் பற்றியும் தவறான கருத்துக்கள் கூறப்பட்டன. திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதாரத்தில், உற்பத்தி உறவுகள் ''தெட்டத் தெளிவானவையாக'' மாறும் போது அரசியல் பொருளாதாரம் ஒரு விஞ்ஞானம் என்ற வகையில் தேவையில்லை என்று கருதப்பட்டது. எனவே இதை வேறொரு விஞ்ஞானத்தால், உதாரணமாக, உற்பத்திச் சக்திகளை விவேகமாக ஒழுங்கமைக்கும் விஞ்ஞானத்தால் மாற்றலாம். இப்படிப்பட்டதொரு கருத்துநிலை சாராம்சத்தில், சோஷலிசத்தில் புறவய பொருளாதார விதிகள் நிலவுவதையே மறுப்பதைக் குறித்தது. பொருளாதார விதிகள் கண் பார்வை யிலிருந்து மறையும் போது பொருளாதார விஞ்ஞானத் தின் ஆராய்ச்சிப் பொருளும் மறைகிறது.

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளின் வரலாற்று வரம்புகள் காலப் போக்கில் விரிவடைந்தன.

பரவலான பொருளில் அரசியல் பொருளாதாரம் தோன்றியது. இது புராதனக் கூட்டுச் சமூக உற்பத்தி முறையிலிருந்து கம்யூனிச உற்பத்தி முறை வரை எல்லா உற்பத்தி முறைகளையும் தழுவியதாயிருந்தது. "பல்வேறு மனித சமுதாயங்கள் எதன் கீழ் தமது விளைபொருட்களை உற்பத்தி செய்தும் பரிவர்த்தனை செய்தும் இதன் அடிப்படையில் வினியோகம் செய்தும் வந்துள்ளனவோ அந்த நிலைமைகள் மற்றும் வடிவங்களைப் பற்றிய" * விஞ்ஞானம்தான் அரசியல் பொருளாதாரம் என்று பி. எங்கெல்ஸ் வரையறுத்தார். பரவலான பொருளில் அரசியல் பொருளாதாரத்தின் தோற்றம் குறிப்பாக கா. மார்க்ஸ், பி. எங்கெல்சின் படைப்புகளுடன் தொடர்புடையதாகும். **மூலதனம்** நூலில் முதலாளித்துவம்தான் ஆழ்ந்து ஆராயப்பட்டாலும், முதலாளித்துவத்திற்கு முந்தைய பொருளாதார வடிவங்களாகிய நிலப்பிரபுத்துவம், அடிமையுடைமை, புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு ஆகியவற்றையும் மார்க்ஸ் சித்தரித்து, இவற்றிற்கு இருந்த பொது அம்சங்களையும் வேறுபாடுகளையும் கோடிட்டுக் காட்டுகிறார். ஒன்றிணைந்த உற்பத்தியாளர்களின் எதிர்கால கம்யூனிச சமுதாயத்தில் பொருளாதார உறவுகளின் சாரம் பற்றிய விஞ்ஞான கணிப்புகளையும் இவர் தருகிறார். **மூலதனம்** நூல் முதலாளித்துவ உற்பத்தி முறை பற்றிய அடிப்படை ஆராய்ச்சி மட்டுமல்ல. சாராம்சத்தில் பார்த்தால் இது உண்மையான அரசியல் பொருளாதாரக் கலைக் களஞ்சியமுமாகும், இதில் எல்லா சமூக-பொருளாதார அமைப்புகளையும் பற்றிய அடிப்படைக் கருத்துநிலைகள் அடங்கியுள்ளன.

---

* பி. எங்கெல்ஸ், **டூரிங்குக்கு மறுப்பு**, பக்கம் 261.

பரவலான பொருளில் அரசியல் பொருளாதாரம் தோன்றி வளர்ந்ததில் வி. இ. லெனினுக்குப் பெரும் பங்குண்டு. இவருடைய **ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி** எனும் நூலும் மற்ற படைப்புகளும் வளம் மிகு ஞானக் களஞ்சியமாகும்; இவற்றில் நிலப்பிரபுத்துவ பண்ணையடிமை பொருளாதாரம், சிறு பண்ட உற்பத்தி, ருஷ்யாவிலும் மற்ற நாடுகளிலும் முதலாளித்துவ வளர்ச்சிப் போக்கு ஆகியவற்றைப் பற்றிய ஆழமான பகுப்பாய்வு அடங்கியுள்ளது. வி. இ. லெனின் முதலாளித்துவ உற்பத்தி முறையைப் பன்முக நோக்கில் ஆராய்ந்ததோடு கூட முதலாளித்துவத்தின் உச்ச மற்றும் கடைசி கட்டமாகிய ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவத்தையும் தோற்றுவித்தார். கம்யூனிச உற்பத்தி முறையின் அரசியல் பொருளாதார அடிப்படைகளை உருவாக்கியது வி. இ. லெனினின் மகத்தான சேவையாகும்.

பரவலான பொருளில் அரசியல் பொருளாதாரம் என்பது ஒரே ஆராய்ச்சிப் பொருளையும், ஒரே ஆராய்ச்சி முறையையும் கொண்ட ஒரு பொது விஞ்ஞானமாகும். ஒரு குறிப்பிட்ட உற்பத்தி முறையின் உற்பத்தி உறவுகள், பொருளாதாரக் கருத்தினங்கள் மற்றும் விதிகளைப் பற்றிய இதன் முடிவுகள் இந்த உற்பத்தி முறை நிலவும் எந்த ஒரு வரலாற்று கட்டத்திற்கும், எந்த ஒரு நாட்டிற்கும் பொருந்தி வரும். எனவே ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகள், ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க வளர்முக நாடுகள், ஐரோப்பிய, ஆசிய, லத்தீன் அமெரிக்க சோஷலிச நாடுகள் ஆகியவற்றிற்காக தனித்தனி அரசியல் பொருளாதாரங்கள் கிடையாது என்பது தெளிவு.

மார்க்சியத்தை ''நிராகரிக்க'' முயலும் பல நவீன ஆசிரியர்கள், இந்த போதனை ஏதோ மேற்கு ஐரோப்பிய

நாடுகளுக்கு மட்டுமே பொருந்தி வரும், முதலாளித்துவ உறவுகள் இன்னமும் அதிக வளர்ச்சியடையாத உலகின் பெரும் பகுதியின் வளர்ச்சியின் சிறப்பியல்புகளை இது பிரதிபலிக்கவில்லை என்று கூறி வரும் சூழ்நிலையில் மேற்கூறிய அம்சத்தை விசேஷமாகக் கோடிட்டுக் கூற வேண்டும். இப்படிப்பட்ட கூற்றுகள் மார்க்சியத்தின், இதன் பொருளாதாரத் தத்துவத்தின் சாரத்தை வேண்டு மென்றே திரித்துக் கூறுவதற்கு ஒப்பானதாகும். இத்தத்துவம் தனியுடைமையின் அடிப்படையில் நிகழும் புறவய நிகழ்ச்சிப் போக்குகளின் சாரத்தை வெளிப் படுத்துகிறது, முதலாளித்துவம் உருவாகி, உச்சக் கட்டமாகிய ஏகாதிபத்திய கட்டம் வரை (இதுதான் சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது) பல்வேறு கட்டங்களைக் கடந்த நியதிகளை ஆராய் கிறது. சில நாடுகளில் அனுகூலமான வரலாற்று சூழ்நிலைகள் நிலவும் போது முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைக் குறைக்கலாம் அல்லது முழுவதுமாகத் தவிர்க்கலாம் என்பதை மார்க்சிய-லெனினியப் போதனை எப்பொழுதும் மறுக்கவில்லை. பல நாடுகளின் வளர்ச்சி யின் வரலாற்று நடைமுறை இம்முடிவுகள் சரியானவை என்று மெய்ப்பித்துள்ளது, இதன் மூலம் மார்க்சிய-லெனினியத்தின் சந்தேகத்திற்கிடமற்ற சர்வதேசிய முக் கியத்துவம் ஊர்ஜிதப்படுத்தப்பட்டுள்ளது.

மேலே கூறியதிலிருந்து, **ஒன்றையொன்று வரலாற்று ரீதியாக மாற்றும் உற்பத்தி உறவுகளின் அமைப்புகள், அதாவது மனிதர்களின் பொருளாதார உறவுகள்தான் மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள்** என்பது தெளிவாகிறது. **அரசியல் பொருளாதாரம், மனித** சமுதாய **வளர்ச்சியின் பல்வேறு கட்டங்களில் பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம்,**

பரிவர்த்தனை மற்றும் நுகர்வை நிர்வகிக்கும் விதிகளை ஆராய்கிறது. இது சமூக உற்பத்தியின் பொருளாதார அமைப்பை, அரசியல், தத்துவஞான, சித்தாந்த, சட்ட, அழகியல், மற்ற கண்ணோட்டங்கள், நம்பிக்கைகளுக்கு அடிப்படையாக இருந்த சமுதாயத்தின் பொருளாதார அடித்தளத்தை ஆராய்கிறது. எனவே இது சமூக மற்றும் பொருளாதார விஞ்ஞானங்களுக்கு (வரலாறு, தேசியப் பொருளாதாரத்தின் வரலாறு, பொருளாதாரக் கொள்கை, புள்ளிவிவர இயல், திட்டவட்டமான பொருளாதார விஞ்ஞானங்கள், சட்ட விஞ்ஞானம், மற்றவை) முறையியல் அடிப்படையாகத் திகழுகிறது. இவற்றில் ஒவ்வொன்றிற்கும் அதனதன் ஆராய்ச்சிப் பொருள் உண்டு. இந்த விஞ்ஞானங்கள் எல்லாம் அரசியல் பொருளாதாரத்தின் தத்துவார்த்த முடிவு களின் அடிப்படையில், தேசியப் பொருளாதாரத்திலும் இதன் தனிப்பட்ட துறைகளிலும் நடைபெறும் பொருளா தாரப் புலப்பாடுகளை ஆராய்கின்றன, பொருளாதார விதிகளின் திட்டவட்டமான வெளிப்பாடுகளை ஆராய் கின்றன, பொருளாதாரக் கொள்கையை நிறைவேற்றும் துறையில் நடைமுறை நடவடிக்கைகளைத் தீட்டு கின்றன.

கா. மார்க்சின் பொருளாதார போதனைதான் மார்க் சியத்தின் முக்கிய உள்ளடக்கம், இதன் மிக ஆழமான, பன்முகத் தன்மையுள்ள, விரிவான மெய்ப்பாடு, உபயோ கம் ஆகும். வரலாற்றைப் பற்றிய பொருள்முதல்வாதக் கருத்திலிருந்து, ஆராய்ச்சிப் பொருளின் தன்மையி லிருந்து இது வருகிறது.

**அரசியல் பொருளாதாரத்தின்
ஆராய்ச்சிப் பொருளைப் பற்றி
பூர்ஷ்வா விஞ்ஞானிகள்
என்ன நினைக்கின்றனர்?**

பூர்ஷ்வா அரசியல் பொருளாதார ஆசான்கள், குறிப்பாக ஆடம் ஸ்மித்தும் டேவிட் ரிக்கார்டோவும் அரசியல் பொருளாதாரத்தை பொருளாதாரக் கொள்கையிலிருந்து பிரித்து பொருளாயத நலன்களின் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனையின் உள்ளே, ''இயற்கை'' விதிகளைக் கண்டுபிடித்தனர். ஆனால் இவர்கள் அரசியல் பொருளா தாரம் என்பது ''செல்வத்தைப்'' பற்றிய விஞ்ஞானம் எனும் கருத்தைக் கைவிடவில்லை. ஆடம் ஸ்மித்தின் முக்கியப் படைப்பு **மக்களுடைய செல்வத்திற்கான தன்மை, காரணங்களைப் பற்றிய ஆராய்ச்சி** என்ற தலைப்பைக் கொண்டிருந்தது தற்செயலானதல்ல. இப்படிப்பட்ட ''செல்வம்'' எனும் பொதுவான, வரலாற்றிற்கு அப்பாற்பட்ட கருத்து — இது பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களுக்கு உரித்தானது — உட்பொருளற்றதாகும், ஏனெனில் இது திட்டவட்டமான பொருளாதார நிலைமைகளைச் சிறிது கூட பிரதிபலிக்கவில்லை. இது ஆராய்ச்சியை பண்பு ரீதியான அம்சங்களின் துறைக்கு இல்லாமல் அளவு ரீதியான அம்சங்களின் துறைக்கு இட்டுச் செல்கிறது.

''செல்வம்'' எனும் வரலாற்றிற்கு அப்பாற்பட்ட கருத்து முதலாளித்துவம் நிரந்தரமானது என்பதை ஒப்புக்கொள்வதன் அடிப்படையிலானது. இது பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களுக்கு முற்றிலும் ஏற்புடையதாயுள்ளது. இது செல்வமும் ஏழ்மையும் முதலாளித்துவ சமுதாயத்தின் வெவ்வேறு துருவங்களில் குவியும்

உண்மையை மறைக்க உதவுகிறது. வரலாற்று மற்றும் வர்க்க நிலைகளிலிருந்து ''செல்வம்'' எனும் கருத்தைப் பகுப்பாய்வு செய்யத் துவங்கினால், செல்வத்தின் உள்ளடக்கம் மற்றும் இதைப் பெருக்கும் வழிகளைப் பற்றிய வேறான கருத்து வெளிப்படுகிறது. உதாரண மாக, புராதன மனிதனுக்கு கூர்மையாக்கப்பட்ட கற்கருவி செல்வமாகப் பட்டது; இதன் உதவியால் அவனால் உணவைத் தேட முடியும். அடிமையுடைமை யாளனைப் பொறுத்த மட்டில் அடிமைகளின் எண்ணிக்கை யில்தான் செல்வம் அடங்கியிருந்தது. முதலாளியைப் பொறுத்த மட்டிலோ, பங்குச் சான்றிதழ்கள்தான் செல்வமாகும்; இவை இவனுக்கு பெரும் வருமானத் திற்கு வழிகோலுகின்றன, பெரும் எண்ணெய் வயல்கள், உருக்காலைகள் போன்றவற்றை வாங்கும் வாய்ப் பையளிக்கின்றன. இராணுவ-தொழிற்துறை இணையத் தைச் சேர்ந்த நவீன ஆயுத உற்பத்தியாளனுக்கு செல்வம் என்பது மனித நாகரிகம் முழுவதையுமே அழிக்க வல்ல ஆயுதங்களை மலை போல் குவிப்பதாகும். இதற்கெல்லாம் நேர்மாறாக சோஷலிச சமுதாயத்தில் செல்வத்தின் உண்மையான அளவுகோல் மனிதன், இவனுடைய திறமை, உழைப்பார்வம், ஆக்க பூர்வமான ஊக்கம், தார்மீகத் தூய்மை முதலியவையாகும்.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து இதன் முரண் பாடுகள் கூர்மையடைந்த போது, பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் கொச்சைப் பொருளாதாரமாக மாறிய போது இதன் ஆராய்ச்சிப் பொருளைப் பற்றிய கண்ணோட்டமும் மாறியது. உதாரணமாக, வரலாற்றுப் போக்கு என்றழைக்கப்பட்டதன் பிரதிநிதிகள் (வி. ரோஷேர், பி. ஹில்டெபிரான்ட், கே. கினிஸ் போன்றோர்) அரசியல் பொருளாதாரம் என்பது ''தேசியப் பொருளா

தாரத்தைப்'' பற்றிய விஞ்ஞானம் என்று கருதினார்கள்; இவர்களுடைய கருத்துப்படி இது தேசியப் பொருளாதாரத்தின் திட்டவட்டமான வரலாற்று வடிவங்களை விளக்க வேண்டும், பொருளாதாரத்தின் பல்வேறு துறைகளின் தொழில்நுட்பத்தையும் தொழில் முறைகளையும் ஆராய வேண்டும். இவ்வாறாக உற்பத்தி உறவுகள், பொருளாதார விதிகளைப் பற்றிய ஆராய்ச்சி, மேற்போக்கான பொருளாதாரப் புலப்பாடுகளைச் சித்தரிப்பதால் மாற்றப்பட்டது.

ஆஸ்திரியப் போக்கின் பிரதிநிதிகள் (எ. பேம்-பாவர்க், கே. மேன்கெர், வி. ஜேவன்ஸ் போன்றோர்) ''அதிகபட்ச பயன்தன்மைத்'' தத்துவத்தை முன்மொழிந்தனர். பொருட்களின் பாலான மனிதர்களின் உறவுகள், இப்பொருட்களின் பயன்தன்மை பற்றிய அகவய மனநிலை மதிப்பீடுகள்தான் அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள் என்று இவர்கள் கருதினார்கள். இவ்வாறாக மனிதர்களுக்கிடையிலான உற்பத்தி உறவுகள் அல்ல, மாறாக நிர்வாகம் செய்யும் மனிதர்களின் மனநிலை ஆராய்ச்சியின் மையத்தில் வைக்கப்பட்டது.

ஆனால் சுய உணர்வின் வடிவமாகத் திகழும் மனநிலையே சமுதாய வாழ்க்கையின் பொருளாயத நிபந்தனைகளால், இதன் பொருளாதார அமைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. மனிதர்களின் மனநிலையல்ல, புறவயப் பொருளாதார விதிகளைப் பற்றிய விஞ்ஞான அறிதல்தான் பொருளாதாரப் புலப்பாடுகளை அறிவதற்கான திறவுகோலாகும்.

வினியோகத் துறையை ஒழுங்குபடுத்துவதன் மூலம், முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படைகளை மாற்றாமலேயே முதலாளி வர்க்கம் மற்றும் தொழிலாளர்களின் வர்க்க நலன்களின் ''சீரிசைவிற்கு'' வகை செய்யலாம்

என்பதை நிரூபிப்பதற்காக பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் உற்பத்திக்கும் வினியோகத்திற்கும் இடையிலான உள்தொடர்பை அறுக்க முற்படுகின்றனர். இதன் தொடர்பில், மனிதர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பொருளாயத நலன்களைப் பெறும் நோக்கத்தோடு இவர்களின் நடவடிக்கையைப் பயிலும் விஞ்ஞானம்தான் அரசியல் பொருளாதாரம் எனும் வரையறுப்பு பெரிதும் பரவியுள்ளது. பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் (உதாரணமாக, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழக அரசியல் பொருளாதாரப் போக்கைத் தோற்றுவித்த அ. மார்ஷால்) மனிதர்களுக்கு இடையிலான உற்பத்தி உறவுகளைப் பொருட்களின் பால், இவற்றின் பயன்தன்மையின் பால் மனிதர்களுக்கு உள்ள உறவுகளால் மாற்ற முயலுகின்றனர். இவர்கள் பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளை மனநிலை ரீதியான நோக்கு நிலைகளிலிருந்து, பொருட்களின் அகவயப் பயன்தன்மை கண்ணோட்டங்களிலிருந்து பார்க்கின்றனர்.

பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் சமூகப் போக்கு, பொருளாதாரத்தின் சமூக வடிவத்தை, அதாவது மனிதர்களிடையேயான சட்ட மற்றும் நீதிநெறி உறவுகளை விஞ்ஞானத்தின் ஆராய்ச்சிப் பொருளாக முன்வைக்கிறது. ஆனால் இந்த உறவுகள் மேல்கட்டுமானத்தைச் சார்ந்தவையேயன்றி பொருளாதார அடித்தளத்தைச் சார்ந்தவை அல்ல. இவை உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களிடையே உருவாகும் பொருளாயத, புறவய பொருளாதார உறவுகளின் சித்தாந்த பிரதிபலிப்பு மட்டுமே.

பல நவீன பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் அரசியல் பொருளாதாரத்தைச் சாராம்சத்தில் பொருளாதாரக் கொள்கையால் மாற்றுகின்றனர். உதாரணமாக,

ஒழுங்குப்படுத்தப்படும் முதலாளித்துவ பொருளாதாரத் தின் நவீன பூர்ஷ்வா போக்கின் ஆரம்பகர்த்தாவாகிய ஜான் மேய்னார்டு கெயின்ஸ் அரசியல் பொருளாதாரத் தை, ''முதலாளித்துவத்திற்கு அவசர உதவி'' அளிப்பதற் கான ''சாதனங்கள் மற்றும் கருவிகளின் தொகுப் பாக'', பொருளாதாரக் கொள்கையின் அந்தந்த நடவடிக்கைகளை நடத்தும் ''கலையாக'' பார்க் கின்றார்.

நவீன பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் தொழில்நுட்பவாதப் போக்கும் (இது நவீன விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சூழ்நிலையில் பரவியுள்ளது) அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளை விஞ்ஞான நோக்கில் புரிந்து கொள்ளவில்லை. தொழில் நுட்பவாதக் கருத்தமைப்பின் தத்துவகர்த்தாக்கள் பொரு ளாதார உறவுகளையும் விதிகளையும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் வெறும் பிரதிபலிப்பாக மட்டுமே பார்க்கின்றனர். இவர்கள் தொழில்நுட்பம் என்பதை சுயமாக வளரும் ஒன்றாகப் பார்க்கின்றனர்; இவர்களுடைய கருத்துப்படி, இதன் இயக்கம் நவீன முதலாளித்துவம், சோஷலிசம் இரண்டின் பொருளாதார உறவுகளையும் தோற்றுவிக்கிறது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம் விரைவாக நடைபெறுவதால் ஏதோ முதலாளித்துவ வளர்ச்சிக்கான புதிய, புதிய வாய்ப்புகள் தோன்றுகின்றனவாம், வர்க்க பகை முரண்பாடுகளற்ற, சீரிசைவான சமுதாயமாக இது மாறி வருகிறதாம். இதன் தொடர்பாக, முதலாளித்துவமும் சோஷலிசமும் ''ஒருங்கிணைதல்'' (நெருங்கிவருவது) பற்றிய தத்துவம் முன்வைக்கப்படுகிறது; இந்த இரு அமைப்புகளுக்கும் இடையில் ஏதோ கணிசமான வேறுபாடுகளே இல்லை யென்றும் இவையெல்லாம் அரசியல் மற்றும் சித்தாந்த

கண்ணோட்டங்களில் மட்டுமே நிலவுவதாயும் இவற்றை எளிதில் அகற்றி விடலாம் என்றும் கூறப்படுகிறது.

இன்று முதலாளித்துவ நாடுகளில் உள்ள உயர் கல்விக் கூடங்களின் ஆசிரியர்கள் தம் அரசியல் பொருளாதார பாடநூல்களில் சமூகவியல், சட்டம், மனோதத்துவம், மானுடவியல், மற்ற விஞ்ஞானங்கள் ஆகியவற்றின் பிரச்சினைகளை சாதாரணமாகச் சேர்க்கின்றனர். அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளை இப்படி ''விரிவுபடுத்தியதானது'' சாராம்சத்தில் பார்த்தால், பொருளாதார விஞ்ஞானத்தை, பழையதாகிப் போன பூர்ஷ்வா உற்பத்தி உறவுகளை ஆராய்வதிலிருந்து கவனத்தைத் திருப்புகிறது.

அது மட்டுமல்ல, இன்று ''அரசியல் பொருளாதாரம்'' என்ற இதன் பெயரையே மாற்ற முயற்சி செய்யப்படுகிறது. இதற்குப் பதில் ''பொருளாதாரம்'' (Economics) என்ற பெயர் முன்மொழியப்படுகிறது. அமெரிக்கப் பொருளாதார நிபுணர் பி. சாமுவேல்சனின் பாடநூல் ஒன்று இப்பெயரில் வெளியிடப்பட்டு, இன்று முதலாளித்துவ நாடுகளில் பெரிதும் பரவியுள்ளது. இந்நூலில், ''பொருளாதாரத் தத்துவம் என்றால் என்ன'' எனும் தலைப்பின் கீழுள்ள அத்தியாயத்தில் இவர் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள் சம்பந்தமாக மிகவும் பரவியுள்ள சில வரையறுப்புகளைத் தருகிறார்.

1. பொருளாதாரத் தத்துவம் என்பது பரிவர்த்தனை மற்றும் மனிதர்களிடையேயான பணக் கொடுக்கல்-வாங்கல்களுடன் தொடர்புடைய நடவடிக்கையின் வகைகளைப் பற்றிய விஞ்ஞானமாகும்.

2. பொருளாதாரத் தத்துவம் என்பது பல்வேறு பண்டங்களை (கோதுமை, மாட்டிறைச்சி, மேல்கோட்டு,

படகுகள்) உற்பத்தி செய்து, இவற்றை நுகர்விற்காக சமுதாய உறுப்பினர்களிடையே வினியோகிப்பதற்காக மனிதர்கள் அபூர்வமான அல்லது மட்டான உற்பத்தி மூல ஊற்றுகளை (நிலம், உழைப்பு, இயந்திரங்கள் போன்ற உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பொருட்கள், தொழில்நுட்ப ஞானம்) பயன்படுத்துவதைப் பற்றிய விஞ்ஞானமாகும்.

3. பொருளாதாரத் தத்துவம் என்பது மனிதர்களின் அன்றாட காரியரீதியான வாழ்க்கை நடவடிக்கை, இவர்கள் வாழ்க்கைச் சாதனங்களைக் கண்டெடுத்து, பயன்படுத்துவது பற்றிய விஞ்ஞானமாகும்.

4. பொருளாதாரத் தத்துவம் என்பது நுகர்வு மற்றும் உற்பத்தித் துறையில் மனிதகுலம் தன் கடமைகளை எப்படி நிறைவேற்றுகிறது என்பதைப் பற்றிய விஞ்ஞானமாகும்.

5. பொருளாதாரத் தத்துவம் என்பது செல்வத்தைப் பற்றிய விஞ்ஞானமாகும்.*

அரசியல் பொருளாதாரத்தைப் பரிவர்த்தனைப் பற்றிய விஞ்ஞானம் என்று மெர்க்கன்டிலிஸ்டுகள் வரையறுத்ததுடனும், இது செல்வத்தைப் பற்றிய விஞ்ஞானம் என்று ஆடம் ஸ்மித் கூறியதுடனும் இந்த வரையறுப்புகள் ஒத்திருப்பது தெளிவு. பொருளாதார விஞ்ஞானம் பற்றிய நவீன பொருளாதார நிபுணர்களின் கருத்துக்களும் இங்கு பிரதிபலிக்கின்றன. இவர்களுடைய கருத்தின்படி இது, உற்பத்தி மற்றும் உழைப்பை ஒழுங்கமைப்பது, உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்வது, நிதியளிப்பது, கடன் தருவது போன்றவை சம்பந்தமாக வர்த்தகத் துறையினருக்கு சிபாரிசுகளைத்

* Paul A. Samuelson, *Economics*, McGraw-Hill Book Company, Tokyo, 1973, p. 3.

தர வேண்டும்.

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருள் சம்பந்தமாக மேற்கூறிய வரையறுப்புகள் தவிர சாமுவேல் சன் தன் வரையறுப்பையும் தருகிறார்: ''பல்வேறு பண்டங்களை உற்பத்தி செய்து இவற்றை இன்றும் எதிர்காலத்திலும் பல்வேறு மனிதர்கள் மற்றும் சமூகப் பிரிவுகளிடையே வினியோகிக்கவும் நுகர்விற்காகவும் மனிதர்களும் சமுதாயமும் காலப் போக்கில், பணத்தின் உதவியால் அல்லது இது இல்லாமலே **அபூர்வமான** உற்பத்தி மூல ஊற்றுகளில் எவற்றை **தேர்ந்தெடுக்கின்றனர்** என்பதைப் பற்றிய விஞ்ஞானம்தான் அரசியல் பொருளா தாரம்''* என்கிறார் இவர். முக்கியமானதை, அதாவது மனிதர்களின் உற்பத்தி உறவுகளை அரசியல் பொருளா தார ஆராய்ச்சிப் பொருளிலிருந்து அகற்றிய சாமுவேல் சன் தன் நூலில் ''அபூர்வமான உற்பத்தி மூல ஊற்று களை'', அதாவது பொருட்களையும் அகவய மதிப்பீடு களையும் முன்னணியில் வைக்கிறார்.

மற்ற நவீன பூர்ஷ்வா பொருளாதார நிபுணர் களைப் போன்றே சாமுவேல்சனும் தனிச் சிறப்புடைய வர் அல்ல. சமூக உறவுகளைப் பற்றிய ஆராய்ச்சி யிலிருந்து பொருளாதார விஞ்ஞானத்தின் திசையைத் திருப்பவும், சாதாரண பொருளாதார வாழ்வைப் பற்றிய, மனிதனுடைய ஜீவாதார நலன்களைப் பூர்த்தி செய்யும் வழிகளைப் பற்றிய முதலாளி வர்க்கத்திற்குக் கவலையில்லாத சர்வாம்ச விஞ்ஞானமாக மாற்றவும் இவர் முயலுகிறார்.

பூர்ஷ்வா ஆசிரியர்களின் பல பாடநூல்களில் முற்றிலும் முரண்பாடான வாதங்கள் காணக்கிடக்

* *Ibid.*, p. 5.

கின்றன. சிலர் சுதந்திரமான சந்தைப் போட்டி வேண்டும் என்கின்றனர், தனியார் தொழில் சுதந்திரம் வேண்டும் என்கின்றனர், இதன் அடிப்படையில் சகல வித வளை கோடுகளையும் வரைகின்றனர். இவற்றின் மூலம் நிலவக் கூடிய அல்லது எதிர்பார்க்கக் கூடிய பொருளாதார நிலவரத்தைப் பற்றி முடிவு செய்யலாம். ஏதாவது குறிப்பிட்ட பண்டம் அல்லது சேவைக்கு முன்னுரிமை தரும் மனிதன் இந்த வளைகோடுகளின் மையத்தில் இருக்கிறான். இந்த முன்னுரிமைகளின் இணைப்புதான் பகுப்பாய்வின் அடிப்படையாகும்.

வேறு சிலர், இப்படிப்பட்ட பொருளாதார அலகுகளின் காலம் கடந்து விட்டது, பொருளாதாரத்தில் முதலாளித்துவ ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன, எனவே சந்தையை அரசின் உதவியால் ஒழுங்குபடுத்தும் வாய்ப்புண்டு என்று கருதுகின்றனர். இதன் தொடர்பாக சில தத்துவங்கள் உருவாக்கப்படுகின்றன; இவை லாபம், வட்டி, மூலதனத்தை வேலைவாய்ப்புடன் தொடர்புபடுத்த முயலுகின்றன. பெருமளவுப் பணத்தைப் புழக்கத்தில் விடுவதன் மூலம் வேலைவாய்ப்பை அதிகப்படுத்தலாம், வேலையில்லாத் திண்டாட்டத்தின் சுமையை குறைக்கலாம், ஏன் இதை முற்றிலுமாகக் கூட அகற்றலாம் என்று கூறப்படுகிறது. 70ஆம் ஆண்டுகளின் இறுதியில், 80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் முதலாளித்துவ உலகில் ஏன், எப்படி கட்டுப்பாடற்ற விலையேற்றத்துடன் சேர்ந்து வேலையில்லாத் திண்டாட்டமும் அதிகரித்தது என்று இவர்களால் விளக்க முடியவில்லை.

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளைப் பற்றி பூர்ஷ்வா விஞ்ஞானிகள் பல்வேறு வரையறுப்புகளைத் தந்தாலும் இவற்றிற்கு சில பொது அம்சங்கள் உண்டு. முதலாளிகளின் நலன்களைக் காத்து, அவற்றிற்கு

சேவை புரிவதற்காகவே உள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் தன்மைதான் இந்த அம்சங்களை நிர்ணயிக்கின்றது. அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளை மேற்போக்கான புலப்பாடுகளோடு மட்டுப்படுத்துவது, நவீன முதலாளித்துவ சமுதாயத்தில் நடைபெறும் உண்மையான பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகளை ஆராய்ந்து, வெளிப்படுத்த விடாமலிருப்பது என்பதுதான் இந்த வரையறுப்புகளின் லட்சியமாகும். பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் ஆராய்ச்சியின் மையத்தை உற்பத்தித் துறையிலிருந்து வினியோக, பரிவர்த்தனைத் துறைக்குக் கொண்டு வருகின்றனர், இவற்றை ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்கின்றனர், பொருளாயத உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் தொழில்நுட்ப அம்சங்களை விவரிப்பதில் அதிகம் ஈடுபடுகின்றனர். இது தொழில்நுட்ப மற்றும் இயற்கை விஞ்ஞானங்களின் விஷயமாகும். பூர்ஷ்வா விஞ்ஞானிகள் வரலாற்றுப் போக்கிற்கு மாறாக, முதலாளித்துவ சமுதாயத்தை இயல்பானதாக, நிரந்தரமானதாக, மனித இயற்கைக்கு அதிகம் ஏற்றதாகப் பார்க்கின்றனர்.

**முதலாளி வர்க்கத்தின்
கண்ணோட்டத்திலிருந்து**

அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளைப் பற்றிய கண்ணோட்டங்கள் ஆசிரியர்களின் வர்க்க நிலைகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. ஏனெனில் சமுதாயத்தில் உள்ள பல்வேறு வர்க்கங்கள், சமூகப் பிரிவுகளின் அடிப்படைப் பொருளாதார நலன்களைப் பிரதிபலிக்கும் மனிதர்களின் உறவுகளை அரசியல் பொருளாதாரம் ஆராய்கிறது. இவற்றின் நிலை ஒவ்வொரு சமுதாயத்

திலும் ஒவ்வொரு விதமானது. மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான பகை முரண்பாட்டு சமுதாயங்களில் சிலர் சுரண்டலுக்கு ஆளாகின்றனர், வேறு சிலர் இவர்களின் உழைப்பின் விளைபயன்களை சுவீகரிக்கின்றனர், இன்னும் சிலரோ நடுவில், ஸ்திரமற்ற நிலையில் உள்ளனர். எனவே வெவ்வேறு வர்க்கங்களும் சமூகப் பிரிவுகளும் அந்தந்த சமூக அமைப்பை வெவ்வேறு விதமாக மதிப்பிடுகின்றன, இம்மதிப்பீடுகள் பல நேரங் களில் ஒன்றிற்கொன்று முற்றிலுமாக எதிரெதிரானவை. முதலாளித்துவ சுரண்டல் அநீதியானது, கொடுமையானது என்று கூலித்தொழிலாளி கருதுகிறான். சுரண்டல் இல்லாத, நீதியான சமூக அமைப்பிற்கு மாறுவதில் இவன் அக்கறை கொண்டுள்ளான். ஆனால் முதலாளியோ கூலியுழைப்பைச் சுரண்டுவதில் அக்கறை கொண்டுள் ளான், ஏனெனில் இது இவனுக்கு பெரும் லாபங்களைத் தருகிறது, செல்வத்திற்கு, ஆடம்பர வாழ்க்கைக்கு வழிகோலுகிறது. குட்டி முதலாளிப் பிரிவினர் (விவசாயி கள், சிறு தொழில் புரிவோர் போன்றவர்கள்) வேறு விதமாக நிலைமையைப் பார்க்கின்றனர். இவர்கள் தம் வாழ்க்கைக்காகப் போராடுகின்றனர், திவாலாகி விடு வோமோ என்று அஞ்சுகின்றனர், வங்கிகள், நிலக்கிழார்கள், பெரும் ஆலை முதலாளிகளைப் பெரிதும் சார்ந் துள்ளனர். விவசாயிகள், சிறு தொழில் புரிவோர், மற்ற சிறு பண்ட உற்பத்தியாளர்கள் ஆகியோருக்கு இரண்டு மனது உள்ளது: ஒரு புறம் இவர்கள் உழைப்பாளிகள், மறு புறம் எஜமானர்கள், வியாபாரிகள், எனவேதான் இவர்கள் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத் திற்கும் இடையே ஊசலாடுகின்றனர்.

பகை முரண்பாட்டு வர்க்கங்களாகப் பிரிக்கப்பட்ட வர்க்க சமுதாயத்தில் ஒரே அரசியல் பொருளாதாரம்

இருக்க முடியாது. இதற்குக் கண்டிப்பாக வர்க்கத் தன்மை உண்டு, இது குறிப்பிட்ட வர்க்கத்தின் நலன் களைப் பிரதிபலிக்கிறது. முதலாளித்துவ சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கமாகிய முதலாளி வர்க்கத்தின் நலன்களைப் பிரதிபலிக்கும் பூர்ஷ்வா அரசியல் பொருளா தாரத்தை பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் தோற்றுவிக் கின்றனர். முதலாளித்துவ சமுதாயத்தின் இரண்டு முக்கிய வர்க்கங்களாகிய பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடைப்பட்ட நிலையை வகிக்கும் குட்டி முதலாளிப் பிரிவினரின் (விவசாயிகள், சிறு தொழில் ·புரிவோர் போன்றவர்கள்) நலன்களை குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் பிரதிபலிக்கிறது. மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் தொழி லாளி வர்க்கத்தின் நலன்களை பிரதிபலிக்கிறது. எந்த வர்க்கத்தின் நிலைகளிலிருந்து ஆராய்ச்சி நடத்தப் படுகிறது என்பதைப் பொறுத்து, அரசியல் பொரு ளாதாரத்தின் விஞ்ஞான தன்மையும் பொருளாதாரப் புலப்பாடுகளின் சாரத்தினுள் இது எவ்வளவு ஆழத் திற்குப் புகுகிறது என்பதும் நிர்ணயிக்கப்படுகின்றன.

18ஆம் நூற்றாண்டின் இறுதியில், 19ஆம் நூற்றாண் டின் துவக்கத்தில் ஆடம் ஸ்மித், டேவிட் ரிக்கார்டோ வின் படைப்புகளில் முழு வளர்ச்சியடைந்த பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம், பாட்டாளி வர்க்கம் வரலாற்று அரங்கிற்கு வர வர, பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான முரண்பாடுகள் ஆழமடைய ஆழமடைய, 19ஆம் நூற்றாண்டின் முற்பாதியில் கொச்சை அரசியல் பொருளாதாரமாகியது. பூர்ஷ்வா அரசியல் பொருளா தாரத்திற்கு சாவு மணி அடிக்கப்பட்டது. பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் முதலாளித்துவ அமைப்பை

வெளிப்படையாக ஆதரித்து, காத்து நின்றார்கள், முந்தைய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் சாதித்த அனைத்தையும் கொச்சைப்படுத்தினார்கள். கா. மார்க்சின் **மூலதனம்** நூல் வெளிவந்த பின் — இந்நூல் பூர்ஷ்வா விமரிசகர்களின் கடும் தாக்குதல்களுக்கு உள்ளாயிற்று — இந்த நிகழ்ச்சிப் போக்கு குறிப்பாக அதிகரித்தது.

டி. ஆர். மால்தஸ், ஜி. பி. சேய், ஜி. மில், ஜி. ஆர். மாக்-கூல்லஹ், எ. பேம்-பாவர்க், என். வி. ஸீனியர், பி. பாஸ்தியா, அ. மார்ஷால், ஜி. எம். கெயின்ஸ், பி. சாமுவேல்சன், வி. ரோஸ்தோ போன்றோர் கொச்சை அரசியல் பொருளாதாரத்தின் குறிப்பிடத் தக்க பிரதிநிதிகளாவார்கள். விஞ்ஞான உண்மையைத் தேடுவது இவர்களின் முக்கிய நோக்கமாக இருக்கவில்லை, முதலாளித்துவத்தை ஆதரித்துப் புகழ்பாடுவதுதான் இவர்களின் நோக்கமாக இருந்தது. இவர்களின் விஞ்ஞான கருத்துக்களில் புதியன எதுவுமேயில்லை, இவை பல நேரங்களில், நீண்ட காலம் முன்னரே மார்க்சியத்தால் நிராகரிக்கப்பட்ட பழைய தத்துவங்களையே திரும்பக் கூறின. உள் தொடர்புகளைத் தெளிவுபடுத்துவதற்குப் பதிலாக பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் மேற்போக்கான புலப்பாடுகளைச் சித்தரிக்கின்றனர், புலப்பாடுகளின் தோற்றத்தை இவற்றின் சாரமாகக் காட்டுகின்றனர்.

நவீன பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் ஏகபோக முதலாளித்துவத்தின் பாதுகாவலனாகத் திகழுகிறது. முதலாளித்துவம் தன் சாரத்தை மாற்றி விட்டது, இது மக்கள் முதலாளித்துவமாகி விட்டது, இதில் சமூக பகை முரண்பாடுகளுக்கு இடமில்லை, வர்க்க சமாதானம் ஏற்பட்டு விட்டது என்ற கருத்தை உழைப்பாளிகள் மீது திணிக்க இதன் பிரதிநிதிகள் முயலுகின்றனர்.

நல்வாழ்வைப் படைக்கும் அமைப்பாக, முதலாளித்துவத்தின் முரண்பாடுகள், குறைகளை அகற்ற வல்ல வர்க்கங்களுக்கு மேற்பட்ட சக்தியாக பூர்ஷ்வா அரசு சித்தரிக்கப்படுகிறது. இராணுவ வெறி மற்றும் ஏகாதிபத்திய யுத்தங்களை ஆதரிப்பதற்குப் பெரும் இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

முதலாளித்துவத்தைப் பாதுகாக்கும் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் சோஷலிசத்திற்கு எதிராகத் தாக்குதலைத் தொடுக்கின்றனர். இவர்களுடைய கருத்துப்படி சோஷலிசம் என்பது "வரலாற்று ரீதியான முறை கேடு", சமுதாய வளர்ச்சியின் "இயல்பான" போக்கின் மீதான நிர்ப்பந்தத்தின் விளைவு. கம்யூனிச விரோதமும் சோவியத் விரோதமும் பூர்ஷ்வா பொருளாதாரவாதிகளின் பிரதான சித்தாந்த அரசியல் கருவியாகும். இவை அரசுக் கொள்கையாகவே மாற்றப்பட்டுள்ளன. இவையெல்லாம் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் தெட்டத் தெளிவான வர்க்கத் தன்மையைப் பிரதிபலிக்கின்றன. ஆனால் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் அரசியல் பொருளாதாரத்தின் வர்க்கத் தன்மையை சகல விதங்களிலும் நிராகரிக்கின்றனர், இதை பாரபட்சமில்லாத "விஞ்ஞான" ஆராய்ச்சி எனும் போர்வையால் மூடப் பார்க்கின்றனர். உதாரணமாக, நாம் ஏற்கெனவே குறிப்பிடப்பட்ட பி. சாமுவேல்சன் பின்வருமாறு எழுதுகிறார்: "குடியரசு கட்சியினருக்கென ஒரு பொருளாதாரத் தத்துவமும் ஜனநாயக கட்சியினருக்கென வேறொரு தத்துவமும், தொழிலாளர்களுக்கென ஒன்றும் ஆலை முதலாளிகளுக்கென வேறொரு தத்துவமும் இருக்க முடியாது".*

---

* *Ibid.*, p. 7.

குடியரசு கட்சியினருக்கும் ஜனநாயக கட்சியினருக்கும் தனித்தனியான பொருளாதாரத் தத்துவங்கள் இருக்க முடியாது என்று சாமுவேல்சன் கூறுவதை ஒப்புக் கொள்ளலாம், ஏனெனில் இரு சாரரும் பெரும் மூலதனத்தின் நலன்களைப் பிரதிபலிக்கின்றனர். ஆனால் தொழிலாளர்களுக்கும் ஆலை முதலாளிகளுக்கும் ஒரே பொருளாதாரத் தத்துவம்தான் நிலவ முடியும் எனும் கூற்று உண்மைக்கு அப்பாற்பட்டது.

அதே நேரத்தில் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை ''மார்க்சியமயப்படுத்த'', ''இரண்டடுக்கு'' அரசியல் பொருளாதாரத்தை உருவாக்க முயற்சிகள் செய்யப் படுகின்றன. இதில் முதல் அடுக்கு புரட்சிகர அரசியல் கண்ணோட்டங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட பொருளாதார போதனை எனும் வடிவில் மார்க்சியமாக இருக்க வேண்டும். இரண்டாவது அடுக்கு பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரமாக இருக்க வேண்டும். முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் முதல் கட்டத்தில், பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை ''மார்க்சியமயப் படுத்த'' வேண்டும் என்பதற்காக தனிப்பட்ட பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் மட்டுமே போராடினார்கள் என்றால், 70ஆம் ஆண்டுகளில் நெருக்கடி வலுப்பட்ட போது, சோஷலிசத்திற்கு ஆதரவாக நிலவரம் மாறிய போது நெருக்கடியிலிருந்து எப்படியாவது மீள வேண்டும் என்பதற்காக மார்க்சியத்தையும் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தையும் ''இணைக்க'' வேண்டும் என்பதற்காகப் போராடும் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களின் எண்ணிக்கை பெருகியது. உதாரணமாக, ''விஞ்ஞானப் புரட்சி'' மூலம் ''புதிய அரசியல் பொருளாதாரத்தைத்'' தோற்றுவிக்குமாறு பிரிட்டிஷ் பொருளாதார நிபுணர் அ. ஹைனிஸ் அறைகூவல் விடுத்தார். இவருடைய

கருத்துப்படி இதில் ரிக்கார்டோ, மார்க்ஸ், கெயின்ஸ் மற்றும் நவீன ஆசிரியர்களின் தத்துவங்களிலிருந்து சிறந்த அம்சங்கள் இடம் பெற வேண்டும். இவை யெல்லாம் பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் ஆழ்ந்த நெருக்கடிக்கு சான்று பகர்கின்றன.

19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் தோன்றியது. பெரும் முதலாளித்துவ இயந்திர உற்பத்தியின் விரைவான வளர்ச்சியோடு கூட சிறு உற்பத்தியாளர்கள் வெளியே தள்ளப்பட்டு, திவாலாவது நடைபெற்றது, இவர்கள் பாட்டாளிகளாக (முதலாளித்துவ சுரண்டலுக்கு ஆளா பவர்களாக) மாறுவது நடைபெற்றது. இதன் அடிப் படையில்தான் குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் வளர்ந்தது. இது விரக்தியடைந்த குட்டி சொத்துடைமை யாளர்கள், சிறு உற்பத்தியாளர்களின் சித்தாந்தத்தை, சிறு உற்பத்திக்குத் திரும்ப வேண்டுமென்ற நாட்டத்தை, இது திவாலடைவதை எப்படியாவது தடுத்து நிறுத்த வேண்டுமென்ற விருப்பத்தைப் பிரதிபலித்தது.

சுவிட்சர்லாந்து பொருளாதார நிபுணர் ஜி. சிஸ்மொன்டீ தான் குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தை ஏற்படுத்தியவர் ஆவார். பி. ஜி. புரூதோன் (பிரான்ஸ்), ஜி. கிரேய் (பிரிட்டன்), நரோத்னிக்குகள் (ருஷ்யா) ஆகியோர் இவரை பின்பற்றினார்கள். குட்டி பூர்ஷ்வா நிலையிலிருந்து முதலாளித்துவத்தை விமரிசித்த இந்த பொருளாதார நிபுணர்கள், பெருமளவில் இம்சை தரும் வழிகளில் சிறு உற்பத்தியாளர்கள் (விவசாயிகள், சிறு தொழில் துறையினர், வியாபாரிகள் போன்றவர்கள்) திவாலடைவது, பொருளாதாரத்தில் அராஜகம், மக்கள் திரளினர் ஏழ்மையடைவது போன்ற முதலாளித் துவ சமுதாயத்தின் குறைகளை அம்பலப்படுத்தினர்.

ஆனால் முதலாளித்துவ உற்பத்தியின் முரண்பாடுகளின் சாரத்தையும் இவற்றைப் புரட்சிகரமாகத் தீர்க்கும் வழிகளையும் புரிந்து கொள்ளாத குட்டி பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், பின்தங்கிய உற்பத்தி வடிவமாக இருந்து, உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடையாக உள்ள சிறு உற்பத்தியை சாலச் சிறந்ததாகச் சித்தரித்தனர். சிறு பண்ட உற்பத்தியின் அடிப்படையில்தான் முதலாளித்துவம் தன்னிச்சையாக வளருகிறது என்பதை இவர்கள் புரிந்து கொள்ளவில்லை. இவர்களுடைய போதனை கற்பனாவாதமாக, பிற்போக்கானதாக இருந்தது. குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தின் நவீன பிரதிநிதிகள் சிறு உற்பத்தியாளர்களை திவாலடையச் செய்யும் ஏகபோகங்களை விமரிசிக்கின்றனர். ஆனால் சுதந்திரமான சந்தைப் போட்டி நிலவும் முதலாளித்துவத்தைத்தான் இவர்கள் இலக்கியலாக முன்வைக்கின்றனர்.

நம் நூற்றாண்டின் 60-70ஆம் ஆண்டுகளில் தீவிர அரசியல் பொருளாதாரம் என்றழைக்கப்பட்டது தோன்றியது. இது பூர்ஷ்வா அரசியல் பொருளாதார நெருக்கடி, ஏகபோகங்களின் ஆதிக்கம், மாணவர் மற்றும் இளைஞர் இயக்கம், உலக சோஷலிசத்தின் வெற்றிகள் ஆகியவற்றிற்கான ஒருவித பதிலாக இருந்தது. இந்த தீவிர அரசியல் பொருளாதாரம் மார்க்சிய அரசியல் பொருளாதாரத்திற்கும் பூர்ஷ்வா மிதவாத அரசியல் பொருளாதாரத்திற்கும் இடைப்பட்டதொரு நிலையை வகிக்கிறது. இதன் பிரதிநிதிகள் தம்மை ''மனிதாபிமான மார்க்சிஸ்டுகள்'' என்று அழைத்துக் கொள்கின்றனர். தாம் பூர்ஷ்வா நிலைகளிலிருந்து விலகுவதாயும், ஏகபோக முதலாளித்துவத்தின் தனிப்பட்ட அம்சங்களை விமரிசிப்

பதாயும் உறுதி கூறுகின்றனர். அதே நேரத்தில் இவர்கள் ''மனிதாபிமான விமரிசன'' நிலைகளிலிருந்து மார்க்சிய-லெனினியத்தையும் சாடுகின்றனர், முதலாளித்துவத்திற்கு எதிரான புரட்சிகரப் போராட்ட முறைகளிலிருந்து விலகுகின்றனர், தொழிலாளி வர்க்கத்தின் புரட்சிப் பணியை மறுக்கின்றனர், அரைகுறை சீர்திருத்தங் களுக்காகப் போராடுகின்றனர். சோவியத் யூனியனிலும் மற்ற சோஷலிச நாடுகளிலும் நடைபெறும் சோஷலிசக் கட்டுமானத்தின் தத்துவத்தையும் நடைமுறையையும் விமரிசிப்பவர்கள் மத்தியில் தீவிரவாதிகளின் குரல் மேன்மேலும் பலமாக ஒலிக்கிறது. பல்வேறு அதி தீவிர இடதுசாரி கோஷ்டிகளும் தம்மை ''நவீன மார்க்சிஸ்டுகளாக'' சித்தரிக்கும் ஓடுகாலிகளும் தீவிர அரசியல் பொருளாதாரத்தோடு சேர்ந்து கொள்கின்றனர்.

தொழிலாளி வர்க்கத்தின் நோக்குநிலையிலிருந்து

மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம்தான் விஞ்ஞான ரீதியான, இறுதி வரை தொடர்ச்சியான, புரட்சிகரமான அரசியல் பொருளாதாரமாகும். இதுதான் சமூக முன்னேற்றத்தின் சிகரத்தை நோக்கிய மனிதகுலத்தின் பாதைக்கு ஒளியூட்டுகிறது. இதன் வர்க்கத் தன்மை உயர்வான விஞ்ஞான தன்மையுடன் அங்கக ரீதியாக இணைந்துள்ளது. உற்பத்தி உறவுகளையும் பொருளாதார விதிகளையும் ஆழமாக ஆராய உதவும் இயக்கவியல் பொருள்முதல்வாத முறையின் அடிப்படையில் மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரம் இயங்குவது

இதற்குக் காரணமாகும். சமுதாயப் பொருளாதார வளர்ச்சியின் உண்மையான விதிகளை அறிவதில் ஜீவாதார ரீதியாக அக்கறை கொண்டுள்ள மிக புரட்சிகரமான, முற்போக்கான வர்க்கமாகிய தொழிலாளி வர்க்கத்தின் வர்க்க நிலைகளில் இது நிற்பதும் இது உண்மையான விஞ்ஞான அரசியல் பொருளாதாரமாக இருப்பதற்கான காரணமாகும். தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை பொருளாதார நலன்கள் சமுதாயத்தின் முன்னோக்கிய வளர்ச்சியுடனும், கம்யூனிசத்தை நோக்கிய மனித சமுதாய முன்னேற்றத்தின் புறவய விதிகளுடனும் தொடர்புடையவையாகும்.

வி. இ. லெனினின் படைப்புகள் மார்க்சிய அரசியல் பொருளாதாரப் பிரச்சினைகளை ஆராய்வதன் பாலான வர்க்க அணுகுமுறையின் சிறந்த எடுத்துக் காட்டாகும். தம் போதனை வறட்டு தத்துவமல்ல, மாறாக நடவடிக்கைக்கான வழிகாட்டியாகும் என்று மார்க்சிய ஆசான்கள் கூறியது எப்போதும் வி. இ. லெனினின் கவனத்தில் இருந்து வந்தது. கா. மார்க்சின் பொருளாதாரத் தத்துவத்தின் விரோதிகள், இதைத் திரிக்க முயன்றவர்கள், இதன் புரட்சிகர சாரத்தை மறைக்க முயன்றவர்கள் ஆகியோருக்கு எதிரான போராட்டத்தில் வி. இ. லெனின் இத்தத்துவத்தை உறுதியோடு காத்து நின்றார், வளர்த்தார்.

ருஷ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி எனும் தன் முக்கிய படைப்பிலும் (இது **1899**இல் வெளிவந்தது), மற்ற படைப்புகளிலும் வி. இ. லெனின் புனருற்பத்தி பற்றிய மார்க்சியத் தத்துவத்தை வளர்த்தார், **1905**ஆம் ஆண்டில் நடைபெற்ற முதல் ருஷ்யப் புரட்சியில் வர்க்கச் சக்திகளின் நிலவரம் பற்றிய ஆழ்ந்த பகுப்பாய்வைத் தந்தார், தொழிலாளி வர்க்கத்தின் தலைமை

யின் கீழ் தொழிலாளி வர்க்கமும் விவசாயிகளும் அணி திரள வேண்டியதன் அவசியத்தை ஆதாரப் படுத்தினார், ருஷ்யாவில் முதலாளித்துவ வளர்ச்சியின் பொது அம்சங்களையும் சிறப்பியல்புகளையும் காட்டி னார்.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில், 20ஆம் நூற்றாண் டின் துவக்கத்தில் முதலாளித்துவம் தன் வளர்ச்சியில் உச்ச, இறுதிக் கட்டமாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தினுள் நுழைந்தது. விஞ்ஞான கம்யூனிச ஆசான்களின் பணி யைத் தொடர்ந்த வி. இ. லெனின் முதன்முதலாக, **ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்** என் னும் தன் நூலில் ஏகாதிபத்தியத்தைப் பற்றிய விஞ்ஞான ரீதியான பகுப்பாய்வை தந்தார். இந்நூலை கா. மார்க் சின் **மூலதனம்** நூலின் நேரடியான தொடர்ச்சி என லாம். வி. இ. லெனின் ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அறிகுறிகளை ஆராய்ந்தார், இதை ஏகபோக, ஒட்டுண் ணித்தனமான, அழுகக் கூடிய முதலாளித்துவம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது என்று வரையறுத்தார். ஏகாதிபத்தியத்தின் பொருளாதார சாரத்தைப் பற்றிய பகுப்பாய்வின் அடிப்படையில், வி. இ. லெனின் ஏகாதிபத்திய சகாப்தத்தில் முதலாளித் துவத்தின் பொருளாதார, அரசியல் வளர்ச்சியின் ஏற்றத்தாழ்வான தன்மை பற்றிய விதியை ஆதாரப் படுத்தினார். இவ்விதியின் அடிப்படையில் இவர், முதலில் தனிப்பட்ட ஒரு முதலாளித்துவ நாட்டில் சோஷலிசம் வெற்றி பெறும் வாய்ப்பைப் பற்றியும் எல்லா நாடுகளிலும் ஒரே நேரத்தில் சோஷலிசம் வெற்றி பெறுவது சாத்தியமில்லை என்றும் கூறினார். இம்முடிவு சோஷலிச புரட்சியைப் பற்றிய புதிய தத்துவத்தின் அடிப்படையாக அமைந்தது. வி. இ. லெனின் முதலாளித்

துவப் பொது நெருக்கடியின் சாரத்தையும் முக்கிய அம்சங்களையும் கண்டுபிடித்துக் கூறினார், சோஷலிசத்திற்கு மாறிச் செல்வது பல்வேறு வடிவங்களில் நடைபெறலாம் என்று காட்டினார்.

ஏகாதிபத்தியம் பற்றிய தத்துவத்தைத் தோற்றுவித்த வி. இ. லெனின் சீர்திருத்தவாதத்தையும் சந்தர்ப்பவாதத்தையும் அம்பலப்படுத்தினார், ஏகாதிபத்தியத்துடன் இவற்றிற்கு உள்ள தொடர்பையும், தொழிலாளர் இயக்கத்தில் இவை ஆற்றும் துரோகப் பங்கையும் காட்டினார். சீர்திருத்தவாதிகளும் சந்தர்ப்பவாதிகளும் சோஷலிசத்தையும் தொழிலாளர்களின் நலன்களையும் பாதுகாப்பதாகப் பாசாங்கு செய்து, முதலாளித்துவம் சோஷலிசமாக வளர்ச்சியுறுவது பற்றிய மார்க்சிய விரோதக் கருத்துக்களை முன்வைக்க முயலுகின்றனர் என்பதையும், வர்க்கப் போராட்டத்தை நிராகரித்து, முதலாளித்துவ சமுதாயத்தில் வர்க்க ஒத்துழைப்பு வேண்டுமென பிரச்சாரம் செய்கின்றனர் என்பதையும் (மார்க்சியத்திலிருந்து இதன் புரட்சிகர மனப்பாங்கை அகற்றித் தள்ளி, முதலாளி வர்க்கத்திற்கு எதிரான போராட்டத்திலும் சோஷலிச சமுதாயத்தின் கட்டுமானத்திலும் பாட்டாளி வர்க்கத்திற்குச் சித்தாந்த ஆயுதம் இல்லாமல் செய்வதுதான் இவற்றின் நோக்கம்) வி. இ. லெனின் காட்டினார். இரண்டாவது அகிலத்தின் தலைவர்கள் படுதோல்வி அடைந்ததற்கு மார்க்சியத்தின் பாலான இவர்களுடைய வறட்டுத்தனமான அணுகுமுறையும், பொருளாதார வாழ்வின் புதிய புலப்பாடுகளைப் புரிந்து, இவற்றிற்கு விளக்கமளிக்க இவர்களால் முடியாமலிருந்ததும்தான் முக்கியக் காரணங்களாகும் என்பது திண்ணம்.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்குப் பின்

வி. இ. லெனின் பல படைப்புகளில் புரட்சியின் அனுபவம், சோவியத் நாட்டில் சோஷலிசக் கட்டுமானத்தின் முதலாண்டுகளின் அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் சோஷலிச அரசியல் பொருளாதாரத்திற்கு அடித்தளமிட்டார், கம்யூனிசக் கட்டுமான வழிகள், முறைகள் பற்றிய மார்க்ஸ், எங்கெல்சின் கருத்துநிலைகளை வளர்த்தார். இவர் சோவியத் யூனியனில் சோஷலிசத்தைக் கட்டும் திட்டத்தை (இதன் முக்கிய அம்சங்கள் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் எல்லா நாடுகளுக்கும் பொதுவானவை) தீட்டினார், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம், தொழிலாளி வர்க்கத்திற்கும் விவசாயிகளுக்கும் இடையிலான கூட்டு, சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளம் ஆகியவை பற்றிய பிரச்சினைகளை ஆதாரப்படுத்தினார். **கூட்டுறவு குறித்து** எனும் கட்டுரையில் வி. இ. லெனின் தன் பிரபல கூட்டுறவுத் திட்டத்தை முன்வைத்தார். சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த இத்திட்டம், சோஷலிசக் கட்டுமானத்திற்குள் விவசாயிகளைக் கொண்டு வரும் வழிகளையும் வடிவங்களையும் சுட்டிக் காட்டுகிறது. பொருளாதார விதிகளின் புறவயத் தன்மை, இவற்றை அறிந்து, சோஷலிசக் கட்டுமானத்தில் பயன்படுத்துவது பற்றிய மார்க்சியக் கருத்துநிலைகளை இவர் வளர்த்தார், சோஷலிசத்தில் தேசியப் பொருளாதாரம் திட்டமிட்ட வகையில் வளர வேண்டியதன் அவசியத்தை சுட்டிக் காட்டினார், சோஷலிசத் திட்டமிடலின் முக்கியக் கோட்பாடுகளை ஆதாரப்படுத்தினார், இதன் நடைமுறை நிறைவேற்றத்திற்கான வழிகளைக் காட்டினார்.

புதியவற்றை, முற்போக்கானவற்றை நன்கு கவனித்து வந்த வி. இ. லெனின் முதல் கம்யூனிச சுபோத்னிக்கு

களில்* உழைப்பின் பாலான எதிர்கால கம்யூனிச உறவின் கருவைக் கண்டார், சமூக உழைப்பை சோஷலிச முறையில் ஒழுங்கமைப்பதன் அடிப்படை ரீதியான, கோட்பாட்டு வழிப்பட்ட சிறப்பியல்புகளைத் தெளிவுபடுத்தினார். பழையதாகிப் போன முதலாளித்துவத்தை விட திட்டமிட்ட சோஷலிச சமுதாய அமைப்பிற்கு உள்ள மாபெரும் அனுகூலங்களைக் காட்டினார், உலகம் தழுவிய அளவில் சோஷலிசமும் கம்யூனிசமும் வெற்றி பெறுவது தவிர்க்க இயலாதது என்று தெளிவுபடுத்தினார். இவ்வாறாக வி. இ. லெனின் பரவலான பொருளில் அரசியல் பொருளாதாரத்தின் இறுதிப் பிரிவாகிய கம்யூனிச உற்பத்தி முறையின் அரசியல் பொருளாதாரத்திற்கு அடித்தளமிட்டார். சோஷலிச வளர்ச்சி மற்றும் கம்யூனிசத்திற்கு மாறிச் செல்வது சம்பந்தமாக வி. இ. லெனின் கண்டுபிடித்த பொருளாதார நியதிகள், சோஷலிச நாடுகளின் சோஷலிச, கம்யூனிசக் கட்டுமான நடைமுறையிலும் சோஷலிசத் திசைவழியைப் பின்பற்றுகின்ற நாடுகளின் நடைமுறையிலும் வெளிப்படுகின்றன.

கா. மார்க்சின் பொருளாதாரப் போதனையை வளர்ப்பதில் வி. இ. லெனின் ஆற்றிய பங்கைப் பற்றி மௌனம் சாதிக்கவும் இதைத் திரிக்கவும் இவர்களை ஒருவருக்கொருவர் எதிரெதிராக வைக்கவும் நவீன பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் சகல விதங்களிலும் முயலு

* உழைப்பாளிகள் தாமாகவே முன்வந்து ஊதியம் எதுவும் பெறாமல் செய்யும் வேலை. இது உழைப்பின் பாலான இவர்களுடைய கம்யூனிச அணுகுமுறைக்கு நல்ல ஒரு எடுத்துக்காட்டு. **1919**இல் துவங்கிய இந்த கம்யூனிச சுபோத்னிக்குகள் அன்னிய இராணுவ தலையீடு, உள்நாட்டுப் போர்க் காலத்தில் பெரிதும் பரவலாக நடக்கலாயின. — ப-ர்.

கின்றனர். மார்க்சியம் பழையதாகி விட்டதாகக் காட்ட இவர்கள் பெரும் முயற்சி செய்கின்றனர், அரசியல் பொருளாதாரத்தில் லெனினியக் கட்டம் என்பது ஏதோ ருஷ்யாவின் குறுகிய தேசிய வரம்புகளுக்கு மட்டுமே கட்டுப்பட்டது என்று நிரூபிக்க முயலுகின்றனர்.

ஆனால் கா. மார்க்ஸ், பி. எங்கெல்சால் தோற்றுவிக்கப்பட்டு, வி. இ. லெனினால் வளர்க்கப்பட்ட அரசியல் பொருளாதாரம், உலகெங்கும் உள்ள தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படை நலன்களின் விஞ்ஞான பூர்வமான வெளிப்பாடாகும். ஒளிமயமான எதிர் காலத்தை நோக்கிய பாதையமைக்கும் கடமையை வரலாறே தொழிலாளி வர்க்கத்திற்கு அளித்துள்ளது; வன்முறையும் சுரண்டலும் இல்லாத, உழைப்பும் சமாதானமும் கோலோச்சும் கம்யூனிச சமுதாயத்தைக் கட்டுவது இந்த தொழிலாளி வர்க்கத்தின் கடமையாகும்.

இப்படிப்பட்டதொரு சமுதாயத்தைப் பற்றி மனிதர்கள் எப்போதுமே கனவு கண்டு வந்துள்ளனர். சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதியில், தொழிலாளி வர்க்கத்தின் மாபெரும் ஆசான்களின் மகத்தான உழைப்பின் பயனாய் இக்கனவுகள் ஒரு திட்டவட்டமான விஞ்ஞானத் தத்துவமாக மாறின; உலகை வியாக்கியானம் செய்வது மட்டுமின்றி இதை மாற்றியமைப்பதும் இதன் உயர்ந்த நோக்கமாகும். இதற்கு முந்தைய போதனைகளுக்கு மாறாக இத்தத்துவம் விரைவிலேயே நடைமுறையில் மெய்ப்பிக்கப்பட்டது. இது வரலாற்றுப் பாதையில் தன் வெற்றிப் பவனியைத் துவக்கியது. ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி இதன் வெற்றியாக அமைந்தது. இது மனித குலத்தின் வரலாற்றில், உலக வளர்ச்சிப் போக்கில்

ஒரு மாபெரும் திருப்புமுனையாகத் திகழ்ந்தது. சோவியத் யூனியனில் வளர்ச்சியடைந்த சோஷலிசம் கட்டப்பட்டதும் சில ஐரோப்பிய, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் சோஷலிசக் கட்டுமானத்தின் சாதனைகளும் மார்க்சிய-லெனினிய போதனையின் வெற்றிக்கு அடையாளமாகும். ஏகாதிபத்திய ஒடுக்குமுறையிலிருந்து விடுவிக்கப்பட்ட பல மக்களினங்கள் இன்று முன்னேற்ற, சோஷலிசப் பாதைக்கு வந்துள்ளனர்.

அத்தியாயம் ஏழு

முதலாளித்துவத்திற்கு முன்

முந்தைய அத்தியாயங்களில் மார்க்சிய-லெனினிய அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளைப் பற்றியும் இதன் ஆராய்ச்சி முறையின் முக்கிய சிறப்பு அம்சங் களைப் பற்றியும் பார்த்தோம். இப்போது இந்த ஆராய்ச்சிப் பொருளைப் பற்றி விளக்கமாகவும், திட்டவட்டமான உற்பத்தி முறைகளைப் பகுப்பாய்வு செய்யும் போது இம்முறை எப்படிப் பயன்படுத்தப் படுகிறது என்றும் பார்ப்போம். மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியை நாம் இங்கு சுருக்கமாகத்தான் பார்க்கப் போகின்றோம் என்பதை சொல்லத் தேவை யில்லை. மேற்கூறிய பிரச்சினைகளில் பலவற்றைப் பற்றி இந்நூல் வரிசையில் பல தனி நூல்கள் வெளியிடப்பட் டுள்ளன.

முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்புகளின் மிச்ச சொச்சங்கள்

சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியைப் பற்றிய ஆராய்ச்சியை முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக

அமைப்புகளிலிருந்து துவக்க வேண்டுமென தர்க்கமும் வரலாறும் கட்டளையிடுகின்றன. ஆனால் அதே நேரத்தில், முதலாளித்துவத்திற்கு முன் இருந்த, வரலாற்று மேடையிலிருந்து பெரிதும் மறைந்து போன சமூக உற்பத்தி முறைகளைப் பற்றி ஆராய வேண்டுமா எனும் கேள்வி தோன்றக் கூடும்.

மனிதகுலத்தின் கடந்த காலத்தைப் பற்றி நன்கு அறியாமல் நிகழ்காலத்தைப் புரிந்து கொள்ள இயலாது, எதிர்காலத்தைக் கணிக்க இயலாது என்பதற்காகவாவது இத்தகைய ஆராய்ச்சி அவசியம். இந்த கடந்த காலத்தை பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள் சகல விதங்களிலும் திரித்துரைக்கின்றனர். தனியுடைமை மற்றும் முதலாளித் துவ முறைகள் நிரந்தரமானவை, மாற்றப்பட முடி யாதவை என்பதை நிரூபிக்க முயலும் இவர்கள், தனி யுடைமையோ, ஒடுக்குபவர்களோ, ஒடுக்கப்படுபவர்களோ இல்லாத ஒரு சமூக அமைப்பிலிருந்துதான் மனித வரலாறே ஆரம்பமானது என்பதையே மறுக்கின்றனர். புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு நிலவியதை ஒப்புக் கொள்வதே, முதலாளித்துவம் நிலையானது என்பதைப் பற்றிய இவர்களுடைய கருத்துக்களை நிராகரிக்கிறது; தனியுடைமையும் வர்க்கங்களும் சுரண்டலும் இல்லாத, பொருளாயத நலன்களின் உற்பத்தி மற்றும் சுவீகரிப்பில் கூட்டுக் கோட்பாடுகள் நிலவும் கம்யூனிச சமுதாயத்தைத் தோற்றுவிக்க இயலாது எனும் வாதமும் அடிபட்டு போகிறது. எனவே இப்படிப்பட்டதொரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பது வரலாற்று ரீதியான அதிசயமோ, ''இயற்கையை'' மீறுவதோ அல்ல. புராதனக் கூட்டுச் சமூக அமைப்பையும் கம்யூனிச சமுதாயத்தையும் ஒப்பிடுவது, அதுவும் இவற்றின் இடையே சமன் குறியிடுவது முற்றிலும் தவறாகும். ஏனெனில் புராதனக்

கூட்டுச் சமூக அமைப்பில் உற்பத்தியிலும் சுவீகரிப்பிலும் கூட்டு மனப்பாங்கு நிலவ உற்பத்திச் சக்திகளின் பலவீனம்தான் காரணமாகும். வாழுவதற்காக மனிதர்கள் இயற்கையுடன் அன்றாடம் கடுமையாகப் போராட வேண்டியிருந்தது. இதற்கு மாறாக கம்யூனிச சமுதாயத்தில் உற்பத்திச் சக்திகள் பெருமளவு வளர்ச்சியடைந்திருக்கும்; இது சமுதாய உறுப்பினர்கள் அனைவருக்கும் நல்வாழ்வை அளிக்கவும் அவர்களின் பன்முக வளர்ச்சிக்கு வழிகோலவும் உதவும். மார்க்சிஸ்டுகள் ஏதோ புராதனக் கூட்டுச் சமூக அமைப்பை இலக்கியலாக்குவதாயும், நாகரிக நலன்களை விட்டு விட்டு குகைகளுக்குத் திரும்புமாறு மக்களை அழைப்பதாயும் சில பூர்ஷ்வா விஞ்ஞானிகள் கூறுகின்றனர். ஆனால் மனிதகுல வளர்ச்சியில் இக்காலகட்டத்தைப் ''பொற்காலமாக'' (இதில் மக்கள் ஏதோ உழைக்காமலேயே இயற்கைச் செல்வங்களைப் பயன்படுத்தினார்களாம்) சித்தரிக்கச் செய்யப்படும் சகலவித முயற்சிகளையும் விஞ்ஞான கம்யூனிசத்தின் சித்தாந்தவாதிகளாகிய மார்க்சிஸ்டுகள்தான் உறுதியோடு எதிர்க்கின்றனர் என்பதை ஏனோ மறந்து விடுகின்றனர்.

அடிமையுடைமை அமைப்பை மதிப்பிடுவதிலும் மனித சமுதாய வரலாற்றில் இதன் இடத்தை நிர்ணயிப்பதிலும் சித்தாந்தப் போராட்டம் நடக்கிறது. பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் வரலாற்றியலாளர்களும், அடிமையுடைமை அமைப்பு என்பது மனித சமுதாயத்தின் முற்போக்கு வளர்ச்சியில் நியதியான கட்டம் என்பதை கவனத்தில் கொள்ளாமல் அடிமையுடைமையின் கொடூரம் மற்றும் ஒழுக்கக் கேடு ஆகியவற்றைப் பற்றி பெரிதும் கூச்சலிடுகின்றனர். இன்று வரை ''நாகரிகமான, ஜனநாயககரமான'' முதலாளித்துவ சமுதாயத்தில்

எஞ்சியுள்ள அடிமையுடைமையின் மிச்ச சொச்சங்களை இவர்கள் காணாமல் கண்களை மூடிக் கொள்கின்றனர். தென் அமெரிக்காவில் உள்ள கடனடிமைச் சேவகம், தென்னாப்பிரிக்க சுரங்கங்கள், தோட்டங்களில் கட்டாய உழைப்பு, வாங்கிய கடனுக்காக ஒரு சில ஆசிய நாடுகளில் குழந்தைகள், பெண்களை விற்பது போன்ற வெட்கக் கேடான விஷயங்களைக் குறிப்பிடுவதே போதும்.

நிலப்பிரபுத்துவ உறவுகளின் மிச்ச சொச்சங்களும் இன்று பல நாடுகளில் பெரிதும் பரவியுள்ளன. முன்னர் காலனியாட்சிக்கு உட்பட்டு சார்பு நிலையிலிருந்த ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் மற்றும் ஓரளவிற்கு இத்தாலி, ஸ்பெயின், போர்ச்சுகல், கிரீஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு இது பொருந்தி வரும். உலக முதலாளித்துவ பொருளாதார வட்டத்திற்குள் இழுக்கப்பட்ட விடுதலையடைந்த நாடுகளில் முதலாளித்துவ உறவுகளோடு கூட நிலப்பிரபுத்துவ, அடிமையுடைமை, குலமரபு உறவுகளும் நிலவுகின்றன. நவீன காலனியாதிக்கக் கொள்கையைப் பின்பற்றும் ஏகாதிபத்திய அரசுகள், சுரண்டலை அதிகப்படுத்தி, கொள்ளை லாபம் பெறுவதற்காகவும் தம் இராணுவத் தளங்களை நிறுவுவதற்காகவும் இந்த உறவுகளைத் தக்க வைக்க முயலுகின்றன. இதற்காக குலத் தலைவர்கள், சிற்றரசர்கள், சுல்தான்களின் பிற்போக்கு ஆட்சிகளுக்கு நிதி ஆதரவு அளிப்பதிலிருந்து ''குண்டாந்தடி அரசியல்'', நேரடி இராணுவத் தலையீடு வரை சகலவித சாதனங்களும் பயன்படுத்தப்படுகின்றன.

உலக சோஷலிச அமைப்பு வளர்ச்சியடைந்துள்ள சூழ்நிலைகளில், இதன் வல்லமையும் செல்வாக்கும் அதிகரித்துள்ள போது, காலனியாதிக்கத்திலிருந்து விடு

பட்டு சுதந்திரமான வளர்ச்சிப் பாதைக்கு வந்துள்ள மக்களினங்களின் முன் சோஷலிசத் திசையமைவிற்கான வாய்ப்பு, முதலாளித்துவம் அல்லாத வளர்ச்சிப் பாதையில் சென்று சோஷலிசத்திற்கு மாறும் வாய்ப்பு தோன்றியுள்ளது. முதலாளித்துவத்திற்கு முந்தைய சமூக அமைப்புகளின் பொருளாதார உறவுகளை ஆராயும் முக்கியத்துவம் இதனுடனும் தொடர்புடையதாகும்.

விடுதலையடைந்த நாடுகள், காலனி நாடுகள் மற்றும் அரைக் காலனி நாடுகளின் பரப்பு 1983இல் பூமியின் மொத்த பரப்பில் 62 சதவிகிதமாக இருந்தது; இதில் சுமார் 2.4 பில்லியன் மக்கள் வாழ்ந்தார்கள். இந்த நாடுகள் பலவற்றில் பொருளாதாரம் என்பது புராதனக் கூட்டுச் சமூக அமைப்பிலிருந்து ஏகபோக கட்டத்தையடைந்த முதலாளித்துவ அமைப்பு வரையிலான பல்வேறு பொருளாதார உறவுகளின் சிக்கலான பிணைப்பு, கதம்பமாகும்.

மனிதகுலத்தின் குழந்தைப் பருவம்

மனித சமுதாயம் 20 லட்சம் ஆண்டுகளுக்கும் முன் தோன்றியது. **புராதனக் கூட்டுச் சமூக அமைப்புதான்** இதன் முதல் வடிவமாக இருந்தது. இது ஒரு மிக நீண்ட காலகட்டமாக இருந்தது. ஒரு ஒப்புமைக்காக பின்வருபவற்றைக் குறிப்பிடலாம்: அடிமையுடைமை உற்பத்தி முறை 4000 ஆண்டுகளும் நிலப்பிரபுத்துவம் ருஷ்யாவில் 1000 ஆண்டுகளும் சீனாவில் 2000 ஆண்டுகளும் நிலவின. முதலாளித்துவத்தின் வயதோ சுமார் 250 ஆண்டுகள்தான்.

மனித சமுதாயத்தின் தோற்றம் என்பது நியதியான, இயற்கையான வரலாற்று நிகழ்ச்சிப் போக்கு. இதில்

அதிசய கடவுளர் நடவடிக்கைக்கு இடமேயில்லை. தன் நீண்ட வளர்ச்சியில் புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு சில கட்டங்களைக் கடந்து வந்துள்ளது. அவையாவன: புராதன மனித கூட்டம் அல்லது இனக்குழுவிற்கு முந்தைய சமுதாயம்; இனக்குழு அமைப்பு அல்லது இனக்குழுக் கூட்டுச் சமூகம்; கிராமக் கூட்டுச் சமூகம். இனக்குழுக் கூட்டுச் சமூகம், தாய்வழி காலகட்டம் (தாய்வழி இனக்குழு அமைப்பு அல்லது தாய்வழி இனக்குழுக் கூட்டுச் சமூகம்) என்றும் தந்தைவழி காலகட்டம் (தந்தைவழி இனக்குழு அமைப்பு அல்லது தந்தைவழி இனக்குழுக் கூட்டுச் சமூகம்) என்றும் பிரிக்கப்படுகிறது.

விலங்குலகிலிருந்து மனிதன் தோன்ற லட்சோப லட்சம் ஆண்டுகள் தேவைப்பட்டன. மனிதக் குரங்கி லிருந்து மனிதன் தோன்றுவதிலும், சமுதாயம் பிறந்து, வளர்ந்ததிலும் உழைப்பு பெரும் பங்காற்றியது. கூட்டு உழைப்பு, உழைப்புக் கருவிகளைத் தயாரித்தது, தெளிவான பேச்சு ஆகியவை மனித வளர்ச்சிக்கு, குறிப்பாக மூளையின் வளர்ச்சிக்கு உதவின. மனிதக் குரங்குகளின் மந்தை படிப்படியாகப் **புராதன மனித கூட்டமாக** மாறியது, மனிதர்கள் உழைப்புக் கருவிகளின் மூலம் இயற்கையின் மீது தாக்கம் செலுத்தி, பொருட் களை உற்பத்தி செய்யத் தொடங்கினர்.

நெருப்பைப் பயன்படுத்தியதானது புராதன மனிதர் களின் வாழ்வில் பெரும் பங்காற்றியது. இது இயற்கை யின் மகத்தான சக்திகளை அடக்கியாளும் வாய்ப்பை மனிதனுக்கு அளித்தது, இதனால் மனிதன் விலங் குலகிலிருந்து முற்றிலுமாகப் பிரிந்தான்.

காலப்போக்கில் மனிதர்கள் கல்லையும் கழிகளையும் பயன்படுத்துவதிலிருந்து உலோகங்களைக் கொண்டு

சிக்கலான கருவிகளை உற்பத்தி செய்வதற்கு மாறினர். முதலில் இதற்காக தாமிரமும் பின்னால் வெண்கலமும் இரும்பும் பயன்படுத்தப்பட்டன. இதற்கேற்ப, பல்லாயிரமாண்டுகள் நிலவிய புராதன சமுதாய வரலாற்றை விஞ்ஞானிகள் தாமிர-கல் யுகம், வெண்கல யுகம், இரும்பு யுகம் என்று பிரிக்கின்றனர். உழைப்புக் கருவியைத் தயாரித்ததில் புராதன மனித உழைப்பின் உற்பத்தித் திறன் மிகவும் குறைவானதாயிருந்தது. பிரபல ருஷ்யப் பயணியும் மானுடவியல் நிபுணருமான மிக்லூஹோ-மக்லாயின் கூற்றுப்படி — இவர் 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதியில் புது கினியின் பாப்பு வாசா மக்களின் வாழ்க்கையை ஆராய்ந்தார் — ஒரு கற்கருவியின் தயாரிப்பை பாட்டனார் துவக்க, பேரன் தான் அதை முடித்து வைத்தான்.

வில்லும் அம்பும் கண்டுபிடிக்கப்பட்டதானது புராதன சமுதாயத்தின் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் ஒரு புதிய, முக்கியமான கட்டமாக அமைந்தது. இதன் பயனாய் வேட்டையாடுதல் என்பது வாழ்க்கைக்கு தேவையானவற்றை அளிக்கும் நம்பகரமான மூல ஊற்றாகியது. படிப்படியாக மனிதர்கள் தாம் கொன்ற மிருகங்களின் குட்டிகளை வளர்க்கத் துவங்கினார்கள், பின்னால் மிருகங்களைக் கொன்றதோடு கூட, வளர்ப்பதற்காக என்றே தனியாக மிருகங்களை பிடிக்கத் துவங்கினார்கள். கால்நடை வளர்ப்பு தோன்றியது, இது இறைச்சி, பால், ரோமம், மற்ற பொருட்களின் உற்பத்தியைப் பெருக்கியது.

உழைப்புக் கருவிகள் மேம்பாடு அடைந்ததையடுத்து தாவர சேகரிப்பிலிருந்து நெல், மக்காச்சோளம், ரை, மற்ற விவசாயப் பயிர்களை முறையாகப் பயிரிட மாறிச் செல்ல முடிந்தது. மண்வெட்டிப் பயிர்த்தொழிலிருந்து

மிருகங்களைப் பயன்படுத்தி நிலத்தை உழுது பயிரிடும் விவசாயத்திற்கு மாறியதால் வேளாண்மை வளர்ச்சி அடைந்தது.

புராதன சமுதாயத்தில் உழைப்புக் கருவிகள் கூட்டாகப் பயன்படுத்தப்பட்டன. இது புரியக் கூடியதே. உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம் மிகவும் கீழாக இருந்த போது, கூட்டு உழைப்பின் மூலம் மட்டுமே புராதன மனிதர்களால், வாழ்க்கைக்குத் தேவையானவற்றை உற்பத்தி செய்ய முடிந்தது. புராதன மனிதனின் கூட்டு உழைப்பு நடவடிக்கை எளிய கூட்டுறவின் வடிவத்தைக் கொண்டிருந்தது: ஒரே உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் ஓரளவு கணிசமான மக்கள் கூட்டாகப் பங்கேற்றார்கள் (கூட்டு வேட்டை, எளிய பயிர்த்தொழில், இத்தியாதி).

கூட்டு உழைப்பு கூட்டு பொதுச் சொத்துடைமையை நிர்ணயித்தது: எல்லா உற்பத்திச் சாதனங்களும் தயாரான பொருட்களும் அனைவரின் சொத்தாகத் திகழ்ந்தன. கத்திகள், கோடாரிகள், வில்கள், அம்புகள், படகுகள், இருப்பிடங்கள் போன்றவை பொதுச் சொத்தாக இருந்தன. நிலமும் பொதுச் சொத்தாக இருந்தது.

புராதன சமுதாயத்தில் உழைப்பின் உற்பத்தித் திறன் மிகவும் கீழான மட்டத்தில் இருந்தது. உழைப்பின் விளைபொருட்கள் மக்களின் உடனடி வாழ்க்கைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு மட்டுமே போதும் போதும் என்றிருந்தது. எனவே சமமான பகிர்வு மட்டுமே பொருட்களை வினியோகிக்கும் ஒரே வடிவமாக இருந்தது. இந்த பொதுமைக் கோட்பாடு பின்பற்றப் படாமல் ஒரு சிலர் மற்ற சிலரை விட அதிக மாகப் பெற்றிருந்தால் பலர் பட்டினியால் மாண்

டிருக்க நேரிட்டிருக்கும். இவ்வாறு பொருட்களைச் சமமாகப் பங்கிடும் பழக்கம் ஆழமாக வேரூன்றியுள்ளது. இதை சமீபத்தில் கூட ஆராய்ச்சியாளர்கள், ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் வாழும் பல குலங்களிடம் கண்டார்கள். தியேர்ரா டெல் ஃபுயேகோ என்ற தீவில் வாழ்ந்த குலங்களில் ஒன்றிற்கு சிறிய கித்தான் துணியைத் தந்த போது, இக்குலத்தினர் அனைவருக்கும் சம பங்கு கிட்டுவதற்காக அதை சிறு சிறு துண்டுகளாக அவர்கள் கிழித்ததாக சார்ல்ஸ் டார்வின் குறிப்பிட்டார்.

புராதன சமுதாயத்தில் பொதுச் சொத்துடைமை, கூட்டு உழைப்பு, சமத்துவ அடிப்படையிலான வினியோகம் முதலியவை ஆதிக்கம் செலுத்திய வரை சமுதாயம் வர்க்கங்களாகப் பிரிக்கப்படவில்லை, மனிதனை மனிதன் சுரண்டுவதும் நிலவவில்லை.

பல பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்களும் பொருளாதார நிபுணர்களும் தெட்டத் தெளிவான உண்மைகளுக்கு மாறாக, ''தனித்தனியே வாழ்ந்த தனிநபர்களின்'' நடவடிக்கையிலிருந்து, தனிப்பட்ட வேடுவர்கள், மீன் பிடிப்பவர்கள், பயிர்த்தொழில் செய்தவர்கள் (இவர்கள் தாமே உழைப்புக் கருவிகளை உருவாக்கினார்கள், இவற்றின் சொந்தக்காரர்களாயிருந்தார்கள்) ஆகியோரின் நடவடிக்கையிலிருந்து மனித சமுதாய வரலாறு துவங்கியதாக கூறுகின்றனர். உதாரணமாக, ஒரு சில பூர்ஷ்வா வரலாற்றாசிரியர்கள், மனிதகுலம் தோன்றிய போது இரண்டு வகையான மனிதர்கள் இருந்ததாயும், இவர்களில் சிலர் சோம்பேறிகளாயிருந்தனர், வேறு சிலர் உழைப்பார்வமுள்ளவர்களாய், சிக்கனமானவர் களாயிருந்தனர், இவர்கள்தான் பின்னர் சமுதாயத்தில் செல்வந்தர்களாயினர் என்றும் கூறுகின்றனர். வரலாறு,

தொல்பொருளியல், மானுடவியல் ஆகியவற்றின் புள்ளி விவரங்கள் தனியுடைமையின் ''தோற்றம்'' பற்றிய இக்கருத்துக்களை நிராகரிக்கின்றன; பி. எங்கெல்ஸ் **குடும்பம், தனிச்சொத்து, அரசு ஆகியவற்றின் தோற்றம்** எனும் தன் நூலில் ஏராளமான உண்மை விவரங்களைப் பகுப்பாய்வு செய்து, அதன் அடிப்படையில் இவற்றை நிராகரித்தார்.

நாம் ஏற்கெனவே கூறியபடி, விலங்குலகிலிருந்து பிரிந்து வந்த மனிதர்கள் முதலில் புராதனக் கூட்டங்களாக வாழ்ந்தனர். காலப்போக்கில் **இனக்குழு** அல்லது **இனக்குழுக் கூட்டுச் சமூகம்** தோன்றியது. இதுதான் புராதனக் கூட்டுச் சமூக அமைப்பின் அடிப்படையாகியது. இனக்குழு விவேகமான பொருளாதாரத்திற்கும், அனுபவம், பழக்கங்களின் தொடர்ச்சிக்கும் வகை செய்தது. ரத்த உறவால் இணைக்கப்பட்டிருந்த நபர்கள்தான் இனக்குழுவில் இருந்தார்கள் என்பதை ஆப்பிரிக்கா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா, பாலினீசியா ஆகிய இடங்களில் உள்ள குலங்களின் வாழ்க்கையை ஆராய்ந்த ஆராய்ச்சியாளர்கள் குறிப்பிடுகின்றனர். ஒரு சில இனக்குழுக்கள் சேர்ந்து குலத்தை ஏற்படுத்தின; இந்த குலத்தின் வாழ்க்கை, பொது உழைப்பு மற்றும் உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்திருந்தது. கூட்டாக உற்பத்தி செய்யப்பட்ட எல்லா பொருட்களும் கூட்டுச் சமூக உறுப்பினர்கள் மத்தியில் சமமாக வினியோகிக்கப் பட்டன, கூட்டுச் சமூகத்தின் உள்ளேயே இயற்கையான வடிவில் நுகரப்பட்டன. சென்ற நூற்றாண்டின் நடுப் பகுதி வரை நிலவிய இரகுவோஸ் இனத்தைச் சேர்ந்த செவ்விந்தியர்களின் இனக்குழு அமைப்பை விவரித்த பிரபல அமெரிக்க வரலாற்றாசிரியரும்

மானுடவியல் நிபுணருமாகிய மோர்கன் இனக்குழு உறுப்பினர்கள் கூட்டாக, பெரும் இருப்பிடங்களில் (இவற்றில் பல டஜன் குடும்பங்கள் வாழலாம்) வாழ்ந்த தாகக் கூறினார். கூட்டுச் சமூகத்திற்கான உணவு இருப்புகளும் இதே இருப்பிடங்களில்தான் சேமித்து வைக்கப்பட்டன.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மட்டம் மிகவும் கீழானதாயிருந்தது, தனி மனிதனால் இயற்கையை எதிர்த்துப் போராட முடியாமலிருந்தது, இவன் வாழ்க் கைச் சுமைகளால் ஒடுக்கப்பட்டிருந்தான். பொதுச் சொத்துடைமையின் அடிப்படையிலான கூட்டுச் சமூக வரம்புகளுக்குள் மட்டுமே அவனால் வாழ முடிந்தது. எனவே, **கூட்டு உழைப்பாலும் சமத்துவ வினியோகத் தாலும் கூட்டுச் சமூகமும் இதன் ஒவ்வொரு உறுப்பினரும் வாழ வகை செய்வதுதான் புராதனக் கூட்டுச் சமூக அமைப்பின் அடிப்படைப் பொருளாதார விதியாக இருந்தது.**

இனக்குழுக் கூட்டுச் சமூக வளர்ச்சியின் முதல் கட்டத்தில் பெண்ணுக்கு முக்கியப் பங்கிருந்தது. இது **தாய்வழி முறையின்** (தாய்வழி இனக்குழு) காலகட் டமாயிருந்தது. இதன் மிச்ச சொச்சங்கள் இன்று கூட சில மக்களினங்களிடையே காணப்படுகின்றன. கால்நடை வளர்ப்பிலும் (மேய்ச்சலிலும்) உழுது பயிரிடுவதிலும் ஆண்கள் ஈடுபடத் துவங்கியதும் — இவை கணிசமான அளவு அதிக பொருட்களைக் கொண்டு வரத் துவங்கின — தாய்வழி முறை மறைந்து **தந்தைவழி முறை** (தந்தைவழி இனக்குழு) வந்தது. இனக்குழுவில் ஆண்கள் முக்கிய மானவர்களாயினர். தந்தை வழியில் உறவு முறை கணக்கிடப்படலாயிற்று. தந்தைவழி முறைக்கு மாறியதை யடுத்து கிராமக் கூட்டுச் சமூகத்திற்கான மாற்றமும் நடைபெற்றது, புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு

சிதறியது.

புராதனக் கூட்டுச் சமூக அமைப்பு சிதறியது ஒரு நீண்ட நிகழ்ச்சிப் போக்காகும், இது பல ஆயிரமாண்டுகள் நடைபெற்றது. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைந்ததும் சமூக உழைப்புப் பிரிவினையும்தான் இந்த நிகழ்ச்சிப் போக்கின் அடிப்படைகளாகத் திகழ்ந்தன. முதலில் புராதன மக்களிடையேயான உழைப்புப் பிரிவினை இயற்கையானதாக, பால், வயது ரீதியானதாக இருந்தது, கூட்டுச் சமூகம், இனக்குழு, குலம் ஆகியவற்றின் வரம்புகளை விட்டு வெளியே வரவில்லை. உற்பத்திச் சக்திகள் வளர்ச்சியடைய வளர்ச்சியடைய குறிப்பிட்ட சில பொருட்களின் உற்பத்தியில் சில தனிப்பட்ட கூட்டுச் சமூகங்கள் விசேஷமாக ஈடுபட்டன, **சமூக உழைப்புப் பிரிவினை** தோன்றியது. வளம் மிகு மேய்ச்சல் நிலங்களில் இருந்த குலங்கள் பயிர்த்தொழிலையும் வேட்டையையும் கைவிட்டன. இவை படிப்படியாக கால்நடை வளர்ப்பிற்கு மாறின, இதனால் அதிகமான இறைச்சி, பால், ரோமம், தோல் முதலியன கிடைத்தன. கால்நடை வளர்ப்பு பயிர்த்தொழிலிருந்து பிரிந்து தனித் துறையாகியது. முதல் பெரும் சமூக உழைப்புப் பிரிவினை நடந்தது.

இதன் பயனாய் தானியத்தைப் பயிரிட்ட குலங்களுக்கும் கால்நடை வளர்ப்பு குலங்களுக்கும் இடையில் பரிவர்த்தனைக்கான உறுதியான அடிப்படை ஏற்பட்டது. தற்செயலாக, அவ்வப்போது நடந்த பரிவர்த்தனை முறைப்படி நடக்கலாயிற்று. உழைப்பின் விளைபொருள் தனிப்பட்ட நுகர்விற்காக இல்லாமல், வேறொரு பொருளுக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வதற்காக உற்பத்தி செய்யப்படலாயிற்று, அதாவது உழைப்பின் விளைபொருள் பண்டமாயிற்று.

உழைப்புக் கருவிகளின் வளர்ச்சியும், மேய்ச்சல் மற்றும் பயிர்த்தொழில் குலங்களுக்கு இடையிலான உழைப்புப் பிரிவினையின் வளர்ச்சியும் உழைப்பை அதிக உற்பத்தித் திறனுள்ளதாக மாற்றின. சில உழைப்பு நடவடிக்கைகளில் கூட்டான உழைப்பைக் கைவிடுவது சாத்தியமாயிற்று, அதாவது தனித்தனியே உழைப்பில் ஈடுபடுவது சாத்தியமாயிற்று. இனக்குழுக்கள் பெரும் தந்தைவழிக் குடும்பங்களாகவும், இவை தனிப்பட்ட குடும்பங்களாகவும் பிரிந்தன. இனக்குழுக் கூட்டுச் சமூகம் படிப்படியாக **கிராமக் கூட்டுச் சமூகமாக** மாறியது. இனக்குழு கூட்டுச் சமூகத்திற்கு மாறாக, கிராமக் கூட்டுச் சமூகத்தில் ரத்த உறவுள்ள குடும்பங்கள் மட்டுமின்றி இத்தகைய உறவில்லாத குடும்பங்களும் இருந்தன, இவை தமக்கென்று அளிக்கப்பட்ட நிலங்களில் வேலை செய்து வந்தன. வீடும் இதைச் சுற்றிய தோட்ட நிலமும் பயிர்த்தொழில் செய்தவனின் தனிப்பட்ட சொத்துக்களாயின. அதே நேரத்தில் உழுது பயிரிடும் நிலம், புல்வெளிகள், காடுகள், மற்றவை கூட்டுச் சமூக சொத்துக்களாயிருந்தன. நீர்ப்பாசனம் போன்ற வேலைகள் கூட்டாகச் செய்யப்பட்டன.

நிலங்களை உழுது பயிரிடுவதில் தனித்தனி குடும்பங்கள் ஈடுபட்டதால், இவை உற்பத்தி செய்த பொருட்கள் ''பொது நிதிக்கு'' வரவில்லை, இவை கூட்டுச் சமூக உறுப்பினர்களிடையே பகிர்ந்தளிக்கப்படவில்லை. இவை தனிப்பட்ட குடும்பங்களின் சொத்துக்களாயின. பின்னால் நிலமும் தனிப்பட்ட குடும்பங்களின் சொத்தாகியது; தனிப்பட்ட குடும்பம் சமுதாயத்தின் அடிப்படைப் பொருளாதார அலகாகியது. **தனியுடைமை** தோன்று கிறது. இதையடுத்து மனிதர்களிடையே சொத்து அடிப்படையிலான வேறுபாடுகள் உருவாகின்றன, செல்

வந்தர்களும் ஏழைகளும் தோன்றுகின்றனர். செல்வந்தர்கள், ஏழைகள் என்ற பிரிவினையோடு சேர்ந்து எஜமானன், அடிமை என்ற பிரிவினையும் வருகிறது. புராதனக் கூட்டுச் சமூக அமைப்பிற்குப் பதில் மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான வர்க்க சமுதாயம் வருகிறது. இது முதற்கொண்டு சோஷலிசம் கட்டப்படும் வரை சமுதாய வரலாறு என்பது வர்க்கங்களுக்கு இடையிலான போராட்டத்தின் வரலாறாகும்.

நவீன உலகில் புராதனக் கூட்டுச் சமூக உறவு முறைகளின் மிச்ச சொச்சங்கள் எஞ்சியுள்ளன. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்கா, அலாஸ்கா, கானடா, கிரீன்லாந்து, ஆஸ்திரேலியா, பசிபிக் தீவுகள், இன்னும் சில இடங்கள் ஆகியவற்றில் இவற்றைக் காணலாம். இவை கிராமக் கூட்டுச் சமூக மிச்ச சொச்சங்களிலும், குலமரபு உறவுகளின் மிச்ச சொச்சங்களிலும் கூட — தாய்வழி முறை, தந்தைவழி முறையின் மிச்சங்களிலும், இயற்கைப் பொருளாதாரம் அப்படியே வைக்கப்பட்டிருப்பதிலும், குலத் தலைவர்கள் பாரம்பரியமாக ஆதிக்கம் செலுத்துவதிலும், குலப்பற்று முறையிலும், அதாவது எந்த குலமரபுத் தனிநிலைகளில் குலப் பிரிவின் மிச்சங்கள் அப்படியே உள்ளனவோ அவற்றிலும் — வெளிப்படுகின்றன.

குல மேல்மட்டத்தினரைப் பயன்படுத்தி குலங்களின் இடையே பகைமையை மூட்டி விடவும், மக்களைச் சுரண்டவும், இவர்களின் ஒற்றுமையைக் குலைக்கவும் ஏகாதிபத்திய அரசுகள் குலமரபு உறவுகளின் மிச்சங்களை செயற்கையாகத் தக்க வைக்க முயலுகின்றன. இன்று ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்ந்து விழுந்துள்ள போது, விடுதலையடைந்த நாடுகள் சுதந்திரமான வளர்ச்சிப் பாதையில் காலடி

எடுத்து வைத்துள்ள போது புராதனக் கூட்டுச் சமூக உறவுகளின் மிச்ச சொச்சங்களை அகற்றுவது உடனடிக் கடமையாகியுள்ளது.

அடிமையுடைமை சுமையின் கீழ்

புராதனக் கூட்டுச் சமூக உற்பத்தி முறைக்கு மாற்றாக வந்த அடிமையுடைமை உற்பத்தி முறைதான் சமுதாய வரலாற்றிலேயே மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையிலான முதல் உற்பத்தி முறையாகும்.

உபரி உற்பத்திப் பொருள் தோன்றியது அடிமையுடைமையின் பொருளாதார அடிப்படையாகியது. பயிர்த்தொழில், கால்நடை வளர்ப்பு, மீன் பிடிப்பு, வேட்டையாடுதல் போன்றவற்றில் உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரித்ததால் மனிதன் தன் வாழ்க்கைக்குத் தேவையானதை விட அதிகமான அளவு பொருட்களை உற்பத்தி செய்யத் துவங்கினான். எனவே இயற்கையாகவே தேவையானதை விட அதிகமான அளவு உற்பத்திப் பொருள் தோன்றியது. இந்தச் சூழ்நிலையில் முன்னர் செய்ததைப் போல் போர்க்கைதிகளைக் கொல்வதை விட அவர்களை அடிமைகளாக வேலை செய்யும்படி நிர்ப்பந்திப்பது ஆதாயமானதாயிருந்தது.

ஓரளவு வளர்ச்சியடைந்த அடிமையுடைமை அமைப்பு கிட்டத்தட்ட உலகின் எல்லா மக்களினங்களின் மத்தியிலும் நிலவியது. முதன்முதலாக இது **தந்தைவழி அடிமையுடைமை** வடிவில் தோன்றியது. தந்தைவழி இனக்குழு சிதறுண்டு, கிராமக் கூட்டுச் சமூகம் உருவாகிய போது இதில் சுதந்திரமானவர்களோடு கூட சுதந்திரமற்ற மனிதர்களும் — அடிமைகள் — இருந்தார்கள். தந்தைவழி அடிமையுடைமை முறை அவ்வளவு வளர்ச்சி

யடைந்திருக்கவில்லை, மட்டான தன்மையைக் கொண்டதாயிருந்தது. ஏனெனில் முதலாவதாக, கூட்டுச் சமூகப் பொருளாதாரத்தில் அடிமைகளின் உழைப்புச் சக்தி முக்கியமானதாக இருக்கவில்லை; இரண்டாவதாக, சாதாரணமாக உறவினர்கள் அல்ல, போர்க்கைதிகள் தான் அடிமைகளாக இருந்தனர்; மூன்றாவதாக, அடிமை வியாபாரம் வளர்ச்சி அடைந்திருக்கவில்லை. ஆனால் இந்நிலைமையிலும் அடிமைகளின் உழைப்பு இவர்களின் எஜமானர்கள் செல்வம் சேர்க்கவும், சொத்து அடிப்படையிலான சமமின்மை மேலும் வளரவும் உதவியது. செல்வம் மிக்க குல மேல்மட்டத்தினர் போர்க்கைதிகளை மட்டுமின்றி ஏழ்மையடைந்து கடன் பட்ட சக குலத்தினர்களையும் அடிமைகளாக்கத் துவங்கினர்.

வர்க்கங்கள் வளர்ச்சியடைந்து, சொத்து அடிப்படையிலான சமமின்மை அதிகரித்ததையடுத்து விசேஷ உறுப்புகள் தோற்றுவிக்கப்படலாயின; அடிமைகளை அடக்கி வைக்கவும் தம் செல்வத்தைப் பெருக்கவும் அடிமையுடைமையாளர்கள் இவற்றைப் பயன்படுத்தத் துவங்கினார்கள். சுரண்டப்படும் மக்கள் திரளினர் மீது ஆதிக்க வர்க்கங்கள் நிர்ப்பந்தம் செலுத்தும் கருவியாக அரசு தோன்றியது.

இந்தியா, சீனா, எகிப்து, பாபிலோனியா, சிரியா, பாரசீகம் போன்ற கீழைய நாடுகளில் அடிமையுடைமை அமைப்புக்குத் தனி சிறப்பு அம்சங்கள் இருந்தன. இந்த கீழைய அடிமையுடைமை சமுதாயங்களில் — குறிப்பாக ஆரம்பக் கட்டங்களில் — நிலம், மற்ற உற்பத்திச் சாதனங்கள், அடிமைகள் மீது தனியுடைமை நிலவவில்லை, கூட்டுச் சொத்துடைமைதான் நிலவியது; இது கூட்டுச் சமூக், கோயில் மற்றும் அரசு சொத்துடைமை

வடிவங்களில் இருந்தது. அடிமைகளைத் தவிர, கிராம மக்களும், கிராமக் கூட்டுச் சமூக உறுப்பினர்களும் அரசின் (கொடுங்கோலனாகிய பேரரசனின்) சுரண்டலுக்கு ஆளானார்கள், இவர்கள் மீது கடுமையான வரிகள் விதிக்கப்பட்டன. அவர்களின் நிலைக்கும் அடிமைகளின் நிலைக்கும் பெரும் வித்தியாசம் இருக்கவில்லை. மொத்தத்தில் இந்நாடுகளின் உற்பத்தியில் அடிமைகளின் உழைப்பு பெரும் பங்காற்றவில்லை, அடிமைகளின் எண்ணிக்கையும் குறைவாகவே இருந்தது.

ஒரு சில பண்டைய மக்களினங்களின் மத்தியில் — உதாரணமாக, கிரீசிலும் ரோமிலும் — தந்தைவழி அடிமையுடைமை முறை மூலச்சிறப்புள்ள அடிமையுடைமை அமைப்பாகியது; இதில் அடிமைகளின் உழைப்பு உற்பத்தியின் அடிப்படையாக, சமுதாயம் நிலவுவதன் அடிப்படையாக மாறியது. இவ்வாறு அடிமையுடைமை உற்பத்தி முறை நிலைபெறும் நிகழ்ச்சிப் போக்கு உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி மற்றும் சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைந்தது ஆகியவற்றின் தீர்மான கரமான தாக்கத்தின் கீழ் நடந்தது. இதே நேரத்தில் அடிமைகள், நிலம், மற்ற உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமை வளர்ந்தது, சொத்து அடிப்படையிலான சமமின்மை வலுத்தது, இயற்கை உற்பத்தி பெரும்பாலும் அப்படியே இருக்க, பண்ட-பண உறவுகள் வளர்ந்தன.

அடிமையுடைமை சமுதாயத்தில் பயிர்த்தொழில், கால்நடை வளர்ப்பு, கைத்தொழில் (உதாரணமாக, மண்பாண்டம் செய்தல், கொல்லு வேலை, மாவரைக்கும் தொழில்) ஆகியவை உற்பத்தியின் முக்கியத் துறைகளாக இருந்தன. கைத்தொழில் உற்பத்தியில் நன்கு சிக்கலான உழைப்புக் கருவிகள் (தறி, குயவன் சக்கரம், உலைத்

துருத்தி, அரவை எந்திரம் போன்றவை) பயன்படுத்தப்பட்டன. கைத்தொழிலின் வளர்ச்சி இரண்டாவது பெரிய சமூக உழைப்புப் பிரிவினைக்கு வழிகோலியது: கைத் தொழில் பயிர்த்தொழிலிலிருந்து பிரிந்தது. தந்தைவழி அடிமையுடைமை சகாப்தத்திலேயே கிரீசில் தச்சர்கள், கொல்லர்கள், குதிரைத் தளவாட கைவினைஞர்கள், குயவர்கள், உலோகக் கலைஞர்கள் போன்றோர் இருந்தனர்.

தொழில்நுட்பமும் அடிமை உழைப்பின் கூட்டுறவும் வளர வளர பெரும் நிறுவனங்கள் தோன்றின, இவற்றில் நூற்றுக் கணக்கான, ஆயிரக் கணக்கான அடிமைகள் வேலை செய்யத் துவங்கினர். உதாரணமாக, பண்டைய ரோமின் வேளாண்மைத் துறையில் பெரும் நிலவுடைமை யாளர் முறையும் பண்டைய கிரீசின் கைத்தொழில் உற்பத்தியில் பட்டறைகளும் வளர்ச்சியடைந்தன. இவற்றில் பல்லாயிரக் கணக்கான அடிமைகள் வேலை செய்து, அடிமையுடைமையாளர்களுக்கு உபரிப் பொருட்களை உற்பத்தி செய்தார்கள். இந்திய மற்றும் கிரேக்க கோயில்கள், ரோமானிய நாடக அரங்குகள், கால்வாய்கள், சாலைகள், சீனப் பெருஞ்சுவர், எகிப்து, மெக்சிக்கோ, குவாட்டமாலா, ஹோண்டுராஸ், பெரு ஆகிய இடங்களிலுள்ள பிரமீடுகள் ஆகியவை அடிமையுழைப்பின் மிகப்பெரும் நினைவுச்சின்னங்களாக இன்று வரை உள்ளன.

கணிதம், இயந்திரவியல், வானசாஸ்திரம், தத்துவ ஞானம், கட்டிடக் கலை போன்ற பல விஞ்ஞானங்கள் அடிமையுடைமை அரசுகளில் வளர்ச்சியடைந்தன. கதை இலக்கியம், சிற்பக் கலை, கட்டிடக் கலை ஆகியவற்றின் படைப்புகள் உலக கலாசாரப் பொக்கிஷத்தில் இடம் பெற்றுள்ளன. ஐரோப்பிய நாகரிகம் பூமியில் மிகப்

பழைய நாகரிகமாக இருக்கவில்லை. நவீன ஐரோப்பிய மக்களின் முன்னோர்கள் புராதனக் கூட்டுச் சமூக அமைப்புச் சூழ்நிலைகளில் வாழ்ந்த போதே எகிப்து, இந்தியா, சீனா, மெசப்பொடேமியா ஆகிய இடங்களில் மக்கள் வரலாறு எழுதப்படலாயிற்று.

அடிமையுடைமை உற்பத்தி உறவுகளில் உழைப்புச் சக்தி உற்பத்திச் சாதனங்களுடன் விசேஷமான வகையில் இணைந்திருந்தது: அடிமைக்கு உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்டிருந்ததோடு கூட, இவன் அடிமையுடைமையாளனுக்குச் சொந்தமாயுமிருந்தான்; இந்த அடிமையுடைமையாளன் தனக்கு வேலை செய்யும்படி அடிமைகளை நிர்ப்பந்தித்தான். உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள் முழுவதும் அடிமையுடைமை யாளனுக்குச் சொந்தமாயிருந்தது. அடிமையின் அரைகுறை வாழ்க்கைக்கு மட்டுமே போதுமானதா யிருந்த ஒரு மிகச் சிறு பகுதிதான் இதிலிருந்து அடி மைக்குக் கொடுக்கப்பட்டது.

சமுதாயத்தில் அடிமை ஒரு மனிதனாக இல்லாமல், பொருளாக இருந்தான். இவனை வாங்கலாம், விற்கலாம், ஆடுமாடுகளைப் போல் கொல்லலாம். பண்டைய ரோமில் எல்லா உழைப்புக் கருவிகளும் ''பேசும்'' கருவிகள் (அடிமைகள்), ''கத்தும்'' கருவிகள் (சுமையிழுக் கும் கால்நடைகள்), ''ஊமை'' கருவிகள் (வேலை செய்யப் பயன்படும் உபகரணங்கள்) என்று பிரிக்கப்பட்டிருந்தது தற்செயலல்ல. சமுதாயத்தில் அடிமையின் நிலையை அரிஸ்டாட்டில் துல்லியமாக வரையறுத்தார். ''அடிமை — உயிருள்ள கருவி, கருவி — உயிரற்ற அடிமை'' என்று அவர் எழுதினார். பல அடிமைகள் எப்போதும் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தார்கள், அதில் அவன் யாருக்குச் சொந்தமானவன் என்று பொறிக்கப்பட்

டிருந்தது. அடிமைகள் தப்பியோடினால், சுலபமாகக் கண்டுபிடிப்பதற்காக உடலில் குறியடையாளமிட்டார்கள்.

இப்படி அடிமையை நேரடியாகப் புண்படுத்தி, துன்புறுத்தி, நிர்ப்பந்திக்கும் சூழ்நிலைகளில் உழைப்பிலோ, இதன் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலோ அடிமைக்கு எவ்வித அக்கறையும் இல்லாதது இயற்கையே. இவன் உழைப்புக் கருவிகளை உடைத்து நாசம் செய்தான். எனவே அவை முரட்டுத் தனமானவையாக, எளியவையாக இருந்தன. மனித சமுதாய வரலாற்றில் அடிமையுடைமைதான் அப்பட்டமான, கடுமையான, முதல் சுரண்டல் வடிவமாகும். உபரி உற்பத்திப் பொருளின் மொத்தத்தைக் கூட்ட, அடிமையுடைமையாளர்கள் தாம் சுரண்டும் அடிமைகளின் எண்ணிக்கையை அதிகரிக்க முயன்றார்கள். ஆக்கிரமிப்பு யுத்தங்கள்தான் அடிமைகளைப் பெறும் முக்கிய வழியாக இருந்தன. உதாரணமாக, கி. மு. இரண்டாம் நூற்றாண்டில் தனிப்பட்ட சில யுத்தங்களினால் ரோமானிய அடிமையுடைமையாளர்கள் 1,50,000–2,00,000 அடிமைகள் வரை பெற்றார்கள். பின்னால், கூட்டுச் சமூக உறுப்பினர்களில் ஏழையானவர்களும், கடன் பட்டவர்களும் அடிமைகளாக மாற்றப்பட்டனர்.

அடிமையுடைமை சமுதாயத்தில் இயற்கை உற்பத்தி முறை நிலவியது, பொருட்கள் பெரும்பாலும் சொந்தத் தேவைகளுக்காக மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. இதில் உபரி உற்பத்திப் பொருளின் கணிசமான பகுதி உற்பத்தியல்லாத நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டது, அடிமைச் சொந்தக்காரன், இவனுடைய பரிவாரங்களின் ஒட்டுண்ணித்தனமான நுகர்விற்குச் சென்றது. அதாவது ஆடம்பரமான மாட மாளிகை

களையும் பிரம்மாண்டமான கோயில்களையும் கட்டி பராமரிக்க, பெரும் விருந்துகள், விழாக்கள், மதச் சடங்குகள், விளையாட்டுகள், கேளிக்கைகளுக்கு ஏற்பாடு செய்ய செலவிடப்பட்டது. இவ்வாறாக, **அடிமையுடைமை உற்பத்தியின் பிரதான நோக்கம், அடிமையுடைமையாளர்களின் ஒட்டுண்ணித்தனமான தேவைகளை (இவை மேன்மேலும் அதிகரித்து வந்தன) பூர்த்தி செய்வதாக இருந்தது. அடிமைகளை நேரடியாக நிர்ப்பந்தித்து, மிருகத்தனமான சுரண்டலுக்கு ஆளாக்கியது இந்த நோக்கத்தை அடையும் வழியாக இருந்தது. அடிமையுடைமை சமுதாயத்தின் அடிப்படைப் பொருளாதார விதியின் சாரம் இதில்தான் அடங்கியிருந்தது.**

சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைந்து, விவசாய மற்றும் கைத்தொழில் உற்பத்தி பெருகப் பெருக பண்ட-பண உறவுகள் மேன்மேலும் வளர்ச்சியடைந்தன. பெரும் அடிமையுடைமைப் பண்ணைச் சொந்தக்காரர்கள், கைத்தொழில் பட்டறைகளின் சொந்தக்காரர்கள் போன்றோர் விற்பதற்காகப் பொருட்களை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டிருந்தனர். அடிமைகளின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி உற்பத்திப் பொருளை சுவீகரித்த இவர்கள் இதில் ஒரு பகுதியை விற்றனர். அடிமைகளை வாங்குவதும் விற்பதும் அதிகரித்தன. சிறு உற்பத்தியாளர்களாயிருந்த விவசாயிகளும் கைவினைஞர்களும் தம் உற்பத்திப் பொருட்களை விற்றார்கள். கிரீஸ், ரோம், இந்தியா, சீனாவில் சந்தைக்கென்றே விசேஷமாக இயங்கிய சிறு உலைக்களங்கள், ரொட்டி செய்யுமிடங்கள், மற்ற சிறு தொழில் அமைப்புகள் இருந்தன. பண்டப் பரிவர்த்தனை படிப்படியாக முறையான வர்த்தகமாக மாறியது. சந்தைகள் தோன்றின, இங்கு சுறுசுறுப்பான வியாபாரம் நடந்தது. வர்த்தகம் சிறிது

சிறிதாக அரசு வரம்புகளை விட்டு வெளியே வந்தது, சர்வதேச வர்த்தகம் வளர்ச்சியடைந்தது. எகிப்து, பாபிலோனியா, சீனா, கிரீஸ், ரோம் போன்ற அடிமை யுடைமை அரசுகள் சர்வதேச வர்த்தகத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றின.

பண்ட-பண உறவுகள் மற்றும் வர்த்தகத்தின் வளர்ச்சி, மூலதனத்தின் முதல் வரலாற்று வடிவங்கள் — **வியாபார மூலதனம், வட்டி மூலதனம்** — தோன்ற வழிகோலியது. வியாபாரிகள் தோன்றியதானது மூன்றாவது பெரும் சமூக உழைப்புப் பிரிவினையாக இருந்தது. வியாபாரிகள் பண்டங்களின் பரிவர்த்தனையில் இடைத்தரகர்களாக இருந்தனர். அடிமையுடைமையாளனின் உபரி உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியையும் விவசாயிகள் மற்றும் கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியையும் வர்த்தக லாபத்தின் வடிவில் சுவீகரிக்கும் பொருட்டு இவர்கள் பண்டங்களை வாங்கி, விற்கும் போது விலை வித்தியாசங்களையும் நேரடி ஏமாற்று தலையும் பயன்படுத்தினார்கள்.

வட்டிக்காரர்கள் அடிமையுடைமையாளர்களுக்கும் சிறு பண்ட உற்பத்தியாளர்களாகிய விவசாயிகள், கைத் தொழிலாளர்களுக்கும் பெரும் வட்டிகளுக்கு கடன் கொடுக்க தம் மூலதனங்களைப் பயன்படுத்தினார்கள். இவ்வாறாக, விவசாயிகள், கைத்தொழிலாளர்களின் உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியையும் அடிமைகள் தோற்றுவித்த உபரி உற்பத்திப் பொருளில் ஒரு பகுதி யையும் வட்டிக்காரர்கள் வட்டி வடிவத்தில் சுவீகரித்த னர்.

வியாபார மற்றும் வட்டி மூலதனம், பண்ட உற்பத்தி யின் வளர்ச்சிக்கு வழிகோலிய அதே சமயம், அடிப்படை யில் இயற்கைப் பொருளாதாரமாக இருந்த அடிமை

யுடைமை அமைப்பைக் குலைத்தது, அடிமையுடைமையாளர் களின் பொறாமையைக் கொழுந்து விட்டு எரியச் செய்தது, அடிமைகள் சுரண்டப்படுவதை அதிகப்படுத்தியது. அடிமையுடைமை உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் வளர்ச்சி சொத்துடைமை அடிப்படையிலான சமமின்மையை அதிகப்படுத்தியது; ஒரு சிலருக்கு செல்வத்தை அளித்த இது மற்றவர்களுக்கு கடன் சுமையையும் திவாலடையும் நிலையையும் கொண்டு வந்தது. அடிமை வியாபாரம் மிகவும் லாபகரமான தொழில்களில் ஒன்றாகியது. பெரும் அடிமை வர்த்தக மையங்கள் தோன்றின. இவற்றிற்கு நாட்டின் மற்ற பகுதிகளைச் சேர்ந்த அடிமைச் சொந்தக்காரர்கள் மட்டுமின்றி வேறு நாடுகளைச் சேர்ந்த அடிமைச் சொந்தக்காரர்களும் வந்தார்கள்.

பண்டைய அடிமையுடைமை சமுதாயத்தின் வரலாற்றை திரிக்கவும் நவீனமயப்படுத்தவும் பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் வரலாற்றியலாளர்களும் முயலுகின்றனர். முதலாளித்துவ உறவுகள் நிரந்தரமானவை என்பதை நிரூபிப்பதற்காக இவர்கள் பண்டைய கிரீசிலும் ரோமிலும் முதலாளித்துவ அம்சங்களைத் தேடுகின்றனர்.

சமுதாய வளர்ச்சியில் அடிமையுடைமை அமைப்பு அவசியமான கட்டமாயிருந்தது, புராதனக் கூட்டுச் சமூக அமைப்புடன் ஒப்பிடும் போது இது ஒரு கணிசமான முன்னேற்றமாகத் திகழ்ந்தது. உற்பத்திக் கருவிகளின் முன்னேற்றம், உற்பத்தியின் தனித்துறைப் பாடு, சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைந்தது ஆகியவை தெட்டத் தெளிவாகத் தெரிந்தன. கூட்டுறவின் அளவுகள் பெருகின, உழைப்பின் உற்பத்தித் திறன் கூடியது. நகரங்கள் தோன்றின, இவற்றில்

கைத்தொழில்களும் வர்த்தகமும் குவிந்திருந்தன. அடிமை யுடைமை நகரங்களில் விஞ்ஞானம், இலக்கியம், கலை ஆகியவை விசேஷ மனித நடவடிக்கை என்ற வகையில் வளர்ச்சியடைந்தன. என்றாலும் பல தலைமுறைகளைச் சேர்ந்த ஏராளமான அடிமைகளின் கடினமான, கட்டாயமான உழைப்புதான் இந்தப் பண்டைய நாகரிகத்தின் அடிப்படையாகத் திகழ்ந்தது.

அடிமையுடைமை அமைப்பில் சமரசப்படுத்த இயலாத உள் முரண்பாடுகள் இருந்தன, இவை இந்த அமைப்பு சிதைந்து, அழிய வழிகோலின. அடிமைகள் மற்றும் அடிமையுடைமையாளர்களின் பொருளாதார நலன்களின் முரண்பாடுதான் இவற்றில் முக்கியமாகக் குறிப்பிடப்பட வேண்டியதாகும். அடிமை உழைப்பின் வலுக்கட்டாயத் தன்மை, தொழில்நுட்பத்தை வளர்ப்பதிலும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதிலும் எவ்வித பொருளாயத, தார்மீக அக்கறையும் இல்லாமை — இவையெல்லாம் இறுதியில் அடிமையுடைமை உற்பத்தி தேக்கமுற்று, அழிந்து போக வழிகோலின. அடிமைகளின் உழைப்பு மிகவும் சூறையாடும் நோக்கில், பயனற்ற வகையில் பயன்படுத்தப்பட்டது, இது சுதந்திரக் குடிமகனுக்கு இழப்பேற்படுத்தக் கூடியது என்று கருதப்பட்டது. கடும் உடலுழைப்பு அடிமைகளின் கடமை என்று கருதப்பட்டது. அரசுக் காரியங்கள், அரசியல், தத்துவஞானம், கலை, இலக்கியம் முதலியவை, அடிமைகளை ஈவிரக்கமின்றி சுரண்டிய அடிமையுடைமையாளர்களின் சலுகைகளாக இருந்தன. இவ்வாறாக, மூளையுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு தோன்றி, வளர்ந்தது. இம்முரண்பாட்டிற்குத் தெட்டத் தெளிவான வர்க்கத் தன்மை இருந்தது.

அடிமையுடைமை அமைப்பின் பகை முரண்பாடுகள் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலிருந்த வேறுபாடு களிலும் வெளிப்பட்டன. நகரங்கள் கைத்தொழில் உற்பத்தி, வர்த்தகம், வட்டி வியாபாரம் மற்றும் கலாசாரத்தின் மையங்களாகத் திகழ்ந்தன. விவசாய உற்பத்தியின் பின்தங்கிய வடிவங்களைக் கொண்டிருந்த கிராமமோ புராதன அமைப்பின் பல அம்சங்களை அப்படியே வைத்திருந்தது. விவசாயிகளிடம் உற்பத்திப் பொருட்களைக் குறைவான விலைகளுக்கு வாங்குவது, நகரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை அதிக விலைகளுக்கு விற்பது, வரிகள், பல்வேறு கட்டுப் பாடுகள் போன்ற பல வழிகளில் நகரம் கிராமத்தைச் சுரண்டியது. ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடத்துவதற்காக சுதந்திரமான விவசாயிகளின் மத்தியிலிருந்து போர் வீரர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதாலும் கிராமம் அவதி யுற்றது. இதனால் கிராமத்தின் பலங்குன்றியது, இதன் உழைப்புச் சக்தி சூறையாடப்பட்டது, விவசாயம் வீழ்ச்சியடைந்தது, அடிமையுடைமை அமைப்பின் அடிப் படைகள் குலைக்கப்பட்டன.

அடிமையுடைமை சமுதாயத்தில் பெரும் அடிமை யுடைமை உற்பத்திக்கும் சுதந்திரமான உற்பத்தி யாளர்களாகிய விவசாயிகள், கைத்தொழிலாளர்களின் சிறு உற்பத்திக்கும் இடையிலான முரண்பாடும் நிலவியது. அடிமையுடைமைப் பண்ணைகளின் உற்பத்திப் பொருட்கள் குறைவான விலைகளுக்கு விற்கப்பட்டன. அடிமைகளைப் பராமரிக்க அதிக செலவாகாததும் இவர்களின் உழைப்புக் கூட்டுறவு, உற்பத்திச் சாதனங்களை அதிகப் பயன் தன்மையோடு உபயோகப்படுத்த உதவியதும் இதற்குக் காரணங்களாகும். விவசாயிகள், கைத்தொழிலாளர் களின் சிறு பண்ணைகள் பெரும் அடிமையுடைமையாளர்

களின் பண்ணைகளுடன் போட்டியிட முடியாமல், பெருமளவில் திவாலாயின. வரிகள் அதிகரித்தது, வட்டிச் சுமை, அடிமையுடைமையாளர்கள் விவசாயிகளின் பண்ணைகளை நேரடியாகக் கைப்பற்றியது ஆகியவை இதற்கு வழிகோலின. யுத்தங்களின் சுமைகளைத் தம் தோள்களில் ஏற்ற விவசாயிகளும் கைத்தொழிலாளர் களும் திவாலடைந்தனர்.

சிறு பண்ணைகள் திவாலடைந்ததன் விளைவாய் அடிமையுடைமை அரசுகளில் (குறிப்பாக ரோமில்) ஏழ்மையடைந்த, உற்பத்திச் சாதனங்கள் இல்லாத, உற்பத்தியுடனான தொடர்பை இழந்த ஏராளமானோர் தோன்றினார்கள். தனிப்பட்ட முறையில் சுதந்திரமான இவர்கள், சகலவித உழைப்பையும் அலட்சியப்படுத்தினார் கள், உணவையும் கேளிக்கைகளையும் வேண்டி நகர வீதிகளில் நிரம்பி வழிந்தார்கள். அடிமையுடைமை அரசு, அடிமைகளின் உபரி உழைப்பைக் கொண்டு இவர்களுக்கு உணவளிக்கும் கட்டாயத்திற்கு உள்ளானது. இப்படிப்பட்டவர்களை பண்டைய ரோமில் லும்பன் பாட்டாளிகளென அழைத்தனர். நவீன முதலாளித்துவ நாடுகளில் உள்ள பாட்டாளிகளின் உழைப்பால் சமுதாயம் வாழுகிறது என்றால் ரோமானிய லும்பன் பாட்டாளி களோ சமுதாயத்தின் செலவில் வாழ்ந்தனர்.

சுதந்திரமான விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் திவாலடைந்ததானது, அடிமையுடைமை அரசுகளின் பொருளாதார, அரசியல், இராணுவ வல்லமையைக் குலைத்தது. ஏனெனில் சிறு உற்பத்தியாளர்களாக இருந்த இவர்கள்தான் ரோம், மற்ற அடிமையுடைமை அரசுகளின் இராணுவ பலத்தின் அடிப்படையை உருவாக்கினார்கள். ஆக்கிரமிப்பு யுத்தங்கள் இப்போ தெல்லாம் தற்காப்பு யுத்தங்களாக மாறலாயின,

போரில் வெற்றிகளுக்குப் பதில் தோல்விகள் ஏற்படலாயின, மலிவான அடிமைகளின் ஊற்று வற்றத் துவங்கியது.

பெரும் அடிமையுடைமைப் பண்ணைகளுக்கு மலிவான அடிமைகள் இடையறாது வருவது குறைந்ததாலும், இவர்களின் விலை கூடியதாலும் இந்தப் பண்ணைகள் சிறு பண்ணைகளின் முன் தம் மேம்பாடுகளை இழந்தன, அடிமையுழைப்பால் தோற்றுவிக்கப்படும் உபரி உற்பத்திப் பொருள் குறைந்தது. விவசாயத் துறையையடுத்து கைத்தொழிலும் வீழ்ந்தது, வர்த்தகம் தேக்கமடைந்தது. நகரங்களிலிருந்த மக்களின் எண்ணிக்கை குறைந்தது, இவை நொய்ந்து போயின, முந்தைய பொருளாதார, அரசியல் முக்கியத்துவத்தை இழந்தன. அடிமையுடைமை அமைப்பு சிதறுண்டதையடுத்து உற்பத்திச் சக்திகள் பெருமளவில் அழிந்தன.

பெரும் அடிமையுடைமை உற்பத்திக்கு நெருக்கடி ஏற்பட்ட போது (இது மேன்மேலும் குறைவான லாபத்தையே தரத் துவங்கியது) பெரிய பண்ணைகளை சிறு பகுதிகளாகப் பிரிப்பது அனுகூலமானதாகியது. இப்பகுதிகள் (துண்டு நிலங்கள்) குறிப்பிட்ட நிபந்தனைகளில் சுதந்திரமான குடிமக்களுக்கோ, அடிமைகளுக்கோ குத்தகைக்கு விடப்பட்டன. புதிய ''நிலச் சொந்தக்காரர்கள்'' நிலங்களோடு இணைக்கப்பட்டிருந்தனர், நிலத்தோடு சேர்ந்து இவர்களையும் விற்க முடிந்தது. புதிய பண்ட உற்பத்தியாளர் பிரிவு ஒன்று தோன்றியது; இப்பிரிவினர் அடிமைகளுக்கும் சுதந்திரமானவர்களுக்கும் இடைப்பட்ட நிலையை வகித்தார்கள். இவர்களை கலோன்கள் என்றனர். இவர்கள்தான் மத்தியக் கால பண்ணையடிமை விவசாயிகளின் முன்னோடிகள் ஆவார்கள். சிறு விவசாயப் பண்ணை மட்டுமே ஒரே அனு

கூலமான, ஆதாயமான வடிவமாக இருந்தது.

அடிமையுடைமை உற்பத்தி வீழ்ச்சியடைந்ததும் இதன் முரண்பாடுகள் ஆழமடைந்ததும் வர்க்கப் போராட்டத்தைக் கடுமையாக்கின. அடிமைகளின் எழுச்சிகள், ஒடுக்குபவர்களுக்கு எதிராக திவாலான விவசாயிகளும் கைத்தொழிலாளர்களும் நடத்திய போராட்டத்துடன் ஒன்று கலந்தன. பல அடிமை எழுச்சிகளை வரலாறு அறியும். சிசிலி தீவில் எவ்ன் மற்றும் கிலேயோனின் தலைமையில் நடந்த எழுச்சி, ஆசியா மைனாரில் அரிஸ்தோனிக் தலைமையில் நடந்த எழுச்சி, சீனாவில் அடிமைகள் மற்றும் ஏழை விவசாயிகளின் (''சிவப்பு புருவத்தினர்'') எழுச்சி, பஸ்போர் சாம்ராஜ்யத்தில் சவ்மாக் தலைமையில் நடந்த எழுச்சி, இத்தாலியில் ஸ்பார்ட்டகஸ் தலைமையில் நடந்த எழுச்சி முதலியன மிகவும் பிரபலமானவை. அடிமையுடைமை அரசுகளின் அடித்தளங்களேயே ஆட்டங்காணச் செய்த அடிமைகளின் எழுச்சிகள், அண்டையிலிருந்த குலங்களின் ஆக்கிரமிப்புகளுடன் ஒன்று கலந்தன. இந்த விஷயத்தில் ரோமானிய அடிமையுடைமை அரசின் விதி குறிப்பிடத் தக்கது. சுரண்டப்பட்ட மக்கள் திரளினர் உள்ளிருந்தே நடத்திய எழுச்சிகளால் குலைக்கப்பட்ட இந்த அரசு, ஜெர்மானிய, கால், ஸ்லாவிய, மற்ற காட்டுமிராண்டி குலங்களின் தாக்குதலினால் கி. பி. 476இல் இறுதியாக வீழ்ச்சியடைந்தது. அடிமையுடைமை வீழ்ந்ததால், போராடும் முக்கிய வர்க்கங்களும் (அடிமைகள், அடிமையுடைமையாளர்கள்) மறைந்தன. ஆனால் இதனால் மனிதனை மனிதன் சுரண்டுவது அழிந்தொழிக்கப்பட்டதாகப் பொருளாகாது. அடிமையுடைமையின் இடத்திற்கு நிலப்பிரபுத்துவம் வந்தது. இதில் அதிக நெளிவு சுழிவான முறைகளில் சுரண்டல் தொடர்ந்தது, உற்பத்திச்

சக்திகளின் வளர்ச்சிக்கான அதிக வாய்ப்புகள் தோன்றின.

அடிமையுடைமை அமைப்பு மறைந்து போய் நீண்ட காலம் ஆகிவிட்ட போதிலும் அடிமையுடைமை உறவுகளின் மிச்ச சொச்சங்கள் இன்றும் எஞ்சியுள்ளன. 16ஆம் நூற்றாண்டின் இறுதியில் அமெரிக்காவில் பருத்தி வயல்களிலும் சுரங்கங்களிலும் வேலை செய்வதற்காக (இது கடுமையான உடலுழைப்பாக இருந்தது) ஆப்பிரிக்காவிலிருந்து நீக்ரோ அடிமைகள் கொண்டு வரப்பட்டனர். நீக்ரோக்களை வலைவீசிப் பிடிப்பதும் அடிமை வியாபாரமும் லாபகரமானவையாக மாறின. 1680—1786இல் 20 லட்சத்திற்கும் மேற்பட்ட அடிமைகள் பிரிட்டிஷ் வர்த்தகர்களால் பிரிட்டிஷ் காலனிகளுக்குள் கொண்டு வரப்பட்டனர். 19ஆம் நூற்றாண்டின் இரண்டாம் பாதி வரை பிரிட்டன், ஸ்பெயின், போர்ச்சுகல், பிரான்ஸ் மற்றும் ஹாலந்து ஆகிய நாடுகளின் காலனிகளில் அடிமையுழைப்பு தோட்டங்களில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டது, அடிமை வியாபாரம் தொடர்ந்தது.

அமெரிக்க ஐக்கிய நாட்டில் 1861—1864இல் நடந்த உள்நாட்டுப் போரின் விளைவாய் அடிமையுடைமை சட்ட பூர்வமாக அகற்றப்பட்ட்து. இந்தப் போரில் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்திருந்த வடக்கு, அடிமையுடைமைத் தெற்கைத் தோல்வியடையச் செய்து வெற்றி வாகை சூடியது. ஆனால் நீக்ரோக்களை அடிமைப்படுத்துவது சட்ட ரீதியாகத் தடை செய்யப்பட்ட பின்னும் அமெரிக்காவில், குறிப்பாக நாட்டின் தெற்கில் இவர்கள் மிகவும் உரிமையற்ற, ஒடுக்கப்பட்ட மக்களாக இருக்கின்றனர்.

பல ஆசிய, ஆப்பிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் தோட்ட அடிமையுடைமை மற்றும் தந்தைவழி அடிமையுடைமை உறவுகளின் மிச்ச சொச்சங்கள் உள்ளன.

விவசாயிகளும் கொத்தடிமைகளும் பெரும் நிலவுடைமை யாளர்கள், நிலக்கிழார்களை அரை அடிமை நிலையில், தளைபூட்டும் வகையில் சார்ந்திருக்கும் முறை இவற்றில் ஒன்றாகும். கடன் அடிமை முறை பெரிதும் பரவியுள்ள அடிமையுடைமைச் சுரண்டல் வடிவமாகும். இது லத்தீன் அமெரிக்க, ஆப்பிரிக்க, மத்தியக் கிழக்கு நாடுகளிலும் ஒரு சில தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பல்வேறு பெயர்களில் நிலவுகிறது. அன்னிய ஏகபோகங் கள் இதைப் பரவலாகப் பயன்படுத்துகின்றன. முதலில் வேலையாட்களுக்குப் பொருட்கள் கடனாகத் தரப்படு கின்றன, சிறு துண்டு நிலமும், ஒரு வறிய வசிப்பிடமும் அளிக்கப்படுகின்றன. இதனால் பல குடும்பங்கள் மீளவே இயலாத நிரந்தரக் கடன் சுமையில் விழுகின்றன, ஏனெனில் குடும்பத் தலைவன் இறந்ததும் அக்கடன் குழந்தைகளின் தோள்களில் விழும்.

இன்றும் தென்னாப்பிரிக்கக் குடியரசில், அங்கேயே பிறந்து வாழும் ஆப்பிரிக்கர்களும் இந்தியாவிலிருந்து அங்கு வந்து குடியேறியவர்களும் பாகுபாடான முறை களுக்கும் நிறவெறிப் போக்குகளுக்கும் ஆளாகின்றனர். தென்னாப்பிரிக்கக் குடியரசிலும் இன்னும் சில முதலாளித் துவ நாடுகளிலும் மூட்டி விடப்படும் நிறவெறியும் இனப்பாகுபாடும் அடிமையுடைமை அமைப்பின் மிச்ச சொச்சங்களாகும். அடிமையுடைமை கிரீசின் சித்தாந்தி கள், கிரேக்கர்களுக்கு மட்டுமே "நகரில்-அரசில்" வாழும் உரிமையுண்டு, ஏனெனில் இயற்கையே இவர்கள் மற்ற மக்களின் மீது ஆதிக்கம் செலுத்துமாறு செய் துள்ளது என்று கருதினார்கள். சுதந்திரமான கிரேக்கர் களுக்கு அருகே வாழ அடிமைகளுக்கு உரிமையிருக்க வில்லை.

மூளையுழைப்பிற்கும் உடலுழைப்பிற்கும் இடையிலான

வேறுபாட்டையும் நகரத்திற்கும் கிராமத்திற்கும் இடையிலான வேறுபாட்டையும் நவீன முதலாளித்துவ சமுதாயம் அடிமையுடைமை அமைப்பிலிருந்து பெற்றுள்ளது. இவ்வேறுபாடுகள் அப்படியே உள்ளது மட்டுமின்றி புதிய வடிவங்களில் அதிகரிக்கவும் செய்தன. உடலுழைப்பை அலட்சியப்படுத்துவது (இதைச் சுரண்டலாளர்கள் வளர்க்கின்றனர்) அடிமையுடைமையின் நேரடி விளைவாகும்.

அடிமையுடைமை உறவுகள் மற்றும் அடிமையுடைமைச் சுரண்டலின் மிச்ச சொச்சங்கள், காலனியாதிக்கம், இனப்பாகுபாடு ஆகியவற்றிற்கு எதிரான உறுதியான போராட்டம் அடிமையுடைமை போன்ற ஒரு வெட்கக் கேடான புலப்பாட்டை இறுதியாக அழித்தொழிக்க உதவும். இந்தப் போராட்டம் ஜனநாயகம், முன்னேற்றம் ஆகியவற்றிற்காகச் சுதந்திரப் பாதைக்கு வந்துள்ள மக்களினங்களின் போராட்டத்தில் ஒரு பிரிக்க இயலாத அங்கமாகும்.

நிலப்பிரபுவும் பண்ணையடிமையும்

அடிமையுடைமைக்குப் பதிலாக வந்த நிலப்பிரபுத்துவம் சமுதாய வளர்ச்சியில் அடுத்த நியதியான கட்டமாகும். இது முதலாளித்துவத்திற்கு முந்தைய கட்டமாக விளங்கியது. நிலப்பிரபுத்துவத்திற்கு மாறிய வழிகள் பல்வேறு நாடுகளில் பல்வேறானவையாக இருந்தன.

பண்டைய ரோமில் இருந்ததைப் போல் பல நாடுகளில் அடிமையுடைமை அமைப்பு சிதறியதால் நிலப்பிரபுத்துவம் தோன்றியது. கிழக்கத்திய நிலப்பிரபுத்துவம் (சீனா, இந்தியா, பாபிலோனியா, மற்ற கிழக்கு

நாடுகளில்) தோன்றிய போதும் இந்த முறை ஓரளவு நிலவியது. அதே நேரத்தில் இந்தக் கிழக்கு நாடுகளில் நிலப்பிரபுத்துவம் தோன்றுவது மெதுவாகவும் தனிவகையிலும் நடந்தது, ஏனெனில் இவற்றில் நீர்ப்பாசன முறைகளுக்கு விசேஷ முக்கியத்துவம் இருந்தது, கொடுங்கோலர்களாயிருந்த பேரரசர்களின் சொத்து என்ற வகையிலான அரசு சொத்துடைமை ஆதிக்கம் செலுத்தியது, கூட்டுச் சமூகம் அதிக உறுதியானதாக இருந்தது.

ஆனால் எல்லா நாடுகளும் இதே பாதையில் நிலப்பிரபுத்துவத்திற்கு வரவில்லை. சில மக்களினங்கள் வளர்ச்சியடைந்த அடிமையுடைமை உற்பத்தி முறைக்கு வராமலேயே புராதனக் கூட்டுச் சமூக அமைப்பிலிருந்து நேரடியாக நிலப்பிரபுத்துவத்திற்கு மாறின. பண்டைய ருஷ்யா, கிழக்கு மற்றும் வடக்கு ஐரோப்பாவிலிருந்த சில நாடுகளில் இப்படி நடந்தது.

நிலப்பிரபுத்துவம் தோன்றுவது பல வழிகளில் நடைபெற்ற போதிலும் இதன் விளைவுகள் ஒரே மாதிரியாக இருந்தன. புதிய நிலச்சொந்தக்காரர்களின் வர்க்கம் — **நிலப்பிரபுக்கள்** — தோன்றியது. மன்னர்கள், பேரரசர்களிடமிருந்து நிலத்தைப் பெற்ற இவர்கள் இதற்காக இராணுவ சேவையும் மற்ற சேவைகளையும் புரிய வேண்டியிருந்தது. அதே நேரத்தில் முன்னர் சுதந்திரமாயிருந்த விவசாயிகள், கலோன்கள், கூட்டுச் சமூக உறுப்பினர்கள் ஆகியோர் நிலப்பிரபுக்களைத் தனிப்பட்ட முறையில் சார்ந்திருக்கலானார்கள். சார்பு நிலையில் உள்ள, சுரண்டப்படும் **பண்ணையடிமை விவசாயிகள்** வர்க்கம் தோன்றியது.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் தெட்டத் தெளிவான படிநிலைக் கட்டமைப்பும் அரசியல் மற்றும் பொருளா

தாரப் பிளவும் நிலவின. ஒருவரையொருவர் சார்ந்த பல நிலப்பிரபுக்களடங்கிய ஒரு முழு படி வரிசை இருந்தது.

பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களும் வரலாற்றாசிரியர்களும் சமூக அமைப்பு என்ற வகையில் நிலப்பிரபுத்துவத்தின் சமூக-பொருளாதார சாரத்தை வெளிப்படுத்தவில்லை. இச்சமுதாயத்தின் படிநிலை கட்டமைப்பு போன்ற கண்ணுக்குத் தெரியும் இதன் அம்சங்களை மட்டுமே இவர்கள் இதன் குறிப்பிடத் தக்க அம்சங்களாகச் சுட்டிக் காட்டுகின்றனர். உண்மையில் நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறையில் முக்கிய உற்பத்திச் சாதனமாகிய நிலம் நிலப்பிரபுவிற்குச் சொந்தமாக இருந்ததேயன்றி இதில் உழைத்த விவசாயிகளுக்குச் சொந்தமாய் இருக்கவில்லை. இதுதான் நிலப்பிரபுத்துவத்தின் உற்பத்தி உறவுகளில் முக்கியமாகக் குறிப்பிடப் பட வேண்டிய அம்சமாகும். நிலப்பிரபுவிடமிருந்து விவசாயிகள் நிலத்தைச் சொத்தாகப் பெறவில்லை, உபயோகிப்பதற்காக மட்டுமே பெற்றார்கள். விவசாயிகள் நிலத்துடன் கட்டுண்டு கிடந்தனர், பல்வேறு நிலப்பிரபுத்துவக் கட்டுப்பாடுகளைப் பின்பற்றினர். விவசாயிகளுக்கு ஒதுக்கப்பட்ட துண்டு நிலங்கள், நிலப்பிரபுக்களுக்கு உழைப்புச் சக்தியை அளிக்கும் சாதனமாக இருந்தன. நிலத்தின் மீதான தனியுடைமையில் நிலப்பிரபுக்கள் ஏகபோகம் செலுத்தியதானது விவசாயிகள் நிலப்பிரபுவைப் பொருளாதார ரீதியாக சார்ந்திருக்குமாறு செய்தது.

நிலப்பிரபுத்துவச் சொத்துடைமை வடிவம் அடிமையுடைமை சொத்துடைமை வடிவத்திலிருந்து மாறுபட்டதாய் இருந்தது. நிலப்பிரபுத்துவத்தில் எல்லா உற்பத்திச் சாதனங்களும் உழைப்பவர்களிடமிருந்து பிரிக்கப்பட

வில்லை. வீடு, வீட்டுச் சாமான்களை வைத்திருக்குமிடங்கள், வேலைக் கருவிகள், கால்நடைகள், விதை, கால்நடைத் தீவனம், இன்னும் சில உற்பத்திச் சாதனங்கள் முதலியன விவசாயிகளுக்குச் சொந்தமானவையாக இருந்தன. தம் நிலத்தில் உழைத்த இவர்கள் தமக்கும் தம் குடும்பத்திற் கும் அவசியமான பொருட்களை உற்பத்தி செய்தார்கள். எனவே விவசாயியே தன் உழைப்புச் சக்தியின் புனருற் பத்தி மீது அக்கறை செலுத்தினான். இச்சூழ்நிலையில் விவசாயி தனக்காக வேலை செய்யும்படி நிர்ப்பந்திக்க, விவசாயியின் மீது நிலப்பிரபுவிற்கு நேரடியான அதி காரம் தேவைப்பட்டது. நிலப்பிரபுத்துவத்தில் விவசாயி கள் உழைப்பைத் தவிர மற்ற கடமைகளையும் நிறைவேற்று மாறு பொருளாதார ரீதியில் இல்லாமல், நேரடியாக நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

நிலவுடைமையாளன் என்ற வகையில் நிலப்பிரபு, தன்னைச் சார்ந்துள்ள விவசாயியின் உபரி உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி உற்பத்திப் பொருளை சுவீகரித்தான் என்பதில்தான் நிலப்பிரபுத்துவச் சுரண் டலின் சாரம் அடங்கியிருந்தது. இந்த உபரி உற்பத்திப் பொருள் நிலப்பிரபுத்துவ நில வாடகை வடிவத்தைப் பெற்றது. **சார்புநிலையில் உள்ள விவசாயிகளை உழைக் கும்படி நிர்ப்பந்திப்பதன் மூலமும், பொருளாதார வழி களற்ற முறைகளில் சுரண்டுவதன் மூலமும் உபரி உற்பத்திப் பொருள் தோற்றுவிக்கப்படுவது, நிலப்பிரபு இதை நிலப் பிரபுத்துவ நில வாடகை வடிவில் சுவீகரிப்பது என்பதுதான் நிலப்பிரபுத்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகும்.**

நிலப்பிரபுத்துவ வாடகை வடிவங்கள் நிலப்பிரபுத் துவத்தோடு சேர்ந்து வளர்ந்தன. மூன்று வகையான **நிலப்பிரபுத்துவ வாடகைகள்** நிலவின: 1) உழைப்பு வாடகை, 2) பொருள் வாடகை, 3) பண வாடகை.

உழைப்பு வாடகையில் (கொத்தடிமை வேலை) விவசாயி ஒரு வாரத்தில் குறிப்பிட்ட சில நாட்கள் (மூன்று நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக) நிலப்பிரபுவின் பண்ணையிலும் எஞ்சிய நாட்களில் சொந்த பண்ணை யிலும் வேலை செய்தான். இதில் விவசாயி அவசியப் பொருளை சொந்த பண்ணையிலும் உபரிப் பொருளை நிலப்பிரபுவின் பண்ணையிலும் உற்பத்தி செய்தான். நிலப்பிரபுவின் பண்ணையில் தன் வேலைக் கருவிகள், இழுவை மாடுகளை வைத்து வேலை செய்த சார்பு நிலையிலிருந்த விவசாயிக்கு தன் உழைப்பின் விளை பயனில் அக்கறையிருக்கவில்லை. அதே நேரத்தில் தன் சொந்த பண்ணையில் உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதில் இவனுக்கு அக்கறையிருந்தது, ஏனெ னில் இது இவனுடைய வாழ்க்கைச் சாதனமாக இருந்தது.

பொருள் வாடகை (பொருள் தீர்வை) மேற்கூறியதி லிருந்து மாறுபட்டது. இங்கு உபரிப் பொருள் நிலப் பிரபுவின் பண்ணையில் உற்பத்தி செய்யப்படவில்லை, அவசியப் பொருளைப் போல இது விவசாயியின் சொந்த பண்ணையிலேயே உற்பத்தி செய்யப்பட்டது. நிலப்பிரபுத் துவ கடமைகளை நிறைவேற்றியதும் விவசாயியால் தனக்காக வேலை செய்ய முடிந்தது. இது தன் பண்ணையை மேம்படுத்துவதிலும் உழைப்பின் விளைபயன் களிலும் விவசாயியை அக்கறை காட்டும்படி செய்தது.

பண்ட உற்பத்தியும் பரிவர்த்தனையும் வளர்ச்சி யடைந்ததும் பொருள் தீர்வைக்குப் பதில் **பண வாடகை** வந்தது. இப்போது விவசாயி நிலப்பிரபுவிற்கு உபரி உற்பத்திப் பொருளை பொருள் வடிவில் தராமல் பண வடிவில் தந்தான். எனவே விவசாயி பொருளை உற்பத்தி செய்தால் மட்டும் போதாது, இவன் இதை விற்று, பணமாகவும் மாற்ற வேண்டியிருந்தது. விவசாய

உற்பத்தி சந்தையுடன் மேன்மேலும் அதிகத் தொடர்பு கொள்ளலாயிற்று, தன் முந்தைய இயற்கை உற்பத்தித் தன்மையை இழந்தது. பண்ட உறவுகளின் வளர்ச்சி விவசாயிகள் பாகுபாடடையும் (பிரிவுகளாகப் பிரியும்) நிகழ்ச்சிப் போக்கை துரிதப்படுத்தியது. சந்தைக்காக விவசாயிகள் உற்பத்தி செய்யத் துவங்கிய போது இவர்களில் ஒரு பிரிவினர் செல்வந்தர்களானார்கள், மிகப் பெரும்பான்மையோர் ஏழ்மையடைந்து, திவாலானார்கள். விவசாயிகளை அதிகமாகச் சுரண்ட முயன்ற நிலப்பிரபுக்களும் சந்தை உறவுகளில் மேன் மேலும் அதிகமாக இழுக்கப்பட்டார்கள். பண வாடகை தான் நிலப்பிரபுத்துவ வாடகையின் கடைசி வடிவமாகும். இந்த வடிவத்திற்கு மாறியதானது நிலப்பிரபுத்துவம் சிதறி, இதன் முரண்பாடுகள் கூர்மையடைந்ததைக் குறித்தது.

அடிமையுடைமை சிதறிய காலகட்டத்தில் வீழ்ச்சி யடைந்த நகரங்கள் நிலப்பிரபுத்துவத்தின் ஆரம்பக் கட்டத்தில் மறுவாழ்வு பெறத் துவங்கின. இவை சாதாரண நிலப்பிரபுக்கள் மற்றும் மதகுருமார்களாக இருந்த நிலப்பிரபுக்களின் இருப்பிடங்களைச் சுற்றி உருவாகலாயின. காலப் போக்கில் நகரங்கள், சிறு தொழில் மற்றும் வர்த்தக மையங்களாயின. சிறு தொழில் புரிவோர் வேலைக் குழுக்களாகவும் (முதல் வேலைக் குழுக்கள் 10ஆம் நூற்றாண்டில் இத்தாலியில் தோன்றின), வர்த்தகர்கள் கில்டுகளாகவும் இணைந்தனர். இவ்வேலைக் குழுக்கள் தொழில்நுட்பம், பொருட்களின் அளவு மற்றும் தரம் ஆகியவற்றை விவரமாக வரையறுத்தன, மூலப்பொருட்களை வாங்குவதையும் தயாரான பொருட்களை விற்பதையும் கண்காணித்தன. வேலைக் குழு மேலாளனுக்கு கீழ்

பயிற்சியாளர்களும் சீடர்களும் இருந்தனர். மேலாளனுக்கும் (இவனே வேலையில் நேரடியாகப் பங்கேற்றான்) இவனுக்குக் கீழ்ப்பட்டவர்களுக்கும் இடையிலான உறவுகள் தந்தைவழி உறவுகளாக இருந்தன. பின்னால் பயிற்சியாளர்கள், சீடர்களின் எண்ணிக்கை கூடியது. மேலாளன் வேலை செய்வதை நிறுத்தினான், இவனுக்குக் கீழிருந்தவர்கள் கூலித் தொழிலாளர்களின் நிலைக்கு மாறினார்கள்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சியில் முக்கியப் பங்கு மேன்மேலும் அதிகமாகக் கிராமத்திலிருந்து நகரத்திற்கு மாறியது. நிலப்பிரபுக்களின் மூலம் கிராமம் நகரத்தின் மீது அரசியல் ரீதியாக ஆதிக்கம் செலுத்தியது. நகரமோ, உயர்வான விலைகள், வரி முறை, கில்டு அமைப்பு, வர்த்தக ஏமாற்றுதல்கள், கடுவட்டி ஆகியவற்றால் பொருளாதார ரீதியில் கிராமத்தைச் சுரண்டியது.

வளர்ச்சியடைந்த நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில் நகர மக்கள் சொத்துடைமை அடிப்படையிலும் சமூக ரீதியாகவும் பல பிரிவுகளாகப் பிரிந்திருந்தனர். ஒரு புறம் பணக்கார வர்த்தகர்கள், வட்டிக்கு பணம் கொடுப்பவர்கள், பெரும் வேலைக் குழு மேலாளர்களும் மறுபுறம் நகர ஏழைகள், சீடர்கள், பயிற்சியாளர்களும் இருந்தனர். நகர மக்களில் பெரும்பான்மையினராயிருந்த ஏழைகள் நகர மேல்மட்டத்தினர், நிலப்பிரபுக்களுக்கு எதிராகப் போராடினர். இவர்களின் போராட்டம் வெறுக்கத் தக்க நிலவுடைமை முறைகளுக்கு எதிராக விவசாயிகள் நடத்திய போராட்டத்துடன் ஒன்று கலந்தது.

நிலப்பிரபுத்துவத்தில் உற்பத்திச் சக்திகள் ஓரளவு வளர்ச்சியடைந்தன. விவசாயத் துறையில் (இது பொருளாதாரத்தில் முக்கியப் பங்காற்றியது) இரு வயல்

முறையிலிருந்து மூன்று வயல் முறைக்கு மாறி இரும்புக் கலப்பை, பரம்பு, மற்ற உலோக விவசாயக் கருவிகள், கால்நடைகளைப் பயன்படுத்தலாயினர். காற்று மற்றும் நீர் அரவை மில்கள் கண்டுபிடிக்கப்பட்டது நிலப்பிரபுத் துவக் காலத்தின் சாதனைகளாகும். சிறு தொழிலிலும் தொழில்நுட்ப ரீதியான முன்னேற்றம் ஏற்பட்டது. உலோகத்தை உருக்கி, வார்த்தெடுக்கும் முறைகள் மேம்பட்டன, தறிகள் அதிகம் பயன்படுத்தப்படலாயின. காகிதம், கடிகாரம் முதலியன கண்டுபிடிக்கப்பட்டன; நூல்கள் அச்சடிக்கப்படலாயின; காம்பஸ் கண்டுபிடிக்கப் பட்ட பின் கப்பல் போக்குவரத்தும் கடல் பயணமும் அதிகரித்தன. ஆனால் கிராமத்தில் நிலவிய நிலப்பிரபுத் துவ உறவுகள் (விவசாயிகள் தனிப்பட்ட முறையில் சார்பு நிலையிலிருந்தது), நகரத்தில் நிலவிய கில்டுக் காலவரையளவுகள், அரசு நிலப்பிரபுத்துவ அடிப்படையில் சிதறிக் கிடந்தது, நிலப்பிரபுக்களின் இடையில் முடிவற்று நடந்த யுத்தங்கள், நிலவிய பகை ஆகியவற்றின் காரணமாக உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் வளர்ச்சி தடைப்பட்டது.

நிலப்பிரபுத்துவ முரண்பாடுகள் கூர்மையடைந்து, நிலப்பிரபுத்துவம் சிதறியதில் வர்த்தகம் பெரும் பங் காற்றியது. வியாபாரி சிறு பண்ட உற்பத்தியாளனுக்கு (சிறு தொழில் புரிபவன், விவசாயி) உற்பத்திச் சாதனங் களை வழங்கி, அவனுடைய உற்பத்திப் பொருட்களை விற்று அவனை தனக்குக் கீழ்ப்படுத்தினான். சிறு பண்ட உற்பத்தியாளர்கள் வெளிப்பார்வைக்குச் சுதந்திர மானவர்களாகக் காணப்பட்டாலும் சாராம்சத்தில் இவர்கள் கூலித் தொழிலாளர்களாக மாறினார் கள். ஒரு சில வேலைக் குழு மேலாளர்கள் செல்வந்தர் களாகி முதலாளிகளானார்கள். வறுமையால் ஒடுக்கப்

பட்டு, பாட்டாளிகளாக மாறிய முன்னாள் பயிற்சி யாளர்களும் சீடர்களும் இந்த வேலைக் குழு மேலாளர் களிடம் கூலிக்கு வேலை செய்தார்கள்.

வீட்டில் செய்யும் வேலை, கூட்டுறவு மற்றும் **பட்டறைத் தொழிலின்** வடிவத்தில் முதலாளித்துவ நிறுவனங்கள் ஐரோப்பாவில் 15ஆம் நூற்றாண்டின் இறுதியில், 16ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் நிலப்பிரபுத்துவம் சிதறிய போது தோன்றின. மேற்கூறிய விவரங்களின் பின்னணியில் பார்க்கும் போது, பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் நிலப்பிரபுத்துவத்தை ஏதோ விசேஷமான ''கரு நிலையிலுள்ள முதலாளித்துவமாகச்'' சித்தரித்து, இதன் உண்மையான சமூக-பொருளாதார சாரத்தை மறுக்க செய்யும் முயற்சிகள் ஆதாரமற்றவை என்பது நன்கு விளங்கும்.

உள்நாட்டு வர்த்தகமும் ஐரோப்பிய நாடுகளுக்கும் கீழைய நாடுகளுக்கும் இடையில் நடந்த வெளி வர்த் தகமும் பெரிதும் வளர்ச்சியடைந்தன. அதில் அராபிய மற்றும் விஸன்திய வியாபாரிகள் சுறுசுறுப்பாகப் பங்கேற்றார்கள், ஐரோப்பிய நாடுகளுக்கு இடையிலான வர்த்தகமும் வளர்ந்தது. 15ஆம் நூற்றாண்டில் அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டது, இந்தியாவிற்குப் புதிய கடல் பாதை கண்டுபிடிக்கப்பட்டது, கிழக்கிந்திய, கிழக்கத்திய, கினி வர்த்தகக் கம்பெனிகள் தோற்றுவிக்கப்பட்டது ஆகியவை வர்த்தகம் வளர்வதிலும் உலக சந்தை தோற்றுவிக்கப்படுவதிலும் பெரும் பங்காற்றின.

நிலப்பிரபுத்துவ சமுதாயத்தில், குறிப்பாக வர்த்தகம் வளர்ச்சியடைந்ததையடுத்து **கடும் வட்டி வாங்கும்** முறை பெரிதும் வளர்ந்தது. கொள்ளை வட்டி விகிதத்தில் (100—200%) இந்த கடும் வட்டிக்காரர்கள், மேற்குடி நிலப்பிரபுக்களுக்கும் மடங்களுக்கும் பணத்தைக் கடனாகத்

தந்தனர். இதன் மூலம் இவர்கள் விவசாயிகளின் கட்டாய உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட உபரி உற்பத்திப் பொருளில் கணிசமான பகுதியை சுவீகரித்தனர். விவசாயிகளும் சிறு தொழில் புரிவோரும் தளைபூட்டும் கடன்களுக்கு ஆளானார்கள், இதனால் இவர்கள் திவாலடைந்தார்கள், பாட்டாளிகளாக மாற்றப்பட்டனர்.

இவ்வாறாக நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் உள்ளே, நகரத்திலும் கிராமத்திலும் முதலாளித்துவ உறவுகள் வளரத் துவங்கின, நிலப்பிரபுக்களுக்கு எதிரான ஒடுக்கப்பட்ட மக்கள் திரளினரின் (குறிப்பாக விவசாயி களின்) போராட்டம் வலுத்தது. விவசாயிகளின் போர்கள் நிலப்பிரபுத்துவ அமைப்பின் அடித்தளத்தை ஆட்டங்காணச் செய்து குலைத்தன, இவை பூர்ஷ்வாப் புரட்சிகளின் முன்னறிவிப்பாளனாக திகழ்ந்தன.

நகர முதலாளி வர்க்கம், பூர்ஷ்வாமயப்பட்டு வந்த பிரபுக்குலம், அரசாட்சி ஆகியவற்றின் தரப்பிலிருந்து முரட்டுத்தனமான நிர்ப்பந்தம் பரவலாகப் பயன்படுத்தப் பட்டதானது முதலாளித்துவம் தோன்றி வளருவதைத் துரிதப்படுத்தியது. உதாரணமாக, நேரடியான உற்பத்தி யாளர்களை, முக்கியமாக விவசாயிகளை உற்பத்திச் சாதனங்களிடமிருந்து வலுக்கட்டாயமாகப் பிரிப்பது நடைபெற்றது, ஒரு சிலரின் கரங்களில் செல்வமும் பணமும் நிலமும் குவிந்தன. இதுதான் **ஆதி மூலதனத் திரட்சியாக** விளங்கியது. இங்கிலாந்தில் துவங்கிய இது 15ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியிலிருந்து 18ஆம் நூற்றாண்டின் இறுதி வரை நீடித்தது. கம்பளத் துணி நெய்யும் பட்டறைத் தொழிலின் வளர்ச்சியால் ரோமத் தின் தேவை கூடியது, எனவே இதன் விலைகள் அதிகரித்தன. இதிலிருந்து எல்லாம் துவங்கியது. மேய்ச்சல் நில ஆடு வளர்ப்பு ஆதாயமானதாகியது.

எனவே நிலச்சொந்தக்காரர்கள் விவசாயிகளின் நிலங்களை அவர்களிடமிருந்து பிடுங்கி (''வேலியிட்டு'') இவற்றை மேய்ச்சல் நிலங்களாக மாற்றினர், விவசாயிகளை நிலத்திலிருந்து வெளியே துரத்தினர். இதன் விளைவாய் நிலப்பிரபுத்துவ சார்புநிலையிலிருந்து விடுபட்ட ஆனால் அதே நேரம் உற்பத்திச் சாதனங்கள் இல்லாதவர்களைக் கொண்ட ஒரு விசேஷ வர்க்கம் உருவாகியது. இவர்கள்தான் பாட்டாளிகள். இவர்கள் வாழுவதற்காக உதித்தெழுந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கத்தின் ஆலைகளில் சேர்ந்து கூலிக்காக வேலை செய்ய வேண்டியிருந்தது.

முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களை ஏற்படுத்த நிறைய பணம் தேவைப்பட்டது. வியாபாரிகள், கடும் வட்டி வாங்குபவர்கள், செல்வந்தர்களான சிறு தொழில் புரிவோர் ஆகியோரின் சேமிப்புகள் இதில் பெரும் பங்காற்றின. சமமற்ற வர்த்தகம், அமெரிக்க, ஆப்பிரிக்க, ஆசிய, ஆஸ்திரேலிய முதற்குடிகளைக் கொள்ளையடித்ததும், அழித்ததும், அடிமை வியாபாரம், கடற்கொள்ளை ஆகியவற்றால், உதித்தெழுந்து கொண்டிருந்த முதலாளி வர்க்கம் செல்வம் சேர்த்தது. அமெரிக்காவில் மட்டும் குறுகிய காலகட்டத்திலேயே 12—15 மில்லியன் முதற்குடிகள் அழித்தொழிக்கப்பட்டனர். வன்முறை தானாகவே புதிய உற்பத்தி உறவுகளைத் தோற்றுவிக்காவிட்டாலும் முதலாளித்துவம் தோன்றியதில் இதற்குப் பெரும் பங்குண்டு.

உள்நாட்டு வர்த்தகத்திற்குக் காப்புரிமை வழங்கும் அரசுக் கொள்கை முதலாளித்துவத் தொழில் நிறுவனங்கள் வளர்ச்சியடைய உதவியது. அதாவது நாட்டிற்குள் கொண்டு வரப்படும் அயல்நாட்டுப் பண்டங்களுக்கு உயர்வான சுங்கவரி விதிக்கப்பட்டது. இது தேசிய

முதலாளிகளை அயல்நாட்டுப் போட்டியிலிருந்து பாதுகாத்தது, தாயகத் தொழிற்துறை வளர்ச்சிக்கு உதவியது.

நிலப்பிரபுத்துவத்திலிருந்து முதலாளித்துவத்திற்கு மாறுவது பூர்ஷ்வாப் புரட்சிகளின் விளைவாய் நடைபெற்றது. முதல் பூர்ஷ்வாப் புரட்சிகள் நெதர்லாந்திலும் (16ஆம் நூற்றாண்டு), இங்கிலாந்திலும் (17ஆம் நூற்றாண்டு), பிரான்சிலும் (18ஆம் நூற்றாண்டு) நடைபெற்றன. நிலப்பிரபுக்களுக்கு எதிராக விவசாயிகளும் சிறு தொழில் புரிவோரும் நடத்திய போராட்டத்தை, அரசாட்சியைக் கைப்பற்றி முதலாளித்துவ வளர்ச்சிக்கான வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்காக முதலாளி வர்க்கம் பயன்படுத்திக் கொண்டது.

ஆட்சியைக் கைப்பற்றிய முதலாளி வர்க்கம் தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகப்படுத்தியது. ஆனால் இவர்களின் உறுதியான எதிர்ப்பைச் சந்தித்ததும், கணிசமான அளவு நிலத்தையும் செல்வத்தையும் இன்னமும் தம் கரங்களில் வைத்திருந்த நிலப்பிரபுக்களுடன் முதலாளி வர்க்கம் உடன்படிக்கை செய்து கொண்டது. நிலப்பிரபுக்களும் நிலக்கிழார்களும் விவசாயிகளைத் தொடர்ந்து சுரண்டினார்கள், ஆனால் இது முதலாளித்துவ சமுதாயத்திற்கே உரித்தான புதிய வடிவங்களில் நடந்தது. இது தவிர பழைய நிலப்பிரபுத்துவ சுரண்டல் வடிவங்களின் மிச்ச சொச்சங்களும் (உதாரணமாக, கடனுக்காக வேலை செய்வது, வார முறை) நிலவின. இன்றும் கூட ஒரு சில ஐரோப்பிய முதலாளித்துவ நாடுகளில் (இத்தாலி, போர்ச்சுகல், ஸ்பெயின், கிரீஸ்) நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவத்திற்கு முந்தைய வாடகை முறையின் மிச்ச சொச்சங்கள் காணப்படுகின்றன.

தொழிற்துறை ரீதியாக பின்தங்கிய ஆப்பிரிக்க, ஆசிய,

லத்தீன் அமெரிக்க நாடுகளில் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்கள் பெரிதும் காணப்படுகின்றன. நவீன காலனியாதிக்கவாதிகள் இவற்றிற்கு பெரிதும் ஆதர வளிக்கின்றனர், ஏனெனில் இது இவர்கள் கொள்ளை லாபம் பெற உதவுகிறது, விடுதலையடைந்த நாடுகள் முன்னேற்றப் பாதையில் நடை போடத் தடையாக இருக்கிறது. இந்நாடுகளில் உழைப்பாளி மக்கள் திரளினர் நிலப்பிரபுத்துவச் சுரண்டலுக்கு ஆளாகும் அதே நேரத்தில் அந்நிய ஏகபோகங்களின் ஏகாதிபத்திய ஒடுக்குமுறைக்கும் தேசிய முதலாளிகளின் சுரண்டலுக்கும் உட்படுகின்றனர். எனவேதான் பொருளாதார ரீதியாக பலவீனமான நாடுகளின் மக்கள் நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களுக்கு எதிராக நடத்தும் போராட்டம் ஏகாதிபத்தியத்திற்கு எதிராக, சுரண்டலின் எல்லா வடிவங்களையும் ஒழிப்பதற்காக நடத்தப்படும் போராட் டத்துடன் ஒன்றாக இணைகிறது.

அத்தியாயம் எட்டு

மூலதனத்தின் ஆதிக்கம்

இன்று முதலாளித்துவம் சமூக அமைப்பு என்ற வகையில் உலகின் பெரும் பகுதியில் நிலவுகிறது. முந்தைய உற்பத்தி முறைகளுடன் ஒப்பிடுகையில் குறைவான வரலாற்று கட்டத்திலேயே முதலாளித்துவம் பலம் மிகு உற்பத்திச் சக்திகளைத் தோற்றுவித்து, வளர்த்துள்ளது. அதே நேரத்தில் இதனுடன் சேர்ந்து அதன் சமரசப்படுத்த இயலாத முரண்பாடுகளும் (மிகை உற்பத்தியின் பொருளாதார நெருக்கடிகள், வேலையில்லாத் திண்டாட்டம், பணவீக்கம், இராணுவவெறி, நிறவெறி, காலனியாதிக்கம், மற்ற குறைபாடுகள்) தெட்டத் தெளிவாயுள்ளன.

19ஆம் நூற்றாண்டின் இறுதி, **20**ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலிருந்து முதலாளித்துவம் தன் இறுதிக் கட்டமாகிய ஏகாதிபத்தியக் கட்டத்தில் நுழைந்து, ஏகபோக, ஒட்டுண்ணித்தனம் வாய்ந்த, அழுகும் முதலாளித்துவமாகியுள்ளது, வரலாற்று ரீதியாக இதன் மாறும் தன்மை வெள்ளிடை மலையாகியுள்ளது. **1917**ஆம் ஆண்டு ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றி ஏகாதிபத்தியச் சங்கிலியில் விழுந்த முதல் ஓட்டையாகியது. முதலாளித்

துவத்தின் பொது நெருக்கடிக் கட்டம் ஆரம்பமாகியது, கிட்டத்தட்ட எல்லா கண்டங்களிலும் உள்ள நாடுகள் முதலாளித்துவத்திலிருந்து விலகி சோஷலிச வளர்ச்சிப் பாதைக்கு வந்தன. இன்று சோஷலிசம், முதலாளித் துவம் எனும் எதிரெதிரான இரண்டு உலக அமைப்பு களுக்கு இடையில் பொருளாதாரப் போட்டியும் போராட்டமும் நடைபெறுகின்றன. இப்படிப்பட்ட சூழ்நிலைகளில், முதலாளித்துவத்தைப் பற்றி **மூலதனம்** நூலில் கா. மார்க்ஸ் அளித்த பகுப்பாய்வும், ஏகாதிபத் தியத்தைப் பற்றிய லெனினிய போதனையும் ஏதோ பழையவையாகி விட்டதாயும், கடந்த சில பத்தாண்டு களில் முதலாளித்துவ நாடுகளில் ஏற்பட்டுள்ள பண்பு ரீதியாகப் புதிய புலப்பாடுகளையும் மாற்றங்களையும் இவை பிரதிபலிக்காததாயும் நிரூபிக்க பூர்ஷ்வா சித்தாந்திகள் வீணாக முயலுகின்றனர்.

உண்மையில் முதலாளித்துவம் வளருகிறது, நவீன விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி, அரசு-ஏகபோக முதலாளித்துவம், மற்ற புலப்பாடுகளுடன் தொடர் புடைய புதிய சூழ்நிலைகளுக்குப் பழகிக் கொள்கிறது. ஆனால் எவ்வளவுதான் முதலாளித்துவம் நவீனமயப்பட் டாலும் முதலாளித்துவ உற்பத்தியின் அடிப்படை சாரமும் கூலியுழைப்பை மூலதனம் சுரண்டும் தன்மையும் இவற்றை மார்க்ஸ் ஆராய்ந்த பின் எவ்வித மாற்றமும் அடையவில்லை. சரியான தத்துவார்த்த முறையியல் நிலைகளிலிருந்து முதலாளித்துவ உற்பத்தி முறையை உண்மையிலேயே ஆழமாக ஆராய விரும்பும் எல்லோருக் கும் இன்றும் விஞ்ஞான கம்யூனிச ஆசான்களின் நூல்கள் வழிகாட்டிகளாகத் திகழத் தக்கவை.

ஏற்கெனவே நாம் கூறியபடி, மனித சமுதாய வளர்ச்சியின் ஆரம்பக் கட்டங்களில் இயற்கை உற்பத்தி தான் ஆதிக்கம் செலுத்தியது. தந்தைவழி விவசாயம், பெரும் அடிமையுடைமை பண்ணைகள், நிலப்பிரபுத்துவப் பண்ணைகள் எல்லாம் அடிப்படையில் இயற்கை உற்பத்தியாக இருந்தன.

இந்த உற்பத்தி தன் தன்மையை மாற்றி பண்ட உற்பத்தியாக மாற எந்த நிபந்தனைகள் அவசியமாக இருந்தன? முதலில், பண்ட உற்பத்திக்கு சமூக உழைப்புப் பிரிவினை வளர்ச்சியடைந்திருக்க வேண்டும். ஆனால் இது மட்டும் போதுமானதாயிருக்கவில்லை. ஏனெனில் பண்டைய இந்தியக் கூட்டுச் சமூகத்தில் கூட உழைப்புப் பிரிவினை நிலவியது. நிலவுடைமையாளர்களைத் தவிர கொல்லர்கள், குயவர்கள், தச்சர்கள் போன்றோர் இக்கூட்டுச் சமூக உறுப்பினர்களாயிருந்தனர். ஆனால் இவர்கள் உற்பத்தி செய்தது எல்லாம் எவ்வித கொள் வினை-கொடுப்பினையும் இன்றி சமூக உறுப்பினர்கள் மத்தியில் சமமாக வினியோகிக்கப்பட்டன. உழைப்பின் விளைபொருள் கூட்டுச் சமூகம் முழுவதற்கும் சொந்த மாயிருந்ததே தவிர இதன் தனிப்பட்ட உறுப்பினர் களுக்குச் சொந்தமாயிராததுதான் இவ்வாறு நடக்கக் காரணம் ஆகும்.

பொருளாதாரம், பண்ட உற்பத்தி பொருளாதாரமாக மாற இரண்டாவது முக்கிய நிபந்தனையும் தேவைப்பட் டது. அதாவது உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை தோன்ற வேண்டியிருந்தது. சிறு தொழில் புரிபவன் உற்பத்திச் சாதனங்கள் மற்றும் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் தனியுடைமையாளனாக

மாறியதும் அவனால் தன் உழைப்பின் விளைபொருட்களை விற்க முடியும். எனவே இந்த இரண்டு நிபந்தனைகளும் — உற்பத்தியாளர்களுக்கு இடையிலான சமூக உழைப்புப் பிரிவினை, உற்பத்திச் சாதனங்களின் மீதான தனியுடைமை — நிலவும் போது பண்ட உற்பத்தி தவிர்க்க இயலாதவாறு தோன்றும்.

வரலாற்று ரீதியாக இரண்டு வகையான **பண்ட உற்பத்திகள்** நிலவுகின்றன: 1) விவசாயிகள், சிறு தொழில் புரிவோர் போன்றவர்களின் **எளிய பண்ட உற்பத்தி;** 2) **முதலாளித்துவப் பண்ட உற்பத்தி.** இவை ஒரே அடிப்படையை உடையவை, ஏனெனில் இவை உற்பத்திச் சாதனங்களின் மீதான தனிச் சொத்துடைமையின் அடிப்படையிலானவை, பண்டப் பரிவர்த்தனை தன்னிச்சையாக, தாறுமாறாக நடைபெறுகிறது.

ஆனால் எளிய பண்ட உற்பத்திக்கும் முதலாளித்துவப் பண்ட உற்பத்திக்கும் இடையில் கணிசமான வேறுபாடுகளும் உள்ளன. எளிய பண்ட உற்பத்தியில் உற்பத்திச் சாதனங்களும் உழைப்பின் விளைபொருளும் உற்பத்தியாளனுக்கே சொந்தமானவை. இங்கே யாரும் யாரையும் சுரண்டவில்லை. முதலாளித்துவப் பண்ட உற்பத்தியிலோ நேரடியான உற்பத்தியாளன் உற்பத்திச் சாதனங்களிலிருந்து பிரிக்கப்பட்டுள்ளான், உற்பத்தி செய்யப்பட்ட பொருள் இவனுக்குச் சொந்தமானதல்ல, மாறாக யாருக்கு உற்பத்திச் சாதனங்கள் சொந்தமோ, யார் கூலித் தொழிலாளியைச் சுரண்டுகிறானோ அவனுக்குச் சொந்தம்.

முதலாளித்துவத்தில் பெரும்பாலான பொருட்கள் விற்பதற்காகவே உற்பத்தி செய்யப்படுகின்றன, அதாவது பண்டங்களாகின்றன. இங்கு ஆலைகள், தொழிற்சாலைகள், இருப்புப் பாதைகள், நிலம், நுகர்வுப் பொருட்கள்

போன்றவை எல்லாம் விற்கப்படுகின்றன, வாங்கப்படுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் உடைமையாளர்கள் என்ற வகையில் முதலாளிகளுக்கும் தம் உழைப்புச் சக்தியை விற்கும் கூலித் தொழிலாளிகளுக்கும் இடையிலான உறவுகளும் பண்டத் தன்மையைப் பெறுகின்றன. இது மிகவும் குறிப்பாகக் கவனிக்கத் தக்கதாகும்.

எனவே முதலாளித்துவ உற்பத்தியைப் பற்றிய ஆராய்ச்சியை கா. மார்க்ஸ் பண்டத்தைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து துவக்குவது தற்செயல் அல்ல. **மூலதனம்** நூலின் முதல் அத்தியாயத்தில் அவர் பின்வருமாறு எழுதுகிறார்: ''முதலாளித்துவ உற்பத்தி முறை ஆதிக்கம் செலுத்தும் சமுதாயங்களின் செல்வம் 'பண்டங்களின் பெரும் திரட்டாகவும்', தனிப்பட்ட பண்டம் என்பது இச்செல்வத்தின் எளிய வடிவமாகவும் உள்ளது. எனவேதான் நம் ஆராய்ச்சியை பண்டத்தைப் பற்றிய பகுப்பாய்விலிருந்து துவங்குகிறோம்''.* இந்த அணுகுமுறை முற்றிலும் சரியானது. எளிய உயிரணுவின் கட்டமைப்பை ஆராயாமல் தாவரம் அல்லது விலங்கின் உடற்கூற்றை ஆராய முடியாது. முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார உயிரணுவாகிய பண்டத்தைப் பற்றிய பகுப்பாய்வு முதலாளித்துவம் மற்றும் இதன் வளர்ச்சி நியதிகளைப் பற்றிய பகுப்பாய்விற்கான திறவு கோலாகும்.

பண்டத்தின் பண்புகள்

சொந்த நுகர்விற்காக அல்லாமல், பரிவர்த்தனைக்காக, விற்பனைக்காக உற்பத்தி செய்யப்பட்ட உழைப்பின் விளைபொருள்தான் பண்டமாகும் என்பதைப் பார்த்

* K. Marx, *Capital*, Vol. 1, p. 43.

தோம். பண்டத்தின் பண்புகள் யாவை?

உழைப்பின் விளைபொருள் பண்டமாக, இது முதலில் மனிதர்களின் தனிப்பட்ட அல்லது சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், அதாவது குறிப்பிட்ட **பயன் மதிப்பாகச்** செயலாற்ற வேண்டும். இந்த தன்மை பண்டத்தின் பௌதிக, இரசாயன, தொழில்நுட்பத் தன்மைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. உதாரணமாக, கவுன் மற்றும் காலணியின் பயன் மதிப்பு இவை முறையே ஆடையாகவும் காலணியாகவும் மனிதர்களுக்குப் பயன்படுகின்றன என்பதில் அடங்கியுள்ளது. ரொட்டி, இறைச்சி, பால் போன்றவற்றிற்கு வேறுவிதமான பயன் மதிப்பு உள்ளது, அதாவது இவை மனிதர்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்கின்றன. நூல்கள் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன. இயந்திரங்கள் குறிப்பிட்ட பொருட்களை உற்பத்தி செய்வதில் மனிதர்களின் சமூகத் தேவைகளைப் பூர்த்தி செய்கின்றன.

எனவே பயன் மதிப்புகளின் வட்டம் பெரிதும் விரிவானது என்பது தெளிவு. பண்டம் என்பது அதை உற்பத்தி செய்தவர்களின் தேவைகளையல்ல, மற்றவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும், அதாவது சமூக பயன் மதிப்பாக இருக்க வேண்டும். இது புரியக் கூடியதே. உற்பத்தியாளனின் தேவைகளை மட்டும் பூர்த்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட உழைப்பின் விளைபொருள் பண்டமாக இருக்க முடியாது. உழைப்பின் விளைபொருள் பரிவர்த்தனைக்காக, விற்பதற்காக, வாங்குவதற்காக உற்பத்தி செய்யப்படும் போது தான் பண்டமாகிறது.

பண்டங்கள் ஒரு குறிப்பிட்ட அளவு விகிதத்தில் ஒன்றுக்கு ஒன்று பரிமாறிக் கொள்ளப்படுகின்றன.

உதாரணமாக, ஒரு மூட்டை தானியம் இரண்டு கோடாரிகளுக்குப் பரிமாறிக் கொள்ளப்படுகிறது. ஒரு பண்டம் மற்றொரு பண்டத்திற்குக் குறிப்பிட்ட அளவு விகிதத்தில் பரிமாறிக் கொள்ளப்படும் போது இவ்வாறு பரிமாறிக் கொள்ளப்படும் தன்மையை அப்பண்டத்தின் **பரிவர்த்தனை மதிப்பு** என்கிறோம்.

இவ்வாறாக, உழைப்பின் விளைபொருள் கீழ்க் காணும் இரண்டு பண்புகளைக் கொண்டிருந்தால் அது பண்டமாக முடியும். முதலில், இது பயன் மதிப்பைக் கொண்டிருக்க வேண்டும், அதாவது மனிதனின் ஏதாவது ஒரு தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும்; இரண் டாவதாக, பரிவர்த்தனை மதிப்பைப் பெற்றிருக்க வேண்டும், அதாவது குறிப்பிட்ட அளவு விகிதத்தில் மற்றொரு பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்யப்படும் தன்மையைக் கொண்டிருக்க வேண்டும். பண்டத்தின் இவ்விரண்டு பண்புகளும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புடையவை. இவற்றில் ஒன்று இல்லாவிட்டாலும், பரிவர்த்தனையின் மூலம் பொருளாதார உறவுகளை வெளிப்படுத்தும் பண்டமும் இருக்காது.

முதல் பார்வைக்கு, எந்த அளவு விகிதங்களில் பண்டங்கள் ஒன்றுக்கு ஒன்று பரிமாறிக் கொள் கின்றனவோ அவை தற்செயலானவை என்று தோன்றக் கூடும். இந்த விகிதங்கள் அடிக்கடி மாறுவது வேறு இந்த வாதத்தை பலப்படுத்துகிறது. ஆனால் குறிப்பிட்ட ஒரு கால இடைவெளியில் இந்த மாற்றங்கள், ஏதோ ஒரு சராசரி மட்டத்தைச் சுற்றி நடக்கின்றன, அதுவும் எல்லா மாற்றங்களிலும் ஒரு பண்டம் மற்றதை விட விலையுயர்ந்ததாக உள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக, தங்கம் வெள்ளியை விடவும், வெள்ளி இரும்பை விடவும் விலையுயர்ந்தது. இந்த இடத்தில்,

பண்டப் பரிவர்த்தனையின் போது அளவு விகிதங்கள் எப்படி நிர்ணயிக்கப்படுகின்றன என்றொரு கேள்வி எழுகிறது.

பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரத்தில் இது சம்பந்தமாகப் பல்வேறு வாதங்கள் உள்ளன. பண்டத்தின் பரிவர்த்தனை மதிப்பு, தேவைக்கும் சப்ளைக்கும் உள்ள விகிதத்தால் நிர்ணயிக்கப்படுவதாக சிலர் கருதுகின்றனர். அதாவது தேவையை விட சப்ளை அதிகமாக இருந்தால் அது விலைக் குறைப்பிற்கும், சப்ளையை விட தேவை அதிகமாக இருந்தால் அது விலை அதிகரிப்பிற்கும் இட்டுச் செல்லுமென இவர்கள் கூறுகின்றனர். ஆனால் இப்படிப்பட்ட விளக்கமானது, தேவையும் சப்ளையும் சமமாக இருக்கும் போது பண்டத்தின் விலை எப்படி நிர்ணயிக்கப்படுகிறது எனும் கேள்விக்குப் பதில் தரவில்லை. அளவு விகிதங்களின் எந்த ஒரு ஓரளவு நிலையான மட்டத்தைச் சுற்றி விலைகள் மாறுகின்றனவோ அந்த மட்டம் எப்படி நிர்ணயிக்கப் படுகிறது, விலைகள் எப்படி மாறினாலும் ஏன் எப்போதும் தங்கம் வெள்ளியை விடவும், வெள்ளி இரும்பை விடவும் விலையுயர்ந்ததாக உள்ளது என்ற கேள்விகளுக்கும் இவ்விளக்கம் பதில் தரவில்லை.

பண்டங்களின் பரிவர்த்தனையின் போது தோன்றும் உறவுகளை பல பூர்ஷ்வா ஆசிரியர்கள் இவற்றின் பயன் தன்மையால் விளக்குகின்றனர். இவர்களுடைய கருத்துப் படி, பண்டத்தின் பயன்தன்மை எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்கவ்வளவு இதன் பயன் மதிப்பு அதிகம், அவ்வளவுக்கவ்வளவு இது விலை உயர்ந்தது. ஆனால் பண்பு ரீதியாக வெவ்வேறான பயன் மதிப்புகளை ஒப்பிட முடியுமா என்ன? உதாரணமாக, ஆரஞ்சு, எலுமிச்சை பழங்களின் பயன் மதிப்பிற்கும் நூல்களின்

பயன் மதிப்பிற்கும் இடையிலுள்ள பொது அம்சம் என்ன? வெவ்வேறு பயன் மதிப்புகள் இருப்பதானது உற்பத்தியாளனிடம் இல்லாத ஒரு பயன் மதிப்பைப் பெறக் கூடிய விருப்பத்தை அவனுக்கு ஏற்படுத்தி, பரிவர்த்தனைக்கான உந்து சக்தியாக விளங்கலாமே தவிர, இதனால் பண்டப் பரிவர்த்தனையின் அளவு விகிதங்களை நிர்ணயிக்க இயலாது.

பண்டத்தின் மதிப்பு

பண்டங்களை அளவு ரீதியாக ஒப்பிடும் போது, இவற்றிடம் பொதுவான ஏதோ ஒன்று உள்ளது முன்னூகிக்கப்படுகிறது, இதுதான் இவற்றை ஒப்பிடச் செய்கிறது. இவற்றின் பயன் மதிப்புகள் எவ்வளவுதான் வேறுபட்டாலும் இவற்றிடம் ஒரு பொதுப் பண்பைக் காணலாம், அதாவது இவை எல்லாம் உழைப்பின் விளைபொருட்களாகும். பண்டங்களின் உற்பத்திக்காகச் செலவிடப்பட்ட உழைப்பு மட்டுமே, பரிவர்த்தனையின் போது இவற்றின் இடையே விகிதங்களை நிலைநாட்ட உதவக் கூடிய ஒரே அடிப்படையாகும். ஆனால் ஒரே மாதிரியான பண்டத்தை உற்பத்தி செய்வதில் வெவ்வேறு உற்பத்தியாளர்கள் வெவ்வேறு அளவு உழைப்பைச் செலவிடுகின்றனர். வெவ்வேறு தொழில்நுட்ப வாய்ப்பு கள், வெவ்வேறான உற்பத்தித் திறன், வெவ்வேறு திறமைகள், உழைப்பு வேகம் போன்ற காரணிகள் இங்கு தம் பங்கை ஆற்றுகின்றன. ஒரு பண்டத்தைத் தயாரிப்பதில் ஒவ்வொரு தனிப்பட்ட உற்பத்தியாளனும் எவ்வளவு வேலை நேரத்தைச் செலவிட்டான் என்பதை வைத்து பண்டத்தின் மதிப்பு நிர்ணயிக்கப்பட்டால், யார் இதற்காக அதிக வேலை நேரத்தைச் செலவிட்

டானோ அவன் ஆதாயம் பெறுவான். எனவே பண்டத்தின் **மதிப்பு (இதன் சமூக மதிப்பு)**, சமூக ரீதியாக சராசரியான சாதாரண சூழ்நிலைகளில், எந்த சாராசரி திறமை மற்றும் உழைப்பு வேகத்தில் பெரும்பாலான பண்டங்கள் உற்பத்தி செய்யப்படுகின்றனவோ, அந்த சராசரி மட்டத்தில் எவ்வளவு வேலை நேரம் தேவை என்பதை வைத்து நிர்ணயிக்கப்படுகிறது. இந்த வேலை நேரம் சமூக ரீதியாக அவசிய வேலை நேரம் எனப் படுகிறது. இதுதான் பண்டத்தின் சமூக மதிப்பை முடிவு செய்கிறது.

உழைப்பின் இரட்டைத் தன்மை

பண்டத்திற்கு பயன் மதிப்பும் மதிப்பும் உண்டு என்பதைப் பார்த்தோம். எனவே பண்டத்தில் உள்ளடங்கியுள்ள உழைப்பிற்கும் இரட்டைத் தன்மை உண்டு.

பல்வேறு விதமான உழைப்பின் பயனாய் சமுதாயத்தில் பல்வேறு விதமான பயன் மதிப்புகள் தோற்றுவிக்கப் படுகின்றன. ஒவ்வொரு பயன் மதிப்பிலும் குறிப்பிட்ட வகையான உழைப்பு உள்ளது. உதாரணமாக, தானியத்தில் விவசாயியின் உழைப்பும் ஆடையில் தையற்காரனின் உழைப்பும் எஃகில் உலோகத் தொழிலாளியின் உழைப்பும் உள்ளது. **ஸ்தூலமான உழைப்பு** பண்டத்தின் குறிப்பிட்ட பயன் மதிப்பைத் தோற்றுவிக்கிறது.

வெவ்வேறான பண்டங்களை (உதாரணமாக, தானியத்தையும் ஆடையையும்) பரிவர்த்தனை செய்யும் போது இப்பண்டங்களைத் தோற்றுவித்த ஸ்தூலமான உழைப்பிற்கு இடையிலான வேறுபாடுகள் ஒரு புறமாக தள்ளி வைக்கப்படுகின்றன. இங்கே தானியமும் ஆடையும் மனிதனின் தசை மற்றும் மூளைச் சக்திகள் செலவிடப்பட்

டதால் கிடைத்த விளைபொருட்களாக, பொதுவான உழைப்பின் (இது அளவு ரீதியாக மட்டுமே பிரித்துப் பார்க்கப்படுகிறதே தவிர பண்பு ரீதியாக அல்ல) விளைபொருட்களாகத் திகழுகின்றன. இப்படி ஸ்தூலமான உழைப்பைச் சாராத பொதுவான உழைப்பு **சூக்குமமான உழைப்பு** எனப்படுகிறது. இதுதான் பண்டத்தின் மதிப்பைத் தோற்றுவிக்கிறது.

இவ்வாறாக, ஒரு புறம் உழைப்பு என்பது பயன் மதிப்பைத் தோற்றுவிக்கும் ஸ்தூலமான உழைப்பாகும். மறு புறம், இது பண்ட உற்பத்தியாளனின் உழைப்பு, பொதுவான, சூக்குமமான உழைப்பு; சமூக உழைப்பு முழுவதன் அங்கமாகத் திகழும் இது இந்த வகையில் பண்டத்தின் மதிப்பைத் தோற்றுவிக்கிறது.

இதுவரை கூறியவற்றைத் தொகுத்துப் பார்த்தால், **பண்டத்தின் மதிப்பு என்பது பண்டத்தின் உற்பத்திக் காகச்** செலவிடப்பட்ட, **பண்டத்தில் அடங்கியுள்ள** சூக்கும**மான, சமூக ரீதியாக அவசியமான உழைப்பு** எனும் முடிவிற்கு வரலாம்.

எனவே **மதிப்பின் அளவு** எல்லாவற்றிற்கும் மேலாக, வேலை நேரம் எவ்வளவு நீடிக்கிறது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. ஒரு பண்டத்தின் உற்பத்திக்கு சமுதாய ரீதியாக அவசிய வேலை நேரம் எவ்வளவுக் கெவ்வளவு அதிகமாக செலவிடப்படுகிறதோ அவ்வளவுக்கு அவ்வளவு அதன் மதிப்பு அதிகம். உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிக்க அதிகரிக்க பண்டத்தின் மதிப்பு குறையும்.

பண்ட உற்பத்தியாளனின் உழைப்பிற்கு இரண்டு பக்கங்கள் உள்ளன எனலாம். அதாவது இது ஒரே நேரத்தில் ஸ்தூலமான உழைப்பாயும் சூக்குமமான உழைப்பாயும் உள்ளது.

உழைப்பின் இரட்டைத் தன்மையை கா. மார்க்ஸ் முதன்முதலாகக் கண்டுபிடித்தார். முதலாளித்துவ உற்பத்தியின் சாரம் மற்றும் இதன் வளர்ச்சி நியதிகளை வெளிப்படுத்துவதில் இது பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. உழைப்பின் இரட்டைத் தன்மையைப் பற்றிய போதனைதான் ''உண்மைகளை முழுமையாகப் புரிந்து கொள்வதன் அடிப்படை'' என்று கா. மார்க்ஸ் கருதினார்.

தனிப்பட்ட உழைப்பிற்கும் சமூக உழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு

முதலாளித்துவ அமைப்பின் எல்லா முரண்பாடுகளும் பண்டத்தினுள் கரு வடிவில் உள்ளன. மதிப்பு என்பது பண்டத்தின் சமூக ரீதியான பண்பு என்பதை ஏற்கெனவே பார்த்தோம். அதே நேரத்தில் தனியுடைமையின் அடிப்படையிலான பொருளாதார அமைப்பில் பண்ட உற்பத்தியாளனின் உழைப்பு தனிப்பட்ட தன்மையை உடையது. அவன் உற்பத்தி செய்வது எல்லாம் அவனுடைய தனிப்பட்ட விஷயம். அவன் அவசியம் என்று கருதுவதை எல்லாம் உற்பத்தி செய்யலாம்—ஆடை நெய்யலாம், காலணி தைக்கலாம், மேசை நாற்காலிகள் செய்யலாம், ரொட்டி சுடலாம். இவனுக்கு ஏதோ முழு சுதந்திரம் உள்ளது போல் முதல் பார்வைக்குத் தோன்றலாம். ஆனால் இது மாயையானது. உண்மையில் பண்ட உற்பத்தியாளன் சமூக உழைப்புப் பிரிவினையால் கட்டிப் போடப்பட்டிருக்கிறான். உதாரணமாக, தையற்காரன் துணி தைக்க அவனுக்கு பல பொருட்கள் தேவைப்படுகின்றன, இவற்றை அவன் தயாரிப்ப

தில்லை. எனவே தையற்காரன், தன்னைப் போன்றே தனியுடைமையாளர்களாக இருக்கும் மற்ற பண்ட உற்பத்தியாளர்களைச் சார்ந்திருக்கிறான். ஒவ்வொரு வரின் உழைப்பும் நேரடியாக தனிப்பட்ட உழைப்பாக இருக்கும் அதே நேரத்தில் சமூக உழைப்பின் அங்கமு மாகும். ஆனால் இந்த சமூகத் தன்மை மூடி மறைக்கப்பட் டுள்ளது. இது சந்தையில் ஒரு பண்டம் மற்றொரு பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளும் போதுதான் வெளிப்படுகிறது. சந்தையில் பண்ட உற்பத்தியாளன் தன் பண்டத்தை விற்கும் போதுதான், தன் பண்டம் சமுதாயத்திற்குத் தேவையா, தன் உழைப்பு சமூக உழைப்பின் ஒரு அங்கமாக விளங்கு கிறதா இல்லையா என்று அறிகிறான். சமுதாயத்திற்குத் தேவையில்லாத பண்டம் உற்பத்தி செய்யப்பட்டிருந்தால் அது விற்பனையாகாது. அதன் பயன் மதிப்பு சமுதாயத் தால் அங்கீகரிக்கப்படாது. எனவே அப்பண்டத்தை உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்பட்ட உழைப்பு வீணானதாகும். பல நேரங்களில் வேறு விதமாக நடப்ப துண்டு. பண்டத்திற்கு சமூக பயன் மதிப்பு இருக்கும், அது சமுதாயத்திற்கு, இதன் உறுப்பினர்களுக்குத் தேவையானதாயிருக்கும், ஆனால் மக்களிடம் பணம் இல்லாததால், மக்கள் திரளினரின் ஏழ்மை காரணமாக இது விற்பனையாகாது. இங்கும் அதன் உற்பத்திக்காக செலவிடப்பட்ட உழைப்பு வீணாகிறது. இந்த புலப்பாடு களில் பண்டத்தின் பயன் மதிப்பிற்கும் மதிப்பிற்கும் இடையிலான முரண்பாடு, ஸ்தூலமான உழைப்பிற்கும் சூக்குமமான உழைப்பிற்கும் இடையிலான முரண்பாடு வெளிப்படுகின்றது. இவைதான் எளிய பண்ட உற்பத்தி யின் முக்கிய முரண்பாட்டை — அதாவது தனிப்பட்ட உழைப்பிற்கும் சமூக உழைப்பிற்கும் இடையிலான

முரண்பாட்டை — வெளிப்படுத்துகின்றன.

இவ்வாறாக பண்ட உற்பத்தியாளர்களின் உழைப்பு ஒரே நேரத்தில் நேரடியாகத் தனிப்பட்ட தன்மையையும் மறைவாக சமூகத் தன்மையையும் கொண்டுள்ளது. இச்சமூகத் தன்மை மறைமுகமாக, சந்தையில் கொள் வினை-கொடுப்பினை மூலம் வெளிப்படுகிறது. எங்கே பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் பொருட்கள், பண்டங்களுக்கு இடையிலான உறவுகளைப் பார்த்தார் களோ அங்கே கா. மார்க்ஸ் மனிதர்களுக்கு இடையிலான உறவுகள் நிலவுவதை (இவை பொருட்கள் எனும் மேலுறையால் மூடப்பட்டுள்ளன) கண்டுபிடித்தார்.

மதிப்பு விதி எப்படிச் செயல்படுகிறது?

மதிப்பு விதிதான் பண்ட உற்பத்தியின் இயக்கம் மற்றும் வளர்ச்சியின் பொருளாதார விதியாகத் திகழுகிறது. பண்டங்களின் உற்பத்தியும் பரிவர்த் தனையும் சமூக ரீதியாக அவசியமாக எவ்வளவு உழைப்பு செலவழிக்கப்பட்டுள்ளது என்பதைப் பொறுத்து நடைபெறுகின்றன என்பதுதான் இவ்விதியின் சாரமாகும்.

தனியுடைமையின் அடிப்படையிலான பண்ட உற்பத்தி யில் மதிப்பு விதி தன்னிச்சையாக, போட்டியின் போக்கில் செயல்படுகிறது. இது செயல்படுவதில் மூன்று முக்கிய வடிவங்களைச் சுட்டிக் காட்டலாம்.

முதலாவதாக, மதிப்பு விதியானது அந்தந்த பண்டத் தின் தேவைக்கும் சப்ளைக்கும் இடையிலான விகிதம் மாறுவதன் தாக்கத்தின் கீழ், மதிப்பைச் சுற்றி விலைகள் இடையறாது மாறுவதன் மூலம், உற்பத்தித் துறை களுக்கு இடையில் சமூக உழைப்பின் வினியோகத்தைத் தன்னிச்சையாக ஒழுங்குபடுத்துகிறது. தேவையும் சப்ளை

யும் மாறுவதால் விலைகள் தன்னிச்சையாக மாறுகின்றன; பண்ட உற்பத்தியாளர்கள் எந்த பண்டங்களுக்குத் தேவை குறைவோ (இதற்கேற்றபடி விலைகளும் குறைவு) அந்தப் பண்டங்களை உற்பத்தி செய்யும் துறைகளை விட்டு விட்டு தேவை அதிகமான (விலையும் அதிகமான) பண்டங்களை உற்பத்தி செய்யும் துறை களுக்குச் செல்கின்றனர்; இதனால் எந்தத் துறைகளிலிருந்து உற்பத்தியாளர்கள் வெளியேறினார்களோ அந்தத் துறை களின் பண்டங்களுக்கான தேவை கூடுகிறது, உற்பத்தி மிகுதியாகும் துறைகளின் பொருட்களுக்கான தேவை குறையும். முதலாளித்துவ உற்பத்தி வளர்ச்சியடைந்து பெரும் தொழில் நிறுவனங்களில் ஏராளமான பண்டங்கள் உற்பத்தி செய்து வெளிவரும் போது ஊசலாட்டங்களின் தன்னிச்சையான தன்மை, உற்பத்தி அராஜகம் முழுமை யாக வெளிப்படுகிறது. இது அங்கக ரீதியாக முதலாளித் துவத்திற்கு — குறிப்பாக பொருளாதார நெருக்கடி கால கட்டத்தில் — உரித்தானது.

இரண்டாவதாக, மதிப்பு விதி செயல்படுவதன் அடிப்படையில் பண்ட உற்பத்தியாளர்கள் பாகுபாடு அடைகின்றனர் (பிரிந்து சிதறுகின்றனர்); இதில் பெரும்பாலோர் திவாலடைந்து பாட்டாளிகளாக மாறு கின்றனர், ஒரு சிறு பகுதியினர் செல்வம் சேர்த்து முதலாளிகளாகின்றனர். இது எப்படி நடைபெறுகிறது? பண்டங்கள் வெவ்வேறான சூழ்நிலைகளில், வெவ் வேறான தொழில்நுட்ப மட்டங்களில், வெவ்வேறான உழைப்புத் திறனின் கீழ் உற்பத்தி செய்யப்படுகின்றன. எனவே பல்வேறு பண்ட உற்பத்தியாளர்களுடைய பண்டங்களின் தனிப்பட்ட மதிப்பு ஒரே மாதிரியானதல்ல. உதாரணமாக, ஒரு பண்ட உற்பத்திக்கு ஒரு பண்ட உற்பத்தியாளன் 10 மணி நேரத்தையும் மற்றொருவன்

15 மணி நேரத்தையும் செலவிடுகிறான் என்று வைத்துக் கொள்வோம். சந்தையில் இப்பண்டம் சமூக ரீதியாக அவசிய வேலை நேரத்தால் நிர்ணயிக்கப்படும் மதிப் பிற்குத்தான் விற்கப்படும். இது 12 மணி நேரம் என்று வைத்துக் கொள்வோம். எனவே முதல் பண்ட உற்பத்தி யாளனுக்குக் கூடுதல் லாபம் கிடைக்கும், இரண்டாம் நபருக்கு இழப்பு ஏற்படும் என்பது கண்கூடு. இவ்வாறாக போட்டியில் ஒரு பண்ட உற்பத்தியாளன் திவாலடை வான், மற்றொருவன் செல்வம் சேர்ப்பான்.

இயந்திர உற்பத்தி, போட்டிக்காக முதலாளியின் கரங்களில் உள்ள சக்தி மிக்க சாதனமாகும். இது சிறு உற்பத்தியாளர்களுக்குக் கிட்டாத புதிய தொழில் நுட்பத்தின் அடிப்படையிலானது. தொழில்நுட்பப் புதினங் களைப் புகுத்துவதன் மூலம் முதலாளிகள் பண்டங் களின் மதிப்பைக் குறைக்கின்றனர், போட்டியிடும் திறனை அதிகரிக்கின்றனர், ஏராளமான சிறு பண்ட உற்பத்தியாளர்களைத் திவாலடையச் செய்கின்றனர்.

மூன்றாவதாக, மதிப்பு விதியின் செயற்பாடு பண்ட உற்பத்தியின் தொழில்நுட்பம் தன்னிச்சையாக முன்னேற உதவுகிறது. புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்துவதால் உழைப்பின் உற்பத்தித் திறன் பெருகுகிறது, சமூக ரீதியாக அவசிய மதிப்புடன் ஒப்பிடுகையில் பண்டத்தின் தனிப்பட்ட மதிப்பைக் குறைக்கிறது, இது கூடுதல் லாபங்களைத் தருகிறது. எனவே லாபங்களைக் கூட்ட உதவும் சாதனம் என்ற வகையிலும் போட்டியில் கருவி என்ற வகையிலும் தொழில்நுட்ப முன்னேற்றத்தில் பண்ட உற்பத்தியாளர்கள் பொருளாதார ரீதியாக அக்கறை கொண்டுள்ளனர்.

பணம் என்றால் என்ன?

பணமே இல்லாதிருந்த காலம் மனித சமுதாய வரலாற்றில் இருந்துள்ளது, மனிதர்களுக்கு அப்போது பணம் தேவைப்படவில்லை என்று ஏற்கெனவே பார்த்தோம். புராதனக் கூட்டுச் சமூக அமைப்பில் இப்படி இருந்தது. பணம் அடிமையுடைமை சமுதாயத்தில் தோன்றியது. ஒரு சில பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், பணம் என்பது இயற்கையின் வரப் பிரசாதம் என்றும் ஏனெனில் ஏதோ தங்கம், வெள்ளியின் இயற்கைத் தன்மைகளே இவற்றைப் பணமாக ஆக்குவதாயும், இவை இயற்கையிலேயே பணம் என்றும் கூறுகின்றனர். பணம் என்பது அரசு நடவடிக்கையின் விளைபயன் என்று வேறு சிலர் கருதுகின்றனர்.

கா. மார்க்ஸ்தான் முதன்முதலாக பணத்தின் சாரத்தையும் பணம் தோன்றியதற்கான காரணங்களையும் விஞ்ஞான ரீதியாக விளக்கினார். பணம் தோன்றியதானது பண்ட உற்பத்தி மற்றும் பரிவர்த்தனையின் வளர்ச்சியோடு, மதிப்பு வடிவங்களின் வளர்ச்சியோடு தொடர்புடையது.

எந்த ஒரு பண்டத்தின் மதிப்பையும் இதை வேறொரு பண்டத்துடன் ஒப்பிடுவதன் மூலமாக, வேறொரு பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்வதன் மூலமாக மட்டுமே வெளிப்படுத்த முடியும். ஆனால் பண்ட உற்பத்தியும் பரிவர்த்தனையும் நன்கு வளர்ச்சியடைந்த சூழ்நிலைகளில் பண்டங்கள் நேரடியாக ஒன்றுக்கு ஒன்று பரிவர்த்தனை செய்து கொள்ளப்படுவதில்லை. எல்லா பண்டங்களும் பணத்துடன் சமப்படுத்தப்படுகின்றன. ஒவ்வொரு பண்டத்தின் மதிப்பும் குறிப்பிட்ட அளவு பணத்தின் மூலம் வெளிப்படுத்தப்

படுகிறது. பணம் சர்வபொது பண்டமாக, சர்வபொது சமானமாக விளங்குகிறது.

பண்ட உற்பத்தியில் பண்ட உற்பத்தியாளர்கள் செலவிட்ட உழைப்பு பணத்தின் மூலம் தன்னிச்சையாகக் கணக்கிடப்படுகிறது. இங்கே பண்டங்களில் அடங்கியுள்ள உழைப்பு நேரடியாக வேலை நேர மணிகளில் கணக்கிடப்படாமல், மறைமுகமாக, எல்லா பண்டங்களையும் பணத்துடன் சமப்படுத்துவதன் மூலம் கணக்கிடப்படுகிறது. பணம் தோன்றிய பின் பண்ட உலகம் முழுவதும் இரண்டு துருவங்களாகப் பிரிந்ததைப் போலாயிற்று: ஒரு துருவத்தில் எல்லா சாதாரண பண்டங்களும் உள்ளன, மறு துருவத்தில் பணம் எனும் விசேஷ பண்டம் உள்ளது. சர்வபொது சமானமாக, எல்லா பண்டங்களின் மதிப்பை வெளியிடும் சாதனமாக இருக்கும் விசேஷ சமூகப் பணி பணத்திற்கு அளிக்கப் பட்டது.

பணத்தின் சாராம்சம் இதன் பணிகளில் வெளிப் படுகிறது. முதலாளித்துவத்தில் இது பின்வரும் பணி களைப் புரிகிறது: 1) **மதிப்பின் அளவுகோலாக** இருக்கிறது, 2) **சுற்றோட்டச் சாதனமாகத்** திகழுகிறது, 3) **திரட்சியின் சாதனமாக** விளங்குகிறது, 4) **கொடுத்தல் சாதனமாக** உள்ளது, 5) **உலகப் பணமாகவும்** இருக்கிறது.

எல்லா பண்டங்களும் தம் மதிப்பைப் பணத்தின் மூலம் வெளிப்படுத்துகின்றன. இப்பணியை — **மதிப்பு அளவை** — பணம் கருத்து ரீதியாகத்தான் நிறைவேற்று கிறது, அதாவது பண்டத்தின் மதிப்பு சிந்தனையில் தான் பணத்தின் மதிப்புடன் சமப்படுத்தப்படுகிறது. உண்மையான — காகித அல்லது உலோக — பணம் தேவை என்று பொருளாகாது. ஒவ்வொரு பண்டத்திற்கும் விலை உண்டு. **விலை** என்பது பண்ட மதிப்பின் பண

வெளிப்பாடு. பண்டத்தின் விலையை நிர்ணயிக்க **விலை அளவுத் திட்டம்** தேவை. இது பண அலகாக ஏற்கப்பட்ட குறிப்பிட்ட அளவு தங்கமாகும். சமூக அளவுகோல் என்ற வகையிலான மதிப்பிற்கு மாறாக விலை அளவுத் திட்டம் என்பது தொழில்நுட்ப அளவுகோலாகும். ஒவ்வொரு நாட்டிலும் அந்தந்த தேசிய விலை அளவுத் திட்டங்கள், பண அலகுகள் உள்ளன: உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில் டாலர், பிரிட்டனில் பவுன் ஸ்டெர்லிங், பிரான்சில் பிராங்கு. 1971 டிசம்பர் வரை ஒரு அமெரிக்க டாலர் 0.888671 கிராம் தங்கத்திற்கு சமமானதாயிருந்தது. ஒரு பொருளின் விலை 8.88671 கிராம் தங்கம் என்பதற்குப் பதிலாக அதன் விலையை 10 டாலர்கள் என்கின்றனர்.

பணம், மதிப்பு அளவுகோல் எனும் தன் பணியைக் கருத்து ரீதியாக மட்டுமே நிறைவேற்றக் காரணம் இது ஏற்கெனவே பண்டங்களின் சுற்றோட்டத்தில் உண்மைப் பணமாக இருப்பதாகும். ஆனால் பண்டத்தை வாங்க உண்மைப் பணம் வேண்டும். பண்டப் பரிவர்த்தனை தோன்றிய போது ஒரு பண்டம் நேரடியாக மற்றொரு பண்டத்துக்குப் பரிவர்த்தனை செய்து கொள்ளப்பட்டது, அதாவது எளிய பண்டப் பரிவர்த்தனை நடந்தது. இதை பின்வரும் சூத்திரத்தால் வெளிப்படுத்தலாம்: C (பண்டம்) – C (பண்டம்), (அல்லது C—C). வளர்ச்சி யடைந்த பண்ட உற்பத்தியில் முதலில் பண்டம் பணத்திற்கு விற்கப்படுகிறது, பின்னர் இந்தப் பணத்தைக் கொண்டு விற்பனையாளன் வேறொரு பண்டத்தை வாங்குகிறான். இது பின்வருமாறு காட்சியளிக்கிறது: C (பண்டம்) – M (பணம்) – C (பண்டம்), (அல்லது C—M—C).

எந்தப் பரிவர்த்தனையில் பணம் இடைச் சாதனமாக உள்ளதோ அது பண்டங்களின் சுற்றோட்டம் எனப்

படுகிறது. இங்கே பணம் சுற்றோட்டச் சாதனமாகச் செயல்படுகிறது. பணம் இப்பணியை நிறைவேற்றக் குறிப்பிட்ட அளவு பணம் தேவை. இது சுற்றோட்டத்தில் உள்ள பண்டங்களின் அளவாலும் இவற்றின் விலைகளின் மொத்தத்தாலும் நிர்ணயிக்கப்படுகிறது. அதே நேரத்தில் ஒவ்வொரு பண அலகும் பல கொள் வினை-கொடுப்பினைகளை நிறைவேற்றப் பயன்படுமாதலால் பணம் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச் சுற்றோட்டத்தில் ஈடுபடுகின்றதோ அவ்வளவுக்கவ்வளவுக் குறைவான பணமே போதுமானது.

பணம் சர்வபொது செல்வமாகும், ஏனெனில் முதலாளித்துவத்தில் இதை எந்த ஒரு பண்டமாகவும் மாற்றலாம். உண்மைப் பணத்தை மட்டுமே சேமிக்க முடியும். இப்படி நடக்கும் பட்சத்தில் பண்டத்தை விற்ற பின் (C—M) கிடைத்த பணம் தக்க வைக்கப் படுகிறது, அதாவது சுற்றோட்டத்திலிருந்து எடுக்கப் படுகிறது. இவ்வாறாக இது சேமிக்கப்பட்டு பொக் கிஷமாக்கப்படுகிறது.

கொடுத்தல் சாதனம் என்ற வகையில் பணத்தின் பணி பண்டங்களைக் கடனுக்கு வாங்கி விற்கும் போது வெளிப்படுகிறது. இது பின்வருமாறு நடக்கிறது: ஒருவன் ஒரு பண்டத்தை வாங்குகிறான், ஆனால் குறிப்பிட்ட காலத்திற்குப் பின்தான் அதற்குப் பணம் செலுத்துகிறான். இவ்வாறாக பண்ட உற்பத்தியாளர்களுக்கு இடை யிலான தொடர்பு வலுப்படுகிறது. வாங்கியவன் கடனாளி யாகிறான், விற்றவன் கடன் கொடுத்தவனாகிறான். பணம் கொடுக்கும் நேரம் வந்ததும் கடன் வாங்கிய பண்ட உற்பத்தியாளன் தன் பண்டத்தை விற்று கடன் கொடுத்த பண்ட உற்பத்தியாளனுக்கு பணம் கொடுக்க வேண்டும். இங்கு பண்டம் விற்கப்படாவிட்டால் கடன்

வாங்கியவன், கடன் கொடுத்தவன் இருவருமே கடினமான நிலைக்கு ஆளாகின்றனர்.

சர்வதேச கணக்கு வழக்குகளில் பணம் **உலகப் பணமாகப்** பணி புரிகிறது. பண்டங்களை வாங்கும் போது இது சர்வபொது வாங்கும் சாதனமாயும், கடன் தீர்க்கப்படும் போது சர்வபொது கொடுத்தல் சாதனமாயும் திகழுகிறது. உலகப் பணம் சமுதாய செல்வத்தின் சர்வபொது உருவாகவும் விளங்குகிறது; இதை வைத்திருப்பவர்கள் அரசியல், பொருளாதார, இராணுவ, மற்ற காரணங்களுக்கேற்ப ஒரு நாட்டிலிருந்து மற்றொரு நாட்டிற்கு இதை எடுத்துச் செல்லலாம். உலகப் பணம் என்ற வகையில் ''தேசியப் போர்வைகளும்'', தேசிய விலை அளவுத் திட்டங்களும் தூக்கியெறியப்படுகின்றன, பணம் பிறந்த மேனியோடு விலையுயர்ந்த உலோகக் கட்டிகளின் வடிவத்தை மேற்கொள்கிறது. இந்த உலகப் பணம் உலோகத்தின் எடை மற்றும் தரத்திற்கேற்ப ஏற்றுக் கொள்ளப் படுகின்றது.

ஒரு காலத்தில் தங்க மற்றும் வெள்ளி நாணயங்கள் பணமாக இருந்தன. இன்று ஏகாதிபத்திய நாடுகளில் காகிதப் பணம் உள்ளது, இது பண்டச் சுற்றோட்டத்தில் தங்க மற்றும் வெள்ளிப் பணத்தை மாற்றுகிறது. குறிப்பிட்ட அளவு பண்டங்களின் சுற்றோட்டத்திற்கு அவசியமான தங்கத்தை விட வெளியிடப்படும் காகிதப் பணத்தின் அளவு அதிகமாக இருக்கும் போது காகிதப் பணம் மதிப்பிழக்கிறது. உதாரணமாக, டாலர் காகிதப் பணத்திற்கு மாற்றாக உள்ள தங்கத்தை விட இரண்டு மடங்கு அதிகமாக டாலர் காகிதப் பணம் புழக்கத்தில் விடப்பட்டுள்ளது என்று வைத்துக் கொள்வோம். இதனால் காகிதப் பணம் இரு மடங்கு மதிப்பை

இழக்கின்றது, விலைகள் உயருகின்றன. பூர்ஷ்வா அரசு தன் செலவுகளை (முக்கியமாக ஆயுதப் போட்டிக்கான செலவுகளை) ஈடுகட்டுவதற்காகப் பெருமளவுக் காகிதப் பணத்தை அச்சிட்டு வெளியிடுகிறது. அளவிற்கதிகமான பணம் வெளியிடப்படுவதன் விளைவாக இது மதிப் பிழப்பதைப் **பணவீக்கம்** என்கின்றனர். இன்று கடும் பணவீக்கத்தின் காரணமாய்—இதனால் விலைகள் ஆண்டு தோறும் 10, 20, 30, 50, 100 இன்னமும் அதிக சதவிகிதம் உயருகின்றன—முதலாளித்துவ நாடுகளில் உள்ள உழைப்பாளிகள் பெரிதும் வாடுகின்றனர். இது புரியக் கூடியதே. ஏனெனில் பண்டங்களின் விலைகள் பெரிதும் அதிகரித்து வரும் சூழ்நிலைகளில் தொழிலாளர் களும் ஊழியர்களும் மதிப்புக் குறைந்த பணத்தைத்தான் ஊதியமாகப் பெறுகின்றனர்.

முதலாளித்துவ சமுதாயத்தில் எல்லாம் விற்கப்படு கின்றன, வாங்கப்படுகின்றன. இங்கே பணம் பெரும் சக்தியைப் பெறுகிறது. பணத்தைக் கொண்டு எதை வேண்டுமானாலும் வாங்கலாம், எந்தத் தேவையையும் பூர்த்தி செய்து கொள்ளலாம். கௌரவம், காதல், மனசாட்சி போன்ற ஆன்மீக மதிப்புகள் கூட வாங்கும், விற்கும் பொருட்களாகின்றன. பண ஆசை குற்றங்கள், கொலை, கொள்ளை, ஏமாற்றுதல் ஆகியவற்றிற்கு வழிகோலுகிறது. பணம் இருந்தால் எந்தக் குற்றத்தி லிருந்தும் தப்பலாம். செல்வம் சேர்க்கும் பேராசை ஆயுத உற்பத்தியாளர்களை, இராணுவ-தொழிற்துறை இணையத்தவரை முடுக்கி விடுகிறது. இரத்தக் களறி யான, கடும் அழிவுகரமான யுத்தப் பயங்கரங்கள் கூட இவர்களைத் தடுத்து நிறுத்துவதில்லை.

முதலாளித்துவ சமுதாயத்தில் மனிதனின் நிலை அவனுடைய செல்வத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. அமெ

ரிக்க ஐக்கிய நாட்டில் ஒரு குறிப்பிட்ட பிசினெஸ் மேனைப் பற்றிக் கூறும் போது "அவனுடைய விலை இவ்வளவு டாலர்கள்" என்கின்றனர். பண ஆதிக்கம், "சமமான வாய்ப்புகள்" என்றழைக்கப்படும் முதலாளித் துவ சமுதாய மாயையுடன் தொடர்புடையது; இதன்படி முயற்சியுள்ள எவரும் விருப்பமிருந்தால் நிறைய பணம் சம்பாதிக்கலாமாம். அவன் பொறுமையாக, நேரம் வரும் வரை காத்திருக்க வேண்டுமாம்.

முதலாளித்துவ சமுதாயத்தில் பணம் மூலதனமாக, கூலித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டும் சாதனமாக, லாபம் மற்றும் செல்வத்தின் மூல ஊற்றாக மாறக் கூடும். முதலாளித்துவ சமுதாயத்தில் பணத்தின் ஆதிக்கம் இதில்தான் வெளிப்படுகிறது.

முதலாளித்துவ சுரண்டலின் சாரம்

முதலாளித்துவ சமுதாயத்தில் இரண்டு எதிரெதிரான வர்க்கங்கள் உள்ளன. ஒரு துருவத்தில் **பூர்ஷ்வா வர்க்கம்**, உற்பத்திச் சாதனங்களையும் சமுதாய செல் வத்தையும் தம் கரங்களில் வைத்திருக்கும் முதலாளிகள் உள்ளனர்; மறு துருவத்தில் **பாட்டாளி வர்க்கம்**, உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்ட, சுரண்டலுக்கு ஆளாகும் கூலித் தொழிலாளர்கள் உள்ளனர்.

முதலாளித்துவம் தோன்றுவதற்கான நிபந்தனைகள், நிலப்பிரபுத்துவம் சிதறிய காலத்தில், ஆதி மூலதனத் திரட்சியின் போது உருவாயின. இந்த நிபந்தனை களாவன: 1) உற்பத்திச் சாதனங்கள் மறுக்கப்பட்ட, தனிப்பட்ட முறையில் சுதந்திரமான பங்கிழந்தவர்கள் (பாட்டாளிகள்) பெருமளவில் தோன்ற வேண்டும், இவர்கள் பட்டினியால் மாளாமலிருக்க தம் உழைப்புச்

சக்தியை விற்றாக வேண்டும், முதலாளியிடம் சென்று சரணடைய வேண்டும்; 2) பணமும் உற்பத்திச் சாதனங் களும் தனிப்பட்ட நபர்களிடம் சேர வேண்டும்; 3) மூலதனத்திற்கான உலக சந்தை ஏற்பட வேண்டும்.

எளிய பண்ட உற்பத்திச் சூழ்நிலைகளில் பண்டத்தை வைத்திருப்பவன், தனக்கு அவசியமான மற்ற பண்டங் களை வாங்குவதற்காகத் தன்னிடமுள்ள பண்டங்களை விற்கிறான். எளிய பண்டச் சுற்றோட்டத்தின் சூத்திரம்: **C—M—C.** பண்ட சொந்தக்காரனின் தேவைகளைப் பூர்த்தி செய்வதுதான் இந்தப் பண்டப் பரிவர்த்தனையின் லட்சியம்.

முதலாளி லாபம் பெறும் நோக்கத்துடன்தான் உற்பத்தியில் ஈடுபடுகிறான். அதிகமான பணத்தைப் பின்னால் பெறுவதற்காக அவன் குறிப்பிட்ட பணத்தை முன்கூட்டியே செலவழிக்கிறான். எனவே மூலதனத்தின் சூத்திரம் பண்டச் சுற்றோட்டத்தின் சூத்திரத்திலிருந்து மாறுபட்டது. இதைப் பின்வருமாறு எழுதலாம்: $M—C—M^1$, இதில் $M^1 = M + m$. $M—C—M^1$ எனும் சூத்திரத்தில் ஓரத்தில் உள்ள இரண்டும் பணம், இவற்றின் இடையில் பண்பு ரீதியான வேறுபாடுகள் இல்லை. ஆனால் ஏதாவது வித்தியாசம் இருந்தாக வேண்டும், இல்லாவிடில் பரிவர்த்தனை பொருளற்ற தாய் இருக்கும். 10,000 டாலர்களை வைத்துள்ள ஒரு முதலாளி பண்டத்தை உற்பத்தி செய்து அதே 10,000 டாலர்களுக்கு விற்பான் என்று எண்ண முடியாது. முதலாவது **M** ற்கும் இரண்டாவது **M** ற்கும் வித்தியாசம் உள்ளது, ஆனால் இது அளவு ரீதியானது. ஒரு முதலாளி 10,000 டாலர்களைச் சுற்றோட்டத்தில் விட்டு, ஒரு பண்டத்தை வாங்குகிறான், அதை விற்றதும் 11,000 டாலர்களைப் பெறுகிறான். அதாவது அவனுடைய

மூலதனம் 1,000 டாலர்கள் அதிகரித்துள்ளது. இந்த 1,000 டாலர்களைத்தான் — முன்னிடப்பட்ட மூலதன அதிகரிப்பை — கா. மார்க்ஸ் **உபரி மதிப்பு** என்றார். இதுதான் மூலதனத்தின் செயற்பாட்டின் லட்சியம், இதன் இறுதிக் கட்டமாகும்.

முன்னிடப்பட்ட பணம் எப்படி அதிகரிக்கிறது, இதன் மூல ஊற்று என்ன என்ற கேள்வி எழுகிறது. ஏனெனில் பண்ட உற்பத்தி மற்றும் சுற்றோட்ட விதிகளின்படி முதலாளி ஒரு பண்டத்தை அதன் மதிப்பிற்கேற்பத்தான், அதாவது சமானத்திற்கேற்பத் தான் வாங்கி விற்கிறான், எனவே சுற்றோட்டத்தில் ஆரம்ப முன்பணத்தால் அதிகரிக்க முடியாது, அதிகரிக்க வும் கூடாது என்றாகிறது. ஆனால் அதிகரித்தது. இந்த அதிகரிப்பு மட்டும் இல்லாமலிருந்தால், முதலாளி யின் நோக்கிலிருந்து பார்த்தால் முதலாளித்துவ உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு முழுவதும் பொருளற்றதா யிருக்கும். என்ன விஷயம்?

பரிவர்த்தனைதான் முன்னிடப்பட்ட பண அதிகரிப் பின் மூல ஊற்று என்று சில பூர்ஷ்வா விஞ்ஞானிகள் கருதுகின்றனர். ஆனால் இதை ஒப்புக்கொள்வதென் றால் மாயச் சுழலில் சுற்றி வருவதாகும். ஏனெனில் விற்பவன் என்ற வகையில் தான் பெறுவதை வாங்குபவன் என்ற வகையில் முதலாளி இழக்கிறான்.

உண்மையில் முன்னிடப்பட்ட மூலதன அதிகரிப்பின் மூல ஊற்று முதலாளியின் வசமுள்ள பண்டத்தின் விசேஷப் பண்புகளில் அடங்கியுள்ளது.

தன் காரியத்தில் இறங்கும் முதலாளி கட்டிடம் கட்டுகிறான், இயந்திரங்கள், உபகரணங்கள், மூலப் பொருட்கள், மற்ற உற்பத்திச் சாதனங்களை வாங்கு கிறான். அவன் தொழிலாளர்களை வேலைக்கமர்த்து

கிறான். தொழிலாளர்களை வேலைக்கு அமர்த்துவது என்பது அவர்களிடம் உள்ள ஒரே அம்சத்தை, அதாவது உழைப்புச் சக்தியை, உழைக்கும் திறனை வாங்குவது என்றாகும். முதலாளித்துவத்தில் உழைப்புச் சக்தி பண்டமாகிறது, எல்லா பண்டங்களையும் போன்றே மதிப்பையும் பயன் மதிப்பையும் பெறுகிறது. **உழைப்புச் சக்தி எனும் பண்டத்தின்** மதிப்பு இதை தோற்றுவிக்கவும் புனருற்பத்தி செய்யவும் செலவிடப்படும் சமூக உழைப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. வாழவும் வேலை செய்யவும் மனிதனுக்கு உண்ண உணவு, உடுக்க உடை, இருக்க இருப்பிடம் ஆகியவை வேண்டும், அதாவது அவன் தன்னுடைய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும். தொழிலாளியின் இந்த வாழ்க்கைச் சாதனங்கள் எல்லாம் பண்டங்களாகும், இவற்றிற்கு மதிப்பு உண்டு. எனவே உழைப்புச் சக்தி எனும் பண்டத்தின் மதிப்பு தொழிலாளியின் வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பால் நிர்ணயிக்கப்படுகிறது. மூலதனத்திற்கு உழைப்புச் சக்தியின் இடையறாத வரவு அவசியம். எனவே உழைப்புச் சக்தியின் மதிப்பில் குடும்பத்தைப் பராமரிக்கும் மதிப்பும் அடங்கியுள்ளது. சிக்கலான தொழில்நுட்பத்துடன் வேலை செய்ய வல்ல தேர்ச்சி மிகு தொழிலாளர்கள் முதலாளிகளுக்குத் தேவைப்படுகின்றனர். இதனால் உழைப்புச் சக்தியின் மதிப்பில் தொழிலாளியைப் பயிற்றுவிப்பது, அவனுக்கு கல்வி போதிப்பது சம்பந்தமான செலவுகளும் அடங்கியுள்ளன.

எந்த ஒரு பண்டத்தையும் போன்றே உழைப்புச் சக்தி எனும் பண்டத்திற்கும் பயன் மதிப்பு உள்ளது. இங்குதான் நாம் முதலாளித்துவ சுரண்டலின் ரகசியத்தை நெருங்கி வருகிறோம். விஷயம் என்னவெனில், உலகில் வேறு எந்த ஒரு பண்டத்திற்கும் இல்லாத

விசேஷ பயன் மதிப்பு உழைப்புச் சக்திக்கு உண்டு. எந்த ஒரு பண்டத்தின் பயன் மதிப்பும் நுகர்வுப் போக்கில் அழிகிறது. உதாரணமாக, ரொட்டி, ஆடை, காலணி போன்றவற்றை எடுத்துக் கொள்ளுங்கள். ஆனால் உழைப்புச் சக்தி எனும் பண்டத்தின் பயன் மதிப்பு இதன் நுகர்வுப் போக்கில் அழியாதது மட்டுமல்ல, இதற்கு தன் மதிப்பை விஞ்சக் கூடிய மதிப்பைத் தோற்றுவிக்கும் திறமையும் உண்டு. பின்வரும் உதாரணத்தில் இதைப் பார்ப்போம்.

ஒரு நூற்பாலைச் சொந்தக்காரன் ஒரு தொழிலாளியை வேலைக்கமர்த்துகிறான். வேலை நாள் இறுதியில் அவனுக்கு 10 டாலர்களைத் தருகிறான். ஒவ்வொரு மணி நேர உழைப்பிலும் தொழிலாளி தலா 2 டாலர்கள் மதிப்பைத் தோற்றுவிக்கிறான்.

பத்து மணி வேலை நாளில் தொழிலாளி 100 மீட்டர் துணியை உற்பத்தி செய்தான் என்று வைத்துக் கொள்வோம். இதற்காக அவன் 50 டாலர்கள் மதிப்புள்ள நூலையும் மற்ற உற்பத்திச் சாதனங்களையும் செலவிட்டான். 100 மீட்டர் துணியின் மதிப்பு எவ்வளவு? முதலாவதாக, இதில் பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பாகிய 50 டாலர்கள் அடங்கியுள்ளன. இரண்டாவதாக, 10 மணி நேரத்தில் தொழிலாளியின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட மதிப்பு (20 டாலர்கள்) அடங்கியுள்ளது. மொத்தத்தில் 100 மீட்டர் துணியின் மொத்த மதிப்பு 70 டாலர்களாகும்.

100 மீட்டர் துணியை உற்பத்தி செய்ய நம் முதலாளிக்கு என்ன செலவாயிற்று? அவன் உற்பத்திச் சாதனங்களை வாங்க 50 டாலர்களைச் செலவழித்தான், தொழிலாளிக்கு ஊதியமாக 10 டாலர்களைக் கொடுத்

தான், அதாவது மொத்தமாக 60 டாலர்களைச் செலவழித்தான். எனவே 100 மீட்டர் துணியை அதன் மதிப்பிற்கு விற்கும் போது முதலாளி தான் செலவழித்ததை விட 10 டாலர்களை அதிகமாகப் பெறுவான் என்பது தெளிவு.

இந்த 10 டாலர்களின் மூல ஊற்று எங்கே உள்ளது? இப்போது இக்கேள்விக்குப் பதில் சொல்வது கடினமல்ல. விஷயம் என்னவெனில், தொழிலாளி தான் பெறும் ஊதியத்திற்கு 5 மணி நேரம் வேலை செய்தாலே போதும். ஆனால் முதலாளியோ இவனை வேலை நாள் பூராவும் (10 மணி நேரம்) வேலை செய்யும்படி கட்டாயப்படுத்துகிறான். இந்த 10 மணி நேரத்தில் 5 மணி நேரம் தொழிலாளி தனக்காக வேலை செய்து, தன் உழைப்புச் சக்தியின் சமானத்தைத் தோற்றுவிக்கிறான், எஞ்சிய 5 மணி நேரம் முதலாளிக்காக வேலை செய்கிறான்; இந்த நேரத்தில் தோற்றுவிக்கப்படும் மதிப்பை முதலாளி தானே சுவீகரித்துக் கொள்கிறான்.

இவ்வாறாக வேலை நாள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. வேலை நாளின் எந்தப் பகுதியில் உழைப்புச் சக்தியின் மதிப்பின் சமானம் தோற்றுவிக்கப் படுகிறதோ அப்பகுதி **அவசிய வேலை நேரம்** என்றும் இந்நேரத்தில் செலவிடப்பட்ட உழைப்பு **அவசிய உழைப்பு** என்றும் அழைக்கப்படுகிறது. வேலை நேரத்தின் எந்தப் பகுதியில் தொழிலாளி முதலாளிக்காக வேலை செய்கிறானோ அது **உபரி வேலை நேரம்** எனப்படுகிறது. உபரி வேலை நேரத்தின் போது **உபரி உழைப்பு** செலவிடப்படுகிறது, **உபரி மதிப்பு** தோற்றுவிக்கப்படுகிறது. இதை முதலாளி முழுமையாக சுவீகரித்துக் கொள்கிறான். எனவே **உபரி மதிப்பு** என்றால் உபரி நேரத்தில்,

கூலியில்லாத உழைப்பால் தோற்றுவிக்கப்பட்ட மதிப்பு, முன்னிடப்பட்ட மூலதனத்தை விட அதிகமான மதிப்பு. கா. மார்க்ஸ் இதை "m" எனும் எழுத்தால் ("Mehr-wert" எனும் சொல்லிற்கு "மதிப்பை விட அதிகமானது" என்று பொருள்) குறித்தார்.

உபரி மதிப்பைப் பெறுவதுதான் முதலாளித்துவ உற்பத்தியின் முக்கிய லட்சியம், உந்து சக்தி. உழைப்புச் சக்தியின் விசேஷ பயன் மதிப்பை, உபரி மதிப்பைத் தோற்றுவிக்க இதற்குள்ள திறமையைப் பயன்படுத்துவதற்காக முதலாளி உழைப்புச் சந்தையில் உழைப்புச் சக்தி எனும் பண்டத்தை வாங்குகிறான். **உபரி மதிப்பின் விதிதான் முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதியாகும். இதில் முதலாளித்துவ உற்பத்தியின் லட்சியமும் இதை அடையும் வழியும் அடங்கியுள்ளன.** இது முதலாளித்துவ சமுதாயத்தின் அடிப்படையிலுள்ள உற்பத்தி உறவுகளை — கூலித் தொழிலாளர்களை முதலாளி வர்க்கம் சுரண்டுவதை — வெளிப்படுத்துகிறது. அடிமையுடைமையிலும் நிலப்பிரபுத்துவத்திலும் எஜமானர்களின் தேவைகள், சபலங்களைப் பூர்த்தி செய்ய எவ்வளவு உபரி உழைப்பு தேவையோ அவ்வளவு உபரி உழைப்பை உழைப்பாளிகளிடமிருந்து பிழிந்தெடுத்தார்கள். முதலாளித்துவத்தில் தொழிலாளர்களின் உபரி உழைப்பின் விளைபொருள் பணமாக மாறுகிறது. இது புதிய உபரி மதிப்பை ஏற்படுத்த வல்ல கூடுதல் மூலதனமாக மீண்டும் சுற்றோட்டத்தில் விடப்படலாம், விடப்படுகிறது. எனவேதான் முதலாளிகள் உபரி உழைப்பின் மீது பேராசை காட்டுகின்றனர், இதற்காக மிக தந்திரமான சுரண்டல் முறைகளைப் பயன்படுத்துகின்றனர்.

முதலாளித்துவச் சுரண்டலின் ரகசியத்தைக் கண்டு பிடித்த பின் மூலதனம் என்றால் என்ன என்று

நிர்ணயிக்கலாம். இது சம்பந்தமாக பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்களிடம் பல கருத்துக்கள் உள்ளன. உதாரணமாக, டேவிட் ரிக்கார்டோ, புராதன மனிதன் பயன்படுத்திய முதல் கல்லிலும் கழியிலுமே மூலதனத்தைக் கண்டார். நவீன பூர்ஷ்வா விஞ்ஞானிகளும் மூலதனத்தை பொருள் என்று கூறி இதே மாதிரியான வரையறுப்புகளைத் தருகின்றனர். மூலதனத்தைப் பற்றிய இம் மாதிரியான கருத்து முதலாளி வர்க்கத்திற்கு முற்றிலும் ஏற்றதாயுள்ளது. மூலதனம் ஒரு பொருள் என்றால், மூலதனம் என்றென்றும் நிலவி வந்தது என்றாகிறது, ஏனெனில் மனிதன் தன் வாழ்க்கையின் முதலடிகளிலிருந்தே பொருட்களைப் பயன்படுத்தி வந்திருக்கிறான்.

உண்மையில் மூலதனம் பொருளல்ல, இது முதலாளி வர்க்கத்திற்கும் பாட்டாளி வர்க்கத்திற்கும் இடையிலான குறிப்பிட்ட பொருளாதார உறவாகும். பொருட்கள் — கட்டிடங்கள், இயந்திரங்கள், உபகரணங்கள், மூலப் பொருட்கள் ஆகியவை — தாமாகவே மூலதனமாகா. உதாரணமாக, சிறு தொழில் புரிபவன் வேலை செய்யும் கடைசல் இயந்திரம் மூலதனமல்ல. ஆனால் இதை இதன் சொந்தக்காரன் கூலியுழைப்பைச் சுரண்டுவதற்காகப் பயன்படுத்தும் போது இதே கடைசல் இயந்திரம் மூலதனமாகும். எனவே **மூலதனம் என்பது கூலியுழைப்பைச் சுரண்டுவதன் மூலம் தன் உடைமையாளனுக்கு உபரி மதிப்பைக் கொண்டு வரும் மதிப்பாகும்.**

உபரி மதிப்பை தோற்றுவிப்பதில் மூலதனத்தின் வெவ்வேறு பகுதிகள் வெவ்வேறு பங்காற்றுகின்றன. தன் மூலதனத்தின் ஒரு பகுதியை முதலாளி உற்பத்திச் சாதனங்களை வாங்க பயன்படுத்துகிறான்: தொழிற்சாலைக்கான கட்டிடங்களைக் கட்டுகிறான், இயந்திரங்கள், உபகரணங்கள், மூலப்பொருட்கள், எரிபொருள்

போன்றவற்றை வாங்குகிறான். இந்த உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு பண்டம் உற்பத்தி செய்யும் போது தொழிலாளியின் ஸ்தூலமான உழைப்பின் மூலம் தயாரான பொருளுக்குள் சேர்க்கப்படுகிறது. மூலதனத்தின் இப்பகுதியின் அளவு மாறாதது, எனவே கா. மார்க்ஸ் இதை **மாறாத மூலதனம்** என்றழைத்து "c" எனும் எழுத்தால் ("Constans" எனும் சொல்லிற்கு "நிரந் தரமான" என்று பொருள்) குறிப்பிட்டார்.

உழைப்புச் சக்தி எனும் பண்டத்தை வாங்கும் மூலதனத்தின் மற்றொரு பகுதி உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் தன் மதிப்பின் அளவை மாற்றுகிறது; இது உபரி மதிப்பின் அதிகரிப்பில் வெளிப்படுகிறது. கா. மார்க்ஸ் இதை **மாறும் மூலதனம்** என்றழைத்து, "v" எனும் எழுத்தால் ("Variables" எனும் சொல் லிற்கு "மாறக்கூடிய" என்று பொருள்) குறிப்பிட்டார்.

இவ்வாறாக, தொழிலாளி தன் உழைப்பால் பண்டத் தின் பயன் மதிப்பைத் தோற்றுவித்து, பயன்படுத்தப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பைத் தயாரான பொருளுக்கு மாற்றுகிறான். தொழிலாளியின் சூக்குமமான உழைப்பு புதிய மதிப்பைத் தோற்றுவிக்கிறது. இதில் உபரி மதிப்பும் அடங்கும். இதில்தான் கூலித் தொழி லாளியினுடைய உழைப்பின் இரட்டைத் தன்மை அடங்கியுள்ளது.

ஆக, முதலாளித்துவ சமுதாயத்தில் உற்பத்தி செய்யப் பட்ட பண்டத்தின் மதிப்பு பின்வரும் பகுதிகளாகப் பிரிகிறது: பழைய மதிப்பு (c) (புதிய உற்பத்திப் பொரு ளின் மீது மாற்றப்பட்ட உற்பத்திச் சாதனங்களின் மதிப்பு); புதிய மதிப்பு, இது உழைப்புச் சக்தியின் மதிப்பு (v) மற்றும் உபரி மதிப்பின் (m) மொத்தத்திற்குச் சமமாகும்.

எனவே முதலாளித்துவத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தின் மதிப்பு சூத்திரம் பின்வருமாறு காட்சி யளிக்கும்: $w = c + v + m$. இங்கு w — பண்டத்தின் மதிப்பு, c — மாறாத மூலதனம், v — மாறும் மூலதனம், m — உபரி மதிப்பு.

கா. மார்க்ஸ் மூலதனத்தை மாறாத மூலதனம் என்றும் மாறும் மூலதனம் என்றும் பிரித்ததானது உபரி மதிப்பைத் தோற்றுவிப்பதில் மூலதனத்தின் உட்பகுதிகளின் வெவ்வேறான பங்கைத் தெளிவுபடுத்தி யது. மார்க்ஸ் உபரி மதிப்பின் ரகசியத்தை கண்டு பிடித்தார். கூலித் தொழிலாளியின் உபரி உழைப்புதான் உபரி மதிப்பின் ஒரே மூல ஊற்று, உபரி மதிப்பு என்பது கூலியுழைப்பு சுரண்டப்படுவதன் விளைவு என்று இவர் நிரூபித்தார்.

உபரி மதிப்பைத் தோற்றுவிக்கும் வழிகள்

முதலாளிகள் அதிக பட்ச உபரி மதிப்பை சுவீகரிப் பதற்காக தொழிலாளர்களின் சுரண்டலை சகல விதங்களிலுமே அதிகப்படுத்த முயலுகின்றனர். இச் சுரண்டலின் மட்டத்தை எப்படி நிர்ணயிப்பது? உபரி மதிப்பின் விகிதம் அல்லது எந்த விகிதத்தில் வேலை நேரம் அவசிய வேலை நேரம் என்றும் உபரி வேலை நேரம் என்றும் பிரிக்கப்படுகிறதோ அந்த விகிதம் இதற்கு உதவுகிறது. ஏனெனில் தொழிலாளர்களின் உபரி (ஊதியமற்ற) உழைப்பு உபரி மதிப்பில் உருக் கொண்டுள்ளது, அவசிய (ஊதியம் பெறும்) உழைப்பு மாறும் மூலதனத்திற்கு ஏற்றதாயுள்ளது. எனவே **உபரி மதிப்பின் விகிதம்** (m^1), உபரி மதிப்பிற்கும் (m)

மாறும் மூலதனத்திற்கும் (v) உள்ள விகிதமாகும்; இது சதவிகிதத்தில் வெளிப்படுத்தப்படுகிறது. உபரி மதிப்பு விகிதத்தின் சூத்திரம்:

$$m^1 = \frac{m}{v} \times 100$$

உதாரணமாக, ஒரு வேலை நாள் உழைப்புச் சக்தியின் மதிப்பு 4 டாலர்கள், ஒரு வேலை நாளில் உற்பத்தி செய்யப்பட்ட உபரி மதிப்பு 6 டாலர்கள் என்றால்

$$m^1 = \frac{6}{4} \times 100 = 150\%$$

உபரி மதிப்பின் விகிதம் உழைப்புச் சக்தி சுரண்டப் படும் மட்டத்தைக் காட்டப் பயன்படுகிறது. வேலை நாளின் வெவ்வேறு பகுதிகளுக்கு இடையிலான விகிதத் தின் மூலமும் இதை வெளிப்படுத்தலாம்.

$$m^1 = \frac{\text{உபரி நேரம்}}{\text{அவசிய நேரம்}} \times 100$$

உபரி மதிப்பின் விகிதம் ஒப்பீட்டு அளவிலானது, உபரி மதிப்பின் மொத்தம் தனிமநிலை அளவு ஆகும். உபரி மதிப்பின் மொத்தம் முதலாளிகள் சுவீகரித்த உபரி மதிப்பின் அளவால் குறிக்கப்படுகிறது. உபரி மதிப்பின் மொத்தம் சுரண்டல் மட்டத்தையும் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையையும் பொறுத்தது. உபரி மதிப்பின் மொத்தத்தை M என்று குறிப்பிட்டு, தொழிலாளர்களுக்கு ஊதியம் வழங்குவதற்காக முன் னிடப்பட்ட மாறும் மூலதனத்தை v என்று குறிப்பிட் டால், **உபரி மதிப்பின் மொத்தம்** $M = m^1 \times v$ ஆகும். எனவே உழைப்புச் சக்தியின் சுரண்டல் மட்டத்தை அதிகரிப்பதன் மூலமும் கூலித் தொழிலாளர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமும் உபரி மதிப்பின்

மொத்தத்தை அதிகரிக்கலாம் எனத் தெரிகிறது.

முதலாளித்துவ நாடுகளில் உபரி மதிப்பின் விகிதமும் மொத்தமும் இடையறாமல் அதிகரிக்கின்றன. வி. இ. லெனினின் கணக்கீட்டின்படி ஜாரிச ருஷ்யாவில் 1908இல் உபரி மதிப்பின் விகிதம் 102%ஆக இருந்தது. நவீன பொருளாதார நிபுணர்களின் கணக்கீட்டின்படி அமெரிக்க ஐக்கிய நாட்டில் இவ்விகிதம் 1939இல் 200%ஆக இருந்தது; 1967—1973இல் பதப்படுத்தும் தொழிற்துறையில் இது 345%ஆக இருந்தது. இன்று இக்குறியீடு இன்னமும் அதிகம். வளர்முக நாடுகளில் உள்ள அந்நிய மூலதனத்திற்குச் சொந்தமான தொழில் நிறுவனங்களில் உபரி மதிப்பின் விகிதம் பெரிதும் அதிகம். இங்கு தொழிலாளர்களின் ஊதியம், அமெரிக்காவிலும் மற்ற முதலாளித்துவ நாடுகளிலும் உள்ளதை விட 3—4 மடங்கு குறைவானது, உழைப்பின் உற்பத்தித் திறனோ சற்றும் குறையாதது. அதாவது தொழிலாளர்கள் தம் வேலை நாளில் மேன்மேலும் அதிகமான பகுதியில் முதலாளிகளுக்காக உழைக்கின்றனர், அவர்களுக்கான உபரி மதிப்பைத் தோற்றுவிக்கின்றனர் என்று இதற்குப் பொருள்.

உபரி உழைப்பின் பங்கை அதிகப்படுத்த முதலாளிகள் இரண்டு முக்கிய வழிகளைப் பயன்படுத்துகின்றனர். முதலில் அவசிய உழைப்பின் நேரத்தில் எவ்வித மாற்றமும் செய்யாமல் வேலை நாளின் நேரத்தை கூட்டுகின்றனர். இதனால் உபரி வேலை நேரத்தை அதிகப்படுத்தி, இதன் மூலம் உபரி மதிப்பின் விகிதத்தையும் மொத்தத்தையும் கூட்ட முடிகிறது.

வேலை நேரத்தைக் கூட்டுவதன் மூலம் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பு **தனிமநிலை உபரி மதிப்பு** எனப்படுகிறது.

ஆனால் வேலை நேரத்தைக் கூட்டுவதற்கு உடற்கூறு ரீதியான, சமூக ரீதியான, மற்ற வகையான வரம்புகள் உண்டு. எனவே மேன்மேலும் அதிகமான உபரி மதிப்பைப் பெறும் நாட்டம், சுரண்டல் மட்டத்தை அதிகப் படுத்தும் புதுப் புது வழிகளைத் தேடும்படி முதலாளி களைத் தள்ளுகிறது. .

உழைப்புச் சக்தியின் சுரண்டல் மட்டத்தை அதிகரிக் கும் இரண்டாவது வழி, வேலை நேரம் மாறாமலிருக்க, அவசிய வேலை நேரத்தைக் குறைப்பதாகும்.

வேலை நேரம் மாறாமலிருக்க, அவசிய வேலை நேரத் தைக் குறைப்பதன் மூலம் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பு **ஒப்பீட்டு உபரி மதிப்பு** எனப்படும்.

அவசிய வேலை நேரத்தை எப்படிக் குறைக்க முடியும்? எல்லாவற்றிற்கும் மேலாக, தொழிலாளர்களின் வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்களை உற்பத்தி செய்யும் துறைகளிலும் இவற்றுடன் தொடர்புடைய மற்ற துறைகளிலும் சமூக உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகப்படுத்துவதன் மூலம் இதைச் செய்ய லாம். இதனால் தொழிலாளியின் வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பு குறையும், எனவே உழைப்புச் சக்தியின் மதிப்பும் குறையும். இதனால் அவசிய வேலை நேரம் குறையும்.

ஒப்பீட்டு உபரி மதிப்பின் வகைகளில் ஒன்று **அமித உபரி மதிப்பு** ஆகும். இதுவும் தொழிலாளியின் வாழ்க்கைச் சாதனங்களின் மதிப்பு குறையவும் அவசிய வேலை நேரம் குறையவும் இட்டுச் செல்கிறது. ஒவ்வொரு முதலாளியும் லாப வேட்டையில் புதிய தொழில்நுட்பத் தைப் பயன்படுத்த முயலுகிறான். ஏன்? ஏனெனில் ஒரு குறிப்பிட்ட முதலாளியால் புகுத்தப்பட்ட தொழில் நுட்ப மேம்பாடுகள் அதே துறையைச் சேர்ந்த மற்ற

முதலாளிகளால் பயன்படுத்தப்படாத வரை பண்ட உற்பத்தி முதலில் கூறிய முதலாளிக்கு மலிவானதாயிருக்கும், இவனுடைய பண்டங்களின் தனிப்பட்ட மதிப்பு குறைவானதாயிருக்கும். ஆனால் இப்பண்டங்கள் சந்தை விலைக்கு விற்கப்படுகின்றன. இவ்விலை குறிப்பிட்ட துறையின் பெரும்பான்மை பொருட்களைத் தரும் தொழில் நிறுவனங்களில் உள்ள உற்பத்தியின் சராசரி சமூகச் சூழ்நிலைகளால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே இக்குறிப்பிட்ட முதலாளி அமித உபரி மதிப்பைப் பெறுகிறான்.

ஆனால் தனிப்பட்ட சில முதலாளிகள் அமித உபரி மதிப்பைப் பெறுவது தற்காலிகமான ஒரு புலப்பாடாகும். இவனுடைய உதாரணத்தைப் பின்பற்றி அத்துறையின் மற்ற தொழில் நிறுவனங்களிலும் புதிய தொழில்நுட்பத்தைப் புகுத்த ஆரம்பிக்கின்றனர், இதனால் பண்ட உற்பத்தியில் சமூக ரீதியாக அவசியமான நேரம் குறைகிறது, அதாவது பண்ட அலகின் மதிப்பு குறைகிறது. பண்டத்தின் சமூக மதிப்பு குறைவதால் இதற்கும் ஒரு சில தொழில் நிறுவனங்களில் பண்டத்தின் தனிப்பட்ட மதிப்பிற்கும் இடையிலான வேறுபாடு மறைகிறது. ஆனால் ஒரு சில தொழில் நிறுவனங்களில் மறையும் அமித உபரி மதிப்பு மற்றவற்றில் தோன்றுகிறது, இதன் மூலம் முதலாளித்துவ உற்பத்தியின் தன்னிச்சையான தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கு ஊக்கமளிக்கிறது.

லாப வேட்டையில் முதலாளித்துவம் தொழிற்துறை வளர்ச்சியில் எளிய கூட்டுறவு, பட்டறைத் தொழில், இயந்திர உற்பத்தி எனும் மூன்று கட்டங்களைத் தாண்டி வந்துள்ளது.

எளிய கூட்டுறவு முதலாளித்துவத்தால் தோற்றுவிக்கப் பட்டதல்ல. இது நாம் ஏற்கெனவே பார்த்தபடி

முதலாளித்துவத்திற்கு முந்தைய அமைப்புகளிலும் நிலவியது. ஆனால் முதலாளித்துவம் தன் லாபத்தைப் பெருக்குவதற்காக, உழைப்பின் உற்பத்தித் திறனை அதிகரிப்பது சம்பந்தமாகக் கூட்டுறவில் அடங்கியிருந்த பெரும் வாய்ப்புகளை வளர்த்தது. எளிய கூட்டுறவில் ஒரு குறிப்பிட்ட இடத்தில் வேலை செய்தவர்கள் ஒரே விதமான வேலையைச் செய்தார்கள். இந்த வேலையிடத்தின் உள்ளே வேலையாட்களுக்கு இடையே உழைப்புப் பிரிவினை புகுத்தப்பட்ட பின் **பட்டறைத் தொழிலுக்கான** மாற்றம் நடந்தது. முதல் பட்டறைத் தொழில்கள் 16ஆம் நூற்றாண்டில் தோன்றின. இவை கை வேலையின் அடிப்படையிலானவையாக இருந்தன. ஆனால் உழைப்பு தனித்துறைப்படுத்தப்பட்டதானது உழைப்புக் கருவிகள் மேம்பாடு அடைவதற்கும் உழைப்பின் உற்பத்தித் திறன் கணிசமாக அதிகரிக்கவும் வழிகோலியது. உதாரணமாக, குண்டூசி தயாரிப்பில் தனித்துறைப்பாடும் பட்டறைத் தொழில் உழைப்புப் பிரிவினையும் உழைப்பின் உற்பத்தித் திறனை 240 மடங்கு உயர்த்த உதவின. பட்டறைத் தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் **இயந்திர உற்பத்தியை** நோக்கிய மாற்றம் நடந்தது. இங்கிலாந்தில்தான் இயந்திரங்கள் முதன்முதலாகத் தோன்றி பரவின. இதன் பின் பெருவீத இயந்திர உற்பத்தி மற்ற நாடுகளிலும் தோன்றியது.

முதல் இயந்திரங்கள் பட்டறைத் தொழில் கூடங்களில் கைகளால் தயாரிக்கப்பட்டன. இதன் பின் இயந்திரங்களைத் தயாரிக்க வல்ல இயந்திரங்கள் தோன்றின. இதன் விளைவாய் இயந்திர உற்பத்தி நிலையான, முதலாளித்துவத்திற்கேற்ற அடிப்படையைப் பெற்று ஆதிக்க நிலையை அடைந்தது.

பட்டறைத் தொழிலிலிருந்து இயந்திர உற்பத்திக்கு மாறியதானது அடிப்படை தொழில்நுட்ப மாற்றத்தைக் குறித்தது. இது பல நூற்றாண்டுகளாக நிலைத்திருந்த கைத்தொழிலாளரின் கலையை அகற்றியது. நகரங்களிலும் கிராமங்களிலும் முந்தைய சமூக உறவுகள் அடிப்படையிலேயே உடைய ஆரம்பித்தன. முதலாளித்துவ உற்பத்தி எல்லா துறைகளையும் ஆட்கொண்டு, கைத் தொழில் உற்பத்தியை வெளியேற்றி, திவாலாக்கியது. பெருவீத இயந்திரத் தொழிற்துறையில் முதலாளித்துவம் தன் சுரண்டல் தன்மைக்கேற்ற, உபரி மதிப்பைப் பெறும் தன் தீராத தாகத்திற்கேற்ற உற்பத்தி வடிவத்தைக் கண்டுபிடித்தது.

முதலாளித்துவத்தில் இயந்திர முறையைப் பயன்படுத்துவதானது பெரிதும் முரண்பாடானது. இயந்திரம் உண்மையில் தொழிலாளியின் உழைப்பைச் சிக்கனப் படுத்தி, எளிதாக்குகிறது, இதை செழுமைப்படுத்துகிறது. ஆனால் முதலாளித்துவத்தில் இயந்திரம் சுரண்டலை அதிகப்படுத்தி, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பெருக்கும் சாதனமாக உள்ளது. இது உழைப்பின் வேகத்தை அதிகப்படுத்தி, தொழிலாளியின் உடலை வேகமாக தளரச் செய்கிறது.

ஆரம்பக் கட்டத்தில் இயந்திரங்களை இயக்க விசேஷ பயிற்சியும் பெரும் உடல் பலமும் தேவைப்படாததால் தொழிலாளர்களின் மனைவிமார்களும் குழந்தைகளும் முதலாளித்துவ உற்பத்தியில் மேன்மேலும் பரவலாக ஈடுபடுத்தப் படுகின்றனர். இது உழைப்புச் சக்தி எனும் பண்டத்தின் மதிப்பைக் குறைக்கிறது, ஏனெனில் குடும்பப் பராமரிப்பின் மதிப்பு மேற்கூறியதிலிருந்து அகலுகிறது. தனிப்பட்ட, ஒரு சிறு பகுதி வேலையைச் செய்யும் தொழிலாளி இயந்திரத்தின் பிற்சேர்க்கையாகிறான், மூளையுழைப்பிற்

கும் உடலுழைப்பிற்கும் இடையிலான பிளவு அதிகரிக்கிறது. விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் விளைவாக உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் மூளையுழைப்பின் பங்கு அதிகரிக்கும் போது உழைப்பவர்களின் அறிவுத்துறை திறமைகளும் சுரண்டலுக்கு ஆளாகின்றன, உபரி மதிப்பின் மூல ஊற்றாக மாறுகின்றன.

இயந்திரங்களை முதலாளித்துவ ரீதியில் பயன்படுத்துவதன் வரம்புகள் யாவை? தொழிலாளியின் உழைப்பை இலகுவாக்குவதற்காக அல்ல, தன் லாபத்தை அதிகரிப்பதற்காகத்தான் முதலாளிக்கு இயந்திரங்கள் தேவை. இதன் அடிப்படையில் முதலாளி, தொழிலாளிகளின் உழைப்பை விட இயந்திரம் மலிவாக இருக்கும் போது தான் அதைப் புகுத்துகிறான். எனவே ஊதியம் எவ்வளவுக்கெவ்வளவுக் குறைவானதோ இயந்திரங்களைப் புகுத்த முதலாளிகளிடம் உள்ள ஊக்கமும் அவ்வளவுக்கவ்வளவு குறைவானது என்றாகிறது. முதலாளித்துவத்தில் ஒரு சில துறைகளில் உயர்வான தொழில்நுட்பம் இருக்கும் அதே நேரத்தில் மற்ற துறைகளில் பின்தங்கிய, வழக்கமான தொழில்நுட்பமும் இருப்பதற்கான காரணங்களில் இதுவும் ஒன்றாகும். தொழிற்துறை ரீதியாக வளர்ச்சி குன்றிய நாடுகளில் மலிவான உழைப்புச் சக்தி இருப்பது தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கான பெரும் தடையாகும். முதலாளிகளைப் பொறுத்த மட்டில், தோட்டங்கள், கட்டுமானங்கள், மற்ற வேலைகளில் இயந்திரங்களைப் புகுத்துவதை விட மலிவான தொழிலாளர்களைப் பெருமளவில் அமர்த்துவது லாபகரமானது.

இவ்வாறாக, முதலாளித்துவத்தில் இயந்திரங்கள் தொழிலாளர்களைக் கட்டுப்பாடற்று சுரண்டுவதற்கான சாதனமாகும். இவை தொழிலாளர்களுக்கு அன்னிய சக்தியாக,

மூலதனமாக எதிர்நிற்கின்றன. எனவே இங்கிலாந்தில் முதன் முதலில் இயந்திரங்கள் தோன்றிய போது தொழிலாளர்களும் சிறு தொழில் புரிவோரும் கடும் எதிர்ப்பு காட்டியதும் இவற்றை உடைத்து நொறுக்கியதும் தற்செயல் அல்ல. 18ஆம் நூற்றாண்டின் இறுதியில் 19ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் அங்கு ''இயந்திரங்களை அழித்தொழிப்பவர் களின்'' இயக்கம் தோன்றியது. நேத் லுட் என்னும் நெசவாளரின் பெயரால் இந்த இயக்கம் லுட் இயக்கம் என்று வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

போகப் போக தொழிலாளர்கள் தம் விரோதிகள் இயந்திரங்கள் அல்ல, இவற்றைப் பயன்படுத்தும் முதலாளிகள்தான் என்பதைப் புரிந்து கொண்டனர்; எனவே கை வேலைக்கு திரும்ப வேண்டுமெனக் கோரி இயந்திரங்களுக்கு எதிராகப் போராடத் தேவையில்லை என்பது இவர்களுக்கு விளங்கியது. இப்படிப்பட்ட போராட்டம் பொருளற்றது, ஏன் பிற்போக்கானது கூட, ஏனெனில் வரலாற்று ஓட்டத்தை பின்னோக்கித் திருப்ப முடியாது. தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பயன்கள் அனைத்தையும் உழைக்காத, ஒட்டுண்ணி வர்க்கங்களுக்கு அளித்து விட்டு, தொழிலாளி வர்க்கத்தை உரிமையின்மையிலும் ஏழ்மையிலும் தள்ளும் சமூக அமைப்பு என்ற வகையில் முதலாளித்துவத்திற்கு எதிராகப் போராட வேண்டும்.

முதலாளித்துவ சமுதாயத்தின் இரண்டு துருவங்கள்

பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள், முதலாளித்துவம் வளர வளர உழைப்பாளிகளின் நிலை மேம்படுவதாகக் கூறுகின்றனர். முந்தைய தலைமுறையினரின் வாழ்க்

கையில் இருப்புப் பாதைகள், பெரும் கப்பல்கள், பிரம்மாண்டமான நகரங்கள், நவீன இயந்திரங்களைக் கொண்ட தொழிற்சாலைகள், சுரங்கங்கள் (ஆயிரக்கணக் கானோர் இவற்றில் வேலை செய்கின்றனர்) எல்லாம் இருந்தனவா என்று இவர்கள் கேட்கின்றனர். ஆனால் பல தலைமுறைகளைச் சேர்ந்த உழைப்பாளிகளை ஒடுக்கி, கடுமையாகச் சுரண்டி, இவர்களுடைய நிலையை மோசமாக்கித்தான் இவையெல்லாம் அடையப்பட்டன.

ஏனெனில் தம் லாபத்தை அதிகரிப்பதன் மீதுதான் முதலாளிகள் முக்கியக் கவனம் செலுத்துகின்றனர். இதற்காக இவர்கள் தம்மிடையே கடும் போட்டியில் இறங்குகின்றனர். லாப வேட்கையும் போட்டியும் உற்பத்தியைப் பெருக்குமாறு முதலாளிகளைக் கட்டாயப் படுத்துகின்றன, ஏனெனில் பெரும் தொழிற்சாலை சிறியதை விட, சிறந்தது. பெரும் தொழிற்சாலையில் நல்ல தொழில்நுட்ப வசதிகள் இருக்கும், சலுகையோடு கடன்கள் கிடைக்கும், தன் பண்டங்களை இதனால் பெருமளவில் ஆதாயமான விலைகளுக்கு விற்க இயலும்.

முதலாளித்துவத்திற்கு முந்திய அமைப்புகளுக்கு மாறாக முதலாளித்துவத்தில் விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தி — அதாவது உற்பத்தி திரும்பத் திரும்ப நடைபெறும் போது இதன் அளவுகளை விரிவுபடுத்துவது — உள்ளது. உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காக முதலாளிகள், தாம் அபகரிக்கும் உபரி மதிப்பில் ஒரு பகுதியை சேமிப்பிற்கும், தமது மாறும் மற்றும் மாறாத மூலதனங்களை அதிகரிக்க வும் பயன்படுத்துகின்றனர். உபரி மதிப்பில் ஒரு பகுதியை ஆண்டுதோறும் சேமிப்பதன் மூலம் முதலாளி மேன்மேலும் அதிகமான மூலதனத்தைச் சேர்க்கிறான். உபரி மதிப்பில் ஒரு பகுதியை சேமிப்பிற்காகப் பயன் படுத்தி (உபரி மதிப்பை மூலதனமாக்குதல்) மூலதனத்தின்

அளவை அதிகரிப்பதானது **மூலதனக் குவிப்பு** எனப் படுகிறது.

ஆனால் உபரி மதிப்பை மூலதனமாக்குவதன் மூலம் மூலதனத்தை அதிகரிக்கும் நிகழ்ச்சிப் போக்கு ஒப்பீட் டளவில் நீண்டது. உதாரணமாக, ஆரம்பத்தில் ஒரு தொழில் நிறுவனத்தின் மதிப்பு 20 லட்சம் டாலர்களாக இருந்ததெனில், ஆண்டுதோறும் 1 லட்சம்—2 லட்சம் டாலர்களைச் சேகரித்து முதலாளி பத்தாண்டுகளுக்குப் பின் இதன் மதிப்பை 30 லட்சம்—40 லட்சம் டாலர் களாக உயர்த்துகிறான். இதை விடப் பன்மடங்கு விரைவாக மூலதனத்தைப் பெருக்கும் இன்னொரு வழியையும் முதலாளிகள் பயன்படுத்துகின்றனர். ஒரு சில மூலதனங்களை (வலுக்கட்டாயமாகவோ, அவற்றின் விருப்பப்படியோ) ஒன்றாக இணைப்பதுதான் அது. இது **மூலதனத்தை மையப்படுத்துவது** எனப்படுகிறது.

தொழில் நிறுவனம் எவ்வளவுக்கெவ்வளவு பெரி யதோ, இதன் உடைமையாளர்கள் அவ்வளவுக்கவ்வளவு அதிக உபரி மதிப்பை சுவீகரிக்கின்றனர், மூலதனத் திரட்சி அவ்வளவுக்கவ்வளவு விரைவாக நடைபெறுகிறது. முதலாளி உபரி மதிப்பை (தொழிலாளர்களின் ஊதி யமற்ற உழைப்பை) சுவீகரிக்காமல் இருந்தால் ஒரு சில ஆண்டுகளில் அவனுடைய மூலதனம் முழுவதும் செலவாகியிருக்கும், அவன் ஓட்டாண்டியாவான். ஆனால் இவ்வாறு நடைபெறுவதில்லை. மூலதனம் குறையாமல் அதிகரிக்கிறது. முதலாளிகள் தொழிலாளிகளின் ஊதி யமற்ற உழைப்பை அப்படியே சுரண்டுவதன் விளைவுதான் இது. ஒரு குறிப்பிட்ட மூலதனம் முதலில் எப்படித் தோன்றியிருந்தாலும் ஒரு சில ஆண்டுகள் கழித்து இது வேறொருவரின் ஊதியமற்ற உழைப்பின் திரட்டாக மாறுகிறது. எனவே பாட்டாளிகள் முதலாளிகளிடம்

செல்வத்தைப் பிடுங்கும் போது நியாயமான காரியத்தைச் செய்கின்றனர், ஏனெனில் தனக்குச் சட்டப்படி சொந்தமானதைத்தான் இவர்கள் தன் கரங்களில் எடுத்துக் கொள்கின்றனர்.

மூலதனத் திரட்சி எல்லாவற்றிற்கும் மேலாக முதலாளியின் செல்வம் அதிகரிப்பதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் முதலாளித்துவத்தின் வளர்ச்சியோடு சேர்ந்து பாட்டாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கிறது. மூலதனத் திரட்சி தொழிலாளி வர்க்கத்தின் நிலை மீது முரண்பாடான தாக்கத்தை செலுத்துகிறது. உற்பத்தி அதிகரிப்பதன் விளைவாய் உழைப்புச் சக்தியின் தேவை கூடும் அதே நேரத்தில் தொழிலாளர்கள் உற்பத்தியிலிருந்து வெளிதள்ளப்பட்டு, மூலதனத்தின் தேவைகளோடு ஒப்பிடுகையில் ஒப்பீட்டளவிலான தேவைக்கதிகமானவர்கள் தோன்றும் சூழ்நிலைகளும் ஏற்படுகின்றன. **வேலையில்லாத் திண்டாட்டம்** தோன்றுகிறது. இதன் காரணங்கள் யாவை?

மூலதனமானது மாறாத மூலதனம் (c) என்றும் மாறும் மூலதனம் (v) என்றும் பிரிக்கப்படுவதை நாம் ஏற்கெனவே பார்த்தோம். இந்த இரண்டிற்கும் இடையில் ஒரு குறிப்பிட்ட விகிதம் நிலைநாட்டப்படுகிறது; இது உழைப்பு எந்த அளவிற்கு இயந்திரமயப்படுத்தப்பட்டுள்ளது என்பதால் நிர்ணயிக்கப்படுகிறது. கா. மார்க்ஸ் **மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு** எனும் கருத்தை முன்வைத்தார். இது c இன் மதிப்பிற்கும் v இன் மதிப்பிற்கும் இடையிலான மாற்றங்களை வெளிப்படுத்துகிறது, ஏனெனில் இவை உற்பத்தியின் தொழில்நுட்ப மட்டம் மாறுவதுடன் தொடர்புடையவை.

இதை $o = \frac{c}{v}$ எனும் சூத்திரத்தால் குறிப்பிடலாம்.

இங்கு o என்பது மூலதனத்தின் அங்ககக் கட்டமை வாகும். கை வேலையிலிருந்து இயந்திரத்திற்கு மாறுவது உழைப்பின் தொழில்நுட்ப மட்டம் உயர்ந்துள்ளதைக் குறிக்கிறது. அதே நேரத்தில் இது மாறும் மூலதனத்தை விட மாறாத மூலதனத்தின் பங்கு அதிகரித்துள்ளதை, எனவே மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு கூடி டிள்ளதைக் குறிக்கும்.

முதலாளிகள் உற்பத்தியை விரிவுபடுத்தும் போது புதிய இயந்திரங்களைப் புகுத்துகின்றனர், இவை தொழிலாளர்களில் ஒரு பகுதியினருக்கு மாற்றாக அமைகின்றன. இதனால் முதலாளித்துவத் திரட்சிப் போக்கில் மாறாத மூலதனத்திற்கும் (c) மாறும் மூலதனத்திற்கும் (v) இடையிலான விகிதம் மாறுகிறது. அதுவும் மாறும் மூலதனத்தை விட மாறாத மூலதனம் விரைவாக அதிகரிக்கிறது, அதாவது மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு உயருகிறது. இதன் விளைவாக உழைப்புச் சக்திக்கான தேவை ஒப்பீட்டளவில் குறை கிறது.

மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு $o = \frac{1}{1}$, அதாவது ஒவ்வொரு *100* மூலதன அலகிலும் 50c யும் 50v யும் உள்ளதாக வைத்துக் கொள்வோம். தொழில்நுட்ப மேம்பாடுகளின் காரணமாய் இந்த அங்ககக் கட்டமைவு அதிகரித்து $o = \frac{3}{1}$ ஆக மாறியது; அதாவது ஒவ்வொரு *100* மூலதன அலகிலும் 75c யும் 25v யும் உள்ளது. எனவே மாறும் மூலதனம் 50லிருந்து 25ஆக குறைந்தது, அதாவது இரண்டு மடங்கு குறைந்தது. இக்குறிப்பிட்ட தொழில் நிறுவனத்தில் உழைப்புச் சக்தியின் தேவையும் இரண்டு மடங்கு குறையுமென இதற்குப் பொருள்.

முதலாளித்துவத்தில் புதிய இயந்திரச் சாதனங்கள் பயன்படுத்தப்படும் போது தொழிலாளர்கள் உற்பத்தியி லிருந்து வெளிதள்ளப்படுகின்றனர், இதனால் பெருமளவில் வேலையில்லாத் திண்டாட்டம் தோன்றுகிறது.

இயந்திரங்கள் புகுத்தப்படுவதால் தொழிலாளர்கள் வெளிதள்ளப்படுவது மட்டும் வேலையில்லாத் திண்டாட் டம் அதிகரிக்கக் காரணமல்ல. விவசாயிகள், சிறு தொழில் புரிவோர், மற்ற சிறு உற்பத்தியாளர்கள் திவாலடைவதும் வேலையில்லாத் திண்டாட்டம் பெருக வழிகோலுகிறது. திவாலான கோடிக்கணக்கான விவசாயி கள் தம் வீடு வாசல்களை விட்டு விட்டு வேலை தேடி நகரங்களுக்கு வந்து வேலையில்லாப் பட்டாளத்தில் சேரும்படி நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இன்று முதலாளித் துவ நாடுகளில் வேலையில்லாத் திண்டாட்டம் அளவில் பெருகியுள்ளது, நிரந்தரமானதாய், தீரா வியாதியாய் மாறியுள்ளது. பொருளாதார நெருக்கடி கட்டங்களில் அதிகரிக்கும் இது, ஏகாதிபத்தியத்திற்கு முன் புத்துயிர்ப்பு மற்றும் எழுச்சி கட்டங்களில் குறைந்ததைப் போல் இன்று குறையவில்லை.

வேலையில்லாதோர் படை உழைப்புச் சந்தையின் மீது நிர்ப்பந்தம் செலுத்தி, வேலை செய்யும் தொழிலாளர் களின் ஊதியத்தை உழைப்புச் சக்தியின் மதிப்பை விடக் குறைக்கிறது. உழைப்பைத் தீவிரப்படுத்தி, தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தைக் குறைத்து, உழைப்புச் சூழ்நிலைகளை மோசமாக்கி, தம் லாபங் களைக் கூட்டுவதற்காக முதலாளிகள் வேலையில்லாத் திண்டாட்டத்தைப் பயன்படுத்துகின்றனர். பொருளாதார எழுச்சிக் கட்டங்களில் தம் தொழில் நிறுவனங்களுக்கு மலிவான உழைப்புச் சக்திக்கு வகை செய்வதற்காகப் பெரும் வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளிகளுக்குத்

தேவைப்படுகிறது. பெரும் சேம உழைப்புப் படை, வேலையில்லாதோரின் பட்டாளம் முதலாளிகளுக்குச் சேவை புரிய எப்போதும் காத்துக் கிடக்கிறது. உழைப் பாளிகளுக்கு ஏராளமான இன்னல்களையும் இழப்பு களையும் ஏற்படுத்தும் வேலையில்லாத் திண்டாட்டம் முதலாளித்துவத்தின் தவிர்க்க இயலா உடன் பிறப்பாகும்.

முதலாளித்துவத்தில் மூலதனத் திரட்சியும் சமுதாயச் செல்வமும் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ வேலை யில்லாதோர் படையும் பட்டினியால் வாடித் தவிக்கும் ஏழைகளும் அவ்வளவுக்கவ்வளவு அதிகமாக இருப்பார் கள். சமுதாயத்தின் ஒரு துருவத்தில் மூலதனம் திரண்டு முதலாளி வர்க்கத்தின் செல்வம், ஆடம்பரம், ஊதாரித் தனம், கேளிக்கைகள் முதலியன குவியும் அதே நேரத்தில் மறு துருவத்தில் இச்சமுதாயச் செல்வம் முழுவதையும் தோற்றுவிக்கும் பாட்டாளி வர்க்கத்தினரின் வாழ்க்கை நிலை மேன்மேலும் மோசமடைந்து வருகிறது. முதலாளித் துவத் திரட்சியின் பூரண பொது விதியின் சாரம் இதில் தான் அடங்கியுள்ளது. கா. மார்க்ஸ்தான் இதைக் கண்டுபிடித்தார். முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத் தின் நிலை நடைமுறையிலும் ஒப்பீட்டளவிலும் கீழடைவது தவிர்க்க இயலாதது என்று இவ்விதி முன்னனுமானிக் கிறது.

நவீன முதலாளித்துவச் சூழ்நிலைகளில் பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்பீட்டளவில் கீழடைவது, தேசிய வருமானத்தில் (அதாவது ஓராண்டில் சமுதாயத்தில் மீண்டும் தோற்றுவிக்கப்படும் மதிப்பில்) மற்றும் மொத்த சமுதாய உற்பத்திப் பொருளில் ஊதியத்தின் பங்கு குறைவதில் இது வெளிப்படுகிறது. கடந்த பத்தாண்டு களில் முதலாளித்துவ நாடுகளில் ஏதோ ''வருமானப் புரட்சி'' நடந்துள்ளதாக பூர்ஷ்வா விஞ்ஞானிகள்

கூறுவது உண்மைக்குப் புறம்பானது. அத்தியாவசியப் பண்டங்களின் விலை உயர்வு, ''ஊதிய முடக்க'' கொள்கை, சமூக நலத் திட்டங்களைப் பெருமளவு குறைப்பது, ஏகபோகங்களின் வரிகளைக் குறைத்து உழைப்பாளிகளின் மீதான வரிச் சுமையை அதிகரிப்பது போன்ற காரணிகள் முதலாளிகளின் லாபங்களுடன் ஒப்பிடுகையில் தொழிலாளி வர்க்கத்தின் வருமானங்கள் குறைவதில் பெரும் பங்காற்றுகின்றன. ஏகபோகங்களுக்கு ஆதாயமாக தேசிய வருமானத்தை மறுபங்கீடு செய்யும் பூர்ஷ்வா அரசு உழைப்பாளிகளிடமிருந்து பறிப்பதைக் கொண்டு இராணுவ-தொழிற்துறைச் சேர்ந்த ஏகபோகங்களின் பெரும் செலவுகளுக்கும் இராணுவத் தேவைகளுக்கும் உதவுகிறது.

தொழிலாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையில் கீழடைவது, பாட்டாளிகளின் வாழ்க்கைத் தரம் வீழ்ச்சியடைவதிலும் இவர்களின் வாழ்க்கை, உழைப்புச் சூழ்நிலைகள் மோசமாவதிலும் வெளிப்படுகிறது. தொழிலாளி வர்க்கத்தின் வாழ்க்கை நிலையைப் பற்றி ஒரு முடிவிற்கு வர பல குறியீடுகளைக் கவனத்தில் கொள்ள வேண்டும். பணமாகப் பெறும் ஊதியத்தின் அளவு, நுகர்வுப் பண்டங்களின் விலை மட்டம், வேலை வாய்ப்பு மற்றும் வேலையில்லாத் திண்டாட்ட அளவுகள், உழைப்பின் தீவிரம் மற்றும் உழைப்பு நேரம், வரிகளின் அளவு, வீட்டு வசதிகள், கலாசார, அன்றாட வாழ்க்கை மற்றும் உழைப்புச் சூழ்நிலைகள் போன்ற குறியீடுகள் இவற்றிலடங்கும்.

முதலாளித்துவம் வளர்ச்சியடைந்து மூலதனத் திரட்சி அதிகரிக்கும் போது, தனிப்பட்ட குறியீடுகள் மேம்பட்டாலும் கூட தொழிலாளி வர்க்கத்தின் நிலை கீழடைகிறது. பாட்டாளி வர்க்கம் கடுமையாகப் போராடி

சிறிதளவு ஊதிய உயர்வைப் பெற்றாலும் உழைப்பு தீவிரப்படுத்தப்படுவதாலும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகுவதாலும், நாளைய தினத்தின் மீதான நம்பிக் கையின்மை அதிகரிப்பதாலும், வரிகளும் விலைகளும் கூடுவதாலும் இச்சிறு ஊதிய உயர்வு ஒன்றுமில்லாத தாகிறது. பணவீக்க முறை, சுரண்டும் வர்க்கங்களுக்கு ஆதாயமாகத் தேசிய வருமானத்தை மறுபங்கீடு செய்யும் பலம் மிக்க உந்து சக்திகளில் ஒன்றாகியுள்ளது.

பொருளாதார நெருக்கடி நிலவும் ஆண்டுகளில் பாட்டாளி வர்க்கத்தின் நிலை குறிப்பாக மோசமடை கிறது. எழுச்சியின் போது ஊதியம் ஓரளவு உயரலாம், வேலையில்லாத் திண்டாட்டம் சிறிதளவு குறையலாம். ஆனால் கண்டிப்பாக எழுச்சிக்குப் பின் நெருக்கடி வரும். இது வேறு விளைவுகளுக்கு இட்டுச் செல்லும், தொழிலாளி வர்க்கத்தின் நிலையை கீழடையச் செய்யும்.

வெவ்வேறு நாடுகளில், ஒரே நாட்டின் வெவ்வேறு துறைகளில், பிரதேசங்களில் பாட்டாளி வர்க்கத்தின் நிலை கீழடையும் நிகழ்ச்சிப் போக்கு சமமற்ற முறையில் நடக்கிறது. ஒரு சில நாடுகளில் பாட்டாளி வர்க்கத்தால் தன் நிலையை சிறிதளவு மேம்படுத்திக் கொள்ள முடிகிறது, மற்ற நாடுகளில் பட்டினியும் ஏழ்மையும் மிகவும் வெளிப்படுகின்றன. பாட்டாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையிலும் ஒப்பீட்டளவிலும் கீழடைவது ஒரு நியதியான புலப்பாடு. கோடிக்கணக்கான மக்கள் அந்நிய ஏகபோகங்களாலும் தேசிய முதலாளி வர்க்கத் தாலும் சுரண்டப்படும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் மட்டுமின்றி வளம் கொழிக்கும் முதலாளித்துவ நாடாகிய அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் இது காணப்படுகிறது. இந்நாட்டில் கோடிக்கணக்கானோர் அதிகார பூர்வமான ''வறுமைக் கோட்டிற்கு'' கீழ் வாழுகின்றனர். இவ்வாறு

பங்கிழந்தவர்களில் கணிசமான பகுதியினர் நீக்ரோக்கள், மெக்சிக்கோ இனத்தவர், புவர்ட்டோரிக்கன் இனத்தவர்.

பூர்ஷ்வா விஞ்ஞானிகள் பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்பீட்டளவில் கீழடைவதை முதலாளித்துவ நாடுகளில் நிலவும் யதார்த்தங்களின் காரணமாய் ஒப்புக்கொள்ளும்படி நேரிட்டுள்ளது. ஆனால் இவர்கள் பாட்டாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையில் கீழடை வதை உறுதியாக மறுக்கின்றனர். நூறு, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இல்லாத பல வசதிகள் இன்று தொழிலாளர்களுக்கு உள்ளதாகக் கூறப்படுகிறது. அவர் களிடம் கார்கள், தொலைக்காட்சிப் பெட்டிகள், குளிர்ப்பதன பெட்டிகள், துணி துவைக்கும் இயந்திரங் கள் போன்றவையெல்லாம் இருந்தனவா என்ன? சமூக இன்சூரன்ஸ் அதிகரிக்கவில்லையா, வேலையில்லாதோர் உதவிப் பணம் கூடவில்லையா?

ஆம், உண்மையில் வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம் தன்னலமற்ற வர்க்கப் போராட்டத்தின் பயனாய் தன் வாழ்க்கை நிலையை ஓரளவு உயர்த்தியுள்ளது, முதலாளி வர்க்கம் தன் லாபத்தில் ஒரு பகுதியை விட்டுக் கொடுக்கும்படி செய்துள்ளது, சமூக சட்டத் துறையில் ஓரளவு இணக்கங் களைப் பெற்றுள்ளது. ஆனால் இதனால் பரவலான மக்கள் திரளினர் சுரண்டப்படுவதும் இவர்கள் சமூக ரீதியாக வறுமையடைவதும் அதிகரித்து வருகிறது எனும் உண்மை மறைந்து விடவில்லை. ஏனெனில் விஞ்ஞான-தொழில்நுட்ப புரட்சிச் சூழ்நிலைகளில் உற்பத்திச் சக்திகள் வளர்ந்து வரும் போது, சமுதாய செல்வம் கூடி வரும் போது, உழைப்பாளிகளுக்குப் புதுப் புது பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகள் தோன்று வதோடு கூட இத்தேவைகளை ஓரளவாவது சாதாரண

மாகப் பூர்த்தி செய்வதும் மேன்மேலும் கடினமான தாகிறது. உழைப்பாளிகளின் விரைவாக அதிகரித்து வரும் பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகளி லிருந்தும் சுரண்டும் வர்க்கங்களின் விரைவாக அதிகரித்து வரும் வருமானங்கள், செல்வத்திலிருந்தும் உழைப்பாளி களின் வாழ்க்கை நிலை மேன்மேலும் பின்தங்கி வருவதானது தொழிலாளி வர்க்கத்தின் நிலை நடை முறையில் கீழடைவதற்குச் சான்று பகர்கிறது. உதாரண மாக, அமெரிக்க ஐக்கிய நாட்டில், ஆண்டுதோறும் வெளியிடப்படும் ஜனாதிபதி அறிக்கையிலுள்ள அதிகாரப் பூர்வமான புள்ளிவிவரங்களின்படி மட்டும் உற்பத்தித் துறை தொழிலாளர்களின் உண்மை ஊதியம் கடந்த பத்தாண்டில் 15%ஆகக் குறைந்துள்ளது. இதே காலகட்டத் தில் வேலையில்லாத் திண்டாட்டம் 6இலிருந்து 8—10%ஆகக் கூடியுள்ளது.

தொழிலாளர்களின் நிலை மட்டுமின்றி ஊழியர்கள், உற்பத்தி-தொழில்நுட்ப அறிவுத் துறையினர், சேவைத் துறையினர் ஆகியோரின் நிலையும் கீழடைகிறது. இவர்களின் விஷயத்தில் தந்திரமான, சாமர்த்தியமான புதுப் புது சுரண்டல் முறைகள் பின்பற்றப்படுகின்றன. குறிப்பாக நெருக்கடிகளின் போது சிறு உற்பத்தியாளர் கள் வறுமையடைந்து, திவாலாகின்றனர். உதாரணமாக, 1935—1975இல் அமெரிக்காவில் சிறு பண்ணைகளின் எண்ணிக்கை 68,14,000லிருந்து 28,19,000ஆகக் குறைந்தது. இவ்வாறாக, முதலாளித்துவத்தின் வளர்ச்சி — அதுவும் குறிப்பாக இதன் உச்ச ஏகபோகக் கட்டத்தில் — பெரும்பாலான மக்கள் திரளினரை பாட்டாளிமயப்படுத்த இட்டுச் செல்கிறது; இது கா. மார்க்ஸ் கண்டுபிடித்த முதலாளித்துவத் திரட்சி விதியை முழுமையாக மெய்ப்பிக் கிறது.

மூலதனத் திரட்சியின் வரலாற்றுப் போக்கை ஆராய்ந்த கா. மார்க்ஸ், முதலாளித்துவ உற்பத்திச் சக்திகளின் முன்னேற்றம் — இது உபரி மதிப்பு தோற்றுவிக்கப்பட்டு சுவீகரிக்கப்படுவதன் அடிப்படையில் நடக்கிறது — உற்பத்தி பெருமளவில் சமூகமயமாக்கப்படுவதற்கு இட்டுச் செல்கிறது, சோஷலிசத்திற்கு மாறி செல்வதற்கு அவசியமான புறவய முன்நிபந்தனைகளைத் தோற்றுவிக்கிறது என்று காட்டினார். முதலாளித்துவத்தின் முக்கிய முரண்பாடு, அதாவது உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் தனி முதலாளித்துவ சுவீகரிப்பு வடிவத்திற்கும் இடையிலான முரண்பாடு கூர்மையடைகிறது. உற்பத்திச் சக்திகளுக்கும் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளுக்கும் இடையில் சமரசப்படுத்த இயலாத முரண்பாடு தோன்றுகிறது. உற்பத்தி உறவுகள் உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கு விலங்காக மாறுகிறது. இம்முரண்பாடு உடனடியான தீர்வைக் கோருகிறது. இதைப் புரட்சிகர வழியில் மட்டுமே, முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை சோஷலிச உற்பத்தி உறவுகளால் மாற்றுவதன் மூலம் மட்டுமே (இவை ற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குப் பரவலான வாய்ப்புகளை ஏற்படுத்தும்) தீர்க்க முடியும். முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்வதற்கான புறவய முன்நிபந்தனைகளைத் தோற்றுவிப்பது மட்டும் போதாது, ஏனெனில் பழையதாகிப் போன ஆதிக்க வர்க்கங்கள் ஒருபோதும் தாமாகவே முன் வந்து வரலாற்று அரங்கை விட்டு அகலா. எனவே பாட்டாளி வர்க்கம் ஆட்சியை வென்று, முதலாளித்துவ சமுதாயத்தைப் புரட்சிகரமாக மாற்ற வேண்டியது முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறுவதற்கு அவசியமான நிபந்தனையாகும்.

''...உற்பத்திச் சாதனங்கள் மையப்படுவதும் உழைப்புச்

சமுதாய ரீதியாவதும், அவற்றின் முதலாளித்துவ ஓட்டுக்குப் பொருந்தி வராத ஒரு கட்டத்தைக் கடைசியில் எட்டுகின்றன. இவ்வாறு ஓடு உடைத்தெறியப்படுகிறது. முதலாளித்துவத் தனிச் சொத்தின் சாவு மணி ஒலிக்கிறது. பறிமுதல்காரர்கள் பறிமுதல் செய்யப்படுகின்றனர்'' * என்று கா. மார்க்ஸ் எழுதினார்.

கா. மார்க்சின் மேதாவிலாசம் மிக்க விஞ்ஞானக் கணிப்பை வரலாறு மெய்ப்பித்தது. 1917 அக்டோபரில் முதன்முதலாக ருஷ்யாவில் முதலாளித்துவ தனியுடைமைக்கு சாவு மணி அடிக்கப்பட்டது. இங்குதான் உலகிலேயே முதன்முதலாக சோஷலிசம் கட்டப்பட்டது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் சில ஐரோப்பிய, ஆசிய, லத்தீன் அமெரிக்க நாடுகளில் முதலாளித்துவம் தூக்கியெறியப்பட்டது.

சுரண்டலாளர்களின் வருமானங்கள்

கூலித் தொழிலாளர்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்புதான் முதலாளித்துவ சமுதாயத்தில் உள்ள எல்லா சுரண்டலாளர்களின் உழைக்காத வருமானங்களுக்கான மூல ஊற்றாகும். தொழிற்துறை மற்றும் வர்த்தக முதலாளிகள், வங்கியதிபர்கள், பெரும் நிலவுடைமையாளர்கள் ஆகியோருக்கு இடையிலான கடும் போட்டிப் போராட்டத்தில் இதன் வினியோகம் தன்னிச்சையாக நடக்கிறது. இதில் ஒவ்வொரு குழுவும் உபரி மதிப்பின் தன் பங்கை விசேஷ வடிவத்தில் பெறுகிறது. தொழில் நிறுவன முதலாளிகள் தொழிற்

---

* கா. மார்க்ஸ், பி. எங்கெல்ஸ், சோஷலிஸ்ட் புரட்சி, முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, 1986, பக்கம் 135.

துறை லாபமாகவும், வியாபாரிகள் வர்த்தக லாபமாகவும், கடன் தரும் முதலாளிகள் (வங்கியதிபர்கள்) வட்டி மூலமும், பெரும் நிலவுடைமையாளர்கள் நில வாடகை வடிவிலும் இதைப் பெறுகின்றனர்.

தொழிலாளர்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பை முக்கியமாகத் தொழிற்துறை முதலாளிகள் தான் சுவீகரிக்கின்றனர். போட்டியின் போது இவர் களிடமிருந்து வர்த்தக முதலாளிகள் மற்றும் கடன் தரும் முதலாளிகள் தம் பங்கைப் பெறுகின்றனர்.

உபரி மதிப்பு கலகலவென ஒலிக்கும் நாணயங் களின் வடிவில் தோன்றுவதில்லை. இது கூலித் தொழி லாளியின் உழைப்பால் பண்டத்தில் அடங்கியுள்ளது. முதலாளி உபரி மதிப்பை பணமாக (டாலர்களாக, பவுன் ஸ்டெர்லிங்காக, பிராங்குகளாக) மாற்ற வேண்டுமானால் அவன் தன் பண்டங்களை விற்க வேண்டும்.

ஒரு முதலாளித்துவத் தொழிற்சாலையில் உற்பத்தி செய் யப்பட்ட காலணியின் மதிப்பு $w = 20c + 20v + 10m = 50$ என்று வைத்துக் கொள்வோம். ஆனால் முதலாளி, சிறு பண்ட உற்பத்தியாளனைப் போல் உற்பத்தியில் தன் உழைப்பைச் செலுத்தாது மூலதனத்தைத்தான் வைத்துள்ளான். எனவே பண்டத்தின் **முதலாளித்துவ உற்பத்திச் செலவுகள்** பண்டத்தின் மதிப்பிலிருந்து வேறுபட்டவை. இச்செலவுகளை "k" என்று குறிப்பிடு வோம். இங்கே $\kappa = 20c + 20v = 40$. உபரி மதிப்பாகிய (m) *10* இதில் அடங்கியிருக்கவில்லை, ஏனெனில் இதனால் முதலாளிக்கு ஒரு செலவுமேயில்லை. எனவே பண்ட உற் பத்திக்கு ஆன மூலதனச் செலவுகள் பண்டத்தின் மதிப்பை விடக் குறைவு; இந்த வேறுபாடு உபரி மதிப்பின் அளவிற்குச் சமமானது.

முதலாளி தன் பண்டத்தை விற்றதும் அவனுக்கு பணம் கிடைக்கிறது. இது உற்பத்திச் செலவுகளை ஈடுகட்டுவதோடு கூட சிறிதளவு மிகையான பணத்தையும் தருகிறது. நம் உதாரணத்தில் இது 10 ஆகும். தன் தன்மையில் இந்த மிகை உபரி மதிப்பாகும்; இது பண்டம் விற்கப்பட்டதால் பண வடிவத்தை மேற்கொண்டு, **லாபமாக** மாறியுள்ளது. இதை "p" என்று ("Profit" எனும் சொல்லுக்கு "லாபம்" என்று பொருள்) குறிப்பிடலாம். லாபமானது உற்பத்தியின் முதலாளித்துவ செலவுகளுக்கும் (k) பண்டத்தின் விலைக்கும் உள்ள வேறுபாடாகும். எனவே ஏதோ மூலதனம் முழுவதும் லாபத்தைத் தோற்றுவிப்பதாகத் தோன்றுகிறது. லாபத்தின் உண்மையான மூல ஊற்று மறைவில் இருக்கிறது. கா. மார்க்ஸ் லாபத்தை உபரி மதிப்பின் மாறிய வடிவம் என்றார். லாபமானது உபரி மதிப்பிலிருந்து தன் வடிவத்தில் மட்டுமின்றி அளவிலும் வேறுபடலாம். பண்டத்தின் விலை அதன் மதிப்பை விட அதிகமாக இருந்தால் லாபம் உபரி மதிப்பை விட அதிகமாயும், விலை குறைவாக இருந்தால் குறைவாயும் இருக்கும்.

முன்னிடப்பட்ட மூலதனம் முழுவதன் விளைபயனாகத் தன் ஏமாற்று வடிவில் காட்சி தரும் லாபம் பூர்ஷ்வா விஞ்ஞானிகள் பல்வேறு பொய் தத்துவங்களை முன்வைக்க வாய்ப்பளிக்கிறது. உதாரணமாக, "பொறுமை தத்துவத்தின்"படி முதலாளி தன் மூலதனம் முழுவதையும் தனக்காகச் செலவிடாமல், பொறுமையைக் கடைப்பிடித்து காரியத்தில் ஈடுபடுத்தியதற்காக லாபம் பெறுகிறான். இன்று முதலாளித்துவ நாடுகளில் "உற்பத்தியின் மூன்று காரணிகள்" தத்துவம் பெரிதும் பரவியுள்ளது. இதன்படி முதலாளியின் மூலதனம்

இவனுக்கு லாபத்தை தருகிறது, பெரும் நிலவுடைமையாளரின் நிலம் இவனுக்கு நில வாடகையை அளிக்கிறது, தொழிலாளி தன் உழைப்பிற்காக ஊதியம் பெறுகிறான். இத்தத்துவாசிரியர்கள் பொருளாதாரப் புலப்பாடுகளின் மேற்போக்கான தோற்றத்தை இவற்றின் சாரமாகச் சித்தரிக்கின்றனர்.

முதலாளியைப் பொறுத்த மட்டில், விளையாட்டுச் சாமான்கள் செய்வது, கார் உற்பத்தி, சுவிங்கம் செய்வது, அழிவுகரமான ஆயுத உற்பத்தி, எதில் பணத்தை முதலீடு செய்கிறோம் என்பது முக்கியமல்ல. இவனுக்கு லாபத்தின் அளவுதான் முக்கியம். இவன் தன் மூலதனத்தின் ஒவ்வொரு அலகிற்கும் இயன்ற அளவு அதிக லாபம் பெற விரும்புகிறான். **லாப விகிதம்,** முன்னிடப்பட்ட மூலதனம் முழுவதற்கும் உபரி மதிப்பிற்கும் உள்ள விகிதத்தால் நிர்ணயிக்கப்படுகிறது; இது சதவிகிதத்தில் வெளியிடப்படுகிறது.

லாப விகிதத்தை (p^1) பின்வருமாறு எழுதலாம்:

$$p^1 = \frac{m}{c+v} \times 100 = \frac{p}{k} \times 100$$

நம் உதாரணத்தில் லாபத்தின் விகிதம்:

$$p^1 = \frac{10}{20c+20} \times 100 = 25\%$$

உபரி மதிப்பின் விகிதம் $\left(m^1 = \frac{m}{v} \times 100\right)$ எவ்வளவுக் கெவ்வளவு அதிகமோ அவ்வளவுக்கவ்வளவு லாப விகிதம் அதிகம் என்பதை இங்கு காண்பது எளிது. அதே நேரத்தில் லாப விகிதம் மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு மட்டத்திற்குத் தலைகீழ் விகிதத்தில் உள்ளது.

முதலாளித்துவத் தொழிற்துறையின் பல்வேறு துறைகளில் மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு வெவ்வேறானது. எனவே பண்டங்கள் அவற்றின் மதிப்பிற்கு விற்கப்பட்டால், தனிப்பட்ட முதலாளிகளின் லாப விகிதங்கள் வெவ்வேறானவையாக இருக்க வேண்டும் என்றாகிறது. ஆனால் எல்லா துறைகளையும் சேர்ந்த முதலாளிகள் தத்தம் மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு மட்டம் எப்படியிருந்த போதிலும், தத்தம் மூலதனத்திற்கு ஏற்ற பொதுவான, **சராசரி லாபம்** பெறுகின்றனர் என்று அனுபவம் காட்டுகிறது. இதை எப்படி விளக்குவது?

விஷயம் என்னவெனில் முதலாளித்துவத்தில் ஒரு **துறைக்கு உள்ளேயும் பல்வேறு துறைகளுக்கு இடையிலும் போட்டி** நடைபெறுகிறது. இப்போட்டியின் போது மூலதனங்கள் குறைவான ஆதாயமுள்ள துறைகளிலிருந்து அதிக ஆதாயமான துறைகளுக்கு இடையறாது மாறிக் கொண்டிருக்கின்றன, லாப விகிதங்கள் சமப்படுகின்றன. பண்டங்கள் அவற்றின் மதிப்பிற்கேற்ப இல்லாமல் **உற்பத்தி விலைகளுக்கேற்ப** விற்கப்படுகின்றன, இவை முதலாளிகளுக்கு சராசரி லாபத்தை அளிக்கின்றன. முதலாளித்துவ செலவுகளும் சராசரி லாபமும் சேர்ந்து தான் உற்பத்தி விலையை உருவாக்குகின்றன. பண்டங்களை அவற்றின் மதிப்புகளின்படியின்றி உற்பத்தி விலைகளுக்கு ஏற்ப விற்பதன் பயனாய், குறைந்த மூலதன அங்ககக் கட்டமைவை உடைய துறைகளில் தொழிலாளர்களால் உற்பத்தி செய்யப்பட்ட உபரி மதிப்பின் ஒரு பகுதி அதிக உயர்வான மூலதன அங்ககக் கட்டமைவையுடைய துறைகளுக்கு (இங்கு லாப விகிதம் குறைவு) மாறுகிறது. எனவேதான் லாப விகிதங்கள் சமப்படுத்தப்படுகின்றன. முதலாளி, நாட்டில் உற்பத்தியான மொத்த உபரி மதிப்பிலிருந்து தன்

மூலதனத்திற்கு ஏற்ற பகுதியைப் பெறுகிறான். எனவே தொழிலாளர்கள், எந்த முதலாளிகளிடம் நேரடியாக வேலை செய்கின்றார்களோ அவர்களால் மட்டுமின்றி முதலாளி வர்க்கம் முழுவதாலும் சுரண்டப்படுகின்றனர் என்பது தெளிவு. முதலாளி வர்க்கம் முழுவதற்கும் எதிரான போராட்டம்தான் தொழிலாளர்களைக் கூலி யடிமையிலிருந்து விடுவிக்கும்.

வர்த்தக முதலாளிகள் **வர்த்தக லாபம்** (சராசரி லாபம்) என்ற வடிவில் உபரி மதிப்பின் தம் பங்கைப் பெறுகின்றனர். தொழிற்துறை முதலாளிகள் தம் பண்டங்களை சாதாரணமாக நுகர்வாளர்களுக்கு இன்றி வர்த்தகர்களுக்குத்தான் விற்பார்கள். பண்டங்களை விற்பத் திலும் வாங்குவதிலும் சாமர்த்தியமான வியாபாரிக்குச் சந்தை நன்கு தெரியும், இவனால் பண்டங்களை விரைவாக விற்க முடியும், இதனால் பண்டங்களை விற்கும் செலவுகள் குறையும். தொழிற்துறை முதலாளி யால் பண்ட உற்பத்திக்கு அதிக சாதனங்களை ஒதுக்க முடியுமாதலால் அவன் உபரி மதிப்பில் ஒரு பகுதியை வியாபாரிக்கு விட்டுக் கொடுக்கிறான்.

உபரி மதிப்பை சுவீகரிப்பதில் தொழிற்துறை முதலாளிகள், வர்த்தக முதலாளிகளோடு கூட, கடும் வட்டிக்காரரர்களுக்கு மாற்றாக வந்த கடன் தரும் முதலாளிகளும் (வங்கியதிபர்கள்) பங்கேற்கின்றனர். கடனாகத் தரப்பட்ட, **வட்டியைப்** பெற்றுத் தரும் மூலதனம் கடன் மூலதனம் எனப்படுகிறது.

முதலாளி தான் கடனாகப் பெற்ற தொகையை தன் ஆடம்பரச் செலவுகளுக்காகப் பயன்படுத்தாமல் தன் தொழிற்சாலையில் மூலதனமாகப் பயன்படுத்து கிறான். எனவேதான் கடன் முதலாளிக்கு வட்டி தருவது சாத்தியமாகிறது. இம்மூலதனம்தான் கடன்

வாங்கியவனுக்கு உபரி மதிப்பையளிக்கிறது, இதில் ஒரு பகுதியைத்தான் இவன் கடன் தந்தவனுக்கு வட்டியாகத் திருப்பித் தருகிறான். எந்த ஒரு பண்டத்தின் விற்பனையின் போதும் நடைபெறுவது போன்றே மூலதனம் எனும் பண்டத்தின் விலையும் இதற்கான தேவை மற்றும் சப்ளை விகிதத்தைப் பொறுத்தது. சாதாரணமாக வட்டி அளவு சராசரி லாபத்தில் ஒரு பகுதியாக இருக்கும். தேவையை விட சப்ளை அதிகமாக இருக்கும் போது வட்டி அளவு குறையும், என்றாலும் யாரும் வட்டியின்றி பணத்தைக் கடனாகத் தர மாட்டார்கள்.

வட்டி என்பது லாபத்தில் ஒரு பகுதி என்றாலும் இதன் மூல ஊற்று மூடி மறைக்கப்பட்டுள்ளது. ஒரு ஆப்பிள் மரத்திலிருந்து ஆப்பிள் பழங்கள் கிடைப்பது போல் பணம் தானாகவே வட்டி வடிவத்தில் லாபம் கொண்டு வருவதாக ஒரு மாயையான தோற்றம் ஏற்படுகிறது. அதாவது லாபத்தின் மூல ஊற்று பணம் என்று தோன்றலாம்.

வங்கிகள் எனும் விசேஷ நிறுவனங்கள் மூலம் முதலாளி களுக்கு கடன் வழங்கப்படுகிறது. வங்கியதிபர்கள், மூலதனம் எனும் பண்டத்தை விற்கும் பண முதலாளிகளின் பிரதிநிதிகளாவார்கள். தொழிற்துறை மற்றும் வர்த்தக முதலாளிகள், ஸ்தாபனங்களின் சுதந்திரமான பணம், மக்களின் சேமிப்பு, ரெண்டியர்களின் (தமக்கென தனியான ''காரியத்தில்'' இறங்காமல், வட்டி மூலம் லாபம் பெற விரும்பும் முதலாளிகள்) பணம் முதலியன வங்கிகளுக்கு வருகின்றன. தன் வங்கியில் பணம் போடுபவர்களுக்கு வங்கி வட்டி தருகிறது. ஆனால் வங்கிகள் வெறுமனே பணத்தை சேமித்து வைப்பதில்லை, இவை அதிக வட்டிக்கு இப்பணத்தைக் கடனாகத் தருகின்றன. வங்கி

கள் என்பவை கடன் மூலதனத்தை வியாபாரம் செய்யும் பெரும் முதலாளித்துவ நிறுவனங்கள் ஆகும். வங்கியில் பணம் போடுபவர்களுக்கு வங்கி தரும் வட்டிக்கும், தான் கடனாக அளிக்கும் பணத்திற்காகப் பெறும் வட்டிக்கும் இடையிலுள்ள வேறுபாடுதான் வங்கியதிபரின் லாபமாகும் (இது சராசரி லாப வடிவத்தில் உள்ளது).

உபரி மதிப்பில் ஒரு குறிப்பிட்ட பகுதி பெரும் நில வுடைமையாளர்களுக்கும் கிட்டுகிறது. எப்படி?

கிட்டத்தட்ட எல்லா முதலாளித்துவ நாடுகளிலும் இன்று வரை பெரும் நிலப்பரப்புகள் பெரும் நிலவுடை மையாளர்களின் கரங்களில் உள்ளன. இவர்கள் நேரடி யாக இந்நிலங்களைப் பயன்படுத்தாமல், இவற்றை முதலாளித்துவக் குத்தகைக்காரர்களுக்குக் குறிப்பிட்ட தொகைக்குக் குத்தகைக்கு விடுகின்றனர். முதலாளிகள் விவசாயக் கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதால் கிடைக்கும் உபரி மதிப்பில் ஒரு பகுதியை நிலச்சொந்தக் காரர்களுக்கு விட்டுத் தர வேண்டியதாகிறது. முதலாளித் துவக் குத்தகைக்காரன் நிலச்சொந்தக்காரனுக்கு அளிக் கும் இந்த உபரி மதிப்பில் ஒரு பகுதிதான் **நில வாடகை** எனப்படுகிறது.

முதலாளித்துவ நில வாடகை, ஏற்கெனவே நாம் பார்த்த நிலப்பிரபுத்துவ நில வாடகையிலிருந்து மாறுபட் டது. முதலாவதாக, நிலப்பிரபுத்துவ நில வாடகை என்பது நிலப்பிரபுக்கள் மற்றும் பண்ணையடிமை விவசாயி கள் எனும் இரண்டு வர்க்கங்களுக்கு இடையிலான உறவைப் பிரதிபலிக்கிறது என்றால் முதலாளித்துவ நில வாடகை, பெரும் நிலவுடைமையாளர்கள், முதலாளித் துவக் குத்தகைக்காரர்கள் மற்றும் விவசாயக் கூலித் தொழிலாளிகள் எனும் மூன்று வர்க்கங்களுக்கு இடை யிலான உறவைப் பிரதிபலிக்கிறது. இரண்டாவதாக,

நிலப்பிரபுத்துவ நில வாடகை வடிவில் உபரி உற்பத்திப் பொருள் முழுவதும் பிடுங்கப்பட்டது என்றால் முதலாளித் துவ நில வாடகையில் உபரி மதிப்பின் ஒரு பகுதி மட்டுமே அடங்கியுள்ளது. மறு பகுதியை மூலதனத்தின் லாபம் என்ற வகையில் முதலாளித்துவக் குத்தகைக்காரர் கள் பெறுகின்றனர்.

நில வாடகையைச் செலுத்துவதற்கான பணம் முதலாளித்துவக் குத்தகைக்காரனுக்கு எங்கிருந்து கிடைக் கிறது?

நிலத்தின் வளம் இடத்திற்கு இடம் மாறுபடும். எனவே மூலதனம் ஒரே மாதிரியாக இருந்தாலும் விளைச் சல் வெவ்வேறானதாக இருக்கும், ஒரு குவிண்டால் விளைபொருளுக்கான செலவுகளும் வெவ்வேறானவையாக இருக்கும். வளம் குறைவான நிலத்தில் அதிகம் செலவு செய்ய வேண்டியிருக்கும். வளம் மிகு நிலத்திலோ செலவு கள் மிக்க குறைவாயிருக்கும். இரண்டு விதமான நிலங் களிலிருந்தும் வரும் விளைச்சல் ஒரே விலைக்குத்தான் விற்கப்படும்; இவ்விலை வளம் குறைந்த நிலத்தின் செலவு களால் நிர்ணயிக்கப்படும். ஏனெனில் நிலத்தின் அளவு மட்டானது, வளம் குறைந்த நிலங்களைப் பயன்படுத் தாமலிருக்க முடியாது. எல்லா நிலங்களிலுமிருந்து சமுதாயத்திற்கு விளைபொருள் தேவைப்படுகிறது. எனவே வளம் மிக்க அல்லது சராசரி வளமான நிலங்களில் சாகுபடி செய்யும் முதலாளிகள் கூடுதல் லாபம் பெறு கின்றனர். இதுதான் நில வாடகை வடிவத்தில் பெரும் நிலவுடைமையாளரை அடைகிறது, முதலாளித்துவக் குத்தகைக்காரன் சராசரி லாபம் பெறுகிறான். வெவ் வேறான நில வளத்தோடு தொடர்புடைய நில வாடகை **வேறுபாட்டு நில வாடகை I** எனப்படுகிறது. நிலம் விற் பனைச் சந்தைக்கு அருகிலிருக்கும் போதும் இந்த நில

வாடகை தோன்றுகிறது. ஏனெனில் போக்குவரத்து செலவுகள் குறையக் குறைய முதலாளித்துவக் குத்தகைக் காரனின் லாபம் கூடும்.

இயந்திரங்கள், உரம், நல்ல தரமான விதைகள் போன்ற வற்றைப் பயன்படுத்தி முதலாளியால் தீவிர விவசாயம் செய்ய முடியும், மண் வளத்தை உயர்த்த முடியும். இதற்கு ஒரே நிலத்தில் கூடுதல் மூலதனம் தேவைப்படும். ஆனால் ஒரே மாதிரியான கூடுதல் செலவுகள் வெவ்வேறு அளவி லான விளைபொருட்களைத் தரக் கூடும், வெவ்வேறு உற்பத்தித் திறனைக் கொண்டிருக்கக் கூடும். அதிகப் பயனுள்ள செலவுகள் முதலாளிக்குக் கூடுதல் லாபத் திற்கு வகை செய்கின்றன. குத்தகைக் கெடு முடியும் வரை இது அவனுக்குக் கிடைக்கும். மீண்டும் குத்தகை ஒப்பந்தம் செய்து கொள்ளும் போது நிலச்சொந்தக் காரன் குத்தகைக் கட்டணத்தை உயர்த்துவான், இதனால் கூடுதல் லாபம் அவனுடைய கரங்களுக்கு மாறும். ஒரே நிலத்தில் இடப்பட்ட கூடுதல் மூலதனத்திலிருந்து கிடைக் கும் சராசரி லாபத்தை விட அதிகமான தொகை **வேறுபாட்டு நில வாடகை II** எனப்படுகிறது.

முதலாளித்துவக் குத்தகைக்காரன் நிலச்சொந்தக் காரனுக்கு அளிக்கும் தொகை வேறுபாட்டு நில வாடகையுடன் முடிந்து விடவில்லை. மோசமான நிலங் களிலிருந்தும் நிலச்சொந்தக்காரர்களுக்கு நில வாடகை கிடைக்கிறது. இது எங்கிருந்து வருகிறது?

மோசமான நிலத்தை வைத்திருப்பவன் இதை இலவசமாக உழுது பயிரிட அளிப்பதில்லை. எனவே இந்நிலத்தின் முதலாளித்துவக் குத்தகைக்காரன் நிலச் சொந்தக்காரனுக்கு நில வாடகையை அளிக்கும் பொருட்டு, விளைபொருளை விற்பனை செய்யும் போது சராசரி லாபத்தை விட அதிகமான சிறிது மிகையைப்

பெற வேண்டும். அதாவது விவசாயப் பொருட்களின் சந்தை விலை, மோசமான நிலத்தில் உற்பத்தியின் விலையை விட (மோசமான நிலத்தில் உற்பத்திச் செலவு கள் + சராசரி லாபம்) கூடுதலாக இருக்க வேண்டும் என்று இதற்குப் பொருள். இந்த மிகை எங்கிருந்து வருகிறது?

தொழிற்துறையை விட விவசாயத் துறையில் தொழில் நுட்ப வசதிகள் குறைவு. இதில் மூலதனத்தின் அங்ககக் கட்டமைவும் குறைவானது. எனவே விவசாயத் துறையில் ஒரே மாதிரியான மூலதனம் செலவிடப்பட்டாலும் சராசரியாக தொழிற்துறையில் பயன்படுத்தப்படுவதை விட ஒப்பீட்டளவில் அதிகமான கூலியுழைப்பு இங்கு பயன்படுத்தப்படுகிறது, ஆகையால் உபரி மதிப்பும் அதிகம் தோற்றுவிக்கப்படுகிறது. தொழிற்துறை முதலாளிகளுக்கும் விவசாயத்துறை முதலாளிகளுக்கும் இடையில் உபரி மதிப்பை மறுபங்கீடு செய்ய நிலத்தின் மீதான தனி யுடைமை இடையூறு விளைவிக்கிறது. உபரி மதிப்பின் இப் பகுதியைத்தான் — இது **தனிமநிலை நில வாடகை** எனும் வடிவத்தை மேற்கொள்கிறது — பெரும் நிலவுடைமை யாளன் சுவீகரிக்கிறான்.

வேறுபாட்டு நில வாடகைக்கு மாறாக, தனிமநிலை நில வாடகை நிலத்தின் மீதான தனிச்சொத்துடைமை யுடன் தொடர்புடையது. இது விவசாயப் பொருட்களின் விலைகளை உயர்த்துகிறது, மக்களின் வாழ்க்கைத் தரம் இதனால் வீழ்கிறது. நில வாடகை என்பது ஒட்டுண்ணி வர்க்கமாகிய பெரும் நிலவுடைமையாளர்களுக்கு சமுதா யம் தர வேண்டிய வீண் தொகையாகும். நில வாடகை அதிகரிக்கும் போது இது நிலத்தின் விலையைக் கூட்டு கிறது, மூலதனத்தை பயன் மிகு வகையில் உபயோகப்படுத் துவதிலிருந்து பிரிக்கிறது, நகரத்திலும் கிராமத்திலும்

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்குத் தடை செய்கிறது. முதலாளித்துவம் வளர வளர நில வாடகை உழைப் பாளிகளின் தோள்களை மேன்மேலும் அழுத்துகிறது.

நெருக்கடிப் பொருளாதாரம்

முதலாளித்துவ சமுதாயத்தில் செயல்படும் மூலதனம் முழுவதும் ஒட்டுமொத்தமாக ஒன்றுசேர்ந்து, பின்னிப் பிணைந்து சமூக மூலதனத்தை உருவாக்குகின்றது. சமூக மூலதனத்தின் விரிவுபடுத்தப்பட்ட புனருற்பத்தி நடை பெற, தம் தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பட்ட பண்டங்களை (உற்பத்திச் சாதனங்களும் நுகர்வுப் பொருட்களும்) விற்பனை செய்யும் வாய்ப்பு எல்லா முதலாளிகளுக்கும் இருக்க வேண்டும். நுகரப்பட்டவற்றை ஈடு செய்ய அவசியமான உற்பத்திச் சாதனங்களை இவர் கள் சந்தையில் தேடியாக வேண்டும். தொழிலாளிகள் தம் உழைப்புச் சக்தியை புனரமைக்க வல்ல நுகர்வுப் பொருட்களை வாங்க வேண்டும்; முதலாளிகளோ நுகர்வுப் பொருட்களையும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்குகின்றனர். முதலாளிகள் தம் பண்டங்களை விற்கும் போது தம் உற்பத்திச் செலவுகளை ஈடு கட்டி, லாபத் தையும் பெற வேண்டும்.

சமூக மூலதனத்தின் புனருற்பத்தியின் போது, சமூக உற்பத்திப் பொருளை பொருள் வடிவிலும் மதிப்பின் படியும் விற்கும் பிரச்சினை முன்னுக்கு வருகிறது. சுருங்கக் கூறின், சமூக உற்பத்திப் பொருளின் ஒவ்வொரு பகுதிக் கும் இதன் பொருள் வடிவில் (உற்பத்திச் சாதனங் களும் நுகர்வுப் பொருட்களும்) மற்றும் மதிப்பின்படி (மாறாத மூலதனம்—c, மாறும் மூலதனம்—v, உபரி மதிப்பு—m) இதற்கு மாற்றான உற்பத்திப் பொருளின்

மறு பகுதியைச் சந்தையில் எப்படி கண்டுபிடிப்பது என் பதில்தான் இப்பிரச்சினை அடங்கியுள்ளது. சமூக உற்பத்திப் பொருளின் புனருற்பத்தி தங்கு தடையின்றி நடக்க, கா. மார்க்ஸ் தன் மூலதனம் நூலின் இரண்டாவது தொகுதியில் காட்டியபடி குறிப்பிட்ட சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்பட வேண்டும். இவற்றின்படி உற்பத்திச் சாதனங்களின் உற்பத்திக்கும் நுகர்வுப் பொருட்களின் உற்பத்திக்கும் (இவைதான் முறையே சமூக உற்பத்தியின் I மற்றும் II பகுதிகளாகும்) இடையிலும், மாறாத மூலதனம், மாறும் மூலதனம் மற்றும் உபரி மதிப்பிற்கு இடையிலும் குறிப்பிட்ட விகிதாச்சாரங்கள் நிலைநாட்டப் பட வேண்டும்.

ஆனால் முதலாளித்துவ யதார்த்தத்தின் நடைமுறை யில் இந்த நிபந்தனைகளும் விகிதாச்சாரங்களும் பின் பற்றப்படுவதில்லை, இவை இடையறாது குலைக்கப்படு கின்றன. முன்பின் தெரியாத சந்தைக்காக வேலை செய்யும் தனிப்பட்ட உற்பத்தியாளர்கள் பிரிந்து நிற்கையில் இது வேறு விதமாயும் இருக்க முடியாது. ஏனெனில் ஒவ் வொரு முதலாளியும் மற்றவனைப் பொறுத்த மட்டில் சுதந்திரமானவன், தன் சுயநல நோக்கங்களின்படி செயல் படுகிறான். ஆனால் அதே நேரத்தில் எல்லா முதலாளி களும் சமூக உழைப்புப் பிரிவினையால் ஒருவருடன் ஒருவர் தொடர்பு கொண்டவர்களாயுள்ளனர், ஒருவரை யொருவர் சார்ந்திருக்கின்றனர். சமூக உற்பத்திப் பொருள் விற்கப்படும் போது இந்த முரண்பாடு வெளிப் படுகிறது, சமூக உற்பத்திப் பொருளின் புனருற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு முழுவதன் மீதும் பெரும் தாக்கம் செலுத்துகிறது.

லாப வேட்டையால் உந்தித் தள்ளப்படும் முதலாளித் துவ உற்பத்தியின் தன்னிச்சையான வளர்ச்சிப் போக்கு

மேற்கூறிய விற்பனையை இடையறாது குலைக்கிறது, மிகை உற்பத்தியின் முறையான பொருளாதார நெருக்கடி களுக்கும் அதிர்ச்சிகளுக்கும் தவிர்க்க இயலாதவாறு இட்டுச் செல்கிறது, எல்லா முரண்பாடுகளையும் கூர்மை யாக்குகிறது. நெருக்கடிகள் பெருவீத முதலாளித்துவத் தொழிற்துறையோடு சேர்ந்தே பிறந்தன. முதல் பொரு ளாதார நெருக்கடி 1825இல் பிரிட்டனில் ஏற்பட்டது. இது அப்போது உலகின் தொழிற்துறை மையமாக இருந்தது. முதல் உலக நெருக்கடி 1847 — 1848இல், முதலாளித்துவம் பல நாடுகளில் உருவாகி, உலக முதலாளித்துவ சந்தை தோன்றியதும் ஏற்பட்டது. ஏகபோக முதலாளித்துவத்திற்கு முந்தைய வரலாற்றுக் கட்டத்தில் மிகக் கடுமையான நெருக்கடி 1873இல் ஏற்பட்டது; இது உற்பத்திக் குவிப்பு நடைபெற்று ஏகபோகங்கள் தோன்ற பெரிதும் உதவியது. 1900 — 1903இல் ஏற்பட்ட நெருக்கடிதான் ஏகாதிபத்திய காலகட் டத்தின் முதல் நெருக்கடியாகும். ''மாபெரும் பொரு ளாதார மந்தம்'' எனும் பெயரைப் பெற்ற மிகக் கடுமை யான நெருக்கடி 1929 — 1932இல் முதலாளித்துவ உலகம் முழுவதையும் உலுக்கியது. கடந்த பத்தாண்டுகளில் உற் பத்தியின் சுழல் ரீதியான வீழ்ச்சிகள் கணிசமாக அதிகரித் துள்ளன. தம் சக்தியிலும் காலத்திலும் 1973 — 1975இலும் 1980 — 1982இலும் காணப்பட்ட நெருக்கடிகள், இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பிந்தைய காலகட் டத்தில் மிக கடுமையானவையாகும். நெருக்கடிகள் எல்லாவற்றையும் கடந்து விட்டதாயும், உற்பத்தி வளர்ச்சி வேகங்கள் மட்டுமே அவ்வப்போது வீழ்ச்சியடை வதாயும் சமீபத்தில் கூட பல பூர்ஷ்வா பொருளாதார நிபுணர்கள் கூறிய போதிலும் மேற்கூறிய இரு நெருக் கடிகளும் உற்பத்தியின் அளவு பூரணமாகக் குறைவதற்கு

இட்டுச் சென்றன.

பி. எங்கெல்ஸ் அடையாளச் சிறப்போடு கூறியபடி பொருளாதார நெருக்கடிகளின் போது தொழிற்துறை மற்றும் வர்த்தக உலகம் முழுவதும் தடம் புரளுகிறது. நெருங்கி வரும் நெருக்கடிப் புயலின் முதல் அறிகுறிகள் சாதாரணமாக சுற்றோட்டத் துறையில், பணச் சுற்றோட்டமும் கடன் முறையும் குலைவதன் மூலம் வெளிப்படுகின்றன. கம்பெனிகள், வங்கிகள் (பெரியவை கூட) திவாலடைவது அதிகரிக்கிறது. தொழிலதிபர்கள், வியாபாரிகள், வங்கியதிபர்கள், பங்கு மார்கெட்காரர்கள் ஆகியோரை பீதி ஆட்கொள்கிறது. எல்லோருக்கும் பண வடிவிலான மூலதனம் பெரிதும் தேவைப்படுகிறது. கடன் தந்தவர்கள் கடனைத் திருப்பிக் கேட்கின்றனர், வங்கிகளில் பணம் போட்டவர்கள் தம் சேமிப்புகளைத் திரும்பியளிக்கக் கோரி வங்கிகள் மீது பாய்கின்றனர். விற்கப்படாத பொருட்கள் சந்தைகளில் நிரம்பி வழிகின்றன. பல தொழில் நிறுவனங்கள், குறிப்பாக சிறியவை திவாலடைகின்றன. வேலையில்லாதோர் எண்ணிக்கை அதிகரிக்கிறது, ஊதியம் குறைகிறது. விலைகள் வீழ்ச்சியடைந்தாலும் வாங்கும் திறன் அதிகரிக்கவில்லை, பண்டங்களின் அளவோ குறையவில்லை. அமெரிக்க ஐக்கிய நாட்டிலும் மற்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் கட்டுப்பாடற்ற பணவீக்கத்தின் காரணமாய் விலைகள் அதிகரிக்கையில், பொருளாதாரம் இராணுவமயப்படுத்தப்படும் சூழ்நிலையில், பட்ஜெட் பற்றாக் குறை அதிகரிக்கும் போது மிகையான பண்டங்களை விற்றுத் தீர்ப்பது குறிப்பாகக் கடினமானது.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்காக முதலாளிகள் ''மிகையான'' பண்டங்களிலிருந்து விடுபடவும் விலைகளை உயர்த்தவும் முயலுகின்றனர். இவர்கள் உற்பத்தி

யைக் குறைப்பதோடன்றி ஏராளமான பண்டங்களை அழிக்கவும் செய்கின்றனர். கோதுமையையும் மக்கா சோளத்தையும் அடுப்பிலிட்டு எரிக்கின்றனர், கால்நடைகளையும் கோழிகளையும் கொன்று குவிக்கின்றனர், காப்பியையும் கோக்கோவையும் கடலில் எறிகின்றனர், பழங்கள், மற்ற நுகர்வுப் பண்டங்களை அழிக்கின்றனர். ''மிக அதிகமான'' பண்டங்கள் உண்மையிலேயே உற்பத்தி செய்யப்படுகின்றனவா என்ற கேள்வி எழுகிறது.

கிடையவே கிடையாது! மிக அத்தியாவசியமான நுகர்வுப் பண்டங்கள் உழைப்பாளிகளுக்கு ஏராளமாகத் தேவைப்படுகின்றன. அதுவும் குறிப்பாக கோடிக்கணக்கான மக்கள் உணவின்றி, வீடின்றி வாடித் தவிக்கும் வளர்ச்சி குன்றிய நாடுகளில் இத்தேவை மிகவும் பெரிது. பண்டங்களின் மிகை உற்பத்திக்குத் தெட்டத் தெளிவான ஒப்பீட்டுத் தன்மை உள்ளது. மக்களின் உண்மையான தேவைகளோடு ஒப்பிடும் போதல்ல, இவர்களின் வாங்கும் திறனோடு ஒப்பிடுகையில்தான் பண்டங்கள் ''மிக அதிகமாக'' உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. எனவே மிகையான அளவு என்பது மக்கள் திரளினரின் இல்லாமை, வறுமைக்கான மூல ஊற்றாகிறது. இவைதான் முதலாளித்துவ யதார்த்தத்தின் விந்தைகள்!

முதலாளித்துவம் உற்பத்திச் சக்திகளைப் பெரிதும் வளர்த்து, உழைப்பின் உற்பத்தித் திறனைக் கூட்டியுள்ளது. முதலாளித்துவம் வளர வளர பெருவீத இயந்திர உற்பத்தியின் சமூகத் தன்மை வலுப்படுகிறது, தொழில் நிறுவனங்களின் அளவுகள் பிரம்மாண்டமான மட்டங்களை எட்டுகின்றன, இவற்றின் இடையேயான சமூக உழைப்புப் பிரிவினை ஆழமடைகிறது. இதன் விளைவாய் லட்சக்கணக்கானோர், கோடிக்கணக்கானோர் உற்பத்தி எனும் பொது நிகழ்ச்சிப் போக்கில் ஒருவருடன் ஒருவர்

நெருக்கமான தொடர்பு கொண்டவர்களாகின்றனர். ஆனால் இந்த சமூக உற்பத்தியின் விளைபொருள் சமுதாயம், அதன் உறுப்பினர்களின் கரங்களுக்கு வராமல் தனியுடைமையாளர்களாகிய முதலாளிகளின் கரங்களுக்குச் செல்கிறது.

உற்பத்தியின் சமூகத் தன்மைக்கும் உழைப்பின் விளை பொருட்களைத் தனி முதலாளித்துவ வடிவில் சுவீகரிப் பதற்கும் இடையிலான இம்முரண்பாடுதான் **முதலாளித் துவத்தின் முக்கிய முரண்பாடாகும்.** இதுதான் **மிகை உற்பத்திப் பொருளாதார நெருக்கடிகளுக்கான** ஆழ் காரணமாகும். இது மக்கள் திரளினரின் நுகர்வு குறை வதற்கு இட்டுச் செல்கிறது.

முதலாளித்துவப் பொருளாதாரத்திற்குப் பேரிழப்பு களை ஏற்படுத்தும் பொருளாதார நெருக்கடிகள் உழைக் கும் மக்களுக்கு வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை, இல்லாமை முதலியவற்றைக் கொண்டு வருகின்றன. முதலாளித்துவத்தின் ஆழ் முரண்பாடுகளைத் தெட்டத் தெளிவாக வெளிப்படுத்தும் நெருக்கடிகள் முதலாளித் துவத்தின் அராஜகத் தன்மைக்கு, கொள்ளையடிக் கும் இயல்பிற்கு நன்கு சான்று பகர்கின்றன; முதலாளித் துவத்தில் லட்சோப லட்சம் மக்களின் உழைப்பின் பயன்கள் வீணாகின்றன, மானுட உழைப்புச் சக்தி விரயமாகிறது. முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் எனும் வரம்புகள் உற்பத்திச் சக்திகளுக்குப் போதவில்லை, இவை இச்சக்திகளின் வளர்ச்சி வடிவங்களிலிருந்து விலங்காக மாறி விட்டன என்பதை இந்நெருக்கடிகள் காட்டுகின்றன.

மிகை உற்பத்திப் பொருளாதார நெருக்கடிகள் தொழிற்துறையை மட்டுமின்றி விவசாயத் துறையையும் ஆட்கொள்கின்றன. இவை **விவசாயத்துறை நெருக்கடிகள்**

எனப்படுகின்றன. இவை எல்லாவற்றிற்கும் மேலாக ஒப்பீட்டளவில் மிகையாக விவசாயப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதிலும், இவற்றின் விலைகள் வீழ்ச்சியடைவதிலும், உற்பத்தி அளவுகள் குறைவதிலும் வெளிப்படுகின்றன. இதனால் போட்டி வலுக்கிறது. நவீன இயந்திரங்கள், தொழில்நுட்ப முறையைப் பயன்படுத்தும் பெரிய பண்ணைகள் தப்பிப் பிழைக்கின்றன. அதே நேரத்தில் சிறு மற்றும் நடுத்தரப் பண்ணைகளின் கடன் அதிகரிக்கிறது, விவசாயிகளின் சிறு பண்ணைகள் பெரு மளவில் திவாலடைகின்றன. விவசாய அமித ஜனத் தொகைப் பெருக்கின் மூடிய தன்மை இதில் வெளிப்படு கிறது. இத்தகைய ஜனத்தொகைப் பெருக்கம் குறிப்பாக வளர்முக நாடுகளில் பெரிதும் அதிகரிக்கிறது.

விவசாயத்துறை நெருக்கடிகளின் குறிப்பிடத் தக்க அம்சம் இவற்றின் காலமும் இழுபறியான தன்மையும் ஆகும். உதாரணமாக, முதல் விவசாயத்துறை நெருக் கடி 19ஆம் நூற்றாண்டின் 70ஆம் ஆண்டுகளின் முதல் பாதியில் துவங்கி 90ஆம் ஆண்டுகளின் பிற்பாதி வரை நீடித்தது; அடுத்த நெருக்கடி 1920இல் துவங்கி இரண் டாவது உலக யுத்தம் வரை நீடித்தது. இந்த யுத்தத் திற்குப் பின் (1948இல்) துவங்கிய புதிய விவசாயத் துறை நெருக்கடி 70ஆம் ஆண்டுகளின் துவக்கம் வரை நீடித்தது, தொழிற்துறை, நிதித் துறை போன்றவற்றில் நிலவிய நெருக்கடிகளுடன் பின்னிப் பிணைந்திருந்தது.

நிலத்தின் மீதான தனிச் சொத்துடைமையில் ஏகபோ கம், நில வாடகையின் அதிகரிப்பு (இதனால் விவசாயப் பொருட்களின் விலை கூடுகிறது, இவற்றை விற்பது கடினமாகிறது) ஆகியவைதான் விவசாயத்துறை நெருக் கடிகளுக்கான முக்கியக் காரணங்களாகும். உயர்வான நில வாடகையும் நிலத்தின் விலை கூடுவதும் விவசாயத்

துறையில் பெரும் மூலதனங்களைப் பயன் மிகு வகையில் உபயோகப்படுத்த இயலாமல் செய்கின்றன. இது அடிப் படை மூலதனத்தைப் புதுப்பிக்கவும் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தவும் விவசாயப் பொருட்களின் மதிப் பைக் குறைக்கவும் (இப்படிச் செய்தால் இவற்றை விரைவாக விற்க முடியும்) இடையூறாக உள்ளது. இவற் றின் காரணமாய், நெருக்கடிகளின் போது விலைகள் வீழ்ச்சியடையும் சூழ்நிலைகளில் கூட விற்கப்படாத விவசாயப் பொருட்களின் அளவு தொழிற்துறையில் இருந்ததை விட பெரிதும் மெதுவாகத்தான் குறைகிறது, பல நேரங்களில் அதிகரிக்கிறது. விவசாயப் பொருட் களின் மிகை உற்பத்தி ஒப்பீட்டுத் தன்மையானதே தவிர பூரணமானதல்ல என்பது தெளிவு. ஏராளமான மக்கள், குறிப்பாக வளர்முக நாடுகளில், பட்டினியால் வாடுகின்றனர், போதுமான உணவின்றி தவிக்கின்றனர்.

ஏகபோகங்களின் ஆதிக்கம்

நவீன முதலாளித்துவத்தில் ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. உதாரணமாக, ஏதாவதொரு வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாட்டை எடுத்துக் கொள் வோம். இந்நாட்டில் பெரும் ஏகபோகங்களும் நிதிக் குழுக்களும் ஆட்சி புரிகின்றன. ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துவதை நோக்கிய மாற்றம் எப்போது, எப்படி நடந்தது?

இம்மாற்றம், **உற்பத்திக் குவிப்பின்** அடிப்படையில் நடைபெற்றது. இது உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சி யோடு தொடர்புடையது. 19ஆம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் உலோகத் துறை, இயந்திரக் கட்டுமானம், இரசாயனத் துறை, மின்சார தொழில்நுட்பம், கப்பல்

கட்டுமானம், இன்னும் பல தொழிற்துறைகள் ஆகியவற்றில் சில பெரும் விஞ்ஞான கண்டுபிடிப்புகள் நடைபெற்றன, தொழில்நுட்பச் சாதனைகள் நடைபெற்றன. உயர் உற்பத்தித் திறனுள்ள இயந்திரங்கள் பரவலாகப் பயன்படுத்தப்படலாயின, உற்பத்தியின் தொழில்நுட்ப முறையிலும் ஒழுங்கமைப்பிலும் பெரும் மாற்றங்கள் நடைபெற்றன. தொழிற்துறையில் புதிய பிரிவுகள் தோன்றின. இந்த முற்போக்கான மாற்றங்கள் எல்லாம் முதலில் பெரும் தொழில் நிறுவனங்களில் புகுத்தப்பட்டன, இவற்றால் இம்மாற்றங்களைப் பயன் மிகு வகையில் உபயோகப்படுத்தி பண்டங்களின் மதிப்பைக் குறைத்து, போட்டியில் வெற்றியடைய முடிந்தது. உற்பத்தியானது ஒரு சில பெரும் தொழில் நிறுவனங்களில் மேன்மேலும் குவிய ஆரம்பித்தது, இவை இதை ஏகபோகமயப்படுத்தின. சுதந்திரமான போட்டிக்குப் பதில் ஏகபோகங்களின் ஆதிக்கம் வந்தது.

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஏகபோக முதலாளித்துவமாகிய **ஏகாதிபத்தியத்திற்கு** மாறியதானது முதலாளித்துவத்தின் முக்கியப் பண்புகள் (உற்பத்தி மற்றும் மூலதனம் குவிக்கப்பட்டு, மையப்படுத்தப்பட்டது) தொடர்ந்து வளர்ந்ததன் நியதியான விளைவாகும். முதலாளித்துவம், இதன் உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகியவற்றின் வளர்ச்சி இம்மாற்றத்தைத் தயார்படுத்தியது. வி. இ. லெனின், **ஏகாதிபத்தியம் — முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம்** எனும் நூலிலும் (இது கா. மார்க்சின் **மூலதனம்** நூலின் நேரடித் தொடர்ச்சியைப் போல் விளங்கியது எனலாம்) இன்னும் சிலவற்றிலும் ஏகாதிபத்தியத்தின் சாரம் மற்றும் அறிகுறிகள் பற்றிய ஆழமான, பன்முக ரீதியான பகுப்பாய்வைத் தந்தார்.

ஏகபோகங்கள் என்றால் என்ன? **ஏகபோகங்கள்** என்பவை உற்பத்தி மற்றும் விற்பனையின் கணிசமான பங்கைத் தம் கரங்களில் ஒன்றுகுவித்துள்ள பெரும் தொழில் நிறுவனங்கள், கம்பெனிகள், இணையங்கள் ஆகும். இதனால் ஒரு துறையிலோ, பல துறைகளிலோ அவை ஆதிக்க நிலை வகிக்க முடியும், ஏகபோக உயர் லாபங்களைப் பெற முடியும்.

பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் ஏக போகங்கள் நிலவுகின்றன. இவற்றின் வடிவங்கள் பல் வேறானவை: இவை கார்டெல்களாக, சிண்டிகேட்டுகளாக, டிரெஸ்டுகளாக, பெரும் கம்பெனிகளாக இருக்கலாம். சமீப பத்தாண்டுகளாக பிரம்மாண்டமான பல்துறை ஏகபோக கூட்டமைப்புகள் (கான்கிளோமிரேட்டுகள்) மேன்மேலும் வளர்ந்து வருகின்றன. இந்த சூப்பர் ஏகபோகங்கள் ஒரு நிதிக் குழுவின் கட்டுப்பாட்டின் கீழ் மிகப் பல்வேறான துறைகளையும் பிரிவுகளையும் (எஃகு, ஆயுத உற்பத்தி முதல், விளையாட்டு சாமான்கள் தயாரிப்பு வரை) ஒன்றிணைத்துள்ளன. இதன் பயனாய் இவை நெருக்கடி காலகட்டங்களில் மூலதனத்தைத் திறமையாகக் கையாளுகின்றன, விஞ்ஞான-தொழில் நுட்பச் சாதனைகளை விரைவாகப் பயன்படுத்தி, பண்டத் தின் தேவை பெரிதும் மாறி வரும் சூழ்நிலையில் தம் போட்டித் திறனை மேம்படுத்துகின்றன.

அமெரிக்க ஐக்கிய நாடு, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரிட்டன், மற்ற வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடு களில் சூப்பர் ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துகின்றன. நாட்டு உற்பத்தியில் கணிசமான பகுதி இவற்றின் கரங் களில் உள்ளது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் உலகில் 1 பில்லியன் டாலர்கள் மூலதனம் உள்ள பிரம் மாண்டமான ஏகபோகம் ஒன்று மட்டுமே இருந்தது

என்றால், 50ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் இந்த எண்ணிக்கை 4ஆகவும் 1979இல் 629ஆகவும் உயர்ந்தது. 1978இல் இந்த பிரம்மாண்டமான கார்ப்பரேஷன்களின் வசம் மொத்த மூலதனத்தில் 50 % இருந்தது, எல்லா கார்ப்பரேஷன்களின் லாபத்தில் 59%ஐ இவை விழுங்கின.

சுதந்திரமான போட்டிக்கு நேர் எதிரானதாகத் தன்னைக் காட்டிக் கொள்ளும் ஏகபோகம் இப்போட்டியை மறுக்கவில்லை, போட்டியின் வடிவங்களையும் முறைகளையும் மட்டுமே இது மாற்றிக் கொள்கிறது. ஒரே துறையைச் சேர்ந்த ஏகபோகங்களுக்கு இடையிலும் பல்வேறு துறைகளின் ஏகபோகங்களுக்கு இடையிலும் ஏகபோகங்களுக்கும் ஏகபோகங்கள் அல்லாத நிறுவனங்களுக்கும் இடையிலும் மற்றும் ஏகபோகங்களுக்கு உள்ளேயும் கடும் போட்டியும் போராட்டமும் நடக்கின்றன. ஏகபோகங்களின் ஆதிக்கம், சுதந்திரமான போட்டியை உடைய முதலாளித்துவம் அறியாத புதிய போட்டி வடிவங்களையும் முறைகளையும் தோற்றுவிக்கிறது. நேரடியான நிர்ப்பந்தம், லஞ்சம், மிரட்டல், பல்வேறு விதமான நிதி ஊழல்கள் போன்றவை பயன்படுத்தப்படுகின்றன. போட்டியாளர்களின் தொழில் நிறுவனங்களில் சதி வேலைகள் நடத்தப்படுகின்றன, இருப்புப் பாதைகளில் விபத்துகளுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது, குண்டர் கும்பல்கள் தாக்குதல்களை நடத்துகின்றன, இன்னும் இதைப் போன்ற இழிவுகரமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இது எல்லோரும் எல்லோருக்கும் எதிராக நடத்தும் அழிவுகரமான, கொடுமையான யுத்தமாகும், இதில் வலிமையானவன் பலம் குன்றியவனை நசுக்குகிறான்.

ஏகபோக விலைகள்தான் போட்டியில் கொள்ளை லாபங்களைப் பெற ஏகபோகங்களுக்கு உதவும் கருவி

யாகும். நாம் ஏற்கெனவே பார்த்தபடி, ஏகாதிபத்தியத் திற்கு முன் பண்டங்கள் உற்பத்தி விலைகளுக்கு (உற்பத்தி செலவுகள் + சராசரி லாபம்) விற்கப்பட்டன. ஏகபோகங் கள் ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலைகளில் பண்டங்களில் பெரும் பகுதி உயர்வான, ஏகபோக விலைகளுக்கு விற்கப் படுகிறது; இது ஏகபோகங்கள் ஏகபோக கொள்ளை லாபம் பெற உதவுகிறது.

ஏகபோகங்கள் பாட்டாளி வர்க்கத்தைச் சுரண்டு வதை அதிகப்படுத்துவதன் மூலம் பெரும் லாபங்களைச் சம்பாதிக்கின்றன. ஏகபோகமயப்படுத்தப்படாத தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் உபரி மதிப்பில் ஒரு பகுதியை இவை ஏகபோக விலைகளின் முறை மூலம் சுவீகரிக்கின்றன. விவசாயிகள், சிறு பண்ணை விவசாயிகள் போன்ற சிறு உற்பத்தியாளர்களின் உபரி உற்பத்திப் பொருளில் ஒரு பகுதியை ஏகபோகங்கள் பிடுங்கு கின்றன. ஏகபோகங்கள் இச்சிறு உற்பத்தியாளர்களிட மிருந்து விவசாய மூலப்பொருட்களை ஏகபோகக் குறைவு விலைகளுக்கு வாங்கி, இவர்களுக்கு தொழிற் துறைப் பண்டங்களை ஏகபோக உயர் விலைகளுக்கு விற்கின்றன. விடுதலையடைந்த மற்றும் சார்பு நிலை யிலுள்ள நாடுகளுடனான சமமற்ற பரிவர்த்தனை ஏக போகங்களின் கொள்ளை லாபங்களுக்கான முக்கிய மூல ஊற்றாகும். ஏகபோகங்கள் இந்நாடுகளுக்குத் தம் பண்டங்களை ஏகபோக உயர் விலைகளுக்கு ஏற்றுமதி செய்து, அங்கிருந்து மூலப்பொருட்களை ஏகபோகக் குறைவு விலைகளுக்கு வாங்குகின்றன. இதனால் வளர்ச்சி யடைந்த முதலாளித்துவ நாடுகளிலும் வளர்முக நாடு களிலும் நகரங்களிலும் கிராமங்களிலும் உழைப்பாளி களின் நிலை மேன்மேலும் மோசமாகிறது.

உற்பத்தி ஒன்று குவியும் நிகழ்ச்சிப் போக்கு வலு

வடைய வலுவடைய, வங்கி மூலதனம் ஒன்று குவியும் நிகழ்ச்சிப் போக்கும் நடைபெறுகிறது. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்திலேயே இந்த அடிப்படையில் வங்கி ஏகபோகங்கள் தோன்றின, கடன் வழங்கும் துறையில் இவற்றின் ஆதிக்கம் நிலைபெற்றது. வங்கி ஏகபோகங்களும் பெரும் வங்கிகளும் தோன்றியதானது இவற்றின் பாத்திரமும், வங்கிகளுக்கும் தொழிற்துறை ஏகபோகங்களுக்கும் இடையிலான உறவுகளும் மாறுவதற்கு இட்டுச் சென்றது. சாதாரண இடைத்தரகர்களாயிருந்த வங்கிகள் சமுதாயத்தின் பணத்தில் பெரும் பகுதியைத் தம் கரங்களில் வைத்துள்ள சர்வவல்லமை படைத்த ஏகபோகங்களாக மாறின. தொழிற்துறை ஏகபோகங்களுக்கு கடனளிப்பதுடன் வங்கிகள் நிற்காமல் இவற்றின் கூட்டு உடைமையாளர்களாகின்றன. தம் பங்கிற்கு தொழிற்துறை ஏகபோகங்கள் வங்கி ஏகபோகங்களின் கூட்டு உடைமையாளர்களாகின்றன. இவ்வாறாக தொழிற்துறை மற்றும் வங்கி ஏகபோகங்களின் மூலதனங்கள் பரஸ்பரம் ஊடுருவின, ஒன்று கலந்தன. **நிதி மூலதனம்** என்ற புதிய வகையான மூலதனம் தோன்றியது. இது முதலாளித்துவ சமுதாயத்தின் பொருளாதார மற்றும் அரசியல் வாழ்வில் ஆதிக்கம் செலுத்துகிறது. நிதி மூலதனம் தோன்றியதானது ஏகாதிபத்தியத்தின் குறிப்பிடத் தக்க அம்சங்களில் ஒன்றாகும். எனவே இதை நிதி மூலதன சகாப்தம் என்கின்றனர்.

நிதி மூலதனம் வளர்ச்சியடைந்ததானது நாட்டின் பொருளாதாரத்திலும் அரசியலிலும் நிதி மூலதனத்தின் ஒரு சில பிரதிநிதிகள் ஆதிக்கம் செலுத்த இட்டுச் சென்றது. **நிதி மூலதன ஏகபோகக்** குழு சமுதாயத்தில் நிதி மூலதன முதலைகளின் ஆட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. உதாரணமாக, அமெரிக்க ஐக்கிய

நாட்டில் 20 — 25 நிதிக் குழுக்களும் பிரிட்டனில் 10 — 15 நிதிக் குழுக்களும் ஜெர்மன் சமஷ்டிக் குடியரசிலும் ஜப்பானிலும் தலா 5 — 10 நிதிக் குழுக்களும் உள்ளன.

நிதி மூலதன ஏகபோகக் குழுவின் ஆதிக்கம் பல்வேறு வடிவங்களில், குறிப்பாக ''பங்கேற்பு முறையில்'' நிறை வேற்றப்படுகிறது. கூட்டுப் பங்குக் கம்பெனிதான் முத லாளித்துவ நாடுகளில் பெரிதும் பரவியுள்ள வடி வமாகும். பங்குகளையும் சீட்டுகளையும் விற்பதன் மூலம் இதன் மூலதனம் உருவாக்கப்படுகிறது. சம்பிரதாயப்படி ஒவ்வொரு பங்குதாரருக்கும் வாக்குரிமை உண்டென் றாலும், பெரும் பங்குகளை வைத்திருப்பவர்கள்தான் முழு ஆதிக்கம் செலுத்துகின்றனர். பங்குதாரர்களின் எண் ணிக்கை அதிகமாயிருக்கும் போது மொத்தப் பங்கு சீட்டுகளில் 15 — 20 %, ஏன் சில நேரங்களில் 5 — 10% வைத்திருப்பதே, அதாவது **கட்டுப்பாட்டுப் பங்கு** என்றழைக்கப் படுவதை வைத்திருப்பதே இவ்வாறு ஆதிக்கம் செலுத்தப் போதும். தலைமை கூட்டுப் பங்குக் கம்பெனி, கட்டுப் பாட்டுப் பங்கை வைத்திருப்பதால், தன் கிளைகள், துணைப் பிரிவுகளின் மூலம், பெரும் சமூக மூலதனத் தைத் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருந்து (இம்மூலதனம் தலைமை கம்பெனியின் மூலதனத்தை விடப் பன்மடங்கு விஞ்சியிருக்கும்) ஏகபோக கொள்ளை லாபங்களைப் பெறக் கூடும்.

''பங்கேற்பு முறையுடன்'' தொடர்புடைய நிதி மூலதன ஏகபோகக் குழுவின் ஆதிக்க வடிவத்தில் முக் கியமானது ''தனிப்பட்டவர் யூனியன்'' ஆகும். அதாவது ஒரே நபர்கள், நிதி மூலதனத்தின் பெரும் முதலைகள் அல்லது இவர்களுக்கு விசுவாசமான கையாட்கள் தொழிற் துறை, வங்கி மற்றும் வர்த்தக ஏகபோகங்களுக்குத் தலைமை தாங்குகின்றனர். ஏகபோக முதலைகளின்

தனிப்பட்டோர் யூனியன் தவிர அரசாங்கத்துடனான இவர்களின் ''தனிப்பட்டவர் யூனியனும்'' இருக்கிறது. நிதி மூலதன ஏகபோகக் குழு ஆதிக்கம் செலுத்தும் முறையை **அரசு-ஏகபோக முதலாளித்துவ அமைப்பிலிருந்து** பிரிக்க முடியாது. முதலாளித்துவ ஏகபோகச் சக்திகளும் பூர்ஷ்வா அரசு சக்திகளும் இணைந்ததுதான் அரசு-ஏகபோக முதலாளித்துவம் ஆகும். உற்பத்திச் சாதனங்கள் மற்றும் தேசியச் செல்வத்தில் கணிசமான பங்கை அரசு தன் கைகளில் வைத்திருக்கும். 70ஆம் ஆண்டுகளில் தொழிற்துறையிலும் போக்குவரத்திலும் இருந்த கூட்டுப் பங்கு மூலதனத்தில் அரசு சொத்தின் பங்கு பின்வருமாறு: ஜெர்மன் சமஷ்டிக் குடியரசில் — *18%*; பிரிட்டனில் — *24%*; இத்தாலியில் — *28%*; பிரான்சில் — *34%*. அமெரிக்க ஐக்கிய நாட்டில் தேசியச் செல்வத்தில் *20 %* குறையாத பங்கு அரசின் கரங்களில் உள்ளது. குறிப்பாக, ஆயுத உற்பத்தி மற்றும் உள்கட்டமைப்பு, அதாவது பொருளாதாரத் துறை முழுவதன் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பிரிவுகள் (போக்குவரத்து, எரிசக்தி, தகவல் தொடர்பு, இத்தியாதி) ஆகியவை அரசுத் துறைகளாக உள்ளன. பல நாடுகளில் விஞ்ஞான வளர்ச்சியில் அரசு கணிசமான தொகையை முதலீடு செய்கிறது.

பூர்ஷ்வா அரசு ஏகபோகங்களுக்கு விற்பனைச் சந்தைகளைத் தோற்றுவிக்க நடவடிக்கைகளை மேற்கொள்கிறது; குறிப்பாக, **இராணுவ-தொழிற்துறை இணையங்களுக்குப்** பெரும் இராணுவ ஆர்டர்களைத் தருவதன் மூலம் இதைச் செய்கிறது; ஏகபோகங்களின் வலுக்கட்டாயமான விஸ்தரிப்பு நோக்கங்களுக்கு, குறிப்பாக, நவீன காலனியாதிக்க கொள்கையைக் கடைப்பிடிக்கவும், உலகைப் பொருளாதார ரீதியாகக் கூறு போடும் கொள்கைக்கும், சோஷலிச நாடுகளுக்கு எதிரான போராட்டங்

களுக்கு ஏற்பாடு செய்யவும் இராஜதந்திர ஆதரவளிக்கிறது. இந்நோக்கங்களுடன் பூர்ஷ்வா அரசாங்கங்கள் ஏகபோகங்களுடன் சேர்ந்து பல்வேறு ஆக்கிரமிப்புக் கூட்டுகளை ஏற்படுத்துகின்றன, பிற்போக்கு ஆட்சிக் கும்பல்களுடன் உடன்படிக்கைகளைச் செய்து கொள்கின்றன. நிதி மூலதன நலன்களுக்காக அரசு, தன் பட்ஜெட்டின் மூலம் தேசிய வருமானப் பங்கீட்டையும் மறுபங்கீட்டையும் ஒழுங்கமைத்து பொருளாதாரத்தை நிர்வகிக்கிறது, ஏகபோகங்களுக்கு அனுகூலமான விலை மற்றும் ஊதியக் கொள்கையைக் கடைப்பிடிக்கிறது.

கடந்த பத்தாண்டுகளில் அமெரிக்க ஐக்கிய நாடு, பிரிட்டன், ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, ஜப்பான் ஆகிய நாடுகளில் ஏகபோக முதலாளி வர்க்கத்தின் இராணுவ வெறி கொண்ட வலதுசாரிச் சக்திகளும், இழந்ததை மீட்கத் துடிக்கும் பழைய சக்திகளும் ஆட்சிக்கு வந்துள்ளன. இராணுவ-தொழிற்துறை இணையம் மற்றும் பன்னாட்டு ஏகபோகங்களின் அதிகரித்துள்ள வலிமையானது நேட்டோ மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் இராணுவ வெறி, பிற்போக்குக் கொள்கைக்கான பொருளாதார அடிப்படையாகியுள்ளது. இராணுவ-தொழிற்துறை இணையத்தை சர்வதேசியமயப்படுத்தியதானது, பல்வேறு நாடுகளையும் சேர்ந்த இராணுவ கம்பெனிகளின் மூலதனங்கள் பரஸ்பரம் உட்புகவும், அதி நவீன ஆயுதங்களை உருவாக்கி, உற்பத்தி செய்வதில் ஒத்துழைக்கவும், ஆயுத வியாபாரிகளிடையே விற்பனைச் சந்தைகளைப் பகிர்ந்து கொள்ளவும் வழிகோலியது.

மனிதகுலத்தின் முன்னேற்றப் பாதையில் முக்கியத் தடையாக விளங்கும் அரசு-ஏகபோக முதலாளித்துவத்தின் வளர்ச்சி, இதன் மக்கள் விரோத தன்மையையும் உழைக்கும் மக்கள் திரளினரின் ஜீவாதாரத் தேவைகள், நலன்

களுடன் இது பொருந்தி வராததையும் தெட்டத் தெளிவாகக் காட்டியுள்ளது. இராணுவச் செலவீனங் களின் பிரம்மாண்டமான அதிகரிப்பு, ஆக்க பூர்வமான வேலைகளிலிருந்து சாதனங்களைத் திசை திருப்புகிறது, விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளைப் பயன்படுத்த தடையாக இருக்கிறது, பொருளாதார வளர்ச்சி வேகங்களைக் குறைக்கிறது, பெரும் வேலை யில்லாத் திண்டாட்டத்திற்கும் உழைப்பாளிகளின் உண்மை வருமானங்கள் குறையவும் இட்டுச் செல்கிறது. சமூக நலன்களுக்கான செலவுகள் பெரிதும் குறைவதால் பரவ லான மக்கள் திரளினரின் வறுமையும் பட்டினியும் அதி கரிக்கின்றன. இச்சூழ்நிலையில் ஏகபோகங்களின் சித்தத் தை பிரதிபலிக்கும் பூர்ஷ்வா அரசு, தொழிலாளர் மற்றும் யுத்த எதிர்ப்பு இயக்கத்தையும் வெகுஜன அதிருப்தியையும் நேரடியாக ஒடுக்க கடுமையான நட வடிக்கைகளை மேற்கொள்கிறது. தம்பட்டம் அடிக்கப் பட்ட பூர்ஷ்வா ஜனநாயகத்தின் எல்லா வரையளவுகளும் காற்றில் பறக்க விடப்படுகின்றன, அறிவுஜீவிகள் அடக்கி யாளப்படுகின்றனர், வன்முறை புகழப்படுகிறது, நிற வெறி அதிகரிக்கிறது, இராணுவவெறி மற்றும் தேசிய வெறி தூண்டி விடப்படுகின்றன.

ஏகபோகங்களின் வலுக்கட்டாய அன்னிய விஸ்தரிப்பு

மூலதன ஏற்றுமதி ஏகபோகங்களின் கொள்ளை லாபங் களை அதிகரிப்பதற்கான முக்கிய சாதனமாகும். ஏக போகத்திற்கு முந்தைய முதலாளித்துவக் காலகட்டத்தில் பண்டங்கள் ஏற்றுமதி செய்யப்பட்டன என்றால், ஏகாதி பத்திய சகாப்தத்தில் மூலதன ஏற்றுமதி அதிகரித்துள்

ளது. ஏகபோக முதலாளித்துவத்தில் பெருமளவு மூலதனம் திரண்டதால் அது ''மிகையானது''. அதாவது முழுமுதல் பொருளில் இது மிகையாக இருக்கவில்லை, ஏகபோகங் களுக்கு லாபகரமாக இதைப் பயன்படுத்துவதில் உள்ள மட்டான வாய்ப்புகளின் நோக்கில்தான் இது மிகை யானது. விவசாயத்துறை வளர்ச்சிக்கும் மக்கள் திரளினரின் வாழ்க்கை நிலையை உயர்த்தவும் மூலதனத்தைப் பயன் படுத்தினால் மிகை மூலதனம் எதுவும் இருக்காது. ஆனால் இப்படி நடந்தால் முதலாளித்துவம் முதலாளித் துவமாக இருக்காது.

தொழிலில் ஈடுபடும் மூலதனம் மற்றும் கடன் மூல தனம் எனும் இரண்டு வடிவங்களில் மூலதன ஏற்றுமதி நிறைவேற்றப்படுகிறது. முதல் வடிவத்தில் மூலதன ஏற்று மதி, தொழில் நிறுவனங்களை ஆரம்பிப்பதுடன் தொடர் புடையது. ஏற்றுமதி செய்பவன் தொழில் ஈடுபாட்டு லாபத்தைப் பெறுகிறான். குறிப்பிட்ட நாட்டின் தொழி லாளர்களால் தோற்றுவிக்கப்பட்ட உபரி மதிப்புதான் இந்த லாபத்தின் மூல ஊற்றாகும். கடன் மூலதனம் கடன் வடிவத்தில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இது வட்டியைத் தரும்.

ஊதியம் குறைவாயுள்ள, மூலப்பொருள் மலிவாயுள்ள, எனவே லாப விகிதம் அதிகமாயுள்ள பின்தங்கிய நாடு களுக்கு முதலில் மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுகிறது. இவ்வாறு மூலதனத்தை ஏற்றுமதி செய்வது ஏதோ ஏழை மற்றும் பின்தங்கிய நாடுகளுக்குச் செய்யப்படும் நல்ல காரியமென பூர்ஷ்வா விஞ்ஞானிகள் கூறுகின்ற னர். இதன் பயனாய் ஏழை நாடுகள் தொழிற்துறை வளர்ச்சியில் பணத்தை முதலீடு செய்யலாம், இருப்புப் பாதைகளை அமைக்கலாம், நகரங்களை நிர்மாணிக்கலாம் என்று இவர்கள் கருதுகின்றனர். ஆனால் உண்மையில்

மூலதனத்தை இறக்குமதி செய்யும் நாடுகள் ஏகாதிபத்திய அரசுகளின் சார்பு வலைக்குள் விழுகின்றன, இவற்றின் விவசாய-மூலப்பொருள் சப்ளை நாடுகளாக மாறுகின்றன. மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் ஏகபோகங்கள் மூலப்பொருள் கிடைக்கும் இடங்களைக் கைப்பற்றுகின்றன, விற்பனைச் சந்தைகளைப் பிடிக்கின்றன, மூலதனத்தை வாங்கும் நாடுகளின் மீது தளைபூட்டும் ஒப்பந்தங்களைத் திணிக்கின்றன; குறிப்பாக, இந்நாடுகளில் தம் இராணுவத் தளங்களை நிறுவுவதற்காக இராணுவ தொழில்நுட்பத்தை விற்கும் விஷயத்தில் இப்படி நடந்து கொள்கின்றன.

மூலதன ஏற்றுமதி விரிவடைவதால் ஒரு சில பணக்கார நாடுகள் கடன் கொடுத்து வட்டி வாங்கும் நாடுகளாக மாறுகின்றன. இந்நாடுகளில் மூலதனம் ஏற்றுமதி செய்யப்படுவதன் தொடர்பாய் உற்பத்தியில் சிறிதளவு தேக்கம் ஏற்படுகிறது, ஒட்டுண்ணித்தனம் மற்றும் சிதைவு அம்சங்கள் காணப்படுகின்றன. மூலதன ஏற்றுமதியில் அயல்நாட்டு தொழில் நிறுவனங்களிடமிருந்து கொள்ளை லாப வடிவிலோ வட்டி வடிவிலோ கிடைக்கும் வருமானங்கள், ஏகாதிபத்திய நாடுகளின் ஏகபோகங்கள் செல்வம் சேர்ப்பதற்கான முக்கிய மூல ஊற்றாகும்.

இன்றைய சூழ்நிலையில் மூலதன ஏற்றுமதி ஒரு சில தனியம்சங்களைப் பெற்றுள்ளது. தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு, குறிப்பாக ஐரோப்பிய நாடுகளுக்கு மூலதன ஏற்றுமதி அதிகரித்துள்ளது. அரசு மூலதன ஏற்றுமதியின் அளவுகளும் பங்கும் கூடியுள்ளது இன்னொரு முக்கிய அம்சமாகும். மூலதனத்தை ஏற்றுமதி செய்யும் ஏகாதிபத்திய அரசுகள், தமக்கு ஏற்ற ஆட்சிகளைப் பலப்படுத்துவது, சோஷலிச நாடுகள், தேசிய விடுதலை இயக்கங்களுக்கு எதிரான இராணுவ-

ஏகபோகக் கூட்டுகளை ஏற்படுத்துவது ஆகியவற்றை தம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளன. அரசு மூலதன ஏற்றுமதி பெரும் லாபங்களைத் தருவதும், இது தனியார் மூலதனம் மற்றும் பண்டங்களின் ஏற்றுமதிக்கான வாய்ப்பு களை விரிவுபடுத்துவதும் பெரும் பங்காற்றும் காரணி களாகும்.

சர்வதேச **ஏகபோகங்களின்** தோற்றம், இவற்றின் நடவடிக்கை, **முதலாளிகளின் கூட்டுகள் உலகைத் தம் மிடையே** பொருளாதார ரீதியாகப் **பங்கு போட்டுக்கொண்டது** ஆகியவை மூலதன ஏற்றுமதியுடன் நெருக்கமாகத் தொடர் புடையவையாகும். மூலதன ஏற்றுமதி தான் — அயல் நாடுகளில் ஏகபோகங்களின் கிளைகள், துணைப் பிரிவு களை ஏற்படுத்துவது இதனுடன் தொடர்புடையது — மற்ற நாடுகளுக்குள், உலகச் சந்தைக்குள் ஏகபோகங்கள் புகுவதற்கான வழியாகும். உள்நாட்டு சந்தைகளில் ஆதிக்க நிலையை வென்ற பின் பெரும் ஏகபோகங்கள் உலக முதலாளித்துவ சந்தை மீது தம் பார்வையைத் திருப்புகின்றன. இவற்றின் உற்பத்தியளவுகள் உள்நாட்டு சந்தையின் தேவைகளைப் பெரிதும் விஞ்சுகின்றன. மிகப் பெரும் ஏகபோகங்களோ, தனிப்பட்ட பண்டங்களின் உலக உற்பத்தியையே தம் கரங்களில் குவித்து வைத் திருக்கின்றன. கொள்ளை லாபங்களைப் பெறும் நோக் கத்தோடு ஏகபோகங்கள் உலகச் சந்தையைக் கூறு போடு வது சம்பந்தமாகத் தம்மிடையே உடன்படிக்கைகளைச் செய்து கொள்கின்றன. உற்பத்தி மற்றும் மூலதனம் உலக அளவில் ஒன்று குவியும் இக்கட்டத்தை வி. இ. லெனின் அதி ஏகபோகம் என்றார். இந்த அதி ஏகபோக வளர்ச்சி யை அடுத்து உலகத்தின் பொருளாதாரப் பங்கீடு யதார்த்தமாகியது.

19ஆம் நூற்றாண்டின் 60 — 80ஆம் ஆண்டுகளில் சர்வ

தேச ஏகபோகங்கள் தோன்றின. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் இவற்றின் எண்ணிக்கை 40க்கும் குறைவாகவே இருந்தது. இன்று பன்னாட்டு ஏகபோகங்கள் பெரிதும் பரவியுள்ளன. இவை தம் மூலதனம், கட்டுப்பாட்டின் படி தேசிய ஏகபோகங்கள், தம் நடவடிக்கையில் சர்வ தேச ஏகபோகங்கள். ஐ. நா. சங்கப் புள்ளிவிவரங்களின்படி 80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் 7,300 சர்வதேச ஏகபோகங்கள் இருந்தன. இவை ஒவ்வொன்றிற்கும் 20 அல்லது அதற்கு மேற்பட்ட நாடுகளில் கிளைகள் இருந் தன. இவை உலக முதலாளித்துவ வர்த்தகத்தில் $^{3}/_{5}$ பங்கை தம் கரங்களில் வைத்திருக்கின்றன. சில பெரும் பன்னாட்டு ஏகபோகங்களின் ஆண்டுப் பணப் பரிமாற்றம், பல முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற் பத்திப் பொருளைக் கூட விஞ்சுகின்றது.

60ஆம் ஆண்டுகளின் இறுதியிலிருந்து பன்னாட்டு வங்கி கள் விரைவாக வளர்ந்து வருகின்றன; இவற்றில் பெரும் அமெரிக்க, மேற்கு ஐரோப்பிய, ஜப்பானிய, மற்ற வங்கி கள் அடங்கும். சர்வதேச தொழிற்துறை மற்றும் வங்கி ஏகபோகங்கள் ஒன்று சேரும் நிகழ்ச்சிப் போக்கு நடைபெறுகிறது, இதன் அடிப்படையில் நிதி மூலதனத்தின் பன்னாட்டு குழுமங்களும் நிதி மூலதன ஏகபோகக் குழு வும் உருவாகின்றன. உலகச் சந்தைகளை ஏகாதிபத்திய அரசுகளுக்கிடையே பிரிப்பது பற்றிய சர்வதேசிய உடன் படிக்கைகள் செய்து கொள்வதும் அதிகரித்துள்ளது. இதன் அடிப்படையில் பொதுச் சந்தை போன்ற அரசு களின் ஏகபோகக் கூட்டுகள் உருவாகியுள்ளன.

முதலாளித்துவத்தை ஆதரிப்பவர்கள், சர்வதேச ஏகபோகங்களை முதலாளித்துவத்தின் பொருளாதார முரண்பாடுகளைச் சமாதானமாக தீர்க்கும் முக்கிய சாதனம் என்று சித்தரிக்க முயலுகின்றனர். இரண்டாவது

அகிலத்தின் தலைவர்களில் ஒருவராகிய காவுத்ஸ்கியின் ''கடைக்கோடி ஏகாதிபத்திய தத்துவத்தின்''படி ஏகாதி பத்தியம் ''கடைக்கோடி ஏகாதிபத்தியமாக'' மாற வேண்டும், அப்போது ஐக்கிய ''அகில உலக டிரெஸ்டு'' ஏற்படும், உலக சந்தைகளின் பகிர்வு முடிவடையும், ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகள் மறையும்.

இப்படிப்பட்ட கூற்றுகளை வாழ்க்கையே நிராகரிக் கின்றது. ஏகாதிபத்தியத்தின் தன்மை மாற்றமின்றி அப்படியே உள்ளதை வரலாறு காட்டுகிறது. அன்பான முதலாளித்துவம் எதுவும் கிடையாது, இருக்கவும் முடி யாது. ஏனெனில் சமூக ரீதியாகப் பழி வாங்கும் தன்மை இதன் கூடப் பிறந்ததாகும்; இது உண்மை சோஷலிசம், முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம், விடுதலையடைந்த நாடுகள் ஆகியவற்றிற்கு எதிரானது. முதலாளித்துவத்தின் பொருளாதார, அரசியல் வளர்ச்சி சமமற்றது. இது மூலப்பொருட்கள் கிடைக்கும் இடங்கள், முதலீட்டு இடங்கள், விற்பனைச் சந்தைகள் ஆகியவற்றை ஏகபோகங்களின் இடையிலான மாறி வரும் சக்திகளின் சமன்நிலைக்கேற்ப அவ்வப்போது புதிய வகையில் பிரித்துக் கொள்ள இட்டுச் செல்கிறது. எனவே ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளால் மறைய முடியாது. இவ்வாறு பிரித்துக் கொள்வதானது நிதி மூலதனத்தின் பல்வேறு பன்னாட்டு குழுக்களுக்கு இடையிலான கடும் போராட்டத்தில் — இவற்றிற்கு அந்தந்த ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஆதரவு இருக்கும் — நடக்கிறது. ஏகபோகவாதிகளின் சர்வதேச உடன் படிக்கைகள் நிலையற்றவை; கடும் சச்சரவுகள், ஆயுத மோதல்களின் மூல ஊற்று இவற்றில் அடங்கியுள்ளது.

விடுதலையடைந்த நாடுகளின் பொருளாதாரத்தில்

புகும் பன்னாட்டு ஏகபோகங்கள் இவற்றின் பொருளாதாரப் பின்தங்கிய நிலையை அப்படியே இருக்கச் செய்கின்றன. இதனால் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளுடன் ஒப்பிடும் போது இந்நாடுகளின் உற்பத்திச் சக்திகள் வளர்ச்சி பின் தங்குகிறது, ஏகாதிபத்திய அரசுகளுக்கு இந்நாடுகள் தர வேண்டிய கடன் பெரிதும் அதிகரிக்கிறது. இக்கடன் தொகை 1983ல் 800 பில்லியன் டாலர்களை விஞ்சியது. பல வளர்முக நாடுகள் மேற்கத்திய நாடுகளிடமிருந்து புதிதாக வாங்கும் கடன்களில் 90 % வரை (ஏன் சில நேரங்களில் 100%), முன்னர் வாங்கிய கடன்களுக்கான வட்டியைச் செலுத்தத்தான் பயன்படுத்துகின்றன.

காலனியாதிக்க முறையின் வீழ்ச்சி

19ஆம் நூற்றாண்டின் இறுதியில் ஏகாதிபத்திய வல்லரசுகள் தம் காலனிப் பேரரசுகளைத் தோற்றுவித்தன. கிட்டத்தட்ட ஆப்பிரிக்கா முழுவதும், ஆசியாவில் கணிசமான பகுதியும் பல லத்தீன் அமெரிக்க நாடுகளும் ஏகபோக மூலதனத்தின் ஒடுக்குமுறைக்கு ஆளாயின. ஏகாதிபத்தியவாதிகள் தம் விருப்பப்படி மூலப்பொருட்கள் கிடைக்குமிடங்களையும் சுதந்திரமான நிலப் பகுதிகளையும் கைப்பற்றினர். காலனி மற்றும் சார்பு நாடுகளில் இருந்த கோடிக்கணக்கான மக்களை, நாகரிக உலகம் என்றழைக்கப்பட்டது உறிஞ்சலாயிற்று. இந்நாடுகள் பலவந்தம், கொள்ளை, முன்பின் கேட்டறியா சுரண்டல், இனப் பாகுபாடு ஆகியவற்றிற்கு ஆளாயின, இதனால் இந்நாடுகளின் மக்கள் வறுமையிலும் இல்லாமையிலும் வாடித் தவித்தனர்.

பேராசை பிடித்த ஏகபோக மூலதனம் உலகை பிரதேச ரீதியாகக் கூறு போட்டு முடிந்ததும் இதை மறுபங்கீடு செய்வதில் இறங்கியது. ஏகாதிபத்திய நாடுகள் சமமற்று வளருகின்றன. இவற்றின் இடையிலான சக்தி களின் சமன்நிலை அவ்வப்போது மாறுகிறது. எனவே ஏற்கெனவே கூறு போடப்பட்ட உலகை மறுபங்கீடு செய்வதற்கான போராட்டம் ஏகாதிபத்தியத்தின் குறிப் பிடத் தக்க அம்சமாகியது, இறுதியில் இது உலக ஆதிக்கத்திற்கான ஏகபோக வல்லரசுகளின் போராட் டமாகியது.

அதே நேரத்தில் காலனி மற்றும் சார்பு நாடுகளில் உள்ள உழைக்கும் மக்கள் அரசியல் விழிப்புணர்ச்சி பெற்றார்கள், ஏகாதிபத்தியத்திற்கு எதிரான விடுதலை போராட்டத்தில் இறங்கினார்கள். இந்நிகழ்ச்சிப் போக்கு மேன்மேலும் வலுப்பட்டு, விரிந்து பரந்தது. ருஷ்யாவில் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற பின் இவர்களின் வாழ்வில் அடிப்படை மாற்றம் ஏற்பட்டது. காலனியாதிக்க நுகத்தடியிலிருந்து விடுதலை பெறுவதற்காகப் போராடிய மக்களினங்களுக்கு இளம் சோவியத் அரசு உடனேயே சர்வாம்ச ஆதரவை அளிக்கத் துவங்கியது. ஏகாதிபத் தியத்தால் உலகில் முழு ஆதிக்கம் செலுத்த இயலவில்லை. சில நாடுகளில் சோஷலிசம் வெற்றி பெற்று, உலக சோஷலிச அமைப்பு உருவானதும் **ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை முழுவதுமாக வீழ்ச்சியடைந்தது.** பல்வேறு நாடுகளிலும் இருந்த மக்கள் ஏகாதிபத்தியவாதி களைத் தங்கள் நாடுகளிலிருந்து வெளியே தள்ளும் முகமாக ஒருவர் பின் ஒருவராக தேசிய விடுதலைப் போராட்டத்தில் குதித்தனர். இவர்கள் பெருமித உணர் வோடு தம் தேசியக் கொடிகளை ஏற்றினார்கள். **1919**இல் காலனி மற்றும் அரைக் காலனி நாடுகளின் பரப்பு

உலகின் மொத்தப் பரப்பில் 72%ஆகவும், இந்நாடுகளில் இருந்த மக்களின் எண்ணிக்கை உலக மக்கள் தொகையில் 70%ஆகவும் இருந்தது என்றால் 1983ல் இக்குறியீடுகள் முறையே 0.7%ஆகவும் 0.3%ஆகவும் இருந்தன.

ஆனால் ஏகாதிபத்தியம் இளம் தேசிய அரசுகளை தன் வட்டத்தில் வைத்திருப்பதற்காக மிகத் தந்திரமான முறைகளையும் வழிகளையும் பயன்படுத்துகிறது. இந் நோக்கத்தோடு ஏகாதிபத்திய வல்லரசுகள் வளர்முக நாடுகளின் மீதுள்ள தம் பிடிப்பைத் தக்க வைப்பதற்காகவும் அந்நாடுகளின் மக்களின் சுரண்டலை அதிகப் படுத்தவும் நவீன காலனியாதிக்கக் கொள்கையைப் பின் பற்றுகின்றன. ஏதோ ''நல்லெண்ணம் கொண்டவர் களைப்'' போல் காட்டிக் கொண்டு ஏகாதிபத்திய வல் லரசுகள் ''உதவி'' எனும் போர்வையின் கீழ் இந்நாடு களிலிருந்து ஜீவாதாரச் சக்திகளை உறிஞ்சுகின்றன. இந்த வல்லரசுகள் வளர்முக நாடுகளின் மீது கடுமையான அரசியல், பொருளாதார நிபந்தனைகளைத் திணிப் பதிலிருந்து இந்த பொய் ''உதவியின்'' உண்மை நோக் கம் நன்கு விளங்குகிறது. மூலதனத்தை ஏற்றுமதி செய் வதன் மூலம் கொள்ளை லாபம் பெறுவது, விலை மாறுபாடுகளின் உதவியோடு (அதாவது சார்பு நாடு களிலிருந்து எடுத்துச் செல்லப்படும் மூலப்பொருட்களுக் கான ஏகபோக குறைவு விலைகளுக்கும் இந்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்களின் ஏகபோக உயர்வு விலைகளுக்கும் இடையிலான மாறுபாடு) கொள்ளையடிப் பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட ''பழைய'', ஒளிவுமறைவற்ற காலனியாதிக்கக் கொள்கையை நவீன காலனியாதிக்கம் தொடருகிறது.

சமமற்ற பரிவர்த்தனையின் மூலம் வட்டி, மற்ற வடிவங்களில் ஏகாதிபத்திய வல்லரசுகளின் ஏகபோகங்கள்

பெறும் லாபம் ''உதவியை'' விட பன்மடங்கு அதிகமானது.

தமது பொருளாதார சுதந்திரத்திற்காக விடுதலையடைந்த நாடுகள் போராட்டத்தை நடத்தும் போது இந்நாடுகளில் பழைய காலனியாதிக்கப் பொருளாதாரக் கட்டமைவு உடைகிறது. ஏகாதிபத்தியம் திணித்த ஒரு துறை பொருளாதாரத்தைக் கைவிட்டு இந்நாடுகள் பல்துறை பொருளாதாரத்திற்குப் படிப்படியாக மாறுகின்றன, தயாரான பொருட்களை உற்பத்தி செய்து ஏற்றுமதி செய்வதில் கவனம் செலுத்துகின்றன. இவ்வாறு ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்ந்து விழுந்த பின் சர்வதேச முதலாளித்துவ உழைப்புப் பிரிவினையின் முந்தைய வடிவங்களும் மறைகின்றன.

இது மிகச் சிக்கலானதொரு நிகழ்ச்சிப் போக்கு; பல இடர்ப்பாடுகளைக் கடப்பதுடன் இது தொடர்புடையது. விடுதலையடைந்த நாடுகள் இன்னமும் அன்னிய ஏகபோகங்களின் ஒடுக்குமுறையை அனுபவிக்கின்றன. இந்த நாடுகள் தொழிற்துறைப் பண்டங்களை மட்டுமின்றி பல உணவுப் பொருட்களையும் — பல நேரங்களில் இவை இந்நாடுகளில் இருந்தே ஏற்றுமதி செய்யப்பட்ட மூலப்பொருட்களிலிருந்து தயாரிக்கப்பட்டவையாகும் — இறக்குமதி செய்ய வேண்டியுள்ளது. உதாரணமாக, கால்நடைகளை ஏற்றுமதி செய்யும் நாடுகள் பதப்படுத்தப்பட்ட கெட்டிப் பாலையும், கரும்பு விளைவிக்கும் நாடுகள் சர்க்கரையையும், கோக்கோ விளைவிக்கும் நாடுகள் விலையுயர்ந்த சாக்லேட்டுகளையும் வாங்க வேண்டியுள்ளது. முந்தைய காலனி நாடுகளில் உலகின் மக்கள் தொகையில் பாதிக்கும் மேற்பட்டோர் வாழ்ந்தாலும், இவை உலக தொழிற்துறை உற்பத்தியில் 7% மட்டுமே தருகின்றன. வளர்ச்சியடைந்த முதலாளித்துவ

நாடுகளில் விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி நிறை வேற்றப்படும் நேரத்தில் வளர்முக நாடுகள் தொழிற் துறைமயப்படுத்தலின் ஆரம்ப கட்டத்தில் இருக்கின்றன. நிலப்பிரபுத்துவ, குலமரபு, மற்ற பின்தங்கிய சமூக-பொருளாதாரக் கட்டமைப்புகளின் மிச்ச சொச்சங்களும் ஏகாதிபத்திய வல்லரசுகளின் கடும் எதிர்ப்பும் வளர்முக நாடு களின் பொருளாதார வளர்ச்சியைக் கடினமாக்குகின்றன.

விடுதலையடைந்த நாடுகளில் பெரும்பாலானவற் றிற்கு, அரசியல் சுதந்திரத்தையும் தேசிய சுய உரிமை யையும் பேணிப் பாதுகாப்பதோடு கூட வேறு முக்கி யமான சமூக வளர்ச்சிப் பிரச்சினைகளும் உள்ளன. பொருளாதாரப் பின்தங்கலை அகற்றுவது, சுதந்திரமான தேசியப் பொருளாதாரத்தை (தேசியத் தொழிற்துறை உட்பட) ஏற்படுத்துவது, மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது என்பவைதான் இப்பிரச்சினைகளாகும். அன்னிய ஏகபோகங்களின் ஆதிக்கத்திற்கு முடிவு கட்டுவது என்பது இக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு அவசியமான நிபந்தனைகளில் ஒன்றாகும்.

மக்களினங்களைக் காலனியாதிக்க அடிமைத்தளை யிலிருந்து விடுவிப்பது ஏகாதிபத்தியத்திற்கு எதிரான கடும் போராட்டத்தில் நடைபெறுகிறது. ஏகாதிபத்திய வல்லரசுகள், குறிப்பாக அமெரிக்க ஐக்கிய நாடு, விடுதலையடைந்த நாடுகளின் உள் விவகாரங்களில் நேரடியாக இராணுவ ரீதியாகத் தலையிடுகின்றன, நேரடி ஆக்கிரமிப்பில் இறங்குகின்றன. நவீன காலனி யாதிக்கத்திற்கு எதிராக வெற்றிகரமாகப் போராட, இதை இறுதியாகத் தோற்கடிக்க தனிப்பட்ட நாடுகளின் முயற்சிகள் மட்டும் போதா, இதற்கு எல்லா ஏகாதிபத் திய எதிர்ப்புச் சக்திகளின் முயற்சிகளையும் ஒன்றிணைக்க வேண்டும்.

சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது

ஏகாதிபத்தியம் என்பது முதலாளித்துவத்தின் உச்சக் கட்டம் மட்டுமின்றி கடைசிக் கட்டமும் ஆகும். இக்கட்டத்தில் உற்பத்திச் சக்திகளுக்கும் அழுகிப் போன முதலாளித்துவ மேலுறைக்கும் இடையிலான முரண் பாடுகள் பெரிதும் முதிர்ச்சியடைகின்றன, எனவே இம் முரண்பாடுகளை அகற்றி, உற்பத்திச் சக்திகளை பூமி யெங்கும் உள்ள மக்களின் நன்மை, மகிழ்ச்சிக்காகப் பயன்படுத்தும் கடமை மனிதகுலத்தின் முன் நிற்கிறது.

ஏகாதிபத்தியத்தின் பொருளாதார அடிப்படையாகத் திகழும் ஏகபோகங்கள் உற்பத்திச் சக்திகள் தேக்க மடையும் போக்கிற்கு வழிகோலுகின்றன. கடும் போட்டி யில் இவை தொழில்நுட்ப முன்னேற்றப் பாதையில் தடைகளை ஏற்படுத்துகின்றன. இவை ஆதிக்கம் செலுத் தும் போது சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்திகளா கிய கோடானுகோடி உழைப்பாளிகள் உழைப்பு அரங் கிலிருந்து வெளியே தள்ளப்பட்டவர்களாகின்றனர். நிரந் தர வேலையில்லாத் திண்டாட்டம், நிரந்தர உற்பத்தி வீழ்ச்சிகளும் நெருக்கடிகளும், பணவீக்கம் — இவையெல் லாம் முதலாளித்துவத்தின் தீரா வியாதிகளுக்கான அறிகுறிகளாகும்.

போட்டியின் தாக்கத்தால், லாப வேட்டையில், ஆயுதப் போட்டியின் போக்கில் முதலாளித்துவ நாடு களில் விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் வளர்ச்சி யடைகின்றன. ஆனால் முதலாளித்துவத்தின் தன்மை எப்படிப்பட்டது என்றால், இங்கு விஞ்ஞான-தொழில் நுட்ப முன்னேற்றம் தவிர்க்க இயலாதவாறு இதன் முரண்பாடுகள் கூர்மையடைய இட்டுச் செல்கிறது; பெரும்

வேலையில்லாத் திண்டாட்டம் கூடுகிறது, வளர்ந்து வரும் உற்பத்தி வாய்ப்புகளுக்கும் மக்கள் திரளினரின் உண்மை நுகர்விற்கும் இடையிலான இடைவெளி அதிகரிக்கிறது. துறைகள் மற்றும் முழு அரசுகளின் வளர்ச்சியில் அசமத் துவம் ஆழமாகிறது, ஏகபோகங்களுக்கு இடையிலான குடுமிப் பிடி சண்டைகள் வலுக்கின்றன.

நவீன விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனை களை முதலாளித்துவத்தால் முழுமையாகப் பயன்படுத்த முடியாது, இது மனிதகுலத்தின் முன் நிற்கும் உலகளா விய பிரச்சினைகளின் தீர்விற்குத் தடையாக இருக்கிறது. இவற்றில் பூமியின் உயிர் வாழ்க்கையையே அச்சுறுத்தும் புதிய உலக யுத்தத்தைத் தவிர்த்து ஆயுதப் போட்டியைத் தடுத்து நிறுத்தும் பிரச்சினை மிக முக்கியமானதாகும். இன்றைய தலைமுறையினருக்கும் எதிர்கால சந்ததி யினருக்கும் இந்த அபாயத்தை ஏற்படுத்துவது முதலாளித் துவம்தான் எனும் அம்சமே இந்த முதலாளித்துவம் அழுகிவரும் முதலாளித்துவம் என்பதற்கு சிறந்த சான் றாகும். இன்று அழிவுச் சாதனங்களுக்காக ஆகும் செலவுகள் முதலாளித்துவ நாடுகளின் மொத்த தேசிய உற்பத்திப் பொருளில் கணிசமான பகுதியாகும். இத் தகைய பிரம்மாண்டமான தொகைகளை மனிதகுலம் முழுவதற்கும் பயன்படத் தக்க வகையில், எரிசக்தி, மூலப்பொருட்கள், உணவுப் பொருட்கள் ஆகியவற்றை வழங்கவும், சுற்றுப்புறச் சூழலைப் பாதுகாக்கவும், அதா வது மனித வாழ்க்கைக்கு ஏற்ற நல்ல சூழ்நிலைகளைத் தோற்றுவிக்கவும் பயன்படுத்தாமல் அழிவிற்காக பயன் படுத்துகின்றனர். உலகில் நாள்தோறும் சுமார் ஒரு பில் லியன் டாலர்கள் ஆயுத உற்பத்திக்காகச் செலவிடப் படுகிறது என்றால் இதற்கான குற்றம் முதலாளித்துவத் தையே சாரும். உலகில் அதே நேரத்தில் கிட்டத்தட்ட

ஒரு பில்லியன் மக்கள் பட்டினியால் வாடுகின்றனர், உணவுப் பற்றாக்குறையால் அவதியுறுகின்றனர், அன்றாடம் வளர்முக நாடுகளில் பட்டினியாலும் நோய் நொடிகளாலும் **40,000** குழந்தைகள் இறக்கின்றனர். ஜனத்தொகைப் பெருக்கம்தான் இதற்கெல்லாம் காரணம் என்று விளக்கம் கூற முதலாளித்துவ ஆதரவாளர்கள் வீணாக முயலுகின்றனர். உண்மையான காரணமோ வேறாகும். கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளாக ஆப்பிரிக்காவிலும் இரு நூறு ஆண்டுகளாக ஆசியாவிலும் முன்னூறு, நானூறு ஆண்டுகளாக லத்தீன் அமெரிக்காவிலும் காலனியாதிக்க ஒடுக்குமுறையின் கீழ் அல்லல் பட்டு வந்த மக்களினங்களிடமிருந்து எல்லா செல்வங்களையும் காலனியாட்சியாளர்கள் பிடுங்கிக் கொண்டனர், வளம் மிக்க நிலங்களை தமக்கு ஆதாயமான ஒரே பயிரை சாகுபடி செய்ய பயன்படுத்தினர், கிடைத்தவற்றையெல்லாம் ஏகாதிபத்திய அரசுகளின் சந்தைகளுக்கு எடுத்துச் சென்றனர்.

எனவேதான் ஏகாதிபத்தியம் என்பது அழுகக் கூடிய, ஒட்டுண்ணித்தனமான முதலாளித்துவம் ஆகும். பட்டினி, வறுமை, ஈவிரக்கமற்று உழைக்கும் மக்கள் திரளினரை சுரண்டுவது ஆகியவற்றின் பின்னணியில் பார்த்தால் ஆதிக்க வர்க்கங்களின் பெரும் செல்வமும் ஆடம்பரமும் வெட்கக்கேடான முரண்பாடாக நன்கு தெரிகின்றன.

ஏகபோக முதலாளித்துவத்தின் கீழ் சமுதாய வாழ்வின் எல்லா துறைகளிலும் அரசியல் பிற்போக்கு வலுப்படுகிறது.

அரசியல் துறையில் ஏகபோக முதலாளி வர்க்கம் ஏற்கெனவே குறைவாக உள்ள உழைக்கும் மக்கள் திரளினரின் சிவில் உரிமைகளைப் பிடுங்கப் பார்க்கிறது, மக்களினங்களின் அரசியல் உரிமைகளை முறைகேடான

வகையில் ஒடுக்குகிறது. சுதந்திரம் எனும் புனிதப் பதாகையை முதலாளி வர்க்கம் கீழே போட்டு வெகு காலமாகி விட்டது. இன்று ''மனித உரிமைப் பாதுகாப்பு'' பற்றிய இதன் பொய்யான வாக்குறுதிகளால் யாரையும் ஏமாற்ற முடியாது. உரிமைக் குரல் எழுப்ப மக்கள் என்ன முயற்சி செய்தாலும் இம்முயற்சிகளை ஏகாதிபத்தியமும் இதன் கூலிப்படையினரும் எப்படி ஈவிரக்கமற்று ஒடுக்குகின்றனர் என்பதற்கான ஏராளமான உதாரணங்கள் இன்று நவீன வரலாற்றில் நிரம்பிக் கிடக்கின்றன. ஏகாதிபத்தியம் சர்வதேச உரிமைகள், மக்களின் விருப்பு வெறுப்புகளை எல்லாம் அலட்சியம் செய்து விட்டு எல்லா இடங்களிலும் தனக்கேற்ற கொடுங்கோல் ஆட்சிக் கும்பல்களையும் முறைகளையும் தோற்றுவித்து ஆதரவளிக்கிறது.

முதலாளித்துவத்தின் கடைசிக் கட்டமாகிய ஏகாதிபத்தியத்தில் இதன் எல்லா முரண்பாடுகளும் கடுமையாகக் கூர்மையடைந்துள்ளதானது இந்த அமைப்பு மறைந்து வீழ்ந்து, சோஷலிசப் புரட்சி வெற்றி பெறுவது வரலாற்று ரீதியாகத் தவிர்க்க இயலாதது என்பதை நிர்ணயிக்கிறது.

இச்சூழ்நிலையில் ஏகபோக முதலாளி வர்க்கம் தன் ஆதிக்கத்தை உறுதியாகப் பற்றி நிற்கிறது, இராணுவப் பலத்தைக் காட்டி அச்சுறுத்துகிறது, சோஷலிசம் வெற்றியடைவதைப் பின்னுக்குத் தள்ள முயலுகிறது. ஆனால் இதனால் எல்லாம் முதலாளித்துவத்தால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியாது. இதற்கு எதிர்காலம் கிடையாது. வி. இ. லெனின் சுட்டிக்காட்டியபடி வரலாறே இதை அரித்து, இதற்குக் குழி தோண்டி உள்ளது.*

ஆனால் இதனால் முதலாளித்துவம் தானாகவே முன்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 24, Progress Publishers, Moscow, p. 417.

வந்து வரலாற்று அரங்கை விட்டு அகலும் அல்லது தன் முரண்பாடுகளால் தானாகவே தகர்ந்து விழும் என்று பொருளாகாது. ஏகாதிபத்தியத்தின் விலங்குகளை உடைத் தெறிய, தொழிலாளி வர்க்கம், இதன் முன்னணிப் படையாகிய மார்க்சிய-லெனினியக் கட்சியின் தலைமையில் உழைப்பாளிகளின், சுரண்டப்படும் எல்லா மக்களின் வீரஞ் செறிந்த புரட்சிப் போராட்டம் தேவை.

ஏகாதிபத்தியம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுதாகும். இது தன் இடிபாடுகளில் எழப் போகும் புதிய சமுதாயத்தைத் தோற்றுவிப்பதற்கான பொருளா யத முன்நிபந்தனைகளை ஏற்படுத்துவதோடு கூட தனக்கு குழி தோண்டிப் புதைக்கப் போகும் புரட்சிகரத் தொழிலாளி வர்க்கத்தையும் படைக்கிறது.

ஆனால் முதலாளித்துவம் மறைந்தழியும் நிகழ்ச்சிப் போக்கு ஒரு நீண்ட சகாப்தம் பூராவும் நடக்கும். இது உலகம் தழுவிய அளவில் முதலாளித்துவம், சோஷலிசம் எனும் இரண்டு எதிரெதிரான சமூக அமைப்புகளுக்கு இடையிலான போராட்ட சகாப்தமாகும். இப்போராட் டத்தில் நவீன காலத்தின் எல்லா புரட்சிச் சக்திகளும் பங்கேற்கின்றன. முதலில், யதார்த்த சோஷலிசம் நிலவும் நாடுகள் இதில் பங்கேற்கின்றன. இந்நாடுகளில் சோஷ லிசப் புரட்சி வெற்றி பெற்றுள்ளது, இவை உழைக்கும் மனிதகுலம் முழுவதற்கும் கலங்கரை விளக்குகளாகத் திகழுகின்றன. இரண்டாவதாக, ஒடுக்கப்பட்ட மக்களினங் களின் தேசிய விடுதலை இயக்கம் இதில் பங்கேற்கிறது. இந்த இயக்கத்தின் தாக்கத்தால்தான் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்தது. மூன்றாவதாக, முதலாளித்துவ நாடுகளில் உள்ள தொழிலாளி வர்க்கம், பரவலான உழைப்பாளி மக்களின் போராட்டமும் பெரும் பங்காற்றுகிறது.

எந்த வரலாற்று தருணத்தில், முதலாளித்துவம் சோஷலிசத்தால் புரட்சிகரமாக மாற்றப்படுவது நடக்கிறதோ அது முதலாளித்துவ அமைப்பின் பொது நெருக்கடி காலகட்டமாகும்.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி என்பது முதலாளித்துவம் புரட்சிகரமாகத் தூக்கியெறியப்படும் சகாப்தம், சோஷலிசம் தோன்றி, வளரும் சகாப்தம், இரண்டு அமைப்புகளுக்கு இடையிலான போராட்ட சகாப்தம், ஏகாதிபத்தியம் மேன்மேலும் பலவீனமடைந்து வரும் சகாப்தம், உலக முதலாளித்துவ அமைப்பு சிதறுண்டு வீழும் சகாப்தம், உலகம் தழுவிய அளவில் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாற்றம் நடைபெறும் சகாப்தம் ஆகும். இது சில கட்டங்களைக் கடந்து வருகிறது. *1914 – 1918*இல் நடந்த முதலாவது உலக யுத்தமும், சோஷலிச சமுதாய சகாப்தத்திற்குப் பாதைசமைக்கும் முகமாக *1917*ல் ருஷ்யாவில் நடைபெற்ற மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியைத் துவக்கி வைத்தன. உலகம் முழுவதும் பரவியிருந்த முதலாளித்துவ ஆதிக்கத்திற்கு முடிவு கட்டப்பட்டது. *1939 – 1945*இல் நடந்த இரண்டாவது உலக யுத்தத்தின் போதும் இதற்குப் பின்னும் சில ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் நடந்து மக்கள் புதிய சமுதாயத்தின் கட்டுமானத்தில் இறங்கிய போதும் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் இரண்டாவது கட்டம் துவங்கியது. சோஷலிசம் உலக அமைப்பாகியது, உலக முதலாளித்துவத்தின் செல்வாக்கு மண்டலம் இன்னமும் குறுகியது. ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க நெருக்கடி ஆழமடைந்தது, இது வீழ்ச்சி அடையும் நிகழ்ச்சிப் போக்கு ஆரம்பமாகியது.

50ஆம் ஆண்டுகளின் இறுதியில் முதலாளித்துவத்தின் பொது நெருக்கடியின் மூன்றாவது கட்டம் ஆரம்பமாகியது. இது இன்று வரை தொடருகிறது. முதல், இரண்டு கட்டங்களைப் போல் இந்த மூன்றாவது கட்டத்தின் தோற்றம் யுத்தங்களுடன் தொடர்புடையதல்ல. முதலாளித்துவத்தின் அழிவை மார்க்சியம் ஏதோ யுத்தங்களுடன் தொடர்புபடுத்துவதாகக் கூறப்படுவது பொய் என்பதை இது இன்னுமொரு முறை காட்டுகிறது. இன்று உலக சோஷலிச அமைப்பும் ஏகாதிபத்தியத்திற்கு எதிராயும் சமூக-பொருளாதார மற்றும் அரசியல் முன்னேற்றத்திற்காகவும் போராடும் சக்திகளும்தான் மனித சமுதாய வரலாற்று வளர்ச்சியின் முக்கிய சாரத்தையும் திசையமைவையும் சிறப்பியல்புகளையும் நிர்ணயிக்கின்றன. கியூபக் குடியரசும், முதலாளித்துவத்துடன் முறித்துக் கொண்டு உலக சோஷலிச அமைப்பிற்குள் வந்துள்ள இன்னும் சில நாடுகளும் சோஷலிசக் கட்டுமானப் பாதையில் நடை போடுகின்றன. பல நாட்டு மக்களின் போராட்டங்கள் ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை இறுதியாகத் தகர்ந்ததில் முடிந்துள்ளன. ஆசியா, ஆப்பிரிக்கா, லத்தீன் அமெரிக்காவில் உள்ள இளம் அரசுகள் ஏகாதிபத்திய நுகத்தடியைத் தூக்கியெறிந்து விட்டு சுயமான, சுதந்திரமான வளர்ச்சிப் பாதைக்கு வந்துள்ளன. இவற்றில் சில முதலாளித்துவமற்ற வளர்ச்சிப் பாதையை, சோஷலிசத் திசையமைவைத் தேர்ந்தெடுத்துள்ளன. ஏகாதிபத்தியம் முன்பிருந்த உலக முழு ஆதிக்கத்தை இறுதியாக இழந்தது. முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி தொடர்ந்து ஆழமடைந்து வருகிறது. முதலாளித்துவ அமைப்பின் உள்ளேயுள்ள நாடுகளின் வளர்ச்சியில் சமமின்மை அதிகரித்து வருகிறது. அமெரிக்க ஐக்கிய நாடு, மேற்கு ஐரோப்பா, ஜப்பான் எனும்

மூன்று முக்கிய ஏகாதிபத்தியப் போட்டி மையங்கள் உருவாகியுள்ளன. விற்பனைச் சந்தைகள், முதலீட்டுத் துறைகள், மூலப்பொருட்கள் கிடைக்குமிடங்கள், விஞ் ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தீர்மானகரமான துறைகள் ஆகியவற்றிற்கான போட்டி இவற்றின் இடையே வலுத்து வருகிறது. முதலாளித்துவப் பொருளாதாரம் மேன்மேலும் அதிகமான அளவு ஸ்திரமற்றதாகி வருகிறது, முதலாளித்துவத்தின் எல்லா முரண்பாடு களையும் அரசு-ஏகபோக முதலாளித்துவம் கூர்மையடையச் செய்கிறது, சுரண்டல், ஏகபோக ஆதிக்கத்திற்கு எதிராயும் சமாதானம், ஜனநாயகம், சோஷலிசத்திற்கு ஆதரவாயும் நடைபெறும் ஏகாதிபத்திய எதிர்ப்பு போராட்டத்தின் எழுச்சிக்கு வழிகோலுகிறது.

சுரண்டும் வர்க்கங்கள் எப்போதுமே புரட்சியைக் கண்டு அஞ்சி வந்துள்ளன. முட்டாள்தனமான ''இரா ணுவ வெறியால்'' ஆட்கொள்ளப்பட்டு அணு ஆயுதத் துடன் விளையாடி வரும் ஏகபோக முதலாளி வர்க்கமும் இதைக் கண்டு பயப்படுகிறது. ஆனால் சோஷலிசத்திற்கும் முதலாளித்துவத்திற்கும் இடையிலான வரலாற்றுப் போட் டிக்கு இராணுவ பலத்தால் தீர்வு காண முடியாது. குருதி படிந்த கரங்களால் சோஷலிசப் புரட்சியை நசுக்கி, சோஷலிசத்தை அழித்தொழிக்க விரும்பிய ஏகாதிபத்திய ஆக்கிரமிப்பாளர்களே இதைப் பன்முறை உணர்ந்துள்ள னர். சோஷலிசத்திற்கு எதிரான இத்தகைய ''சிலுவைப் போர்கள்'' தோல்வியடைவது திண்ணம். சோவியத் யூனியனின் தலைமையிலான சோஷலிச முகாமின் மாபெ ரும் வல்லமை, சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடு களின் சமாதான வெளிநாட்டுக் கொள்கை ஆகியவை இதற்கு உத்திரவாதமாகும். சமாதானத்தின் பாலான மக்களினங்களின் நாட்டமும் இதற்கு உத்திரவாதமாகும்.

அத்தியாயம் ஒன்பது

எல்லாம் மனித நலன்களுக்காக

இப்பக்கத்தில் நாம் வெறுமனே புதிய அத்தியாயத்தை மட்டும் துவக்கவில்லை. அரசியல் பொருளாதார வளர்ச்சி யில் முற்றிலும் புதிய கட்டத்தை, புதிய பிரிவை இங்கு நாம் படிக்கத் துவங்குகிறோம். இது யதார்த்த சோஷ லிசம் மற்றும் எதிர்கால கம்யூனிசத்தின் பொருளாதார அமைப்பைப் பற்றிய ஆராய்ச்சிக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது. வரலாற்று அளவில் பார்த்தால் சோஷலிச சமுதாயம் இன்னமும் இளமையானது. அரை நூற்றாண் டிற்கும் சற்று கூடுதலாக மட்டுமே இது நிலவி வருகிறது என்றாலும் இது வளர்ந்து வலுப்பட்டு வருகிறது, தன் சீரிசைவான இயக்கப் போக்கில் பலம் கொண்டதாகி வருகிறது. இது முன்னெடுத்து வைக்கும் ஒவ்வொரு அடியிலும் அனுபவம் சேருகிறது, எனவே இதன் வளர்ச்சிப் பாதைகளைப் பற்றிய ஞானம் செழுமையடைகிறது. இந்த அனுபவம் பெரிதும் முக்கியமானது, ஏனெனில் இது பொருளாதார மற்றும் சமூக வளர்ச்சியின் பல்வேறு கட் டங்களில் உள்ள நாடுகள் சோஷலிச மாற்றங்களை நிறைவேற்றுவதில் இறங்கிய போது அடைந்த அனுபவ மாகும்.

சோஷலிசம் எனும் பெயர் கொண்ட ஒளிமயமான கட்டிடத்தின் முதல் செங்கற்கள் அமைக்கப்பட்ட போது, இக்கட்டிடத்தின் கதவுகள் எப்படி விரிந்து திறந்து உலகை இரு கரம் நீட்டி வரவேற்கும், ஒடுக்கப்பட்ட, அடிமைப்படுத்தப்பட்ட எல்லா மக்களினத்தவருக்கும் வழிகாட்டும் கலங்கரை விளக்கமாக இது எப்படித் திகழும் என்றெல்லாம் சோவியத் மக்கள் தம் மனக் கண்ணில் பார்த்தார்கள். இக்கட்டிடத்தைத் திட்டமிட்டு கட்டிய இவர்கள், தம் கனவுகள் நனவுகளாவது வரலாற்று நியதிகளுக்கு, சமூக முன்னேற்றத்தின் விதிகளுக்கு முற்றிலும் ஏற்றது என்பதை தெட்டத் தெளிவாகப் புரிந்து கொண்டார்கள்.

இதை ஒப்புக்கொள்ளாத நபர்களும் உலகில் இருக்கத் தான் செய்கின்றனர். வரலாற்று உண்மைகளுக்கு மாறாக இவர்கள், சோஷலிசம் என்பது மார்க்சிய தத்துவகர்த்தாக்களின் கற்பனை, உண்மையில் இதற்கு எவ்வித யதார்த்த அடிப்படையும் கிடையாது, எனவே எதிர்காலத்தை இதனுடன் தொடர்புபடுத்தக் கூடாது என்றெல்லாம் கூறுகின்றனர்.

யதார்த்தம் இக்கூற்றுகள் பொய்யானவை என்று தோலுரித்துக் காட்டுகிறது. **யதார்த்த சோஷலிச சமுதாயம்** நிலவுகிறது. இச்சமுதாயத்தில் பின்வருபவை சாதிக்கப் பட்டுள்ளன:

—வர்க்க மற்றும் தேசிய இன ஒடுக்குமுறை முழுமையாக ஒழித்துக் கட்டப்பட்டு விட்டது;

—வேலையில்லாத் திண்டாட்டம், பட்டினி, வறுமை, கல்வியறிவின்மை, நாளைய தினத்தில் நம்பிக்கையின்மை

ஆகியவற்றிற்கு என்றென்றைக்குமாக முடிவு கட்டப்பட்டு விட்டது;

— உழைப்பு, ஓய்வு, கல்வி, உடல் நலப் பாதுகாப்பு, வீட்டு வசதி, அமைதியான, வசதியான முதுமைப் பருவம் ஆகியவற்றிற்கான உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் வழங்கப்பட்டுள்ளது;

— வாழ்க்கைத் தரம் தொடர்ந்து வளர்ந்து வருகிறது, தன் அறிவை வளர்த்துக் கொள்ளவும் உலக மற்றும் தாயக கலாசார பொக்கிஷங்களைப் பயன்படுத்தவும் ஒவ்வொருவருக்கும் வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது;

— தொழில் நிறுவன அளவிலும், மாவட்ட, குடியரசு மற்றும் நாடு தழுவிய அளவிலும் எல்லா பிரச்சினைகளின் விவாதத்திலும் தீர்விலும் பங்கேற்கும் உண்மையான உரிமை ஒவ்வொரு குடிமகனுக்கும் உண்டு;

— உலகம் பூராவும் சமாதானத்தைப் பேணிக் காப்பதை நோக்கமாகக் கொண்டு அரசியலமைப்புச் சட்டத்தில் இடம் பெற்றுள்ள கொள்கை நெறி பிறழாது பின்பற்றப்படுகிறது.

இதுதான் யதார்த்த சோஷலிசமாகும்.

இந்த யதார்த்தத்தில் குறைகளையும் தீர்க்கப்படாத பிரச்சினைகளையும் பார்க்கலாம். அழகிய, தூய மேசை விரிப்பின் மீதுள்ள ஓரிரு கரும்புள்ளிகளை வைத்து இதன் உண்மை அழகை எப்படி குறைக்க முடியாதோ அதே போல் சோஷலிச அமைப்பு செயல்படுவதில் உள்ள குறைபாடுகளாலும் இதன் சாராம்சத்தையும் முதலாளித்துவத்திற்கு முன் இதற்குள்ள விவாதத்திற்கு அப்பாற்பட்ட மேம்பாடுகளையும் மறைக்க முடியாது.

சோவியத் மக்களுக்கும், ஒளிமயமான எதிர்காலத்திற்காக உணர்வு பூர்வமான போராட்டத்தில் இறங்கியுள்ள எல்லோருக்கும் இது கம்யூனிச எதிர்காலத்துடன்

தொடர்புடையது. சோஷலிசம் என்பது கம்யூனிச நாகரிக வளர்ச்சியில் முதல் கட்டம் மட்டுமே. தற்செயலான சம்பவங்களும், விளக்கப்பட முடியாத சக்திகளின் தாக்கமும் இதன் வெற்றிக்கு இட்டுச் செல்லா, மனிதர்களின் உணர்வு பூர்வமான, செயல்முனைப்பான நடவடிக்கைதான் இதன் வெற்றிக்கு வழிகோலும்.

சோஷலிசப் பொருளாதார வளர்ச்சி விதிகளை அறிவது இந்நடவடிக்கையில் வழிகாட்டியாகத் திகழும். சோஷலிச அரசியல் பொருளாதாரம் இவ்விதிகளை அறிய உதவுகிறது.

எந்த நாட்டில்—சிறிய அல்லது பெரிய நாடாயிருந்தாலும் சரி, பொருளாதார ரீதியாக ஒப்பீட்டளவில் பின்தங்கிய அல்லது குறிப்பிட்ட தொழிற்துறை முதிர்ச்சியை அடைந்த நாடாக இருந்தாலும் சரி—புதிய சமுதாயம் கட்டப்பட்டாலும் அங்கு எல்லா நாடுகளுக்கும் பொதுவான பொருளாதார விதிகள் உண்டு. நிச்சயமாக, சமூக-பொருளாதார மாறுபாடுகளை, அதுவும் முக்கியமானவற்றைக் கவனத்தில் கொள்ளாமல் இருக்க முடியாது. இவை அந்தந்த நாட்டின் விசேஷத் தன்மையை நிர்ணயிக்கும் வரலாற்று சிறப்பியல்புகள், இயற்கை, பருவநிலை சூழ்நிலைகள் போன்றவற்றால் முடிவு செய்யப்படுகின்றன. ஆனால் எவ்வளவு வித்தியாசங்கள் நிலவினாலும் சோஷலிசத்தை நோக்கிய சமுதாய இயக்கத்தில் அடிப்படையான, பொதுவான நியதிகள் உள்ளன. யதார்த்த சோஷலிசத்தின் எதிரிகள் பல்வேறு சோஷலிச ‘‘மாடல்களை’’ முன்மொழிகின்றனர்; ஒன்றிலிருந்து ஒன்று பெரிதும் வேறுபடும் இவை ஏதோ அந்தந்த நாட்டுக்குப் பொருந்தக் கூடியவை என்று கூறப்படுகிறது.

உண்மையில் ‘‘பல்வேறு மாடல்களின்’’ போர்வையின்

கீழ் இவற்றின் ஆசிரியர்கள், சோஷலிச நாடுகள் சோஷலிசத்திற்கு முந்தைய பழைய முறைகளுக்கு திரும்பு மாறு செய்ய முற்படுகின்றனர். ''மானுடத் தன்மை யுள்ள சோஷலிசம்'' என்ற கருத்து முன்வைக்கப் படுகிறது. சற்று ஆழமாக நோக்கினால், இது சுதந்திரம் மற்றும் ஜனநாயகம் பற்றிய பொய்யான கோஷங்களால் மூடிமறைக்கப்பட்ட சாதாரண முதலாளித்துவமே தவிர வேறில்லை என்பது தெரிகிறது. சில நேரங்களில் ''சந்தை சோஷலிசம்'' பற்றிய கருத்து முன்வைக்கப்படுகிறது. இங்கே பொருளாதார வாழ்க்கையைத் திட்டமிட்டு நிர்வகிப்பதற்குப் பதில் தன்னிச்சையான சந்தை வேண் டுமாம். அதாவது உழைப்பாளி மக்கள் திரளினருக்குச் சுமைகளைத் தரக் கூடிய குறைகளைக் கொண்ட முத லாளித்துவ முறைகளை மீண்டும் ஏற்படுத்துவதைப் பற்றி இங்கு பேசப்படுகிறது.

யதார்த்த சோஷலிசத்தை குலைப்பது, இதன் உட் பொருளை, சாரத்தை திரித்துரைப்பது என்பவைதான் இப்படிப்பட்ட சோஷலிச ''மாடல்களை'' கணித்துக் கூறுபவர்களின் பொதுவான உண்மை நோக்கங்களாகும். ''ஆப்பிரிக்க சோஷலிசம்'' என்றழைக்கப்படும் ''மாடல் களும்'' முன்வைக்கப்படுகின்றன. ஆனால் இதன் ஆசிரி யர்களால் இதற்கும் மற்ற சோஷலிச ''மாடல்களுக்கும்'' (உதாரணமாக, ''அரபு'' சோஷலிச மாடலுக்கும்) என்ன கோட்பாட்டு ரீதியான வேறுபாடு என்று விளக்க இயலவில்லை. ஏனெனில் ஆட்சி முறைகள் அல்லது மத நம்பிக்கைகளில் உள்ள வேறுபாடுகள், சோஷலிசப் புரட்சி நிறைவேற்றும் முக்கியக் கடமைகளை — அதாவது உழைப்பாளிகள் அரசியல் அதிகாரத்தைத் தம் கரங்களில் எடுத்துக் கொண்டு பொதுச் சொத்துடைமையை நிலைநாட்டுவதை — மாற்றுவதில்லை. சோஷலிசத் திசை

யமைவைக் கொண்ட வளர்முக நாடுகளின் அனுபவம் இதை மெய்ப்பிக்கிறது. மக்களின் கரங்களுக்கு ஆட்சி வருவது, உற்பத்திச் சாதனங்களின் மீது அரசு சொத்துடைமையை நிலைநாட்டுவது, விவசாயத்துறையில் கூட்டுறவு அடிப்படைகளை வளர்ப்பது — இவையெல்லாம் சோஷலிச வளர்ச்சிப் பாதையைப் பறைசாற்றுகின்றன. ஒவ்வொரு நாட்டிலும் இப்பாதையில் முன்னேறுவதற்கு வேறுபாடான வேகங்கள் இருக்கலாம், பல முறைகள் பின்பற்றப்படலாம்; வெவ்வேறு சிக்கல்களும் முரண்பாடுகளும் இப்பாதையில் எதிர்ப்படலாம். சோஷலிச அரசியல் பொருளாதாரத்தால் கண்டுபிடிக்கப்பட்ட விதிகளின் அடிப்படையில்தான் இந்நாடுகளில் பொருளாதாரக் கொள்கை பெரும்பாலும் அமைக்கப்படுகிறது. இவை சோஷலிச உலகில் பெரிதும் ஊர்ஜிதமாகியுள்ளன.

புதிய சமுதாயத்தை நோக்கிய பாதையில் மாறுநிலைக் கட்டம்

முதலாளித்துவ உறவுகளின் வரம்புகளுக்குள் சோஷலிசம் தோன்ற முடியாது. சோஷலிசத்திற்குத் தேவையான பொருளாயத முன்நிபந்தனைகளும் இந்தச் சுரண்டல் அமைப்பைத் தூக்கியெறிய வல்ல சக்தியும் மட்டுமே இவ்வரம்புகளுக்குள் முதிர்ச்சியடைகின்றன. எல்லா உழைப்பாளிகளுக்கும் தலைமை தாங்கி முன் சென்று, சோஷலிசக் கட்டுமானத்திற்கான பாதையைத் திறந்துவிடும் புரட்சிகர மாற்றத்தை நிறைவேற்றும் தொழிலாளி வர்க்கம்தான் இச்சக்தியாகும். முதலாளித்துவ அமைப்பினுள், சோஷலிச அமைப்பிற்குத் தேவையான பொருளாயத முன்நிபந்தனைகள் (பொருளாதாரத்தின் எல்லா

துறைகளிலும் பெருவீத இயந்திர உற்பத்தி), அதாவது நாட்டின் பொருளாதார எழுச்சிக்குப் பயன்பட வல்ல உற்பத்திச் சக்திகளும் முதிர்ச்சியடைகின்றன.

குறிப்பிட்ட வரலாற்று சூழ்நிலைகளில் சில நாடுகள் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தவிர்த்து சோஷலிச மாற்றங்களுக்கு நேரடியாக வர முடியும் என்பதை இது மறுக்கவில்லை. இந்த நாடுகள், சோஷலிசம் வெற்றியடைந்த நாடுகளை ஆதாரமாகக் கொண்டு ஏகாதிபத்தியத்திடமிருந்து அரசியல் மற்றும் பொருளாதார விடுதலையைப் பெறும் நிலைமை வரும் போது மேற்கூறியதற்கான வாய்ப்புகள் வரலாற்று ரீதியாக உருவாகும்.

ஆனால் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் சோஷலிசம் தயாரான வடிவில் திடீரென தோன்றாது. ஓரளவு நீண்ட வரலாற்றுக் காலகட்டம் இதற்குத் தேவை. இக் காலகட்டத்தில் பழைய அமைப்பின் மிச்ச சொச்சங்கள் (பெரும்பாலும் கடும் வர்க்கப் போராட்டத்தின் மூலம்) அகற்றப்படுகின்றன, புதிய சோஷலிச சமுதாயத்தின் அடிப்படை உருவாக்கப்படுகிறது. இதுதான் **முதலாளித் துவத்திலிருந்து சோஷலிசத்தை நோக்கிய மாறுநிலைக் கட்டம்** எனப்படுகிறது. உழைப்பாளிகளின் அரசியல் ஆட்சியை நிலைநாட்டுவதுதான் இதன் துவக்கத்தைப் பற்றி அறிவிக்கும் முதல் நடவடிக்கையாகும். மக்களின் உழைப்பால் தோற்றுவிக்கப்பட்டவை, சட்டபூர்வமாக எவை மக்களுக்குச் சொந்தமாக இருக்க வேண்டுமோ அவை இதன் பயனாய் உழைப்பாளிகளின் கரங்களுக்கு வருகின்றன. ஏதோ சோஷலிசம் கொள்ளையடிப்பிலிருந்து துவங்குவதாக சோஷலிசத்தின் எதிரிகள் தீய பிரச்சாரம் செய்வது பொய்யானதாகும். பெரும் முதலாளித்துவ தனியுடைமை ஒழிக்கப்படுவது ஒரு நீதியான நடவடிக்கை

ஆகும், இதைத்தான் கா. மார்க்ஸ் ''பறிமுதல்காரர்கள் பறிமுதல் செய்யப்படுவது'' எனும் பிரபல சொற்றொடரால் குறிப்பிட்டார். சுரண்டலாளர்களின், குறிப்பாக அன்னிய மூலதனத்தின் பொருளாதார ஆதிக்கமானது கொள்ளை, பலாத்காரம், செல்வத்தை உண்மையாகத் தோற்றுவிப்பவர்களின் வியர்வையையும் குருதியையும் உறிஞ்சுவது ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது என்பதை ஏகாதிபத்திய நுகத்தடியிலிருந்து விடுதலை பெற்ற மக்களுக்கு நிரூபிக்கத் தேவையில்லை. இவர்களுக்கு இது தம் நீண்ட வரலாற்று அனுபவத்திலிருந்தே தெரியும்.

தன் கரங்களில் அரசியல் ஆட்சியதிகாரத்தை ஒன்று திரட்டி, பொருளாதாரத்தின் முக்கிய துறைகளைக் கண்காணித்து வரும் தொழிலாளி வர்க்கம் எல்லா உழைப்பாளிகளுக்கும் தலைமை தாங்கி சோஷலிச மாற்றங்களை நிறைவேற்றுவதில் இறங்குகிறது. இந்த மாறு நிலைக் கட்டத்தில் பொருளாதாரம் பல அமைப்புகளை உடையதாக உள்ளது. இதில் பின்வரும் மூன்று முக்கிய பொருளாதார அமைப்புகள் இருக்கின்றன: விரைவாக வளர்ந்து வரும் சோஷலிச அமைப்பு (இதை தொழிலாளி வர்க்கம் பிரதிநிதித்துவப்படுத்துகிறது); சிறு பண்ட அமைப்பு (இதை விவசாயிகள், கைத்தொழிலாளர்கள், குடிசைத் தொழில் புரிவோர் மற்றும் கூலியுழைப்பைப் பயன்படுத்தாத மற்ற சிறு உற்பத்தியாளர்கள் ஆகியோர் பிரதிநிதித்துவப்படுத்துகின்றனர்); தனியுடைமை முதலாளித்துவம் (நகரங்களிலும் கிராமங்களிலும் உள்ள, கூலியுழைப்பைப் பயன்படுத்தும் முதலாளித்துவ தொழில் நிறுவனங்கள் இதை பிரதிநிதித்துவம் செய்கின்றன). வேறு விதமான அமைப்புகளும் இருக்கக் கூடும். உதாரணமாக, நாட்டில் குலமரபு, நிலப்பிரபுத்துவ

உறவுகள் இருந்தால் தந்தைவழி அமைப்பு நிலவக் கூடும். இது தவிர அரசு-முதலாளித்துவ அமைப்பும் (சோஷலிசப் பொதுவுடைமைக்கான நிலைமைகளைத் தயார்படுத்த அரசு இதைப் பயன்படுத்துகிறது) இருக்கக் கூடும்.

சோஷலிசத்தை நிர்மாணிக்க, இந்த பல்வேறு அமைப்புகளை அகற்றக் கூடிய பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். நாடு தழுவிய அளவில் சோஷலிச உற்பத்தி உறவுகள் வெற்றி வாகை சூட இது அவசியம்.

தேசிய விடுதலைப் போராட்டத்தின் தாக்கத்தால் தகர்ந்து விழுந்த காலனியாதிக்க முறையின் இடிபாடு களின் மீது, **சோஷலிசத் திசையமைவுக் கொண்ட நாடுகள்** தோன்றி, வளர்ந்ததானது சோஷலிசக் கட்டுமானத் தத்துவத்தையும் நடைமுறையையும் செழுமைப்படுத்திய புதிய வரலாற்று அனுபவமாக விளங்கியது. சோஷலிசத்தை நெருங்கி வரும் போக்கில் இந்நாடுகளில் சில தேசிய-ஜனநாயகப் புரட்சிக் கட்டத்தைக் கடந்து கொண்டிருக்கின்றன, மற்றவை சமூக வளர்ச்சியின் உயர்வான கட்டத்தில் இருக்கின்றன, அதாவது சாராம்சத்தில் புரட்சிகர மாற்றங்கள் சமுதாய வாழ்வின் எல்லா துறைகளையும் ஆட்கொள்கின்றன.

சோஷலிசத் திசையமைவு நாடுகளில் ஏகாதிபத்திய ஏகபோகங்கள், ஸ்தல பெரும் முதலாளி வர்க்கம் மற்றும் நிலப்பிரபுக்கள் ஆகியோரின் நிலைகள் தாக்குதலுக்கு ஆளாகின்றன; பொருளாதாரத்தில் அரசுத் துறையை அரசு வளர்க்கிறது, அன்னிய மூலதனத்தின் நடவடிக்கையைக் கவனமாக மேற்பார்வையிடுகிறது, திட்ட அடிப்படைகளைப் புகுத்துகிறது, விவசாய சீர்திருத்தங்களைச் செய்கிறது, கிராமத்தில் கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்கிறது, உழைப்பாளிகளின் நலன்

களுக்காக மற்ற முற்போக்கு நடவடிக்கைகளை மேற் கொள்கிறது. இந்த சமூக-பொருளாதார மாற்றங்களின் வேகங்களும் ஆழமும் வெவ்வேறு நாடுகளில் வெவ் வேறானவை. ஆனால் இவற்றின் முக்கியப் போக்குகள் ஒரே மாதிரியானவை. இவையெல்லாம் முதலாளித்துவ மற்ற வளர்ச்சிக் கட்டத்தில், சோஷலிச சமுதாய அடிப் படைகளை உருவாக்கத் தேவையான சித்தாந்த, அரசியல், பொருளாதார, சமூக முன்நிபந்தனைகளை ஏற்படுத்தும் காலகட்டத்தில் இருக்கின்றன.

மாறுநிலைக் கட்டத்தின் மிக முக்கிய அம்சங்களில் ஒன்று வர்க்கப் போராட்டம் வலுப்பதாகும். இதற்குச் சில காரணங்கள் உண்டு. சமூக-அரசியல் மற்றும் பொரு ளாதார மாற்றங்கள் ஆழமடைய ஆழமடைய சுரண்டும் வர்க்கங்களின் சலுகைகள் மேன்மேலும் குறைகின்றன, இவற்றின் நலன்கள் பாதிக்கப்படுகின்றன. உள்நாட்டு பிற்போக்கின் எதிர்ப்பிற்கு வெளியிலிருந்து ஏகாதிபத்திய மற்றும் நவீன காலனியாதிக்கச் சக்திகள் (இவை இந் நாடுகளை மீண்டும் முதலாளித்துவ வளர்ச்சிப் பாதைக்கு கொண்டு வர முயலுகின்றன) தீவிர ஆதரவளிக்கின்றன.

தொழிலாளி வர்க்கம் மற்றும் உழைக்கும் விவசாயி களின் மேன்மேலும் வலுப்பட்டு வரும் ஒத்துழைப்பு இத் தகை முயற்சிகளுக்கு எதிராய் நிற்கிறது. மக்கள் தொகை யில் மிகப் பெரும்பான்மையினராய் உள்ள அவர்கள் மனிதனை மனிதன் சுரண்டுவதை ஒழித்துக் கட்டுவதிலும், உண்மையான ஜனநாயகத்தை நிலைநாட்டுவதிலும், சோஷலிசக் கட்டுமானத்திற்கு மாறிச் செல்வதற்கான முன்நிபந்தனைகளைத் தோற்றுவிப்பதிலும் அக்கறை கொண்டுள்ளனர். எந்த நாடுகளில் எல்லாம் மார்க்சிய-லெனினியத்தை ஏற்றுக் கொண்ட உழைப்பாளர் கட்சிகள் தலைமையிடத்தில் உள்ளனவோ அவையெல்லாம் சோஷ

லிச வளர்ச்சிப் பாதையில் விரைந்து நடைபோடுகின்றன.

சோஷலிச பொருளாதாரத்தைத் தோற்றுவிப்பதற்கான திறவுகோல்

பின்தங்கிய, விவசாயப் பொருளாதார சூழ்நிலைகளில் சோஷலிச மாற்றங்களை மேற்கொள்ளும் நாடுகளின் முன் பெருவீத இயந்திரத் தொழிற்துறையை — இது விவசாயத் துறையையும் மாற்றியமைக்க வல்லதாய் இருக்க வேண்டும் — தோற்றுவிக்கும் கடமை முன்நிற்கிறது. இதற்கு முன்னரே தொழிற்துறை கட்டத்தைக் கடந்துள்ள நாடுகளைப் பொறுத்த மட்டில், முதலாளித்துவப் பொருளாதாரத்தால் தோன்றிய பொருத்தமின்மைகளை (ஒரு சில துறைகள் மற்ற துறைகளுக்குப் பங்கமேற்படுத்தும் வகையில் ஒரு தலைப்பட்சமாக வளருவது, பல துறைகள் இயந்திரமயப்படுத்தப்படாமை, இத்தியாதி) அகற்றுவது முக்கியக் கடமையாகும். இச்சந்தர்ப்பங்களில் சாதாரணமாக, தொழிற்துறை உற்பத்தியின் பல்வேறு துறைகளையும் விவேகமாக ஒழுங்கமைக்கும் அவசியம் ஏற்படுகிறது, நவீன இயந்திரத் தொழில்நுட்ப அடிப்படையில் பல உற்பத்தித் துறைகளை மாற்றியமைக்க வேண்டியுள்ளது.

தொழிற்துறைமயப்படுத்தலின் தன்மையும் சிறப்பியல்புகளும் எந்த சமூக-பொருளாதார சூழ்நிலைகளில் இது நடத்தப்படுகிறது என்பதைப் பொறுத்துள்ளது, அதுவும் குறிப்பாக உற்பத்திச் சாதனங்களின் மீது எம்மாதிரியான சொத்துடைமை வடிவம் நிலவுகிறது என்பதைப் பொறுத்துள்ளது என்ற மார்க்சிய-லெனினியக் கருத்துநிலை சரியானதென சோவியத் யூனியன், மற்ற சோஷலிச

நாடுகளின் அனுபவம் காட்டியுள்ளது. உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமையின் அடிப்படையில் நிறைவேற்றப்படும் **சோஷலிசத் தொழிற்துறைமயமாக்கல்** தன் தன்மை, மூல ஊற்றுகள், வேகம், அளவு, சமூக-பொருளாதாரப் பின்விளைவுகள் ஆகியவற்றில் முதலாளித்துவத் தொழிற்துறைமயமாக்கலிலிருந்து கோட்பாட்டு ரீதியாக வேறுபடுகிறது.

முதலாளித்துவத் தொழிற்துறைமயமாக்கல் முதலாளித்துவப் பொருளாதாரத்திற்கே உரித்தான தன்னிச்சையான விதிகளின் செயற்பாட்டின் அடிப்படையில் நடக்கிறது. உற்பத்தி இயக்கத்தின் சுழற்சித் தன்மை இதிலிருந்துதான் வருகிறது, இது பொருளாதார வளர்ச்சியின் ஒப்பீட்டளவில் குறைவான வேகங்களுக்கு இட்டுச் செல்கிறது. பெரும்பாலான முதலாளித்துவ நாடுகளில் தொழிற்துறைமயமாக்கும் போக்கு 100 — 200 ஆண்டுகள் நீடித்தது. சோவியத் யூனியனில் இது பெரும்பாலும் 10 — 12 ஆண்டுகளில் முடிவடைந்தது. இது சோஷலிசப் பொருளாதாரத்தின் மேம்பாட்டிற்குச் சான்று பகர்கிறது.

சோவியத் யூனியனில் தொழிற்துறைமயப்படுத்தலுக்கு சிறப்பியல்புகள் இருந்தன. அன்றைய தினம் இந்நாடு மட்டும்தான் உலகிலேயே ஒரே சோஷலிச நாடாக இருந்ததும், பகை மனப்பாங்குள்ள முதலாளித்துவ அரசுகள் இதைச் சூழ்ந்திருந்ததும் இதற்குக் காரணமாகும். உலக ஏகாதிபத்திய மற்றும் உள்நாட்டு யுத்தங்களால் சீர்குலைக்கப்பட்டிருந்த பொருளாதாரம் பெரிதும் பின்தங்கியிருந்த சூழ்நிலையில் சோவியத் யூனியன் தொழிற்துறைமயப்படுத்தலைத் துவக்கியது. நிலக்கிழார்களும் முதலாளிகளும் ஆதிக்கம் செலுத்தியதால் நாட்டின் வளர்ச்சி மட்டம், தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த முதலாளித்துவ வல்லரசுகளை விட பல பத்தாண்டுகள் பின்தங்கியிருந்த

ஒரு சூழ்நிலையில் இந்த தொழிற்துறைமயப்படுத்தல் நடந்தது.

பல நூற்றாண்டுகளாக இருந்து வந்த நாட்டின் பின்தங்கிய நிலையை அகற்றவும் ஒரே சோஷலிசப் பொருளாதார அமைப்பைத் தோற்றுவிக்கவும் உயர்வான தொழிற்துறைமயப்படுத்தும் வேகங்கள் தேவைப்பட்டன. இந்த வேகப் பிரச்சினை குறிப்பாகக் கடுமையாக இருக்கக் காரணம், பொருளாதாரத்தில் லட்சக்கணக்கான சிறு விவசாயப் பண்ணைகள் இருந்ததாகும்; இதனால் முதலாளித்துவம் புனரெழுச்சி பெறுவதற்கான பொருளாதார அடித்தளமிருந்தது. சோஷலிசப் புரட்சி யின் வெற்றிகளைப் பலவீனப்படுத்தி அழிப்பதை நோக்கமாகக் கொண்ட முதலாளித்துவச் சக்திகள் நாட்டைச் சுற்றி இருந்ததும் இயன்ற அளவு விரைவாக தொழிற் துறைமயப்படுத்தும் கடமையை நிறைவேற்றக் கட்டளை யிட்டது. இந்த வேகங்களை அடைய எல்லா உள் சக்திகளையும் ஒன்றுதிரட்டுவது அவசியமாக இருந்தது.

கடினமான ஆண்டுகளில் சோவியத் மக்கள் மகத்தான சுய உணர்வையும் ஒற்றுமையையும் வீரத்தையும் வெளிப்படுத்தாமலிருந்தால் சோவியத் யூனியனால் என்றுமே மாபெரும் தொழிற்துறை வல்லரசாகியிருக்க முடி யாது, பகைமையான முதலாளித்துவச் சக்திகளை எதிர்த்து நிற்கும் சோஷலிசக் கோட்டையாக மாறி யிருக்க முடியாது. அது மிகக் கடினமான நேரமாக இருந்தது, மிக அத்தியாவசியமான பொருட்கள் கூடப் பற்றாக்குறையாக இருந்தன. ஆனால் புதிய சமுதாயக் கட்டுமானத் திட்டத்தால் ஊக்குவிக்கப்பட்ட மக்கள் திரளினரின் மாபெரும் உற்சாகம் இந்த இடர்ப்பாடுகள் அனைத்தையும் கடந்தது.

1937ஆம் ஆண்டு வாக்கிலேயே, அதாவது தொழிற்

துறைமயப்படுத்தல் துவங்கி $10-12$ ஆண்டுகளிலேயே சோவியத் தொழிற்துறை உற்பத்தி, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி போன்ற தொழிற்துறை நாடுகளின் உற்பத்தியை விஞ்சி ஐரோப்பாவில் முதலிடத்திற்கும் உலகில் இரண்டாவது இடத்திற்கும் வந்தது. 1917இல் உலகத் தொழிற்துறை உற்பத்தியில் சோவியத் யூனியனின் பங்கு 3%க்குக் குறைவாக இருந்ததெனில், 1937இல் இது கிட்டத்தட்ட 10% ஆக உயர்ந்தது.

முதலாளித்துவத் தொழிற்துறைமயப்படுத்தலுக்கு மாறாக சோஷலிச தொழிற்துறைமயப்படுத்தலின் விளைவாக உழைக்கும் மக்கள் திரளினரின் வாழ்க்கை மற்றும் கலாசார நிலை உயரும். இதன் பயனாய் உழைப்பாளிகளை வேலையில்லாத் திண்டாட்டத்தின் — இது முதலாளித்துவ நாடுகளின் தொழிற்துறை வளர்ச்சியோடு கூடப் பிறந்ததாகும் — கொடுமைகளிலிருந்து என்றென்றைக்குமாக விடுவிக்க முடிந்தது. தொழிற்துறை உற்பத்தி வளர்ச்சியின் அடிப்படையிலும், உழைப்பின் உற்பத்தித் திறன் உயர உயரவும் உழைப்பாளிகளின் வருமானங்கள் கூடின.

தொழிற்துறைமயப்படுத்தியதானது நாட்டின் பொருளாதாரச் சுதந்திரத்தை வலுப்படுத்தவும், தேசியப் பொருளாதாரத்தின் எல்லா துறைகளையும் தொழில்நுட்ப ரீதியாகப் புனரமைக்கவும், விவசாயத் துறையை புதிய, சோஷலிச அடிப்படைக்கு மாற்றவும் தேவையான பொருளாயத அடித்தளத்தைத் தோற்றுவித்தது. இது பொருளாதாரத்தின் தீர்மானகரமான துறையில் பொதுச் சொத்துடைமையைப் பலப்படுத்தியது, நகரத்தில் உள்ள முதலாளித்துவ அம்சங்களை அகற்றியது, தொழிற்துறையில் சோஷலிச அமைப்பு வெற்றி பெறவும் தொழிலாளி வர்க்கம் வளரவும் உதவியது, சமுதாயத்தில் இவ்வர்க்கத்தின் தலைமைப் பாத்திரம் வலுப்படவும் சோவியத்

யூனியனின் பொருளாதார மற்றும் தற்காப்பு வல்லமை பலப்படவும் வழிகோலியது.

தொழிற்துறைமயப்படுத்தியதானது சோவியத் நாட்டின் எதிர்காலத்திற்கு பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக விளங்கியது. 1941 — 1945ஆம் ஆண்டுகளில் நாஜி ஜெர் மானிய ஆக்கிரமிப்பாளர்களுக்கு எதிராக நடந்த மாபெ ரும் தேசபக்த யுத்தத்தில் சோவியத் மக்கள் வெற்றி பெற்றதற்கான முக்கியக் காரணிகளில் ஒன்று சோஷ லிசப் பொருளாதாரத்தின் வெற்றிகரமான வளர்ச்சி யாகும். இந்த யுத்தத்திற்குப் பிந்தைய ஆண்டுகளில் சோஷலிசத் தொழிற்துறையின் வளர்ச்சியும் மேம்பாடும் சோவியத் அரசின் பொருளாதார வல்லமையும் தற் காப்புத் திறனும் மேலும் வலுப்பட வழிகோலின.

சோவியத் யூனியனின் சோஷலிசத் தொழிற்துறைமயப் படுத்தலுக்கு பெரும் சர்வதேச முக்கியத்துவம் இருந்தது. இது சோஷலிசப் பொருளாதாரத்தின் மேம்பாடுகளை உலகம் முழுவதற்கும் காட்டியது, தேசியப் பொருளா தாரத்தை சோஷலிச ரீதியாக மாற்றியமைப்பது பற்றிய முதல் அனுபவத்தை மனிதகுலத்திற்கு அளித்தது. சோஷ லிச மாற்றங்களை நிறைவேற்றும் நாடுகள் தத்தம் நாட்டின் திட்டவட்டமான சிறப்பியல்புகளையும் கவனத் தில் கொண்டு இந்த அனுபவத்தை ஆக்கபூர்வமாகப் பயன்படுத்துகின்றன.

மக்களினங்களுக்கு இடையிலான சமத்துவத்தின் பொருளாதார அடிப்படை

சோவியத் யூனியனில் நடைபெற்ற சோஷலிசத் தொழிற் துறைமயமாக்கலின் முக்கிய சிறப்பியல்புகளில் ஒன்று நாட்டின் எல்லா தேசியக் குடியரசுகளிலும் பிரதேசங்

களிலும் நவீன தொழிற்துறை ஏற்படுத்தப்பட்டதாகும். இது மக்களினங்களுக்கு இடையிலான பொருளாதார சமமின்மையை அகற்றுவதில் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. முன்னர் பொருளாதார, கலாசார ரீதியாகப் பின்தங்கியிருந்த மத்திய ஆசிய, சைபீரிய, தொலைக் கிழக்கு மக்களினத்தவரும் ஜாரிச ருஷ்யாவில் முதலாளித்துவத்திற்கு முந்தைய உறவுகள் ஆதிக்கம் செலுத்திய மற்ற இடங்களில் இருந்த மக்களினத்தவரும் இதன் அடிப்படையில் முதலாளித்துவ வளர்ச்சிக் கட்டத்தைத் தவிர்த்து நேரடியாக சோஷலிசத்திற்கு வந்தனர்.

சோவியத் நாட்டின் தனிப்பட்ட குடியரசுகள், பிரதேசங்களின் பொருளாதார, சமூக வளர்ச்சியில் ஆண்டாண்டு காலமாக இருந்து வந்த பிளவுகளை அகற்றுவதில், குறிப்பாக முன்னர் ஜாரிச ருஷ்யாவைப் பெரிதும் சார்ந்த நிலையிலிருந்த பின்தங்கிய வட்டங்களின் வளர்ச்சியின்மையை அகற்றுவதில் சோவியத் மக்கள் அடைந்த வெற்றிகளை இன்று உலகம் முழுவதும் அறியும். இப்பின்தங்கிய நிலையை அகற்றும் பொருட்டு பல சோவியத் குடியரசுகள் 10 — 15 ஆண்டுகளில் சில நூற்றாண்டுகளின் வளர்ச்சிப் பாதையைக் கடக்க வேண்டியிருந்தது. இன்று எல்லா குடியரசுகளிலும் உயர் வளர்ச்சியடைந்த தொழிற்துறையும் விவசாயத்துறையும் உள்ளன. நாடு தழுவிய பொருளாதார வளர்ச்சி வேகங்களை விட, பின்தங்கிய குடியரசுகளின் வளர்ச்சி வேகங்கள் அதிகமாக இருந்ததன் மூலம் பொருளாதார சமத்துவத்திற்கு வழிகோலப்பட்டது. உதாரணமாக, 1922 முதல் 1982 வரையிலான காலகட்டத்தில் சோவியத் நாட்டின் பொருளாதார உற்பத்தி 537 மடங்கு உயர்ந்தது என்றால் இது கஸாக் சோவியத் சோஷலிசக் குடியரசில் 938 மடங்கும் தாஜிக்

சோவியத் சோஷலிசக் குடியரசில் 898 மடங்கும் கிர்கிஸிய சோவியத் சோஷலிசக் குடியரசில் 712 மடங்கும் அதிகரித்தது. எங்கே குலமரபு அமைப்பு ஆதிக்கம் செலுத்தியதோ, எங்கே அறியாமையும் இருளும் மண்டிக் கிடந்தனவோ, எங்கே ஜாரிச கொடுங்கோன்மையால் மக்களின் பல நூற்றாண்டு கால கலாசாரம் மிதித்து நாசமாக்கப்பட்டதோ அங்கே முற்போக்கான கீழைய மக்களினங்கள் வசிக்கின்றனர்.

வரலாற்று ரீதியாகக் குறுகிய காலகட்டத்திலேயே முந்தைய தேசிய பின்தங்கிய வட்டங்களின் மக்கள் சமூக மற்றும் கலாசார வளர்ச்சியின் சிகரத்திற்கு வந்தார்கள். புரட்சிக்கு முன் மத்திய ஆசியாவிலும் கஸாக்ஸ்தானிலும் 9—49 வயதுப் பிரிவினரிடையே கல்வி கற்றோரின் எண்ணிக்கை 2—8%க்குக் குறைவாகவே இருந்தது. இங்கே ஒரு உயர்கல்விக்கூடம் கூட இருக்கவில்லை. இன்று இங்குள்ள 126 உயர்கல்விக்கூடங்களில் 7,05,000 மாணவர்கள் பயிலுகின்றனர். சில வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாடுகளை விட இக்குடியரசுகளில் மக்கள் எண்ணிக்கையில் மாணவர்களின் பங்கு அதிகமானது. உதாரணமாக, இக்குறியீட்டில் உஸ்பெக் குடியரசும் கஸாக் குடியரசும் இத்தாலி, கானடா, ஜெர்மன் சமஷ்டிக் குடியரசு, பிரான்ஸ், ஜப்பான் போன்ற நாடுகளை விஞ்சி நிற்கின்றன.

எல்லா மக்களினங்கள், தேசிய இனங்களுக்கும் நடைமுறை சமத்துவத்தை வழங்கியதன் அடிப்படையில், சோஷலிசப் பொருளாதாரத்தை இடையறாது வளர்த்ததன் அடிப்படையில் சோவியத் நாட்டில் ஒரே பொது தேசியப் பொருளாதார இணையம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. இது சோவியத் மக்களினம் எனும் ஒரு புதிய வரலாற்று மக்கள் கூட்டு உருவாவதற்கான பொருளா

தார அடிப்படையாகத் திகழ்ந்தது.

சமுதாய வாழ்க்கையின் வடிவங்களைப் புரட்சிகரமாக மாற்றியமைப்பதன் அடிப்படையில் மட்டுமே தேசிய இனப் பிரச்சினைக்கு உண்மையான, அடிப்படையான தீர்வைக் காண முடியுமென யதார்த்த சோஷலிசத்தின் அனுபவம் காட்டுகிறது.

தன்னலமற்ற உதவி

ஒரு காலத்தில் முதலாளித்துவத் தொழிற்துறைமயமாக் கல் ஒரு சில நாடுகளை மட்டுமே ஆட்கொண்டது. இந்நாடுகள் உலக நிலப்பரப்பில் கணிசமான பகுதிக்கு முதலாளித்துவ உலகின் எல்லையோரப் பிரதேசம் என்ற பாத்திரத்தை அளித்தன, இங்கிருந்த நாடுகளை ''கப்பம் செலுத்தும் நாடுகளாக்கின''. ஏகாதிபத்தியத்தின் காலனி யாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்த போது, பொருளாதாரப் பின்தங்கிய நிலையிலிருந்து மீண்டு வந்து சுதந்திரமான பொருளாதாரத்தைத் தோற்றுவிக்கும் கடமை பல விடுதலையடைந்த நாடுகளின் முன் நின்றது. இக்கடமை யை நிறைவேற்றும் வழியை இவை தொழிற்துறைமய மாக்கலில் தேடுகின்றன. இதில் இவை சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளின் அனுபவத்தையும் உதவியையும் ஆதாரமாகக் கொள்கின்றன.

மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சிக்கு முன் னரே வி. இ. லெனின், கீழைய மக்களினங்களுடன் நெருங்கி வர புரட்சி வெற்றியடைந்த பின் நாம் இயன்ற அனைத்தையும் செய்வோம், ''நம்மை விட அதிகமாகப் பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட மக்களுக்கு 'தன் னலமற்ற கலாசார உதவியை'... அளிக்க முயலுவோம், அதாவது இயந்திரங்களைப் பயன்படுத்த இவர்கள்

மாறவும், உழைப்பை எளிமையாக்கவும், ஜனநாயகத்திற்கும் சோஷலிசத்திற்கும் இவர்கள் வரவும் உதவ முயலுவோம்''* என்று எழுதினார். சோவியத் யூனியனில் சோஷலிசக் கட்டுமானம் இந்த மக்களுக்குப் பெரும் முக்கியத்துவம் வாய்ந்ததாய் இருக்கிறது, ஏனென்றால் இந்த மக்கள் ''அண்மை எதிர்காலத்தில் வரலாற்று அரங்கத்தில் நம்மைப் பின்தொடர்வார்கள்...'' என்று அவர் சுட்டிக் காட்டினார். ''உலக வரலாற்றின் நாளைய தினம், ஏகாதிபத்தியத்தால் ஒடுக்கப்பட்ட மக்கள், முழுமையாக விழிப்படைந்து தம் விமோசனத்திற்காக நிர்ணயகரமான நீடித்த கடுமையான போராட்டத்தைத் துவக்கும் தினமாகக் கட்டாயம் திகழும்''** என்று லெனின் எழுதினார்.

கடந்த சில பத்தாண்டுகளில் வி. இ. லெனினின் விஞ்ஞானக் கணிப்பு முழுமையாக நிறைவேறியுள்ளது — ஏகாதிபத்தியத்தின் காலனியாதிக்க முறை தகர்ந்து வீழ்ந்துள்ளது. புதிய காலனியாதிக்க முறைகளைப் பின்பற்ற இது எவ்வளவுகான் முயன்றாலும் இந்த வரலாற்று நிகழ்ச்சிப் போக்கை இனி பின்னோக்கி திருப்ப முடியாது. விடுதலையடைந்த நாடுகளில் சமூக வளர்ச்சியின் விசேஷ வடிவங்கள் தோன்றியுள்ளன. இப்பாதைகள் மிகப் பல்வேறானவை என்பது தெளிவாகியுள்ளது. சில நாடுகள் புரட்சிகர ஜனநாயகப் பாதையைத் தேர்ந்தெடுத்துள்ளன. வேறு சிலவற்றில் முதலாளித்துவ உறவுகள் நிலைபெற்றுள்ளன. சுதந்திரமான கொள்கையைப் பின்பற்றும் நாடுகளும் ஏகாதிபத்தியக் கோட்டையில் சேர்ந்துள்ள நாடுகளும் இருக்கின்றன. கடைசியாகக்

* V. I. Lenin, *Collected Works*, Vol. 23, p. 67.

** வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி 12, 1982, பக்கங்கள் 281 — 282.

கூறியது ஏகாதிபத்தியவாதிகளுக்கு மிகவும் ஏற்புடையதாக உள்ளது. ஆனால் விடுதலையடைந்த நாடுகளின் சுதந்திரம் வலுப்படுவதன் மீது இவற்றிற்கு சிறிதும் விருப்பமில்லை. சோவியத் யூனியன், மற்ற சோஷலிச நாடுகளைப் பொறுத்த மட்டில் இவை தேசிய விடுதலை இயக்கத்துடன் உள்ள கூட்டை வலுப்படுத்துவது, விடுதலையடைந்த நாடுகளுடனான பரஸ்பர அனுகூலமுள்ள ஒத்துழைப்பை வளர்ப்பது எனும் கொள்கையை இடையறாது தொடர்ந்து பின்பற்றுகின்றன.

காலனியாதிக்கம் விட்டுச் சென்ற கடினமான சுமைகளிலிருந்து வளர்முக நாடுகள் பலவற்றால் இன்னமும் மீள இயலவில்லை. இவை தொடர்ந்து ஏகாதிபத்திய வல்லரசுகளின் விவசாய, மூலப்பொருள் சப்ளை நாடுகளாகத் திகழுகின்றன. ஒரு சில கணக்கீடுகளின்படி வளர்முக நாடுகள் பொருளாதார ரீதியாக ஏகாதிபத்திய வல்லரசுகளைச் சார்ந்திருப்பதன் விளைவாய் இந்நாடுகளிலிருந்து ஆண்டுதோறும் வெளியே எடுத்துச் செல்லப்படும் மூலதனத்தின் அளவு 120 — 130 பில்லியன் டாலர்களாகும். இப்படிப்பட்ட கொள்ளையடிப்பு வளர்முக நாடுகளின் பொருளாதார வளர்ச்சியையும் சமூக முன்னேற்றத்தையும் பாதிப்பது இயற்கையே. கொள்ளை மற்றும் சுரண்டலின் அடிப்படையிலான பழைய, சமமற்ற உறவு முறை, சம உரிமை மற்றும் பரஸ்பர அனுகூலத்தின் அடிப்படையிலான புதிய உறவு முறையால் மாற்றப்பட வேண்டும். இப்படிப்பட்ட புதிய சர்வதேசப் பொருளாதார உறவு முறைக்காகத்தான் விடுதலையடைந்த நாடுகள் போராடுகின்றன. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் இதை ஆதரிக்கின்றன.

சோஷலிச நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும்

இடையிலான பரஸ்பர அனுகூலமுள்ள பொருளாதார ஒத்துழைப்பு (இது உலகப் பொருளாதாரத் தொடர்புகளின் வளர்ச்சியில் கணிசமான அம்சமாகியுள்ளது), சம உரிமை மற்றும் பரஸ்பர ஆதாயத்தின் அடிப்படையிலான மேற்கூறிய உறவு முறைக்கு உண்மையான எடுத்துக் காட்டாகும். இந்த ஒத்துழைப்பு எல்லாவற்றிற்கும் மேலாக, சீர்படுத்தப்பட்ட பண்டப் பரிவர்த்தனையின் அடிப்படையிலான வெளிநாட்டு வர்த்தகத் தொடர்புகளின் மூலம் நிறைவேற்றப்படுகிறது. சோவியத் யூனியனும் மற்ற சோஷலிச நாடுகளும் வளர்முக நாடுகளின் பொருளாதாரத்தை வளர்த்து இதன் கட்டமைப்பை மேம்படுத்தத் தேவையான பண்டங்களை இந்நாடுகளுக்கு அனுப்புகின்றன. 60ஆம் ஆண்டுகளின் நடுப்பகுதியிலிருந்து பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் உறுப்பு நாடுகள் வளர்முக நாடுகளிலிருந்து வாங்கப்படும் பண்டங்கள் மீதான சுங்கவரியை ரத்து செய்தன. இதன் மூலம் இந்நாடுகளின் ஏற்றுமதி வாய்ப்புகளுக்கு ஏற்ற நல்ல வாய்ப்புகள் தோற்றுவிக்கப்படுகின்றன, இது பரஸ்பர பண்டப் பரிவர்த்தனைக்கு உதவுகிறது.

பரஸ்பர பொருளாதார உதவி கவுன்சிலின் உறுப்பு நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்கும் இடையிலான நிதி-கடன் உறவுகள் உலகப் பொருளாதாரத் தொடர்புகளின் வரலாற்றில் புதிய, இது வரை காணப்படாத அம்சங்களாகும். வளர்முக நாடுகளுக்கு சலுகையான நிபந்தனைகளின் கீழ் நீண்ட காலத்தவணைக்கு கடன்கள் வழங்கப்படுகின்றன. கடன் தொகையைக் கொண்டு கட்டப்படும் தொழில் நிறுவனங்களின் உற்பத்தியை அடுத்து ஏற்படும் சேமிப்பை வைத்தே கடனைத் திருப்பித் தரும் அளவிற்கு இக்கெடுக்கள் நீண்டவையாகும்.

80ஆம் ஆண்டுகளின் துவக்கத்தில் 92 ஆப்பிரிக்க,

ஆசிய, லத்தீன் அமெரிக்க அரசுகளில் பரஸ்பர பொரு ளாதார உதவி கவுன்சில் உறுப்பு நாடுகளின் பொரு ளாதார, தொழில்நுட்ப உதவியோடு சுமார் 3,300 தொழில் நிறுவனங்கள் கட்டப்பட்டன. ஆசிய, ஆப் பிரிக்க நாடுகளில் 40% க்கு மேற்பட்ட வார்ப்பிரும்பும் 30% க்கு மேற்பட்ட எஃகும் சோவியத் யூனியனின் உதவி யால் கட்டப்பட்ட தொழில் நிறுவனங்களில் உற்பத்தி யாகின்றன எனும் அம்சம் மேற்கூறிய ஒத்துழைப்பு வளர்முக நாடுகளின் தேசியப் பொருளாதாரத்திற்கு எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதற்கு சான்று பகர்கிறது.

இந்த உதவியின் சிறப்பு அம்சம் என்னவெனில், இது எவ்வித இராணுவ-அரசியல், பொருளாதார நிபந்தனை களையும் முன்வைக்காததோடு கூட, எவ்வித தொழில் நுட்ப புதினங்கள், உற்பத்தி அனுபவத்தையும் இது மூடி மறைக்கவில்லை என்பதாகும். சோஷலிச நாடுகள், உலக விஞ்ஞான, தொழில்நுட்ப சாதனைகளுக்கேற்ற பல்வேறு விதமான உபகரணங்களை வளர்முக நாடுகளுக்கு சப்ளை செய்கின்றன, மிகத் தேர்ச்சி பெற்ற நிபுணர்களை இந்நாடுகளுக்கு அனுப்புகின்றன; இவர்கள் புதிய தொழில்நுட்பத்தை தேசிய நிபுணர்கள் வெற்றிகரமாகக் கற்றுக் கொள்ள உதவுகின்றனர்.

வளர்முக நாடுகளுடனான நிலையான நீண்ட கால பொருளாதாரத் தொடர்புகள் பரஸ்பர அனுகூல முள்ளவை, இவை பரஸ்பர பொருளாதார உதவிக் கவுன்சி லின் உறுப்பு நாடுகளுக்கும் பயன் தருகின்றன. ஈடு கட்டும் ஒப்பந்தங்களின் அடிப்படையில் இந்நாடுகள் தமக்கு தேவையான பண்டங்களை வளர்முக நாடுகளிலிருந்து வாங்குகின்றன.

குறிப்பாக, சோஷலிசத் திசையமைவைத் தேர்ந்தெடுத்த

நாடுகளுக்கு சோஷலிச நாடுகள் அளிக்கும் தன்னலங் கருதா உதவி இவற்றின் சமூக-பொருளாதார வளர்ச்சிப் போக்கிற்குப் பெரிதும் பயன்படும்.

இந்த வளர்முக நாடுகளின் ஒப்பீட்டளவிலான பொருளாதாரப் பின்தங்கிய நிலை இவற்றில் தொழிற் துறைமயப்படுத்தலைக் கடினமாக்குகிறது. இப்பின்தங்கிய நிலை காலனியாட்சியாளர்கள் விட்டுச் சென்றதாகும். இவற்றின் பொருளாதாரத்தை, ஏகாதிபத்தியம் விட்டுச் சென்ற ஒருதலைபட்சமான, அகோரமான கட்டமைப் பை (ஏகாதிபத்தியம் இந்நாடுகளை நிரந்தர விவசாய சப்ளை நாடுகளாக்க, தொழிற்துறை ரீதியாக வளர்ச்சி யடைந்த நாடுகளுக்கு மூலப்பொருட்களையும் மலிவான உழைப்புச் சக்தியையும் அளிக்கும் நாடுகளாக்க முயன் றது) மாற்றியமைக்க பெரும் முயற்சியும் காலமும் தேவை.

ஏகாதிபத்தியத் தலையீடு, ஆக்கிரமிப்புக் கொள்கையை உறுதியோடு எதிர்த்து நிற்கவும், புதிய சமுதாயக் கட்டு மானப் போக்கில் கிட்டிய வரலாற்று அனுபவத்தை நன்குப் பயன்படுத்தவும், நவீன விஞ்ஞானம், தொழில் நுட்பத்திற்கான வாய்ப்புகளைப் பெறவும் யதார்த்த சோஷலிசம் இந்நாடுகளுக்கு உதவுகிறது.

விவசாயத் துறையைக்
கூட்டுறவுமயமாக்கல்

விவசாயத்துறையைக் கூட்டுறவுமயப்படுத்துவது சமுதா யத்தை சோஷலிச ரீதியாக மாற்றியமைப்பதற்கு பெரும் வரலாற்று முக்கியத்துவத்தைக் கொண்டுள்ளது. மாபெ ரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற தால்தான் சோவியத் நாட்டில் இதன் நிறைவேற்றம் சாத்தியமாயிற்று. இப்புரட்சி ஆலைகளையும் தொழிற்

சாலைகளையும் முதலாளிகளிடமிருந்து பிடுங்கி இவற்றை மக்களின் சொத்தாக்கியதோடு கூட — அதாவது முதலாளித்துவ சொத்துடைமையை தேசியமயப்படுத்தியதோடு கூட — நிலக்கிழார்களின் தனி நிலவுடைமையையும் ஒழித்துக் கட்டியது. சோவியத் ஆட்சியின் முதல் ஆண்டுகளில், முன்னர் பெரும் நிலக்கிழார்களுக்கும் குலாக்குகளுக்கும் (அதாவது கூலியுழைப்பைப் பயன்படுத்திய பணக்கார விவசாயிகளுக்கும்) சொந்தமாயிருந்த நிலம் ஏழை விவசாயிகளுக்குப் பகிர்ந்தளிக்கப்பட்டது. இதனால் நடுத்தர விவசாயிகள் தோன்றினார்கள் (அவர்கள் கஷ்டப்பட்டு வாழ்க்கை நடத்திய நிலை மாறியது), இவர்கள்தான் பெரும்பாலான தானியத்தையும் மற்ற விவசாயப் பொருட்களையும் உற்பத்தி செய்யத் துவங்கினார்கள். ஆனால் அதே நேரத்தில் கிராமம் வர்க்க ரீதியாகப் பாகுபாடு அடைவது தொடர்ந்தது — மீண்டும் மீண்டும் சிறு பண்ட உற்பத்தி முதலாளித்துவ அம்சங்களைத் தோற்றுவித்தது.

இதிலிருந்த மீள ஒரேயொரு வழிதான் இருந்தது. இதை வி. இ. லெனின் தன் உலகப் புகழ் வாய்ந்த **கூட்டுறவுத் திட்டத்தில்** சுட்டிக் காட்டினார். படிப்படியாக, தாமாகவே முன் வந்து விவசாயிகள் தனித்தனியான துண்டு நில விவசாயத்தை விட்டு விட்டு தோழமை ரீதியான உற்பத்திக் கூட்டமைப்புகளுக்கு, உழைப்பின் கூட்டுறவிற்கு மாற வேண்டுமென இத்திட்டம் முன்னனுமானித்தது.

இது ஒரு கடினமான கடமையாக இருந்தது. ஏனெனில் ஆண்டாண்டு காலமாக விவசாயிகள் சின்னஞ்சிறு துண்டு நிலங்களில்தான் விவசாயம் நடத்தி வந்தனர். கூட்டுறவிற்கு மாற, இத்துண்டு நிலங்களை ஒன்றிணைக்க வேண்டியிருந்தது. ஆண்டாண்டு காலமாக விவசாயிகள்

தனித்தனியே தத்தம் குடும்பங்களோடு வாழ பழகியிருந்தனர். கூட்டுறவுப் பாதைக்கு இவர்கள் வர, ஒரே கூட்டுறவுப் பண்ணையில் பலர் ஒன்றுசேர்ந்து உழைப்பதன் மேம்பாடுகளை இவர்கள் உணருமாறு செய்ய வேண்டியிருந்தது. ஆண்டாண்டு காலமாக விவசாயிகள் உற்பத்திச் சாதனங்களின் (இவை மிக எளிய கருவிகளாயும் கால்நடைகளாயும் இருந்த போதிலும்) சொந்தக்காரர்களாக இருக்க முயன்றனர். உற்பத்திச் சாதனங்களை ஒன்றிணைத்து இவற்றைப் பொதுச் சொத்தாக்கினால் இவற்றை அதிகப் பயன் மிகு வகையில் உபயோகிக்க முடியும், நவீன இயந்திரத் தொழில்நுட்ப அடிப்படையில் உற்பத்தியை நடத்த முடியும் என்று இவர்களை நம்பச் செய்ய வேண்டியிருந்தது. ஆண்டாண்டு காலமாக விவசாயிகள் தாம் உற்பத்தி செய்தவற்றைத் தமக்குச் சொந்தமாக வைத்திருப்பதை புனிதமானதாகக் கருதி வந்துள்ளனர். கூட்டுப் பண்ணையின் உற்பத்திப் பெருக்கம், முன்னர் சிறு துண்டு நிலங்களில் தனித்தனியே பெற்று வந்த விளைச்சலைப் பன்மடங்கு விஞ்சி நிற்கும் என்று அவர்களை இப்போது நம்பச் செய்ய வேண்டியிருந்தது.

இவ்வாறாக பொருளாதாரத்திலும் சொத்துடைமை உறவுகளிலும் மட்டுமின்றி கோடானுகோடி விவசாயிகளின் மனநிலையிலும் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டியிருந்தது. இவர்கள் தமது முந்தைய கருத்துக்களையும் பழக்கவழக்கங்களையும் விட்டொழித்து புதிய வாழ்க்கைப் பாதைக்கு வர வேண்டியிருந்தது. இந்த மாற்றம் நிகழ்ந்தது, ஏனெனில் ஏழை மற்றும் நடுத்தர விவசாயிகள் தொழிலாளி வர்க்கத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர், கம்யூனிஸ்டுக் கட்சியை நம்பினர், சோவியத் அரசின் கொள்கைக்கு தீவிர ஆதரவளித்தனர். சோஷலிசத் தொழிற்துறைதான் கூட்டுறவுமயப்படுத்தலின்

பொருளாயத அடிப்படையாகத் திகழ்ந்தது. இது கிராமத்திற்கு இயந்திரங்கள், டிராக்டர்களை அனுப்பியது. இது தவிர தொழிலாளி வர்க்கத்தின் தலைசிறந்த, வர்க்க உணர்வுள்ள பிரதிநிதிகள் கிராமத்தில் கூட்டுறவுக் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்தனர், கூட்டுப் பண்ணைகளை ஏற்படுத்தும் பணிகளில் ஈடுபட்டனர். தொழிலாளர், விவசாயிகளின் அரசு, விவசாய உற்பத்திக் கூட்டுறவுகளுக்கு சர்வாம்ச பொருளாதார, நிதி ஆதரவு வழங்கியது.

சுயவிருப்பம், சொல்லி நம்ப வைத்தல், உதாரணங்கள் ஆகிய கோட்பாடுகளைக் கண்டிப்புடன் பின்பற்றிய சோவியத் யூனியன் கம்யூனிஸ்டுக் கட்சியும் சோவியத் அரசும், விவசாயிகள் மிக எளிய கூட்டுறவு வடிவங்களிலிருந்து சிக்கலான வடிவங்களுக்கு, சப்ளை-விற்பனைக் கூட்டுறவுகளிலிருந்து உற்பத்திக் கூட்டுறவுகளுக்கு மாற உதவின.

சோவியத் யூனியனில் கூட்டுப் பண்ணைகள் இப்படிப்பட்ட உற்பத்திக் கூட்டுறவுகளாக இருந்தன. கூட்டுப் பண்ணைகள் பெரும் பாதையைக் கடந்து வந்துள்ளன. இன்று இவை வளர்ச்சியடைந்த சோஷலிச சமுதாயத்தில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இப்பாதையில் வெற்றிகளுடன் கூட பல இடர்ப்பாடுகளும் இருந்தன. இவை பெரும்பாலும் கூட்டுப் பண்ணைகள் அரசுடனான சரியான பொருளாதார பரஸ்பர உறவுகளை உருவாக்குவது, கூட்டுப் பண்ணைகளில் உழைப்பிற்கான ஊதிய முறை, வீட்டுத் தோட்டங்களின் பாத்திரத்தையும் இடத்தையும் நிலைநாட்டுவது போன்றவற்றுடன் தொடர்புடையவையாக இருந்தன. ஆனால் மிக முக்கியமானது ஆரம்பத்திலேயே நிறைவேற்றப்பட்டது — கூட்டுப் பண்ணை அமைப்பு விவசாயிகளை சோஷலிசப் பாதைக்கு

இட்டு வந்தது, இதன் வெற்றியையடுத்து சோஷலிச அமைப்பு நாட்டின் தேசியப் பொருளாதாரம் முழுவதும் பரவியது.

விவசாயத் துறையை சோஷலிச ரீதியாக மாற்றியமைத்து வளர்த்ததில் சோவியத் நாட்டின் அனுபவம் பெரும் சர்வதேச முக்கியத்துவம் உடையதாயிருந்தது. மற்ற சோஷலிச நாடுகள் தத்தம் நாடுகளுக்கேற்ப இந்த அனுபவத்தைப் பயன்படுத்துகின்றன. இது நிலத்தின் மீதான பொதுச் சொத்துடைமையின் மேம்பாடுகளையும் கூட்டுப் பண்ணையின் அனுகூலங்களையும் வளர்முக நாடுகளின் விவசாயிகளுக்கும் காட்டுகிறது. இன்றும் கூட காலனியாதிக்கச் சார்பு நிலையிலிருந்து விடுதலையடைந்த பல நாடுகளில்—அங்கு மக்களில் பெரும்பான்மையினர் விவசாயிகள்—விவசாய உற்பத்தியின் வளர்ச்சி பிரச்சினை கடுமையாக நிற்கிறது. நிலப்பிரபுத்துவ மிச்ச சொச்சங்களிலிருந்து விடுபடுவது என்பது இந்நாடுகளில் சமூக முன்னேற்றத்திற்கான கண்டிப்பான நிபந்தனையாகும். சிறு விவசாய உற்பத்தியை பெருவீத உற்பத்தியாக மாற்ற இரண்டு பாதைகள் உள்ளன என்று வரலாற்று அனுபவம் காட்டுகிறது. ஒரு பாதை முதலாளித்துவப் பாதையாகும். இதில் பெரும் முதலாளித்துவப் பண்ணைகள் தோற்றுவிக்கப்படுகின்றன, விவசாயிகள், விவசாய கூலித் தொழிலாளர்களாகவோ அல்லது சம்பிரதாயப்படியான சிறு மற்றும் நடுத்தரப் பண்ணை விவசாயிகளாகவோ மாறுகின்றனர், சக்தி மிக்க ஏகபோகங்களின் போட்டிச் சுமையிலிருந்து தப்பிப் பிழைப்பதற்காக சொல்லி மாளா இன்னல்களுக்கு ஆளாகின்றனர். இது திவாலடைந்து வறுமையடையும் பாதை, அடிமைத் தளையில் விழும் பாதை, எதிர்கால நம்பிக்கையற்ற பாதை.

மறு பாதை சோஷலிசப் பாதையாகும். இதில் உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமையின் (கூட்டு) அடிப்படையில் நல்ல லாபகரமான, பெரிதும் இயந்திரமயப்படுத்தப்பட்ட பெரிய விவசாயப் பண்ணைகளும் அரசுப் பண்ணைகளும் உருவாக்கப்படுகின்றன. இது விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தையும் கலாசாரத்தையும் உயர்த்தும் பாதை, விவசாய உழைப்பை தொழிற்துறை உழைப்பின் ஒரு வகையாக மாற்றி, சோஷலிச சமுதாயத்தில் வர்க்கங்களுக்கு இடையிலான வேறுபாடுகளைப் படிப்படியாக அகற்றும் பாதை.

சோஷலிசத் திசையமைவு நாடுகளும் விவசாயத் துறையை சோஷலிச மாதிரியில் மாற்றியமைக்கும் பாதையில் செல்கின்றன. விவசாயிகளை புதிய சமூக உறவுகளுக்குப் பழக்கப்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட விவசாய சீர்திருத்தங்கள் இந்நாடுகளில் நடத்தப்படுகின்றன. ஆனால் இவ்வழியில் உள்ள பெரும் இடர்ப்பாடுகளை அகற்ற வேண்டி வருகிறது. ஏனெனில் இந்நாடுகளில் இன்று வரை, பாரம்பரிய சாகுபடி முறைகளின் அடிப் படையிலான அரை இயற்கை விவசாய முறை மேலோங்கி நிற்கிறது, குலமரபு, தந்தைவழி உறவுகள், அடிமை யுடைமை மற்றும் நிலப்பிரபுத்துவ உறவுகளின் எச்சங்கள் நிலவுகின்றன. அதே நேரத்தில் கிராமங்களில் நடை பெறும் வர்க்கப் பாகுபாட்டின் பயனாய் பணக்காரப் பிரிவு ஒன்று இடையறாமல் உருவாகிறது, இது முற் போக்கான விவசாய மாற்றங்களுக்கு எதிராக குரல் எழுப்புகிறது.

பல வளர்முக நாடுகள் இந்த இடர்ப்பாடுகளை அகற்றி, விவசாயத் துறையை கூட்டுறவுமயப்படுத்துவதில் கணிசமான வெற்றிகளை அடைந்துள்ளன.

சோஷலிசப் புரட்சிக்குப் பின் நாடு தொழிற்துறைமயப் படுத்தப்பட்டு, விவசாயத் துறை கூட்டுறவுமயப்படுத்தப் பட்ட சூழ்நிலைகளில், விஞ்ஞான அடிப்படையில் நடை பெறும் இயந்திரமயப்படுத்தப்பட்ட பெருவீத உற்பத்தி யின் தேவைகளுக்கேற்ற தேர்ச்சி மிகு நிபுணர்களைப் பயிற்றுவிப்பது பெரும் முக்கியத்துவத்தைப் பெறுகிறது. சோவியத் யூனியனில் இக்கடமையை நிறைவேற்றுவதில் ஒரு சிக்கல் இருந்தது. அதாவது ஜாரிச ருஷ்யா காலத் திலிருந்து பெரும்பாலான மக்கள் கல்வியறிவற்றவர் களாக இருந்த நிலையை மிகக் குறுகிய காலகட்டத்தில் மாற்ற வேண்டியிருந்தது. புரட்சிக்கு முன் ருஷ்ய மக்களில் 9 — 49 வயதுப் பிரிவினரில் கிட்டத்தட்ட முக்கால் பகுதியினருக்கு எழுதவோ படிக்கவோ தெரியாது. மிகப் பெரும்பாலான மக்களுக்கு பள்ளி செல்லும் வாய்ப்பே இருக்கவில்லை. சோவியத் ஆட்சி மக்கள் மத்தி யிலிருந்த சமூகப் பிரிவுகளை அகற்றி, சமூக நிலை, தேசிய இனம், மத நம்பிக்கை, பால் ஆகியவை எப்படி யிருந்தாலும் எல்லா உழைப்பாளிகளுக்கும் பள்ளிக் கதவுகளைத் திறந்து விட்டது. மக்கள் கல்விக்காக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளின் பயனாய் 20 ஆண்டு களில் கிட்டத்தட்ட 60 மில்லியன் மக்கள் கல்வியறிவு பெற்றனர், கல்வியறிவற்றவர்களின் எண்ணிக்கை குறைந்த பட்சமாக்கப்பட்டது, பின்னர் கல்வியறிவின்மை எல்லா இடங்களிலும் முழுமையாக ஒழித்துக் கட்டப்பட் டது. ஆனால் வி. இ. லெனின் கூறியபடி "கல்வியறிவை மட்டும் வைத்துக் கொண்டு நீண்ட தூரம் செல்ல முடியாது. நாம் நமது கலாசாரத்தைப் பெருமளவு

உயர்த்த வேண்டும்''.* நாட்டில் பல உயர் மற்றும் தொழில் கல்விக் கூடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. தொழிலாளர் கல்வி வகுப்புகள் என்றழைக்கப்பட்டவை முக்கியப் பங்காற்றின; இவ்வகுப்புகளை முடித்தால் பொது செகன்டரி கல்வி கிட்டியதோடு, உயர் கல்விக் கூடத்தில் சேரும் உரிமையும் வழங்கப்பட்டது. 1939ஆம் ஆண்டிலேயே (அதாவது சோஷலிசப் புரட்சி நடைபெற்று 22 ஆண்டுகள் கழித்து) தேசியப் பொருளாதாரத்தில் பணியாற்றிய ஒவ்வொரு 1,000 நபர்களிலும் 123 பேர்கள் உயர் மற்றும் செகன்டரி (முழு மற்றும் முழுமையடையாத) கல்வி கற்றிருந்தார்கள். இப்போது இப்புள்ளி விவரங்கள் சாதாரணமானவையாகத் தோன்றலாம். 1982ஆம் ஆண்டின் இறுதியில் சோவியத் நாட்டில் வேலை செய்த மக்களில் கிட்டத்தட்ட 85 சதவிகிதத்தினர் செகன்டரி (முழு மற்றும் முழுமையடையாத) மற்றும் உயர் கல்வி கற்றவர்களாயிருந்தனர். ஜாரிச ருஷ்யாவின் முந்தைய பின்தங்கிய தேசிய வட்டங்களில் — கிழக்கிலிருந்த சோவியத் குடியரசுகள் உட்பட — குறிப்பாக மக்களின் கல்வித் தரம் வேகமாக அதிகரித்தது என்பது குறிப்பிடத் தக்கதாகும். உதாரணமாக, உஸ்பெக் சோவியத் சோஷலிசக் குடியரசில் 10, அதற்கு மேற்பட்ட வயதுடையவர்கள் மத்தியில் 1,000 நபர்களில் உயர் மற்றும் செகன்டரி கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை 1939 முதல் 1982 வரை 12 மடங்கிற்கும் மேலாக அதிகரித்தது; இக்குறியீடு தாஜிக் சோவியத் சோஷலிசக் குடியரசில் 15.5 மடங்கு அதிகரித்தது.

பல்வேறு விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளில் உயர் கல்வி பெற்றவர்கள் உண்மையான மக்கள் அறிவுத்

---

* V. I. Lenin, *Collected Works*, Vol. 33, p. 74.

துறையினரின் அடிப்படையை ஏற்படுத்தினார்கள். இந்த மக்கள் அறிவுத் துறையினர் தோன்றியதானது லெனினுடைய சோஷலிசக் கட்டுமானத் திட்டத்தின்படி சோவியத் நாட்டில் நடந்தேறிய **கலாசாரப் புரட்சியின்** பயன் மிகு முடிவுகளில் ஒன்றாகும். இது உண்மையான புரட்சிகர நிகழ்ச்சிப் போக்காக இருந்தது. மக்களை கலாசார சிகரத்திற்கு இட்டுச் செல்வது, கலாசாரச் சாதனைகள் பரவலான மக்கள் திரளினருக்கு கிட்டும்படி செய்வது, முன்னணி சோஷலிசக் கலாசாரச் சாதனைகளால் உலக நாகரிகத்தை செழுமைப்படுத்துவது ஆகியவைதான் இதன் நோக்கங்களாகும்.

நாட்டைத் தொழிற்துறைமயப்படுத்துவது, விவசாயத் துறையை கூட்டுறவுமயப்படுத்துவது, கலாசாரப் புரட்சி ஆகியவற்றின் செயல்திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேற்றப்பட்டதன் பயனாய் முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் மாறுநிலை கட்டத்தின் முரண்பாடுகள் அகற்றப்பட்டன, சோவியத் யூனியன் சோஷலிச வளர்ச்சிக் கட்டத்தில் அடியெடுத்து வைத்தது. இவ்வாறாக மார்க்சிய ஆசான்களின் விஞ்ஞான கணிப்புகள் வரலாற்றிலேயே முதன்முதலாக நடைமுறையில் நிறைவேற்றப்பட்டன. மனித வரலாறு யதார்த்த சோஷலிசத்தின் அனுபவத்தால் செழுமையடைந்தது. இத்தோடு சேர்ந்து புதிய சமுதாய கட்டுமானப் பாதைகளைப் பற்றிய அடிப்படை ஞானத்தின் அஸ்திவாரம் என்ற வகையில் பொருளாதாரத் தத்துவமும் வளர்ந்தது. இதன் ஒரு சில அடிப்படை கருத்துநிலைகளைப் பார்ப்போம்.

சோஷலிசத்தின் முக்கிய அடிப்படை

உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமைதான் சோஷலிச அமைப்பின் அடிப்படையாகும். இதுதான் சோஷலிசத்தின் முக்கியக் காரணி, இதன் அடித்தளம், இதன் முன்னேற்றத்தின் முக்கிய மூல ஊற்று.

பொதுச் சொத்துடைமை என்றால் உற்பத்தியில் பங்கேற்பவர்கள் ஒன்றுசேர்ந்து, கூட்டாக உற்பத்திச் சாதனங்களைத் தம் கரங்களில் வைத்திருக்கின்றார்கள் என்று பொருள். இது சோஷலிச சமுதாயத்தில் உற்பத்தி, வினியோகம், பரிவர்த்தனை, நுகர்வு ஆகியவற்றின் முறை முழுவதையும் நிர்ணயிக்கிறது.

முதலாவதாக, பொதுச் சொத்துடைமையானது உற்பத்திச் சாதனங்கள் தனிப்பட்ட நபர்களின் சொத்துக்களாக மாற்றப்படுவதையும் இதன் மூலம் சமுதாயத்தின் ஒரு பகுதியினர் இன்னொரு பகுதியினரைச் சுரண்டும் வாய்ப்பையும் தவிர்க்கிறது.

இரண்டாவதாக, இது சமுதாயத்தில் உற்பத்திச் சாதனங்களின் பால் மக்களின் உண்மையான சமத்துவம் ஏற்படுவதற்கான அடிப்படையாகத் திகழுகிறது, உற்பத்தியில் ஈடுபட்டுள்ளவர்களை தோழமை ரீதியான ஒத்துழைப்பு, பரஸ்பர உதவி எனும் உறவுகளால் இணைக்கிறது, தனிப்பட்ட முறையில் சிறந்த உழைப்பை வெளிப்படுத்த தார்மீக ரீதியாகவும் பொருளாயத ரீதியாகவும் ஊக்கம் அளிக்கிறது.

மூன்றாவதாக, இதனால் உழைப்பாளிகளின் இடையில் ஏற்பட்டுள்ள உறவுகள் இவர்களிடையேயான தீய போட்டிகளை (இதனால் ஏற்படும் மோசமான பின் விளைவு

களையும்) அகற்றுகின்றன; தம் சமுதாயக் கடமையைப் பற்றிய உயர்வான சுய உணர்வின் வெளிப்பாடாக ஆக்கபூர்வமான போட்டி வளருகிறது.

நான்காவதாக, உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமை நிலவும் சூழ்நிலையில், பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக்கான தேவை உருவாகிறது. இதற்கான எல்லா நிலைமைகளும் தோற்றுவிக்கப்படுகின்றன, நாட்டின் தேசியப் பொருளாதாரம் முழுவதும் ஒரே திட்டத்திற்கு உட்படுத்தப்படுகிறது.

எனவேதான் சோஷலிசத்தின் விரோதிகள் பொதுச் சொத்துடைமையை முக்கியமாகத் தாக்குகின்றனர். இவர்களுடைய கருத்தின்படி இச்சொத்துடைமைக்கு எவ்வித உண்மையான பொருளாதார உட்பொருளும் இல்லை, ஏனெனில் இது ஏதோ அதிகார சடங்கு முறையிலான மத்தியத்துவத்திற்குக் கீழ்ப்படிகிறதாம், பொருளாதாரம் முழுவதும் அரசாட்சியின் கட்டளைகளுக்கு உட்படுகிறதாம். ஆனால் சோஷலிசப் பொதுச் சொத்துடைமைதான் சோஷலிச அரசு முறைக்கு, இதன் உண்மையான ஜனநாயகத்திற்கான அடிப்படை எனும் அம்சத்தைப் பற்றி ஏனோ மறந்து விடுகின்றனர்.

மக்களின் நலன்களுக்காக

உற்பத்திச் சாதனங்களின் மீதான சோஷலிச சொத்துடைமை ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலைகளில் பொருளாதார விதிகளின் சாரமும் செயல்படும் தன்மையும் அடிப்படை ரீதியாக மாற்றமடைகின்றன. தன் பொருளாதார உறவுகளைத் தானே ஒழுங்கமைக்கும் வாய்ப்பு, உற்பத்தியை ஒரே லட்சியத்திற்கு உட்படுத்தும் வாய்ப்பு சமுதாயத்திற்குக் கிட்டுகிறது. சமுதாயத்தில் உள்ள அனைவருக்

கும் நல்ல வாழ்க்கைத் தரத்தை அளிப்பதும் ஒவ்வொரு தனி நபரின் சுதந்திரமான, பன்முக வளர்ச்சியும்தான் சோஷலிச உற்பத்தி வளர்ச்சியின் லட்சியமாகும். இது உண்மையிலேயே மனிதாபிமானம் மிக்க, உயர்ந்த லட்சியமாகும். இது சோஷலிசத்தின் பொருளாதார அமைப்பாலும், இதில் செயல்படும் அடிப்படைப் பொருளாதார விதியாலும் நேரடியாக நிர்ணயிக்கப்படுகிறது. இந்த விதி முதலாளித் துவத்தில் நிலவும் அடிப்படைப் பொருளாதார விதி யிலிருந்து கோட்பாட்டு ரீதியாக மாறுபடுகிறது. தனிச் சொத்துடைமையின் கீழ் லாபம் பெறுவதுதான் உற்பத்தி வளர்ச்சியின் நோக்கம் என்றால், பொதுச் சொத்துடைமை யின் கீழ் உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி, தனிநபரின் பன்முக வளர்ச்சிக்கான சூழ்நிலை களைத் தோற்றுவிப்பதுதான் உற்பத்தி வளர்ச்சியின் லட்சியமாகும். இறுதி லட்சியத்தை அடையும் முறை களும் சொத்துடைமை வடிவத்தைத்தான் பொறுத் துள்ளன. முதலாளித்துவத் தனிச் சொத்துடைமையின் கீழ் உழைப்பாளிகளைச் சுரண்டுவதன் மூலம் உற்பத்தி அதிகரிக்கவும், லாபம் கூடவும் வழி செய்யப்படுகிறது, இவர்கள் எவ்வளவுக்கெவ்வளவு உடலுழைப்பையும் மூளையுழைப்பையும் செலவிடுகின்றார்களோ, இவர் களின் வாழ்க்கைத் தரம் எவ்வளவுக்கெவ்வளவுக் குறை வானதோ, இவர்களை ஒடுக்கும் முதலாளிகளின் வல்ல மையும் செல்வமும் அவ்வளவுக்கவ்வளவுக் கூடும். பொதுச் சொத்துடைமையின் கீழ் உற்பத்தி அதிகரிப்பும், இது மேம்படுத்தப்படுவதும் உழைப்பாளிகளின் நலன்களுக்காக மட்டுமே செய்யப்படுகின்றன, இவர்களின் உழைப்பு எவ்வளவுக்கெவ்வளவுப் பயன் மிக்கதோ அவ்வளவுக்கவ் வளவு இவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வானதா யிருக்கும்.

பொதுச் சொத்துடைமையால் இணைக்கப்பட்டுள்ள சோஷலிச சமுதாய உழைப்பாளிகளின் அடிப்படை நலன்களின் பொது அம்சம் இதில்தான் அடங்கியுள்ளது. இதுதான் இவர்களின் நடவடிக்கைகள், நாட்டங்களின் ஒற்றுமைக்கு வழிகோலுகிறது. இதன் அடிப்படையில் உழைப்பை ஊக்குவிக்கும் புதிய காரணிகள், உந்து சக்திகள் தோன்றுகின்றன. தனது முக்கிய சமுதாயக் கடமையைப் பற்றிய உயரிய உணர்வு, எல்லோரின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்துவதற்கான ஒரே மூல ஊற்று என்ற வகையில் சமுதாய செல்வம் இடையறாது வளர்வதற்காக உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் நாட்டம் ஆகியவைதான் இந்த உந்து சக்திகளாகும். அதே நேரத்தில் சோஷலிச உற்பத்தி மேற்கொண்டு விரைவாக வளர்ச்சியடையவும் சோஷலிசப் பொருளாதாரத்தின் மலர்ச்சிக்கும் அவசியமான பொருளாதார முன்நிபந்தனைகளில் ஒன்று என்ற வகையில், உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதில் சமுதாயம் முழுவதும் அக்கறை கொண்டுள்ளது. சோஷலிச அமைப்பின் உண்மையான மனிதாபிமானம் இதில் வெளிப்படுகிறது. இங்கே தனிநபரின் தேவைகளைப் பூர்த்தி செய்வதென்பது சமுதாய உற்பத்தியின் இயல்பான, புறவய ரீதியான லட்சியமாகிறது. பொருளாயத செல்வங்களையும் ஆன்மீக மதிப்புகளையும் தோற்றுவிக்கும் உழைப்பாளிகள் வரலாற்றிலேயே முதன்முதலாக மனித சமுதாய முன்னேற்றத்தின் பலன்களை முழுமையாக அனுபவிக்கும் வாய்ப்பைப் பெற்றனர்.

மக்களின் பொருளாயத மற்றும் ஆன்மீகத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான வாய்ப்புகளை வைத்து மட்டும் சோஷலிசத்தில் உழைப்பாளிகளின் வாழ்க்கைத் தரம் நிர்ணயிக்கப்படுவதில்லை. உழைப்பிற்கு உள்ள

உத்திரவாதப்படுத்தப்பட்ட உரிமையின் அடிப்படையில் நாளைய தினத்தின் மீது உழைப்பாளிகளுக்கு உள்ள நம்பிக்கை, கல்வி பெறும் வாய்ப்புகள், எல்லா உழைப் பாளிகளின் ஆக்கபூர்வமான, ஆழ்ந்த உட்பொருளை யுடைய உழைப்பு மற்றும் சமூக நடவடிக்கைக்கான நிலைமைகளை ஏற்படுத்தக் கூடிய சோஷலிச சமுதாயச் சூழல் ஆகியவையெல்லாம் வாழ்க்கைத் தரத்தில் அடங்கி யுள்ளன.

ஒரே திட்டத்தின்படி

சோஷலிச உற்பத்தியின் முக்கிய அம்சம் இதன் திட் **டமிட்ட வளர்ச்சியாகும்.** உழைப்பாளிகளின் ஆட்சி நிலை நாட்டப்பட்டு, பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமை நிலைபெற்ற பின், மக்கள் அனைவரின் நலன்களுக் காகவும் சமுதாயம் முழுவதன் முற்போக்கான வளர்ச்சிக் காகவும் பொருளாதாரத்தை உணர்வுபூர்வமாக, விஞ் ஞான ரீதியாக வழிநடத்த அத்தியாவசியமான சூழ்நிலை கள் வரலாற்றிலேயே முதன்முதலாகத் தோற்றுவிக்கப் படுகின்றன. முதலாளித்துவத்திற்கே உரித்தான போட்டி மற்றும் உற்பத்தி அராஜக விதிக்குப் பதிலாக திட்டமிட்ட, சீரிசைவான பொருளாதார வளர்ச்சி விதி வருகிறது. **திட்டமிடுதல்** என்பது சோஷலிச தேசியப் பொருளாதாரம் இயங்குவதன் முக்கிய அம்சமாகிறது.

அத்தியாவசிய சாம்ராஜ்யத்திலிருந்து சுதந்திர சாம் ராஜ்யத்தை நோக்கிய இந்த வரலாற்றுப் பாய்ச்சல் பெரும் முக்கியத்துவம் வாய்ந்தது. திட்டமிடுதல் கோடிக் கணக்கானவர்களின் கூட்டு உழைப்பை ஒழுங்கமைத்து வழிநடத்தவும், சமுதாயம் முழுவதன் நலன் கருதி விஞ்

ஞான, தொழில்நுட்பச் சாதனைகளைப் பயன்படுத்தவும், நாடு தழுவிய ஒரே பொருளாதாரத்தை விவேகமாக நிர்வகிக்கவும் உதவுகிறது. உணர்வுபூர்வமாகத் தீட்டப் பட்டு, நிறைவேற்றப்படும் திட்டத்தின் அடிப்படையில் சமுதாயத்தின் நவீன உற்பத்திச் சாதனங்களையும் ஆள் பலத்தையும் பயன்படுத்தவும், சமுதாயத்தின் உற்பத்தித் தேவைகளையும் தனிப்பட்ட தேவைகளையும் முழுமை யாகப் பூர்த்தி செய்வதற்காகத் தேசியப் பொரு ளாதாரத்தின் பல்வேறு துறைகளுக்கு இடையே அவசி யமான சீரிசைவைக் கடைப்பிடிக்கவும் தேவையான வாய்ப்பு கிட்டுகிறது. சமூக உற்பத்தியின் பயன்தன்மையை உயர்த்தவும், சமுதாயம் தழுவிய அளவில் வேலை நேரத்தை அதிகபட்சம் சிக்கனப்படுத்தவும் உதவக் கூடிய சீரிசைவுகளைப் பொருளாதாரத்தில் நிலைநாட்டவும் திட்டமிடுதல் வழிகோலுகிறது.

தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்களை மேம் படுத்துவது சம்பந்தமான முக்கியப் போக்குகள் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியின் ஒவ்வொரு கட்டத்திலும் நிர்ணயிக்கப்படுகின்றன. இதில், ஏற்கெனவே அடையப் பட்ட வளர்ச்சி மட்டம் கணக்கில் கொள்ளப்படுகிறது. சோவியத் நாட்டுப் பொருளாதார வளர்ச்சியின் இன் றைய கட்டத்தில் இவை, மக்களின் வாழ்க்கைத் தரத் தை உயர்த்துவது சம்பந்தமான பெரும் கடமைகளின் நிறைவேற்றம், சமூக உற்பத்தியின் பயன்தன்மையை உயர்த்துவதன் முக்கிய நிபந்தனை என்ற வகையில் விஞ் ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தைத் துரிதப்படுத்து வது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்ட நீண்ட காலத் திசையமைவைக் கணக்கில் கொண்டு தீட்டப் படுகின்றன. உற்பத்திச் சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சிக் கும் நுகர்வு சாதனங்களின் உற்பத்தி வளர்ச்சிக்கும்

இடையிலான விகிதம், தொழிற்துறை வளர்ச்சிக்கும் விவசாயத் துறை வளர்ச்சிக்கும் இடையிலான விகிதம், உற்பத்தியின் எல்லா துறைகளுக்கும் போக்குவரத்துக்கும் இடையிலான விகிதம் போன்றவை உட்பட எல்லா தேசியப் பொருளாதார விகிதாச்சாரங்களும் மேற்கூறிய கடமைகளின் நிறைவேற்றத்தை நோக்கமாகக் கொண்டவையாகும்.

சோஷலிச நாடுகளின் அனுபவத்தைப் பயன்படுத்தி சோஷலிசத் திசையமைவு நாடுகளும் திட்டமிடும் துறையில் முதலடிகளை எடுத்து வைக்கின்றன. காங்கோ மக்கள் குடியரசு, மடகாஸ்கர் ஜனநாயகக் குடியரசு, சேய்ஷெல் தீவுகள் ஆகிய நாடுகள் ஐந்தாண்டுத் திட்டங்களைத் தீட்டியுள்ளன. சோஷலிச எத்தியோப்பியா பத்தாண்டு வளர்ச்சித் திட்டத்தை நடைமுறைப்படுத்தி வருகிறது.

நாடு தழுவிய ஒரே திட்டத்தின் படியான வளர்ச்சி, சமுதாயத்தின் வளர்ந்து வரும் தேவைகளுக்கு ஏற்ப பொருளாதாரம் மேம்பாடடைய உதவுகிறது. இத்திட்டம் உற்பத்தியின் எல்லா துறைகள், வகைகளுக்கு இடையிலான விகிதங்களையும் தொடர்புகளையும் நிர்ணயிக்கிறது, நாடு தழுவிய ஒரே சோஷலிசப் பொருளாதாரத்தின் உட்பகுதிகள் என்ற முறையில் இவற்றின் வளர்ச்சிப் போக்குகளையும் வேகங்களையும் முடிவு செய்கிறது, உற்பத்திச் சக்திகளை ஆங்காங்கே நிறுவுவதைப் பற்றி தீர்மானிக்கிறது.

திட்டம் என்பது ஒழுங்கமைக்க வல்ல, மாபெரும் சக்தியாகும். திட்டவட்டமான மைல் கற்களால் அளவிடப்பட்ட திட்டம், சமுதாயம் கடக்க வேண்டிய பாதையைத் துல்லியமாக வரையறுக்கிறது. இது சமூக-பொருளாதார வளர்ச்சியின் திசையமைவையும், குறிப்

பிட்ட கட்டத்திலும் எதிர்காலத்திலும் அடைய வேண்டிய எல்லைகளையும் சுட்டிக் காட்டும் திட்டவட்டமான செயல்திட்டமாகும்.

நியாயமான விநியோகக் கோட்பாடு

கா. மார்க்ஸ் கூறியபடி ஒரு உழைப்பாளி "சமூகத்துக்குத் தான் என்ன கொடுத்தாரோ, அதையே—எல்லாக் கழித்தல்களும் செய்யப்பட்ட பிறகு—மிகத் துல்லியமாக அவர் திரும்பப் பெறுகிறார்"* என்ற விநியோகக் கோட்பாடுதான் சோஷலிச உற்பத்திக்கு ஏற்றதாகும். அதாவது ஒருவன் தன் உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்றதைப் பெற வேண்டும். "ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் உழைப்பிற்கேற்ப" என்பதுதான் சோஷலிசத்தின் நியாயமான விநியோகக் கோட்பாடாகும். இது கொச்சையான சமப்படுத்தும் விநியோகத்தையும் எதிர்க்கிறது, அதே நேரத்தில் தன் உழைப்பால் நேர்மையாகக் கிடைக்க வேண்டியதை விட அதிகமாக சமுதாயத்திடமிருந்து பிடுங்க விரும்பும் முகமாக இந்த உண்மையான சமூக சமத்துவத்தை யாராவது குலைக்க விரும்புவதையும் எதிர்க்கிறது. சோம்பேறிகள், பிறர் உழைப்பால் வாழும் ஒட்டுண்ணிகள், சமுதாயத்திடமிருந்து இயன்ற அளவு அதிகமாகப் பிடுங்க விரும்புபவர்கள் போன்றோரை உழைப்பாளிகளின் சமுதாயத்தால் சகித்துக் கொள்ள முடியாது.

சுரண்டலையும் வலுக்கட்டாயமான நிர்ப்பந்த உழைப்பு

---

* மார்க்ஸ், எங்கெல்ஸ், லெனின், கம்யூனிஸ்ட் சமூகம், முன்னேற்றப் பதிப்பகம், மாஸ்கோ, *1983*, பக்கம் *50*.

முறைகளையும் ஒழித்துக் கட்டிய சோஷலிசம் உழைப்பின் முக்கியத்துவத்தையே பெரிதும் உயர்த்தியுள்ளது. சோஷலிச பலத்தின் வற்றா மூல ஊற்று இதில்தான் அடங்கியுள்ளது. உழைப்பிற்கான உரிமை மனிதனுக்குக் கிட்டியது, அதே நேரத்தில் அவன் உழைக்கவும் கடமைப் பட்டவனாகிறான். ''யார் உழைக்கவில்லையோ அவருக்கு சாப்பாடு கிடையாது'' என்பதுதான் சோஷலிசக் கோட்பாடாகும்.

சோஷலிசத்தின் விரோதிகள் இதை வைத்து எதையும் எளிதில் நம்புபவர்களை அச்சுறுத்த முயலுகின்றனர்: மனிதன் கண்டிப்பாக வேலை செய்துதான் ஆக வேண்டுமெனில், இது என்ன தனிநபர் சுதந்திரம் என்கின்றனர். வேறொருவரின் உழைப்பில் வாழ்ந்து பழகி விட்டவர்களால்தான் இப்படிக் கூற முடியும். உழைப்பது எனும் புனிதமான கடமையை அலட்சியப்படுத்துவதானது சாராம்சத்தில் பார்த்தால் ஒட்டுண்ணித் தனமாகும், இது சோஷலிச அமைப்பின் தன்மைக்கே அன்னியமானது. ஒரு உழைப்பாளி கூட இதை ஒப்புக் கொள்ள மாட்டான். சோஷலிசத்தின் கீழ் உழைப்பு முதல் ஜீவாதாரத் தேவையாக மாறாவிட்டாலும் இயன்ற வரை சிறப்பாக, பயன் மிகு வகையில் உழைக்கும் ஆர்வம் உண்மையிலேயே பரவலாக நிலவுகிறது.

இந்த் நாட்டத்திற்கு, சர்வபொது ஆர்வத்திற்கு அரசின் முழு ஆதரவு கிட்டுகிறது. ஊதிய முறைகளை அரசு இடையறாது மேம்படுத்தி வருகிறது, எல்லா இடங்களிலும் **தனிப்பட்ட பொருளாயத அக்கறைக்** கோட்பாடு செயல்படுமாறு பார்த்துக் கொள்கிறது, உழைப்பு அளவைக்கும் நுகர்வு அளவைக்கும் இடையிலான பொருத்தம் முழுமையாக கடைப்பிடிக்கப்படுமாறு கவனித்துக் கொள்கிறது.

உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ப அளிக்கப்படும் ஊதியம் அதிகரிக்கப்படுவதும், சமூக நுகர்வு நிதிகளிலிருந்து அளிக்கப்படும் உதவித் தொகைகளும் சலுகைகளும் அதிகரிக்கப்படுவதும்தான் சோஷலிசத்தில் உழைப்பாளிகளின் உண்மையான வருமான அதிகரிப்பிற்கான மூல ஊற்றுகளாகும். சோவியத் நாட்டில் உழைப்பாளிகளின் வருமான அதிகரிப்பில் முக்கால் பங்கு உழைப்பிற்கு அளிக்கப்படும் ஊதியத்தால் வருகிறது. இது உழைப்பாளிகளின் நுகர்வை திட்டமிட்ட முறையில் அதிகரிப்பதற்கு மட்டுமின்றி ஊதியத்தின் ஊக்குவிப்புத் தன்மையை கூட்டவும் (உற்பத்தியின் இறுதி முடிவுகளையும் உற்பத்தியின் பயன்தன்மை அதிகரிப்பதையும் இது சார்ந்திருப்பதை அதிகப்படுத்தி) உதவுகிறது.

முதலாளித்துவத்தில் உள்ள ஊதிய அசமத்துவத்தைப் போன்ற அதே அசமத்துவமும் ஏதோ சோஷலிசத்திலும் நிலவுவதாகக் கூறும் ''தத்துவங்களைப்'' பரப்புவது சில கம்யூனிச எதிர்ப்பு சித்தாந்திகளுக்குப் பிடித்தமான விஷயமாகும். தேர்ச்சி மிகு நிபுணர்களுக்கும் தேர்ச்சி குறைவான உழைப்பாளர்களுக்கும் இடையிலும் நிர்வாகத் துறையில் உள்ளவர்களுக்கும் தொழிலாளர்களுக்கும் இடையிலும் உள்ள ஊதிய வேறுபாடுகளை இவர்கள் சுட்டிக் காட்டுகின்றனர். சோஷலிச வினியோகக் கோட்பாடு சமமான ஊதியத்தைக் குறிக்கிறது என்று உண்மையான மார்க்சிஸ்டுகள் யாரும் எப்போதும் கூறவில்லை. சமமான உழைப்பிற்கு சமமான ஊதியம் எனும் கோட்பாடே சமமற்ற உழைப்பிற்கு சமமற்ற ஊதியம் என்பதைக் குறிக்கிறது. ஆனால் விஷயம் இதில் மட்டும் இல்லை. தேர்ச்சி மிகு நிபுணர்களுக்கு அளிக்கப்படும் அதிக ஊதியம், உற்பத்தியில் இவருடைய கணிசமான பங்களிப்புடன் தொடர்புடையது. இது உழைப்பாளிகளின் ஞானம்,

அனுபவம், திறமையை மேம்படுத்த கண்டிப்பான ஊக்க மாகத் திகழுகிறது. கல்வி கற்க சம உரிமை நிலவு கையில், உழைப்பாளிகளின் கல்வி மட்டம் மற்றும் தேர்ச்சியை உயர்த்த அரசும் தொழிற்சங்கங்களும் பெரும் அக்கறை காட்டும் போது, எல்லா உழைப்பாளிகளின் ஊதிய மட்டத்தையும் உயர்த்துவதற்கு அவசியமான முன்நிபந்தனைகள் தோற்றுவிக்கப்படுகின்றன. தேர்ச்சி மட்டம் அதிகரிப்பதும், செகன்டரி கல்வி பயின்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை கூடுவதும் மட்டுமின்றி, ஒப்பீட்டளவில் குறைவான மற்றும் நடுத்தர ஊதியம் பெறுபவர்கள், சிக்கலான பருவ நிலைமைகளில் வேலை செய்பவர்கள் போன்றோரின் ஊதியங்களை உயர்த்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளும் இதற்குச் சான்று.

உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ற வினியோகத்தின் கீழ் நுகர்வில் தவிர்க்க இயலாத சமமின்மை ஏற்படும். ஒரே மாதிரியான ஊதியம் குடும்பத்திலுள்ள நபர்களின் எண்ணிக்கையைப் பொறுத்து வெவ்வேறு உண்மையான வருமானமாக அமையும். இச்சமமின்மையை அகற்றுவதில் சமூக நுகர்வு நிதிகள், அதாவது அரசு உழைப்பாளிகளுக்கு வழங்கும் உதவித் தொகைகளும் சலுகைகளும் பெரும் பங்காற்றுகின்றன. இது தொழிலாளர்கள், உத்தியோகஸ்தர்களின் குடும்ப பட்ஜெட்டுகளுக்கு கணிசமான உதவியாகும். சமூக நுகர்வு நிதிகள் இல்லாமலிருந்து, உழைப்பாளிகள் மாத ஊதியம் மட்டும் பெற்று வந்தார்கள் என்றால் இவர்கள் கூடுதல் செலவுகளுக்காக பல சமயங்களில் பெரும் தொகையைச் செலவிட வேண்டி வரும். உதாரணமாக, முனிசிபல் கட்டணங்களுக்காக சுமார் மும்மடங்கும், நர்சரிப் பள்ளிகளில் குழந்தைகளைப் பராமரிக்க ஐந்து மடங்கும் அதிகமாகச் செலவிட வேண்டி வரும்.

சமூக நுகர்வு நிதிகளைக் கொண்டு மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த சோஷலிச அரசு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மனிதன் பிறந்தது முதல் முதிய பருவம் வரை நன்கு வாழ உதவுகின்றன. உழைப்பு, உடல்நலப் பாதுகாப்பு, கல்வி, இளம் தலைமுறையினரின் வளர்ப்பு, கலாசார தேவைகளைப் பூர்த்தி செய்தல், வீட்டு வசதிகள், ஓய்வு போன்ற பல்வேறு துறைகளிலும் இந்நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொருளாதார உந்துகோல்கள்

சோஷலிசப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக்கான வாய்ப்பும் அவசியமும் தானாகவே நிறைவேறி விடுவதில்லை. திட்டங்களைத் தீட்டி, நிறைவேற்றுவதில் நேரடியாகப் பங்கேற்கும் உழைப்பாளி மக்கள் திரளினரின், அரசின் சுறுசுறுப்பான, செயல்முனைப்பான நடவடிக்கை இதைத்தான் நோக்கமாகக் கொண்டது. அதாவது **ஜனநாயக மத்தியத்துவம்** பற்றிய லெனினுடைய கோட்பாடு அமல்படுத்தப்படுகிறது. மையப்படுத்தப்பட்ட திட்டமிடுதலில் அரசு பொருளாதார இயந்திரம் முழுவதும், வி. இ. லெனினின் வார்த்தைகளில் சொன்னால் ''ஒரே ஒரு பெரிய இயந்திரமாக, ஒரே ஒரு திட்டம் வழிகாட்ட லட்சோபலட்சம் மக்கள் வேலை செய்யும் ஒரு பொருளாதார அமைப்பாக''* மாறுகிறது. அதே நேரத்தில் திட்டங்களை நிறைவேற்றவும் இவற்றை விஞ்சவும் உதவும் உழைப்பாளிகளின் முன்முயற்சிகள்,

* வி. இ. லெனின், தேர்வு நூல்கள், பன்னிரண்டு தொகுதிகளில், தொகுதி *7, 1981,* பக்கம் *218.*

துணிவான துவக்கங்கள், புதிது புனைதல் முதலியன பெரும் வளர்ச்சியைப் பெறுகின்றன.

முன்முயற்சிகள், துவக்கங்களைப் பொறுத்த மட்டில் லாப வேட்டை, போட்டி எனும் குறுகிய பாதையில் தள்ளப்பட்ட முதலாளித்துவப் பொருளாதாரத்தை விட சோஷலிசப் பொருளாதாரம் அளவிடற்கரிய பெரும் சுதந் திரத்தை அளிக்கிறது.

ஒழுங்கமைக்கப்பட்ட, திட்டமிட்ட வகையில் வளரும் சமுதாயம் என்ற முறையில் சோஷலிசத்திற்கு என்று தனியான நிர்வாக முறைகள் உள்ளன. இங்கே பொரு ளாதார இயந்திரம், சோஷலிச அடிப்படைப் பொரு ளாதார விதியால் நிர்ணயிக்கப்படும் ஒரே லட்சியத்தை அடைவதற்கு கட்டுப்பட்டது, சோஷலிசத்தின் திட்டமிட்ட, சீரிசைவான வளர்ச்சி விதி, மற்ற பொருளாதார விதி களுக்கு ஏற்ப இது உருவாக்கப்படுகிறது. குறைந்தபட்ச செலவில் அதிகபட்ச பயன்களை அடைவதில் சோஷலிச சமுதாயம் முழுவதும் நேரடியாக அக்கறை கொண்டுள்ள தால் இது பொருளாதார நிர்வாகத்தின் மாற்ற இயலாத விதியாகிறது. பொருளாதார நிர்வகிப்பு முறையின் எல்லா அம்சங்களையும், எல்லாவற்றிற்கும் மேலாக, பொருளா தார சுய கணக்கீட்டு முறையைப் பயன்படுத்துவது இதைத் தான் நோக்கமாகக் கொண்டது. மொத்தத்தில் சமுதா யத்தின், இதன் பொருளாதார அங்கங்கள், தேசியப் பொருளாதாரத்தின் எல்லா தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் பரஸ்பர உறவு இந்த பொருளாதார சுய கணக்கீட்டு முறையின் அடிப்படையில்தான் அமை கிறது.

பொருளாதார சுய கணக்கீட்டு முறைக்கு பல்வேறு சோஷலிச நாடுகளில் பல வடிவங்கள் இருந்தாலும், இதன் முக்கியக் கோட்பாடுகள் பின்வருமாறு:

— தொழில் நிறுவனத்தின் பொருளாதார அன்றாட நடவடிக்கை சுதந்திரம்;

— பண வடிவத்தில் தொழில் நிறுவனத்தின் செலவுகளையும் விளைபயன்களையும் ஒப்பிடுதல், லாபம், ஆதாயத்திற்கு வகை செய்தல்;

— தொழில் நிறுவனத்தின் பொருளாதார நடவடிக்கையில் ஒவ்வொரு உழைப்பாளிக்கும் உழைப்புக் கூட்டிற்கும் உள்ள பொருளாயத அக்கறையும் பொறுப்புணர்வும்;

— லாப நஷ்டத்திற்குத் தொழில் நிறுவனமே பதில் சொல்லுதல்.

மொத்தத்தில் பொருளாதார சுய கணக்கீட்டு முறை என்பது சோஷலிசப் பொருளாதார நிர்வகிப்பு முறையாகும். இது திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றவும் தொழில் நிறுவனத்தின் வசமுள்ள பொருளாயத, உழைப்பு, நிதி மூலாதாரங்களை விவேகமாகப் பயன்படுத்தவும் லாபகரமாக, ஆதாயத்தோடு தொழில் நிறுவனம் இயங்கவும் வகை செய்கிறது.

பொருளாதார சுய கணக்கீட்டுச் சூழ்நிலைகளில் தொழில் நிறுவனம் அரசு நலன்களைக் கவனத்தில் கொண்டு, தனக்கு அளிக்கப்பட்ட உற்பத்தி நிதிகளைப் பயன்படுத்துகிறது, அதிகபட்ச பலனை அடைய பாடுபடுகிறது. இது உற்பத்தியை விவேகமாக ஒழுங்கமைக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்கிறது, தன் வசமுள்ள மூல இருப்புகளைத் திறமையாக உபயோகிக்கிறது. இன்று சோவியத் யூனியனிலும் மற்ற சில சோஷலிச நாடுகளிலும் உற்பத்தி, பொருளாதார நடவடிக்கையில் தொழில் நிறுவனங்கள், கூட்டமைப்புகளின் உரிமைகள் விரிவுபடுத்தப்படுகின்றன. அதே நேரத்தில், மைய ரீதியில் நிலை நாட்டப்படும் அரசுத் திட்டங்களை நிறைவேற்றுவதிலும் தம் சக நிறுவனங்களுக்கு உற்பத்திப் பொருட்களின்

சப்ளை சம்பந்தமாக ஏற்ற உறுதிமொழிகளை நிறை வேற்றுவதிலும் தொழில் நிறுவனங்களின் பொறுப்பு அதிகரிக்கப்படுகிறது. உழைப்புக் கூட்டுகள் மற்றும் ஒவ்வொரு உழைப்பாளியின் பொருளாயத அக்கறையை உயர்த்த பொருளாதார ஊக்குவிப்பு முறைகள் மேன் மேலும் பயன்படுத்தப்படுகின்றன. இதற்கான நிதிகள் அத்தொழில் நிறுவனத்தின் லாபத்திலிருந்து தோற்றுவிக்கப் படுகின்றன. சோவியத் நாட்டில் இதற்காக, உற்பத்தி வளர்ச்சி நிதி, பொருளாயத ஊக்குவிப்பு நிதி, சமூக-கலாசார நடவடிக்கைகள் மற்றும் வீடு கட்டுமான நிதி எனும் மூன்று நிதிகள் பயன்படுத்தப்படுகின்றன. இந் நிதிகளைச் செலவழிப்பது பற்றி உழைப்புக் கூட்டுகளின் கூட்டங்களில் முடிவு செய்யப்படுகின்றது, இது தொழிற் சங்கங்களின் பங்கேற்போடு, இவற்றின் கண்காணிப்பின் கீழ் நடக்கிறது எனும் அம்சம் குறிப்பிடத் தக்கது.

தொழில் நிறுவனம் லாபகரமாக இயங்க, சமுதாயம் முழுவதற்கும் குறிப்பிட்ட உழைப்புக் கூட்டிற்கும் அவசி யமான சேமிப்புகளை ஏற்படுத்த, இது லாபத்தைப் பெற வேண்டும்.

ஒரே பொது திட்டத்தின்படி வளரும் சோஷலிச பொருளாதாரத்தில் தேசியப் பொருளாதாரம் முழுவதி லும் செலவுகளையும் விளைபயன்களையும் மிகவும் துல்லியமாகக் கணக்கிட வேண்டும். இது பொருளாதார, சமூக வளர்ச்சியின் கடமைகளை வெற்றிகரமாக நிறை வேற்ற எல்லா உற்பத்தி மூல ஊற்றுகளையும் முழுமை யாக, விவேகமாகப் பயன்படுத்த வழிகோலும்.

சோஷலிசத்தில், திட்டமிட்ட பொருளாதார வரம்பு களுக்குள் செயல்படும் பொருளாதார ஊக்குவிப்புகளைப் பயன்படுத்துவதானது இதற்கு துணை புரிகிறது. இவற்றில் விலைகள் முறை முக்கியப் பங்காற்றுகிறது. தொழிற்

துறைப் பொருட்களுக்கான அரசு விலைகள், விவசாயப் பொருட்களுக்கான கொள்முதல் விலைகள், நுகர்வுப் பண்டங்களின் சில்லறை விலைகள் மற்றும் சேவை கட்டணங்கள் இவற்றிலடங்கும். இவ்விலைகள் எல்லாம் மைய ரீதியில் நிலைநாட்டப்படுகின்றன, பொருட்களை உற்பத்தி செய்து, விற்பதுடன் தொடர்புடைய செலவுகளையும் தேவையான சேமிப்புகளை ஏற்படுத்துவதையும் இவை நோக்கமாகக் கொண்டுள்ளன. இவை தவிர சோவியத் நாட்டில், தேவை, சப்ளை விகிதத்தை குறிப்பிட்ட அளவு சார்ந்திருக்கும் விலைகளும் உள்ளன. இவைதான் கூட்டுப் பண்ணைச் சந்தை விலைகள் எனப்படுகின்றன. தனியார் தோட்டங்களில் தோற்றுவிக்கப்பட்ட உணவுப் பண்டங்கள் இச்சந்தைகளில் விற்கப்படுகின்றன.

கடன், மற்ற வங்கி நடவடிக்கைகள், உற்பத்தி மூல ஊற்றுகளைப் பயன்படுத்துவதற்காக தொழில் நிறுவனங்கள் வழங்கும் கட்டணங்கள் போன்றவையும் பொருளாதார உந்துகோல்களாகும்.

இப்படிப்பட்ட பொருளாதார ஊக்குவிப்புச் சாதனங்களைப் பயன்படுத்துவதால் சோஷலிசப் பொருளாதாரம் ஏதோ முதலாளித்துவப் பொருளாதாரத்திலிருந்து, சந்தைப் பொருளாதாரம் என்றழைக்கப்படுவதிலிருந்து அதிகம் மாறுபடவில்லையென பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் கூறுகின்றனர். ஆனால் விஷயம், இந்தச் சாதனங்களின் பெயர்களில் இல்லை, இவற்றின் சாரத்திலும், இவை யாருக்குப் பயன்படுகின்றன, பொருளாதார வாழ்வில் இவை எந்த பங்காற்றுகின்றன என்பதிலும்தான் விஷயம் உள்ளது. சோஷலிச சமுதாயம் பயன்படுத்தும் பொருளாதார உந்துகோல்கள் தம் தன்மையிலும் நோக்கத்திலும் முதலாளித்துவ பொருளாதாரத்தின் பண்ட-பண

அம்சங்களிலிருந்து, முதலாளித்துவத்தில் உழைப்பாளி களுக்கு தவிர்க்க இயலாது ஏழ்மையை ஏற்படுத்தும் சந்தை தான்தோன்றித்தனத்திலிருந்து (இதை எந்த ஒரு முதலாளித்துவ அரசாலும் சமாளிக்க முடிவதில்லை) அடிப்படையிலேயே மாறுபடுகின்றன.

பொருளாதார நிர்வகிப்பு முறையை எடுத்துக் கொண்டால் ஒரு பிரம்மாண்டமான இயந்திரத்தை நிர்வகிக்கும் உணர்வு ஏற்படுகிறது. இந்த இயந்திரத்தின் எல்லா பகுதிகளும் ஒரே சீரிசைவான தொனியில் இயங்க வேண்டும். நன்கு நிர்வகிக்க, இந்த இயந்திரத்தின் அமைப்பு, இதன் பகுதிகளின் பரஸ்பர செயலாக்கத்தை நன்கு அறிந்திருக்க வேண்டும்.

புறவய பொருளாதார விதிகளை அறிந்து, இவற்றைப் பயன்படுத்தும் கோட்பாடுகளை நிர்ணயிப்பது என்பது விஞ்ஞானத்தின் கடமை மட்டுமின்றி சோஷலிசப் பொரு ளாதார நிர்வகிப்பு நடைமுறையின் கடமையுமாகும். லட்சோபலட்சம் மக்களின் நடவடிக்கைகள்தான் இந் நடைமுறையைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. சோஷ லிசத்தில் இந்நடவடிக்கைகளில்தான் பொருளாதாரம் ''நடந்து கொள்ளும் முறை'' வெளிப்படுகிறது. சோஷ லிசப் பொருளாதாரத்தில் மக்கள் திரளினர் தீவிர மாகப் பங்கேற்காவிடில் ''அதி உன்னத'' இயந்திரங்களின் அடிப்படையிலான எந்த ஒரு கறாரான மையப்படுத் தலாலும் தேசியப் பொருளாதாரத்தின் திட்டமிட்ட வளர்ச்சிக்கு வழிகோல முடியாது. பொருளாதார வாழ்க் கையின் நடைமுறையில் உழைப்பாளிகள் பொருளாதார வளர்ச்சி விதிகளை அறிகின்றனர், சமுதாயம் முழுவதன் நலன்களுக்காக, சமுதாய உறுப்பினர் ஒவ்வொருவரின் நலன்களுக்காக இவற்றை மேன்மேலும் முழுமையாகப் பயன்படுத்த முயலுகின்றனர்.

உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதுதான் மிக முக்கிய, அடிப்படைக் கடமையாகும். பொருளாதார வளர்ச்சியும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதும் இதைப் பொறுத்தது. ஒவ்வொரு அலகு பொருளையும் உற்பத்தி செய்ய எவ்வளவுக்கெவ்வளவு குறைவாக உழைப்பும் சாதனங்களும் செலவிடப்படுகின்றனவோ சமுதாயத்திற்கு தன் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வாய்ப்பு அவ்வளவுக்கவ்வளவு அதிகமாயிருக்கும். இது எல்லோருக்கும் புரியக் கூடியதே, ஆனால் உழைப்பின் உற்பத்தித் திறனை உண்மையில் எப்படி உயர்த்துவது என்பதை நிர்ணயிப்பது பெரிதும் சிக்கலானது.

இந்த விஷயத்திலும் முதலாளித்துவத்தை விட சோஷலிசம் அதிகமான வாய்ப்புகளை ஏற்படுத்துகிறது. எல்லாவற்றிற்கும் மேலாக இது உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதில் உள்ள வெகுஜன அக்கறையாகும். இது சோஷலிசப் போட்டியிலும் உழைப்பாளிகளின் முன்முயற்சிகளின் வெகுஜன வளர்ச்சியிலும் வெளிப்படுகிறது. உழைப்பாளிகள் தத்தம் வேலையிடங்களில் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் வழிகளையும், தொழில்நுட்ப முறைகள் மற்றும் உழைப்பு ஒழுங்கமைப்பை மேம்படுத்தும் வழிகளையும் இடையறாது தேடுகின்றனர். கோடானுகோடி மக்களின் இயக்கமாகிய இது சோஷலிச வாழ்க்கை முறையின் சிறப்பு அம்சங்களில் ஒன்றாகியுள்ளது.

உழைப்பாளிகளின் முன்முயற்சியின் அடிப்படையில், இவர்களின் ஞானம், திறமையின் உதவியோடு உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்தும் எல்லா காரணிகளும்

தட்டியெழுப்பப்படுகின்றன. பெருவீத தொழிற்துறைக்கான பொருளாயத அடிப்படைக்கு வகை செய்வது, விஞ்ஞான, தொழில்நுட்பச் சாதனைகளை உற்பத்தியில் புகுத்துவது, உழைப்பாளிகளின் கல்வி, கலாசார மட்டத்தையும் விசேஷ தொழில்நுட்ப பயிற்சி மட்டத்தையும் உயர்த்துவது, உழைப்புக் கட்டுப்பாட்டையும் ஒழுங்கமைப்பையும் மேம்படுத்துவது, வேலைத் திறமைகளை மேம்படுத்துவது ஆகியவை சோஷலிச சமுதாயத்தில் உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்துவதற்கான முக்கிய நிபந்தனைகளாகும்.

விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றம்தான் உற்பத்தி வளர்ச்சியின் தீர்மானகரமான காரணி, பொருளாயத அடிப்படை ஆகும். இயந்திரங்களின் திறன்களை அதிகப்படுத்துவது, இவற்றின் வேலை வேகங்களைக் கூட்டுவது, பெரும் உடலுழைப்பைக் கோரும் சாதாரண இயந்திரங்களிலிருந்து அரைத் தானியங்கி, முழுத் தானியங்கி இயந்திரங்களுக்கு மாறுவது ஆகியவற்றின் மூலம் தொழில்நுட்பம் மேம்படுத்தப்படுவது நடைபெறுகிறது. இவ்வாறாக சோஷலிசத்தில் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றத்தின் பொருளாதாரப் பயன்தன்மை பெரும் சமூக பயன்தன்மையோடு நேரடியாகத் தொடர்புடையது. புது தொழில்நுட்பத்தில் உழைப்பின் தன்மையே மாறுகிறது, இதில் பல்வேறு நடவடிக்கைகளைச் செய்ய உடலுழைப்பு அல்ல மூளையுழைப்பு மேன்மேலும் அதிகமாகத் தேவைப்படுகிறது. இது தவிர, உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதால், வேலை நேரத்தைப் படிப்படியாகக் குறைக்கவும் இதற்கேற்றபடி ஓய்வு நேரத்தைக் கூட்டவும், கல்வித் தரத்தை உயர்த்தவும் விளையாட்டு நேரத்தைக் கூட்டவும் வாய்ப்பு கிட்டுகிறது என்பதைக் கவனத்தில் கொண்டால் இந்த உற்பத்தித் திறன் அதி

கரிப்பானது, உழைப்பாளியின் சீரிசைவான, பன்முக வளர்ச்சிக்கான கண்டிப்பான நிபந்தனையாகும் என்பது தெளிவாகும்.

உழைப்பாளிகளின் கல்வித் தரம், தேர்ச்சி, கலாசார மட்டம் முதலியவை அதிகரிப்பதானது, உழைப்பின் உற் பத்தித் திறனை உயர்த்த தன் பங்கிற்கு உதவுகிறது. அதுவும் விஞ்ஞான-தொழில்நுட்ப முன்னேற்றச் சூழ்நிலை களில் தொழில்நுட்பத்தின் பால் மட்டுமின்றி இந்த நவீன இயந்திரங்களைத் தோற்றுவிப்பவர்கள், இவற் றைப் பயன்படுத்துபவர்கள் பாலான கோரிக்கைகளும் அதிகரித்து வருவதால் இது முக்கியமாகும். இன்று ஒவ்வொரு உழைப்பாளியும் மேன்மேலும் அதிக அளவு கருவிகளையும் உற்பத்திச் சாதனங்களையும் பயன்படுத்து கிறான். அவன் இவற்றை எவ்வளவு சிறப்பாகப் பயன் படுத்துகிறான் என்பது இறுதியில் இவனுடைய ஞானம், தேர்ச்சி, வேலையின் பாலான ஆக்கபூர்வமான நல்ல அணுகுமுறை ஆகியவற்றைப் பொறுத்தது.

உழைப்பின் உற்பத்தித் திறன் எவ்வளவுக்கெவ்வளவு அதிகமோ, அவ்வளவுக்கவ்வளவு நாட்டின் பொருளா தாரம் பலமானது, அவ்வளவுக்கவ்வளவு அதன் சமூக உற்பத்திப் பொருள் அதிகமானதாயிருக்கும்.

சமூக உற்பத்திப் பொருள்

குறிப்பிட்ட ஒரு காலகட்டத்தில் சமுதாயத்தால் தோற்று விக்கப்பட்டவை எல்லாம் சேர்ந்து **சமூக உற்பத்திப் பொருளை** உருவாக்குகின்றன. இது எப்படி வினியோகிக்கப் படுகிறது? முதலில், பொருட்களின் உற்பத்திக்காக சமுதாயம் செலவழித்ததெல்லாம் ஈடுகட்டப்படுகிறது. மூலப்பொருட்கள், எரிபொருள், மற்ற வகையான பொருட்

களின் மதிப்பு, வேலையின் போது தயாரான பொருள் மீது இயந்திரங்கள், உபகரணங்கள் போன்றவை மாற்றிய மதிப்பு ஆகியவை இதிலடங்கும். இவையெல்லாம் சேர்ந்து ஈடுகட்டும் நிதியை உருவாக்குகின்றன. சமூக உற்பத்திப் பொருளின் மதிப்பிலிருந்து இதைக் கழித்தால் தேசிய வருமானம், அதாவது புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட மதிப்பு எஞ்சும். தேசிய வருமானம் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படுகிறது. முதல் பகுதி சேமிப்பு நிதி ஆகும். இது உற்பத்தியை விரிவுபடுத்துவதற்காக சமுதாயம் ஒதுக்க வேண்டிய சாதனங்களாகும். வீடுகள், பள்ளிகள், மருத்துவமனைகள், நாடக அரங்குகள் போன்ற கல்வி, சமூக-கலாசார அமைப்புகளைக் கட்டத் தேவையான சாதனங்களும் இவற்றில் அடங்கும். சேமிப்பு நிதியைக் கொண்டுதான் சேம இருப்பு மற்றும் இன்ஷூரன்ஸ் நிதி களும் தோற்றுவிக்கப்படுகின்றன. இரண்டாவது பகுதி நுகர்வு நிதி ஆகும். சோஷலிச சமுதாயத்தில் இது மேன் மேலும் அதிகரித்து வரும் கணிசமான பகுதி. சோவியத் யூனியனில் நுகர்வு நிதி தேசிய வருமானத்தில் முக்கால் பங்கிற்கும் மேலானது. தேசியப் பொருளாதாரம் மற்றும் கலாசாரத் துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு அளிக்கப்படும் ஊதியம், விஞ்ஞான, கல்வி, மருத்துவ நிறுவனங்களைப் பராமரிக்க ஆகும் செலவு ஆகியவை இதிலடங்கும். குழந்தை வளர்ப்பு, பள்ளிக் கல்வி, வயதானவர்கள், உடல் ஊனமடைந்தவர்கள், வேலை செய்ய இயலாதவர்கள் ஆகியோரைப் பராமரிக்கும் செலவும் இதிலடங்கும். நுகர்வு நிதியின் ஒரு பகுதி அரசு நிர்வாக அமைப்பைப் பராமரிக்கவும் நாட்டுப் பாதுகாப்பிற்கும் செல்கிறது. பாதுகாப்பிற்கான செலவுகள் ஒப்பீட்டளவில் குறை வானவை, மொத்தத்தில் நிலையானவை.

சோஷலிசத்தின் கீழ் சமூக உற்பத்திப் பொருளும்

தேசிய வருமானமும் வினியோகிக்கப்படும் கோட்பாடு களைப் பற்றிய சுருக்கமான விளக்கத்திலிருந்தே, மக் களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நேரடி யாக ஒதுக்கப்படும் நிதியின் அளவு, உற்பத்தியின் பொது அளவையும், ஈடுகட்டுதல் மற்றும் சேமிப்பிற்கான நிதிகள் எவ்வளவு சிறப்பாகப் பயன்படுத்தப்படுகின்றன என்பதை யும் பொறுத்தது என்பது தெளிவாகிறது. எனவேதான் உற்பத்தியின் அளவைப் பெருக்குவதில் மட்டுமின்றி உற்பத்தியின் பயன்தன்மையைக் கூட்டுவதிலும் சமுதாயம் முழுவதும் அக்கறை கொண்டுள்ளது. உற்பத்தியின் அளவுகளை அதிகரிக்கும் போது, மேன்மேலும் அதிகமான உற்பத்தி மூலாதாரங்களை இதில் ஈடுபடுத்தும் போது இது குறிப்பாக முக்கியமானது. 1940 – 1982இல் சோவியத் யூனியனில் தேசிய வருமானம் நபர் ஒருவருக்கான கணக் கில் 10.6 மடங்கும் உண்மையான வருமானங்கள் 6 மடங் கும் அதிகரித்துள்ளன.

உற்பத்தியின் செயல்வன்மையை உயர்த்துவது என்பது ஒரு பன்முக நிகழ்ச்சிப் போக்காகும். இதில் பின்வரும் முக்கியமான அம்சங்கள் அடங்கியுள்ளன:

முதலில், உழைப்பின் உற்பத்தித் திறனை உயர்த்த வேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்தி நிகழ்ச்சிப் போக்குகளை இயந்திரமயப்படுத்துதல், தானியங்கி முறைப் படுத்துதல் மூலமும் உழைப்பாளிகளின் தேர்ச்சியையும் திறமையையும் வளர்ப்பதன் மூலமும் இதை செய்ய வேண்டும்.

இரண்டாவதாக, நவீன தொழில்நுட்பத்தைப் புகுத்தி, உழைப்பின் ஒழுங்கமைப்பை மேம்படுத்துவதன் மூலம் இயந்திரங்கள், உபகரணங்களைப் பயன்படுத்துவதை மேம்படுத்த வேண்டும்.

மூன்றாவதாக, தொழில்நுட்பத்தை மேம்படுத்தி

மூலப்பொருட்கள், எரிபொருள், மற்ற வகையான பொருட்களைச் சிக்கனப்படுத்த வேண்டும், உற்பத்திப் பொருட்களின் தரத்தை உயர்த்த வேண்டும்.

இவையெல்லாம் ஒன்றுசேர்ந்துதான் உற்பத்தியைத் தீவிரமயப்படுத்துதல் எனும் கருத்தை ஏற்படுத்துகின்றன. இது சோஷலிசப் பொருளாதாரத்தின் வளர்ச்சியில் புதிய கட்டத்தைக் குறிக்கிறது.

சோஷலிச சமுதாயத்தைக் கட்டத் துவங்கிய போது சோஷலிசத் தொழிற்துறைமயப்படுத்தல் எவ்வளவு முக்கியமானதாயிருந்ததோ அதே போல் வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தில் உற்பத்தியைத் தீவிரமயப்படுத்துவது முக்கியமானது. இது கோட்பாட்டளவில் புதிய, உயர் செயல்வன்மை மிக்க புனருற்பத்தி வகையாகும்.

உழைப்பாளிகள் உற்பத்திச் சாதனங்களைத் தம் கரங்களில் எடுத்துக்கொண்டு திட்டமிட்ட வகையில் தம் பொது தேசியப் பொருளாதாரத்தை வழிநடத்தும் போது, இவர்கள் தனியுடைமையாளர்களை விட அதிக பொறுப்பானவர்கள், சிக்கனமானவர்கள் என்பது சோஷலிசத்தின் சந்தேகத்திற்கிடமற்ற மேம்பாடாகும். இதை தீவிர பொருளாதார வளர்ச்சி தெட்டத் தெளிவாக மெய்ப்பிக்கிறது. ஒன்றுபட்ட உழைப்புக் கூட்டு மக்கள் அனைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறது. இது எல்லாவற்றிற்கும் மேலாக முக்கிய உற்பத்திச் சக்தியாகிய உழைக்கும் மனிதனை விவேகமாகப் பயன்படுத்துவதன் மீது அக்கறை காட்டுகிறது. உழைப்பின் விளைபயன்கள் விரயமாக்கப்படாமல், அதிகபட்சம் உற்பத்தியிலும் நுகர்விலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதன் மீதும் இது அக்கறை செலுத்துகிறது. சமுதாய உறுப்பினர்கள் அனைவரும் இதை உடனடியாக உணருவதில்லை, பொதுச் சொத்தை தன் சொத்தாக மதிக்க மக்கள் கற்றுக்

கொள்ள பெரும் வரலாற்றுக் காலகட்டம் தேவைப் படுகிறது. ஆனால் இந்த உணர்வு கண்டிப்பாக வரும், மேன்மேலும் அதிகமான உழைப்பாளிகள் சமுதாயத்தின் முன், தம் சகதோழர்கள் முன் உயர்வான பொறுப் புணர்வை, கடமையுணர்வைப் பெறுகின்றனர்.

உற்பத்திச் சக்திகளின் வளர்ச்சிக்கும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை இடையறாது உயர்த்துவது எனும் உயர் லட்சியத்தை அடையவும் அவசியமான பரவலான வாய்ப்புகளை அளிக்கும் கோட்பாட்டு ரீதியாகப் புதிய உற்பத்தி உறவுகளின் அடிப்படையில் சோஷலிசம் வளர்ந்து வலுப்படுகிறது என்பதை மேற்கூறியவை காட்டுகின்றன. மனித சமுதாயத்தின் பொருளாதார, சமூக முன்னேற்றத்திற்கு அவசியமான, உண்மையிலேயே எல்லையற்ற வாய்ப்புகளை சோஷலிசம் ஏற்படுத்துகிறது என்று இதற்குப் பொருள்.

இப்பாதையில் வெற்றிகரமாக நடைபோட சோஷலிசத்தின் அரசியல் பொருளாதாரம் நம்பகரமான வழிகாட்டியாக விளங்குகிறது.

புதிய வகையான உலகப் பொருளாதாரம்

1917இல் ருஷ்யாவில் மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்றதையடுத்து பூமியில் சோஷலிச உலகம் எனும் புதிய உலகம் தோன்றியது. இரண்டாவது உலக யுத்தத்திற்குப் பின் சில ஐரோப்பிய, ஆசிய நாடுகளில் சோஷலிசப் புரட்சிகள் வெற்றி பெற்றன, லத்தீன் அமெரிக்காவில் கியூபா முதல் சோஷலிச நாடாகியது. உலக சோஷலிச அமைப்பு உருவாகியது. **உலக சோஷலிச பொருளாதார அமைப்பு இதன் பொரு**

ளாதார அடிப்படையாகத் திகழுகிறது.

1919இல் சோவியத் நாட்டில் மட்டும் சோஷலிசம் நிலவிய போது சோஷலிச உலகம் உலகின் மொத்தப் பரப்பில் 16%யும், மக்கள் தொகையில் 7.8%யும் மட்டுமே உள்ளடக்கியிருந்தது என்றால் 1982இல் இக்குறியீடுகள் முறையே 26.2%ஆகவும் 32.7%ஆகவும் இருந்தன. அதாவது உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட மூன்றிலொரு பகுதியினர் சோஷலிசத்தின் கீழ் வாழ்கின்றனர். இன்று சோஷலிச நாடுகள் உலக தொழிற்துறை உற்பத்தியில் 40%க்கும் மேல் தருகின்றன. 1950இல் உலகம் முழுவதும் உற்பத்தி செய்யப்பட்ட தொழிற்துறைப் பொருட்களை விட அதிகமாக இன்று சோவியத் நாட்டில் உற்பத்தி செய்யப்படுகிறது.

இன்று உலகில் சோஷலிசப் பொருளாதார அமைப்பு, முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு இரண்டும் நிலவுகின்றன. இரு அமைப்புகளின் சகவாழ்வு நவீன சூழ்நிலைகளில் பாட்டாளி வர்க்கத்திற்கும் முதலாளி வர்க்கத்திற்கும் இடையிலான வர்க்கப் போராட்டத்தின் வடிவங்களில் ஒன்றாகும். ஆனால் இதனால், எதிரெதிரான உலக அமைப்புகளில் உள்ள நாடுகளுக்கு இடையில் ஆயுத மோதலும் யுத்தங்களும் மூள வேண்டுமென பொருளாகாது. ஏகாதிபத்தியத்தைப் போல் சோஷலிசம் ஆயுதங்களைக் காட்டி மிரட்டவில்லை, இராணுவ பலத்தைக் காட்டி அச்சுறுத்தவில்லை. ஏனெனில் சோஷலிசத்தின் பலம் தொழிலாளி வர்க்கத்தின், எல்லா நாடுகளிலும் உள்ள உழைப்பாளிகளின் மாபெரும் புரட்சிக் கடமை வரலாற்று ரீதியாகச் சரியானது என்பதில் அடங்கியுள்ளது. புரட்சியை ஏற்றுமதி செய்ய முடியாது, ஒவ்வொரு குறிப்பிட்ட நாட்டிலும் குறிப்பிட்ட சூழ்நிலைகள் உருவாகி, புறவய மற்றும் அகவய முன்நிபந்தனைகள்

உருவாகும் போதுதான் புரட்சி ஏற்படும் என்று நன்கு அறிந்த போதிலும் பூர்ஷ்வா சித்தாந்தவாதிகள் ''புரட்சி ஏற்றுமதியைப்'' பற்றிக் கூக்குரலிடுகின்றனர். சோஷலிச நாடுகள் புரட்சியை ஏற்றுமதி செய்வதாகக் குற்றஞ் சாட்டும் வெட்கம் கெட்ட ஏகாதிபத்திய வட்டங்கள் எதிர்ப்புரட்சியை ஏற்றுமதி செய்கின்றன. நவீன வரலாற்றில் இதற்குப் பல உதாரணங்கள் உள்ளன.

வேறுபட்ட சமூக-பொருளாதார அமைப்புகளை உடைய நாடுகளுக்கு இடையில் சமாதான பொருளாதார ஒத்துழைப்பை ஏற்படுத்த வேண்டும், பொருளாதாரப் போட்டியை நடத்த வேண்டும் என்று சோஷலிச நாடுகள் கருதுகின்றன. இப்போட்டியில் சோஷலிச நாடுகள் தம் சந்தேகத்திற்கிடமற்ற மேம்பாடுகளை வெளிப்படுத்துகின்றன, இதன் மூலம் உலக சமூக-பொருளாதார வளர்ச்சிப் போக்கின் மீது புரட்சிகரத் தாக்கத்தைச் செலுத்துகின்றன. எல்லா உழைப்பாளிகளுக்கும் சுதந்திரத்தையும் உண்மையான ஜனநாயக உரிமைகளையும் நல்வாழ்வையும் பரவலான கல்வி வாய்ப்பையும் நாளைய தினத்தில் உறுதியான நம்பிக்கையையும் அளிக்கும் சோஷலிசத்தை மனித வரலாற்றிலேயே மிகவும் முற்போக்கான அமைப்பாக கோடிக்கணக்கான மக்கள் பார்க்கின்றனர், தம் சிந்தனைகளையும் உணர்வுகளையும் இதன் மீது செலுத்துகின்றனர். சோஷலிசம் உலக மக்களுக்கு சமாதானத்தைக் கொண்டு வருகிறது, இது சம உரிமையுள்ள சர்வதேச ஒத்துழைப்பிற்குத் தெட்டத் தெளிவான உதாரணமாகத் திகழுகிறது, தம் சுதந்திரம், விடுதலைக்காகப் போராடும் மக்களினங்களுக்கு நம்பகரமான ஆதாரமாக விளங்குகிறது.

முதலாளித்துவ உலகம் ஏகாதிபத்திய அரசுகளுக்கு இடையிலான முரண்பாடுகளால் பிளவுண்டு கிடக்கிறது,

இது இதிலுள்ள அரசுகளின் சமமின்மை, மக்களினங்களை ஒடுக்குவது, அடிமைப்படுத்துவது ஆகியவற்றின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதற்கு மாறாக சோஷலிச உலகில் உண்மையான சமத்துவமும் பரஸ்பர வெற்றிகளின் மீதான அக்கறையும், சோதர ஒத்துழைப்பும் பரஸ்பர உதவியும் நிலைபெற்று வளர்ந்து வருகின்றன. சோஷலிச உலகில் யாரும் யாரையும் சுரண்டுவதில்லை, பொருளாதார ரீதியாகப் பலமான நாடுகள் பலங்குன்றிய நாடுகளின் மீது அகோரமான, ஒருதலைபட்சமான பொருளாதாரக் கட்டமைவைத் திணிப்பதில்லை, இவற்றைத் தொழிற்துறை ரீதியாக வளர்ச்சியடைந்த நாடுகளின் விவசாய, மூலப்பொருள் சப்ளை நாடுகளாக மாற்றுவதில்லை. மாறாக இங்கே பொருளாதார வளர்ச்சியை சமப்படுத்தும் விதி செயல்படுகிறது. முன்னர் பின்தங்கியிருந்த நாடுகளை முன்னணி நாடுகளின் மட்டத்திற்கு உயர்த்தும் பொருட்டு சர்வாம்ச ரீதியில் தன்னலமற்ற உதவி அளிக்கப்படுகிறது. சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினையில் எல்லா நாடுகளும் சமமாகப் பங்கேற்கின்றன; இது இவற்றின் தேசியப் பொருளாதாரங்களைப் பன்முக ரீதியில் வளர்க்க உதவுகின்றது; இங்கே, ஒரு குறிப்பிட்ட நாட்டில் எந்த உற்பத்தித் துறைகளின் வளர்ச்சிக்கு அனுகூலமான சூழ்நிலைகள் நிலவுகின்றனவோ அவற்றிற்கு முக்கியத்துவம் அளிக்கப்படுகிறது.

சமூக-பொருளாதார அமைப்பின் பொதுமையின் அடிப்படையில் அரசியல், பொருளாதாரம், சமூக வாழ்வு ஆகியவற்றிலும் பொது அம்சங்கள் தோன்றுகின்றன. சோஷலிச நாடுகள் இவ்வாறு படிப்படியாக நெருங்கி வரும் போக்கு இன்று ஒரு நியதியாக வெளிப்படுகிறது. குறிப்பிட்ட ஒரு கட்டத்தில் இந்நியதி சர்வ

தேச சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பில் வெளிப் பட்டது. இதன் நிறைவேற்றத்தில் பரஸ்பர பொரு ளாதார உதவிக் கவுன்சில் முக்கியப் பங்காற்றுகிறது. இந்த சர்வதேச அமைப்பு பொருளாதார ஒத்துழைப் பிற்கு உதவுவதற்காக ஏற்படுத்தப்பட்டது. இக்கவுன்சில் ஒரு திறந்த ஸ்தாபனமாகும், அதாவது இதன் லட்சியங் களையும் கோட்பாடுகளையும் ஏற்றுக்கொண்டு, இக் கோட்பாடுகளின் அடிப்படையில் ஒத்துழைக்கத் தயாரா யிருக்கும் நாடுகள் இதில் சேரலாம். சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பானது முக்கிய உற்பத்தித் துறைகளிலும், விஞ்ஞான, தொழில்நுட்பத் துறைகளிலும் சோஷலிச நாடுகளுக்கிடையே ஆழ்ந்த, நிலையான கூட் டுறவுகளை ஏற்படுத்துவதை முன்னூகிக்கிறது. கூட்டுத் திட்ட நடவடிக்கை, சர்வதேசப் பொருளாதார, விஞ் ஞான, தொழில்நுட்ப ஸ்தாபனங்களையும் பொரு ளாதார, விஞ்ஞான, தொழில்நுட்ப ஒத்துழைப்பின் பல்வேறு வடிவங்களையும் ஏற்படுத்துவது ஆகியவை இதிலடங்கும். கூட்டுத் தொழிற்துறை நிறுவனங்களை ஏற்படுத்துவது இத்தகைய வடிவங்களில் ஒன்றாகும்; மேன்மேலும் வளர்ந்து வரும் இது சர்வதேச சோஷ லிசச் சொத்துடைமை தோன்ற அடிப்படையாகத் திகழுகிறது.

சோஷலிசப் பொருளாதார ஒருங்கிணைப்பை நிறை வேற்றுவதில் அடையப்பட்ட வெற்றிகள் சோஷலிசத்தின் ஆக்கபூர்வமான வாய்ப்புகள் மற்றும் முதலாளித்துவத்தை விட இதற்குள்ள வரலாற்று மேம்பாடுகள் ஆகியவற்றிற் கான புதிய சான்றாகும்.

சோஷலிசத்தை மேம்படுத்துதலும் கம்யூனிசத்தை நோக்கிய படிப்படியான மாற்றமும்

சோஷலிசம் என்பது முன்னோக்கி வளரும் சீரிசைவான அமைப்பு. சோஷலிசப் பொருளாதாரம் தன் தொடர்ச்சியான வளர்ச்சியில் நெருக்கடிகளையும் வீழ்ச்சிகளையும் சந்திப்பதில்லை, நிலையான உயர் வேகங்களில் இது தொடர்ந்து முன்னோக்கி வளர்ந்து வருகிறது என்பதில் மட்டும் மேற்கூறிய அம்சம் வெளிப்படவில்லை. இவ்வளர்ச்சியின் போது சமூக அமைப்பும் இடையறாது குணாம்ச ரீதியாக மாறி வருகிறது என்பதும் முக்கியமாகும். உற்பத்திச் சக்திகள், உற்பத்தி உறவுகள் இரண்டையுமே இம்மாற்றம் ஆட்கொள்கின்றது. இந்த நிரந்தர மாற்றமும் மேம்பாடும்தான் முற்போக்கு சமூக அமைப்பு என்ற வகையில் சோஷலிசத்தின் தீர்மானகரமான காரணிகளில் ஒன்று, இதன் ஆக்கபூர்வமான வாய்ப்புகள், மேம்பாடுகளின் குறியடையாளம்.

சோஷலிசம் என்பது கம்யூனிச சமூக அமைப்பின் முதலாவது, கீழ்நிலைக் கட்டம் ஆகும். இது தன் வளர்ச்சியில் பல நியதியான, வரலாற்று ரீதியாக அவசியமான கட்டங்களைக் கடந்து வருகிறது. மாறுநிலை கட்டத்தில் புதிய சமுதாயத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளம் தோற்றுவிக்கப்படுகிறது, சமுதாயம் முழுவதும் சோஷலிச உற்பத்தி உறவுகள் நிலைநாட்டப்படுகின்றன, சுரண்டல் வர்க்கங்களும் இவற்றைத் தோற்றுவிக்கும் மூல ஊற்றுகளும் காரணங்களும் அழிக்கப்படுகின்றன. இக்கடமைகள் நிறைவேற்றப்பட்டதும் சோஷலிசம் பெரும்பாலும் கட்டப்பட்டு விட்டதாகக் கூறலாம். சோஷலிச வளர்ச்சியின் அடுத்த கட்டத்தில், சோஷலிசத்திற்கே உரித்தான கூட்டு மனப்பாங்கின் அடிப்படைகளில்

சமூக உறவுகள் மாற்றியமைக்கப்படுகின்றன. இக்கடமைகள் நிறைவேற்றப்பட்ட பின் சோஷலிச சமுதாயம் வரலாற்று ரீதியாக நீண்ட, **வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தினுள்** நுழைகிறது. சோஷலிசத்தை இன்னமும் மேம்படுத்துவதுதான் இக்கட்டத்தின் முக்கிய சாரமாகும்; இப்போக்கில் கம்யூனிசத்தை நோக்கிய படிப்படியான முன்னேற்றம் நடைபெறுகிறது. சோவியத் யூனியன் இந்த நீண்ட வரலாற்று கட்டத்தின் துவக்கத்தில் உள்ளது. வளர்ச்சியடைந்த சோஷலிசக் கட்டத்தில் முதன்முதலாக நுழைந்த நாடு சோவியத் யூனியன்தான்.

இக்கட்டங்களைத் தாண்டிச் செல்வது முடியாது என்று வரலாறு காட்டியுள்ளது. சோஷலிசப் புரட்சி வெற்றி பெற்ற உடனேயே உண்மையான கம்யூனிச உறவுகளை நிலைநாட்டுவதும் இயலாது. இது வரலாற்று வளர்ச்சியின் தவிர்க்க இயலாத விதிகளுக்கு முரண்பாடானதாய் இருக்கும். மேலும் இன்னமும் கடந்து செல்லாத கட்டங்களைத் தாண்டிக் குதிப்பதும் அவசரப்பட்டு முன் செல்வதும் புதிய சமுதாயத்தைக் கட்டும் மாபெரும் லட்சியம் முழுவதற்குமே ஊறு விளைவிக்க வல்லது. பொருட்கள் இன்னமும் அமிதமாக உற்பத்தி செய்யப்படாத சூழ்நிலைகளில், உழைப்பானது எல்லோருக்கும் முதல் ஜீவாதாரத் தேவையாக வேண்டிய அளவிற்கு மக்களின் சுய உணர்வு வளர்ச்சியடையாத போது தேவைக்கேற்ற வினியோகத்தை அமல்படுத்த முடியாது. அமித உற்பத்திக்கான உயர் செயல் வன்மையுள்ள பொருளாயத அடித்தளத்தை ஏற்படுத்த வேண்டும். உழைப்பின் பாலான இப்படிப்பட்ட அணுகுமுறையை ஏற்படுத்த பல்லாண்டு பொறுமையாகப் பாடுபட வேண்டும்.

அவசியமான வரலாற்றுக் கட்டங்களைத் தாண்டிச்

செல்லாத அதே நேரத்தில் சமுதாய வளர்ச்சியை துரிதப் படுத்த முடியும், இது அவசியமும் கூட. இதற்கான எல்லா சூழ்நிலைகளும் சோஷலிசத்தில் உள்ளன. ஏனெனில் சோஷலிசம் கட்டப்பட்ட தருணத்திலிருந்தே பெரும் பாலும் தன் சொந்த அடிப்படையில் வளரத் துவங்கு கிறது. அதாவது சமூக முன்னேற்றத்திற்குத் தடை யேற்படுத்தக் கூடிய வர்க்கங்கள், சமூகப் பிரிவுகள் சமுதாயத்தில் இல்லை, சமுதாயம் முழுவதும், மக்கள் அனைவரும் தம் பொருளாதார, அரசியல் அமைப்பை தொடர்ந்து மேம்படுத்துவதில் பெரும் அக்கறை கொண் டுள்ளனர் என்று இதற்குப் பொருள். வளர்ச்சியடைந்த சோஷலிசமானது தனக்கே உரித்தான உயர் வளர்ச்சி யடைந்த பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளம், சக்திமிக்க தேசியப் பொருளாதாரம் (நவீன பல்துறை தொழிற்துறையும் இயந்திரமயமாக்கப்பட்ட பெரும் விவசாயத் துறையும் இதன் அடிப்படைகளாகும்) ஆகிய வற்றை அடிப்படையாகக் கொண்டுள்ளது என்று இதற்குப் பொருள். புதிய வகையான மேற்கட்டுமானம் — பொது மக்கள் அரசு — முற்றிலுமாக நிலைபெற்று சோவியத் நாட்டின் அடித்தளமாக விளங்கும் சோஷலிச உற்பத்தி உறவுகளுக்கு ஏற்றதாக உள்ளது. பொது மக்கள் அரசு மிகப் பரவலான, தொடர்ச்சியான சோஷலிச ஜனநாயகத்தின் — உண்மையான மக்களாட்சியின் — வளர்ச் சிக்கு வழிகோலுகிறது. இன்று சோவியத் நாட்டின் சோஷலிச சமுதாயத்தின் பன்முக ரீதியான வளர்ச்சி நாட்டின் சமூக-பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத் தும் வழிகளில் நடைபெறுகிறது. சோவியத் வாழ்க் கையின் எல்லா அம்சங்களிலும் குணாம்ச ரீதியான மாற்றம் ஏற்படுகிறது: விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சி யின் சாதனைகளின் அடிப்படையில் பொருளாயத-

தொழில்நுட்ப அடித்தளம் அடிப்படை ரீதியில் மாற்றி யமைக்கப்படுகிறது; சமூக உறவுகள், முதலில் பொருளா தார உறவுகள் மேம்படுத்தப்படுகின்றன; உழைப்பின் சாரம் மற்றும் தன்மை, மக்கள் வாழ்க்கையின் பொரு ளாயத, ஆன்மீகச் சூழ்நிலைகளில் பெரும் மாற்றங்கள் நடைபெறுகின்றன; அரசியல், சமூக, சித்தாந்த அமைப்பு கள் சுறுசுறுப்பாகச் செயல்படுகின்றன.

இவையெல்லாம் ஒன்றுசேர்ந்து உற்பத்திச் சக்தி களைத் தொடர்ந்து வளர்க்கவும், சோஷலிச உற்பத்தி உறவுகளை மேம்படுத்தவும் தேவையான சூழ்நிலை களைத் தோற்றுவிக்கின்றன. இன்றைய கட்டத்தில் சோஷலிசத்தின் உற்பத்திச் சக்திகளில் ஏற்படும் குணாம்ச ரீதியான மாற்றம் நவீன விஞ்ஞான-தொழில்நுட்பப் புரட்சியின் சாதனைகளின் நிறைவேற்றத்துடன் தொடர் புடையது. பன்முக ரீதியில் உற்பத்தியைத் தானியங்கி மயப்படுத்துவது, இயந்திரமயப்படுத்துவது, கம்ப்யூட்டர் கள், ராபட்டுகளைப் பரவலாகப் பயன்படுத்துவது, புதிய பொருட்களைத் தயாரிக்க உற்பத்தியை விரைவாகவும் பயன்மிகு வகையிலும் மாற்றியமைக்க உதவும் நெளிவு சுழிவான தொழில்நுட்பங்களைப் புகுத்துவது ஆகியவை இதிலடங்கும். எரிசக்தித் துறையில் அணு சக்தியை சமாதான வழியில் பயன்படுத்துவதும், நாடு தழுவிய அளவில் ஒரே ஐக்கிய எரிசக்தி முறையை ஏற்படுத்து வதும் (சோதர சோஷலிச நாடுகளுடன் கம்பி வழியான மின்தொடர்புகள் இருக்கும்) வளர்ச்சி பெறும். இரசா யனத் தொழிற்துறையும் உயிரியல் தொழில்நுட்பமும் மேற்கொண்டு வளர்ச்சியடையும். இவையெல்லாம் தேசியப் பொருளாதாரத்தில் உண்மையான தொழில்நுட்பப் புரட்சிக்கு வழிகோலும். இது உற்பத்திச் சக்திகள் குணாம்ச ரீதியாகப் புதிய மட்டத்திற்கு உயருவதையும்,

உழைப்பின் உற்பத்தித் திறன் அதிகரிப்பதையும் குறிக்கும்.

சமுதாயத்தின் முக்கிய உற்பத்திச் சக்தியாகிய உழைக்கும் மனிதனின் மேம்பாடும் மேற்கூறிய அடிப்படை மாற்றங்களுக்கு உதவும். அவனுடைய உழைப்பின் தன்மையே மாறும். உடலுழைப்போடு கூட, சிக்கலான நவீன தொழில்நுட்பத்தை இயக்கத் தேவையான மூளையுழைப்பின் பங்கு மேன்மேலும் அதிகரிக்கும். இதனால் உழைப்பு மேன்மேலும் கவர்ச்சிகரமானதாகும், ஆக்கபூர்வமான சாரத்தைப் பெறும், ஒவ்வொருவரும் தன் திறமைகளை முழுமையாக, பன்முக ரீதியில் வெளிப்படுத்த வாய்ப்பளிக்கும்.

சோஷலிசத்தின் அடிப்படையாகிய உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுவுடைமையிலும் கணிசமான மாற்றங்கள் நிகழும். வரலாற்று ரீதியாக உருவான இதன் இரு வடிவங்களும், அதாவது அரசு (பொது மக்கள்) சொத்துடைமையும் கூட்டுறவுப் பண்ணை சொத்துடைமையும் எதிர்காலத்தில் இணைந்து ஒரே பொது மக்கள் சொத்துடைமையை ஏற்படுத்தும்.

ஆனால் ஒரு சொத்துடைமையை இன்னொரு சொத்துடைமை விழுங்கும் பாதையில் இது நடைபெறாது. நடைமுறையில் இவை நெருங்கி வருவதானது, அரசு சொத்துடைமையை மேம்படுத்துவதன் மூலமும், கூட்டுறவுப் பண்ணை சொத்துடைமையின் பொதுவுடைமைத் தன்மையை அதிகப்படுத்துவதன் மூலமும் நடைபெறும். விவசாயத் துறையில் சோஷலிச ரீதியாக ஒழுங்கமைக்கப்பட்ட பெரும் நிறுவனங்கள் என்ற வகையில் கூட்டுப் பண்ணைகள், தம் முயற்சிகளையும் சாதனங்களையும் ஒன்றிணைத்து, பயிர்த்தொழிலிலும் கால்நடைத் துறையிலும் கூட்டு உற்பத்திகள், கட்டுமான ஸ்தாபனங்கள் போன்றவற்றை ஏற்படுத்துகின்றன. இவை தாமாகவே

முன்வந்து அரசு விவசாய நிறுவனங்களுடனும் கூட்டுற வை ஏற்படுத்துகின்றன. அதே நேரத்தில் விவசாய உற்பத்தி, விவசாயப் பொருட்களைப் பதப்படுத்தும் தொழிற்துறை, விவசாயப் பொருட்களின் சேமிப்பு மற்றும் விற்பனை ஆகியவற்றை இணைத்துள்ள விவசாய-தொழிற்துறை கூட்டுறவும் வளர்ந்து வலுப்பட்டு வருகிறது. இந்நடவடிக்கைகள் எல்லாம் சோஷலிசச் சொத்துடைமையின் இரண்டு வடிவங்களும் நெருங்கி வர வழிகோலுகின்றன. இதற்குப் பெரும் சமூக-அரசியல் முக்கியத்துவம் உண்டு, ஏனெனில் ஒரே சொத்துடைமை தோற்றுவிக்கப்படுவதன் அடிப்படையில் தொழிலாளி வர்க்கம், கூட்டுப்பண்ணை விவசாயிகள், அறிவுத்துறை யினர் நெருங்கி வருவதும் வர்க்கங்களற்ற கட்டமைப் பையுடைய சமுதாயம் தோன்றுவதும் (இச்சமுதாயத் தைத் தோற்றுவிக்கும் போது தொழிலாளி வர்க்கம் தீர்மானகரமான பங்காற்றுகிறது) நடைபெறுகின்றன, சமூக ரீதியாக ஒரே மாதிரியான சமுதாயம் தோன்று கிறது. இவ்வாறாக, சுரண்டுபவர்கள், சுரண்டப்படுபவர் கள் என்ற எதிரெதிரான வர்க்கங்களைக் கொண்ட சமுதாயப் பிரிவை ஒழிப்பதிலிருந்து துவங்கி, இரண்டு உழைக்கும் வர்க்கங்கள் ஒற்றுமையாக வாழ்ந்து, வளரும் சமூக அமைப்பைத் தோற்றுவித்த சோவியத் மக்கள் கம்யூனிச சமூக அமைப்பை நோக்கி (இதுதான் எல்லா சோஷலிச மாற்றங்களின் இறுதி லட்சியமாகும்) உறுதியான அடியெடுத்து வைக்கின்றனர்.

கம்யூனிச சமூக அமைப்பின் உச்சக் கட்டம்

எதிர்கால கம்யூனிச சமுதாயத்தின் தன்மையை முழுமை யாக விளக்கும் கடமையை மார்க்சிய-லெனினிய விஞ்

ஞானம் எப்போதுமே தன் முன் வைத்ததில்லை. ஆனால் இதன் அடிப்படை அம்சங்களை விஞ்ஞான கம்யூனிச ஆசான்கள் தெட்டத் தெளிவாகக் கோடிட்டுக் காட்டியுள்ளனர். இவர்களின் தெளிவு, எதிர்காலத்தைக் கணிக்க உதவும் இவர்களுடைய துல்லியமான பகுப் பாய்வு ஆகியவற்றைக் கண்டு வியப்படையாமல் இருக்க முடியாது. சகலவிதமான ஜோதிடர்களின் ஊகங்கள், தந்திரங்களிலிருந்து இந்த பகுப்பாய்வு எப்படி மாறுபட்டு நிற்கிறது என்பதை வாழ்க்கையே காட்டியுள்ளது. ஏனெனில் கம்யூனிசத்திற்கும் இதன் முதல், கீழ்நிலை கட்டமாகிய சோஷலிசத்திற்கும் இடையில் கடக்க முடியாத சுவர் எதுவும் இல்லை.

ஒரு முறை சோஷலிசக் கட்டுமானத்தின் ஆரம்பக் கட்டத்தில் வி. இ. லெனின், எளிய, அன்றாட விஷயமாகத் தென்பட்ட ஒன்றில் கம்யூனிசத்தின் தளிர்களைக் கண் டார். நீராவி என்ஜின் பணிமனை ஒன்றின் தொழி லாளர்கள் பழுதுபட்ட என்ஜின் ஒன்றை ஓய்வு நாளன்று இலவசமாகச் சரிசெய்வது என்று முடிவெடுத்தனர். இவர் களுடைய வேலையை வி. இ. லெனின் மாபெரும் தொடக் கம் என்றழைத்தார். ஆம், உண்மையிலேயே அந்த வசந்த கால நாளன்று பிறந்த இயக்கம் இதோ 60 ஆண்டு களுக்கும் மேலாக கோடானுகோடி உழைப்பாளிகளின் மத்தியில் பரவி நிற்கிறது, சோஷலிச வாழ்க்கை முறை யின் சிறப்பு அம்சமாகியுள்ளது. சோஷலிசப் போட்டி என்பது இந்த இயக்கத்தின் பெயர். இதன் வடிவங்கள் மாறியுள்ளன, மாறி வருகின்றன, இதன் துவக்கங்கள் பல்வகைப்பட்டவை, இதன் போக்கில் தோன்றும் முன் முயற்சிகள் அளவற்றவை, ஆனால் முக்கியமானவை எங்கும் எப்போதும் அப்படியே உள்ளன. உயர்வான சுய உணர்வு, உழைப்புத் தியாகம், சமுதாயம் முழுவதன்

நலனைப் பற்றிய தன்னலமற்ற அக்கறை ஆகியவைதான் இந்த முக்கிய அம்சங்களாகும். இவைதான் மனித வாழ்வின் விலைமதிப்பற்ற அம்சமும் சமுதாய வளர்ச்சியின் வற்றாத மூல ஊற்றுமாகிய உழைப்பின் பாலான கம்யூனிச அணுகுமுறையின் அம்சங்களாகும்.

கம்யூனிசத்தை உழைப்பால் மட்டுமே தோற்றுவிக்க முடியும். ஏனெனில் இது ஒவ்வொரு மனிதனுக்கும் அளிக்கும் நலன்கள் வானத்திலிருந்து கொட்டா, அல்லது எந்த ஒரு மந்திரவாதியும் இவற்றைக் கொண்டு வர மாட்டான்.

மனித நாகரிகத்தின் உயர் சாதனை என்ற வகையில் கம்யூனிச சமுதாயம், முழு நிறைவும், அமித நிலையும் நிலவும் சமுதாயமாக, மார்க்சின் வார்த்தைகளில் சொன்னால் "சமுதாய செல்வம் முழுவதும் பொங்கிப் பெருக்கெடுத்து ஓடும்"* சமுதாயமாக, உழைப்பு என்பது எல்லோருக்கும் முதல் வாழ்க்கைத் தேவையாக மாறும் சமுதாயமாக, "ஒவ்வொருவரிடமிருந்தும் அவரவர் திறமைக்கேற்ப, ஒவ்வொருவருக்கும் அவரவர் தேவைக்கேற்ப" எனும் கோட்பாடு கோலோச்சும் சமுதாயமாக, மானுட ஆளுகை இன்னமும் மலரும் சமுதாயமாக, சமத்துவமும் விடுதலையும் நிலவும் சமுதாயமாக, பன்முக ரீதியாக வளர்ச்சியடைந்த மனிதர்களின் ஒன்றிணைப்பாகத் திகழும்.

இதை விட உயர்வான லட்சியம் வேறு எதுவுமில்லை. உழைப்பாளிகளின், மனிதகுலம் முழுவதன் மகிழ்ச்சிக்காக அயராது போராடும் சமாதான, முற்போக்குச் சக்திகள் இந்த லட்சியத்தை அடையத்தான் பாடுபடுகின்றன.

---

* K. Marx and F. Engels, *Selected Works*, in three volumes, Vol. 3, Progress Publishers, Moscow, 1976, p. 19.

அரசியல் பொருளாதாரம்:

குட்டி பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் — முதலாளித்துவ சமுதாயத்தின் இடைநிலை வர்க்கமாகிய குட்டி முதலாளி வர்க்கத்தின் சித்தாந்தத்தை வெளிப்படுத்தும் அரசியல் பொருளாதாரப் போக்கு.

கொச்சை பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் — விஞ்ஞான தன்மையற்ற பொருளாதாரத் தத்துவங்களின் தொகுப்பு; முதலாளித்துவத்தைப் பாதுகாப்பது, யதார்த்த சோஷலிசம், சர்வதேசத் தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்திற்கு எதிரான போராட்டம் என்பது தான் இதன் முக்கிய லட்சியம் ஆகும்.

மூலச்சிறப்புள்ள பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரம் — பூர்ஷ்வா அரசியல் பொருளாதார சிந்தனையின் வளர்ச்சியில் தோன்றிய முற்போக்குத் திசையமைவு. இது முதலாளித்துவ உற்பத்தி முறை தோன்றி பாட்டாளிகளின் வர்க்கப் போராட்டம் வளர்ச்சியடையாத கட்டத்தில் தோன்றியது.

இராணுவ-தொழிற்துறை இணையம் — இராணுவ-தொழிற் துறை ஏகபோகங்கள், பிற்போக்கு இராணுவ வட்டங்கள்

மற்றும் அரசு அதிகார இயந்திரம் ஆகியவற்றின் கூட்டு; இவை ஏகபோக முதலாளி வர்க்கத்தின் ஆதிக்கத்தை வளர்த்து விரிவுபடுத்துவதற்காகவும் தனிப்பட்ட ஆதாயங்களுக்காகவும் இராணுவ பலத்தை இடையறாது பெருக்கப் பாடுபடுகின்றன.

உபரி மதிப்பு — முதலாளித்துவ தொழில் நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்படும் பண்டங்களின் மதிப்பில் ஒரு பகுதி; கூலித் தொழிலாளர்களின் ஊதியம் அளிக்கப் படாத உழைப்பால் இவர்களுடைய உழைப்புச் சக்தியின் மதிப்பிற்குக் கூடுதலாகத் தோற்றுவிக்கப்படும் இதை முதலாளிகள் அப்படியே சுவீகரிக்கின்றனர்.

அமித உபரி மதிப்பு — மிகையான உபரி மதிப்பு; தனிப் பட்ட முதலாளி, தன் தொழில் நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பண்டத்தின் தனிப்பட்ட மதிப்பை இப்பண் டத்தின் சமூக மதிப்பை விட குறைப்பதன் விளைவாய் இதை சுவீகரித்து கொள்கிறான்.

உபரி மதிப்பின் மொத்தம் — கூலித் தொழிலாளியால் உற்பத்தி செய்யப்பட்டு, தொழிலாளர்களுக்கு எப்பங்கும் தராமல் முதலாளியால் அப்படியே சுவீகரிக்கப்படும் உபரி மதிப்பின் முழுமுதல் அளவு.

உபரி மதிப்பின் விகிதம் — உபரி மதிப்பிற்கும் மாறும் மூலதனத்திற்கும் உள்ள விகிதாச்சாரம், உழைப்பாளி எந்த அளவிற்குச் சுரண்டப்படுகிறான் என்பதைக் காட்டு கிறது.

ஒப்பீட்டு உபரி மதிப்பு — அவசிய வேலை நேரத்தைக் குறைத்து, இதற்கேற்றபடி உபரி வேலை நேரத்தைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் உபரி மதிப்பு; முதலாளி கள் தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகப்படுத்தும் வழிகளில் ஒன்று.

தனிமநிலை உபரி மதிப்பு — வேலை நாளைக் கூட்டுவதன் மூலம் பெறப்படும் உபரி மதிப்பு; முதலாளிகள் தொழிலாளர்களைச் சுரண்டுவதை அதிகப்படுத்தும் வழிகளில் ஒன்று.

உலக சோஷலிசப் பொருளாதார அமைப்பு — சுயேச்சையான சோஷலிச நாடுகளின் தேசியப் பொருளாதாரங்களின் மொத்தம்; இவை பன்முகப் பொருளாதார, விஞ்ஞான-தொழில்நுட்ப ஒத்துழைப்பு, சர்வதேச சோஷலிச உழைப்புப் பிரிவினை, உலக சோஷலிசச் சந்தை ஆகியவற்றால் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாகத் தொடர்புடையவை.

உழைப்பின் உற்பத்தித் திறன் — ஸ்தூலமான உழைப்பின் பயன்தன்மை, செயல்வன்மை. இது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் தோற்றுவிக்கப்பட்ட பயன் மதிப்புகளின் எண்ணிக்கையாலோ, ஒரு குறிப்பிட்ட பொருளை உற்பத்தி செய்வதற்காகச் செலவிடப்பட்ட நேர அளவாலோ அளக்கப்படுகிறது.

உழைப்பின் கூட்டுறவு — ஒரே உழைப்பு நிகழ்ச்சிப் போக்கில் அல்லது ஒன்றுடன் ஒன்று தொடர்புடைய உழைப்பு நடவடிக்கைகளில் பலரின் கூட்டு நடவடிக்கை.

உழைப்பு — தன் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்வதற்காக இயற்கைப் பொருட்களை மாற்றியமைப்பதை நோக்கமாகக் கொண்ட மனிதனின் செயல்நோக்கமுள்ள நடவடிக்கை.

அவசிய உழைப்பு — தனிப்பட்ட தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளவும் உழைப்புச் சக்தியைப் புனருற்பத்தி செய்யவும் தேவைப்படும் அவசிய உற்பத்திப் பொருளைத்

தோற்றுவிப்பதற்காக உழைப்பாளிகள் செலவிடும் உழைப்பு.

உழைப்புக் கருவிகள் — உற்பத்திச் சாதனங்களின் மிக முக்கியப் பகுதி; இவற்றின் மூலம் உழைப்புப் பொருட்களின் மீது நேரடித் தாக்கம் செலுத்தப்படுகிறது.

உழைப்புச் சக்தி — மனிதனின் உழைக்கும் திறமை; மனிதனுக்குள்ள உடற்கூறு மற்றும் ஆன்மீகச் சக்திகளின் ஒட்டுமொத்தம்; இவற்றை அவன் உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் பயன்படுத்துகிறான்.

உழைப்புப் பொருள் — உற்பத்தியின் நிகழ்ச்சிப் போக்கில் மனிதனின் செயலுக்கு உட்படுத்தப்படும் பொருள் அல்லது பொருட்களின் தொகுப்பு.

கடந்த உழைப்பு — உற்பத்திச் சாதனங்களிலும் நுகர்வுப் பொருட்களிலும் உருக்கொண்டுள்ள உழைப்பு.

சூக்கும உழைப்பு — பண்ட மதிப்பைத் தோற்றுவிக்கும் உழைப்பு; மனித உழைப்புச் சக்தியின் செலவழிப்பாக (இதன் ஸ்தூலமான வடிவத்தைச் சார்ந்திராமல்) விளங்குகிறது; எல்லா பண்ட உற்பத்தியாளர்களின் பரஸ்பரச் சார்புநிலையையும் வெளிப்படுத்துகிறது.

ஜீவனுள்ள உழைப்பு — மனிதனின் உணர்வுபூர்வமான, செயல்நோக்கமுள்ள நடவடிக்கை; ஏதாவது ஒரு பயன் மதிப்பையோ பயனையோ தோற்றுவிப்பதை நோக்கமாகக் கொண்டு மூளை மற்றும் உடல் சக்தியைச் செலவிடுதல்.

ஸ்தூலமான உழைப்பு — விசேஷமான செயல்நோக்குடைய வடிவில் செலவிடப்பட்ட உழைப்பு; பண்டத்தின் பயன் மதிப்பைத் தோற்றுவிக்கும் குறிப்பிட்ட வகையிலான உழைப்பு.

உற்பத்தி — சமுதாயம் வாழவும் வளரவும் தேவையான பொருட்களைத் தோற்றுவிக்கும் நிகழ்ச்சிப் போக்கு; மனித சமுதாய வாழ்வின் அடிப்படை.

உற்பத்தி உறவுகள் — பொருட்களின் உற்பத்தி, பரிவர்த்தனை, வினியோகம் மற்றும் நுகர்வுப் போக்கில் மனிதர்களிடையே தோன்றும் சமூக உறவுகள்.

உற்பத்திச் சக்திகள் — உழைப்புச் சாதனங்கள் மற்றும் பொருட்களும் உற்பத்தி அனுபவம், ஞானம், உழைப்புத் திறமையைக் கொண்ட, உற்பத்திச் சாதனங்களை இயக்கி வைக்கும் மனிதர்களும்.

உற்பத்திச் சாதனங்கள் — உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் மனிதர்களால் பயன்படுத்தப்படும் உழைப்புச் சாதனங்கள், உழைப்புப் பொருட்களின் ஒட்டுமொத்தம்.

உற்பத்தியின் அராஜகம் — முதலாளித்துவப் போட்டி மற்றும் பொருளாதார விதிகளின் தன்னிச்சையான செயற்பாட்டுச் சூழ்நிலைகளில் வளரும் தனியுடைமைப் பண்டப் பொருளாதாரத்தின் திட்டமின்மை, ஸ்தாபன ஒழுங்கின்மை, குழப்பம்.

உற்பத்தியின் விலை — முதலாளித்துவப் பொருளாதாரத்தில் பண்டத்தின் விலை; இது உற்பத்திச் செலவுகளும் சராசரி லாபமும் சேர்ந்தது.

உற்பத்திப் பொருள்:

அவசிய உற்பத்திப் பொருள் — உற்பத்தித் துறையில் உள்ள உழைப்பாளிகளால் புதிதாக உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் ஒரு பகுதி; இது குறிப்பிட்ட சமூக-பொருளாதாரச் சூழ்நிலைகளில் உழைப்பாளியின் சாதாரண வாழ்க்கைக்கும் இழந்த சக்தியை மீட்கவும் தேவையான வாழ்க்கைச் சாதனங்களின் மொத்தமாகும்.

உபரி உற்பத்திப் பொருள் — மொத்த சமூக உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி; இது நேரடி உற்பத்தியாளர்களால் அவசிய உற்பத்திப் பொருளை விடக் கூடுதலாகத்

தோற்றுவிக்கப்படுகிறது.

மொத்த சமூக உற்பத்திப் பொருள் — குறிப்பிட்ட காலத்தில் (சாதாரணமாக ஒரு வருடத்தில்) சமுதாயத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களின் (உற்பத்திச் சாதனங்கள் மற்றும் நுகர்வுப் பொருட்கள்) ஒட்டுமொத்தம்.

உற்பத்தி முறை — சமுதாய வளர்ச்சியின் குறிப்பிட்ட காலகட்டத்தில் வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் முறை, குறிப்பிட்ட உற்பத்திச் சக்திகள், இவற்றிற்கேற்ற உற்பத்தி உறவுகளின் ஒற்றுமை.

அடிமையுடைமை உற்பத்தி முறை — மனிதனை மனிதன் சுரண்டுவதன் அடிப்படையில் அமைந்த வரலாற்றின் முதல் சமூக உற்பத்தி முறை. இதில் உற்பத்திச் சாதனங்களும் உழைப்பாளிகளாகிய அடிமைகளும் முழுக்க முழுக்க அடிமையுடைமையாளனுக்குச் சொந்தமாக இருந்தனர்.

கம்யூனிச உற்பத்தி முறை — உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமை, சமுதாயம் முழுவதன் நலன்களுக்காகத் திட்டமிட்ட வளர்ச்சி ஆகியவற்றின் அடிப்படையிலான வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் சமூக முறை.

நிலப்பிரபுத்துவ உற்பத்தி முறை — நிலத்தின் மீதான நிலப்பிரபுத்துவ சொத்துடைமை, உழைப்பாளிகளாகிய பண்ணையடிமை விவசாயிகள் பாதியளவு சொந்தமாக இருந்த நிலை, இந்த விவசாயிகளை நிலப்பிரபுக்களும் நிலக்கிழார்களும் சுரண்டுவது ஆகியவற்றின் அடிப்படையிலான சமூக உற்பத்தி முறை.

புராதனக் கூட்டுச் சமூக உற்பத்தி முறை — எளிய உற்பத்திச் சாதனங்கள், கூட்டு உழைப்பு விளைபொருட்களின் மீதான தனிப்பட்ட கூட்டுச் சமூகங்களின் பொதுச்

சொத்துடைமையின் அடிப்படையில் அமைந்த வரலாற்றின் முதல் சமூக உற்பத்தி முறை. இதில் கூட்டு உழைப்பின் விளைபொருட்கள் சமமாகப் பகிர்ந்து கொள்ளப்பட்டன.
முதலாளித்துவ உற்பத்தி முறை — வாழ்க்கைச் சாதனங்களை உற்பத்தி செய்யும் சமூக முறை; இது உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவத் தனிச் சொத்துடைமை, கூலியுழைப்பை சுரண்டுவது ஆகியவற்றின் அடிப்படையிலானது.

ஊதியம்:

சோஷலிசத்தின் கீழ் ஊதியம் — பொது மக்களுக்குச் சொந்தமான நிறுவனங்களில் தோற்றுவிக்கப்படும் அவசிய உற்பத்திப் பொருளின் முக்கிய பகுதியின் பண வெளிப்பாடு; இது உழைப்பின் அளவிற்கும் தரத்திற்கும் ஏற்ப உழைப்பாளிகளின் தனிப்பட்ட உபயோகத்திற்குச் செல்கிறது.
முதலாளித்துவத்தின் கீழ் ஊதியம் — உழைப்புச் சக்தி எனும் பண்டத்தின் மதிப்பு, எனவே விலையின் மாற்றியமைக்கப்பட்ட வடிவம்; இது மேற்போக்கிற்கு உழைப்பிற்கான ஊதியமாகப் படுகிறது.

ஏகபோக விலை — சந்தை விலையின் வடிவம்; உற்பத்தியிலும் சந்தையிலும் ஏகபோகங்கள் ஆதிக்கம் செலுத்துவதால் உற்பத்தியின் மதிப்பு மற்றும் விலையிலிருந்து வேறுபடுகிறது; இது ஏகபோக லாபங்களைப் பெற உதவுகிறது.

ஏகாதிபத்தியம் — ஏகபோக முதலாளித்துவம், இதன் வளர்ச்சியில் கடைசி, உச்சக் கட்டம்; அழுகி, மடியும் முதலாளித்துவம், சோஷலிசப் புரட்சியின் முன்னணைப் பொழுது.

ஃபிஸியோக்ராட்டுகள் — *பிரான்சில் 18ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்த பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரப் பிரமுகர்கள். இவர்கள் அரசியல் பொருளாதாரத்தின் ஆராய்ச்சிப் பொருளைச் சுற்றோட்டத் துறையிலிருந்து உற்பத்தித் துறைக்குக் கொண்டு வந்தார்கள், முதலாளித்துவத்தில் சமூக உற்பத்திப் பொருளின் புனருற்பத்தி, வினியோகம் பற்றிய விஞ்ஞானப் பகுப்பாய்விற்குப் பாதையமைத்தனர்.*

கம்யூனிசம் — *உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத்துடைமையின் அடிப்படையிலான கம்யூனிச சமூக-பொருளாதார அமைப்பின் உச்சக் கட்டம்; ஒவ்வொரு மனிதனின் பன்முக வளர்ச்சிதான் இதன் நேரிடையான லட்சியமாகும்.*

காலனியாதிக்கம் — *பொருளாதார ரீதியாகப் பின்தங்கிய நாடுகளின் மக்களைச் சுரண்டி ஒடுக்குவதை நோக்கமாகக் கொண்ட ஏகாதிபத்திய அரசுகளின் கொள்கை. மூலதன ஏற்றுமதி வடிவத்தில் பொருளாதார விஸ்தரிப்பு, அரசியல் மற்றும் இராணுவ நிர்ப்பந்த முறைகளைப் பயன்படுத்துவதுடன் இணைக்கப்பட்டுள்ளது.*

கூட்டுப் பங்குக் கம்பெனி — *முதலாளித்துவ நாடுகளில் ஆதிக்கம் செலுத்தும் பெரும் நிறுவனங்களின் ஸ்தாபன வடிவம். இந்நிறுவனங்களின் மூலதனம் பங்குகள், பங்குச் சீட்டுகளை விற்பதால் உருவாக்கப்படுகிறது.*

கூட்டுறவுமயப்படுத்துதல் — *பார்க்க:* **விவசாயத் துறையைக் கூட்டுறவுமயப்படுத்துதல்.**

கூலியுழைப்பு — முதலாளித்துவத் தொழில் நிறுவனங்களில் உற்பத்திச் சாதனங்கள் இல்லாத உழைப்பாளிகளின் உழைப்பு; தம் உழைப்புச் சக்தியை விற்கும்படி கட்டாயப்படுத்தப்பட்ட இவர்கள் சுரண்டலுக்கு ஆளாகின்றனர்.

சமூக உழைப்புப் பிரிவினை — குறிப்பிட்ட மக்கள் பிரிவினரால் நிறைவேற்றப்படும் தனிப்பட்ட நடவடிக்கைகளின் பிரிவு.

சமூக-பொருளாதார அமைப்பு — குறிப்பிட்ட உற்பத்தி முறையின் அடிப்படையில் வளரும் சமுதாயத்தின் வரலாற்று வகை; வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான உற்பத்தி முறையும் இதற்கேற்ற மேற்கட்டுமானமும்.

சொத்துடைமை — பொருளாயத நலன்களை, எல்லாவற்றிற்கும் மேலாக உற்பத்திச் சாதனங்களை சுவீகரிக்கும் வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான வடிவம்.

சோஷலிச தேசவுடைமையாக்கல் — சுரண்டும் வர்க்கங்களிடமிருந்து பாட்டாளி வர்க்க அரசு உற்பத்திச் சாதனங்களைப் புரட்சிகரமாகப் பிடுங்கி இவற்றை அரசு சோஷலிசச் சொத்தாக்குதல்.

சோஷலிசத் தொழிற்துறைமயப்படுத்தல் — பெருவீத தொழிற்துறையை, குறிப்பாக சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளத்தைக் கட்ட உதவும் உற்பத்திச் சாதனங்களை உற்பத்தி செய்யும் துறைகளை ஏற்படுத்துதல்.

சோஷலிசப் போட்டி — உழைப்பாளிகளின் ஆக்கபூர்வ மான முன்முயற்சிகளை அதிகப்படுத்துவது, சமுதாய செல்வத்தைப் பெருக்குவதில் பொது மக்களின் நலன் களை இவர்கள் உணருவது ஆகியவற்றின் அடிப்படையில் உழைப்பின் உற்பத்தித் திறன் மற்றும் சமூக உற்பத்தியின் பயன்தன்மையை உயர்த்தும் முறை.

சோஷலிசம் — கம்யூனிச சமூக-பொருளாதார அமைப் பின் முதல் அல்லது கீழ்நிலைக் கட்டம்.

சோஷலிசத்தின் பொருளாயத-தொழில்நுட்ப அடித்தளம் — பெருவீத இயந்திர உற்பத்தி இதன் முக்கிய அம்சமாகும்; இது உற்பத்திச் சாதனங்களின் மீதான பொதுச் சொத் துடைமையின் அடிப்படையிலான, திட்டமிட்ட தேசியப் பொருளாதாரத்தின் எல்லா துறைகளிலும் பரவி நிற் கிறது.

திட்டத் தன்மை — சோஷலிசப் பொருளாதார வளர்ச்சி யின் நியதி, அதாவது சோஷலிச உற்பத்தியின் லட்சியத் தை முழுமையாக அடைய உதவும்படி பொருளாதாரத் தின் பல்வேறு துறைகள், பிரிவுகளுக்கு இடையே அவசி யமான பொருத்தத்தை உணர்வுபூர்வமாக நிலைநாட்டு தல்.

தேசவுடைமையாக்கல் — பார்க்க: **சோஷலிச தேசவுடைமை யாக்கல்.**

தேசிய வருமானம் — ஒரு குறிப்பிட்ட நாட்டின் தேசியப் பொருளாதாரம் முழுவதிலும் புதிதாகத் தோற்று விக்கப்பட்ட மதிப்பு; குறிப்பிட்ட காலகட்டத்தில் (ஓராண்டில்) செலவிடப்பட்ட உற்பத்திச் சாதனங்களின்

மதிப்பை மொத்த சமூக உற்பத்திப் பொருளின் மதிப் பிலிருந்து கழித்த பின் எஞ்சும் மதிப்பு.

தொழிற்துறைமயப்படுத்தல் — பார்க்க: **சோஷலிசத் தொழிற்துறைமயப்படுத்தல்.**

நிதி மூலதன ஏகபோகக் குழு — சமுதாயத்தில் பொரு ளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் ஆதிக்கம் செலுத்தும் நிதி மூலதன முதலைகளின் குழு.

நில வாடகை — விவசாயத் துறையில் நேரடி உற்பத்தி யாளர்களால் தோற்றுவிக்கப்படும் உபரி உற்பத்திப் பொருளின் ஒரு பகுதி; இது நிலச்சொந்தக்காரர்களால் சுவீகரிக்கப்படுகிறது.

நவீன காலனியாதிக்கம் — சமமற்ற பொருளாதார, அரசியல் உறவுகளின் முறை. இளம் வளர்முக நாடுகளை முதலாளித்துவ வரம்பினுள் வைத்திருப்பதையும் ஏகபோக லாபங்களைப் பெறுவதையும் நோக்கமாகக் கொண்டு ஏகாதிபத்திய அரசுகள் இதை அந்நாடுகளின் மீது திணிக்கின்றன.

நுகர்வு — உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் தோற்றுவிக்கப் பட்ட பொருளாயத நலன்களை மக்களின் குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காகப் பயன்படுத்துதல்; புனருற்பத்தியின் இறுதி கட்டம், உற்பத்தி உறவுகளின் அம்சங்களின் ஒன்று.

பணம் — பண்டங்களின் பரிவர்த்தனையில் சர்வபொது சமானமாகத் திகழும் விசேஷப் பண்டம்.

பணவீக்கம் — முதலாளித்துவத்தில் பணத்தின் மதிப்பு குறைதல்; இது விலைகள் உயர்வதில் வெளிப்படுகிறது, ஆதிக்க வர்க்கங்களுக்குச் சாதகமாக தேசிய வருமானம் மறுபங்கீடு செய்யப்படுவதற்கு இட்டுச் செல்கிறது.

பண்டம் — விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் பொருள்.

பரிவர்த்தனை — சமூக உழைப்புப் பிரிவினையின் அடிப் படையில் மனிதர்களிடையேயான நடவடிக்கை மற்றும் உழைப்பின் விளைபொருட்களின் பரிவர்த்தனை; ஒரு புறம் உற்பத்தி மற்றும் வினியோகத்தையும் மறு புறம் நுகர்வையும் இணைக்கும் சமூக புனருற்பத்திக் கட்டம்; உற்பத்தி உறவுகளின் அம்சங்களில் ஒன்று.

பாட்டாளி வர்க்கத்தின் நிலை ஒப்பீட்டளவில் கீழடைதல் — செல்வந்தர்களாகி வரும் முதலாளி வர்க்கத்துடன் ஒப்பிடும் போது தொழிலாளி வர்க்கத்தின் நிலை கீழடைதல்; தேசிய வருமானத்தில், தேசிய செல்வத்தில் இதன் பங்கு குறைதல், இதற்கேற்றபடி சுரண்டல் வர்க் கங்களின் பங்கு அதிகரித்தல்.

பாட்டாளி வர்க்கத்தின் நிலை நடைமுறையில் கீழடை தல் — முதலாளித்துவத்தில் பாட்டாளி வர்க்கத்தின் வாழ்க்கைத் தரம் குறைவது. இது முதலாளித்துவத்தின் அடிப்படைப் பொருளாதார விதி மற்றும் முதலாளித்து வத் திரட்சி பற்றிய விதியின் செயற்பாட்டின் நேரடி விளைவாகும். தொழிலாளி வர்க்கத்தின் உழைப்பு மற்றும் வாழ்க்கைச் சூழ்நிலைகள், வீட்டு வசதிகள், உணவு போன்றவை மோசமடைவதில் இது வெளிப் படுகிறது.

புனருற்பத்தி — சமூக உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கு நிரந்தரமாக மீண்டும் மீண்டும் புதுப்பிக்கப்படுதல்; சமூக உற்பத்திப் பொருள், உற்பத்தி உறவுகள் மற்றும் உழைப்புச் சக்தியின் புனருற்பத்தி இதிலடங்கும்.

பொருளாதார அடித்தளம் — பொருளாதார அமைப்பு, அதாவது சமுதாயத்தின் வரலாற்று வளர்ச்சியின் குறிப் பிட்ட கட்டத்தில் உற்பத்தி உறவுகளின் ஒட்டுமொத்தம்.

பொருளாதாரக் கருத்தினங்கள் — யதார்த்தத்தில் நிலவும் மனிதர்களின் சமூக உற்பத்தி உறவுகளின் தத்துவார்த்த வெளிப்பாடு.

பொருளாதார சுய கணக்கீட்டு முறை — திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதார நிர்வாக முறை; தொழில் நிறுவனங்களின் செலவுகளையும் உற்பத்தி விளைவுகளை யும் பண வடிவில் அளப்பது, சொந்த லாப நஷ்டங் களைத் தாமே கவனித்துக் கொள்வது, உழைப்புக் கூட்டுகளின் பொருளாயத அக்கறை, பொறுப்புணர்வு ஆகியவற்றின் அடிப்படையிலானது.

பொருளாதாரப் பரிசோதனை — திட்டமிட்ட சோஷலிசப் பொருளாதாரத்தில் பொருளாதார நிர்வாக நடவடிக் கைகளின் செயல்வன்மையைப் பரிசோதிக்கும் நோக்கத் தோடு விஞ்ஞான ரீதியாகத் தயார்படுத்தப்பட்ட பரிசோதனை.

பொருளாதாரம் — உற்பத்தி உறவுகளின் வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான ஒட்டுமொத்தம், சமுதா யத்தின் பொருளாதார அடித்தளம்; ஒரு குறிப்பிட்ட

நாட்டின் பொருளாதாரம், அந்தந்த உற்பத்தித் துறைகளையும் வகைகளையும் உள்ளடக்கியது.

பொருளாதார விதிகள் — பொருளாதார நிகழ்ச்சிப் போக்குகள், புலப்பாடுகளில் உள்ள மிக முக்கியமான, நிலையான, புறவய ரீதியான பரஸ்பரச் சார்புநிலைகளும் காரண-காரியத் தொடர்புகளும்.

மதிப்பு — பண்டத்தில் உருக்கொண்டுள்ள, இதில் சேர்க்கப்பட்ட பண்ட உற்பத்தியாளர்களின் சமூக உழைப்பு; இது பரிவர்த்தனை செய்யப்படும் பண்டங்களை சமப்படுத்தவும் ஒப்பிடவும் உதவுகிறது.
பயன் மதிப்பு — பொருளின் பயன்தன்மை, நுகர்வுப் பொருள் என்ற வகையிலோ உற்பத்திச் சாதனம் என்ற வகையிலோ குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்ய இதற்குள்ள தன்மை.
பரிவர்த்தனை மதிப்பு — பயன் மதிப்புகள் என்ற வகையில் பண்டங்கள் பரிமாறிக் கொள்ளப்படும் அளவு விகிதம். இதில் பண்டத்தின் மதிப்பு வெளிப்படுகிறது.

மனிதனை மனிதன் சுரண்டுதல் — உற்பத்திச் சாதனங்களைத் தம் கரங்களில் வைத்திருப்பவர்கள் நேரடி உற்பத்தியாளர்களுடைய உபரி உழைப்பின், சில சமயங்களில் அவசிய உழைப்பின் ஒரு பகுதியின் விளைபொருட்களை சுவீகரிப்பது.

மிகை உற்பத்தியின் பொருளாதார நெருக்கடி — முதலாளித்துவச் சுழற்சியின் தவிர்க்க இயலாத கட்டம்; இதில் முதலாளித்துவப் பொருளாதாரத்தின் எல்லா முரண்பாடுகளும் வெடிக்கும், பண்டங்கள் அமிதமாக உற்பத்தி

செய்யப்படும், இவற்றை விற்பனை செய்வதில் பெரும் இடர்ப்பாடுகள் வரும், உற்பத்தியின் அளவு பெரிதும் குறையும், வேலையில்லாத் திண்டாட்டம் பெருகும், உழைப்பாளி மக்கள் திரளினரின் நிலை கீழடையும்.

மெர்க்கன்டிலிசம் — ஆதி மூலதனத் திரட்சிக் கட்டத்தில் (15 — 18ஆம் நூற்றாண்டுகள்) நிலவிய பூர்ஷ்வா அரசியல் பொருளாதாரப் போக்கு, அரசுகளின் பொருளாதாரக் கொள்கை.

மேற்கட்டுமானம் — சித்தாந்த உறவுகள், கண்ணோட்டங்களின் (அரசியல், சட்டம், ஒழுக்கம், மதம், தத்துவ ஞானம், கலை) மற்றும் இவற்றிற்கேற்ற ஸ்தாபனங்கள், உறுப்புகளின் (அரசு, கட்சிகள், மதஸ்தாபனம் போன்றவை) ஒட்டுமொத்தமாகும்; இது பொருளாதார அடித்தளத்திற்கு ஏற்றபடி அதன் மீது எழுகிறது.

முதலாளித்துவ ஏகபோகம் — ஏகபோக லாபங்களைப் பெறும் நோக்கத்தோடு குறிப்பிட்ட பொருளின் உற்பத்தி மற்றும் விற்பனையில் கணிசமான பங்கை தம் கரங்களில் வைத்திருக்கும் முதலாளிகளின் கூட்டுகள். இவற்றின் ஆதிக்கம், முதலாளித்துவத்தின் கடைசி, உச்சக் கட்டம் என்ற வகையில் ஏகாதிபத்தியத்தின் பிரதான பொருளாதாரச் சிறப்பியல்பு ஆகும்.

முதலாளித்துவ சுழற்சி — நெருக்கடி, வீழ்ச்சி, புத்துயிர்ப்பு, எழுச்சி எனும் ஒன்றோடொன்று தொடர்புடைய கட்டங்களை உள்ளடக்கிய முதலாளித்துவ உற்பத்தியின் செயற்பாடு. இதில் முக்கிய கட்டம் நெருக்கடிக் கட்டமாகும். இது ஒரு சுழற்சியை முடித்து அடுத்ததைத் துவக்கி வைக்கிறது.

முதலாளித்துவத்தின் பொது நெருக்கடி — மொத்தத்தில் உலக முதலாளித்துவ அமைப்பின் பொது நெருக்கடி நிலை; இது பொருளாதார, அரசியல், சித்தாந்த வாழ்க்கையின் எல்லா அம்சங்களையும் ஆட்கொள்கிறது. முதல் உலக யுத்தம் *(1914 — 1918)* மற்றும் **1917**இல் ருஷ்யாவில் நடந்த மாபெரும் அக்டோபர் சோஷலிசப் புரட்சியின் வெற்றியின் விளைவாய் தோன்றிய முதலாளித்துவ பொது நெருக்கடியின் முக்கியக் குறியடையாளம், உலகம் இரண்டு எதிரெதிரான சமூக-பொருளாதார அமைப்புகளாக (சோஷலிசம், முதலாளித்துவம்) பிரிந்ததும் இவற்றிற்கிடையேயான போராட்டமும் ஆகும்.

முதலாளித்துவப் போட்டி — பண்டங்களின் உற்பத்தியிலும் விற்பனையிலும் தங்கள் பங்கை அதிகரிக்கவும் அதிகபட்ச லாபம் பெறவும் முதலாளிகள், இவர்களின் கூட்டமைப்புகளுக்கு இடையிலான போராட்டம்.

முதலாளித்துவம் — கடைசி சுரண்டல் சமூக-பொருளாதார அமைப்பு; நிலப்பிரபுத்துவத்தின் உள்ளே தோன்றிய இது சோஷலிசத்தால் மாற்றப்படும். இது உற்பத்திச் சாதனங்களின் மீதான முதலாளித்துவத் தனிச் சொத்துடைமை மற்றும் கூலியுழைப்பு சுரண்டல் ஆகியவற்றின் அடிப்படையிலானது.

அரசு-ஏகபோக முதலாளித்துவம் — பூர்ஷ்வா அரசு மற்றும் ஏகபோக மூலதனத்தின் இணைப்பு; ஏகபோக மூலதனம் தன் லாபத்தை அதிகரிக்கவும், புரட்சிகரத் தொழிலாளர் மற்றும் தேசிய விடுதலை இயக்கத்தை ஒடுக்குவதற்காகவும், சமாதான, சோஷலிசச் சக்திகளுக்கு எதிரான போராட்டத்தையும், ஆக்கிரமிப்பு யுத்தங்களையும் கட்டவிழ்த்து விடவும் அரசு இயந்திர பலத்தைப் பயன்படுத்துகிறது.

மூலதன ஏற்றுமதி — ஏகபோக லாபங்களைப் பெறுதல், வெளிச் சந்தைகளுக்கான போராட்டத்தில் பொருளாதார மற்றும் அரசியல் நிலைகளை பலப்படுத்துதல், ஏகாதிபத்திய சுரண்டலை விரிவுபடுத்துதல் ஆகியவற்றிற்காக மூலதனத்தை வெளிநாடுகளுக்கு எடுத்து செல்லுதல்; இது ஏகபோக முதலாளித்துவத்திற்கே உரித்தானது.

மூலதனத் திரட்சி — உபரி மதிப்பு மூலதனமாக மாற்றப் படுதல், இது விரிவுபடுத்தப்பட்ட முதலாளித்துவப் புனருற்பத்தியின் போது நடைபெறுகிறது.

மூலதனம் — கூலித் தொழிலாளர்களின் உழைப்பைச் சுரண்டுவதன் மூலம் உபரி மதிப்பைக் கொண்டு வரும் மதிப்பு.

நிதி மூலதனம் — வங்கி மற்றும் தொழிற்துறை ஏகபோகங்களின் மூலதனத்தின் இணைப்பு.

மாறாத மூலதனம் — உற்பத்திச் சாதனங்களை வாங்குவதற்காகச் செலவிடப்படும் மூலதனப் பகுதி; இது உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் தன் மதிப்பை மாற்றிக் கொள்வதில்லை.

மாறும் மூலதனம் — உழைப்புச் சக்தியை வாங்குவதற்காகச் செலவிடப்படும் மூலதனப் பகுதி; இது உற்பத்தி நிகழ்ச்சிப் போக்கில் தன் அளவை மாற்றிக் கொள்கிறது.

லாபம்:

முதலாளித்துவ லாபம் — உபரி மதிப்பின் மாற்று வடிவம்; செலவிடப்பட்ட மூலதனம் போக எஞ்சிய பகுதியாகத் திகழும் இது முதலாளிகளால் அப்படியே சுவீகரிக்கப் படுகிறது.

வர்த்தக லாபம் — முதலாளித்துவ உற்பத்தி நிகழ்ச்சிப்

போக்கில் தொழிலாளி வர்க்கத்தால் தோற்றுவிக்கப் படும் உபரி மதிப்பை வினியோகிப்பதன் விளைவாய் வர்த்தக மூலதனம் பெறும் லாபம்.

லாப விகிதம் — உபரி மதிப்பிற்கும் முன்னிடப்பட்ட மூலதனம் முழுவதற்கும் உள்ள விகிதாச்சாரம்; முதலாளித் துவத் தொழில் நிறுவனத்தின் ஆதாயத்தைக் காட்டு கிறது.
சராசரி (பொது) லாப விகிதம் — மூலதனத்தின் அங்ககக் கட்டமைவு வெவ்வேறானதாக இருந்தாலும் முதலாளித் துவ உற்பத்தியின் பல்வேறு துறைகளில் முதலிடப்பட்ட ஒரே அளவு மூலதனத்திற்கான ஒரே அளவு லாபம்.

வங்கிகள்:
சோஷலிசத்தின் கீழ் வங்கிகள் — தொழில் நிறுவனங்களின் பொருளாதார நடவடிக்கையைக் கடன், கணக்கு மற்றும் கொடுக்கல்வாங்கல் நடவடிக்கைகளின் மூலம் கண்காணிக் கும் அரசு நிறுவனங்கள்; இவை திட்டமிட்ட வகையில் பணச் சுற்றோட்டத்திற்கு வகை செய்கின்றன.
முதலாளித்துவத்தின் கீழ் வங்கிகள் — முதலாளித்துவ கடன், நிதி நிறுவனங்கள்; பண மூலதனத்தை வியாபாரம் செய்து லாபம் சம்பாதிக்கின்றன; கடன் கொடுப்பவர் களுக்கும் கடன்வாங்குபவர்களுக்கும் இடையிலான அமைப்பு; மேற்கூறிய லாபம் தொழிலாளர்களால் தோற்றுவிக்கப்படும் உபரி மதிப்பின் ஒரு பகுதியாகும்.

வட்டி — லாபத்தில் ஒரு பகுதி; இதை கடன் வாங்கி யவன் (தொழிலதிபர் அல்லது வர்த்தகர்) கடன் தந்த முத லாளிக்கு அளிக்கிறான்.

வர்க்கங்கள்:

சமூக வர்க்கங்கள் — வரலாற்று ரீதியாகத் திட்டவட்டமான சமூக உற்பத்தியில் தாம் வகிக்கும் இடத்தாலும், உற்பத்திச் சாதனங்களின் பால் தமக்குள்ள உறவாலும் (இது பெரும்பாலும் சட்டத்தால் வரையறுக்கப்பட்டது), உழைப்பின் சமூக ஒழுங்கமைப்பில் தாம் வகிக்கும் பாத்திரத்தாலும், எனவே சமூக செல்வத்தில் தாம் பெறும் பங்கின் அளவுகளாலும், இதை சுவீகரித்துக் கொள்ளும் முறையினாலும் ஒன்றுக்கொன்று வேறுபடும் பெரும் மக்கள் பகுதிகளாகும். வர்க்கங்களுக்கு இடையிலான முக்கிய வேறுபாடு உற்பத்திச் சாதனங்களின் பாலான இவற்றின் உறவுமுறையாகும்.

பாட்டாளி வர்க்கம் — உற்பத்திச் சாதனங்கள் இல்லாத கூலித் தொழிலாளர்களின் வர்க்கம்; தன் உழைப்புச் சக்தியை விற்று வாழும் இவ்வர்க்கம் மூலதனத்தால் சுரண்டப்படுகிறது; முதலாளித்துவ சமுதாயத்தின் முக்கிய வர்க்கங்களில் ஒன்று, முதலாளித்துவத்திலிருந்து சோஷலிசத்திற்கு மாறிச் செல்லும் வரலாற்று நிகழ்ச்சிப் போக்கில் முக்கியப் புரட்சிகர உந்து சக்தி.

முதலாளி வர்க்கம் — முதலாளித்துவ சமுதாயத்தில் ஆதிக்கம் செலுத்தும் வர்க்கம், உற்பத்திச் சாதனங்களைத் தன் கையில் வைத்திருக்கும் இது இவற்றை கூலித் தொழிலாளர்களைச் சுரண்டுவதற்காகப் பயன்படுத்துகிறது.

விஞ்ஞான சூக்கும முறை — அறிதல் நிகழ்ச்சிப் போக்கில் மேற்போக்கான புலப்பாடுகளிலிருந்தும் முக்கியமற்ற அம்சங்களிலிருந்தும் கவனத்தைத் திருப்பி, பொருளின் ஆழ்ந்த உட்சாரத்தைத் தனியே பிரிப்பது.

விலை — மதிப்பின் பண வெளிப்பாடு.

விவசாயத் துறையைக் கூட்டுறவுமயப்படுத்துதல் — சிறிய, தனித்தனியே சிதறுண்டு கிடக்கும் துண்டு நிலங்கள் பெரும் கூட்டு சோஷலிசப் பண்ணைகளாகத் தாமாகவே இணைவதன் மூலம் விவசாயத் துறை சோஷலிச ரீதியில் மாற்றியமைக்கப்படுவதாகும்.

வினியோகம் — சமூக உற்பத்திப் பொருளின் புனருற்பத்திக் கட்டம்; இது நுகர்வையும் உற்பத்தியையும் இணைக்கிறது, உற்பத்தி உறவுகளின் அம்சங்களில் ஒன்று.

வேலை நாள் — ஒரு நாளில் உழைப்பாளி தொழில் நிறுவனம் அல்லது அலுவலகத்தில் வேலை செய்யும் நேரம்.

வேலையில்லாத் திண்டாட்டம் — முதலாளித்துவத்தின் கீழ் நடைபெறும் தவிர்க்க இயலாத போக்கு; இதனால் வேலை செய்யும் திறனுள்ள மக்களில் ஒரு பகுதியினர் வேலையின்றி திரிகின்றனர், வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்கள் இல்லாதவர்களாகின்றனர். இவர்கள் ஒப்பீட்டளவில் அமித மக்களாக மாறி சேம உழைப்புப் படையை உருவாக்குகின்றனர்.

வேலை நேரம்:

சோஷலிசத்தின் கீழ் அவசிய வேலை நேரம் — தொழிலாளி தன் உடல் சக்தியை புனர்நாட்டவும், தன் உடற்கூறு மற்றும் ஆன்மீகத் திறமைகளைப் பன்முக ரீதியாக வளர்க்கவும் தேவையான சமூக உற்பத்திப் பொருளின் பகுதியைத் தோற்றுவிக்கும் நேரம்.

முதலாளித்துவத்தின் கீழ் அவசிய வேலை நேரம் — தொழிலாளி தன் உழைப்புச் சக்தியின் மதிப்பை மீண்டும் உற்பத்தி செய்யும் நேரம்.

விற்பனையாளர்கள்
நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

தலைமை அலுவலகம்

41 — பி, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட், சென்னை — 600098

ஷோ-ரூம்

136, அண்ணாசாலை, சென்னை — 600002

கிளைகள்

80, மேலக் கோபுர வீதி, மதுரை — 625001
3 — 4, நேரு ஸ்டேடியம், கோயம்பத்தூர் — 641018
42/7, சிங்காரத் தோப்பு, திருச்சிராப்பள்ளி — 620008
செர்ரி ரோடு, சேலம் — 636001

விற்பனை நிலையங்கள்

3 — 22 — 75 — D, மதுரை சாலை;
திருநெல்வேலி ஜங்ஷன் — 627001
66, கீழராஜ வீதி, தஞ்சாவூர்
சேரிங் கிராஸ், உதகமண்டலம் — 643001
நகராட்சி அலுவலகம் எதிரில், திண்டுக்கல் — 624001

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசை

சமூக அரசியல் ஆரம்ப நூல் வரிசையில் இடம்பெறும் புத்தகங்கள்

சமூக விஞ்ஞானம் — சுருக்க நூல்
மார்க்சியம்-லெனினியம் என்றால் என்ன?
அரசியல் பொருளாதாரம் என்றால் என்ன?
தத்துவஞானம் என்றால் என்ன?
விஞ்ஞான கம்யூனிசம் என்றால் என்ன?
இயக்கவியல் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
வரலாற்றுப் பொருள்முதல்வாதம் என்றால் என்ன?
முதலாளித்துவம் என்றால் என்ன?
சோஷலிசம் என்றால் என்ன?
கம்யூனிசம் என்றால் என்ன?
உழைப்பு என்றால் என்ன?
உபரி மதிப்பு என்றால் என்ன?
சொத்துடைமை என்றால் என்ன?
வர்க்கங்கள், வர்க்கப் போராட்டம் என்றால் என்ன?
கட்சி என்றால் என்ன?
அரசு என்றால் என்ன?
புரட்சி என்றால் என்ன?
மாறு கால கட்டம் என்றால் என்ன?
உழைப்பாளிகளின் ஆட்சி என்றால் என்ன?
உலக சோஷலிச அமைப்பு என்றால் என்ன?